கம்பன் கவிமணிகள்

11141

கிருபானந்தவாரி

பன்
கவிமணிகள்

11141

தொகுப்பாசிரியர் :
திருமுருக கிருபானந்தவாரி அவர்கள்

திருப்புகழமிர்தம்
சிந்தாதிரிப்பேட்டை, : : சென்னை-2.
1954

திருப்புகழமிர்தம் அச்சகம்,
144, சாமிநாயகன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

ாறு. இதிகாச மென்பது பல அறங்களை த மத்ா குத்துக் கூறுவதாகும். சிவ ரகசியம், இராமாயணம், பாரதம் என்பனவாகும். இவற்றுள் இடையில் விளங்குவது இராமாயணம். மண்ணாசையினால் விளைந்தது பாரதம். பெண்ணாசையினால் விளைந்தது இராமாயணம். ஆசை என்பது பிறர் பொருளில் வைப்பதென அறிக. பிறன் மனை நயத்தல் பெருங் கேட்டை விளைவிக்கும். பெரும் பாவமுமாகும்.

அறன் கடை நின்றாருளெல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையாரில். —திருக்குறள்.

இப்பெரும் தீவினையைச் செய்ததால் இராவணன் குலத்துடன், பிற நலத்துடன் அழிந்தனன்.

இராமர் ஒருதார நோன்பு, தந்தை சொல் கேட்டல், உடன் பிறந்தாரை ஓம்புதல், உண்மை நெறி நிற்றல் முதலிய நற்குணங்களை உடையவராகத் திகழ்ந்தனர்.

ஆதலின் இராமாயணத்தைப் பயில்வோர் பிறன் மனை நயத்தல் முதலிய குற்றங்களைக் கடிந்து, ஒரு தார நோன்பு முதலிய குணங்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

இராமாயணத்தை வடமொழியில் முதற் பெருங்காவியமாகச் செய்தவர் வான்மீகிமுனிவர். தமிழில் கனிபெருஞ் சுவையுடன் செய்தவர் கம்பநாடர்.

மலையினின்

வால

சாணைபிடித்து ஒ
கம்பராம

கம்ப ராமாயணம் சிறந்த ஒரு தமிழ்க் கடல். அவர் பாடிய பாடல்கள் அத்தனையும் சிறந்தன. எனினும் அவற்றுள் நனி சிறந்த நன் முத்துப் பாடல்களை எடுத்துத் தொகுத்து தமிழுலகிற்குத் தந்துளேன். இடையில் கதைத் தொடர்பும், உரை நடையில் எழுதப் பெற்றுள்ளது.

சங்கநூல், தேவாரம், திருப்புகழ், நாலாயிரப் பிரபந்தம் ஆகிய நூல்களிலிருந்து இராமாயணத் தொடர்புடைய சில பாமணிகள் இதில் ஆங்காங்கு இணைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வரலாற்றின் நுட்ப திட்பங்களைச் சுருக்கமாகக் குறித்திருக்கின்றேன்.

பல பணிகளுக் கிடையில் இதனை வெளியிடுகின்றேன் ஆதலின் உள்ளத்தில் நிறைந்த கருத்துக்கள் அத்தனையும் வெளியிட இயலவில்லை.

அன்பர்கள் இதனை இனிது பயின்று தொன்மை மிக்க தமிழின் நன்மையையும், அறப்பண்பையும் பெற்று இன்புறுக.

அன்பன்,

கிருபானந்தவாரி.

ணை

...ம்

		பக்கம்
		2
		3
		4
4	அரசியற் படலம்	4
5	திருவவதாரப் படலம்	5
6	கையடைப் படலம்	12
7	தாடகை வதைப் படலம்	15
8	வேள்விப் படலம்	16
9	அகலிகைப் படலம்	23
10	மிதிலைக் காட்சிப் படலம்	27
11	குலமுறை கிளத்து படலம்	30
12	கார்முகப் படலம்	32
13	எழுச்சிப் படலம்	35
14	வரைக்காட்சிப் படலம்	35
15	பூக்கொய் படலம்	36
16	நீர் விளையாட்டுப் படலம்	36
17	உலாவியற் படலம்	36
18	கோலங்காண் படலம்	37
19	கடிமணப் படலம்	38
20	பரசுராமப் படலம்	40

2. அயோத்தியா காண்டம்

21	மந்திரப் படலம்	43
22	மந்தரை சூழ்ச்சிப் படலம்	47
23	கைகேயி சூழ்வினைப் படலம்	52
24	நகர் நீங்கு படலம்	57
25	தைலமாட்டுப் படலம்	67
26	கங்கைப் படலம்	71
27	வனம்புகு படலம்	74
28	சித்திரகூடப் படலம்	75
29	பள்ளியடைப் படலம்	75
30	ஆற்றுப் படலம்	82
31	குகப் படலம்	84
32	கிளைகண்டு நீங்கு படலம்	89

3.

33 விராதன் வதைப் ப

34 சரபங்கர் பிறப்பு நீங்கு

35 அகத்தியப் படலம்

36 சடாயுகாண் படலம்

37 சூர்ப்பணகைப் படலம் 107

38 கரன் வதைப் படலம் 114

39 மாரீசன் வதைப் படலம் 119

40 சடாயு உயிர்நீத்த படலம் 129

41 அயோமுகிப் படலம் 144

42 கவந்தப் படலம் 150

43 சவரி பிறப்பு நீங்கு படலம் 154

4. கிட்கிந்தா காண்டம்

44 பம்பாநதிப் படலம் 155

45 அநுமப் படலம் 155

46 நட்புகோட் படலம் 158

47 மராமரப் படலம் 163

48 துந்துபிப் படலம் 164

49 கலன்காண் படலம் 164

50 வாலி வதைப் படலம் 165

51 அரசியற் படலம் 179

52 கார்காலப் படலம் 181

53 கிட்கிந்தைப் படலம் 181

54 தானைகாண் படலம் 188

55 நாடவிட்ட படலம் 190

56 பிலநீங்கு படலம் 191

57 ஆறுசெல் படலம் 196

58 சம்பாதிப் படலம் 198

59 மகேந்திரப் படலம் 202

5. சுந்தர காண்டம்

60 கடல்தாவு படலம் 205

61 ஊர்தேடு படலம் 207

62 காட்சிப் படலம் 214

220
225
232
238
240
...லம் 242
69 பஞ்சசேனுபதிகள் வதைப் படலம் 244
70 அட்சகுமாரன் வதைப் படலம் 247
71 பாசப் படலம் 250
72 பிணிவீட்டுப் படலம் 252
73 இலங்கை எரியூட்டுப் படலம் 261
74 திருவடி தொழுத படலம் 264

6. யுத்த காண்டம்

75 கடல்காண் படலம் 272
76 மந்திரப் படலம் 272
77 இரணியன் வதைப் படலம் 278
78 விபீடணனடைக்கலப் படலம் 290
79 இலங்கை கேள்விப் படலம் 299
80 வருணனை வழிவேண்டுப் படலம் 302
81 சேதுபந்தனப் படலம் 305
82 ஒற்றுக் கேள்விப் படலம் 307
83 இலங்கைகாண் படலம் 310
84 இராவணன் தானைகாண் படலம் 311
85 மகுடபங்கப் படலம் 312
86 அணிவகுப்புப் படலம் 315
87 அங்கதன் தூதுப் படலம் 316
88 முதற் போர்ப் படலம் 320
89 கும்பகர்ணன் வதைப் படலம் 329
90 மாயா சனகப் படலம் 350
91 அதிகாயன் வதைப் படலம் 356
92 நாகபாசப் படலம் 359
93 படைத்தலைவர் வதைப் படலம் 369
94 மகரக் கண்ணன் வதைப் படலம் 369
95 பிரமாத்திரப் படலம் 370
96 பிராட்டி களங்காண் படலம் 377

97 மருத்து மலைப் பட
98 மாயா சீதைப் பட
99 நிகும்பலைப் படலம்
100 இந்திரசித்து வதைப் ப
101 இராவணன் சோகப் பட
102 படைக் காட்சிப் படலம்
103 மூலபல வதைப் படலம் 395
104 வேலேற்ற படலம் 397
105 இராவணன் களங்காண் படலம் 400
106 தேரேறு படலம் 401
107 இராவணன் வதைப் படலம் 402
108 மீட்சிப் படலம் 411
109 திருமுடி சூட்டுப் படலம் 425
110 விடைகொடுத்த படலம் 425

கம்பன் கவியின் பெருமை

இம்பர் நாட்டின் செல்வமெல்லாம்
எய்தி அரசாண் டிருந்தாலும்
உம்பர் நாட்டின் கற்பகக்கா
வோங்கு நீழல் இருந்தாலும்
செம்பொன் மேரு அனையபுயத்
திறல்சேர் இராமன் திருக்கதையில்
கம்ப நாடன் கவிதையிற்போல்
கற்றோர்க் கிதயங் களியாதே.

நூற்பயன்

நாடிய பொருள்கை கூடும் ஞானமும் புகழு முண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியங் கமலை நோக்கும்
நீடிய அரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலையி ராமன் தோள்வலி கூறு வோர்க்கே.

உ
முருகா

கம்பன் கவிமணிகள்

பாலகாண்டம்

கடவுள் வாழ்த்து

உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலு நீங்கலு நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணுங்களே. 1

அஞ்சிலே யொன்று பெற்று னஞ்சிலே யொன்றைத்தாவி
அஞ்சிலே யொன்று ருக வாரியற் காகவேகி
அஞ்சிலே யொன்று பெற்ற வணங்கைக்கண் டயலாரூரில்
அஞ்சிலே யொன்றை வைத்தா னவனம்மை யளித்துக்
காப்பான். 2

அவை யடக்கம்

ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு
பூசை முற்றவு நக்குபு புக்கென
ஆசை பற்றி யறையலுற்றேன் மற்றிக்
காசில் கொற்றத் திராமன் கதையரோ. 3

வைய மென்னை யிகழவு மாசெனக்
கெய்த வும்மிதி யம்புவ தியாதெனிற்
பொய்யில் கேள்விப் புலமையி னோர்புகல்
தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே. 4

முத்தமிழ்த் துறை யின்முறை போகிய
உத்தமக் கவிகட் கொன் றுணர்த்துவென்
பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ. 5

அறையு மாடரங் கும்மடப் பிள்ளைகள்
தரையிற் கீறிடிற் றச்சருங் காய்வரோ
இறையு ஞானமி லாதவென் புன்கவி
முறையி னூலுணர்ந் தாரு முனிவரோ. 6

பாடிய இடம்

நடையி னின்றுயர் நாயகன் றோற்றத்தின்
இடை நிகழ்ந்த இராமாவ தாரப்பேர்த்
தொடை நிரம்பிய தோமறு மாக்கதை
சடையன் வெண்ணெய்நல் லூர்வயிற் றந்ததே. 7

ஆற்றுப்படலம்

ஆசலம்புரி யைம்பொறி வாளியும்
காசலம்புமு லையவர் கண்ணெனும்
பூசலம்பு நெறி யின்பு றஞ்செலாக்
கோசலம்புனை யாற்றணி கூறுவாம். 8

நீறணிந்த கடவு ணிறத்தவான்
ஆறணிந்து சென் றார்கலி மேய்ந்தகிற்
சேறணிந்த முலைத் திரு மங்கைதன்
வீறணிந்தவன் மேனியின் மீண்டவே. 9

புள்ளி மால்வரை பொன்னென நோக்கிவான்
வெள்ளி வீழிடை வீழ்த்தெனத் தாரைகள்
உள்ளி யுள்ளவெல் லாமுவந் தீயுமவ்
வள்ளி யோரின் வழங்கின மேகமே. 10

இரவி தன்குலத் தெண்ணில்பல் வேந்தர்தம்
பரவு நல்லொழுக் கின்படி பூண்டது
சரயு வென்பது தாய்முலை யன்னதிவ்
வுரவு நீர்நிலத் தோங்கு முயிர்க்கெலாம். 11

கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையின் மறைகளாலு மியம்பரும் பொருளீ தென்னத்
தொல்லையி னொன்றேயாகித் துறைதொறும் பரந்தசூழ்ச்சி
பல்பெருஞ் சமயஞ் சொல்லும் பொருளும்போற்
பரந்ததன்றே. 12

நாட்டுப்படலம்

வாங்கரும் பாத நான்கும் வகுத்த வான்மீகி யென்பான்
றீங்கவி செவிக ளாரத் தேவரும் பருகச் செய்தான்
ஆங்கவன் புகழ்ந்த நாட்டை யன்பெனு நறவ மாந்தி
மூங்கையான் பேச லுற்று னென்னயான் மொழிய
லுற்றேன். 13

நீரிடை யுறங்குஞ் சங்க நிழலிடை யுறங்கு மேதி
தாரிடை யுறங்கும் வண்டு தாமரை யுறங்குஞ் செய்யாள்
தூரிடை யுறங்கு மாமை துறையிடை யுறங்கு மிப்பி
போரிடை யுறங்கு மன்னம் பொழிலிடை யுறங்குந்
தோகை. 14

சேலுண்ட வொண்க ணாரிற் றிரிகின்ற செங்கா லன்ன
மாலுண்ட நளினப் பள்ளி வளர்த்திய மழலைப் பிள்ளை
காலுண்ட சேற்று மேதி கன்றுள்ளிக் கனைப்பச் சோர்ந்த
பாலுண்டு துயிலப் பச்சைத் தேரைதா லாட்டும்
பண்ணை 15

பொருந்திய மகளி ரோடு வதுவையிற் பொருந்து வாரும்
பருந்தொடு நிழல்சென் றன்ன வியலிசைப் பயன்றுய்ப்
பாரும்
மருந்தினு மினிய கேள்வி செவியுற மாந்து வாரும்
விருந்தினர் முகங்கண் டன்ன விழாவணி விரும்புவாரும்.

பெருந்த டங்கட் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமுங் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே. 17

கூற்ற மில்லையோர் குற்ற மிலாமையாற்
சீற்ற மில்லைதஞ் சிந்தையிற் செம்மையால்
ஆற்ற னல்லற மல்ல திலாமையால்
ஏற்ற மல்ல திழிதக வில்லையே. 18

வண்மை யில்லையோர் வறுமை யின்மையால்
திண்மை யில்லைநேர் செறுந ரின்மையால்
உண்மை யில்லைபொய் யுரையி லாமையால்
வெண்மை யில்லைபல் கேள்வி மேவலால். 19

நகரப் படலம்

செவ்விய மதுரஞ் சேர்ந்தநற் பொருளிற்
சீரிய கூரிய தீஞ்சொல்
வவ்விய கவிஞ ரனைவரும் வடநூன்
முனிவரும் புகழ்ந்தது வரம்பில்
எவ்வுல கத்தோர் யாவருந் தவஞ்செய்
தேறுவா ருதரிக் கின்ற
அவ்வுல கத்தோ ரிழிவதற் கருத்தி
புரிகின்ற தயோத்திமா நகரம் 20

நிலமகண் முகமோ திலகமோ கண்ணோ
நிறைநெடு மங்கல நாணோ
இலகுபூண் முலைமே லாரமோ வுயிரி
னிருக்கையோ திருமகட் கினிய
மலர்கொலோ மாயோன் மார்பினன் மணிகள்
வைத்தபொற் பெட்டியோ வானோர்
உலகின்மே லுலகோ வூழியி னிறுதி
யுறையுளோ யாதென வுரைப்பாம். 21

தெள்வார் மழையுந் திரையாழியு முட்க நாளும்
வள்வார் முரசம்மதிர் மாநகர் வாழு மாக்கள்
கள்வா ரிலாமைப் பொருள் காவலு மில்லையாதுங்
கொள்வா ரிலாமைக் கொடுப்பார்களு மில்லை மாதோ. 22

கல்லாது நிற்பார் பிற ரின்மையிற் கல்வி முற்ற
வல்லாரு மில்லை யவை வல்ல ரல்லாரு மில்லை
எல்லாரு மெல்லாப் பெருஞ் செல்வமு மெய்தலாலே
இல்லாரு மில்லை யுடையார்களு மில்லை மாதோ. 23

ஏகம் முதற்கல்வி முளைத்தெழுந் தெண்ணில் கேள்வி
ஆகும் முதற்றிண் பணைபோக்கி யருந்த வத்தின்
சாகந் தழைத்தன் பரும்பித்தரு மம்ம லர்ந்து
போகங் கனியொன்று பழுத்தது போலு மன்றே. 24

அரசியற் படலம்

வெள்ளமும் பறவையும் விலங்கும் வேசையர்
உள்ளமு மொருவழி யோட நின்றவன்
றள்ளரும் பெரும்புகழ்த் தயரதப் பெயர்
வள்ளல் வள்ளுறையின் மன்னர் மன்னனே. 25

வயிரவான் பூணணி மடங்கன் மொய்ம்பினன்
உயிரெலாந் தன்னுயி ரொப்ப வோம்பலாற்
செயிரிலா வுலகினிற் சென்று நின்றுவாழ்
உயிரெலா முறைவதோ ருடம்பு மாயினன் 26

எய்யென வெழுபகை யெங்கு மின்மையால்
மொய்பொரு தினவுறு முழவுத் தோளினன்
வையக முழுவதும் வறிஞ னோம்புமோர்
செய்யெனக் காத்தினி தரசு செய்கின்றான். 27

திருஅவதாரப் படலம்

தயரதர் மகப்பேறு இன்மை குறித்து வருந்தி
வசிட்டரிடம் வேண்டுதல்

ஆயவ னொருபக லயனை யேநிகர்
தூயமா முனிவரற் றொழுது தொல்குலத்
தாயருந் தந்தையுந் தவமு மன்பினால்
மேயவான் கடவுளும் பிறவும் வேறுநீ. 28

அறுபதி னாயிர மாண்டு மாண்டுற
உறுபகை யொடுக்கியிவ் வுலகை யோம்பினேன்
பிறிதொரு குறையிலை யெற்பின் வையகம்
மறுகுறு மென்பதோர் மறுக்க முண்டரோ. 29

மன்னவன் முறையீட்டைக் கேட்ட வசிட்டர் மானதக் காட்சியால் நோக்கினார்.

அயன் முதல் அமரர்கள் பாற்கடல் சென்று இராவணாதி அவுணர்களால் தமக்கு நேர்ந்த துன்பங்களைக் கூறி முறையிட்டார்கள்.

ஐயிரு தலையினோ னனுச ராதியர்
மெய்வலி யரக்கரால் விண்ணு மண்ணுமே
செய்தவ மிழந்தன திருவி னாயக
வுய்திற னில்லையென் றுயிர்ப்பு வீங்கினர். 30

திருமால் வானவரை நோக்கிக் கூறுகின்றார்.

வானுளோ ரனைவரும் வான ரங்களாக்
கானினும் வரையினுங் கடித டத்தினுஞ்
சேனையோ டவதரித் திடுமின் சென்றென
ஆனன மலர்ந்தன னருளி னாழியான். 31

மசரத மனையவர் வரமும் வாழ்வுமோர்
நிசரத கணைகளா னீறு செய்யயாங்
கசரத துரகமாக் கடல்கொள் காவலன்
தசரதன் மதலையாய் வருதுந் தாரணி. 32

வளையொடு திகிரியும் வடவை தீதர
விளைதரு கடுவுடை விரிகொள் பாயலும்
இளைஞர்க ளெனவடி பரவ வேகிநாம்
வளமதி லயோத்தியில் வருது மென்றனன். 33

தருவுடைக் கடவுள் வேந்தன் சாற்றுவா னெனது கூறு
மருவலர்க் கசனி யன்ன வாலியு மகனு மென்ன
இரவிமற் றெனது கூறங் கவற்கிளை யவனென் றோத
அரியுமற் றெனது கூறு நீலனென் றறைந்திட் டானல். 34

"இரவி இந்த்ரன் வெற்றிக் குரங்கி
னரச ரென்றும் ஒப்பற்ற உந்தி
இறைவனெண்கி னக்கர்த்த னென்றும் நெடுநீலன்
எரியதென்றும் ருத்ரற் சிறந்த
அநுமனென்றும் ஒப்பற்ற அண்டர்
எவருமிந்த வர்க்கத்தின் வந்து புனமேவ"
—(கருவடைந்து) திருப்புகழ்.

ஈதுமுன் னிகழ்ந்த வண்ண மெனமுனி யிதயத் தெண்ணி
மாதிரம் பொருத திண்டோண் மன்னநீ வருந்த லேழ்
பூதல முழுதுங் காக்கும் புதல்வரை யளிக்கும் வேள்வி
தீதற முயலி னைய சிந்தைநோய் திரு மென்றான். 35

வசிட்டர், தயரதனிடம் கலைக்கோட்டு முனிவர்
வரவேண்டும் என்றார்.

வருகலை பிறவு நீதி மனுநெறி வரம்பில் வாய்மை
தருகலை மறையு மெண்ணிற் சதுமுகற் குவமை சான்றோன்
திருகலை யுடைய விந்தச் செகத்துளோர் தன்மை தேரா
ஒருகலை முகச் சிருங்க முயர்தவன் வருதல் வேண்டும். 36

பாந்தளின் மகுடகோடி பரித்தபா ரதனில் வைகு
மாந்தரை விலங்கென் றுன்னு மனத்தன்மா தவத்த
னெண்ணிற்
பூந்தவி சுகந்து ளோனும் புராரியும் புகழ்தற் கொத்த
சாந்தனல் வேள்வி முற்றிற் றனையர்க ளுளரா மென்றான்.

அவர்வரலாற்றைக் கூறுமாறு தயரதர் வினவினர்.
வசிட்டர் கலைக்கோட்டு முனிவர் வரலாறு கூறுகின்றார்.
காசிபர் புதல்வர் விபாண்டகர். அவருடைய புதல்வர் கலைக்கோட்டு முனிவர்.

புத்தான கொடுவினையோ டருந்துயரம்
போயொளிப்பப் புவனந் தாங்கும்
சத்தான குணமுடையோன் றயையினெடுந்
தண்ணளியின் சாலை போல்வான்
எத்தானும் வெலற்கரியான் மனுகுலத்தே
வந்துதித்தோ னிலங்கு மௌலி
உத்தான பாதனரு ளுரோமபத
னென்றுளனிவ் வுலகை யாள்வோன். 38

அன்னவன் றன்புரந் தளிக்குந் திருநாட்டி
னெடுங்கால மளவதாக
மின்னியெழு முகிலின்றி வெந்துயரம்
பெருகுதலும் வேத நன்னூல்
மன்னு முனிவரை யழைத்து மாதானங்
கொடுக்கினும்வான் வழங்கா தாகப்
பின்னு முனிவரர்க் கேட்பக் கலைக்கோட்டு
முனிவரின்வான் பிலிற்று மென்றார். 39

மனிதர்களை விலங்காக எண்ணும் அவரைக் கொண்டுவரும் வழி யாது? என்று உரோமபதன் ஆலோசித்தான். "இளம் பெண்கள், யாம் கொணர்வோம்" என்று, முனிவர்போல் உருவம் பூண்டு, விபாண்டகர் இல்லாத சமயம் பார்த்து கலைக் கோட்டு முனிவரைச் சந்தித்தார்கள். அவர் இவர்களை மார்பில் கொம்புள்ள முனிவர்கள் என்று கருதி உபசரித்தனர். சில நாள் அவருடன் பழகித் தங்கள் இடத்திற்கு வருமாறு வேண்டி அழைத்து வந்தார்கள்.

வளநகர் முனிவரன் வருமுன் வானவன்
களனமர் கடுவெனக் கருகி வான்முகில்
சளசள வெனமழைத் தாரை கான்றன
குளனெடு நதிகள்தங் குறைகள் தீரவே. 40

வள்ளுறை வயிரவாண் மன்னன் பன்முறை
எள்ளரு முனிவனை யிறைஞ்சி யாரினுந்
தள்ளருந் துயரமுஞ் சமைவுஞ் சாற்றலும்
உள்ளுறு வெகுளிபோ யொளித்த தாமரோ. 41

வறுமைநோய் தணிதர வான் வழங்கவே
உறுதுயர் தணிந்ததவ் வுலகம் வேந்தருள்
செறிகுழல் போற்றிடத் திருந்து மாதவத்
தறிஞுண் டிருக்குந னரச வென்றனன். 42

தயரதர் உரோமபதனுடைய நகரம் அடைந்தார்

கொழுந்தோடிப் படர்கீர்த்திக் கோவேந்த
னடைந்தமை சென்றுற்றர் கூற
கழுந்தோடும் வரிசிலைக்கைக் கடற்றுனை
புடைசூழக் கழற்கால் வேந்தன்
செழுந்தோடும் பலகலனும் வில்வீச
மாகதர்கள் திரண்டுபாட,
எழுந்தோடு முவகையுடன் யோசனைசென்
றுனரசை யெதிர்கோ ளெண்ணி. 43

யான்செய்த மாதவமோ விவ்வுலகஞ்
செய்தவமோ யாதோ விங்கண்
வான்செய்த சுடர்வேலோ யடைந்ததென
மனமகிழ மணித்தே ரேற்றித்
தேன்செய்த தார்மௌலித் தேர்வேந்தைச்
செழுநகரிற் கொணர்ந்தான் றெவ்வர்
ஊன்செய்த சுடர்வடிவே லுரோமபத
னென்றுரைக்கு முரவுத் தோளான். 44

தயரதர் தான் வந்த கருமம் கூற, கலைக்கோட்டு முனிவரைத் தான் அழைத்து வருவேன் என்று உரோமபதன் இசைய, தயரதர் அயோத்தி சேர்ந்தார்.

உரோமபதன் முனிவரைப் பணிந்து கூறுகின்றான்.

புறவொன்றின் பொருட்டாகத் துலைபுக்க
பெருந்தகைதன் புகழிற் பூத்த
அறனென்று திருமனத்தா னமரர்களுக்
கிடரிழைக்கு மவுண ராயோர்
திறலுண்ட வடிவேலான் றெசரதனென்
றுயர்கீர்த்திச் செங்கோல் வேந்தன்
விறல்கொண்ட மணிமாட வயோத்திநக
ரடைந்திவணீ மீட லென்றான். 45

கலைக்கோட்டு முனிவர் தேரேறி அயோத்தி யெய்தினார்.

தூதுவ ரவ்வழி யயோத்தி துன்னினர்
மாதிரம் பொருததோண் மன்னர் மன்னன்முன்
ஓதினர் முனிவர வோத வேந்தனுங்
காதலென் றளவறு கடலு ளாழ்ந்தனன். 46

எழுந்தனன் பொருக்கென் இரத மேறினன்
பொழிந்தன மலர்மழை யாசி பூத்தன
மொழிந்தன பல்லிய முரச மார்த்தன
விழுந்தன தீவினை வேரி னோடுமே. 47

இழிந்துபோ யிரதமாண் டிணைகொள் தாண்மலர்
விழுந்தனன் வேந்தர்தம் வேந்தன் மெய்ம்மையான்
மொழிந்தன ஞசிகண் முதிய நான்மறைக்
கொழுந்துமேற் படர்தரக் கொழுகொம் பாயினன். 48

கசட்டுறு வினைத்தொழிற் கள்வ ராயுழல்
அசட்டர்க ளவரை யறுவ ராக்கிய
வசிட்டனு மருமறை வடிவு போன்றொளிர்
விசிட்டனும் வேத்தவை பொலிய மேவினர். 49

தயரதர் கலைக்கோட்டு முனிவரைத் தொழுது கூறுகின்றார்

சான்றவர் சான்றவ தரும மாதவம்
போன்றொளிர் புனிதநின் னருளிற் பூத்தவென்
ஆன்றதொல் குலமினி யரசின் வைகுமால்
யான்றவ முடைமையு மிழப்பின் றமரோ. 50

அடியேனுடைய குலம் விளங்கக் குமாரரை யருளும் என்றார்.

என்றலு மரசநீ யிரங்க லிவ்வுல
கொன்றுமோ வுலகமீ ரேழு மோம்பிடும்
வன்றிறன் மைந்தரை யளிக்கு மாமகம்
இன்றுநீ யியற்றுதற் கெழுக ஈண்டென்றான். 51

ஆயதற் குரியன கலப்பை யாவையும்
ஏயெனக் கொணர்ந்தனர் நிருபர்க் கேந்தலுந்
தூயநற் புனல்படீஇச் சுருதி நான்முறை
சாய்வறத் திருத்திய சாலை புக்கனன். 52

புத்திர காமேஷ்டி செய்தார்கள்.

ஆயிடைக் கனலினின் றம்பொற் றட்டமீத்
தூயநற் சுதைநிகர் பிண்ட மொன்றுசூழ்
தீயெரிப் பங்கியுஞ் சிவந்த கண்ணுமா
ஏயெனப் பூதமொன் றெழுந்த தேந்தியே. 53

பூதம் தந்த யாக பாயசத்தை மன்னன் மூன்று மனைவியர்க்கும் ஈந்தனன்.

கலைக்கோட்டு முனிவர் விடைபெற்றுச் செல்லல்.

எந்தைநின் னருளினு லிடரி னீங்கியே
உய்ந்தன னடியனே னென்ன வொண்டவன்
சிந்தையுண் மகிழ்ச்சியால் வாழ்த்தித் தேர்மிசை
வந்தமா தவரொடும் வழிக்கொண் டேகினன். 54

இராமர் திரு அவதாரம்

ஆயிடைப் பருவம்வந் தடைந்த வெல்லையின்
மாயிரு புவிமகண் மகிழ்வி னேங்கிட
வேய்புனர் பூசமும் விண்ணு ளோர்புகழ்
தூயகற் கடகமு மெழுந்து துள்ளவே. 55

ஒருபக லுலகெலா முதரத் துட்பொதிந்
தருமறைக் குணர்வரு மவனை யஞ்சனக்
கருமுகிற் கொழுந்தெழில் காட்டுஞ் **சோதி**யைத்
திருவுறப் பயந்தனள் திறங்கொள் கோசலை. 56

பரதர் தோற்றம்

ஆசையும் விசும்புநின் றமர ரார்த்தெழ
வாசவன் முதலினர் வணங்கி வாழ்த்துறப்
பூசமு மீனமும் பொலிய நல்கினள்
மாசறு கேகயன் மாது மைந்தனே. 57

இலக்குவரும் சத்ருக்கனரும் தோன்றல்

தளையவிழ் தருவுடைச் சயில கோபனுங்
கிளையுமந் தரமிசைக் கெழுமி யார்ப்புற
அளைபுகு மரவினே டலவன் வாழ்வுற
விளையவற் பயந்தன ளிளைய மென்கொடி. 58

படங்கிளர் பஃறலைப் பாந்த ளேந்துபார்
நடங்கிளர் தரமறை நவில நாடக
மடங்கலு மகமுமே வாழ்வி னேங்கிட
விடங்கிளர் விழியிணை மீட்டு மீன்றனள். 59

ஆடின ரரம்பைய ரமுத வேழிசை
பாடினர் கின்னரர் துவைத்த பல்லியம்
வீடின ரரக்கரென் றுவக்கும் விம்மலால்
ஓடின ருலவின ரும்பர் முற்றுமே. 60

இராமர் ஜாதகம்

மேடமா மதிதிதி நவமி மீன்கழை
நீடுறு மாலைகற் கடக நீதிசேர்
ஓடைமா களிறனா னுதய ராசிகோள்
நாடினே காதசர் நால்வ ருச்சரே. 61

நீதி - ஒழுக்கமானது, சேர் - சேர்ந்த, ஓடை - நுதலணியை யுடைய, மா - பெருமைபொருந்திய, களிறு-யானையை, அனான் - ஒத்தவனாகிய (இராம மூர்த்தியினது அவதாரகாலையில்) மா - பெருமை பொருந்திய, மதி - மாஸமானது, மேடம் - மேஷமா யும், திதி - திதியானது, நவமி - நவமியாயும், மீன் - நட்சத்திர மானது, கழை - புநர்பூசமாயும், கற்கடகம் - கடகமானது, உதயராசி - உதயமும், இராசிலக்கனமாகிய சந்திரலக்கினமு மாயும், மால் - புதன், ஐ - ராஜஸ்தானமாகிய பத்தாமிடத்திலும், கோள் - கேதுவிற்கு, நாடு - மிதுனமானது, இல் - வீடாயும் ஏகாதசர் - பதினொன்றுக்குடையவர், நால்வர் - நான்குபேர், உச்சர் - உச்சஸ்தானத்திலும், நீடுறும் - பலமாய் நிற்கும், ஏகா ரம் - தேற்றம்.

இராம ஜாதகம்

சுக்கிரன்	சூரியன் புதன்		கேது
	இராசி		சந்திரன் லக்கினம் குரு
செவ்வாய்			
இராகு		சனி	

இறைதவிர்ந் திடுகபார் யாண்டொ ரேழ்நிதி
நிறைதரு சாலைதா ணீக்கி யாவையும்
முறைகெட வறியவர் முகந்து கொள்கென
அறைபறை யென்றன னரசர் கோமகன். 62

கராமலை யத்தளர் கைக்கரி யெய்த்தே
அராவணை யிற்றுயில் வோயென வந்நாள்
விராவிய ளித்தருண் மெய்ப்பொரு ளுக்கே
இராமனெ னப்பெய ரீந்தன னன்றே. 63

கரதல முற்றொளிர் நெல்லி கடுப்ப
விரதம றைப்பொருண் மெய்ந்நெறி கண்ட
வரதனு தித்திட மற்றைய வொளியை
பரதனெ னப்பெயர் பன்னின னன்றே. 64

உலக்குநர் வஞ்சக ரும்பரு முய்ந்தார்
நிலக்கொடி யுந்துயர் நீத்தன ளிந்த
விலக்கரு மொய்ம்பின் விளங்கொளி நாமம்
இலக்குவ னென்ன விசைத்தன னன்றே. 65

முத்துருக் கொண்டுசெம் முளரி யலர்ந்தால்
ஒத்திருக் கும்மெழி லுடையவிவ் வொளியால்
எத்திருக் குங்கெடு மென்பதை யெண்ணிச்
சத்துருக் கன்னெனச் சாத்தினர் நாமம் 66

சவுளமொ டுபநயம் விதிமுறை தருகுற்
றிவளவ தெனவொரு கரைபிறி தில்வா
உவள்தரு மறையினொ டொழிவரு கலையும்
தவள்மதி புனையர னிகர்முனி தரவே. 67

"எந்தை வருக ரகுநாயக வருக
மைந்த வருக மகனே யினிவருக
என்கண் வருக என தாருயிர் வருக அபிராம
இங்கு வருக அரசே வருக முலை
யுண்க வருக மலர் சூடிட வருக
என்று பரிவினொடு கோசலை புகல வருமாயன்."
—(தொந்தி) திருப்புகழ்.

கையடைப்படலம்

தூயமெல் லரியணைப் பொலிந்து தோன்றினன்
சேயிரு விசும்பிடைத் திரியுஞ் சாரணர்

நாயக னிவன்கொலென் றயிர்த்து நாட்டமோர்
ஆயிர மில்லையென் றையநீங்கினர். 68

விசுவாமித்திரர் வருகை

மடங்கல்போன் மொய்ம்பினன் முன்னர் மன்னுயிர்
அடங்கலு முலகும்வே றமைத்துத் தேவரோ
டிடங்கொணான் முகனையும் படைப்பெ னீண்டெனாத்
தொடங்கிய துனியுறு முனிவன் றோன்றினான். 69

வந்துமுனி யெய்துதலு மார்பினணி யாரம்
அந்தர தலத்திரவி யஞ்சவொளி விஞ்சக்
கந்தமல ரிற்கடவுள் தன்வரவு காணும்
இந்திரனெ னக்கடிதெ ழுந்தடிப ணிந்தான். 70

நிலஞ்செய்தவ மென்றுணரி னன்றுநெடி யோயென்
நலஞ்செய்வினை யுண்டெனினு மன்றுநகர் நீயான்
வலஞ்செய்துவ ணங்கவெளி வந்தவிது முன்தென்
குலஞ்செய்தவ மென்றினிது கூறமுனி கூறும். 71

என்னனைய முனிவரரு மிமையவரு
மிடையூறொன் றுடைய ரானால்
பன்னகமு நகுவெள்ளிப் பனிவரையும்
பாற்கடலும் பதும பீடத்
தன்னகருங் கற்பகநாட் டணிநகரு
மணிமாட யோத்தி யென்னும்
பொன்னகரு மல்லாது புகலுண்டோ
விகல்கடந்த புலவு வேலோய். 72

இன்றளிர்க் கற்பகநறுந்தே னிடைதுளிக்கும்
நிழலிருக்கை யிழந்து போந்து
நின்றளிக்குந் தனிக்குடையி னிழலொதுங்கிக்
குறையிரந்து நிற்ப நோக்கிக்
குன்றவிக்குங் குலமணித்தோட் சம்பரனைக்
குலத்தோடுந் தொலைத்து நீகொண்
டன்றளித்த வரசன்றோ புரந்தரனின்
றாள்கின்ற தரச வென்றான். 73

தருவனத்துள் யானியற்றுந் தவவேள்விக்
கிடையூறாத் தவஞ்செய் வோர்கள்

வெருவரச்சென் றடைகாம வெகுளியென
நிருதரிடை விலக்கா வண்ணம்
செருமுகத்துக் காத்தியென நின்சிறுவர்
நால்வரினுங் கரிய செம்மல்
ஒருவனைத் தந் திடுதியென வுயிரிரக்குங்
கொடுங்கூற்றி னுளையச் சொன்னான். 74

எண்ணிலா வருந்தவத்தோ னியம்பியசொன்
மருமத்தி னெறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையிற் கனனுழைந்தா
லெனச்செவியிற் புகுத லோடும்
உண்ணிலா வியதுயரம் பிடித்துந்த
வாருயிர்நின் றூச லாடக்
கண்ணிலான் பெற்றிழந்தா னெனவுழந்தான்
கடுந்துயரங் கால வேலான். 75

தொடையூற்றுந் தேன்றுளிக்கு நறுந்தாரா
னொருவண்ணந் துயர நீங்கிப்
படையூற்ற மிலன்சிறிய னிவன்பெரியோய்
பணியிதுவேற பனிநீர்க் கங்கை
புடையூற்றுஞ் சடையானு நான்முகனும்
புரந்தரனும் புகுந்து செய்யும்
இடையூற்றுக் கிடையூரு யான்காப்பென்
பெருவேள்விக் கெழுக வென்றான். 76

என்றன னென்றலு முனிவோ னெழுந்தனன்
மண்ப டைத்தமுனி யிறுதிக் காலம்
அன்றென வாமென விமையோ ரயிர்த்தனர்
மேல்வெயில் கரந்த தங்கு, மிங்கும்,
நின்றனவுந் திரிந்தன் மீநிவந்த கொழுங்
கடைப் புருவ நெற்றி முற்றச்
சென்றன வந்தன நகையுஞ் சிவந்தன கண்
ணிருண்டன போய்த் திசைக ளெல்லாம். 77

வசிட்டர் கூறுதல்

பெய்யு மாரியாற் பெருகு வெள்ளம்போய்
மொய்கொள் வேலைவாய் முடுகு மாறுபோல்
அய்ய நின்மகற் களவில் விஞ்சைவந்
தெய்து காலமின் றெதிர்ந்த தென்னவே. 78

இராம லட்சுமணரைக் கோசிகரிடம் தருதல்.

வந்த நம்பியைத் தம்பி தன்ளெடு
முந்தை நான்மறை முனிக்குக் காட்டிநல்
தந்தை நீதனித் தாயு நீயிவர்க்
கெந்தை தந்தன னியைந்த செய்கென்ருன். 79

வென்றி வாள்புடை விசித்து மெய்ம்மைபோல்
என்றுந் தேய்வுருத் தூணி யார்த்திரு
குன்றம் போன்றுயர் தோளிற் கொற்றவில்
ஒன்று தாங்கிஞ னுலகந் தாங்கினன். 80

கௌசிகரும் இராமரும் இலட்சுமணரும் புறப்பட்டுச் சென்று முதல் நாள் சரயு நதிக்கரையில் ஒரு சோலையில் தங்கினர்கள்.

தாடகை வதைப் படலம்

இச்சோலை யாது? என்று இராமர் வினவ விஸ்வாமித்திரர் தாணு ஆச்சிரமத்தை அறிவித்தனர்.

வாரணத் துரிவையான் மதனனைச் சினவுநாள்
ஈரமற் றங்கமிங் குகுதலா லிவணெலாம்
ஆரணத் துறையுளா யங்கநா டிதுவுமக்
காரணக் குறியுடைக் காமனச் சிரமமே. 81

பற்றவா வேரொடும் பசையறப் பிறவிபோய்
முற்றவா லுணர்வுமேன் முடுகிஞ ரறிவுசென்
றுற்றவா னவனிருந் தியோகுசெய் தனனெனிற்
சொற்றவா மளவதோ மற்றிதன் ருய்மையே. 82

மறுநாள் வழியில் சுரம் எய்தியது.

தாவரு மிருவினை செற்றுத் தள்ளரு
மூவகைப் பகையரண் கடந்து முத்தியிற்
போவது புரிபவர் மனமும் பொன்விலைப்
பாவையர் மனமும்போற் பசையு மற்றதே. 83

விஞ்சை உபதேசம்

நோக்கின னவர்முக நோக்க நோக்குடைக்
கோக்கும ரருமடி குறுக நான்முகன்
ஆக்கிய விஞ்சைக ளிரண்டு மவ்வழி
ஊக்கின னவையவ ருள்ளத் துள்ளினர். 84

இராமர் வினவுதல்

சுழிபடு கங்கையந் தொங்கன் மௌலியான்
விழிபட வெந்ததோ வேறு தானுண்டோ
பழிபடா மன்னவன் படைத்த நாட்டினூங்
கழிவதென் காரண மறிஞ கூறென்றான். 85

என்றலு மிராமனை நோக்கி யின்னுயிர்
கொன்றுழல் வாழ்க்கையள் கூற்றின் றோற்றத்தள்
அன்றியு மையிரு நூறு மையன்மா
ஒன்றிய வலியின ளூறுதி கேளென. 86

கௌசிகர் இராமருக்குத் தாடகையின் வரலாற்றைக் கூறுகின்றார்.

சுகேது என்ற யட்சன், மகப்பேறு வேண்டித் தவஞ் செய்ய, பிரமதேவர் தந்த வரத்தின்படி அவனுக்கு ஆயிரம் யானை பலத்துடன் தாடகை பிறந்தாள். ஜர்ஜனுடைய மகன் **சுந்தனைத்** தாடகை மணந்தாள். **மாரீசன், சுபாகு** என்பார் பிறந்தனர்.

அகத்தியருடைய தவச்சாலையின் அருகில் உள்ள பூமரங் களைச் சுந்தன் ஒடித்தழித்தான். அதனால் அவர் தழலெழ விழித் தனர். அவன் சாம்பராயினான்.

அதுகண்ட தாடகையும் புதல்வர்களும் அகத்தியர் முன் சென்று மேலும் மரங்களை ஒடித்து ஆர்த்தார்கள். அரக்கர்க ளாகுமாறு அவர் சாபமிட்டனர். அத்தாடகை மிகவும் கொடியவள்.

தாடகையின் தன்மை

மண்ணுருத் தெடுப்பினுங் கடலை வாரினும்
விண்ணுருத் திடிப்பினும் வேண்டிற் செய்கிற்பாள்
எண்ணுருத் தெரிவரும் பாவ மீண்டியோர்
பெண்ணுருக் கொண்டெனத் தெரியும் பெற்றியாள்.

சூடக வரவுறழ் சூலக் கையினள்
காடுறை வாழ்க்கையள் கண்ணிற் காண்பரேல்
ஆடவர் பெண்மையை யவாவுந் தோளினாய்
தாடகை யென்பதச் சழக்கி நாமமே. 88

உளப்பரும் பிணிப்புரு வுலோப மொன்றுமே
அளப்பருங் குணங்களை யழிக்கு மாறுபோல்
கிளப்பருங் கொடுமைய வரக்கி கேடிலா
வளப்பரு மருதவைப் பழித்து மாற்றினாள். 89

இலங்கையர சன்பணிய மைந்தொரிடை யூறு
விலங்கல்வலி கொண்டெனது வேள்விநலி கின்றாள்
அலங்கன்முகி லேயவளிவ் வங்கநில மெங்கும்
குலங்களொட டங்கநனி கொன்றுதிரி கின்றாள். 90

முன்னுலக ளித்துமுறை நின்றவுயி ரெல்லாம்
தன்னுயிரெ னக்கருது தன்மையவன் மைந்த
என்னினியு ணர்த்துவதி னிச்சிறிது நாளின்
மன்னுயிர னைத்தையும்வ யிற்றினிடு மென்றான். 91

தாடகை வருதல்

இறைக்கடைது டித்தபுரு வத்தளெயி றென்னும்
பிறைக்கடைபி றங்கிடம டிந்தபில வாயள்
மறைக்கடைய ரக்கிவட வைக்கனலி ரண்டாய்
நிறைக்கடன்மு ளைத்தெனநெ ருப்பெழவி ழித்தாள்.92

கடங்கலுழ்த டங்களிறு கையொடுகை தெற்று
வடங்கொளநு டங்குமிடை யாண்மறுகி வானோர்
இடங்களுநெ டுந்திசையு மேழுலகு மெங்கும்
அடங்கலுந டுங்கவுரு மஞ்சநனி யார்த்தாள். 93

கடக்கரும்வ லத்தெனது காவலிதில் யாவும்
கெடக்கரு வறுத்தனெ னினிச்சுவை கிடக்கும்
விடக்கரி தெனக்கருதி யோவிதி கொடுந்தப்
படக்கருதி யோபகர்மின் வந்தபரி சென்றே. 94

அண்ணன்முனி வற்கதுக ருத்தெனினு மாவி
உண்ணெனவ டிக்கணைதொ டுக்கிலனு யிர்க்கே
துண்ணெனும்வி னைத்தொழில்தொ டங்கியுள ளேனும்
பெண்ணெனம னத்திடைபெ ருந்தகைநி னைந்தான்.

தீதென் றுள்ளவை யாவையுஞ் செய்தெமைக்
கோதென் றுண்டில ளித்தனை யேகுறை
யாதென் றெண்ணுவ திக்கொடி யாளையும்
மாதென் றெண்ணுவ தோமணிப் பூணினாய். 96

ஈறி னல்லறம் பார்த்திசைத் தேனிவட்
சீறி நின்றிது செப்புகின் றேனலேன்
ஆறி நின்ற தறனன் றரக்கியைக்
கோறி யென்றெதி ரந்தணன் கூறினான். 97

தாடகை சூலம் விடுத்தனள்.

புதிய கூற்றனை யாள்புகைந் தேவிய
கதிர்கொண் மூவிலைக் காலவெந் தீமுனி
விதியை மேற்கொண்டு நின்றவன் மேலுவா
மதியின் மேல்வருங் கோளென வந்ததே. 98

இராமர் அதனை அம்பினால் அறுத்தனர்

அல்லின் மாரி யனையபனி றத்தவள்
சொல்லின் மாத்திரை யிற்கடல் தூர்ப்பதோர்
கல்லின் மாரியைக் கைவகுத் தாளது
வில்லின் மாரியின் வீரன் விலக்கினான். 99

ஏக்க மோட விமயவ ரெங்கணும்
வாக்கின் மூந்துற மாயை வளர்ப்பவள்
மூக்கு வார்செவி யும்முறை போயிடத்
தாக்கும் வள்ள லிளவலுந் தாக்கினான். 100

சொல்லொக்குங் கடிய வேகச் சுடுசரங் கரிய செம்மல்
அல்லொக்கு நிறத்தி னாண்மேல் விடுதலும் வயிரக் குன்றக்
கல்லொக்கு நெஞ்சிற் றங்கா தப்புறங் கழன்று கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற்
றன்றே.

பொடியுடைக் கானமெங்குங் குருதிநீர் பொங்கவீழ்ந்த
தடியுடை யெயிற்றுப் பேழ்வாய்த் தாடகை தலைகள்தோறு
முடியுடை யரக்கற் கந்நாண் முந்தியுற் பாதமாகப்
படியிடை யற்று வீழ்ந்த வெற்றியம் பதாகையொத்தாள்.

யாமுமெம் மிருக்கை பெற்றே முனக்கிடை யூறுமில்லை
கோமகற் கினிய தெய்வப் படைக்கலங் கொடுத்தி
யென்னா
மாமுனிக் குரைத்துப் பின்னர் விற்கொண்ட மழைய
னான்மேல்
பூமழை பொழிந்து வாழ்த்தி விண்ணவர் போயினாரே. 103

"வெடுத்த தாடகை சினத்தை யோர்கணை
விடுத்து யாகமு நடத்தியே யொரு
மிகுத்த வார்சிலை முறித்த மாயவன் மருகோனே"
—(தொடுத்த) திருப்புகழ்.

வேள்விப் படலம்

விண்ணவர் போய பின்றை விரிந்தபூ மழையி னாலே
தண்ணெனுங் கானநீங்கித் தாங்கருந் தவத்தின் மிக்கோன்
மண்ணவர் வறுமை நோய்க்கு மருந்தன சடையன் வெண்ணெய்
அண்ணல்தன் சொல்லே யன்ன படைக்கல மருளி னானே.

ஆறிய வறிஞன் கூறி யளித்தலு மண்ணல் தன்பால்
ஊறிய வுவகை யோடு மும்பர்தம் படைக ளெல்லாம்
தேறிய மனத்தான் செய்த நல்வினைப் பயன்களெல்லாம்
மாறிய பிறப்பிற் றேடி வருவபோல் வந்த வன்றே. 105

மேவினம் பிரித லாற்றேம் வீரநீ விதியி னெம்மை
ஏவின செய்து நிற்று மிளையவன் போல வென்று
தேவர்தம் படைகள் செப்பச் செவ்விதென் றவனு நேரப்
பூவைபோல் நிறத்தி னாற்குப் புறத்தொழில் புரிந்த வன்றே. 106

மூவரும் கௌசிகி என்ற நதியையடைந்தனர்.

இராமர் நதியைப்பற்றி வினவ, விஸ்வாமித்திரர் தமது மரபைக் கூறுதல்.

பிரமபுத்திரர் குசர். அவர் வைதர்ப்பி நகரை யாண்டார். அவருடைய புதல்வர்கள்குசாம்பன், குசநாபன், அதூர்த்தரஜஸ், வசு என்பார்.

இவர்கள் முறையே கௌசாம்பி, மகோதயம், தருமாரண்யம், கிரிவிரயம் என்ற நாடுகளை யாண்டார்கள். இவருள் குசநாபருக்குக் கிருதாசியிடம் நூறு புதல்வியர் தோன்றினார்கள். அவர்களது அழகைக் கண்டு வாயு காதலித்து தன்னை மணக்குமாறு வேண்டினான். அவர்கள் மறுத்தபடியால் அவர்களை முடக்கினான்.

சூளி என்ற முனிவர் ஊர்மிளை புதல்வி சோமதை தனக்குப் புரிந்த பணிவிடையை மெச்சி மானசீகமாகப் புதல்வனை யருளினார். அவர் **பிரமதத்தர்**. அவருக்குக் கூனுருவுற்ற குமரி

களைக் குசநாபர் மணஞ்செய்து கொடுத்தார். அவர் கைதீண்டிய வுடன் அவர்கட்குக் கூன் மாறியது.

பின்னர் குசநாபர் தவம்புரிந்து பிதாவின் அருளால் **காதி**யைப் பெற்ருர். காதியின் புதல்வி **சத்தியவதி.** புதல்வர் **விஸ்வாமித்திரர்.**

விஸ்வாமித்திரனுடைய தமக்கை சத்தியவதி **கிரீசிகரை மணந்து** வாழ்ந்து உடலுடன் சுவர்க்கஞ் சென்ருள். **பின்னர் கௌசிகி என்ற நதிவடிவங் கொண்டாள். இது புனிதமானது.**

சித்தாசிர்மஞ் சேர்தல்

அதன் பெருமை

தங்கணு யகரிற் றெய்வந் தவம்பிறி
திலவென் றெண்ணும்
மங்கைமார் சிந்தை போலத்
தூயது மற்றுங் கேளாய்
எங்கணுன் மறைக்குந் தேவ ரறிவிற்கும்
பிறர்க்கு மெட்டாச்
செங்கண்மா லிருந்து மேனுட்
செய்தவஞ் செய்த தன்றே. 107

மாவலி வரலாறு

ஆனவ னிங்குறை கின்றவந் நாள்வாய்
ஊனமின் ஞாலமொ டுங்குமெ யிற்ருன்
ஏனமெ னுந்திரன் மாவலி யென்பான்
வானமும் வையமும் வௌவுதல் செய்தான். 108

ஆயத றிந்தனர் வானவ ரந்நாள்
மாயனை வந்துவ ணங்கியி ரந்தார்
தீயவன் வெந்தொழில் தீரென நின்ருர்
நாயக னும்மது செய்யந யந்தான். 109

காலநு னித்துணர் காசிப னென்னும்
வாலறி வற்கதி திக்கொரு மகவாய்
நீலநி றத்துநெ டுந்தகை வந்தோர்
ஆலமர் வித்தின ருங்குற ளானன். 110

முப்புரி நூலினன் முஞ்சியன் விஞ்சை
கற்பதொர் நாவன னற்படு கையன்

அற்புத னற்புத ரேயறி யுந்தன்
சிற்பத மொப்பதோர் மெய்க்கொடு சென்ருன். 111

சிந்தையு வந்தெதி ரென்செய வென்ருன்
அந்தணன் மூவடி மண்ணரு ளுண்டேல்
வெந்திற லாயிது வேண்டுமெ னுமுன்
தந்தன னென்றனன் வெள்ளித டுத்தான். 112

கண்டதி றத்திது கைதவ மைய
கொண்டனி றக்குற ளென்பது கொள்ளேல்
அண்டமு முற்றும கண்டமு மேனுள்
உண்டவ னுமிது ணர்ந்துகொ ளென்ருன். 113

வெள்ளியை யாதல்வி ளம்பினே மேலோர்
வள்ளிய ராகவ ழங்குவ தல்லால்
எள்ளுவ வென்சில வின்னுயி ரேனும்
கொள்ளுதல் தீதுகொ டுப்பது நன்ருல். 114

மாய்ந்தவர் மாய்ந்தவ ரல்லர்கண் மாயா
தேந்திய கைகொடி ரந்தவ ரெந்தாய்
வீய்ந்தவ ரென்பவர் வீய்ந்தவ ரேனும்
ஈய்ந்தவ ரல்லதி ருந்தவர் யாரே. 115

கட்டுரை யிற்றம கைத்துள போழ்தே
இட்டிசை கொண்டற னெய்தமு யன்ருேர்
உட்டெறு வெம்பகை யாவது லோபம்
விட்டிட லென்றுவி லக்கினர் தாமே. 116

எடுத்தொருவ ருக்கொருவ ரீவதனின் முன்னே
தடுப்பதுநி னக்கிதழ கோதகைவில் வெள்ளி
கொடுப்பதுவி லக்குகொடி யோயுனது சுற்றம்
உடுப்பதுவு முண்பதுவு மின்றிவிடு கின்ருய். 117

குறியவன் கையினீர் வழாமற் குண்டிகை
மறிபட வாமனன் மலர்க்கைத் தர்ப்பையாற்
செறிவது நீக்கிடச் சிதைந்து கண்ணுடைந்
துறுதுயர்க் கடனிடை யொதுங்கிப் போயினுன்.

கயந்தரு நறும்புனல் கையிற் றீண்டலும்
பயந்தவர் களுமிகழ் குறளன் பார்த்தெதிர்
வியந்தவர் வெருக்கொள விசும்பி னோங்கினுன்
உயர்ந்தவர்க் குதவிய வுதவி யொப்பவே. 119

திருமால் மண்ணும் விண்ணும் ஈரடியால் அளந்து ஓரடி மாவலி தலைமிசை வைத்து அவனைப் பாதலத்தில் இருத்தினார். இந்திரன் இடர் தீர்ந்து பொன்னுலகாண்டனன்.

அத்தவச்சாலையில் வேள்வி நிகழ்ந்தது.

எண்ணுதற் காக்கரி திரண்டு மூன்றுநாள்
விண்ணவர்க் காக்கிய முனிவன் வேள்வியை
மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்
கண்ணினைக் காக்கின்ற விமையிற் காத்தனர். 120

அரக்கர் வந்து இடர் புரிதல்

எய்தன ரெறிந்தன ரெரியு நீருமாய்ப்
பெய்தனர் பெருவரை பிடுங்கி வீசினர்
வைதனர் தெழித்தனர் மழுக்கொண் டோச்சினர்
செய்தன ரொன்றல தீய மாயமே. 121

தூமமே லரக்கர்தந் நிணமுஞ் சோரியும்
ஓமவெங் கனலிடை யுகுமென் றுன்னியத்
தாமரைக் கண்ணனுஞ் சரங்க ளேகொடு
கோமுனி யிருக்கையோர் கூட மாக்கினான். 122

திருமகள் நாயகன் தெய்வ வாளிதான்
வெருவரு தாடகை பயந்த வீரர்கள்
இருவரி னொருவனைக் கடலி னிட்டதங்
கொருவனை யந்தகன் புரத்தி னுய்த்ததே. 123

வேள்வி இனிது முற்றியது.

விசுவாமித்திரர் இராமரை வாழ்த்துதல்.

பாக்கி யம்மெனக் குளதென நினைவுறும் பான்மை
போக்கி நிற்கிது பொருளென வுணர்கிலென் புவனம்
ஆக்கி மற்றவை யகிலமு மணிவயிற் றடக்கிக்
காக்கு நீயொரு வேள்விகாத் தனையெனுங் கருத்தே. 124

"காலைக் கேமுழுகிக் குணதிக்கினில்
ஆதித்யாய எனப்பகர் தர்ப்பண
காயத்ரீசெப மர்ச்சனையைச் செயு முநிவோர்கள்
கானத் தாசிரமத் தினி லுத்தம
வேள்விச்சாலை யளித்தல் பொருட்டெதிர்
காதத்தாடகை யைக்கொல்க்ருபைக்கடல் மருகோனே"
—(வேலைப்போல்) திருப்புகழ்.

அகலிகைப்படலம்

மூவரும் மிதிலையை நாடிப் புறப்பட்டு முதல்நாள் சோணை நதியை யடைந்து தங்கினார்கள்.

அச்சோலையின் வரலாற்றை இராமர் கேட்க கௌசிகர் கூறுகின்றார்.

இலக்குமியின் மாலையை ஒரு கந்தர்வமாது துருவாசருக் களித்தாள். அவர் அதை இந்திரனுக்கு அளித்தார்.

அவன் தன் ஐராவதத்தின் மீது இட்டான். அது எடுத்துக் கீழேயிட்டு மிதித்தது.

அதுகண்ட துருவாசர் சினந்தார்.

பூத நாயகன் புவிமகள் நாயகன் பொருவில்
வேத நாயகன் மார்பகத் தினிதுவீற் றிருக்கும்
ஆதி நாயகி விருப்புறு தெரியல்கொண் டணைந்த
மாத ராள்வயிற் பெற்றனென் முயன்றமா தவத்தால். 125

"உன் செல்வம் விரைந்து கெடுக" என்று சபித்தார்.

இந்திரனுடைய கற்பகம் காமதேனு ஐராவதம் முதலிய செல்வங்கள் அனைத்தும் மறைந்தன. பாற்கடல் கடைந்து இழந்தவைகளை மீண்டும் பெற்றான். இந்திரனால் அவுணர்கள் மாண்டனர். அது கண்ட அரக்கருடைய அன்னை திதி தன் கணவர் காசிபரை வேண்டி உலகங்களை வெல்லும் சிறந்த மகவு பிறக்கும் வரம் பெற்றாள்.

இந்த ஆசிரமத்தில் இருந்து கருவுற்று ஆயிரம்ஆண்டு தவஞ் செய்தாள். இந்திரன் கபட எண்ணத்துடன் வந்து அவளுக்குப் பணிவிடை புரிந்தான். அவள் கால்வைத்த இடத்தில் தலை வைத்துப் பகலில் உறங்கினாள். அநாசாரம் எய்தக் கண்ட இந்திரன் அவள் உட்புகுந்து கருவை ஏழு துண்டுகளாகச் சிதைத்துவிட்டான்; இந்திரன் பணிய அவள் கருணை புரிந்தாள். அத்துண்டுகள் ஏழும் சப்த மருத்துக்களாகப் பிறந்தன.

ஆய திவ்விட மவ்விட மவிர்மதி யணிந்த
தூய வன்றனக் குமைவயிற் றோன்றிய தொல்லை
வாயு வும்புனற் கங்கையும் பொறுக்கலா வலத்த
சேய்வ ளர்ந்தருள் சரவண மென்பதுந் தெரித்தான். 126

இரண்டாம் நாள் கங்கைக் கரையில் தங்கினார்கள்.

சகரனுடைய யாகப்பசுவை இந்திரன் பாதலத்தில் கபிலர் பின்புறம் ஒளித்துவைத்தான்.

சகரனுடைய மூத்தமனைவியின் மகன் அசமஞ்சன் துஷ்டனைபடியால் அவனை நாடுகடத்தினன். அவன் மகன் அம்சுமான் குதிரையைக் காணுது மீண்டனன்.

சகரனுடைய இளையமனைவியினுடைய மக்கள் சகரர்கள் அறுபதினுயிரம் பேர் உலகெங்கும் தேடிக் குதிரையைக் காணுது, பூமியை அகழ்ந்தனர். அது பின்னர் கடலாகியது. சகரர் தோண்டியபடியால் கடல் சாகரம் எனப்பெற்றது. கபிலர் பின்புறம் உள்ள குதிரையைக் கண்டு, மகிழ்ந்து கபிலரை இடர்ப்படுத்தினுர்கள். அவர் விழிபட்டுச் சாம்பராயினுர்கள்.

அம்சுமான் சென்று கருடர் கருணையினுல் குதிரையைக் கொணர்ந்து யாகத்தை முற்றுவித்தான்.

அம்சுமானுடைய புதல்வன் **திலீபன்**

திலீபனுடைய புதல்வன் **பகீரதன்**

அவன் தன் பாட்டனுர்களுக்கு நற்கதியுண்டாக்கக் கருதி பிரமதேவரை வேண்டி பதினுயிரம் ஆண்டு தவம் புரிந்தான்.

பிரமதேவர் கங்கை வந்து என்பின்மேல் படியுமானுல் நற்கதி பெறுவர் என்ருர்.

கங்கையை வேண்டி பதினுயிரம் ஆண்டு தவம்புரிய அவள் வந்து என்னை ஈசனே தாங்குவார் என்று கூறி மறைந்தாள்.

ஈசனைவேண்டி பதினுயிரம் ஆண்டு தவம் புரிய அவர்வந்து கங்கையைத் தாங்குவதாகக் கூறியருளி மறைந்தார்.

மீண்டும் கங்கையை வேண்டி ஐயாயிரம் ஆண்டு தவம் புரிந்தான்.

மீளவும் ஈசனை வேண்டி இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டு தவம்புரிந்தான். கங்கை வெள்ளத்தை ஈசனுர் தாங்கி, ஒரு சிறிது பூமியில் விடுத்தார். அக்கங்கை வெள்ளத்தைச் 'சன்னு' என்ற முனிவர் உண்டார். பகீரதன் வேண்டச் செவி வழி விடுத்தார். அதனுல் கங்கை சானவி எனவும், பகீரதன்கொணர்ந்ததனுல் பாகீரதி யெனவும் பேர் பெற்றது.

அக் கங்கை நன்னீர் சகரர்களுடைய எலும்பில் பாய, அவர்கள் சுவர்க்க முற்ருர்கள்.

மூன்ருவது நாள் விசாலை என்ற பட்டினத்தில் தங்கினர்கள்.

இக்ஷ்வாகுவின் புதல்வன் அலம்புசன். அவன் மகன் விசாலன். அவனல் உண்டாகிய நகரம் விசாலை.

அதை ஆளும் சூரியகுல மன்னன் **சுமதி** இவர்களை வரவேற்று உபசரித்தான்.

மூவரும் புறப்பட்டுப் போகும் வழியில் ஒரு கல் எதிர்ப்பட்டது.

கண்ட கன்மிசைக் காகுத்தன் கழற்றுகள் கதுவ
உண்ட பேதைமை மயக்கற வேறுபட் டுருவங்
கொண்டு மெய்யுணர் பவன்கழல் கூடிய தொப்பப்
பண்டை வண்ணமாய் நின்றனண் மாமுனிபணிப்பான். 127

மாயிரு விசும்பிற் கங்கை மண்மிசை யிழித்தோன் மைந்த
மேயின வுவகை யோடு மின்னென வொதுங்கி நின்ருள்
தீவினை நயந்து செய்த தேவர்கோன் றனக்குச் செங்கண்
ஆயிர மளித்தோன் பன்னி யகலிகை யாகு மென்ருன். 128

பொன்னையேர் சடையான் கூறக் கேட்டலும் பூமி கேள்வன்
என்னையே யென்னை யேயிவ் வுலகிய லிருந்த வண்ணம்
முன்னையூழ் வினையி னலோ நடுவொன்று முடிந்த
துண்டோ
அன்னையே யனையாட் கிவ்வா றடுத்தவா றருளுகென்ருன்.

தையலாள் நயன வேலு மன்மதன் சரமும் பாய
உய்யலா முறுதி நாடி யுழல்பவ னொருநா ளுற்ற
மையலா லறிவு நீங்கி மாமுனிக் கற்றஞ் செய்து
பொய்யிலா வுள்ளத் தான்ற னுருவமே கொண்டு புக்கான்.

புக்கவ ளோடுங் காமப் புதுமண மதுவின் றேறல்
ஒக்கவுண் டிருத்த லோடு முணர்ந்தன ளுணர்ந்தபின்னுந்
தக்கதன் றென்ன வோராள் தாழ்ந்தன ளிருப்பத் தாழா
முக்கண னனைய வாற்றன் முனிவனு முடுகி வந்தான். 131

சரந்தரு சாப மல்லாற் றடுப்பருஞ் சாபம் வல்ல
வரந்தரு முனிவ னெய்த வருதலும் வெருவி மாயா
நிரந்தர முலகி னிற்கு நெடும்பழி பூண்டா ணின்ருள்
புரந்தர னடுங்கி யாங்கோர் பூசையாய்ப் போக லுற்ருன்.

தீவிழி சிந்த நோக்கிச் செய்ததை யுணர்ந்து செய்ய
தூயவ னவனை நின்கைச் சுடுசர மனைய சொல்லால்

ஆயிர மாதர்க் குள்ள வறிகுறி யுனக்குண் டாகென்
றேயின னவையெலாம்வந் தியைந்தன விமைப்பின்
முன்னம்.

எல்லையில் நாண மெய்தி யாவர்க்கு நகைவந் தெய்தப்
புல்லிய பழியி னேடும் புரந்தரன் போய பின்றை
மெல்லிய லாளை நோக்கி விலைமக ளனைய நீயுங்
கல்லிய லாதி யென்றான் கருங்கலாய் மருங்கு வீழ்வாள்.

பிழைத்தது பொறுத்த லென்றும் பெரியவர் கடனே யென்பர்
அழற்றருங் கடவு ளன்னாய் முடிவிதற் கருளு கென்னத்
தழைத்துவண் டிமிருந் தண்டார்த் தசரத ராம னென்பான்
கழற்றுகள் கதுவ விந்தக் கல்லுருத் தவிர்தி யென்றான்.

இவ்வண்ண நிகழ்ந்த வண்ண
மினியிந்த வுலகுக் கெல்லாம்
உய்வண்ண மன்றி மற்றோர்
துயர்வண்ண முறுவ துண்டோ
மைவண்ணத் தரக்கி போரின்
மழைவண்ணத் தண்ண லேயுன்
கைவண்ண மங்கு கண்டேன்
கால்வண்ண மிங்கு கண்டேன். 136

அஞ்சன வண்ணத் தான்ற னடித்துகள் கதுவா முன்னம்
வஞ்சிபோ லிடையாண் முன்னை வண்ணத்த ளாகிநின்றாள்
நெஞ்சினாற் பிழைப்பி லாளை நீயழைத் திடுக வென்னக்
கஞ்சமாமுனிவ னன்னமுனிவனுங்கருத்துட்கொண்டான்.

பெண்கள் கற்பு கல்லைப்போல் திண்மையாக இருக்க வேண்டும். இரும்பு வளையும்; பாரம் அதிகமானல் கல் பிளக்குமேயன்றி வளையாது.

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மை யுண்டாகப் பெறின். —திருக்குறள்.

கணவன் வடிவில் வந்த இந்திரனை அகலிகை யறியாது மருவினள். பின் கணவனர் எய்தியதும் தன்னை மருவியது அந்நியன் என்றறிந்ததும் அவள் உயிர் துறந்திருத்தல்வேண்டும்.

தான் கோவலனைத் தண்டித்தது பிழை யென்றறிந்த பாண்டியன் மாண்டது போல் என்றறிக.

அவ்வாறு உயிர் துறவாமல் இருந்தபடியால் கல்லைப் போன்ற உறுதி கற்பில் இல்லை. ஆனபடியால் கல்லாக இரு என்று கௌதமர் சாபமிட்டனர்.

இவர் ஐந்தவித்தாரில் தலையாயவர். ஆதலினாலேயே இவரை நீத்தார் பெருமையில் வள்ளுவர் எடுத்துக்கூறுகின்றார்.

"ஐந்தவித்தானாற்றல் அகல்விசும்புளார் கோமான்
இந்திரனே சாலுங் கரி"

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப"

என்ற தொல்காப்பியர் உரைப்படி கௌதமர்சொல் உடனே அவளைக் கல்லாக மாற்றியது.

"கல்லி லேபொற் றாள்பட வேயது
நல்ல ரூபத் தேவர கானிடை
கௌவை தீரப் போகுமி ராகவன் மருகோனே."
—(கொள்ளையாசை) திருப்புகழ்.

மிதிலைக் காட்சிப் படலம்

கொடியசைதல்

மையறு மலரில் நீங்கி யான்செய்மா தவத்தின் வந்து
செய்யவ ளிருந்தாளென் று செழுமணிக்கொடிகளென்னுங்
கைகளை நீட்டி யந்தக் கடிநகர் கமலச் செங்கண்
ஐயனை யொல்லை வாவென் றழைப்பது போன்ற தம்மா.

ஆதரித் தமுதிற் கோல்தோய்த் தவயவமமைக்குந்தன்மை
யாதெனத் திகைக்கு மல்லான் மதனற்கு மெழுத வொண்ணாச்
சீதையைத் தருத லாலே திருமக ளிருந்த செய்ய
போதெனப் பொலிந்து தோன்றும் பொன்மதின் மிதிலைபுக்கார்.

நெய்திரள் நரம்பிற் றந்த மழலையி னியன்ற பாடல்
தைவரு மகர வீணை தண்ணுமை தழுவித் தூங்கக்
கைவழி நயனஞ் செல்லக் கண்வழி மனமுஞ் செல்ல
ஐயநுண் ணிடையா ராடு மாடக வரங்கு கண்டார். 140

மெய்வரு போக மொக்க வுடனுண்டு விலையுங் கொள்ளும்
பையர வல்கு லார்த முள்ளமும் பளிங்கும் போல
மையரி நெடுங்க ணேக்கம் படுதலுங் கருகி வந்து
கைபுகிற் சிவந்து காட்டுங் கந்துகம் பலவுங் கண்டார் .141

சீதையின் பெருமை

செப்புங் காலைச் செங்கம லத்தோன் முதல்யாரும்
எப்பெண் பாலும் கொண்டுவ மிப்போ ருவமிக்கும்
அப்பெண் டானே யாயின போதிங் கயல்வேறோர்
ஒப்பெங் கேகொண் டெவ்வகை நாடி யுரைசெய்வேம். 142

கொல்லும் வேலுங் கூற்றமு மென்னும் மிவையெல்லாம்
வெல்லும் வெல்லும் மென்ன மதர்க்கும் விழிகொண்டாள்
சொல்லுந் தன்மைத் தன்றது குன்றுஞ் சுவருந்திண்
கல்லும் புல்லுங் கண்டுருகப்பெண் கனிநின்றாள். 143

சீதையைக் காணல்

எண்ணரு நலத்தினா ளினைய நின்றுழிக்
கண்ணொடு கண்ணிணை கவ்வி யொன்றையொன்
றுண்ணவு நிலைபெறா துணர்வு மொன்றிட
அண்ணலு நோக்கினா னவளு நோக்கினாள். 144

நோக்கிய நோக்கெனு நுதிகொள் வேலிணை
ஆக்கிய மதுகையான் றோளி னாழ்ந்தன
வீக்கிய கனைகழல் வீரன் செங்கணுந்
தாக்கணங் கனையவள் தனத்திற் றைத்தவே. 145

பருகிய நோக்கெனும் பாசத் தாற்பிணித்
தொருவரை யொருவர்தம் முள்ள மீர்த்தலால்
வரிசிலை யண்ணலும் வாட்க ணங்கையும்
இருவரு மாறிப்புக் கிதய மெய்தினர். 146

மருங்கிலா நங்கையும் வசையி லையனும்
ஒருங்கிய இரண்டுடற் குயிரொன் றாயினர்
கருங்கடற் பள்ளியிற் கலவி நீங்கிப்போய்ப்
பிரிந்தவர் கூடினாற் பேசல் வேண்டுமோ. 147

சீதையின் விரகம்

நெருக்கியுட் புகுந்தரு நிறையும் பெண்மையும்
உருக்கியென் னுயிரொடு முண்டு போனவன்
பொருப்புறழ் தோள்புணர் புண்ணி யத்தது
கருப்புவில் லன்றவன் காம னல்லனே. 148

பெண்வழி நலனொடும் பிறந்த நாணொடும்
எண்வழி யுணர்வுநா னெங்குங் காண்கிலேன்

மண்வழி நடந்தடி வருந்தப் போனவன்
கண்வழி நுழையுமோர் கள்வ னேகொலாம். 149

உரைசெயிற் றேவர்தம் முலகு ளானலன்
விரைசெறி தாமரை யிமைக்கு மெய்ம்மையான்
வரிசிலைத் தடக்கையன் மார்பி னூலினன்
அரசிளங் குமரனே யாகல் வேண்டுமால். 150

வண்ண மாலைகை பரப்பி யுலகை
வளைந்தவிரு ளெல்லால்
உண்ண வெண்ணித் தண்மதியத்
துதயத் தெழுந்த நிலாக்கற்றை
விண்ணு மண்ணுந் திசை யனைத்தும்
விழுங்கிக் கொண்ட விரிநன்னீர்ப்
பண்ணை வெண்ணெய்ச் சடையன்றன்
புகழ்போ லெங்கும் பரந்துளதால். 151

கொடியை யல்லைநீ யாரையுங் கொல்கிலாய்.
வடுவி லின்னமு தத்தொடும் வந்தனை
பிடியின் மென்னடைப் பெண்ணொடென் றுலெனைச்
சுடுதி யோகடற் றோன்றிய திங்களே. 152

மாலை நேரம்; ஜனகர் உத்தரவுப்படி கௌதமரது புதல்வர் ஜனகருடைய புரோகிதர் சதானந்தர் வந்து மூவரையும் எதிர்கொண்டு ஒரு மாடமாளிகையில் இருத்தினர்.

கோதமன் றரு கோமுனி கோசிக
மாதவன் றனை மாமுக நோக்கிப்
போது நீயிவட் போதவிப் பூதலம்
ஏது செய்த தவமென் றியம்பினன். 153

கௌசிகர் கூறுதல்

வடித்த மாதவ கேட்டியிவ் வள்ளல்தான்
இடித்த வெங்குரற் றாடகை யாக்கையும்
அடுத்தெதன் வேள்வியும் நின்னன்னை சாபமும்
முடித்தென் னெஞ்சத் திடர்முடித் தானென்றான்.

சதானந்தர் இராமருக்கு விஸ்வாமித்திரருடைய வரலாறு முழுவதும் உரைத்தார்.

ஈது முன்னர் நிகழ்ந்த திவன்றுணை
மாத வத்துயர் மாண்புடை யாரிலை
நீதி வித்தகன் றன்னருள் நேர்ந்தனிர்
யாது மக்கரி தென்றன னீறிலான். 155

முனியுந் தம்பியும் போய்முறை யாற்றமக்
கினிய பள்ளிக ளெய்திய பின்னிருட்
கனியும் போல்பவன் கங்குலுந் திங்களும்
தனியுந் தானுமத் தையலு மாயினன். 156

ஏகு நல்வழி யல்வழி யென்மனம்
ஆகு மோவதற் காகிய காரணம்
பாகு போன்மொழிப் பைந்தொடி கன்னியே
ஆகும் வேறிதற் கையுற வில்லையே. 157

மறுநாள் காலை விஸ்வாமித்திரர் இராம லட்சுமணருடன் ஜனகருடைய சபா மண்டபம் அடைந்து இருந்தனர்.

இருந்தகுலக் குமரர்தமை யிருகண்ணின்
முகத்தழகு பருக நோக்கி
அருந்தவனை யடிவணங்கி யாரையிவ
ருரைத்திடுமி னடிக ளென்ன
விருந்தினர்கள் நின்னுடைய வேள்விகா
ணியவந்தார் வில்லுங் காண்பார்
பெருந்தகைமைத் தயரதன்றன் புதல்வரென
வவர்தகைமை பேச லுற்றான். 158

குலமுறை கிளத்து படலம்

பிணியரங்க வினையகலப் பெருங்காலந் தவம்பேணி
மணியரங்க நெடுமுடியாய் மலரயனை வழிபட்டுப்
பணியரங்கப் பெரும்பாயற் பரஞ்சுடரை யாங்காண
அணியரங்கந் தந்தானை யறியாதா ரறியாதார். 159

கருதலரும் பெருங்குணத்தோ ரிவர்முதலோர்
கணக்கிறந்தோர்
திரிபுவன முழுதாண்டு சுடர்நேமி செலநின்றோர்
பொருதுறைசேர் வேலினுய் புலிப்போத்தும் புல்வாயும்
ஒருதுறையில் நீருண்ண வுலகாண்டோ னுளனொருவன்.

இன்னுயிர்க்கு மின்னுயிரா யிருநிலங்காத் தாரென்று
பொன்னுயிர்க்குங் கழலவரை யாம்போலும் புகழ்கிற்பாம்
மின்னுயிர்க்கு நெடுவேலா யிவர்குலத்தோன் மேற்பறவை
மன்னுயிர்க்குத் தன்னுயிரை மாறாக வழங்கினனால். 161

துனியின்றி யுயிர்செல்லச் சுடராழிப் படைவெய்யோன்
பனிவென்ற படியென்னப் பகைவென்று படிகாப்போன்
தனுவன்றித் துணையில்லான் றருமத்தின் கவசத்தான்
மனுவென்ற நீதியான் மகவின்றி வருந்துவான். 162

சிலைக்கோட்டு நுதற்குதலைச் செங்கனிவாய்க் கருநெடுங்கண்
விலைக்கோட்டும் பேரல்குன் மின்னுடங்கு மிடையாரை
முலைக்கோட்டு விலக்கென்றங் குடனணுகி முன்னின்ற
கலைக்கோட்டுப் பெயர்முனியாற் றுயர்நீங்கக் கருதினான்.

தார்காத்த நறுங்குஞ்சித் தநயர்களென் றவமின்மை
வார்காத்த வனமுலையார் மணிவயிறு வாய்த்திலரால்
நீர்காத்த கடல்காத்த நிதங்காத்தே னென்னிற்பின்
பார்காத்தற் குரியாரைப் பணிநீயென் றடிபணிந்தான். 164

விரிந்திடுதீ வினைசெய்த வெவ்வியதீ வினையாலும்
அருங்கடையின் மறையறைந்த வறஞ்செய்தவறத்தாலும்
இருங்கடகக் கரதலத்திவ் வெழுதரிய திருமேனிக்
கருங்கடலைச் செங்கனிவாய்க் கவுசலையென் பாள்பயந்தாள்.

தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமண்டும்
பள்ளமெனுந் தகையானைப் பரதனெனும் பெயரானை
எள்ளரிய குணத்தாலு மெழிலாலு மிவ்விருந்த
வள்ளலையே யனையானைக் கேகயர்கோன் மகள்பயந்தாள்.

அருவலிய திறலினரா யறங்கெடுக்கும் விறலரக்கர்
வெருவருதிண் டிறலார்கள் வில்லேந்து மெனிற் செம்பொற்
பருவரையு நெடுவெள்ளிப் பருப்பதமும் போல்வார்கள்
இருவரையு மிவ்விருவர்க் கிளையாளு மீன்றெடுத்தாள். 167

திறையோடு மரசிறைஞ்சுஞ் செறிகழற்காற் றசரதனும்
பொறையோடுந் தொடர்மனத்தான் புதல்வரெனும் பெயரேகாண்

உறையோடு நெடுவேலா யுபநயன விதிமுடித்து
மறையோடு வித்திவரை வளர்த்தானும் வசிட்டன்காண். 168

அலையுருவக் கடலுருவத் தாண்டகைதன் னீண்டுயர்ந்த
நிலையுருவப் புயவலியை நீயுருவ நோக்கையா
உலையுருவக் கனலுமிழ்கட் டாடகைதன் னுரமுருவி
மலையுருவி மரமுருவி மண்ணுருவிற் றொருவாளி. 169

கோதமன்றன் பன்னிக்கு முன்னையுருக் கொடுத்ததிவன்
போதுநின்ற தெனப்பொலிந்த பொலன்கழற்காற்
பொடிகண்டாய்
காதலென்ற னுயிர்மேலு மிக்கரியோன் பாலுண்டால்
ஈதிவன்றன் வரலாறும் புயவலியு மெனவுரைத்தான். 170

கார்முகப்படலம்

மாற்றம்யா துரைப்பது மாய விற்குநான்
தோற்றவா றெனமனந் துளங்கு கின்றதால்
நோற்றனள் நங்கையு நொய்தி னையன்வில்
ஏற்றுமே லிடர்க்கட லேற்று மென்றனன். 171

உறுவலி யானையை யொத்த மேனியர்
செறிமயிர்க் கல்லெனத் திரண்ட தோளினர்
அறுபதி னுயிர ரளவி லாற்றலர்
தறிமடுத் திடையிடை தண்டிற் றுங்கினர். 172

திண்ணெடு மேருவைத் திரட்டிற் றேவென்பார்
வண்ணவான் கடல்பண்டு கடைந்தமத் தென்பார்
அண்ணல்வா ளரவினுக் கரச னேயென்பார்
விண்ணிடு நெடியவில் வீழ்ந்த தோவென்பார். 173

என்னிது கொணர்கென வியம்பி னானென்பார்
மன்னவ னுளர்கொலோ மதிகெட் டாரென்பார்
முன்னையூழ் வினையினுன் முடிக்க லாமென்பார்
கன்னியு மிச்சிலை காணு மோவென்பார். 174

சதானந்தர் விஸ்வாமித்திரரிடம் சீதையின்
பிறப்பைக் கூறுதல்

உழுகின்ற கொழுமுகத்தி னுதிக்கின்ற கதிரொளிபோல்
பொழிகின்ற புவிமடந்தை திருவெளிப்பட் டெனப்புணரி

எழுகின்ற தெள்ளமுதோ டெழுந்தவளு மிழிந்தொதுங்கித்
தொழுகின்ற நன்னலத்துப் பெண்ணரசி தோன்றினாள்.

குணங்களையென் கூறுவது
கொம்பினைச்சேர்ந் தவையுய்யப்
பிணங்குவன வழகிவளைத்
தவஞ்செய்து பெற்றதுகாண்
கணங்குழையா ளெழுந்ததற்பின்
கதிர்வானிற் கங்கையெனும்
அணங்கிழியப் பொலிவிழந்த
வாறொருத்தார் வேறுற்றார். 176

இந்த வில்லை வளைத்தார்க்கே சீதையைத் தருவது
என்று நியதி வைத்துளது.

அன்றுமுத லின்றளவு மாருமிந்தச் சிலையருகு
சென்றுமிலர் போயொளித்தார் தேர்வேந்தர் திரிந்துமிலர்
என்றுமிலர் மணமுமிலை யென்றிருந்தே மிவனேற்றின்
நன்றுமலர்க் குழற்சீதை நலம்பழுதா காதென்றான். 177

நினைந்தமுனி பகர்ந்தவெலா நெறியுன்னி யறிவனுந்தன்
புனைந்தசடை முடிதுளக்கிப் போரேற்றின் முகம்
பார்த்தான்
வனைந்தனைய திருமேனி வள்ளலுமம் மாதவத்தோன்
நினைந்தவெலா நினைந்தந்த நெடுஞ்சிலையை நோக்கினான்.

பொழிந்தநெய் யாகுதி வாய்வழி பொங்கி
எழுந்தகொ ழுங்கன லென்ன வெழுந்தான்
அழிந்தது வில்லென விண்ணவ ரார்த்தார்
மொழிந்தன ராசிகண் முப்பகை வென்றார். 179

கரங்கள் குவித்திரு கண்கள் பனிப்ப
இருங்களி றிச்சிலை யேற்றில னாயின்
நரந்தந றைக்குழல் நங்கையு நாமும்
முருங்கெரி யிற்புக மூழ்குது மென்பார். 180

வள்ளன் மணத்தை மகிழ்ந்தன னென்றால்
கொள்ளென முன்பு கொடுப்பதை யல்லால்
வெள்ள மணத்தவன் வில்லை யெடுத்திப்
பிள்ளைமு னிட்டது பேதைமை யென்பார். 181

தோகைய ரின்னன சொல்லிட நல்லோர்
ஓகை விளம்பிட வும்ப ருவப்ப
மாகம டங்கலு மால்விடை யும்பொன்
நாகமு நாகமு நாண நடந்தான். 182

தடுத்திமை யாம லிருந்தவர் தாளின்
மடுத்தது நாணுதி வைத்தது நோக்கார்
கடுப்பினில் யாரு மறிந்திலர் கையால்
எடுத்தது கண்டன ரிற்றது கேட்டார். 183

ஆரிடைப் புகுது நாமென் றமரர்கள் கமலத்தோன்றன்
பேருடை யண்ட கோளம் பிளந்ததென் றேங்கி நைந்தார்
பாரிடை யுற்ற தன்மை பகர்வதென் பாரைத் தாங்கி
வேரிடைக் கிடந்த நாக மிடியென வெருவிற் றன்றே. 184

பூமழை சொரிந்தார் விண்ணோர் பொன்மழை பொழிந்த மேகம்
பாமமா கடல்க ளெல்லாம் பன்மணி தூவி யார்த்த
கோமுனிக் கணங்க ளெல்லாங் கூறின வாசி கொற்ற
நாமவேற் சனகற் கின்று நல்வினை பயந்த தென்னா. 185

தயரதன் புதல்வ னென்பார் தாமரைக் கண்ணனென்பார்
புயலிவன் மேனி யென்பார் பூவையும் பொருவு மென்பார்
மயலுடைத் துலக மென்பார் மானுட னல்ல னென்பார்
கயல்பொரு கடலுள் வைகுங் கடவுளே காணு மென்பார்.

நம்பியைக் காண நங்கைக் காயிரம் நயனம் வேண்டும்
கொம்பினைக் காணுந் தோறுங் குரிசிற்கு மன்னதேயாம்
தம்பியைக் காண்மி னென்பார் தவமுடைத் துலக மென்பார்
இம்பரிந் நகரில் தந்த முனிவனை யிறைஞ்சுமென்பார். 187

"சிலை மொளுக்கென முறிபட மிதிலை யிற்சநகமனருள்
திருவினைப்புண ரரிதிரு மருகோனே"
—(முலைகுலுக்கிகள்) திருப்புகழ்.

நீலமாலை என்ற தோழி சீதையிடம் கூறுவது

கயரத துரகமாக் கடலன் கல்வியன்
தயரத னெனும் பெயர்த் தனிச்செ னேமியான்
புயல்பொழி தடக்கையான் புதல்வன் பூங்கணை
மயல்விளை மதனற்கும் வடிவு மேன்மையான். 188

மராமர மிவையென வலிய தோளினுன்
அராவணை யமலனென் றயிர்க்கு மாற்றலான்
இராமனென் பதுபெய ரிளைய கோவொடும்
பராவரு முனியொடும் பதிவந் தெய்தினுன். 189

பூணியன் மொய்ம்பினன் புனித னெய்தவில்
காணிய வந்தன னென்னக் காவலன்
ஆணையி னடைந்தவில் லதனை யாண்டகை
நாணினி தேற்றிஞ னடுங்கிற் றும்பரே. 190

சீதையின் மகிழ்ச்சி

இல்லையே நுசுப்பென்ப ருண்டுண் டென்னவும்
மெல்லியன் முலைகளும் விம்ம விம்முவாள்
சொல்லிய குறியினத் தோன்ற லேயவன்
அல்லனே லிறப்பலென் றகத்து ளுன்னினுள். 191

எழுச்சிப் படலம்

ஜனகர், திருமண ஓலை தயரதருக்குத் தூதர் மூலம் அனுப்பினுர்.

தயரதர் தமது பரிவாரங்களுடன் புறப்பட்டு மிதிலையை நோக்கி வருவாராயினுர்.

சங்கமும் பணையுங் கொம்புந் தாளமுங் காளத் தோடு
மங்கல பேரி செய்த பேரொலி மழையை யோட்டத்
தொங்கலுங் குடையுந் தோகைப் பிச்சமுஞ் சுடரை
யோட்டத்
திங்கள்வெண் குடைகண் டோடத் தேவரு மருளச்
சென்ருன். 192

வரைக்காட்சிப் படலம்

தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினு மவர்தம்
மருண்ட புன்மையை மாற்றுவ ரெனுமிது வழக்கே
உருண்ட வாய்தொறும் பொன்னுருளுரைத்துரைத்தோடி
இருண்ட கல்லையுந் தன்னிற மாக்கிய விரதம். 193

வழியில் **சந்திர சயிலம்** என்ற மலையில் தங்கினுர்கள்.

செங்கய லனைய நாட்டஞ் செவியுரு முறுவல்தோன்ரு
பொங்கிருங் கூந்தல் சோரா புருவங்க ணெரியா பூவின்

அங்கையு மிடறுங் கூட்டி நரம்பளைந் தமிர்த மூறும்
மங்கையர் பாடல் கேட்டுக் கின்னர மயங்கு மாதோ. 194

பூக்கொய் படலம்

போரென்ன வீங்கும் பொருப்பன்ன பொலங்கொள் திண்டோள்
மாரன் னனையான் மலர்கொய் திருந்தானை வந்தோர்
காரன்ன கூந்தற் குயிலன்னவள் கண்புதைப்ப
ஆரென்ன லோடும்மனலென்னவயிர்த்துயிர்த்தாள். 195

நீர்விளையாட்டுப் படலம்

தாழ நின்ற ததைமலர்க் கையினல்
ஆழி மன்னொரு வன்னுரைத் தானது
வீழி யின்கனி வாயொரு மெல்லியல்
தோழி கண்ணிற்க டைக்கணிற் சொல்லினள். 196

தயரதர் மிதிலை சேர, ஜனகர் எதிர்கொண்டு
வரவேற்று உபசரித்தார்.

இராமரும் இலட்சுமணரும் எதிர்வந்து
பிதாவைப் பணிந்தனர்.

உலாவியற் படலம்

இராமர் உலா வரும்போது மகளிர் கண்டு வியத்தல்.

மைக்கருங் கூந்தற்செவ்வாய் வாணுத லொருத்தியுள்ளம்
நெக்கன ளுருகுகின்றுள் நெஞ்சிடை வஞ்சன்வந்து
புக்கனன் போகாவண்ணங் கண்ணெனும் புலங்கொள் வாயில்
சிக்கென வடைத்தேன்றேழி சேருது மமளியென்றுள். 197

தோள்கண்டார் தோளேகண்டார் தொடுகழற் கமலமன்ன
தாள்கண்டார் தாளேகண்டார் தடக்கைகண் டாருமஃதே
வாள்கொண்ட கண்ணார்யாரே வடிவினை முடியக்கண்டார்
ஊழ்கொண்டசமயத்தன்னை னுருவுகண் டாரையொத்தார்.

மாதொ ருத்தி மனத்தினை யல்லதோர்
தூது பெற்றில ளின்னுயிர் சோர்கின்றுள்
போத ரிக்கட்பொ லங்குழைப் பூண்முலைச்
சீதை யெத்தவஞ் செய்தன ளோவென்றுள். 199

கோலங்காண் படலம்

திருமணப்பந்தரில் சீதையை அழைத்துவருமாறு வசிட்டர் கட்டளையிட்டனர்.

ஜனகர் ஏவுதல்.

உரை செயத் தொழுத கைய னுவந்தவுள் ளத்தன் பெண்ணுக்
கரைசியைத் தருதி நீண்டென் றுயிழை யவரை யேவக்
கரைசெயற் கரிய காதல் கடாவிடக் கடிது சென்றார்
பிரசமொத் தினியசொல்லார் பேதைதா தியரிற்சொன்னார்.

அமிழிமைத் துணைகள் கண்ணுக் கணியென வமைக்கு மாபோல்
உமிழ்சுடர்க் கலன்கள்நங்கை யுருவினை மறைப்ப தோரார்
அமிழ்தினைச் சுவை செய்தென்ன வழகினுக்கழகுசெய்தார்
இமிழ்திரைப் பரவை ஞால மேழைமை யுடைத்து மாதோ.

சில்லிய லோதிகொங்கைத் திரள்மணிக் கனகச்செப்பில்
வல்லியு மனங்கன் வில்லு மான்மதச் சாந்திற் றீட்டிப்
பல்லிய னெறியிற் பார்க்கும் பரம்பொரு ளென்ன யார்க்கும்
இல்லையுண் டென்ன நின்ற விடையினுக் கிடுக்கண் செய்தார். 202

சீதாபிராட்டியார் அவைக்கு வருதல்

பொன்னிஞெளி பூவின்வெறி சாந்துபொதி சீதம்
மின்னினிழ லன்னவள்தன் மேனியொளி மான
வன்னமும ரம்பையரு மாரமிழ்து நாண
மன்னவையி ருந்தமணி மண்டபம டைந்தாள். 203

அன்னவளை யல்லளென வாமெனவ யிர்ப்பான்
கன்னியமிழ் தத்தையெதிர் கண்டகடல் வண்ணன்
உன்னுயிர்நி லைப்பதொர ருத்தியொடு மைத்தாண்
டின்னமிழ்தெ ழக்களிகொ ளிந்திரனை யொத்தான். 204

எங்கள்செய்த வத்தினிலி ராமனென வந்தான்
சங்கிஞெடு சக்கரமு டைத்தனிமு தற்போ
அங்கணர சாதலினவ் வல்லிமலர் புல்லும்
மங்கையிவ ளாமெனவ சிட்டன்மகிழ் வுற்றான். 205

மாதவரை முற்கொளவ ணங்கிநெடு மன்னன்
பாதமல ரைத்தொழுது கண்கள்பனி சோருந்
தாதையரு கிட்டதவி சிற்றனியி ருந்தாள்
போதினைவெ றுத்தரசர் பொன்மனைபு குந்தாள். 206

எய்யவில்வ ளைத்ததுமி றுத்ததுமு ரைத்து
மெய்வினைவி டத்துமுத லைபம்விட லுற்ருள்
ஐயனைய கத்துவடி வேயலபு றத்துங்
கைவளைதி ருத்துபுக டைக்கணினு ணர்ந்தாள். 207

நாளை திருமணம் என்று நிச்சயித்தனர்.

கடிமணப் படலம்

தோரண நடுவாருந் தூணுறை பொதிவாரும்
பூரண குடமெங்கும் புனைதுகில் புனைவாருங்
காரணி நெடுமாடங் கதிர்மணி யணிவாரும்
ஆரண மறைவாணர்க் கமுதினி தடுவாரும். 208

முப்பரம் பொருளிற்குண் முதலை மூலத்தை
யிப்பரந் துடைத்தவ ரெய்து மின்பத்தை
யப்பனை யப்பினு ளமிழ்தந் தன்னையே
ஒப்பனை யொப்பனை யுரைக்க வொண்ணுமோ. 209

இராமர் வருதல்

அனையதோர் தேரினி லருண னின்றெனப்
பனிவரு மலர்க்கணப் பரதன் கோல்கொளக்
குனிசிலைத் தம்பிபின் கூட வேனையன்
இனியபொற் கவரிகா லியக்க வேகினன். 210

இரதமாண்டிழிந்தபின்னரிருமருங்கிரண்டுகையும்
பரதனு மிளைய கோவும் பரிந்தன ரேந்தப் பைந்தார்
வரதனு மெய்தி மைதீர் மாதவர்த் தொழுது நீதி
விரதமெய்த் தாதை பாதம் வணங்கிமா டிருந்தவேலை.

மன்றலின் வந்து மணத்தவி சேறி
வென்றி நெடுந்தகை வீரனு மார்வத்
தின்றுணை யன்னமு மெய்தியி ருந்தார்
ஒன்றிய போகமும் யோகமு மொத்தார். 212

கோமகன் முன்சன கன்குளிர் நன்னீர்
பூமக ளும்பொரு ளும்மென நீயென்

மாமகள் தன்னொடு மன்னுதி யென்னாத்
தாமரை யன்ன தடக்கைபி னீந்தான். 213

இடம்படு தோளவ ளேடியை வேள்வி
தொடங்கிய வெங்கனல் சூழ்வரு போதின்
மடம்படு சிந்தையண் மாறுபி றப்பின்
உடம்புயி ரைத்தொடர் கின்றதை யொத்தாள். 214

வலங்கொடு தீயைவ ணங்கினர் வந்து
பொலம்புரி நூலவர் செய்பொருண் முற்றி
இலங்கொளி யம்மிமி தித்தெதிர் நின்ற
கலங்கலில் கற்பின ருந்ததி கண்டார். 215

ஆர்த்தன பேரிக ளார்த்தன சங்கம்
ஆர்த்தன நான்மறை யார்த்தனர் வானோர்
ஆர்த்தன பல்கலை யார்த்தன பல்லாண்
டார்த்தன வண்டின மார்த்தன வேலை. 216

கேகய மாமகள் கேழ்கிளர் பாதந்
தாயினு மன்பொடு தாழ்ந்துவ ணங்கா
ஆயத னன்னைய டித்துணை சூடித்
தூயசு மித்திரை தாள்தொழ லோடும். 217

அன்னமு மன்னவ ரம்பொன்ம லர்த்தாள்
சென்னிபு னைந்தனள் சிந்தையு வந்தார்
கன்னிய ருந்ததி காரிகை காணா
நன்மக னுக்கிவள் நல்லணி யென்றார். 218

பங்குனி யுத்தர மானப கற்போ
தங்கணி ருக்கினி லாயிர நாமச்
சிங்கம ணத்தொழில் செய்ததி றத்தான்
மங்கல வங்கிவ திட்டன்வ குத்தான். 219

வள்ளல் தனக்கிளை யோர்கள் தமக்கும்
எள்ளலில் கொற்றவ னெம்பிய ளித்த
அள்ளன்ம லர்த்திரு வன்னவர் தம்மைக்
கொள்ளுமெ னத்தம ரோடுகு றித்தான். 220

கொய்நிறை தாரன்கு சத்துவ சப்பேர்
நெய்நிறை வேலவன் மங்கையர் நேர்ந்தார்
மைநிறை கண்ணியர் வானுறை நீரார்
மெய்நிறை மூவரை மூவரும் வேட்டார். 221

"தாடகை யுரங்க டிந்தொளிர்
மாமுனி மகஞ் சிறந்தொரு
தாழ்வற நடந்து திண்சிலை முறியாவொண்
ஜாநகி தனங் கலந்தபின்
ஊரில் மகுடங் கடந்தொரு
தாயர் வசனஞ் சிறந்தவன் மருகோனே"
—(ஆடல்மத) திருப்புகழ்

ஜனகருடைய தம்பி சாங்காஸ்யம் என்ற நாட்டு மன்னர், **குசத்துவஜருடைய** புதல்வியர்கள் மாண்டவி, சுருதகீர்த்தி என்ற இருவர்களையும் பரத சத்ருக்கனரும், ஜனகருடைய மனைவி வயிற்றில் பிறந்த ஊர்மிளையை இலக்குவரும் திருமணம் புரிந்து கொண்டனர்.

பரசுராமப் படலம்

விஸ்வாமித்திரர் விடைபெற்றுப் போதல்

தானுவதொர் வகையேநனி சனகன்றரு தையலும்
நானுவித முறுபோகமு நுகர்கின்றவன் நாள்வாய்
ஆனுமறை நெறிமாதவ முனிகோசிக னருளிப்
போனுன்வட திசைவாயுயர் பொன்மால்வரை புக்கான்.

தசரதர் புறப்படுதல்

தன்மக்களு மருமக்களு நனிதன்கழல் தழுவ
மன்மக்களு மயன்மக்களும் வயின் மொய்த்திட மிதிலைத்
தொன்மக்களு மனமுக்குயிர் பிரிவென்பதொர் துயரின்
வன்மைக்கடல் புகவுய்ப்பதொர் வழிபுக்கன னுரவோன்.

சகுனம் பிழைபடுதல்

ஏகும்மள வையின்வந்தன வலமும்மயி லிடமும்
காகம்முத லியமுந்திய தடைசெய்வன கண்டான்
நாகம்மன னிடையிங்குள திடையூறென நடவான்
மாகம்மணி யணிதேரொடு நின்றுனெறி வந்தான். 224

நின்றேநெறி யுணர்வானொரு நினைவாளனை யழையா
நன்றோபழு துளதோநடு வுரைநீநய மென்னக்
குன்றேபுரை தோளானெதிர்ப் புள்ளின்குறி கொள்வான்
இன்றேவரு மிடையூறது நன்றுய்விடு மென்றுன். 225

பரசுராமர் வருதல்

சய்யம்புக நிமிரக்கடல் தழுவும்படி சமைவான்
மய்யின்னுயர் மலைநூறிய மழுவாளவன் வந்தான்
அய்யன்றனை யரிதிற்றரு மரசன்னது கண்டான்
வெய்யன்வர நிபமென்னைகொ லெனவெய்துறு மெல்லை.

தயரதர் வேண்டுதல்

அரைசன்னவ னிடைவந்தினி தாராதனை புரிவான்
விரைசெய்முடி படிமேலுற வடிமேலுற விழலும்
கரைசென்றில னனையானெடு முடிவின்கனல் கால்வான்
முரைசின்குரல் படவீரன தெதிர்நின்றிவை மொழிவான்.

இற்றேடிய சிலையின்றிற மறிவென்னினி யானுன்
பொற்றேள்வலி நிலைசோதனை புரிவானசை யுடையேன்
செற்றேடிய திரள்தோளுறு தினவுஞ்சிறி துடையேன்
மற்றேர்பொருளிலையிங்கிதென் வரவென்றன னுரவோன்.

அவனன்னது பகரும்மள வையின்மன்னவ னயர்வான்
புவனம்முழு வதும்வென்றெரு முனிவற்கருள் புரிவாய்
சிவனும்மய னரியும்மலர் சிறுமானிடர் பொருளோ
இவனும்மென துயிரும்முன தபயம்மினி யென்றான். 229

சலத்தோடியை விலனென்மக னனையானுயிர் தபுமேல்
உலத்தோடெதிர் தோளாயென துறவோடுயி ருகுவேன்
நிலத்தோடுயர் கதிர்வானுற நெடியாயுன தடியேன்
குலத்தோடற முடியேலிது குறைகொண்டனெனென்றான்.

பரசுராமர் இராமரைச் சந்தித்துக் கூறுதல்

ஊனவில் லிறுத்த மொய்ம்பை நோக்குவ தூக்க மன்றால்
மானவ மற்றுங் கேளாய் வழிப்பகை யுடையே னும்பால்
ஈனமி லெந்தை சீற்ற நீக்கின னென்ன முன்னோர்
தானவ னனைய மன்னன் கொல்லயான் சலித்து மன்னே.

உலகெலாமுனிவற்கீந்தே னுறுபகையொடுக்கிப்போந்தேன்
அலகின்மா தவங்கள்செய்தென்னருவரையிருந்தேனண்டைச்
சிலையைநீ யிறுத்த வோசை செவியுறச் சீறி வந்தேன்
மலைகுவென் வல்லை யாகில் வாங்கிடித் தனுவையென்றான்.

இராமர் வில்லை வளைத்துக் கூறுதல்

பூதலத் தரசை யெல்லாம் பொன்றுவித் தனையென்றாலும்
வேதவித் தாய மேலோன் மைந்தனீ விரதம் பூண்டாய்

ஆதலிற் கொல்ல லாகா தம்பிது பிழைப்ப தன்றால்
யாதிதற் கிலக்க மாவ தியம்புதி விரைவினென்றான். 233

தவத்தைக் கவர்தல்

எய்தவம் பிடைபழு தெய்தி டாமலென்
செய்தவம் யாவையுஞ் சிதைக்க வேயெனக்
கையவ ணெகிழ்தலுங் கணையுஞ் சென்றவன்
மையறு தவமெலாம் வாரி மீண்டதே. 234

எண்ணிய பொருளெலா மினிது முற்றுக
மண்ணிய மணிநிற வண்ண வண்டுழாய்க்
கண்ணிய யாவர்க்குங் களைக ணாகிய
புண்ணிய விடையெனத் தொழுது போயினான். 235

அழிந்தவன் போனபி னமல னையுணர்
வொழிந்தன னுயிருலந் துருகு தாதையைப்
பொருந்தபே ரன்பினாற் றொழுது முன்புகக்
கிழிந்தவான் றுயர்க்கடற் கரைநின் றேற்றினான். 236

பூமழை பொழிந்தனர் புகுந்த தேவருள்
வாமவேல் வருணனை மான வெஞ்சிலை
சேமியென் றுதவித்தன் சேனை யார்த்தெழ
நாமநீ ரயோத்திமா நகர நண்ணினான். 237

கேகயநாட்டின் மன்னன் மகன் **யுதாஜித்து** வந்து அழைக்க தயரதர் பரத சத்துருக்கனரைக் கேகயநாட்டுக்கு அனுப்புதல்.

ஆணைநின் றன்முது தாதை யையநிற்
காணிய விழைவதோர் கருத்த னாதலாற்
கேணியில் வளைமுரல் கேக யம்புகப்
பூணெளிர் மார்பநீ போதி யென்றனன். 238

ஏவலு மிறைஞ்சிப்போ யிராமன் சேவடிப்
பூவினைச் சென்னியிற் புனைந்து போயினன்
ஆவியங் கவனல தில்லை யாதலான்
ஓவலி லுயிர்ப்பிரிந் துடல்சென் றென்னவே. 239

உளைவிரி புரவித்தே ருதாசித் தென்றெனும்
வளைமுரல் தானையான் மருங்கு போதப்போய்
இளையவன் றன்னொடு மேழு நாளிடை
நளிர்புனற் கேகய நாடு நண்ணினான். 240

பாலகாண்டம் முற்றிற்று.

அயோத்தியா காண்டம்

மந்திரப் படலம்

காப்பு

வானின் றிழிந்து வரம்பிகந்த
மாபூ தத்தின் வைப்பெங்கும்
ஊனு முயிரு முணர்வும்போ
லுள்ளும் புறத்து முளனென்ப
கூனுஞ் சிறிய கோத்தாயுங்
கொடுமை யிழப்பக் கோற்றுறந்து
கானுங் கடலுங் கடந்திமையோ
ரிடுக்கண் காத்த கழல்வேந்தை. 241

தயரதர் அரசவையில் வீற்றிருந்தனர்.
அங்கு வந்த அமைச்சருடைய பெருமை

குலமுதற் றொன்மையுங் கலையின் குப்பையும்
பலமுதற் கேள்வியும் பயனு மெய்தினர்
நலமுத னலியினும் நடுவு நோக்குவார்
சலமுத லறுத்தருந் தருமந் தாங்கினர். 242

உற்றது கொண்டுமேல்வந் துறுபொருளுணருங் கோளார்
மற்றது வினையின் வந்த தாயினு மாற்ற லாற்றும்
பெற்றியர் பிறப்பின் மேன்மைப் பெரியவ ரரிய நூலும்
கற்றவர் மான நோக்கிற் கவரிமா வனைய நீரார். 243

காலமு மிடனு மேற்ற கருவியுந் தெரியக் கற்ற
நூலுற நோக்கித் தெய்வ நுனித்தறங் குணித்தமேலோர்
சீலமும்புகழ்க்கு வேண்டுஞ் செய்கையுந் தெரிந்துகொண்டு
பால்வரு முறுதி யாவுந் தலைவற்குப் பயக்கும் நீரார். 244

தம்முயிர்க்குறுதியெண்ணார் தலைமகன்வெகுண்டபோதும்
வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின் றுரைக்கும் வீரர்
செம்மையிற் றிறம்பல் செல்லாத் தேற்றத்தார் தெரியுங் காலம்
மும்மையு முணர வல்லா ரொருமையே மொழியு நீரார். 245

நல்லவுந் தீயவு நாடி நாயகற்
கெல்லையின் மருத்துவ னியல்பி னெண்ணுவார்
ஒல்லைவந் துறுவன வுற்ற பெற்றியின்
தொல்லைநல் வினையென வுதவுஞ் சூழ்ச்சியார். 246

அறுபதி னுயிர ரெனினு மாண்டகைக்
குறுதியி லொன்றிவர்க் குணர்வென் றுன்னலாம்
பெறலருஞ் சூழ்ச்சியர் திருவின் பெட்பினர்
மறிதிரைக் கடலென வந்து சுற்றினர். 247

தயரதர் கூறுதல்

கன்னியர்க் கமைவருங் கற்பின் மாநிலம்
தன்னையித் தகைதரத் தருமங் கைதர
மன்னுயிர்க் குறுவதே செய்து வைகினேன்
என்னுயிர்க் குறுவதுஞ் செய்ய வெண்ணினேன். 248

வெள்ளநீ ருலகினில் விண்ணில் நாகரில்
தள்ளரும் பகையெலாந் தவிர்த்து நின்றயான்
கள்ளரிற் கரந்துறை காம மாதியா
உள்ளுறை பகைஞருக் கொதுங்கி வாழ்வெனோ. 249

பஞ்சிமென் றளிரடிப் பாவை கோல்கொள
வெஞ்சினத் தவுணர்தேர் பத்தும் வென்றுளேற்
கெஞ்சலில் மனமெனு மிழுதை யேறிய
அஞ்சுதேர் வெல்லுமீ தருமை யாவதோ. 250

இறப்பெனு மெய்ம்மையை யிம்மை யாவர்க்கும்
மறப்பெனு மதனின்மேற் கேடு மற்றுண்டோ
துறப்பெனுந் தெப்பமே துணைசெ யாவிடிற்
பிறப்பெனும் பெருங்கடல் பிழைக்க லாகுமோ. 251

கச்சையங் கடகரிக் கழுத்தின் கண்ணுறப்
பிச்சமுங் கவிகையும் பெய்யு மின்னிழல்
நிச்சய மன்றெனில் நெடிது நாளுண்ட
எச்சிலை நுகருவ தின்ப மாகுமோ. 252

இறந்திலன் செருக்களத் திராமன் தாதைதான்
அறந்தலை நிரம்பமூப் படைந்த பின்னரும்
துறந்தில னென்பதோர் சொல்லுண் டானபின்
பிறந்தில னென்பதிற் பிறிதுண் டாகுமோ. 253

பெருமக னென்வயிற் பிறக்கச் சீதையாம்
திருமகள் மணவினை தெரியக் கண்டயான்
அருமகள் நிறைகுணத் தவனி மாதெனும்
ஒருமகள் மணமுங்கண் டுவப்ப தாயினேன். 254

ஆதலா லிராமனுக் கரசை நல்கியிப்
பேதைமைத் தாய்வரும் பிறப்பை நீக்குவான்
மாதவந் தொடங்கிய வனத்தை நண்ணுவேற்
கியாதுநுங் கருத்தென இனைய கூறினன். 255

அமைச்சர் தன்மை

திரண்ட தோளின னிப்படிச் செப்பலுஞ் சிந்தை
புரண்டு மீதிடப் பொங்கிய வுவகைய ராங்கே
வெருண்டு மன்னவன் பிரிவெனும் விம்முறு நிலையால்
இரண்டு கன்றினுக் கிரங்குமோ ராவென விருந்தார். 256

வசிட்டர் கூறுவது.

நிருப நின்குல மன்னவர் நேமிபண் டுருட்டிப்
பெருமை யெய்தினர் யாவரே யிராமனைப் பெற்றார்
கரும மேயிது கற்றுணர்ந் தோய்க்கினிக் கடவ
தரும மும்மிது தக்கதே நினைத்தனை தகவோய். 257

புறத்து நாமொரு பொருளினிப் புகல்கின்ற தெவனோ
அறத்தின் மூர்த்திவந் தவதரித் தானென்ப தல்லால்
பிறத்தி யாவையுங் காத்தவை பின்னுறத் துடைக்கும்
திறத்து மூவருந் திருத்திய திருத்துமத் திறலோன். 258

வார மென்னினிப் பகர்வது வைகலு மனையான்
பேரி னுல்வரு மிடையுறு பெயர்கின்ற பயத்தால்
வீர நின்குல மைந்தனை வேதியர் முதலோர்
யாரும் யாஞ்செய்த நல்லறப் பயனென விருப்பார். 259

மண்ணினு நல்லள் மலர்மகள் கலைமகள் கலையூர்
பெண்ணினு நல்லள் பெரும்புகழ்ச் சனகியோ நல்லள்
கண்ணினும் நல்லன் கற்றவர் கற்றிலா தவரும்
உண்ணு நீரினு முயிரினு மவனையே யுவப்பார். 260

தயரதர் மகிழ்ச்சி

மற்றவன் சொன்ன வாசகங் கேட்டலு மகனைப்
பெற்ற வன்றினும் பிஞ்ஞகன் பிடித்தவப் பெருவில்
இற்ற வன்றினு மெறிமழு வாளவ னிழுக்கம்
உற்ற வன்றினும் பெரியதோ ருவகைய னானன். 261

சுமந்திரர் அறமொழி

உறத்த கும்மர சிராமற்கென் றுவக்கின்ற மனத்தைத்
துறத்தி நீயெனுஞ் சொற்சுடு நின்குலத் தொல்லோர்

மறத்தல் செய்திலாத் தருமத்தை மறப்பதும் வழக்கன்
றறத்தி னூஉங்கினிக் கொடிதென லாவதொன் றியாதே.

தயரதர் இராமரை அழைத்துக் கூறுதல்

நலங்கொண் மைந்தனைத் தழுவின னென்பதென் னளிநீர்
நிலங்கள் தாங்குறு நிலையினை நிலையிட நினைத்தான்
விலங்க லன்னதிண் டோளையு மெய்த்திரு விருக்கும்
அலங்கன் மார்பையுந் தனதுதோண் மார்புகொண்
டளந்தான். 263

ஐய சாலவு மலசின னரும்பெரு மூப்பும்
வெய்ய தாயது வியலிடப் பெரும்பரம் விசித்த
தொய்யன் மாநிலச் சுமையுறு சிறைதுறந் தினியான்
உய்ய லாவதோர் நெறிபுக வுதவிட வேண்டும். 264

அனைய தாதலி னருந்துயர்ப் பெரும்பர மரசன்
வினையி னென்வயின் வைத்தன னெனக்கொள வேண்டா
புனையு மாமுடி புனைந்திந்த நல்லறம் புரக்க
நினையல் வேண்டும்யா னின்வயிற் பெறுவதீதென்றான்.

இராமர் தன்மை

தாதை யப்பரி சுரைசெயத் தாமரைக் கண்ணன்
காத லுற்றில னிகழ்ந்திலன் கடனிதென் றுணர்ந்தும்
யாது கொற்றவ னேவிய ததுசெய லன்றோ
நீதி யெற்கென நினைந்துமப் பணிதலை நின்றான். 266

தயரதர், அரசர்களை யழைத்து இராமனுக்கு
மகுடம் என்று கூற அவர் மகிழ்ந்தனர்.

மகவயி னன்பினுன் மயங்கி யானிது
புகலநீர் புகன்றவிப் பொம்மல் வாசகம்
உகவையின் மொழிந்ததோ வுள்ள நோக்கியோ
தகவென நினைந்ததோ தன்மை யென்னென்றான். 267

மன்னர்கள் கூறுதல்

ஊருணி நிறையவு முதவு மாடுயர்
பார்கெழு பழுமரம் பழுத்தற் றாகவும்
கார்மழை பொழியவுங் கழனி பாய்நதி
வார்புனல் பெருகவு மறுக்கின் றார்கள்யார். 268

தாதியர் கூறக் கேட்ட கோசலையின் தன்மை

சிறக்குஞ் செல்வ மகற்கெனச் சிந்தையில்
பிறக்கும் பேருவ கைக்கடல் பெட்பற
வறக்கு மாவட வைக்கன லானதால்
துறக்கு மன்னவ னென்னுந் துணுக்கமே. 269

கோசலை திருமால் கோயில் சென்று வேண்டுதல்

என்வ யிற்றரு மைந்தற் கினியருள்
உன்வ யிற்றதென் றுளுல கியாவையும்
மன்வ யிற்றின டக்கிய மாயனைத்
தன்வ யிற்றின டக்குந் தவத்தினள். 270

பொன்னு மாமணி யும்புனை சாந்தமும்
கன்னி மாரொடு காசினி யீட்டமும்
இன்ன யாவையு மீந்தன ளந்தணர்க்
கன்ன தானமும் மாடையு நல்கினள். 271

மந்தரை சூழ்ச்சிப் படலம்

பட்டாபிஷேக நாள் உறுதி செய்தல்

கடிகமழ் தாரினன் கணித மாக்களை
முடிவுற நோக்கியோர் முதன்மை கூறிப்பின்
வடிமழு வாளவற் கடந்த மைந்தற்கு
முடிபுனை கடிகைநாண் மொழிமி னென்றனன். 272

சிறிய கருமங்களைக் கூட இன்று எண்ணி நாளை முடிக்க முடிவதில்லை. திருமணம், கும்பாபிஷேகம் முதலிய கருமங்கள் பல நாள் முயன்று முடிப்பது கண்கூடு.

இராமர் பட்டாபிஷேகம் மிகப் பெரிய கருமம். ஒப்புயர் வில்லாத இத்துணைப் பெரிய கருமத்தை, இன்று எண்ணி நாளை முடிப்பதென்று தயரதர் திட்டமிட்டனர். பரதருக்கும், சனகருக்கும் கூடச் செய்தி யனுப்பி அவர்களை வருவித்துச் செய்தாரில்லை. பரதர் அறியாமல் செய்யவேண்டும் என்பார் சிலர். அதுபிழை.

தயரதர் யாக்கை நிலையாமையை நன்குணர்ந்தார்.
இன்றிருந்தார் நாளை இலர்.

நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு. (திருக்குறள்)

என்றதை முற்றவு முணர்ந்தார் தயரதர். அதனால் துறவு பூண்டு வனஞ் சென்று மாதவஞ் செய்ய வேண்டும் என்பதிலே யுள்ள விரைவுதான் இதற்குக் காரணம் என்று உணர்க. இதனை,

இறப்பெனும் மெய்ம்மையை இம்மை யாவர்க்கும்
மறப்பெனும் அதனின்மேல் கேடு மற்றுண்டோ
துறப்பெனும் தெப்பமே துணை செய்யாவிடில்
பிறப்பெனும் பெருங்கடல் பிழைக்க லாகுமோ.

என்ற கவியால் அறிக.

தயரதனின் வேண்டுகோளின்படி வசிட்டர் இராமருக்கு அரசியலறம் உபதேசித்தல்.

உமைக்கு நாதற்கு மோங்குபுள் ளூர்திக்கும்
இமைப்பி லாட்டமொ ரெட்டுடை யானுக்கும்
சமைத்த தோள்வலி தாங்கின ராயினும்
அமைச்சர் சொல்வழி யாற்றுத லாற்றலே. 273

வைய மன்னுயி ராகவம் மன்னுயிர்
உய்யத் தாங்கு முடலன்ன மன்னனுக்
கைய மின்றி யறங்கட வாதருள்
மெய்யி னின்றபின் வேள்வியும் வேண்டுமோ. 274

இனிய சொல்லின னீகைய னெண்ணினன்
வினையன் றூயன் விழுமியன் வென்றியன்
நினையு நீதி நெறிகட வானெனில்
அனைய மன்னற் கழிவுமுண் டாங்கொலோ. 275

தூம கேது புவிக்கெனத் தோன்றிய
வாம மேகலை மங்கைய ரால்வரும்
காம மில்லை யெனிற்கடுங் கேடெனும்
நாம மில்லை நரகமு மில்லையே. 276

பறை சாற்றுதல்

ஏவின வள்ளுவ ரிராம னாளையே
பூமகள் கொழுநனாய்ப் புனையு மௌலியிக்
கோநக ரணிகெனக் கொட்டும் பேரியத்
தேவருங் களிகொளத் திரிந்து சாற்றினார். 277

மக்கள் மகிழ்ச்சி

ஆர்த்தனர் களித்தன ராடிப் பாடினர்
வேர்த்தனர் தடித்தனர் சிலிர்த்து மெய்ம்மயிர்

போர்த்தனர் மன்னனைப் புகழ்ந்து வாழ்த்தினர்
தூர்த்தனர் நீணிதி சொல்லினார்க் கெலாம். 278

நகரை இனிது அலங்கரித்தார்கள்.

அந்நக ரணிவுறு மமலை வானவர்
பொன்னக ரியல்பெனப் பொலியு மெல்லையில்
இன்னல்செ யிராவணன் இழைத்த தீமைபோல்
துன்னருங் கொடுமனக் கூனி தோன்றினாள். 279

கூனியின் சூழ்ச்சி

தோன்றிய கூனியுந் துடிக்கு நெஞ்சினாள்
ஊன்றிய வெகுளியாள் உளைக்கு முள்ளத்தாள்
கான்றெரி நயனத்தாள் கதிக்குஞ் சொல்லினாள்
மூன்றுல கினுக்குமோ ரிடுக்கண் மூட்டுவாள். 280

தொண்டைவாய்க் கேகயன் றோகை கோயின்மேல்
மண்டினாள் வெகுளியின் மடித்த வாயினாள்
பண்டைநா ளிராகவன் பாணி வில்லுமிழ்
உண்டையுண் டதனைத்தன் னுள்ளத் துள்ளுவாள்.

எய்தியக் கேகயன் மடந்தை யேடவிழ்
நொய்தலர் தாமரை நோற்ற நோன்பினால்
செய்தபே ருவமைசால் செம்பொற் சீறடி
கைகளிற் றீண்டினாள் காலக் கோளனாள். 282

அணங்குவாள் விடவரா வுணுகு மெல்லையும்
குணங்கெடா தொளிவிரி குளிர்வெண் டிங்கள்போல்
பிணங்குவான் பேரிடர் பிணிக்க நண்ணவும்
உணங்குவா யல்லைநீ யுறங்கு வாயென்றாள். 283

கைகேயி

பராவரும் புதல்வரைப் பயக்க யாவரும்
உராவருந் துயரைவிட் டுறுதி காண்பரால்
விராவரும் புவிக்கெலாம் வேத மேயன
இராமனைப் பயந்தவெற் கிடருண் டோவென்றாள்.

கூனி

ஆழ்ந்தபே ரன்பினா ளனைய கூறலும்
சூழ்ந்ததீ வினைநிகர் கூனி சொல்லுவாள்

7

வீழ்ந்தது நின்னலந் திருவும் வீய்ந்தது
வாழ்ந்தனள் கோசலை மதியி னாலென்றாள். 285

ஆடவர் நகையுற வாண்மை மாசுறத்
தாடகை யெனும்பெயர்த் தைய லாள்படக்
கோடிய வரிசிலை யிராமன் கோமுடி
சூடுவ னாளைவாழ் விதெனச் சொல்லினாள். 286

கைகேயி மகிழ்ச்சியடைதல்

ஆயபே ரன்பெனு மளக்க ரார்த்தெழத்
தேய்விலா முகமதி விளங்கித் தேசுறத்
தூயவ ளுவகைபோய் மிகச்சு டர்க்கெலாம்
நாயக மனையதோர் மாலை நல்கினாள். 287

கூனியின் கோபம்

தெழித்தன ளுரப்பினள் சிறுக்கண் தீயுக
விழித்தனள் வைதனள் வெய்து யிர்த்தனள்
அழித்தன ளழுதன ளம்பொன் மாலையால்
குழித்தனள் நிலத்தைப் கொடிய கூனியே. 288

வேதனைக் கூனிபின் வெகுண்டு நோக்கியப்
பேதையைப் பித்திநிற் பிறந்த சேயொடும்
நீதுயர் படுகநா னெடிதுன் மாற்றவள்
தாதியர்க் காட்செயத் தரிக்கி லேனென்றாள். 289

சிவந்தவாய்ச் சீதையுங் கரிய செம்மலும்
நிவந்தவா சனத்தினி திருப்ப நின்மகன்
அவந்தனாய் வெறுநிலத் திருக்க லானபோ
துவந்தவா றென்னிதற் குறுதி யாதென்றாள். 290

மந்தரை பின்னரும் வரைந்து கூறுவாள்
அந்தரந் தீர்ந்துல களிக்கு நீரினால்
தந்தையுங் கொடியனற் றாயுந் தீயளால்
எந்தையே பரதனே யென்செய்வா யென்றாள். 291

கைகேயி

வெயின்மு றைக்குலக் கதிரவன் முதலிய மேலோர்
உயிர்மு தற்பொருள் திறம்பினு முரைதிறம் பாதோர்
மயின்மு றைக்குலத் துரிமையை மனுமுதன் மரபைச்
செயிரு றப்புலச் சிந்தையா லென்சொனாய் தீயோய். 292

எனக்கு நல்லையு மல்லைநீ யென்மகன் பரதன்
தனக்கு நல்லையு மல்லையத் தருமமே நோக்கில்
உனக்கு நல்லையு மல்லைவந் தூழ்வினை தூண்ட
மனக்கு நல்லன சொல்லினை மதியிலா மனத்தோய்.

போதி யென்னெதிர் நின்றுநின் புன்பொறி நாவைச்
சேதி யாதிது பொறுத்தனென் புறஞ்சில ரறியின்
நீதி யல்லவு நெறிமுறை யல்லவு நினைந்தாய்
ஆதி யாதலி னறிவிலி யடங்குதி யென்றாள். 294

கூனி

அறனி ரம்பிய வருளுடை யருந்தவர்க் கேனும்
பெறல ருந்திருப் பெற்றபின் சிந்தனை பிறிதாம்
மறநி னைந்துமை வலிகில ராயினு மனத்தால்
இறலு றும்படி யியற்றுவ ரிடையரு வின்னல். 295

தூண்டு மின்னலும் வறுமையுந் தொடர்தரத் துயரால்
ஈண்டு வந்துனை யிரந்தவர்க் கிருநிதி யவனை
வேண்டி யீதியோ வெள்குதி யோவிம்ம னையால்
மாண்டு போதியோ மறுத்தியோ வெங்ஙனம் வாழ்தி. 296

காத லுன்பெருங் கணவனை யஞ்சியக் கனிவாய்ச்
சீதை தந்தையுன் றுதையைத் தெறுகில னிராமன்
மாது லனவ னுந்தைக்கு வாழ்வினி யுண்டோ
பேதை யுன்றுணை யாருளர் பழிபடப் பிறந்தார். 297

கைகேயியின் மனம் மாறுதல்

அரக்கர் பாவமு மல்லவ ரியற்றிய அறமும்
துரக்க நல்லருள் துறந்தனள் தூய்மொழி மடமான்
இரக்க மின்மையன் றோவின்றிவ் வுலகங்க ளிராமன்
பரக்குந் தொல்புக ழமுதினைப் பருகுகின் றதுவே. 298

கூனியின் கொடுமொழி

நாடி யொன்றுனக் குரைசெய்வெ னளிர்மணி நகையாய்
தோடி வர்ந்ததார்ச் சம்பரன் றொலைவுற்ற வேலை
ஆடல் வென்றியா னருளிய வரமவை யிரண்டும்
கோடி யென்றன ளுள்ளமுங் கோடிய கொடியாள். 299

இருவ ரத்தினி லொன்றினு லரசுகொண் டிராமன்
பெருவ னத்திடை யேழிரு பருவங்கள் பெயர்ந்து

திரித ரச்செய்தி யொன்றினுற் செழுநில மெல்லாம்
ஒருவ ழிப்படு முன்மகற் குபாயமி தென்ருள். 300

கைகேயி

நன்று சொல்லினை நம்பியை நளிர்முடி சூட்டல்
துன்று கானத்தி லிராமனைத் துரத்தலிவ் விரண்டும்
அன்ற தாமெனி லரசன்முன் ஆருயிர் துறந்து
பொன்றி நீங்குதல் புரிவென்யான் போதிநீ யென்ருள். 301

கூனி போனபின் குலமலர்க் குப்பைநின் றிழிந்தாள்
சோனை வார்குழற் கற்றையிற் சொருகிய மாலை
வான வார்மழை நுழைதரு மதிபிதிர்ப் பாள்போல்
தேன வாவுறு வண்டின மலமரச் சிதைத்தாள். 302

விளையுந் தன்புகழ் வல்லியை வேரறுத் தென்னக்
கிளைகொண் மேகலை சிந்தினள் கிண்கிணி யோடும்
வளைது றந்தனண் மதியினின் மறுத்துடைப் பாள்போல்
அளக வாணுத லரும்பெறற் றிலதமு மழித்தாள். 303

அணிகலங்களைக் கழற்றி எறிந்தாள்.

நவ்வி வீழ்ந்தெ்தன நாடக மயில்துயின் றென்னக்
கவ்வை கூர்தரச் சனகியாங் கடிகமழ் கமலத்
தவ்வை நீங்குமென் றயோத்திவந் தடைந்தவம் மடந்தை
தவ்வை யாமெனக் கிடந்தனள் கைகயன் றனயை. 304

கைகேயி சூழ்வினைப் படலம்

கைகேயியிடம் மன்னர் வந்து துயருற்ற மனைவியை எடுத்தார்.
கைகேயியின் துயர்.

நின்று தொடர்ந்த நெடுங்கை தம்மை நீக்கி
மின்றுவள் கின்றது போல மண்ணில் வீழ்ந்தாள்
ஒன்று மியம்பலள் நீடுயிர்க் கலுற்ருள்
மன்றல ருந்தொடை மன்ன ஞவி யன்ஞள். 305

அன்னது கண்ட வலங்கன் மன்ன னஞ்சி
என்னைநி கழ்ந்த திஞ்ஞால மேழில் வாழ்வார்
உன்னை யிகழ்ந்தவர் மாள்வ ருற்ற தெல்லாம்
சொன்னபி னென்செயல் காண்டி சொல்லி டென்ருன்.

வண்டுளர் தாரவன் வாய்மை கேட்ட மங்கை
கொண்ட னெடுங்கணி ஞலி கொங்கை கோப்ப

உண்டு கொலாமரு ளென்க ணுன்க ணெக்கில்
பண்டைய வின்று பரிந்த ளித்தி யென்ருள். 307

கள்ளவிழ் கோதை கருத்துணர்ந்த மன்னன்
வெள்ளநெ டுஞ்சுடர் மின்னின் மின்ன நக்கான்
உள்ளமு வந்துள செய்வனென் றும்லோபேன்
வள்ளலி ராமனுன் மைந்த னுணை யென்ருன். 308

கைகேயி வரம் இரத்தல்

ஏய வரங்களி ரண்டி னென்றி னுலென்
சேயர சாள்வது சீதை கேள்வ னென்ருல்
போய்வன மாள்வ தெனப் புகன்று நின்ருள்
தீயவை யாவையி னுஞ் சிறந்த தீயாள். 309

தயரதர் துயரம்

நாகமெ னுங்கொடி யாள்த னுவி னீந்த
சோக விடங்தொட ரத்து ணுக்க மெய்தா
ஆகம டங்கலும் வெந்த ழிந்த ராவின்
வேகம டங்கிய வேழ மென்ன வீழ்ந்தான். 310

உலர்ந்தது நாவுயி ரோட லுற்ற துள்ளம்
புலர்ந்தது கண்கள் பொடித்த பொங்கு சோரி
சலந்தலை மிக்கது தக்க தென்கொ லென்றென்
றலந்தலை யுற்ற வரும்பு லன்க ளைந்தும். 311

மேவி நிலத்தி லிருக்கு நிற்கும் வீழும்
ஓவிய மொப்ப வுயிர்ப்ப டங்கி யோயும்
பாவியை யுற்றெதிர் பற்றி யெற்ற வெண்ணும்
ஆவி பதைப்ப வலக்க ணெய்து கின்ருன். 312

பெண்ணென வுற்ற பெரும்ப ழிக்கு நாணும்
உண்ணிறை வெப்பொ டுயிர்த்து யிர்த்து லாவும்
கண்ணினி னேக்கு மயர்க்கு மிக்க கைவேல்
புண்ணுழை தைக்க வுழைக்கு மானை போல்வான். 313

அஞ்சலள் ஐயன தல்லல் கண்டு முள்ளம்
நஞ்சிலள் நாணில ளென்ன நாண மாமால்
வஞ்சனை பண்டு மடந்தை வேட மென்றே
தஞ்செ‌ன மாதரை யுள்ள லார்கள் தக்கோர். 314

இந்நிலை நின்றவள் தன்னை யெய்த நோக்கி
நெய்ந்நிலை வேலவ னீதி சைத்த துண்டோ
பொய்ந்நிலை யோர்கள் புணர்த்த வஞ்ச முண்டோ
அந்நிலை சொல்லென தாணை யுண்மை யென்றான். 315

கைகேயி

திசைத்தது மில்லை யெனக்கு வந்து தீயோர்
இசைத்தது மில்லைமு னிந்த விவ்வ ரங்கள்
குசைப்பரி யோய்தரி னின்று கொள்வ னென்றேல்
வசைத்திற நின்வயின் வைத்து மாள்வ னென்றாள். 316

தயரதர்

ஆகொடி யாயெனு மாவி காலு மந்தோ
ஓகொடி தேயற மென்னு முண்மை யொன்றும்
சாகவெ ளுவெழு மெய்த ளாடி வீழும்
மாகமு நாகமு மண்ணும் வென்ற வாளான். 317

நாரிய ரில்லையிஞ் ஞால மேழு மென்னக்
கூரிய வாள்கொடு கொன்று நீக்கி யானும்
பூரிய ரெண்ணிடை வீழ்வ னென்று பொங்கும்
வீரியர் வீரம் விழுங்கி நின்ற வேலான். 318

கோன்மேற் கொண்டுங் குற்றம கற்றிக் குறிகொண்டார்
போன்மே லுற்ற துண்டெனி னன்றும் பொறையென்னுக்
கான்மேல் வீழ்ந்தான் கந்துகொல் யானைக் களிமன்னர்
மேன்மேல் வந்து முந்திவ ணங்கி மிடைதாளான். 319

கொள்ளா னின்சே யிவ்வர சன்னான் கொண்டாலும்
நள்ளா திந்த நானில ஞாலந் தனிலென்றும்
உள்ளா ரெல்லா மோதவு வக்கும் புகழ்கொள்ளாய்
எள்ளா நிற்கும் வன்பழி கொண்டென் பயனென்றான். 320

வானோர் கொள்ளார் மண்ணவ ருய்யா ரினிமற்றென்
ஏனோர் செய்கை யாரொடு நீயிவ் வரசாள்வாய்
யானே சொல்லக் கொள்ளவி சைந்தான் முறையாலே
தானே நல்கு முன்மக னுக்குந் தரையென்றான். 321

கைகேயி

இன்னே யின்னே பன்னியி ரந்தா னிகல்வேந்தன்
தன்னே ரில்லாத் தீயவ ளுள்ளம் தடுமாறாள்

முன்னே தந்தா யிவ்வர நல்காய் முனிவாயேல்
என்னே மன்னு யாருளர் வாய்மைக் கினியென்ருள். 322

தயரதர்

நின்மக னுள்வா னீயினி தாள்வாய் நிலமெல்லாம்
உன்வய மாமே யாளுதி தந்தே னுரைகுன்றேன்
என்மக னென்க ணென்னுயி ரெல்லா வுயிர்கட்கும்
நன்மக னிந்த நாடிற வாமை நயவென்ருன். 323

ஏவம் பாரா யின்முறை நோக்கா யறமெண்ணுய்
ஆவென் பாயோ வல்லைம னத்தா லருள்கொன்ருய்
நாவம் பாலென் னுருயி ருண்டாய் இனிஞாலம்
பாவம் பாரா தின்னுயிர் கொள்ளப் படுகின்ருய். 324

கைகேயி

அரிந்தான் முன்னேர் மன்னவ னன்றே யருமேனி
வரிந்தார் வில்லாய் வாய்மைவ ளர்ப்பான் வரநல்கிப்
பரிந்தா லென்னு மென்றனள் பாயுங் கனலேபோல்
எரிந்தா ருதே யின்னுயி ருண்ணு மெரியன்னுள். 325

தயரதர்

வீய்ந்தா ளேயிவ் வெய்யவ ளென்னு மிடல்வேந்தன்
ஈந்தே னீந்தே னிவ்வர மென்சேய் வனமாள
மாய்ந்தே நான்போய் வானுல காள்வென் வசைவெள்ளம்
நீந்தாய் நீந்தாய் நின்மக னேடு நெடிதென்ருன். 326

விடியற்காலை கோழி கூவுதல்

எண்ட ருங்கடை சென்ற யாமமியம்புகின்றனவேழையால்
வண்டு தங்கிய தொங்கன் மார்பன்ம யங்கிவிம்மிய
வாறெலாம்
கண்டு நெஞ்சுக லங்கி யஞ்சிறை யான காமர்து ணைக்கரம்
கொண்டு தம்வயி றெற்றி யெற்றிவி ளிப்ப போன்றன
கோழியே. 327

மாதர்கள் கற்பின் மிக்கார் கோசலை மனத்தை யொத்தார்
வேதியர் வதிட்ட னொத்தார் வேறுள மகளிரெல்லாம்
சீதையை யொத்தாரன்னுள் திருவினை யொத்தா ளவ்வூர்
சாதுகை மாந்த ரெல்லாந் தயரதன் றன்னை யொத்தார்.

வசிட்டர் மகுடாபிஷேகத்திற்கு ஆயத்தஞ் செய்தல்

கங்கையே முதல வாய கன்னியீ ருன தீர்த்த
மங்கலப் புனலு நாலு வாரியி னீரும் பூரித்
தங்கியின் வினையிற் கேற்ற யாவையு மமைத்து வீரச்
சிங்கவா தனமும் வைத்துச் செய்வன பிறவுஞ் செய்தான்.

கணிதநூ லுணர்ந்த மாந்தர் காலம்வந் தடுத்ததென்னப்
பிணியற நோற்று நின்ற பெரியவன் விரைவி னேகி
மணிமுடி வேந்தன் றன்னை வல்லையிற் கொணர்தி
யென்னப்
பணிதலை நின்ற காதற் சுமந்திரன் பரிவிற் சென்றான். 330

விண்டொட நிவந்த கோயில் வேந்தர்தம் வேந்தன்
றன்னைக்
கண்டிலன் வினவக் கேட்டான் கைகயள் கோயில் நண்ணி
தொண்டைவாய் மடந்தை மாரிற் சொல்லமற் றவருஞ்
சொல்லப்
பெண்டிரிற் கூற்ற மன்னாள் பிள்ளையைக் கொணர்க
வென்றாள். 331

சுமந்திரர் அழைக்க இராமர் தேரேறி ஆடல் பாடலுடன் கைகேயிபிடம் வருகின்றார். இடையில் மகிழ்ந்து நகர மாந்தர் கூறுவது.

தாய்கையில் வளர்ந்திலன் வளர்த்தது தவத்தால்
கேகயன் மடந்தை கிளர்ஞால மிவனாள
ஈகையி லுவந்தவவ ளியற்கையிது வென்றால்
தோகையிவள் பேருவகை சொல்லலரி தென்பார். 332

இராமர் கைகேயியின் மாளிகை வந்தார்

ஆயன நிகழும் வேலை யண்ணலு மயர்ந்து தேருத்
தாயவ ளிருந்த சூழல் துருவினன் வருதல் நோக்கி
நாயக னுரையான் வாயால் நானிது பகர்வே னென்னாத்
தாயென நினைவான் முன்னே கூற்றெனத் தமியள்
வந்தாள். 333

தாயாரை வணங்கினார்

நின்றவன் றன்னை நோக்கி யிரும்பினா லியைந்த நெஞ்சிற்
கொன்றுழல் கூற்றமென்னும் பெயரினிற் கொடுமை
பூண்டாள்

இன்றெனக் குணர்த்த லாவ தேயதே யென்னி ஞகும்
ஒன்றுனக் குந்தை மைந்த வுரைப்பதோ ருரையுண்
டென்ருள். 334

எந்தையே யேவ நீரே யுரைசெய வியைவ துண்டேல்
உய்ந்தன னடியே னென்னிற் பிறந்தவ ருளரோ வாழி
வந்ததென் றவத்தி ஞய வருபயன் மற்றென் றுண்டோ
தந்தையுந் தாயு நீரே தலைநின்றேன் பணிமி னென்ருன்.

ஆழிசூ ழுலக மெல்லாம் பரதனே யாள நீபோய்த்
தாழிருஞ் சடைகள் தாங்கித் தாங்கருந் தவமேற் கொண்டு
பூழிவெங் கான நண்ணிப் புண்ணியத் துறைக ளாடி
ஏழிரண் டாண்டின் வாவென் றியம்பின னரச னென்ருள்.

இப்பொழு தெம்ம னோரா லியம்புதற் கெளிதே யாரும்
செப்பருங் குணத்தி ராமன் றிருமுகச் செவ்வி நோக்கில்
ஒப்பதே முன்பு பின்பவ் வாசக முணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்மா.

தெருளுடை மனத்து மன்ன னேவலிற் றிறம்ப வஞ்சி
இருளுடை யுலகந் தாங்கு மின்னலுக் கியைந்து நின்ருன்
உருளுடைச் சகடம் பூண்ட வுடையவ னுய்த்த காரே
றருளுடை யொருவ னீக்க வப்பிணியவிழ்ந்த தொத்தான்.

மன்னவன் பணியன் ருகி னும்பணி மறுப்ப ஞேவென்
பின்னவன் பெற்ற செல்வ மடியனேன் பெற்ற தன்ருே
என்னினி யுறுதி யப்பா லிப்பணி தலைமேற் கொண்டேன்
மின்ஞெளிர் கான மின்றே போகின்றேன் விடையுங்
கொண்டேன். 339

"வருமுராரி கோபாலர் மகளிர் கேள்வன் மாதாவின்
வசனமோ மருகேசன் மருகோனே"
—(குருதிதோல்) திருப்புகழ்.

நகர் நீங்கு படலம்

இராமர் திசைநோக்கித் தந்தையை வணங்கித்
தாயாருடைய மாளிகை செல்லுகின்ருர்.

குழைக்கின்ற கவரி யின்றிக் கொற்றவெண்குடையுமின்றி
இழைக்கின்ற விதிமுன் செல்லத் தருமம்பின்னிரங்கி யேக

மழைக்குன்ற மனையான் மௌலி கவித்தனன் வருமென் றென்று
தழைக்கின்ற வுள்ளத் தன்னாள் முன்னொரு தமியன் சென்றான். 340

ஏன் முடி சூடவில்லை? என்று அவள் வினவ
இராமர் கூறுவார்

மங்கை யம்மொழி கூறலு மானவன்
செங்கை கூப்பிநின் காதற் றிருமகன்
பங்க மில்குணத் தெம்பி பரதனே
துங்க மாமுடி சூடுகின் றானென்றான். 341

கௌசலை

முறைமை யன்றென்ப தொன்றுண்டு மும்மையின்
நிறைகு ணத்தவ னின்னினு நல்லனால்
குறைவி லன்னெனக் கூறினள் நால்வர்க்கும்
மறுவி லன்பினில் வேற்றுமை மாற்றினாள். 342

என்று பின்னரு மன்னவ னேவிய
தன்றெ னாமை மகனே யுனக்கறன்
நன்று நும்பிக்கு நானில நீகொடுத்
தொன்றி வாழுதி யூழிபல வென்றாள். 343

கானகம் போகக் கட்டளையிட்டதைக் கூறினார்.

கௌசலையின் துயரம்

வஞ்ச மோமக னேயுனை மாநிலம்
தஞ்ச மாகநீ தாங்கென்ற வாசகம்
நஞ்ச மோவினி நானுயிர் வாழ்வெனோ
அஞ்சு மஞ்சுமென் னாருயி ரஞ்சுமால். 344

கையைக் கையினெ றிக்குந்தன் காதலன்
வைகு மாலிலை யன்ன வயிற்றினைப்
பெய்வ ளைத்தளி ராற்பிசை யும்புகை
வெய்து யிர்க்கும் விழுங்கும் புழுங்குமால். 345

அறமெ னக்கிலை யோவெனு மாவிநைந்
திறவி டுத்ததென் றெய்வதங் காளெனும்
பிறவு ரைப்பதென் கன்றுபி ரிந்துழிக்
கறவை யொப்பக் கரைந்து கலங்கினாள். 346

இராமர்

சிறந்த தம்பி திருவுற வெந்தையை
மறந்தும் பொய்யில னாக்கி வனத்திடை
உறைந்து தீரு முறுதிபெற் றேனிதிற்
பிறந்து யான்பெறும் பேறென்ப தியாவதே. 347

விண்ணு மண்ணுமிவ் வேலையு மற்றும்வே
றெண்ணும் பூதமெ லாமிறந் தேகினும்
அண்ண லேவன்ம றுக்க வடியனேற்
கொண்ணு மோவித தற் குள்ளழி யேலென்றான். 348

கோசலை

ஆகி னைய வரசன்ற னாணையால்
ஏக லென்ப தியானு முரைக்கிலென்
சாக லாவுயிர் தாங்கவல் லேனையும்
போகி னின்னொடுங் கொண்டனை போகென்றாள். 349

இராமர்

வரிவி லெம்பியிம் மண்ணர சாயவற்
குரிமை மாகில முற்றபின் கொற்றவன்
திருவி னீங்கித் தவஞ்செயு நாளுடன்
அருமை நோன்புக ளாற்றுதி யாமன்றே. 350

மாதவர்க்கு வழிபா டிழைத்தரும்
போத முற்றிப் பொருவரு விஞ்சைகள்
ஏத மற்றன தாங்கி யிமையவர்
காதல் பெற்றுநன் காவரக் காண்டியால். 351

தாயிடம் விடைபெற்ற இராமர் சுமித்திரை வீடு செல்லுகின்றார்.

மகனை வனம் போகாவண்ணஞ் செய்யும்
பொருட்டுக் கோசலை கணவன்பால் சென்றாள்.

நடந்த கோசலை கேகய நாட்டிறை
மடந்தை கோயிலை யெய்தினண் மன்னவன்
கிடந்த பார்மிசை வீழ்ந்தனள் கெட்டுயிர்
உடைந்த போழ்தி னுடல்விழுந் தென்னவே. 352

கோசலையின் அழுகுரல் கேட்டு நிகழ்ந்ததை யறிய வசிட்டர் கைகேயியின் மாளிகை வந்து, "நிகழ்ந்தது யாது?" என்று வினவ, கைகேயி முற்றும் உரைத்தாள்.

வசிட்டர் கூறுதல்.

முனியும் முனியுஞ் செய்கைக் கொடியாண் முகமே முன்னி
இனியுன் புதல்வற் கரசு மேனை யோர்க்கின் னுயிரும்
மனுவின் வழிநின் கணவற் குயிரும் முதவி வசைதீர்
புனிதம் மருவும் புகழே புனையாய் பொன்னே யென்றான்.

கைகேயி மாள்வேனென்றாள்.

வசிட்டர் சீற்றம்

கண்ணோ டாதே கணவ னுயிரோ டிடர்கா ணாதே
புண்ணோ டோடுங் கனலோ விடமோ வென்னப் புகல்வாய்
பெண்ணோ தீயோ மாயாப் பேயோ கொடியாய் நீயிம்
மண்ணோ டுன்னோ டென்னும் வசையோ வலிதே யென்றான்.

தயரதர் துயருரை

தாவின் முனிவன் புகலத் தளரா நின்ற மன்னன்
நாவில் நஞ்சம் முடைய நங்கை தன்னை நோக்கிப்
பாவி நீயே வெங்கான் படர்வா யென்றென் னுயிரை
ஏவி னயோ வவனு மேகி னனோ வென்றான். 355

கண்டே னெஞ்சங் கனிவாய்க் கலிவாய் விடநா னெடுநாள்
உண்டே னதனால் நீயென் னுயிரை முதலோ டுண்டாய்
பண்டே யெரிமுன் னுன்னைப் பாவீ தேவீ யாகக்
கொண்டே னல்லேன்வேறோர்கூற்றந்தேடிக்கொண்டேன்.

விழிக்குங் கண்வே றில்லா வெங்கா னென்கான் முளையைச்
சுழிக்கும் வினையா லேகச் சூழ்வா யென்னைப் போழ்வாய்
பழிக்கும் நாணாய் மாணாப் பாவி யினியென் பலவுன்
கழுத்தின் நாணுன் மகற்குக் காப்பின் னாணா மென்றான்.

இன்னே பலவும் பகர்வா னிரங்கா தாளை நோக்கிச்
சொன்னே னின்றே யிவளென் றாரமல்லள் துறந்தேன்
மன்னே யாவான் வருமப் பரதன் றனையு மகனென்
றுன்னேன் முனிவா வவனு மாகா னுரிமைக் கென்றான்.

கண்ணும் நீரா யுயிரும் மொழுகக் கழியா நின்றேன்
எண்ணும் நீர்நான் மறையோ ரெரிமுன் னின்மேற் சொரிய
மண்ணும் நீராய் வந்த புனலை மகனே வினையேற்
குண்ணும் நீரா யுதவி யுயர்கா னடைவா யென்றான். 359

அள்ளற் பள்ளப் புனல்சூ ழகன்மா நிலமு மரசும்
கொள்ளக் குறையா நிதியின் குவையும் முதலா மெவையும்
கள்ளக் கைகே சிக்கே யுதவிப் புகழ்கைக் கொண்ட
வள்ளற் றனமென் னுயிரை மாய்க்கும் மாய்க்கும் மென்றான்.

கோசலை பெரிதும் அழுதாள்.

அவளை நோக்கி அரசர் அறைவார்

பொன்னார் தோளான் கானே புகுதப் போதற விரான்
என்னா ருயிரோ வகலா தொழியா திதுகோ சலைகேள்
முன்னா ளொருமா முனிவன் மொழியுஞ் சாபம் முளதென்
றந்நா ளுற்ற தெல்லா மவளுக் கரசன் னறைவான். 361

தயரதர் தான் தனிமையிற் செய்த தவறை உரைத்தல்

காசிபன் மகன் விருத்தேசனன்; அவன் மகன் சலபோசனன். இவரும் இவர் மனைவியும் கண்ணில்லாதவர்கள். இவர்கள் புதல்வர் சுரோசனன்.

தாய் தந்தையர் நீர் கேட்க சுரோசனன் இரவில் நதியில் கமண்டலத்தில் நீர் முகந்தனன். இரவில் தண்ணீர் குடிக்க வரும் யானைகளைக் கொல்வான் கருதி புதரில் மறைந்திருந்த தயரதன் யானை என்று கருதி கணைவிடுத்தனன். அம்பு பட்டு அப்புதல்வன் கதறினான். மன்னவன் சென்று அப் புதல்வனுக்கு ஆறுதல் கூறி வினவினான்.

சுரோசனன் கூறுகின்றான்

இருகண் களுமின் றியதாய் தந்தைக் கும்மீங் கிவர்கள்
பருகும் புனல்கொண் டகல்வான் படர்ந்தேன் பழுதாயினதால்
இருகுன் றனைய புயத்தா யிபமென் றுணரா தெய்தாய்
உருகுந் துயரந் தவிர்நீ யூழின் செயலீ தென்றான். 362

உண்ணீர் வேட்கை மிகவே யுயங்கும் மெந்தைக் கொருநீ
தண்ணீர் கொடுபோ யளித்தென் சாவும் முரைத்தும் புதல்வன்
விண்மீ தடைவான் றெழுதா னெனவும் மவர்பால் விளம்பென்
றெண்ணீர் மையினான் விண்ணோ ரெதிர்கொண் டிடவே கினனால். 363

தயரதன் தண்ணீருடன் சலபோசன முனிவரிடம் சென்று நிகழ்ந்ததைக் கூறி மன்னிப்பு கேட்டான்.

அவர்கள் வருந்தல்

வீழ்ந்தா ரயர்ந்தார் புரண்டார் விழிபோயிற் றின் றென்றார்
ஆழ்ந்தார் துன்பக் கடலுள் ஐயா வையா வென்றார்
போழ்ந்தாய் நெஞ்சை யென்றார் பொன்னு டதனிற் போய்நீ
வாழ்ந்தே யிருப்பத் தரியேம் வந்தேம் வந்தே மினியே. 364

தாவா தொளிருங் குடையாய் தவறிங் கிதுநின் சரணம்
காவா யென்று யதனுற் கடிய சாபங் கருதேம்
ஏவா மகவைப் பிரிந்தின் றெம்போ லிடருற் றனைநீ
போவாயகல்வானென்னைப் பொன்னுட்டிடைபோயினரால்.

அச்சாபம் இப்போது வந்துளது என்று மன்னன்
கோசலையிடம் கூறினன்.

வசிட்டர் அரசவை சென்று நிகழ்ந்ததை யுரைத்தார்.

நகர மாந்தர் துன்பமுற்றழுதனர்.

ஆவுமழுத வதன்கன் றழுத வன்றலர்ந்த
பூவுமழுத புனற்புள் ளழுத கள்ளொழுகும்
காவுமழுத களிறழுத கால்வ யப்போர்
மாவுமழுதன வம்மன் னவனை மானவே. 366

ஆளான் பரத னரசென்பா ரையனினி
மீளா னமக்கு விதிகொடிது காணென்பார்
கோளா கிவந்த வாகொற்றமுடி தானென்பார்
மாளாத நம்மின் மனம்வலியா ரரென்பார். 367

இலக்குவன் சீற்றம்

கேட்டா னிளையோன் கிளர்ஞாலம் வரத்தினலே
மீட்டா ளளித்தாள் வனந்தம்முனின் வெம்மைமுற்றித்
தீட்டா தவேற்கட் சிறுதாயென யாவராலும்
மூட்டா தகாலக் கடைத்தீயென மூண்டெழுந்தான். 368

சிங்கக் குருளைக் கிடுதீஞ்சுவை யூனை நாயின்
வெங்கட் கடுங்குட் டியையூட்ட விரும்பி னளே
நங்கைக் கறிவின் றிறம்நன் றிதுநன்றி தென்னுக்
கங்கைக் கிறைவன் கடகக்கை புடைத்து நக்கான். 369

புவிப்பாவை பரங்கெடப் போருவந் தோரையெல்லாம்
அவிப்பானு மவித்தவ ராக்கையை யண்டமுற்றக்
குவிப்பானு மெனக்கொரு கோவினைக் கொற்றமௌலி
கவிப்பானு நின்றே னிதுகாக்குநர் காமினென்றான். 370

இராமர் வந்து சினத்தைத் தணித்துரைத்தல்

மின்னொத்த சீற்றக் கனல்விட்டு விளங்கநின்ற
பொன்னொத்த மேனிப் புயலொத்த தடக்கையானை
என்னத்த வென்னீ யிமையோரை முனிந்திலாதாய்
சன்னத்த னாகித் தனுவேந்துதற் கேதுவென்றான்.

இலட்சுமணர்

வலக்கார்முக மென்கைய தாகவவ் வானுளோரும்
விலக்கா ரவர் வந்து விலக்கினு மென்கைவாளிக்
கிலக்காவெரி வித்துல கேழினொ டேழுமன்னர்
குலக்காவலு மின்றுனக் கியான்றரக் கோடியென்றான். 372

இராமர்

இளையானிது கூற விராம னியைந்த நீதி
வளையாவரு நன்னெறி நின்னறி வாகு மன்றே
உளையாவறம் வற்றிட வூழ்வழு வுற்ற சீற்றம்
விளையாதநி லத்துனக் கெங்ஙன் விளைந்ததென்றான். 373

இலட்சுமணர்

நீண்டான துரைத்தலு நித்திலந் தோற்கநக்குச்
சேண்டான்றொடர் மாநிலம் நின்னதென் றுந்தைசெப்பப்
பூண்டாய்பகை யாலிழந் தேவனம் போதி யென்றால்
யாண்டோவடி யேற்கினிச் சீற்ற மடுப்ப தென்றான். 374

இராமர்

நதியின் பிழையன்று நறும்புன லின்மை யற்றே
பதியின் பிழையன்று பயந்து நமைப்பு ரந்தாள்
மதியின் பிழையன்று மகன்பிழை யன்று மைந்த
விதியின் பிழைநீயிதற் கென்னை வெகுண்ட தென்றான்.

இலட்சுமணர்

உதிக்கும் முலையுள்ளுறு தீயென வூதைபொங்கக்
கொதிக்கும் மனமெங்ஙன மாற்றுவென் கோளிழைத்தாள்

மதிக்கும் மதியாய்முதல் வானவர்க் கும்வலீ இதாம்
விதிக்கும் விதியாகுமென் விற்ருெழில் காண்டி யென்ருன்.

இராமர்

ஆய்தந்தவ னவ்வுரை கூறலு மையநின்றன்
வாய்தந்தன கூறுதி யோமறை தந்தநாவால்
நீதந்ததன் றேநெறி யோர்க ணிலாததீன்ற
தாய்தந்தையென் ருலவர் மேற்சலிக் கின்றதென்னே. 377

இலட்சுமணர்

நற்ருதையும் நீதனி நாயக னீவயிற்றிற்
பெற்ருயுநீ யேபிற ரில்லைப் பிறர்க்குநல்கக்
கற்ருயிது காணுதி யின்றெனக் கைமறித்தான்
முற்ருமதி யம்மிலைந் தான்முனிந் தானையன்னன். 378

இராமர்

நன்சொற் கடந்தேனை நாளும் வளர்த்த தாதை
தன்சொற் கடந்தெற் கரசாள்வது தக்க தன்ருல்
என்சொற் கடந்தா லுனக்கி யாதுள தீன மென்ருன்
தென்சொற் கடந்தான்வடசொற்கடற்கெல்லை தேர்ந்தான்.

இருவரும் சுமித்திரை மாளிகை சென்றனர்.

சுமித்திரை சோகம்

கண்டாள்மக னும்மக னுந்தன கண்கள் போல்வார்
தண்டாவனஞ் செல்வதற் கேசமைந் தார்கள் தம்மை
புண்டாங்குநெஞ் சத்தன ளாய்ப் படிமேற் புரண்டாள்
உண்டாயதுன் பக்கடற் கெல்லை யுணர்ந்தி லாதாள். 380

இராமர்

சோர்வாளையோ டித்தொழு தேத்தினன் றுன்பமென்னும்
ஈர்வாளைவாங் கமனந் தேற்றுதற் கேற்றசெய்வான்
போர்வாளர சர்க்கிறை பொய்த்தன னுக்ககில்லேன்
கார்வானெடுங் கானிறை கண்டிங்ஙன் மீள்வெனென்ருன்.

கைகேயியனுப்பிய மரவுரியைத் தாதியர் கொணர்ந்தனர்;

இலட்சுமணர் கூறுவது

வாணித்தில வெண்ணகை யார்தர வள்ளல் தம்பி
யாணர்த்திரு நாடிழப் பித்தவ ரீந்த வெல்லாம்

பூணப்பிறந் தானுநின் ருனவை போர்வி லோடும்
காணப்பிறந் தேனுநின் றேனவை காட்டுமென்ருன். 382

சுமித்திரை தன் மகனுக்கு இட்ட கட்டளை

பின்னும் பகர்வாண் மகனேயிவன் பின்செல்தம்பி
என்னும் படியன் றடியாரினி லேவல்செய்தி
மன்னும் நகர்க்கே யிவன் வந்திடின் வாவதன்றேல்
முன்னம் முடியென்றனள் பான்முலை சோரநின்ருள். 383

தான்புனை சீரையைத் தம்பி சாத்திடத்
தேன்புனை தெரியலான் செய்கை நோக்கினுன்
வான்புனை யிசையினுய் மறுக்கி லாதுநீ
யான்புகல் வனையதோ ருறுதி கேளெனு. 384

இராமர் இலட்சுமணரைத் தன்னுடன் கானகம்
வரவேண்டாம் என்று தடுத்துரைத்தல்.

அன்னைய ரனைவரு மாழி வேந்தனும்
முன்னைய ரல்லர்வெந் துயரின் மூழ்கினுர்
என்னையும் பிரிந்தன ரிடரு ருவகை
உன்னைநீ யென்பொருட் டுதவு வாயென்ருன். 385

பைந்தொடி யொருத்திசொற் கொண்டு பார்மகள்
நைந்துயிர் நடுங்கவு நடத்தி கானெனு
உய்ந்தன னிருந்தன னுண்மை காவலன்
மைந்தனென் றினையசொல் வழங்கி னுயெனு. 386

வசிட்டர் அங்குவர வணங்கினர். அவருடைய துயர்:

வாழ்வினை நுதலிய மங்க லத்துநாள்
தாழ்வினை யதுவரச் சீரை சாத்தினுன்
சூழ்வினை நான்முகத் தொருவர்ச் சூழினும்
ஊழ்வினை யொருவரா லொழிக்கற் பாலதோ. 387

விற்றடந் தாமரைச் செங்கண் வீரனை
உற்றடைந் தையநீ யொருவி யோங்கிய
கற்றடங் கானுதி யென்னிற் கண்ணகன்
மற்றடந் தானையான் வாழ்கி லானென்ருன். 388

இராமர்

அன்னவன் பணிதலை யேந்தி யாற்றுதல்
என்னது கடனவ னிடரை நீக்குதல்

இன்னது கடனிது நெறியு மென்றனன்
பன்னகப் பாயலுட் பள்ளி நீங்கினன். 389

என்றன னெந்தையிவ் வரங்க ளேவினள்
ஈன்றவள் யானது சென்னி யேந்தினேன்
சான்றென நின்றநீ தடுத்தி யோவென்றான்
தோன்றிய நல்லற நிறுத்தத் தோன்றினன். 390

இராமர் வனம் புறப்படல்

விழுந்தனர் சிலர்சிலர் விம்மி விம்மிமேல்
எழுந்தனர் சிலர்முகத் திழிகண் ணீரிடை
அழுந்தினர் சிலர்பதைத் தளக வல்லியின்
கொழுந்தெரி யுற்றெனத் துயரங் கூர்கின்றார். 391

திருவரை சுற்றிய சீரை யாடையன்
பொருவருந் துயரினன் றொடர்ந்து போகின்றான்
இருவரைப் பயந்தவ ளீன்ற கான்முளை
ஒருவனே யிவற்கிவ் வூ றுறவென் றார்சிலர். 392

மக்களை மறந்தனர் மாதர் தாயரைப்
புக்கிட மறிந்திலர் புதல்வர் பூசலிட்
டுக்கன ருயங்கின ருருகிச் சோர்ந்தனர்
துக்கநின் றறிவினைச் சூறை யாடவே. 393

நீட்டில களிறுகைந் நீரின் வாய்புதல்
பூட்டில புரவிகள் புள்ளும் பார்ப்பினுக்
கீட்டில விரைபுனிற் றீன்ற கன்றையும்
ஊட்டில கறவைகன் றுருகிச் சோர்ந்தவே. 394

இராமர் சீதைபால் சென்று செப்புதல்.

பொருவி லெம்பி புவிபுரப் பான்புகல்
இருவ ராணையு மேந்தினெ னின்றுபோய்க்
கருவி மாமழைக் கற்றடங் கண்டுநான்
வருவெ னீண்டு வருந்தலை நீயென்றான். 395

நாய கன்வன நண்ணலுற் றானென்றும்
மேய மண்ணிழந் தானென்றும் விம்மலள்
நீவ ருந்தலை நீங்குவென் யானென்ற
தீய வெஞ்சொல் செவிசுடத் தேம்புவாள். 396

சீதை

பரிவி கந்த மனத்தொடு பற்றிலா
தொருவு கின்றனை யூழிய ருக்கனும்
எரியு மென்ப தியாண்டைய தீண்டுநின்
பிரிவி னுஞ்சுடு மோபெருங் காடென்றாள். 397

அனைய வேலை யகன்மனை யெய்தினள்
புனையுஞ் சீரந் துணிந்து புனைந்தனள்
நினைவில் வள்ளல்பின் வந்தய னின்றனள்
பனையி னீள்கரம் பற்றிய கையினள். 398

புறப்படுதல்

சீரை சுற்றித் திருமகள் பின்செல
மூரி விற்கை யிளையவன் முன்செலக்
காரை யொத்தவன் போம்படி கண்டவவ்
வூரை யுற்ற துணர்த்தவு மொண்ணுமோ. 399

தாதை வாயிற் குறுகினன் சார்தலும்
கோதை வேலவன் றாயரைக் கும்பிடா
ஆதி மன்னனை யாற்றுமி னீரென்றான்
மாத ராரும் விழுந்து மயங்கினர். 400

ஏத்தி னார்தம் மகனை மருகியை
வாழ்த்தி னாரிளை யோனை வழுத்தினர்
காத்து நல்குமின் றெய்வதங் காளென்றார்
நாத்த ழும்ப வரற்றி நடுங்குவார். 401

அன்ன தாய ரிதிற் பிரிந்தபின்
முன்னர் நின்ற முனிவனைக் கைதொழாத்
தன்ன தாருயிர்த் தம்பியுந் தாமரைப்
பொன்னுந் தானுமோர் தேர்மிசைப் போயினான். 402

தைலமாட்டு படலம்

ஏவிய குரிசில்பின் யாவ ரேகிலார்
மாவியல் தானையம் மன்னை நீங்கலாத்
தேவிய ரொழிந்தனர் தெய்வ மாநகர்
ஓவிய மொழிந்தன வுயிரி லாமையால். 403

இரவு வந்தது

திருநகர்க் கியோசனை யிரண்டு சென்றொரு
விரைசெறி சோலையை விரைவி னெய்தினான்

இரதனின் றிழிந்தபி னிராம னின்றுணை
உரைசெறி முனிவரோ டுறையுங் காலையே. 404

குயின்றிய குலமணி நதியின் கூலத்தில்
பயின்றுயர் வாலுகப் பரப்பில் பைம்புலில்
வயின்றெரு றும் வைகின ரொன்றும் வாய்மடுத்
தயின்றிலர் துயின்றிலர் அழுது விம்மினர். 405

பின்னர் அனைவரும் துயின்றார்கள்.

இராமர் சுமந்திரரிடம் கூறுதல்.

பூண்டபே ரன்பினுரைப் போக்குவ தரிது போக்கா
தீண்டுநின் றேகல் பொல்லா தெந்தைநீ யிரத மின்னே
தூண்டினைமீளநோக்கிச் சுவட்டையோர்ந் தென்னையங்கே
மீண்டன னென்ன மீள்வரி துநின்னைவேண்டிற்றென்றான்.

சுமந்திரர்

அங்கிமேல் வேள்விசெய் தரிதிற் பெற்றநின்
சிங்கவே றகன்றதென் றுணர்த்தச் செல்கெனோ
எங்கள்கோ மகற்கினி யென்னிற் கேகயன்
நங்கையே கடைமுறை நல்லள் போலுமால். 407

இராமர்

நிறப்பெரும் படைக்கல நிறத்தி னேருற
மறப்பயன் விளைக்குறும் வன்மை யன்றரோ
இறப்பினுந் திருவெலா மிழப்ப வெய்தினும்
துறப்பில ரறமெனல் சூர ராவதே. 408

முந்தினை முனிவனை யிறைஞ்சி முற்றுமென்
வந்தனை முதலிய மாற்றங் கூறினை
எந்தையை யவனொடு மெய்தி மீண்டென
சிந்தனை யுணர்த்துதி யென்று செப்புவாய். 409

வெவ்விய தன்னையால் விளைந்த தீண்டொரு
கவ்வையென் றிறையுந்தன் கருத்தில் நோக்கலன்
எவ்வரு ளென்வயின் வைத்த தின்சொலால்
அவ்வரு ளவன்வயி னருளு கென்றியால். 410

சீதை

அன்னவள் கூறுவா ளரசர்க் கத்தையர்க்
கென்னுடை வணக்கமுன் னியம்பி யானுடைப்

பொன்னிறப் பூவையுங் கிளியும் போற்றுகென்
றுன்னுமென் றங்கையர்க் குணர்த்து வாயென்ருள். 411

உரைசெய்தெங் கோமகற் குறுதி யாக்கிய
தரைகெழு செல்வத்தைத் தவிர மற்ருெரு
விரைசெறி குழலிமாட் டளித்த மெய்யனை
அரசனென் றின்னமொன் றறையற் பாலதோ. 412

மின்னுடன் பிறந்தவாட் பரத வேந்தற்கு
மன்னுடன் பிறந்திலென் மண்கொண் டாள்கின்ற
தன்னுடன் பிறந்திலென் றம்பி முன்னலென்
என்னுடன் பிறந்தயான் வலிய னென்றியால். 413

சுமந்திரர் தேருடன் ஊரவர் அயோத்தி செல்லல்.

சுமந்திரர் வசிட்டருடன் தயரதரிடம் வந்து நிற்றல்

இரதம்வந் துற்ற தென்ருங் கியாவரு மியம்பலோடும்
வரதன்வந் துற்ரு னென்ரு மன்னனு மயக்கந் தீர்ந்தான்
புரைதபு கமல நாட்டம் பொருக்கென விழித்து நோக்கி
விரதமா தவனைக் கண்டான் வீரன்வந் தனனோ வென்ருன்.

இல்லையென் றுரைக்கலாற்ரு னேங்கினன் முனிவனின்ருன்
நல்லவன் முகமே நம்பி நடந்தில னென்னு மாற்றம்
சொல்லலு மரசன் சோர்ந்தான் றுயருறு முனிவ னுனிவ்
வல்லல்காண் கில்லே னென்ரு வாங்குநின் றகலப்
போனுன். 415

தயரதன் புலம்பல்

[நாலாயிரம் - குலசேகரப் பெருமாள் திருமொழி]

[வெவ்வாயேன் வெவ்வுரைகேட் டிருநிலத்தை
வேண்டாதே விரைந்துவென்றி
மைவாய களிற்ருெழிந்து தேரொழிந்து
மாவொழிந்து வனமேமேவி
நெய்வாய வேல்நெடுங்கண் நேரிழையும்
இளங்கோவும் பின்புபோக
எவ்வாறு நடந்தனையெம் மிராமாவோ
எம்பெருமா னென்செய் கேனே. (க)

கொல்லணைவேல் வரிநெடுங்கண் கௌசலைதன்
குலமதலாய் குனிவில் லேந்தும்

மல்லணைந்த வரைத்தோளா வல்வினையேன்
மனமுருக்கும் வகையே கற்ருய்
மெல்லணைமேல் முன்துயின்ருயின்றினிப்போய்
வியன்கான மரத்தின் நீழல்
கல்லணைமேல் கண்துயிலக் கற்றனையோ
காகுத்தா கரிய கோவே. (உ)

பொருந்தார்கை வேல்நுதிபோல் பரல்பாய
மெல்லடிகள் குருதி சோர
விரும்பாத கான்விரும்பி வெயிலுஃறப்ப
வெம்பசி நோய் கூர இன்று
பெரும்பாவி யேன்மகனே போகின்ருய்
கேகயர்கோன் மகளாய்ப் பெற்ற
அரும்பாவி சொற்கேட்ட வருவினையே
னென்செய்கே னந்தோ யானே. (௩)

அம்மாவென் றுகந்தழைக்கு மார்வச்சொல்
கேளாதே அணிசேர் மார்வம்
என்மார்வத் திடையழுந்தத் தழுவாதே
முழுசாதே மோவா துச்சி
கைம்மாவின் நடையன்ன மென்னடையும்
கமலம்போல் முகமும் காணுது
எம்மானை யென்மகனை யிழந்திட்ட
இழிதகையே னிருக்கின்றேனே. (௪)

முன்னொருநாள் மழுவாளி சிலைவாங்கி
அவன்தவத்தை முற்றும் செற்ருய்
உன்னையுமுன் னருமையையு முன்மோயின்
வருத்தமு மொன்ருகக் கொள்ளாது
என்னையுமென் மெய்யுரையும் மெய்யாகக்
கொண்டுவனம் புக்க எந்தாய்
நின்னையே மகனாகப் பெறப்பெறுவேன்
ஏழ்பிறப்பும் நெடுந்தோள் வேந்தே. (௫)

தேன்நகுமா மலர்க்கூந்தற் கௌசலையும்
சுமித்திரையும் சிந்தை நோவ
கூனுருவில் கொடுந்தொழுத்தை சொற்கேட்ட
கொடியவள்தன் சொற்கொண்டு—இன்று

கானகமே மிகவிரும்பி நீதுறந்த
வளநகரைத் துறந்து நானும்
வானகமே மிகவிரும்பிப் போகின்றேன்
மனுகுலத்தார் தங்கள் கோவே. (சூ)]

தயரதர் முத்தி

நாயகன் பின்னுந் தன்றேர்ப் பாகனை நோக்கி நம்பி
சேயனோ வணிய னோவென் றுரைத்தலு மனையான் செய்ய
வேயுயர் கானந் தானுந் தம்பியு மிதிலைப் பொன்னும்
போயின னென்ருனென்ற போழ்தத்தே யாவி போனான்.

இந்திரன் முதல்வ ராய கடவுளர் யாரு மீண்டிச்
சந்திர னனைய தாங்கோர் மானத்தின் றலையிற் ருங்கி
வந்தன னெந்தை தந்தை யெனமனங் களித்து வள்ளல்
உந்தியா னுலகி னும்பர் மீள்கிலா வுலகத் துய்த்தார். 417

கோசலை புலம்பல்

நோயும் மின்றி நோன்கதிர் வாள்வே லிவையின்றி
மாயுஞ் செல்வ மக்களி னுலோ மறமன்னன்
காயும் புள்ளிக் கர்க்கட நாகங் கனிவாழை
வேயும் போன்ரு னென்றுமயங்கா விழுகின்ருள். 418

செய்யக் கடவ செயற்குரிய சிறுவ ரீண்டை யாரல்லர்
எய்தக் கடவபொருளெய்தாதிகவா வென்னவியல்பென்ன
மையற்கொடியாண்மகனீண்டுவந்தான்முடித்துமற்றென்ன
தையற் கடனின் றெடுத்தவனைத் தயிலக் கடலின்
றலையுய்த்தான். 419

வசிட்டர் பரதசத்துருக்கனரை யழைத்துவர
ஓலையனுப்பினர்.

கங்கைப் படலம்

வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோவெனு மிடையாளொடு மிளையானொடும்போனான்
மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ
ஐயோவிவன் வடிவென்பதொ ரழியாவழ குடையான். 420

முனிவர் வரவேற்பு

கங்கை யென்னுங் கடவுட் டிருநதி
தங்கி வைகுந் தபோதனர் யாவரும்

எங்கள் செல்கதி வந்ததென் றேமுரு
அங்கணு யகற் காணவந் தண்மினுர். 421

பொழியுங் கண்ணிற் புதுப்புன லாட்டினர்
மொழியு மின்சொலின் மொய்ம்மலர் சூட்டினர்
அழிவி லன்பெனு மாரமிர் தூட்டினர்
வழியில் வந்தவ ருத்தத்தை வாட்டினர். 422

காயுங் கானிற் கிழங்குங் கனிகளும்
தூய தேடிக் கொணர்ந்தனர் தோன்றனீ
ஆய கங்கை யரும்புன லாடினை
தீயை யோம்பினை செய்யமு தென்றனர். 423

கங்கையாடுதல்

கன்னி நீக்கருங் கங்கையுங் கைதொழாப்
பன்னி நீக்கரும் பாதகம் பாருளோர்
என்னி னீக்குவர் யானுமின் றெற்றந்த
உன்னி னீக்கினெ னுய்ந்தனென் யானென்றுள். 424

வருந்தித் தான்றர வந்த வமுதையும்
அருந்துநீ ரென் றமரரை யூட்டினுன்
விருந்து மெல்லட குண்டு விளங்கினுன்
திருந்தினுர் வயிற் செய்தன தேயுமோ. 425

குகன் தன்மை

ஆய காலையி னுயிர மம்பிக்கு
நாய கன்போர்க் குகனெனு நாமத்தான்
தூய கங்கைத் துறைவிடுந் தொன்மையான்
காயும் வில்லினன் கற்றிரள் தோளினுன். 426

ஊற்று மெய்ந்நற வூனெடு மீனுகர்
நாற்ற மேய நகையில் முகத்தினுன்
சீற்ற மின்றியுந் தியெழ நோக்குவான்
கூற்ற மஞ்சக் குமுறுங் குரலினுன். 427

சிருங்கி பேர மெனத்திரைக் கங்கையின்
மருங்கு தோன்று நகருடை வாழ்க்கையான்
ஒருங்கு தேனெடு மீனுப காரத்தன்
இருந்த வள்ளலைக் காணவந் தெய்தினுன். 428

குகன் வருகை

சுற்ற மப்புற நிற்கச் சுடுகணை
விற்று றந்தரை வீக்கிய வாளொழித்
தற்ற நீத்த மனத்தின னன்பினன்
நற்ற வப்பள்ளி வாயிலை நண்ணினான். 429

நிற்றியீண் டென்று புக்கு நெடியவற் றொழுது தம்பி
கொற்றவ நின்னைக் காணக் குறுகின னிமிர்ந்த கூட்டச்
சுற்றமுந் தானு முள்ளந் தூயவன் றாயி னல்லான்
எற்றுநீர்க் கங்கை நாவாய்க்கிறைகுக னொருவ னென்றான்

அண்ணலும்விரும்பியென்பாலழைத்திநீயவனையென்றான்
பண்ணவன்வருக வென்னப் பரிவினன் விரைவிற்புக்கான்
கண்ணனைக் கண்ணி னோக்கிக் கனிந்தன னிருண்ட குஞ்சி
மண்ணுறப் பணிந்து மேனி வளைத்துவாய் புதைத்து
நின்றான். 431

இருத்தியீண் டென்ன லோடு மிருந்தில னெல்லை நீத்த
அருத்தியன் றேனு மீனு மமுதினுக் கமைவ தாகத்
திருத்தினென் கொணர்ந்தே னென்கொல் திருவுள
மென்ன வீரன்
விருத்தமா தவரை நோக்கி முறுவலன் விளம்ப லுற்றான்.

இராமர், "உன் அன்புக்கு உவகையுற்றோம்" என்றார்.

இரவு இராமருஞ் சீதையும் துயிலுதல்.

இலக்குவன் காவல்; மூதேவியை யழைத்து, "வனவாச முடிவுவரை அணுகாதே" யென்றார்.

அவளும் "ஆகுக" என்றாள்.

இலக்குவன் காவல்

மற்றவ ளிறைஞ்சி யேக மாமலர்த் தவிசு நீங்காப்
பொற்றொடி யோடு மையன் துயில்தரும் புன்மை நோக்கி
இற்றதோர் நெஞ்ச னாகி இருகணீர் அருவி சோர
உற்ற ஓவியம தென்ன ஒருசிலை யதனில் நின்றான்.

குகன் காவல்

தும்பியின் குழாத்திற் சுற்றுஞ் சுற்றத்தன் றொடுத்த
வில்லன்
வெம்பிவெந் தழியா நின்ற நெஞ்சினன் விழித்த கண்ணன்

தம்பிநின் ருனை நோக்கித் தலைமகன் றன்மை நோக்கி
அம்பியின் றலைவன் கண்ணீ ரருவிசோர் குன்றி னின்ருன்.

மறுநாள் குகனை யழைத்து ஓடங் கொணருமாறு
இராமர் கூறக்கேட்ட குகன் வேண்டுகோள்.

தேனுள திணையுண்டாற் றேவரு நுகர்தற்காம்
ஊனுள துணைநாயே முயிருள விளையாடக்
கானுள புனலாடக் கங்கையு முளதன்றே
நானுள தனையுந்நீ யினிதிரு நடவெம்பால். 434

இராமர்

அண்ணலு மதுகேளா வகநிறை யருண்மிக்கான்
வெண்ணிற நகைசெய்தான் வீரநின் னுழையாமப்
புண்ணிய நதியாடிப் புனிதரை வழிபாடுற்
றெண்ணிய சிலநாளிற் குறுகுது மினிதென்ருன். 435

ஓடமேறி அக்கரை சென்று சித்திரகூடத்திற்கு வழியாது
என்று இராமர் கேட்கக் குகன் கூறுவான்:

நெறியிடு நெறிவல்லே னேடினென் வழுவாமல்
நறியன கனிகாயு நறவிவை தரவல்லேன்
உறைவிட மமைவிப்பே னொருநொடி வரையும்மைப்
பிறிகலெ னுடனேகப் பெறுகுவெ னெனினுயேன். 436

துன்புள தெனினன்றே சுகமுள ததுவன்றிப்
பின்புள திடைமன்னும் பிரிவுள தெனவுன்னேல்
முன்புளெ மொருநால்வே முடிவுள தெனவுன்னு
அன்புள வினிநாமோ ரைவர்க ளுளரானேம். 437

அங்குள கிளைகாவற் கமைதியி னுளனும்பி
இங்குள கிளைகாவற் கியாருள ருரைசெய்யாய்
உன்கிளை யெனதன்றோ வுறுதுய ருறலாமோ
என்கிளை யிதுகாவென் னேவலி னினிதென்ருன். 438

வனம்புகு படலம்

சித்திரகூடமலையில் பரத்துவாசர் சந்திப்பு

அருத்தியி னகம்விம்மு மன்பினி னெடுநாளில்
திருத்திய வினைமுற்றிற் றென்றனன் றெரிகின்ருன்
பரத்துவ னெனுநாமப் பரமுனி பவநோயின்
மருத்துவ னனையானை வரவெதிர் கொளவந்தான். 439

புக்குறை விடநல்கிப் பூசனை முறைபேணித்
தக்கன கனிகாயுந் தந்துரை தருமன்பால்
தொக்கநன் முறைகூறித் தூயவ னுயிர்போலும்
மக்களி னருளூற்றான் மைந்தரு மகிழ்வுற்றார். 440

அங்கிருந்து புறப்பட்டுச் செல்லும்போது
காளிந்தி நதி எதிர்ப்பட்டது.

இலட்சுமணர் செயல்

வாங்கு வேய்ங்கழை துணித்தனன் மானையின் கொடியால்
ஓங்கு தெப்பமொன் றமைத்ததி னும்பரி னுலம்போல்
வீங்கு தோளண்ணல் தேவியோ டினிதுவீற் றிருப்ப
நீங்கி னனந்த நெடுநதி யிருகையால் நீந்தி. 441

மந்தாகினி நதிக்கரையில் தங்குதல்.

கால மின்றியுங் கனிந்தன கனிநெடுங் கந்தம்
மூல மின்றியு முகிழ்த்தன நிலனுற முழுதும்
கோல மங்கைய ரொத்தன கொம்பர்க ளின்பச்
சீல மன்றியுஞ் செய்தவம் வேறுமொன் றுளதோ. 442

சித்திரகூடப் படலம்

இலட்சுமணர் அழகிய பன்ன சாலை புதுக்கினர்.
அதைக் கண்டு இராமர் வியத்தல்

என்று சிந்தித் திளையவற் பார்த்திரு
குன்று போலக் குவவிய தோளினாய்
என்று கற்றனை நீயிது போலென்றான்
துன்று தாமரைக் கண்பனி சோர்கின்றான். 443

பின்னுந் தம்பியை நோக்கிப் பெரியவன்
மன்னுஞ் செல்வத் திற்குண்டு வரம்பிதற்
கென்ன கேடுண்டிவ் வெல்லையி லின்பத்தை
உன்னு மேல்வரு மூதியத் தோடென்றான். 444

பள்ளியடைப் படலம்

தூதுவர் சென்று ஓலையைப் பரதரிடம் தர வாங்கி மகிழ்ந்து
பரதர் புறப்பட்டனர்.

எழுக சேனையென் றேவின னெய்தினன்
தொழுது கேகயர் கோமகன் சொல்லொடும்

தழுவு தேரிடைத் தம்பியொ டேறினன்
பொழுது நாளுங் குறித்திலன் போயினன். 445

அயோத்தியடைதல்

தேரு மாவுங் களிறுஞ் சிவிகையும்
ஊரும் பண்டியு மூருந ரின்மையால்
யாரு மின்றி யெழிலழி வீதிகள்
வாரி யின்றிய வாலுக வாற்றினே. 446

அன்ன தன்மை யகநகர் நோக்கினன்
பின்னை யப்பெரி யோர்தம் பெருந்தகை
மன்னன் வைகும் வளநகர் போலுமீ
தென்ன தன்மை யிளையவ னேயென்றான். 447

விருப்பி னெய்தினன் வெந்திறல் வேந்தனை
இருப்பு நல்லிட மெங்கணுங் கண்டிலன்
அருப்ப மன்றிதென் றையுற வெய்தினன்
பொருப்பு நாண வுயர்ந்த புயத்தினன். 448

கைகேயியைக் கண்டார்.

வந்து தாயை யடியில் வணங்கலும்
சிந்தை யாரத் தழுவினள் தீதிலர்
எந்தை யென்னைய ரெங்கைய ரென்றனள்
அந்த மில்குணத் தானும தாமென்றான். 449

பரதர்

பூண்டெழு காதலான் முளரித் தாள்தொழ
வேண்டினன் எய்தினெ னுள்ளம் விம்முமால்
ஆண்டகை நெடுமுடி யரசர் கோமகன்
யாண்டையான் பணித்திரென் றிருகை கூப்பினன். 450

கைகேயி

ஆனவ னுரைசெய வழிவில் சிந்தையாள்
தானவர் வலிதவ நிமிர்ந்த தானையத்
தேனமர் தெரியலான் றேவர் கைதொழ
வானக மெய்தினன் வருந்தல் நீயென்றாள். 451

பரதர் பரிவு

எழுந்தன னேங்கின னிரங்கிப் பின்னரும்
விழுந்தனன் விம்மினன் வெய்து யிர்த்தனன்

அழிந்தன னரற்றின னரற்றி யின்னன
மொழிந்தனன் பின்னரு முருகிற் செவ்வியான். 452

இப்பர்நின் றேகினை யிருக்குஞ் சார்பிழந்
தும்பர்வந் துன்கழ லொதுங்கி னர்கொலாம்
சம்பர னனையவத் தானைத் தானவர்
அம்பரத் தின்னமு முளர்கொ லாமையா. 453

பற்றிலை தவத்தினிற் பயந்த மைந்தற்கு
முற்றுல களித்தது முறையி னெய்திய
கொற்றவன் முடிமணக் கோலங் காணவும்
பெற்றிலை போலுநின் பெரிய கண்களால். 454

எந்தையும் யாயுமெம் பிரானு மெம்முனும்
அந்தமில் பெருங்குணத் திராம னாதலால்
வந்தனை யவன்கழல் வைத்த போதலாற்
சிந்தைவெங் கொடுந்துயர் தீர்க லாதென்றான். 455

கைகேயி

அவ்வுரை கேட்டலு மசனி யேறென
வெவ்வுரை வல்லவள் மீட்டுங் கூறுவாள்
தெவ்வடு சிலையினாய் தேவி தம்பியென்
றிவ்விரு வோரொடுங் கானத் தானென்றாள். 456

பரதர்

ஏங்கின விம்மலோ டிருந்த வேந்தலப்
பூங்கழற் காலவன் வனத்துப் போயது
தீங்கிழைத் ததனினோ தெய்வஞ் சீறியோ
ஓங்கிய விதியினோ யாதி னோவென. 457

கைகேயி

வாக்கினால் வரந்தரக் கொண்டு மைந்தனைப்
போக்கினேன் வனத்திடைப் போக்கிப் பாருனக்
காக்கினே னவனது பொறுக்க லாமையால்
நீக்கினான் றன்னுயிர் நேமி வேந்தென்றாள். 458

பரதரது சினம்

சூடின மலர்க்கரஞ் சொல்லின் முன்செவி
கூடின புருவங்கள் குதித்துக் கூத்துநின்
றாடின வுயிர்ப்பினோ டழற்கொ ழுந்துகள்
ஓடின வுமிழ்ந்தன வுதிரங் கண்களே. 459

அஞ்சினர் வானவ ரவுண ரச்சத்தால்
துஞ்சின ரெனைப்பல சொரிம தத்தொளை
எஞ்சின திசைக்கரி யிரவி மீண்டனன்
வெஞ்சினக் கூற்றுந்தன் விழிபு தைத்ததே. 460

நீயின மிருந்தனை யானு நின்றனென்
ஏயெனு மாத்திரத் தெற்று கிற்றிலென்
ஆயகன் முனியுமென் றஞ்சி னேனலால்
தாயெனும் பெயரெனைத் தடுக்கற் பாலதோ. 461

நோயீ ரல்லீர் நுங்கண வன்றன் னுயிருண்டீர்
பேயீ ரேநீ ரின்னமி ருக்கப் பெறுவீரே
மாயீர் மாயா வன்பழி தந்தீர் முலைதந்தீர்
தாயீ ரேநீ ரின்னுமெ னக்கென் றருவீரே. 462

உய்யா நின்றே னின்னமு மென்முன் னுடன்வந்தான்
கையார் கல்லைப் புல்லட குண்ணக் கலமேந்தி
வெய்யோ னுனின் சாலியின் வெண்சோ றமுதென்ன
நெய்யோ டுண்ண நின்றது நின்றூர் நினையாரோ. 463

வில்லார் தோளான் மேவினன் வெங்கா னகமென்ன
நல்லா னன்றே துஞ்சின னஞ்சே யனையானைக்
கொல்லேன் மாயேன் வன்பழி யாலே குறைவற்றேன்
அல்லே னேயா னன்புடை யார்போ லழுகின்றேன். 464

ஏன்றுன் பாவிக் கும்பிவ யிற்றி னிடைவைகித்
தோன்றுந் தீராப் பாதக மற்றென் றுயர்தீரச்
சான்றுந் தானே நல்லற மாகத் தகைஞாலம்
மூன்றுங் காண மாதவம் யானே முயல்கின்றேன். 465

பரதர் கோசலைபால் வந்து அழுதல்

ஆண்டகை கோசலை யருக ரெய்தினன்
மீண்டுமண் கிழிதர வீழ்ந்து கேழ்கிளர்
காண்டகு தடக்கையிற் கமலச் சீறடி
பூண்டனன் கிடந்தனன் புலம்பி னனரோ. 466

எந்தையெவ் வுலகுளா னெம்முன் யாண்டையான்
வந்தது தமியெனிம் மறுக்கங் காணவோ
சிந்தையி னுறுதுயர் தீர்த்தி ராலெனும்
அந்தரத் தமரரு மழுது சோரவே. 467

கோசலை வினவுதல்

மையறு மனத்தொரு மாசு ளானலன்
செய்யனே யென்பது தேருஞ் சிந்தையாள்
கைகயர் கோமக ளிழைத்த கைதவம்
ஐயநீ யறிந்திலை போலு மாலென்றாள். 468

பரதர் சூளுரை

அறங்கெட முயன்றவ னருளில் நெஞ்சினன்
பிறன்கடை நின்றவன் பிறரைச் சீறினேன்
மறங்கொடு மன்னுயிர் கொன்று வாழ்ந்தவன்
துறந்தமா தவர்க்கருந் துயரஞ் சூழ்ந்துளோன். 469

குரவரை மகளிரை வாளிற் கொன்றுளோன்
புரவல னுறுபொருள் புனலில் வாரினேன்
விரவலர் வெரிநிடை விழிக்க மீண்டுளோன்
இரவல ரருநிதி யெறிந்து வௌவினேன். 470

தாய்பசி யுழந்துயிர் தளரத் தான்றனிப்
பாய்பெரும் பாழ்வயி றளிக்கும் பாவியும்
நாயகன் படநடந் தவனு நண்ணுமத்
தீயெரி நரகத்துக் கடிது செல்கயான். 471

பொய்க்கரி கூறினேன் போருக் கஞ்சினேன்
கைக்கொளு மடைக்கலங் கரந்து வவ்வினேன்
எய்த்திடத் திடர்செய்தோ னென்றின் னோர்புகும்
மெய்க்கொடு நரகிடை விரைவின் வீழ்கயான். 472

அந்தண ருறையுளை யனலி யூட்டினேன்
மைந்தரைக் கொன்றுளோன் வழக்கிற் பொய்த்துளோன்
நிந்தனை தேவரை நிகழ்த்தி னேன்புகும்
வெந்துயர் நரகத்து வீழ்க யானுமே. 473

கன்றுயி ரோய்ந்துகக் கறந்து பாலுண்டோன்
மன்றிடைப் பிறர்பொருண் மறைத்து வவ்வினேன்
நன்றியை மறந்திடு நயமி லவினேன்
என்றிவ ருறுநர கென்ன தாகவே. 474

ஆறுதன் னுடன்வரு மஞ்சொன் மாதரை
ஊறுகொண் டலைக்கத்தன் னுயிர்கொண் டேகினேன்
சோறுதன் னயலுளோர் பசிக்கத் துய்த்துளோன்
ஏறுமக் கதியிடை யானு மேறவே. 475

கன்னியை யழிசெயக் கருதி ஞேன்குரு
பன்னியை நோக்கினேன் பருகி னேனறை
பொன்னிகழ் களவினிற் பொருந்தி ஞெனென
இன்னவ ருறுகதி யென்ன தாகவே. 476

கோசலேயின் உவகை

தூய வாசகஞ் சொன்ன தோன்றலேத்
தீய கானகந் திருவி னீங்கிமுன்
போயி ஞன்வரக் கண்ட பொம்மலாள்
ஆய காதலா லழுது புல்லினுள். 477

முன்னே நுங்குல முதலு ளோர்கள்தாம்
நின்னே யாவரே நிகர்க்கு நீர்மையார்
மன்னர் மன்னவா வென்று வாழ்த்தினுள்
உன்ன உன்னநைந் துருகி விம்முவாள். 478

வசிட்டர் வருதல்

வந்த மாதவன் தாளில் வள்ளல்வீழ்ந்
தெந்தை யாண்டையா னியம்பு வீரெனு
நொந்து மாழ்கினு னுவல்வ தோர்கிலா
தந்த மாதவ னழுது புல்லினுன். 479

பிதாவின் உடல் கண்டு வருந்துதல்

மண்ணின் மேல்விழுந் தலறி மாழ்குவான்
அண்ண லாழியா னவனி காவலான்
எண்ணெ யுண்டபொன் னெழில்கொள் மேனியைக்
கண்ண நீரினுற் கழுவி யாட்டினுன். 480

மாவும் யானேயும் வயங்கு தேர்களும்
கோவு நான்மறைக் குழுவு முன்செலத்
தேவி மாரொடுங் கொண்டு தெண்டிரை
தாவு வார்புனற் சரயு வெய்தினுர். 481

என்னும் வேலேயி லெழுந்த வீரனே
அன்னே தீமையா லரச னின்னேயும்
துன்னு துன்பத்தாற் றுறந்து போயினுன்
முன்ன ரேயென முனிவன் கூறினுன். 482

இடிக்கண் வாளரா விடைவ தாமெனுப்
படிக்கண் வீழ்ந்தகம் பதைக்கு நெஞ்சினுன்

தடுக்க லாகலாத் துயரந் தன்னுளே
துடிக்க விம்மிநின் றழுது சொல்லுவான். 483

உரைசெய் மன்னன்மற் றுன்னி லென்னில்யார்
இரவி தன்குலத் தெந்தை முந்தையோர்
பிரத பூசனைக் குரிய பேறிலேன்
அரசு செய்யவோ வாவ தாயினேன். 484

என்று கூறிநொந் திடரின் மூழ்குமத்
துன்று தாரவற் கிளைய தோன்றலால்
அன்று நேர்கட னமைவ தாக்கினன்
நின்று நான்மறை நெறிசெய் நீர்மையான். 485

தேவியர் எரிமூழ்குதல்

அங்கி நீரினுங் குளிர வம்புயத்
திங்கள் வாண்முகந் திருவி ளங்குறச்
சங்கை தீர்ந்துதங் கணவர் பின்செலும்
நங்கை மார்புகு முலக நண்ணினர். 486

பத்து நாள் நீர்க்கடன் புரிந்தனர்.

[தயரதர் முடிவுக்கு உள்ளீடு

1. மகனிடம் தந்தையினும் தாய்க்கே அதிக அன்பு. மகன் பிரிவினால் தாயாகிய கோசலையே உயிர் துறந்திருக்க வேண்டும். அவ்வாறு அவள் மாண்டாளில்லை. பிதாவாகிய தயரதர் மாண்டார். காரணம் யாது? தனக்கென்று கருமம் புரிபவன் மாள்வான். பிறருக்கு என்று ஒரு கருமம் புரிபவன் வாழ்வான். தயரதன் இராமனைப் பெறுகின்றபோது தனக்கென்றுபெற்றான். (தன் நாடாள வேண்டு மென்று). கோசலை உலகிற்கு என்று பெற்றாள். மகன் நாடாண்டாலும் காடாண்டாலும் ஒன்று என்று கருதி வாழ்ந்தாள்.

2. அன்றியும் மன்னன் மகன் பிரிவு என்ற ஒன்றுக்காக மட்டும் உயிர் பிரிந்தானில்லை. மகன் காடு போகின்றான். மன்னனும் காடுபோகவே திட்டமிட்டிருந்தான். மகனுடன் தானும் காடு போகவேண்டியதுதானே. அப்போது மகனைப் பிரியவேண்டிய அவசிய மிராதல்லவா?

மனுகுல வழக்கம் மூதன் மகனே அரசாள்வது; தான் கொடுத்த வரத்தை மாற்றினால் வாய்மை யழியும். வாய்மையைக் காவாக்கால் மனுகுல மரபு கெடும். இரண்டையுங் காக்க மன்னன் உயிர் துறந்தான்.

"வாய்மையு மரபுங் காக்க மன்னுயிர் துறந்த வள்ளல்" என்கின்றான் வாலி.

3. தயரதன் சம்பராசுரனுடன் போருக்குப் போனபோது, தேர் பள்ளத்தில் சாய்ந்தது. கைகேயி தன் கைகொடுத்துத் தேரை நிலைநிறுத்தினாள். அதன் பொருட்டு இரு வரம் அளிப்ப தாக மன்னன் கூறினான். இது மனைவி கணவனுக்குச் செய்ய வேண்டிய கடமையேயாகும். இதற்கு வரம் கொடுக்கின்றேன் என்பது சரியன்று. கைகேயி அதனைச் செய்யாமலிருந்தால் அவ ளுடைய மங்கல நாணுக்கு இடர் உண்டாகியிருக்கும். ஆகவே அவள் கணவனுக்குச் செய்த கடமையைக் குறித்து மனமார வாழ்த்துதலே முறை. "மனையாளை மஞ்சத்தில்" என்ற ஔவையார் வாக்கின்படி மனைவியை வாய்விட்டுப் புகழ்வதும் கூடாது. இந்த அறத்தைச் சிறிதும் சிந்திக்காமல் வரந்தர இசைந் ததுவே மன்னன் உயிர்க்கு இறுதி பயந்தது என உணர்க.]

ஆற்றுப்படலம்

அமைச்சர்கள் வசிட்டராதியோர் பரதரிடம் வந்துரைத்தல்

நோக்கினாற் சுமந்திர னுவல லுற்றதை
வாக்கினா லன்றியே யுணர்ந்த மாதவன்
காக்குதி யுலகுநின் கடன தாமெனக்
கோக்கும ரனுக்கது தெரியக் கூறுவான். 487

உந்தையோ விறந்தன னும்மு னீத்தனன்
வந்தது மன்னை தன் வரத்தின் மைந்தநீ
அந்தமில் பேரர சளித்தி யன்னது
சிந்தனை யெமக்கெனத் தெரிந்து கூறினான். 488

பரதர் கூறுவது

நடுங்கின னாத்தடு மாறி நாட்டமும்
இடுங்கினன் மகளிரி னிரங்கு நெஞ்சினன்
ஒடுங்கிய வுயிரின னுணர்வு கைதரத்
தொடங்கின னரசவைக் குள்ளஞ் சொல்லுவான். 489

மூன்றுல கினுக்குமோர் முதல்வ னாய்முதல்
தோன்றின னிருக்கயான் மகுடஞ் சூடுதல்
சான்றவ ருரைசெய்த தரும மாதலால்
ஈன்றவள் செய்கையி னிழுக்குண் டாகுமோ. 490

நன்னெறி யென்னினு நானிந் நானில
இன்னுயிர்ப் பொறைசுமந் திருந்து வாழ்கிலேன்

அன்னவன் றனைக்கொணர்ந் தலங்கன் மாமுடி
தொன்னெறி முறைமையிற் சூட்டிக் காண்டிரால். 491

அன்றெனி லவனொடு மரிய கானிடை
நின்றினி திருந்தவ நெறியி னுற்றுவென்
ஒன்றினி யுரைப்பினென் னுயிரை நீக்குவென்
என்றன னென்றபோ திருந்த பேரவை. 492

அரசவை கூறுவது

ஆழியை யுருட்டியு மறங்கள் போற்றியும்
வேள்வியை யியற்றியும் வளர்க்க வேண்டுமோ
ஏழினோ டேழெனு முலகு மெஞ்சினும்
வாழிய நின்புக ழென்று வாழ்த்தினர். 493

பரதர்

குரிசிலுந் தம்பியைக் கூவிக் கொண்டலின்
முரசறைந் திந்நகர் முறைமை வேந்தனைத்
தருதுமீண் டென்பது சாற்றித் தானையை
விரைவினி லெழுகென விளம்பு வாயென்றான். 494

நகர மாந்தரும் நால்வகைச் சேனைகளும் நடத்தல்;

பரதர் புறப்பாடு.

இன்னண நெடும்படை யேக வேந்தலும்
தன்னுடைத் திருவரைச் சீரை சாத்தினன்
பின்னிளை யவனொடும் பிறந்த துன்பொடும்
நன்னெடுந் தேர்மிசை நடத்தன் மேயினன். 495

கூனியைக் கண்டு சத்ருக்நர் சினமடைதல்

மந்தரைக் கூற்றமும் வழிச்செல் வாரொடும்
உந்தியே போதல்கண் டிளவ லோடியார்த்
தந்தரத் தெற்றுவா னழன்று பற்றலும்
சுந்தரத் தோளவன் விலக்கிச் சொல்லுவான். 496

பரதர் ஆற்றுதல்

முன்னையர் முறைகெட முடித்த பாவியைச்
சின்னபின் னஞ்செய்தென் சினத்தைத் தீர்வெனேல்
என்னையின் றென்னையன் றுறக்கு மென்றலால்
அன்னையென் றுணர்ந்திலெ னைய நானென்றான். 497

ஆதலான் முனியுமென் றைய னந்தமில்
வேதனைக் கூனியை வெகுண்டு மெனினும்
கோதிலா வருமறை குலவு நூல்வலாய்
போதுநா மென்றுகொண் டரிதிற் போயினான். 498

ஒரு சோலையில் தங்கினர்.
பரதர் பரிவு

அல்லினை நெடுங்கணீ ரருவி யாடினன்
கல்லினை கிழங்கொடு கனியு முண்டிலன்
வில்லினைத் துயர்ந்ததோள் வீரன் வைகிய
புல்லினை மருங்கிற்றன் பொடியின் வைகினான். 499

அங்கிருந்து பரதர் நடந்தேகினர்.

குகப்படலம்

சேனையின் அளவு

பூவிரி பொலன்கழற் புனைவிற் றானையான்
காவிரி நாடன்ன கழனி நாடொரீஇத்
தாவர சங்கம மென்னுந் தன்மைய
யாவையு மிரங்கிடக் கங்கை யெய்தினான். 500

கான்றலை நண்ணிய காளை பின்படர்
தோன்றலை யவ்வழி தொடர்ந்து சென்றன
ஆன்றவ ருணர்த்திய வக்கு ரோணிகள்
மூன்றுபத் தாயிரத் திரட்டி முற்றுமே. 501

குகனுடைய கோபம்

குகனெனப் பெயரிய கூற்றி னாற்றலான்
தொகைமுரட் சேனையைத் துகளி னோக்குவான்
நகைமிகக் கண்கள்தீ நாற நாசியில்
புகையுறக் குனிப்புறும் புருவப் போர்விலான். 502

எலியெலா மிப்படை யரவம் யானென
ஒலியுலாஞ் சேனையை யுவந்து கூயினான்
வலியுலா முலகினில் வாழும் வள்ளுகிர்ப்
புலியெலா மொருவழி புகுந்த போலவே. 503

அஞ்சன வண்ணனென் னாருயிர் நாயக னாளாமே
வஞ்சனை யாலர செய்திய மன்னரும் வந்தாரே
செஞ்சர மென்பன தீயுமிழ் கின்றன செல்லாவோ
உய்ஞ்சிவர் போய்விடி னாய்க்குகனென்றனை யேசாரோ.

ஆழநெ டுந்திரை யாறுக டந்திவர் போவாரோ
வேழநெ டும்படை கண்டுவி லங்கிடும் வில்லாளோ
தோழமை யென்றவர் சொல்லிய சொல்லொரு
சொல்லன்றோ
ஏழமை வேடனி றந்தில னென்றெனை யேசாரோ. 505

ஆடுகொ டிப்படை சாடிய றத்தவ ரேயாள
வேடுகொ டுத்தது பாரெனு மிப்புகழ் மேவீரோ
நாடுகொ டுத்தவென் னுயக னுக்கிவர் நாமாளும்
காடுகொ டுக்கில ராகியெ டுத்தது காணீரோ. 506

சுமந்திரர் பரதர்பால் பகர்வது

கங்கையிரு கரையுடையான் கணக்கிறந்த நாவாயான்
உங்கள்குலத் தனிநாதற் குயிர்த்துணைவ னுயர்தோளான்
வெங்கரியி னேறனையான் விற்பிடித்த வேலையினான்
கொங்கலருநறுந்தண்டார்க்குகனென்னுங்குறியுடையான்.

கற்காணுந் திண்மையான் கரைகாணுக் காதலான்
அற்காணிற் கண்டனைய வழகமைந்த மேனியான்
மற்காணுந் திரள்திண்டோள் மழைகாணு மணிநிறத்தோய்
நிற்காணு முள்ளத்தா னெறியெதிர்நின் றனனென்றான்.

குகனைக் காண வரும் பரதரைக் கண்ட குகனது நிலை

வற்கலையி னுடையானை மாசடைந்த மெய்யானை
நற்கலையின் மதியென்ன நகையிழந்த முகத்தானைக்
கற்கனியக் கனிகின்ற துயரானைக் கண்ணுற்றான்
விற்கையினின் றிடைவீழ விம்முற்று நின்றொழிந்தான்.

நம்பியுமென் னுயகனை யொக்கின்றான் அயல்நின்றான்
தம்பியையு மொக்கின்றான் றவவேடந் தலைநின்றான்
துன்பமொரு முடிவில்லைத் திசைநோக்கித்தொழுகின்றான்
எம்பெருமான் பின்பிறந்தா ரிழைப்பரோ பிழைப்
பென்றான். 510

குகனும் பரதரும் சந்திப்பு

வந்தெதிரே தொழுதானை வணங்கினன் மலரிருந்த
அந்தணனுந் தனைவணங்கு மவனுமவ னடிவீழ்ந்தான்
தந்தையினுங் களிகூரத் தழுவினன் றகவுடையோர்
சிந்தையினுஞ் சென்னியினும் வீற்றிருக்குஞ் சீர்த்தியான்.

தழுவின புளினர் வேந்தன் றாமரைச் செங்கணானை
எழுவினு முயர்ந்த தோளா யெய்திய தென்னை யென்ன
முழுதுல களித்த தந்தை முந்தையோர் முறையினின்றும்
வழுவின னதனை நீக்க மன்னனைக் கொணர்வான்
வந்தேன். 512

கேட்டனன் கிராதர் வேந்தன் கிளர்ந்தெழு முயிர ளாகி
மீட்டுமண் ணதனில் வீழ்ந்தான் விம்மின னுவகைவீங்கத்
தீட்டரு மேனி மைந்தன் சேவடிக் கமலப் பூவில்
பூட்டிய கையன் பொய்யி லுள்ளத்தான் புகல லுற்றான்.

தாயுரை கொண்டு தாதை யுதவிய தரணி தன்னைத்
தீவினை யென்ன நீத்துச் சிந்தனை முகத்திற் றேக்கி
போயினை யென்ற போழ்து புகழினோய் தன்மை கண்டால்
ஆயிர மிராமர் நின்கே ழாவரோ தெரியிலம்மா. 514

ஏன்புகழ் கின்ற தேழை யெயினனே னிரவி யென்பான்
தன்புகழ்க் கற்றை மற்றை யொளிகளைத் தவிர்க்குமாபோல்
மன்புகழ் பெருமை நுங்கண் மரபினோர் புகழ்க ளெல்லாம்
உன்புக ழாக்கிக் கொண்டா யுயர்குணத் துரவுத் தோளாய்.

பரதர் இராமர் இருந்த இருக்கையைக் கேட்டு
ஆங்கு சென்று வருந்தல்.

அவ்வழி யவனை நோக்கி யருடரு வாரி யன்ன
செவ்வழி யுள்ளத் தண்ணல் தென்றிசைச் செங்கை கூப்பி
எவ்வழி யுறைந்தா னம்முன் னென்றலு மெயினர் வேந்தன்
இவ்வழி வீர யானே காட்டுவ லெழுக வென்றான். 516

காரெனக் கடிது சென்றான் கல்லிடைப் படுத்த புல்லின்
வார்சிலைத் தடக்கை வள்ளல் வைகிய பள்ளி கண்டான்
பார்மிசைப் பதைத்து வீழ்ந்தான் பருவரற் பரவைபுக்கான்
வார்மணிப் புனலான்மண்ணை மண்ணு நீராட்டுங்கண்ணான்.

இளையவன் எங்கே துயின்றான் என்று பரதன் வினவக்
குகன் கூறுதல்

அல்லையாண் டமைந்த மேனி யழகனு மவளுந் துஞ்ச
வில்லையூன் றியகை யோடும் வெய்துயிர்ப் போடும் வீரன்
கல்லையாண் டுயர்ந்த தோளாய் கண்கணீர் சொரியக்கங்குல்
எல்லைகாண் பளவு நின்றா னிமைப்பில னயன மென்றான்.

எட்டுகோடி நாவாய்களில் சேனைகள் கங்கையைக் கடந்தன

அறுபதி னுயிர மக்கு ரோணியென்
றிறுதிசெய் சேனையு மெல்லை தீர்நகர்
மறுவறு மாக்களு மகளிர் வெள்ளமும்
செறிதிரைக் கங்கைபின் கிடக்கச் சென்றவே. 519

பரதர் ஓடமேறுதல்

சுழித்துநீர் வருதுறை யாற்றைச் சூழ்படை
கழித்துநீங் கியதெனக் கள்ள வாசையை
அழித்துவே றவனிபண் டாண்ட வேந்தரை
இழித்துமே லேறினன் றுனு மேறினன். 520

தன்னன தம்பியுந் தாயர் மூவரும்
சொன்னதேர் வலவனுந் தூய தோழனும்
துன்னின ரேறலுந் துழா துடுப்பெனும்
நன்னயக் காலினல் நடத்தன் மேயினன். 521

சுற்றத்தார் தேவரொடுந் தொழநின்ற
கோசலையைத் தொழுது நோக்கி
வெற்றித்தார்க் குரிசிலிவ ராரென்று
குகன்வினவ வேந்தர் வைகும்
முற்றத்தான் முதற்றேவி மூன்றுலக
மீன்றானை முன்னீன் றானைப்
பெற்றத்தாற் பெருஞ்செல்வம் யான்பிறத்த
லாற்றுறந்த பெரியா ளென்றான். 522

என்றலுமே யடியின்மிசை நெடிதுவீழ்ந்
தழுவானை யிவன்யா ரென்று
கன்றுபிரி காராவின் றுயருடைய
கொடிவினவக் கழற்கான் மைந்தன்
இன்றுணைவ னிராகவனுக் கிலக்குவற்கு
மிளையவற்கு மெனக்கு மூத்தான்
குன்றனைய திருநெடுந்தோட் குகனென்பா
னிந்நின்ற குரிசி லென்றான். 523

நைவீர லீர்நைந்தீ ரினித்துயரால்
நாடிறந்து காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவு நலமாயிற்
றுமன்றே விலங்கற் றிண்டோள்

கைவீரக் களிறனைய காளையிவன்
றன்னோடு கலந்து நீங்கள்
ஐவீரு மொருவீரா யகலிடத்தை
நெடுங்கால மளித்தி ரென்றாள். 524

அறந்தானே யென்கின்ற வயனின்றாள்
தனைநோக்கி யைய வன்பின்
நிறைந்தானை யுரையென்ன நெறிதிறம்பாத்
தன்மெய்யை நிற்ப தாக்கி
இறந்தான்றன் னிளந்தேவி யாவர்க்குந்
தொழுகுலமா மிராமன் பின்பு
பிறந்தானு முளனென்னப் பிரியாதான்
றனைப்பயந்த பெரியா ளென்றான். 525

சுடுமயா னத்திடைதன் றுணையேகத்
தோன்றல்துயர்க் கடலி னேகக்
கடுமையார் கானகத்துக் கருணையார்
கலியேகக் கழற்கான் மாயன்
நெடுமையா லன்றளந்த வுலகெல்லாந்
தன்மனத்தே நினைந்து செய்யுங்
கொடுமையா லளந்தானை யாரிவரென்
றுரையென்னக் குரிசில் கூறும். 526

படரெலாம் படைத்தாளைப் பழிவளர்க்குஞ்
செவிலியைத்தன் பாழ்த்த பாவிக்
குடரிலே நெடுங்காலங் கிடந்தேற்கு
முயிர்ப்பாரங் குறைந்து தேய
உடரெலா முயிரிலா வெனத்தோன்று
முலகத்தே யொருத்தி யன்றே
இடரிலா முகத்தானை யறிந்திலையே
லிந்நின்றா ளென்னை யீன்றாள். 527

என்னக் கேட்டவ் விரக்கமி லாளையும்
தன்னற் கையின் வணங்கினன் றாயென
அன்னப் பேடை சிறையில தாய்க்கரை
துன்னிற் றென்னவும் வந்தது தோணியே. 528

இழிந்த தாயர் சிவிகையி னேறத்தான்
பொழிந்த கண்ணிற் புதுப்புனற் போயினான்

ஒழிந்தி லன்குக னும்முட னேகினன்
கழிந்த னன்பல காவதங் காலினே. 529

பரத்தி னீங்கும் பரத்துவ னென்னும்பேர்
வரத்தின் மிக்குயர் மாதவன் வைகிடம்
அருத்தி கூற வணுகின னண்டவன்
விருத்தி வேதிய ரோடெதிர் மேயினன். 530

கிளைகண்டு நீங்கு படலம்

பரதர் பரத்துவாசர் சந்திப்பு

வந்த மாதவத் தோனையம் மைந்தனும்
தந்தை யாமெனத் தாழ்ந்து வணங்கினன்
இந்து மோலியன் னனு மிரங்கினன்
அந்த மில்குணத் தாசிகள் கூறினன். 531

எடுத்த மாமுடி சூடிநின் பாலியைந்
தடுத்த பேரர சாண்டிலை யையநீ
முடித்த வார்சடைக் கற்றையை மூசுதூ
சுடுத்து நண்ணுதற் குற்றுள தியாதென்றான். 532

சினக்கொ டுந்திறற் சீற்றவெந் தீயினன்
மனக்க டுப்பினன் மாதவத் தோங்கலை
எனக்க டுத்தகி யம்பிலை நீயென்றான்
உனக்க டுத்தது மன்றுர வோயென்றான். 533

மறையின் கேள்வற்கு மன்னிளந் தோன்றல்பின்
முறையி னீங்கி முழுநிலங் கொள்கிலேன்
இறைவன் காக்கில னைமெனில் யாண்டெலாம்
உறைவென் கானத் தொருங்குட னேயென்றான். 534

உரைத்த வாசகங் கேட்டலு முள்ளெழுந்
திரைத்த காதலி ருந்தவத் தோர்க்கெலாம்
குரைத்த மேனியொ டுள்ளங் குளிர்ந்ததால்
அரைத்த சாந்துகொண் டப்பிய தென்னவே. 535

சேனைகளின் வரவைக் கண்ட இலட்சுமணரது சீற்றம்

குதித்தனன் பாரிடைக் குவடு நீறெழ
மிதித்தன னிராமனை விரைவி னெய்தினன்
மதித்திலன் பரதனின் மேல்வந் தான்மதிட்
பதிப்பெருஞ் சேனையின் பரப்பி னனென்றான். 536

இருமையு மிழந்தவப் பரத னேந்துதோட்
பருமையு மன்னவன் படைத்த சேனையின்
பெருமையும் நின்னொரு பின்பு வந்தவென்
ஒருமையுங் கண்டினி யுவத்தி யுள்ளநீ. 537

ஒருமகள் காதலி னுலகை நோய்செய்த
பெருமக னேவலிற் பரதன் றன்பெறும்
இருநில மாள்கைவிட் டின்றென் னேவலால்
அருநர காள்வது காண்டி யாழியாய். 538

வையகந் துறந்துவந் தடவி வைகுதல்
எய்திய துனக்கென நின்னை யீன்றவள்
நைதல்கண் டுவந்தவ ணவையி னோங்கிய
கைகயன் மகள்விழுந் தரற்றக் காண்டியால் 539

இராமர் கூறும் இதவுரை

இலக்குவ வுலகமோ ரேழு மேழுநீ
கலக்குவ னென்பது கருதி னலது
விலக்குவ தரிதது விளம்பல் வேண்டுமோ
புலக்குரித் தொருபொருள் புகலக் கேட்டியால். 540

எனைத்துள மறையவை யியம்பற் பாலன
பனைத்திரள் கரக்கரிப் பரதன் செய்கையே
அனைத்திற மல்லன வல்ல வல்லது
நினைத்திலை யென்வயி னேய நெஞ்சினல். 541

பெருமக னென்வயிற் பிறந்த காதலின்
வருமென நினைகையு மண்ணை யென்வயின்
தருமென நினைகையுந் தவிரத் தானையால்
பொருமென நினைகையும் புலமைப் பாலதோ. 542

சேனையை நிறுத்திப் பரதர்
சத்ருக்நருடன் வருகின்றார்

தொழுதுயர் கையினன் துவண்ட மேனியன்
அழுதழி கண்ணின னவல மீதென
எழுதிய படிவமொத் தெய்து வான்றனை
முழுதுணர் சிந்தையான் முடிய நோக்கினன். 543

கார்ப்பொரு மேனியக் கண்ணன் காட்டினன்
ஆர்ப்புறு வரிசிலை யிளைய வையநீ

தேர்ப்பெருந் தானையாற் பரதன் சீறிய
போர்ப்பெருங்கோலத்தைப்பொருந்தநோக்கெனு. 544

எல்லொடுங் கியமுகத் திளவ னின்றனன்
மல்லொடுங் கியபுயத் தவனை வைதெழும்
சொல்லொடுஞ் சினத்தொடு முணர்வு சோர்தர
வில்லொடுங் கண்ணநீர் நிலத்து வீழவே. 545

பரதர் இராமரை வணங்கியழுதார்

அயாவுயிர்த் தழுகணீ ரருவி மார்பிடை
உயாவுறத் திருவுள முருகப் புல்லினன்
நியாயமத் தனைக்குமோர் நிலைய மாகினன்
தயாமுத லறத்தினைத் தழுவி யென்னவே. 546

இராமர் வினு

புல்லின னின்றவன் புனைந்த வேடத்தைப்
பன்முறை நோக்கினன் பலவு முன்னினன்
அல்லலி னமுங்கினை யைய வாளுடை
மல்லுயர் தோளினன் வலிய னேவென்ருன். 547

பரதர் விடை

அரியவ னுரைசெயப் பரத னையநின்
பிரிவெனும் பிணியினு லென்னைப் பெற்றவக்
கரியவள் வரமெனுங் கால னல்தனக்
குரியமெய்ந் நிறுவிப்போ யும்ப ரானென்ருன். 548

இராமர் துயருறுதல்

நந்தா விளக்கனைய நாயகனே நானிலத்தோர்
தந்தாய் தனியறத்தின் ருயே தயாநிலையே
எந்தா யிகல்வேந்த ரேறே யிறந்தனையே
அந்தோ வினிவாய்மைக்காருளரே மற்றென்ருன். 549

சொற்பெற்ற நோன்பின் றுறையோ னருள்வேண்டி
நற்பெற்ற வேள்வி நவைநீங்க நீயியற்றி
எற்பெற்று நீபெற்ற தின்னுயிர்போய் நீங்கவோ
கொற்பெற்ற வெற்றிக் கொலைபெற்ற கூர்வேலோய்.

தேனடைந்த சோலைத் திருநாடு கைவிட்டுக்
கானடைந்தே னென்னத் தரியாது காவலநீ

வானடைந்தா யின்ன மிருந்தேனுன் வாழ்வுகந்தே
ஊனடைந்த தெவ்வருயி ரடைந்த வொள்வேலாய்.

வசிட்டர் தேற்றுதல்

துறத்தலு நல்லறத் துறையு மல்லது
புறத்தொரு துணையிலைப் பொருந்து மன்னுயிர்க்
கிறத்தலும் பிறத்தலு மியற்கை யென்பதை
மறத்தியோ மறைகளின் வரம்பு கண்டநீ. 552

பெறுவதன் முன்னுயிர் பிரிதல் காண்டியால்
மறுவறு கற்பினில் வையம் யாவையும்
அறுபதி னுயிர மாண்டு மாண்டவன்
இறுவது கண்டவற் கிரங்கல் வேண்டுமோ. 553

புண்ணிய நறுநெயிற் பொருவில் காலமாம்
திண்ணிய திரியினில் விதியென் றீயினில்
எண்ணிய விளக்கவை யிரண்டு மெஞ்சினுல்
அண்ணலே யவிவதற் கைய மாவதோ. 554

விண்ணுநீர் மொக்குளின் விளியும் யாக்கையை
எண்ணிநீ யழுங்குத லிழுதைப் பாலதால்
கண்ணினீ ருகுத்தலிற் கண்ட தில்லைபோய்
மண்ணுநீ ருகுத்தி தாமரைக் கையாலென்றுன். 555

பரதர் சீதையைக் கண்டு அழுதல்

எய்திய வேலையிற் றமிய ளெய்திய
தையலை நோக்கினன் சாலை நோக்கினன்
கைகளிற் கண்மலர் புடைத்துக் கான்மிசை
ஐயனப் பரதன்வீழ்ந் தரற்றி னுனரோ. 556

மன்னர் மாண்டதை யறிந்து சீதை துயருற்றனள்.

இராமர் தாயரைக் கண்டழுதல்

எந்தை யாண்டையா னியம்பு வீரெனு
வந்த தாயர்தம் வயங்கு சேவடிச்
சிந்தி நின்றனன் சேந்த கண்ணினீர்
முந்தை நான்முகத் தவற்கு முந்தையான். 557

இராமர் நீர்க்கடன் செய்தனர்.

பரதரை நோக்கிக் கூறுதல்.

வரதன் றுஞ்சினன் வைய மாணையால்
சரத நின்னதே மகுடந் தாங்கலாய்
விரத வேடநீ யென்கொல் வேண்டுவான்
பரத கூறெனப் பரிந்து கூறினன். 558

பரதர்

நோவ தாகவிவ் வுலகை நோய்செய்த
பாவ காரியிற் பிறந்த பாவியேன்
சாவ தோர்கிலேன் றவஞ்செய் வேனலேன்
யாவ னாகியிப் பழிநின் றேறுவேன். 559

உந்தை தீமையு முலகு ருதநோய்
தந்த தீவினைத் தாய்செய் தீமையும்
எந்தை நீங்கமீண் டரசு செய்கெனச்
சிந்தை யாவதுந் தெரியக் கூறினன். 560

இராமர்

பரவு கேள்வியும் பழுதின் ஞானமும்
விரவு சீலமும் வினையின் மேன்மையும்
உரவி லோய்தொழற் குரிய தேவரும்
குரவ ரேயெனப் பெரிது கோடியால் 561

அந்த நற்பெருங் குரவ ராரெனச்
சிந்தை தேர்வுறத் தெரிய நோக்கினல்
தந்தை தாயரென் றிவர்க டாமலால்
எந்தை கூறவே றெவரு மில்லையால். 562

தாய்வ ரங்கொளத் தந்தை யேவலால்
மேய நங்குலத் தரும மேவினேன்
நீவ ரங்கொளத் தவிர்த வீர்மையோ
ஆய்வ ரும்புலத் தறிவு மேவினாய். 563

இம்மை பொய்யுரைத் திவறி யெந்தையார்
அம்மை வெம்மைசேர் நரக மாளயான்
கொம்மை வெம்முலைக் குவையின் வைகிவாழ்
செம்மை சேர்நிலத் தரசு செய்வெனோ. 564

வரனி லுந்தைசொன் மரபி னலுடைத்
தரணி நின்னதென் றியைந்த தன்மையால்

உரனி னீபிறந் துரிமை யாதலால்
அரசு நின்னதே யாள்க வென்னவே. 565

பரதர்

முன்னர் வந்துதித் துலக மூன்றினும்
நின்னை யொப்பிலா நீபி றந்தபார்
என்ன தாகில்யா னின்று தந்தனென்
மன்ன போந்துநீ மகுடஞ் சூடென்று. 566

இராமர்

மன்னவ னிருக்க வேயு மணியணி மகுடஞ் சூடு
கென்னயா னியைந்த தன்று னேயது மறுக்க வஞ்சி
அன்னது நினைந்து நீயென் றுணையை மறுக்கலாமோ
சொன்னது செய்தி யைய துயருழந் தயரலென்றான். 567

வசிட்டர் கூறுதல்

என்றலால் யானுனை யெடுத்து விஞ்சைகள்
ஒன்றலா தனபல வுதவிற் றுண்மையால்
அன்றெனு தின்றென தானை யையநீ
நன்றுபோந் தளியுனக் குரிய நாடென்றான். 568

இராமர்

சான்றவ ராகதன் குரவ ராகதாய்
போன்றவ ராகமெய்ப் புதல்வ ராகதான்
தேன்றரு மலருளான் சிறுவ செய்வெனென்
றேன்றபின் னவ்வுரை மறுக்கு மீட்டதோ. 569

தாய்பணித் துவந்தன தந்தை செய்கென
ஏயவெப் பொருள்களு மிறைஞ்சி மேற்கொளாத்
தீயவப் புலையனிற் செய்கை தேர்கிலா
நாயெனத் திரிவது நல்ல தல்லதோ. 570

அரசு ஆள்பவராளுக. நான் உடன் வருவேன் என்று பரதர் கூறினார். அமரர் அசரீரியாக அறைதல்.

ஏத்தரும் பெருங்குணத் திராம னிவ்வழி
போத்தருந் தாதைசொற் புரக்கும் பூட்சியான்
ஆத்தவாண் டேழிரே டேழு மங்கிலம்
காத்தலுன் கடனிவை கடமை யென்றனர். 571

இராமர்

வானவ ருரைத்தலு மறுக்கற் பாலதன்
றியானுனை யிரந்தன னினியென் னுணையால்
ஆனதோ ரமைதியி னளித்தி பாரெனத்
தானவன் றுணைமலர்த் தடக்கை பற்றினன். 572

பரதர்

ஆமெனி லேழிரண் டாண்டி லையநீ
நாமநீர் நெடுநகர் நண்ணி நானிலம்
கோமுறை புரிகிலை யென்னிற் கூரெரிச்
சாமிது சரதநின் னுணை சாற்றினேன். 573

பாதுகை பெறுதல்

விம்மினன் பரதனும் வேறு செய்வதொன்
றின்மையி னரிதென வெண்ணி யேங்குவான்
செம்மையின் றிருவடித் தலந்தந் தீகென
எம்மையுந் தருவன விரண்டு நல்கினன். 574

அடித்தல மிரண்டையு மழுத கண்ணினன்
முடித்தல மிவையென முறையிற் சூடினன்
படித்தலத் திறைஞ்சினன் பரதன் போயினன்
பொடித்தலமிலங்குறுபொலங்கொண்மேனியான். 575

எல்லோருந் திரும்பிச் சென்றனர்.

பாதுகைக்கு முடி சூட்டுதல்

நந்தியம் பதியிடை நாதன் பாதுகம்
செந்தனிக் கோன்முறை செலுத்தச் சிந்தையான்
இந்தியங் களையவித் திருந்தன் மேயினன்
அந்தியும் பகலுநீ ரருத கண்ணினன். 576

இரவி குலத்து ராகவன் மருவி யெதிர்த்து வீழ்கடு
ரணமுக சுத்த வீரிய குணமான
இளையவ னுக்கு நீள்முடி அரசது பெற்று வாழ்வுற
இதமொ டளித்த ராகவன் மருகோனே
—(கதியை) திருப்புகழ்.

அயோத்தியா காண்டம் முற்றிற்று.

ஆரணிய காண்டம்

விராதன் வதைப் படலம்

காப்பு.

பேதி யாதுநிமிர் பேதவுருவம் பிறழ்கிலா
ஓதி யோதியுண ருந்தொறுமு ணர்ச்சியுதவும்
வேதம் வேதியர்வி ரிஞ்சன்முத லோர்தெரிகிலா
ஆதி தேவரவ ரெம்மறி வினுக்கறிவரோ. 577

இராமரும் சீதாதேவியும் இலட்சுமணரும் அத்திரிமுனிவர்
ஆச்சிரமம் அடைதல்

திக்கு றுஞ்செறிப ரந்தெரிய நின்ற திறள்பொற்
கைக்கு றுங்கண்மலை போற்குமரர் காமமுதலா
முக்கு றும்பறவெ ரிந்தவினை வான்முனிவனைப்
புக்கி றைஞ்சின ரருந்தவனு வந்துபுகலும். 578

குமரர் நீரிவண டைந்துதவு கொள்கையெளிதோ
அமரர் யாவரொடு மெவ்வுலகும் வந்தவளவே
எமரின் யார்தவமு யன்றவர்க ளென்றுருகினன்
தமரெ லாம்வரவு கந்தனைய தானமுனிவன். 579

அநசூயாதேவி சீதைக்கு கற்பு நெறிகளையோதி ஆடையும் அணிகலமும் பூட்டி, அமையம் வருமாயின் பசியாதிருக்க வரமும் அளித்தாள்.

அன்ன மாமுனியொ டன்றவணு றைந்தவனரும்
பன்னி கற்பினந சூயைபணி யாலணிகலன்
துன்னு தூசினொடு சந்திவை சுமந்தசனகன்
பொன்னொ டேகியுயர் தண்டகவ னம்புகுதலும். 580

விராதனது தன்மை

எட்டொ டெட்டுமத மாகரியி ரட்டியரிமா
வட்ட வெங்கண்வரை யாளிபதி னாறுவகையில்
கிட்ட விட்டிடைகி டந்தனசெ றிந்தவொருகை
தொட்ட முத்தலைய யிற்றொகைமி டற்கழுவொடே. 581

புண்டு ளங்கியன கண்கள்கனல் பொங்கமழைசூழ்
விண்டு ளங்கிடவி லங்கல்குலுங்க வெயிலும்
கண்டு ளங்கதிர்கு றைந்திடநெ டுங்கடல்சுலாம்
மண்டு ளங்கவய வந்தகன்ம னந்தளரவே. 582

படையொ டாடவர்கள் பாய்புரவி மால்களிறுதேர்
நடைய வாளரிகள் கோளுழுவை நண்ணியவெலாம்
அடைய வாரியர வாலசைய நேகவிதவந்
தொடைய மாலைதுயல் வந்துலவு தோள்பொலியவே. 583

சீதையைக் கவர்தல்

நில்லு நில்லுமென வந்துநிண முண்ட நெடுவெண்
பல்லும் வல்லெயிறு மின்னுபகு வாய்முழைதிறந்
தல்லி புல்லுமல ரன்னமனை யாளையொருகைச்
சொல்லு மெல்லையின் முகந்துயர்வி சும்புதொடர. 584

விராதனது வீரவுரை

ஆதி நான்முகன்வ ரத்தினென தாவியகலேன்
ஏதி யாவதுவு மின்றியுல கியாவுமிகலில்
சாதி யாதனவு மில்லையுயிர் தந்தனனடா
போதி மாதிவளை யுந்தியினி தென்றுபுகல. 585

சீதையை விடுத்துப் போர் புரிதல்

வட்ட மிட்டகிரி யற்றுகவ யங்குவயிரக்
கட்ட மைந்தகதிர் வாளியெதி ரேகடவலால்
விட்ட விட்டமலை மீளவவன் மெய்யில் விசையால்
பட்ட பட்டவிட மெங்குமுட லூறுபடலும். 586

இராமர் கணைகள் அவன் உடம்பில் தைத்து நின்றன.

முட்பன்றிபோல் உதறினன். சிறிது மூர்ச்சித்து நின்றான்.

இராமர் கூறுதல்

மொய்த்த முரட்டனது டற்றலைதொ ளைப்பமுடுகிக்
கைத்த லத்தினி மிரக்கடிது கன்றிவிசிறும்
மெய்த்த மெய்ப்பெரிய கேழலென வெங்கும்விசையில்
தைத்த வக்கணைதெ றிப்பமெய்சி லிர்த்துதறவே. 587

இராமரும் இலட்சுமணரும் விராதன் தோள்மீது ஏறினார்கள்.

முந்து வான்முகடு றக்கடிது முட்டிமுடுகிச்
சிந்து சோரியொடு சாரிகைதி ரிந்தனனரோ
வந்து மேருவினை நாள்தொறும்வ லஞ்செய் துழல்வோர்
இந்து சூரியரை யொத்திருவ ரும்பொலியவே. 588

சீதையழுதல்

பின்னே யேதுமுத வுந்துணைபெ ருளுரைபெருள்
மின்னே யேயிடைநு டங்கிடவி ரைந்துதொடர்வாள்
அன்னே யேயனைய வன்பிறை வோர்கடமைவிட்
டென்னே யேநுகர்தி யென்றன ளெழுந்துவிழுவாள். 589

அழுது வாய்குழறி யாருயிரமுங்கி யலையா
எழுது பாவையனையாள் நிலையுணர்ந் திளையவன்
தொழுது தேவிதுயர்கூர விளையாடல் தொழிலோ
பழுது வாழியென வூழிமுதல்வன் பகர்வுறும். 590

தோள்களைத் துணித்தனர்.

தோளி ரண்டும்வடி வாள்கொடுது ணித்து விசையால்
மீளி மொய்ம்பினர்கு தித்தலும்வெ குண்டுபுருவத்
தேளி ரண்டுநெறி யச்சினவு செங்கணரவக்
கோளி ரண்டுசுட ருந்தொடர்வ திற்குறுகலும். 591

இளையோனைப் பூமியில் குழிதோண்டச் செய்தனர் இராமர்.
அவனைத் திருவடியால் உதைத்தனர்.
அவன் பொன்மேனி பெற்றுத் துதித்தல்.

வேதங்க ளறைகின்ற வுலகெங்கும் விரிந்தனவுன்
பாதங்க ளிவையென்னிற் படிவங்க ளெப்படியோ
ஓதங்கொள் கடலன்றி யொன்றினோ டொன்றொவ்வாப்
பூதங்கள் தொறுமுறைந்தாலவையுன்னைப்பொறுக்குமோ.

கடுத்தகராங் கதுவநிமிர் கையெடுத்து மெய்கலங்கி
உடுத்ததிசை யனைத்தினுஞ்சென் றொலிகொள்ள வுறுதுயரால்
அடுத்தபெருந் தனிமூலத் தரும்பரமே பரமேயென்
றெடுத்தொருவா ரணமழைப்ப நீயோவன் றேனென்றாய்.

தாய்தன்னை யறியாத கன்றில்லை தன்கன்றை
யாயுமறி யும்முலகின் றாயாகி னைய
நீயறிதி யெப்பொருளு மவையுன்னை நிலையறியா
மாயையிது வென்கொலோ வாராதே வரவல்லாய். 594

ஒப்பிறையும் பெறலரிய வொருவாமுன் னுவந்துறையும்
அப்புறையு டுறந்தடியே னருந்தவத்தா லணுகுறலால்
இப்பிறவிக் கடல்கடந்தே னினிப்பிறவே னிருவினையும்
துப்புறழு நீர்த்தசுடர்த் திருவடியாற் றுடைத்தாய்நீ. 595

இராமர் அவன் வரலாறு யாது? என, அவன் கூறுதல்.

இற்றெலா மியம்பினன்
நிற்றலோடு நீயிவ்வா
றுற்றவா றுணர்த்தென
வெற்றியான் விளம்பினன். 596

கள்ளமாய வாழ்வெலாம்
விள்ளஞானம் வீசுதாள்
வள்ளல்வாழி கேளென
உள்ளவா றுணர்த்தினன். 597

இம்பருற்றி தெய்தினேன்
வெம்புவிற்கை வீரபேர்
தும்புருத்த னதன்சூழ்
அம்பரத்து ளேனரோ. 598

ஆடரம்பை நீடரங்
கூடுநின்று பாடலால்
ஊடுவந்து கூடவிக்
கூடுவந்து கூடினேன். 599

கரக்கவந்த காமநோய்
துரக்கவந்த தோமினல்
இரக்கமின்றி யேவினன்
அரக்கன்மைந்த னாயினேன். 600

வலஞ்செய்திந்த வானெலாம்
நலிஞ்சுதின்ன நாமவேல்
பொலிஞ்சவென்றி பூணுமக்
கிலிஞ்சன் மைந்த னாயினேன். 601

தெறுத்துவந்த தீதெலாம்
அறுத்தவுன்னை யாதனேன்
ஒறுத்ததன்மை யூழியாய்
பொறுத்தியென்று போயினன். 602

சரபங்கர் பிறப்பு நீங்குபடலம்

சரபங்கருடைய தவச்சாலை வந்து இந்திரன்
அவரை யழைத்தல்

நின்னு லியனீ திநெடுந் தவமின்
றென்னு னும்விளம் பரிதென் றுணர்வான்

அந்நான் முகனின் னையழைத் தனனல்
பொன்னர் சடைமா தவபோ துதியால். 603

சரபங்கர் மறுத்தல்

சொற்பொங் குபெரும் புகழோய் தொழின்மாய்
சிற்பங் களின்வீ வனசேர் குவெனே
அற்பங் கருதே னெனருந் தவமோ
கற்பம் பலசென் றதுகா ணுதியால். 604

இராமர் அங்குவருதல்.

கொம்பத் தனநா லொளிர்கோள் வயிரக்
கம்பக் கரிநின் றதுகண் டனமால்
இம்பர்த் தலைமா தவர்பா லிவனும்
உம்பர்க் கரசெய் தினனென் றுணரா. 605

மானே யனையா ளொடுமைந் தனையும்
பூனேர் பொழிலின் புறனே னிறுவா
ஆனே றெனவா ளரியே றிதெனத்
தானே யவ்வகன் பொழில்சா ருதலும். 606

சரபங்கர் துதித்தல்

மேவாதவ ரில்லை மேவினரு மில்லை
வெளியோடிரு ளில்லை மேல்கீழு மில்லை
மூவாமை யில்லை மூத்தமையு மில்லை
முதலிடையோ டறில்லை முன்னொடு பின்னில்லை
தேவாவிங் கிவ்வோநீ சென்றநிலை யென்ருற்
சிலையேந்தி வந்தெம்மைச் சேவடிக ணேவக்
காவாதொழி யிற்பழி பெரிதோ வன்றேற்
கருங்கடலிற் கண்வளராய் கைம்மாறுமுண்டோ. 607

ஏழையு மிளவலும் வருகென வினிதா
வாழிய வவரொடும் வந்தனன் மகிழ்வால்
ஊழியின் முதன்முனி யுறையுளை யணுகா
ஆழியில் விழிதுயி லவனென மகிழ்வான். 608

ஆயிடை யறிஞனு மவனெதி ரழுவத்
தீயினை நுழைவதொர் தெளிவினை யுடையான்
நீவிடை தருகென நிறுவின னெறியால்
காயெரி வரன்முறை கடிதினி லிடுவான். 609

வரிசிலை யுழவனு மறையுழ வனைநீ
புரிதொழி லெனையது புகலுதி யெனலும்
திருமகள் தலைவசெய் திருவினை யுறயான்
எரிபுக நினைகுவெ னருளென விறைவன். 610

யான்வரு மமைதியி னிதுசெய லெவனோ
மான்வரு தனியுரி மார்பினை யெனலும்
மீன்வரு கொடியவன் விறலடு மறவோன்
ஊன்வரு முவகையி னுரைநனி புரிவான். 611

ஆயிர முகமுள தவமயர் குவென்யான்
நீயிவண் வருதிகொ லெனுநிலை யுடையேன்
போயின விருவினை புகலுறு விதியால்
மேயினை யினியொரு வினையிலை விறலோய். 612

இந்திர னருளின னிறுதிசெய் பகலா
வந்தனன் மருவுதி மலரய னுலகம்
தந்தன னெனவது சாரலெ னுரவோய்
அந்தமி லுயர்பத மடைதலை முயல்வேன். 613

தேவரு முனிவரு முறுவது தெரிவோர்
மாவரு நறுவிரை மலரயன் முதலோர்
ஏவரு மறிவினி லிருவினை யொருவிப்
போவது கருதுமவ் வருநெறி புக்கான். 614

அகத்தியப் படலம்

தண்டக வன முனிவர்கள் வந்து அபயம் புகுதல்

பண்டயன் பயந்தருள் பால கில்லரும்
முண்டரு மோனரு முதலி னோர்களத்
தண்டக வனத்துறை தவத்து ளோர்கடாம்
கண்டன ரிராமனைக் களிக்குஞ் சிந்தையார். 615

வேண்டின வேண்டினர்க் களிக்கு மெய்த்தவம்
பூண்டுள ராயினும் பொறையி னாற்றலால்
மூண்டெழு வெகுளியை முதலி னீங்கினர்
ஆண்டுறை யரக்கரா லலைப்புண் டாரரோ. 616

வல்லியம் பலதிரி வனத்து மானென
எல்லியும் பகலுநொந் திரங்கி யாற்றலெம்
சொல்லிய வறநெறித் துறையு நீங்கினேம்
வில்லியுன் மொய்ம்பினுய் வீடு காண்குமோ. 617

மாதவத் தொழுகலெ மறைகள் யாவையும்
ஓதலெ மோதுவார்க் குதவ லாற்றலெம்
மூஎெரி வளர்க்கிலெ முறையி னீங்கினேம்
ஆதலி னந்தண ரேயு மாகிலேம். 618

உருளுடை நேமியா லுலகை யோம்பிய
பொருளுடை மன்னவன் புதல்வ போக்கிலா
இருளுடை வைகலே மிரவி தோன்றினுய்
அருளுடை வீரநின் னபயம் யாமென்றூர். 619

இராமர் ஆறுதலுரை

வேந்தன் வீயவும் யாய்வர மேவவும்
ஏந்த லெம்பி வருந்தவு மென்னகர்
மாந்தர் வன்றுயர் கூரவும் யான்வனம்
போந்த தென்னுடைப் புண்ணியத் தாலென்றான். 620

ஆவுக் காயினு மந்தணர்க் காயினும்
யாவர்க் காயினு மெளியவர்க் காயினும்
சாவப் பெற்றவ ரேதகை வானுறை
தேவர்க் குந்தொழுந் தேவர்க ளாகுவார். 621

தண்டகவனத்தில் பத்தாண்டுறைதல்

ஐந்து மைந்து மமைதியி ணுண்டவண்
மைந்தர் தீதிலர் வைகினர் மாதவர்
சிந்தை யெண்ணி யகத்தியற் சேர்கென
இந்து நன்னுதல் தன்னொடு மேகினர். 622

அகத்தியரை நாடியடைதல்.

இடையில் சுதீக்கணரைக் கண்டு அவரால்
அகத்தியர் உறைவிடம் அறிந்தனர்.

அகத்தியர் பெருமை

ஆண்டகைய ரவ்வயி னடைந்தமை யறிந்தான்
ஈண்டுவகை வேலைதுணை யேழுலகு மெய்த
மாண்டவர தன்சரண் வழங்கவெதிர் வந்தான்
நீண்டதமி ழாலுலகை நேமியி னளந்தான். 623

தூயகட னீரடிசி லுண்டது தூரந்தான்
ஆயவத லாலமரு மெய்யுடைய வன்னுன்
மாயவினை வாளவுணன் மாயவவன் வன்மைக்
காயமினி துண்டுலகி னுரிடர் களைந்தான். 624

யோகமுறு பேருயிர்கள் தாமுலைவு றுமல்
ஏகுநெறி யாதெனமி தித்தடியி னேறி
மேகநெடு மாலைதவழ் விந்தையெனும் விண்டோய்
நாகமது நாகமுற நாகமென நின்றான். 625

உழக்குமறை நாலினு முயர்ந்துலக மோதும்
வழக்கினு மதிக்கவியி னும்மரபி னுடி
நிழற்பொலி கணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கண்
தழற்புரை சுடர்க்கடவுள் தந்ததமிழ் தந்தான். 626

அகத்தியர் சந்திப்பு

கண்டன னிராமனை வரக்கருணை கூரப்
புண்டரிக வாணயன நீர்பொழிய நின்றான்
எண்டிசையு மேழுலகு மெவ்வுயிரு முய்யக்
குண்டிகையி னிற்பொருவில் காவிரி கொணர்ந்தான். 627

நின்றவனை வந்தநெடி யோனடி பணிந்தான்
அன்றவனு மன்பொடுத ழீஇயழுத கண்ணன்
நன்றுவர வென்றுபல நல்லுரை பகர்ந்தான்
என்றுமுள தென்றமிழி யம்பியிசை கொண்டான். 628

பொருந்தவ மலன்பொழி லகத்தினிது புக்கான்
விருந்தவ னமைத்தபின் விரும்பினன் விரும்பி
இருந்தவ மிழைத்தவென தில்லிடையில் வந்தென்
அருந்தவ முடித்தனை யருட்கரச வென்றான். 629

இராமர் கூறுதல்

என்றமுனி யைத்தொழுதி ராமனிமை யோரும்
நின்றதவ முற்றுநெடி யோரினெடி யோரும்
உன்றனருள் பெற்றிலர்க ளுன்னருள் சுமந்தேன்
வென்றனெ னனைத்துலகு மேலினிதெ னென்றான். 630

அகத்தியர்

வாழுமறை வாழுமனு நீதியறம் வாழும்
தாழுமிமை யோருயர்வர் தானவர்கள் தாழ்வார்
ஆழியுழ வன்புதல்வ வையமிலை மெய்யே
ஏழுலகும் வாழுமினி யிங்குறைதி யென்றான். 631

விழுமியது சொற்றனையிவ் வில்லி திவண்மேனாள்
முழுமுதல்வன் வைத்துளது மூவுலகும் யானும்

வழிபட விருப்பதிது தன்னைவடி வாளிக்
குழுவழுவில் புட்டிலொடு கோடியென நல்கி. 632

இப்புவன முற்றுமொரு தட்டினிடை யிட்டால்
ஒப்புவர விற்றெறன வுரைப்பரிய வாளும்
வெப்புருவு பெற்றவரன் மேருவரை வில்லா
முப்புர மெரித்ததனி மொய்கணையு நல்கா. 633

இங்ஙனமேயிரும் என, இராமர் தெற்கே செல்ல விரும்புகின்றேம் என்றார். பஞ்சவடிக்குப் போகுமாறு அகத்தியர் கட்டளையிட்டார். அவ்வண்ணமே புறப்பட்டுப் போகின்றார்கள்.

சடாயுகாண் படலம்

சடாயு சந்திப்பு

நடந்தனர் காவதம் பலவு நன்னதி
கிடந்தன நின்றன கிரிகள் கேண்மையின்
தொடர்ந்தன துவன்றின சூழல் யாவையும்
கடந்தனர் கண்டனர் கழுகின் வேந்தையே. 634

உருக்கிய சுவணமொத் துதயத் துச்சிசேர்
அருக்கனவ் வகலிடத் தலங்கு திக்கெலாம்
தெரிப்புறு செறிசுடர்ச் சிகையி னற்சிறை
விரித்திருந் தனனென விளங்கு வான்றனை. 635

இறுதியைத் தன்வயி னியற்ற வெய்தினன்
அறிவிலி யரக்கனு மல்ல னமெனின்
எறுழ்வலிக் கலுழனே யென்ன உன்னியச்
செறிகழல் வீரருஞ் செயிர்த்து நோக்கினர். 636

சடாயு

காமனென் பவனையுங் கண்ணி னேக்கினேன்
தாமரைச் செங்கணித் தடக்கை வீரர்கள்
பூமரு பொலன்கழற் பொடியி னேடுமொப்
பாமென வறிகில னர்கொ லாமிவர். 637

கருமலை செம்மலை யனைய காட்சியர்
திருமகிழ் மார்பினர் செங்கண் வீரர்தாம்
அருமைசெய் குணத்தினென் றுணைவ னுழியான்
ஒருவனை யிருவரு மொத்துளாரரோ. 638

சடாயு, 'நீவிர் யாவர்?' என வினவினர்.

இராமர்

வினவிய காலையின் மெய்ம்மை யல்லது
புனைமலர்த் தாரவர் புகல்கி லாமையால்
கனைகட னெடுநிலங் காவ லாழியான்
வனைகழற் றயரதன் மைந்தர் யாமென்றார். 639

சடாயு

உரைத்தலும் பொங்கிய வுவகை வேலையன்
தரைத்தலை யிழிந்தவர்த் தழுவுங் காதலன்
விரைத்தடர்ந் தாரினிர் வேந்தர் வேந்தன்றன்
வரைத்தடந் தோளினை வலிய வோவென்றான். 640

இராமர்

மறக்கமுற் றுதன வாய்மை காத்தவன்
துறக்கமுற் றானென முன்னஞ் சொல்லலும்
இறக்கமுற் றானென வேக்க மெய்தினான்
உறக்கமுற் றானென வுணர்வு நீங்கினான். 641

சடாயுவின் துயர்

பரவலருங் கொடைக்குநின்றன் பணிக்குடைக்கும்
பொறைக்குநெடும் பண்பு தோற்ற
கரவலருங் கற்பகமு முடுபதியுங்
கடலிடமுங் களித்து வாழப்
புரவலர்தம் புரவலனே பொய்ப்பகையே
மெய்க்கணியே புகழின் வாழ்வே
இரவலரு நல்லறமும் யானுமினி
யென்படநீத் தேகி னாயே. 642

தயிருடைக்கு மத்தென்ன வுலகைநலி
சம்பரனைத் தடிந்த வந்நாள்
அயிர்கிடக்குங் கடல்வலயத் தயலறிய
நீயுடல்தா னவியென்று
செயிர்கிடத்தல் செய்யாத திருமணத்தாய்
செப்பினாய் திறம்பா நின்சொல்
உயிர்கிடக்க வுடலைவிசும் பேற்றினா
ருணர்விறந்த கூற்றி னாரே. 643

சடாயு தனது வரலாறு கூறுதல்.

தக்கனுக்கு ஐம்பது புதல்வியர். பதின்மூன்று புதல்வியரைக் காசிபருக்கு அளித்தான்.

பத்துப் புதல்வியரைத் தருமதேவனுக்குத் தந்தான். இருபத்துமூன்று புதல்வியரைச் சந்திரனுக் களித்தான்.

காசிபர் மனைவியருள் அதிதி முப்பத்து முக்கோடி தேவர்களை யீன்றாள். அறுபத்தாறுகோடி அசுரர்களைத் திதி பெற்றாள்.

தனு என்பாள் தானவரைப் பெற்றாள். விநதை என்பாள் அருணனையும் கருடனையும் பெற்றாள். கத்துரு என்பாள் பாம்புகளைப் பயந்தாள்.

நான் அருணன் மகன்; என்பேர் சடாயு; என் தமயன் **சம்பாதி**. என்னுடைய தம்பியென்று தயரதனை நட்பு கொண்டேன்.

மருவினிய குணத்தவரை யிருசிறகா
 லுறத்தழுவி மக்காள் நீரே
உரியகடன் வினையேற்கு முதவுவீ
 ருடலிரண்டுக் குயிரொன் றானான்
பிரியவுந்தான் பிரியாதே யினிதிருக்கு
 முடற்பொறையாம் பீழை பாரா
தெரியதனி னின்றேபுக் கிறவேனே
 லித்துயர மறவே னென்றான். 644

இராமர் சடாயுவை மாளவேண்டா மென்று தடுத்தல்.

உய்வி டத்துத வற்குரி யானுந்தன்
மெய்வி டக்கரு தாதுவிண் ணேறினான்
இவ்வி டத்தினி லெம்பெரு மானனைமைக்
கைவி டிற்பினை யார்களை கண்ணுளார். 645

சடாயு

வேந்தன் விண்ணடைந் தானெனின் வீரர்நீர்
ஏந்து ஞால மினிதளி யாதிவட்
போந்த தென்னை புகுந்தவென் புந்திபோய்க்
காந்து கின்றது கட்டுரை யீரென்றான். 646

தேவர் தானவர் திண்டிற லைகர்வே
றேவ ராக இடரிழைத் தாரெனின்
பூவ ராவு பொலங்கறை வேலினீர்
சாவ ராக்கித் தருவெ னரசென்றான். 647

நிகழ்ந்ததை இலட்சுமணர் கூறினர்.

உந்தை யுண்மைய ஞக்கியுன் சிற்றவை
தந்த சொல்லைத் தலைக்கொண்டு தாரணி
வந்த தம்பிக் குதவிய வள்ளலே
எந்தை வல்லதி யாவர்வல் லாரென. 648

அல்லித் தாமரைக் கண்ணனை யன்புறப்
புல்லி மோந்து பொழிந்தகண் ணீரினன்
வல்லை மைந்தவம் மன்னையு மென்னையும்
எல்லை யில்புக ழெய்துவித் தாயென்ருன். 649

பின்ன ரும்மப் பெரியவன் பெய்வளை
அன்ன மன்ன வணங்கினை நோக்கினன்
மன்னர் மன்னவன் மைந்தவிவ் வாணுதல்
இன்ன ளென்ன இயம்புதி யாலென்ருன். 650

அல்லி றுத்தன தாடகை யாதியா
வில்லு றுத்த திடையென மேலைநாள்
புல்லி றுத்ததி யாவும் புகன்றுதன்
சொல்லி றுத்தனன் ருேன்றல்பின் ருேன்றினன். 651

'இங்ஙனமே யிருங்கள். உம்மை' நான் காப்பேன்' என்றார் சடாயு; 'அகத்தியர் உரைப்படி பஞ்சவடி போகின்றோம்' என்றார் ராமர். 'நல்லது' என்று சடாயு அவர்கட்கு நிழல்கொடுத்துப் பறந்து வழிகாட்டிப் பஞ்சவடியிற் சேர்த்தார்.

சூர்ப்பணகைப் படலம்

புவியினுக் கணியா யான்ற பொருள்தந்து புலத்திற் ருகி
அவியகத் துறைகள்தாங்கி யைந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென் ருெழுக்கமுந் தழுவிச்
சான்ருேர்
கவியெனக் கிடந்த கோதா விரியினை வீரர் கண்டார். 652

எழுவுறு காத லாலிங் கிரைத்திரைத் தேங்கி யேங்கிப்
பழுவநாட் குவளைச் செவ்விக் கண்பனி பரந்து சோர
வழுவிலா வாய்மை மைந்தர் வனத்துறை வருத்த நோக்கி
அழுவது மொத்த தாலவ் வலங்குநீ ராறு மன்னே. 653

அனையதோர் தன்மை யாலவ் வருவிநீ ராற்றின் பாங்கர்ப்
பனிதரு படிவப் பஞ்ச வடியெனும் பருவச் சோலைத்

தனியிட மதனை நண்ணித் தம்பியாற் சமைக்கப் பட்ட
இனியபூஞ் சாலை யெய்தி யிருந்தன னிராம னிப்பால். 654

சூர்ப்பணகையின் தன்மை

நீலமா மணிநிற நிருதர் வேந்தனை
மூலநா சம்பெற முடிக்கு மொய்ம்பினள்
மேலைநா ளுயிரொடும் பிறந்து தான்விளை
காலமோர்ந் துடனுறை கடிய நோயனள். 655

செம்பரா கம்படச் செறிந்த கூந்தலாள்
வெம்பரா குத்தனை விளைந்த மெய்யினள்
உம்பரா னவர்க்குமொண் டவர்க்கு மோதநீர்
இம்பரா னவர்க்குமோர் இறுதி யீட்டுவாள். 656

எண்டகு மிமையவ ரரக்க ரெங்கண்மேல்
விண்டனர் விலக்குதி யென்ன மேலைநாள்
அண்டசத் தருந்துயில் துறந்த வையனைக்
கண்டனள் தன்கிளைக் கிறுதி காட்டுவாள். 657

சூர்ப்பணகை இராமரைக் காணுதல்

சிந்தையி னுறைபவற் குருவந் தீர்ந்ததால்
இந்திரற் காயிர நயன மீசற்கு
முந்திய மலர்க்கணோர் மூன்று நான்குதோள்
உந்தியி னுலகளித் தாற்கென் றுன்னுவாள். 658

கற்றையஞ் சடையவன் கண்ணிற் காய்தலால்
இற்றவ னன்றுதொட் டின்று காறுந்தான்
நற்றவ மியற்றியவ் வநங்க னல்லுருப்
பெற்றன னாமெனப் பெயர்த்து மெண்ணுவாள். 659

எயிறுடை யரக்கியெவ் வுயிரு மிட்டதோர்
வயிறுடை யாளென மறுக்கு மாதலால்
குயில்தொடர் குதலையோர் கொவ்வைச் செவ்விவாய்
மயில்தொட ரியலியாய் மருவல் நன்றெனா. 660

அவள் மாயையால் அரம்பைபோல்
வடிவுகொண்டு வருகின்றாள்

பஞ்சியொளிர் விஞ்சுகுளிர்ப் பல்லவம னுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி

அஞ்சொலிள மஞ்ஞையென வன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள். 661

அவள் வணங்கி கண்வலை வீசி நின்றாள்.

இராமர் வினா

தீதில்வர வாகதிரு நின்வரவு சேயோய்
போதவுள தெம்முழையோர் புண்ணியம தன்றோ
ஏதுபதி யேதுபெயர் யாவருற வென்றான்
வேதமுதல் பேதையவள் தன்னிலை விரிப்பாள். 662

பூவிலோன்புதல்வன்மைந்தன் புதல்விமுப்புரங்கள்செற்ற
சேவலோன்றுணைவனான செங்கையோன் றங்கைதிக்கின்
மாவெலாந்தொலைத்துவெள்ளி மலையெடுத்துலக மூன்றும்
காவலோன் பின்னை காமவல்லியாங் கன்னியென்றாள். 663

இராமர் 'அசுர வடிவம் இல்லையே?' என, 'தவத்தால் இவ்வுரு பெற்றேன்' என்றாள். இராமர், 'துணையின்றி தனித்து வரக் காரணம் யாது?' என்றார். அவள், 'உன்னை விரும்பி வந்தேன்' என்றாள்.

இராமர்

நிந்தனை யரக்கி நீதி நிலையிலாள் வினைமற் றெண்ணி
வந்தன ளாகு மென்றே வள்ளலு மனத்துட் கொண்டான்
சுந்தரி மரபிற் கொத்த தொன்மையின் றுணிவிற் றன்றால்
அந்தணர் பாவை நீயா னரசரில் வந்தே னென்றான். 664

என் தாய் கேகசி, ஆகவே என்னை மணக்கலாம் என்றாள்.

ஒருவனே வுலக மூன்றிற் கோங்கொரு தலைவ னூங்கில்
ஒருவனே குபேர னின்னே டுடன்பிறந் தவர்க ளன்னார்
தருவரேற் கோடு மன்றேற் றமியையவே றிடத்துச் சார
வெருவுவெ னங்கை யென்றாள் வேதத்தி னறிவை
வென்றான். 665

"காந்தருவ மணத்தால் மணக்கலாம்; என்னை மணந்தால் **என்** தமயன் மிகவும் இனியனாவான்" என்றாள்.

இராமர்

நிருதர்த மருளும் பெற்றே னின்னலம் பெற்றே னின்னே
டொருவருஞ் செல்வத் தியாண்டு முறையவும் பெற்றே
னென்றே

திருநகர் தீர்ந்த பின்னர்ச் செய்தவம் பயந்த தென்ன
வரிசிலை வடித்த தோளான் வாளெயி றிலங்க நக்கான்.

அங்கு ஜானகி வருதல்

பொருதிறத் தானை நோக்கிப் பூவையை நோக்கி நின்றாள்
கருதமற் றினிவே றில்லை கமலத்துக் கடவுள் தானே
ஒருதிறத் துணர நோக்கி யுருவினுக் குலக மூன்றின்
இருதிறத் தார்க்குஞ் செய்த வரம்பிவரிருவரென்றாள். 667

பொன்னைப்போற் பொருவின் மேனிப்
பூவைப்பூ வண்ணத் தானிம்
மின்னைப்போ லிடையா ளோடு
மேவுமெய் யுடைய னல்லன்
தன்னைப்போற் றகையோ ரில்லாத்
தளிரைப்போ லடியி னாளும்
என்னைப்போ லிடையே வந்தா
ளிகழ்விப்பே ளிவளை யென்ன. 668

வருமிவண் மாயம் வல்ல வஞ்சனை யரக்கி நெஞ்சம்
தெரிவிலள் தேறுந் தன்மை சீரியோய் செயலிற் றன்றால்
உருவிது மெய்ய தன்றா லூனுகர் வாழ்க்கை யாளை
வெருவினெ னெய்தி டாமல் விலக்குதி வீர வென்றாள்.

ஜானகி இராமரைத் தழுவிக் கொண்டாள்.

இராமர்

வளையெயிற் றவர்க ளோடு வரும்வினை யாட்டென் றாலும்
விளைவன தீமை யேயா மென்பதை யுணர்ந்து வீரன்
உளைவன வியற்ற லொல்லை யுன்னிலை யுணரு மாயின்
இளையவன் முனியு நங்கை யேகுதி விரைவி னென்றான்.

சூர்ப்பணகை

பொற்புடை யரக்கி பூவிற் புனலினிற் பொருப்பில் வாழும்
அற்புடை யுள்ளத் தாரு மங்கனு மமரர் மற்றும்
எற்பெறத் தவஞ்செய் கின்றா ரென்னைநீ யிகழ்வ தென்னே
நற்பொறை நெஞ்சி னில்லாக் கள்வியை நச்சி யென்றாள்.

இராமர் சீதையுடன் தவச்சாலை சென்றார்.

தன் உறைவிடஞ் சென்ற சூர்ப்பணகையின் துயர்

தாட கைக்கொடி யாடட மார்பிடை
ஆட வர்க்கர சன்னயி லம்புபோல்

பாட வத்தொழின் மன்மதன் பாய்கணை
ஓட வுட்கி யுயிருளேந் தாளரோ. 672

வீரன் மேனி வெளிப்பட வெய்யவள்
கார்கொண் மேனியைக் கண்டன ளாமெனச்
சோரும் வெள்குந் துணுக்கெனு மவ்வுருப்
பேருங் கால்வெம் பிணியிடைப் பெருமால். 673

விடியற்காலே சூர்ப்பணகை வருதல்

வந்து நோக்கினள் வள்ளல்போ யொருமணித் தடத்தான்
சந்தி நோக்கின னிருந்தது கண்டனள் தம்பி
இந்து நோக்கிய நுதலியைக் காத்தய லிருண்ட
கந்த நோக்கிய சோலேயி லிருந்தது காணுள். 674

சீதையைத் தூக்கிச் சென்றுள்.
இலட்சுமணர் தண்டித்தல்

நில்லடீஇ யெனக் கடுகினன் பெண்ணென நினேந்தான்
வில்லெடா தவள் வயங்கெரி யாமென விரிந்த
சில்ல லோதியைச் செங்கையிற் றிருகுறப் பற்றி
ஒல்வ யிற்றுதைத் தொளிகிளர் சுற்றுவா ளுருவி. 675

ஊக்கித் தாங்கிவிண் படர்வெமென் றுருத்தெழு வாளே
நூக்கி நொய்தினன் வெய்திழை யேலென நுவலா
மூக்குங் காதும்வெம் முரண்முலேக் கண்களு முறையால்
போக்கிப் போக்கிய சினத்தொடும் புரிகுழல் விட்டான்.

ஒற்று மூக்கினே யுலேயுறு தீயென வுயிர்க்கும்
எற்றுங் கையினே நிலத்தினி லிணைத்தடங் கொங்கை
பற்றும் பார்க்குமெய் வெயர்க்குந்தன் பருவலிக் காலால்
சுற்று மோடும்போய்ச் சோரிநீர் சொரிதரச் சோரும். 677

சூர்ப்பணகை புலம்புதல்

நிலேயெடுத்து நெடுநிலத்து நீயிருக்கத் தாபதர்கள்
சிலேயெடுத்துத் திரியுமிது சிறிதன்றோ தேவரெதிர்
தலேயெடுத்து விழியாமை சமைப்பதே தழலெடுத்தான்
மலேயெடுத்த தனிமலேயே யிவைகாண வாராயோ. 678

உருப்படிவ மன்மதனே யொத்துளரே யாயினுமுன்
செருப்படியாற் பொடியொவ்வா மானுடரைச் சிறுதியோ

நெருப்படியிற் பொடிசிதற நிறைந்தமதத் திசையானை
மருப்பொடியப் பொருப்பிடியத் தோணிர்மிர்த்த
வலியோனே. 679

உரனெரிந்து விழவென்னை யுதைத்துருட்டி மூக்கரிந்த
நரனிருந்து தோள்பார்க்க நான்கிடந்து புலம்புவதோ
கரனிருந்த வனமன்றோ விவைபடவுங் கடவேனோ
அரனிருந்த மலையெடுத்த வண்ணாவோ வண்ணாவோ. 680

கானமதி னிடையிருவர் காதொடுமூக் குடனரிய
மானமதாற் பாவியே னிவண்மடியக் கடவேனோ
தானவரைக் கருவறுத்துச் சதமகனைத் தளையிட்டு
வானவரைப் பணிகொண்ட மருகாவோ மருகாவோ. 681

அங்கே இராமர் வரக் கண்டழுதாள்

வந்தானை யிடைநோக்கி வயிறலைத்து மழைக்கண்ணீர்
செந்தாரைக் குருதியொடு செழுநிலத்தைச் சேறுக்கி
அந்தோவுன் றிருமேனிக் கன்பிழைத்த வன்பிழையால்
எந்தாயான் பட்டபடி யிதுகாணென் றெதிர்விழுந்தாள்.

இராமர், 'நீ யார்!' என்று வினவினர். 'நான் இராவணன் தங்கை; நேற்றும் இங்கு வந்தேனே?' என்றாள் சூர்ப்பணகை. 'நேற்று அழகியாக வந்தனையே?' என்றார் இராமர்.

'அவயவங்களை யறுத்ததனால் அழகு அழிந்தது' என்றாள் அவள். 'தம்பி! இவளைத் தண்டிக்கக் காரணம் யாது?' என்று கேட்ட தமையனை நோக்கித் தம்பி கூறுவார்.

தேட்டந்தான் வாளெயிற்றிற் றின்னவோ தீவினையோர்
கூட்டந்தான் புறத்துளதோ குறித்தபொருளறிந்திலமால்
நாட்டந்தா னெரியுமிழ நல்லாண்மேற் பொல்லாதாள்
ஓட்டந்தாளரிதினிவளுடன்றெழுந்தா ளெனவுரைத்தான்.

சூர்ப்பணகை

ஏற்றவளை வரிசிலையோ னியம்பாமு னிகலரக்கி
சேற்றவளை தன்கணவ னருகிருப்பச் சினந்திருகிச்
சூற்றவளை நீருழக்குந் துறைகெழுநீர் வளநாடா
மாற்றவளைக் கண்டக்கா லழலாதோ மனமென்றாள். 684

ஆக்கரிய மூக்குங்கை யரியுண்டா ளென்றுரை
நாக்கரியுந் தயமுகனார் நாகரிக ரல்லாமை

மூக்கரிந்து நுங்குலத்தை முதலரிந்தீ ரினியுமக்குப்
போக்கரிதிவ் வழகையெல்லாம் புல்லிடையே யுகுத்தீரே.

மாப்போரிற் புறங்காப்பேன் வான்சுமந்து செலவல்லேன்
தூப்போலக் கனிபலவுஞ் சுவையுடைய தரவல்லேன்
காப்போரைக் கைத்தென்னீர் கருதியது தருவேனிப்
பூப்போலு மெல்லியலாற் பொருளென்னோ புகல்வீரால்.

சிவனுமலர்த் திசைமுகனுந் திருமாலுந் தெறுகுலிசத்
தவனுமடுத் தொன்றாகி நின்றன்ன வருவோனே
புவனமனைத் தையுமொருதன் பூங்கணையா லுயிர்வாங்கும்
அவனுமுனக் கிளையானோ யிவனேபோ லருளிலனால். 687

பொன்னுருவப் பொருகழலீர் புழைகாண
மூக்கரிவான் பொருள்வே றுண்டோ
இன்னுருவ மிதுகொண்டிங் கிருந்தொழியு
நம்மருங்கே யேகா ளப்பால்
பின்னிவளை யயலொருவர் பாராரென்
றேயறிந்தீர் பிழைசெய் தீரோ
அன்னதனை யறிந்தன்றோ வன்பிரட்டி
பூண்டதுநா னறிவி லேனோ. 688

இராமர்

நெறித்தாரை செல்லாத நிருதரெதிர்
நில்லாதே நெடிய தேவர்
மறித்தாரீண் டிவரிருவர் மானுடவ
ரென்றது வல்லை யாகின்
வெறித்தாரை வேலரக்கர் விரலியக்கர்
முதலினர்நீ மிடலோ ரென்று
குறித்தாரை யாவரையுங் கொணருதியே
னின்னெதிரே கோறுமென்றான். 689

சூர்ப்பணகை

காம்பறியுந் தோளாளைக் கைவிடீ
ரெனினும்யான் மிகையோ கள்வர்
ஆம்பொறியி லடலரக்க ரவரோடே
செருச்செய்வா னமைந்தீ ராயின்
தாம்பொறியிற் பலமாயந் தரும்பொறிக
ளறிந்தவற்றைத் தடுப்பெ னன்றே

பாம்பறியும் பாம்பினகா லெனமொழியும்
பழமொழியும் பார்த்தி லீரோ. 690

இளையவனுக்கு என்னை நல்கு என்றாள்.

பெருங்குலா வுறுநகர்க்கே யேகுநாள்
வேண்டுமுருப் பிடிப்பே னன்றேல்
அருங்கலா முற்றிருந்தா னென்னினுமீங்
கிளையவன்றா னரிந்த நாசி
ஒருங்கிலா விவளோடு முறைவேனோ
வென்பானே லிறைவ வொன்றும்
மருங்கிலா தவளோடு மன்றோநீ
நெடுங்காலம் வாழ்ந்த தென்பாய். 691

"இவளை மேலுந் தண்டிக்க வேண்டும்" என்று இளையோன் கூறினான். அவள், "கரனை யழைத்து வந்து உங்களைக் கொல்வேன்" என்று சென்றாள்.

கரன் வதைப்படலம்

சூர்ப்பணகை கரன்பால் வந்து கூறுதல்

இருந்த மாக்கரன் றாளிணை யின்மிசை
சொரிந்த சோரியள் கூந்தலள் தூம்பெனத்
தெரிந்த மூக்கினள் வாயினள் செக்கர்மேல்
விரிந்த மேக மெனவிழுந் தாளரோ. 492

வாக்கிற் கொக்கப் புகைமுந்து வாயினான்
நோக்கிக் கூசலர் நுன்னையித் தன்மையை
ஆக்கிப் போனவ ரார்கொலென் றானவன்
மூக்கிற் சோரி முழீஇக்கொண்ட கண்ணினாள். 493

இருவர் மானுடர் தாபத ரேந்திய
வரிவில் வாட்கையர் மன்மதன் மேனியர்
தரும நீரர் தயரதன் காதலர்
செருவி னேரு நிருதரைத் தேடுவார். 494

கண்டு நோக்கருங் காரிகை யாள்தனைக்
கொண்டு போவ லிலங்கையர் கோக்கெனா
விண்டு மேல்விழுந் தேனை வெகுண்டவர்
துண்டமாக்கினர் மூக்கெனச் சொல்லினாள். 695

கரன் கொதித்துப் போருக் கெழுந்தான். அவனுடைய சேனைவீரர் விலக்கி 'நாங்கள் போகின்றோம்' என்றார்கள்.

நன்று சொல்லினிர் நானிச் சிறுர்கண்மேல்
சென்று போர்செயிற் றேவர் சிரிப்பரால்
கொன்று சோரி குடித்தவர் கொள்கையை
வென்று மீளுதிர் மெல்லிய லோடென்றுன். 696

என்ன லோடும் விரும்பி யிறைஞ்சினுர்
சொன்ன நாணிலி யந்தகன் றூதென
அன்னள் பிற்படர் வாரென வாயினுர்
மன்னன் காதலர் வைகிட நண்ணினுர். 697

அரக்கர்கள் வந்து போர்புரிதல்.

சீதையைக் காக்குமாறு தம்பியைப் பணித்து இராமர்
வந்து கணைகளால் அவர்களைக் கொன்ருர்.

மரங்கள் போனெடு வாளொடு தோள்விழ
உரங்க ளானடர்ந் தார்க்குர வோன்விடும்
சரங்க ளோடின தைக்க வவர்கள்தம்
சிரங்க ளோடின தீயவ ளோடினுள். 698

சூர்ப்பணகை சென்றுகூற கரன் போருக்கு வந்தான்.

பதினுலாயிரம் வெண்கலத் தேருடையார் உடன் வந்தனர்.

ஆறினே டாயிர மமைந்த வாயிரம்
கூறின வொருபடை குறித்த வப்படை
ஏறின வேழின திரட்டி யென்பரால்
ஊறின சேனையின் றெுகுதி யுன்னுவார். 699

சூலமும் பாசமுந் தொடர்ந்து செம்மயிர்ச்
சாலமுந் தறுகணு மெயிறுந் தாங்கினுர்
ஆலமும் வெளிதெனு நிறத்த ராற்றலால்
காலனுங் காலனென் றயிர்க்குங் காட்சியார். 700

தூடணன் றிரிசிரத் தோன்ற லாதியர்
கோடணை முரசினங் குளிரு சேனையர்
ஆடவ ருயிர்கவ ரலங்கல் வேலினர்
பாடவ நிலையினர் பலருஞ் சுற்றினர். 701

தம்பியின் வேண்டுகோள்

மீளருஞ் செருவின் விண்ணுமண்ணுமென்மேல்வந்தாலும்
நாளுலந் தழியு மென்றே னானுனக் குரைப்ப தென்னே

ஆளியின் றுப்பி ஞயிவ் வமரெனக் கருளி நின்றென்
தோளினைத் தின்னு கின்ற சோம்பினைத் துடைத்தி
யென்றான். 702

என்றன னிளைய வீர னிசைந்தில னிராம னேந்தும்
குன்றன தோளி னுற்ற லுள்ளத்தி னுணரக்கொண்டான்
அன்றியு மண்ண லாணை மறுக்கில னங்கை கூப்பி
நின்றன னிருந்தான்கண்ணீர்நிலனுறப்புலர்கின்றாள்பால்.

தீய சகுனம். ராதன் கரனிடம் கூறுதல்

குருதி மாமழை சொரிந்தன மேகங்கள் குமுறிப்
பருதிவானவ னூர்வளைப் புண்டது பாராய்
கருது வீரநின் கொடிமிசைக் காக்கையின் கணங்கள்
பொருது வீழ்வன புலம்புவ நிலம்படப் புரள்வ. 704

வாளின் வாய்களை யிவளைக் கின்றன வயவர்
தோளு நாட்டமு மிடந்துடிக் கின்றன தூங்கி
மீளி மொய்ம்பரி னிவுளிவீழ் கின்றன விரவி
ஞாளி யோடுநின் றுளைக்கின்ற நரிக்குலம் பலவால். 705

இனைய வாகலின் மானுட னொருவனென் றிவனை
நினைய லாவதொன் றன்றது நீதியா நின்ற
வினையெ லாஞ்செய்து வெல்லலாந் தன்மைய னல்லன்
புனையும் வாகையாய் பொறுத்தியென் னுரையெனப்
புகன்றான். 706

கரன் கேட்டு நகைத்துப் போர் தொடங்கினான்.
போர்த்திறம்

ஒன்று பத்துநா றுயிரங் கோடியென் றுணராத்
துன்று பத்திய விராகவன் சுடுசரந் துரப்பச்
சென்று பத்திரத் தலையென மலைதிரண் டென்னக்
கொன்று பத்தியிற் குவித்தன பிணப்பெருங் குன்றம்.

அழைத்தார்சில ரயர்ந்தார்சில ரழிந்தார்சிலர் கழிந்தார்
உழைத்தார்சில ருயிர்த்தார்சில ருருண்டார்சிலர்
புரண்டார்
குழைத்தாழ்திரைக் குருதிக்கடல் குளித்தார்சிலர்
கொலைவாய்
மழைத்தாரைகள் படப்பாரிடை மடிந்தார்சிலருடைந்தார்.

ஆய்வளை மகளிரோ டமர ரீட்டத்தர்
தூயவெங் கடுங்கணை துணித்த தங்கள்தோள்
பேயொரு தலைகொளப் பிணங்கி வாய்களின்
நாயொரு தலைகொள நகையுற் றார்சிலர். 709

தூடணன் போர் செய்து தேரையும் வில்லையும் இழந்தான்.
திரிசிரன் வதை

வில்லி ழந்தன னென்னினும் விழித்தவாண் முகத்தின்
எல்லி ழந்தில னிழந்திலன் வெங்கத மிடிக்கும்
சொல்லி ழந்திலன் றாள்வலி யிழந்திலன் சொரியும்
கல்லி ழந்தில னிழந்திலன் கறங்கெனத் திரிதல். 710

ஆளி ரண்டுநூ றுளவென அந்தரத் தொருவன்
மூளி ரும்பெரு மாயவெஞ் செருமுயல் வானைத்
தாளி ரண்டையு மிரண்டுவெங் கணைகளாற் றடிந்து
தோளி ரண்டையுமிரண்டுவெங்கணைகளாற் றுணித்தான்.

அற்ற தாளொடு தோளின னயிலெயி றிலங்கப்
பொற்றை மாமுழைப் புலாலுடை வாயினன் புகுந்து
பற்ற வாதரிப் பான்றனை நோக்கினன் பரியான்
கொற்ற வார்சிலைச் சரங்கொடு தலையையுங் குறைத்தான்.

தூடணன் வந்து கடும்போர் புரிந்தான்;
அவன் மாளுதல்.

தேவ ரார்த்தெழ முனிவர்கள் திசைதொறுஞ் சிலம்பும்
ஓவில் வாழ்த்தொலி நாற்கடன் முழக்கென வோங்கக்
காவ டாவிது வல்லையே னீயெனக் கணையொன்
றேவி னானவ னெயிறுடை நெடுந்தலை யிழந்தான். 713

கரன் வந்து பொருதல்

கள்ளவமர் மாயவினை கல்வியின் விளைத்தான்
வள்ளலுரு வைப்பகழி மாரியின் மறைத்தான்
உள்ளமுலை வுற்றமர ரோடின ரொளித்தார்
வெள்ளெயிறி தழ்ப்பவள வீரனும் வெகுண்டான். 714

இராமர் வில்லொடிதல்

முடிப்பெ னின்றொரு மொய்கணை யாலெனாத்
தொடுத்துயர் நின்றுயர் தோளுற வாங்கினான்
பிடித்த திண்சிலை பேரகல் வானிடை
இடிப்பி னோசைப டக்கடி திற்றதே. 715

என்னு மாத்திரத் தேந்திய கார்முகம்
சின்ன மென்றுந் தனிமையுஞ் சிந்தியான்
மன்னர் மன்னவன் செம்மன் மரபினுல்
பின்னு றத்தன் பெருங்கர நீட்டினன். 716

கோதண்டத்தை வருணன் தருதல்

கண்டு நின்று கருத்துணர்ந் தானென
அண்டர் நாதன் றடக்கையி னத்துணே
பண்டு போர்மழு வாளியைப் பண்பினுல்
கொண்ட வில்லே வருணன் கொடுத்தனன். 717

கரனுதியர்க்கு இடம் துடித்தல்

கொடுத்த வில்லேயக் கொண்டல் நிறத்தினன்
எடுத்து வாங்கி வலங்கொண் டிடக்கையில்
பிடித்த போது நெறிபிழைத் தோர்க்கெலாம்
துடித்த வாலிடக் கண்ணெடு தோளுமே. 718

கரன் கணேமழை பொழிதல்

தாங்கி நின்ற தயரத ராமனும்
தூங்கு தூணியி டைச்சுடு செஞ்சரம்
வாங்கு கின்றவ லக்கையொர் வாளியால்
வீங்கு தோளொடு பார்மிசை வீழ்த்தினன். 719

வரம ரக்கன் படைத்தலின் மாயையின்
உரமுடைத் தன்மை யாலுல கேழையும்
பரமு ருக்கிய பாவத்தி னுல்வலக்
கரமெ னக்கரன் கண்டமுற் ருனரோ. 720

ஆர்த்தெ ழுந்தன ராடினர் பாடினர்
தூர்த்த மைந்தனர் வானவர் தூய்மலர்
தீர்த்த னும்பொலிந் தான்கதி ரோன்றிசை
போர்த்த மென்பனி போக்கிய தென்னவே. 721

விண்ணில் நீங்கிய வெய்யவர் மேனியில்
புண்ணி னீரும் பொடிகளும் போயுக
அண்ணல் வீரனேத் தம்பியு மன்னமும்
கண்ணி னீரினிற் பாதங் கழுவினுர். 722

சூர்ப்பணகை அழுது புறப்படுதல்

ஆக்கி னேன்மனத் தாசையவ் வாசையென்
மூக்கி னேடு முடிய முடிந்திலேன்

வாக்கினலுங்கள் வாழ்வையு நாளையும்
போக்கினேன் கொடியே னென்று போயினள். 723

மாரீசன் வதைப் படலம்

இராவணன் இருந்த சிறப்பு

சேணுயர் நெறிமுறை திறம்ப லின்றியே
பாணிகள் பணிசெயப் பழுதில் பண்ணிடை
வீணையி னரம்பிடை விளைத்த தேமறை
வாணியி னரதன் செவியின் வார்க்கவே. 724

வருணன் தண்ணீர் தெளிக்கின்றான்; வாயு தெருக்களைக் கூட்டுகின்றான்.

சூலமே முதலிய துறந்து சுற்றிய
சேலையாற் சிறியவாய் புதைத்துச் செங்கையின்
தோலுடை நெடும்பணை துவைக்குந் தோறெலாம்
காலன்வந் திசைக்குநாட் கடிகை கூறவே. 725

அக்னிதேவன் விளக்கேற்றுகின்றான்.

சூர்ப்பணகை நகருக்குள் வருகின்றாள்.

பொருக்கென நோக்கினர் புகல்வ தோர்கிலர்
அரக்கரு மிரைத்தன ரசனி யாமெனக்
கரத்தொடு கரங்களைப் புடைத்துக் கண்களை
நெருப்பெழ விழித்துவாய் மடித்து நிற்கின்றார். 726

என்னையே யிராவணன் றங்கை யென்றபின்
அன்னையே யென்றடி வணங்க லன்றியே
உன்னவே யொண்ணுமோ வொருவ ராலிவள்
தன்னையே யரிந்தனள் தானென் றார்சிலர். 727

சூர்ப்பணகை இராவண னடியில் விழுந்து புரண்டாள்.

என்றினை யவன்றய ரிலங்கை நகரெய்த
நின்றவ ரிருந்தவரொ டோடுநெறி தேடக்
குன்றினடி வந்துபடி கொண்டலென மன்னன்
பொன்றிணி கருங்கழல் விழுந்தனள் புரண்டாள். 728

மூடின திருட்படலை மூவுலகு முற்றச்
சேடனும் வெருக்கொடு சிரக்குவை நெளித்தான்
ஆடின குலக்கிரி யருக்கனு மயிர்த்தான்
ஓடின திசைக்கரிக ளும்பரு மொளித்தார். 729

தென்றிசை நமன்றனொடு தேவர்குல மெல்லாம்
இன்றிறுதி வந்தது நமக்கென விருந்த
நின்றுயிர் நடுங்கியுடல் விம்மிநிலை நில்லார்
ஒன்றுமுரை யாடலில ரும்பரினெ டிம்பர். 730

இராவணன் வினா

மடித்தபில வாய்கள்தொறும் வந்துபுகை முந்தத்
துடித்ததொடர் மீசைகள் சுறுக்கொள வுயிர்ப்பக்
கடித்தகதிர் வாளெயிறு மின்கனல மேகத்
திடித்தவுரு மொத்துரறி யாவர்செய லென்றான். 731

சூர்ப்பணகை விடை

வற்கலையர் வார்கழலர் மார்பினணி நூலர்
விற்கலையர் வேதமுறை நாவர்நனி மெய்யர்
உற்கலைய ருன்னையொர் துகட்டனையு முன்னார்
சொற்கலையெ னத்தொலைவில் தூணிகள் சுமந்தார். 732

மாரருள ரேயிருவ ரோருலகின் வாழ்வார்
வீரருள ரேயவரின் வில்லதனின் வல்லார்
ஆரொருவ ரன்னவரை யொப்பவர்க ளையா
ஓரொருவ ரேயிறைவர் மூவரையு மொப்பார். 733

ராவணனது வருத்தம்

மூளுமுள தாயபழி யென்வயின் முடித்தோர்
ஆளுமுள வாமவர தாருயிரு முண்டாம்
வாளுமுள தோதவிட முண்டவன் வழங்கும்
நாளுமுள தோளுமுள நானுமுளெ னன்றோ. 734

என்றுரைசெ யாநகைசெ யாவெரி விழிப்பான்
வன்றுணையி லாவிருவர் மானுடரை வாளால்
கொன்றிலர் களாநெடிய குன்றுடைய கானில்
நின்றகர னேமுதலி னோர்நிருத ரென்றான். 735

சூர்ப்பணகை

சொல்லென்றன் வாயிற் கேட்டார்
தொடர்ந்தெழு சேனை யோடும்
கல்லென்ற வொலியிற் சென்றார்
கரன்முதற் காளை வீரர்

எல்லொன்று கமலச் செங்க
　　ணிராமனென் றிசைத்த வேந்தல்
வில்லொன்றிற் கடிகை மூன்றி
　　லேறினர் விண்ணி லென்றாள். 736

'நீ அவர்கட்குச் செய்த குற்றம் யாது?' என இராவணன் வினவ, சூர்ப்பணகை, சீதையின் அழகைக் கூறுதல்.

காமர முரலும் பாடல் கள்ளெனக் கனிந்த வின்சொற்
றேமலர் நிறைந்த கூந்தற் றேவர்க்கு மணங்கா மென்னத்
தாமரை யிருந்த தையல் சேடியாந் தரமு மல்லள்
யாமுரை வழங்கு மென்ப தேழமைப் பாலதன்றே. 737

இந்திரன் சசியைப் பெற்றா னிருமூன்று வதனத்
　　தோன்றன்
தந்தையுமுமையைப் பெற்றான் தாமரைச் செங்க ணனும்
செந்திரு மகளைப் பெற்றான் சீதையைப் பெற்றாய் நீயும்
அந்தரம் பார்க்கி னன்மை யவர்க்கில்லை யுனக்கே யையா.

பாகத்திலொருவன்வைத்தான் பங்கயத்திருந்த பொன்னை
ஆகத்தி லொருவன் வைத்தானந்தண னவில்வைத்தான்
மேகத்தின்மின்னைமுன்னே வென்றநுண் ணிடையைநீயும்
மாகத்தோள் வீர பெற்றா லெங்ஙனம் வைத்து வாழ்தி.

பிள்ளைபோல் பேச்சி னாளைப் பெற்றபின் பிழைக்கலாற்றாய்
கொள்ளைபோ கின்ற செல்வ மவளுக்கே கொடுத்தியைய
வள்ளலே யுனக்கு நல்லேன் மற் றுநின் மனையில் வாழும்
கிள்ளைபோன் மொழியார்க் கெல்லாங் கேடுசூழ் கின்றே
　　னன்றே. 740

மீன்கொண்டு டாடும் வேலை மேகலை யுலக மேத்தத்
தேன்கொண்டு டாடுங்கூந்தற்சிற்றிடைச் சீதையென்னும்
மான்கொண்டு டாடு நீயுன் வாள்வலி யுலகங் காண
யான்கொண்டுடாடும் வண்ணமிராமனைத் தருதியென்பால்.

இன்னவள் தன்னை யுன்பா லுய்ப்பலென் றெடுக்க லுற்ற
என்னையவ் விராமன் றம்பி யிடைபுகுந் திலங்கு வாளால்
முன்னைமூக் கரிந்து விட்டான் முடிந்ததென் வாழ்வு
　　முன்னின்
சொன்னபி னுயிரை நீப்பான் றுணிந்தனெ னென்னச்
　　சொன்னாள். 742

இராவணன் விரகமுறுதல்.

கரனையு மறந்தான் றங்கை மூக்கினைக் கடிந்து நின்றான்
உரனையு மறந்தா னுற்ற பழியையு மறந்தான் வெற்றி
அரனையுங் கொண்ட காம னம்பினுன் முன்னைப் பெற்ற
வரனையு மறந்தான் கேட்ட மங்கையை மறந்தி லாதான்.

மயிலுடைச் சாய லாளை வஞ்சியா முன்ன நீண்ட
எயிலுடை யிலங்கை நாதனி தயமாஞ்சிறையில் வைத்தான்
அயிலுடை யரக்க னுள்ள மவ்வழி மெல்ல மெல்ல
வெயிலுடை நாளி லுற்றவெண்ணெய்போல் வெதும்பிற்
றன்றே. 744

விதியது வலியி னுலு மேலுள வினைவி னுலும்
மதியுறு கேடு வந்து குறுகிய பயத்தினுலும்
கதியுறு பொறியின் வெய்ய காமநோய் கல்வி நோக்கா
மதியிலி மறையச் செய்த தீமைபோல் வளர்ந்த தன்றே.

இராவணன் இரவு முழுவதும் விரக வேதனையால் வருந்தினுன். ருதுக்களை மாறிமாறி அழைத்தான். உருவெளித் தோற்றத்தைக் கண்டு, சூர்ப்பணகையை அழைத்து வினவுதல்.

பொய்ந்நின்ற நெஞ்சிற் கொடியாள் புகுந்தாளை நோக்கி
நெய்ந்நின்ற கூர்வாளவ னேருற நோக்கு நங்காய்
மைந்நின்ற வாட்கண் மயினின்றென வந்தென் முன்னர்
இந்நின்றவ ளாங்கொ லியம்பிய சீதை யென்றான். 746

செந்தாமரைக் கண்ணொடுஞ் செங்கனி வாயி னேடும்
சந்தார் தடந் தோளொடுந் தாழ்தடக் கைக ளோடும்
அந்தாரக லத்தொடு மஞ்சனக் குன்ற மென்ன
வந்தானிவ னுகுமவ் வல்விலி ராம னென்றாள். 747

"நீ கண்டது உருவெளித் தோற்றம்" என்றாள். "அங்ஙன மாயின் உனக்கேன் இராமன் வடிவு தோன்றியது என்றான்.

"அச்சத்தால் தோன்றியது" என்றாள் சூர்ப்பணகை.

இராவணன் விமானமூர்ந்து மாரீசன் இருக்கை சென்றான்.

இருந்தமா ரீச னந்த இராவண னெய்த லோடும்
பொருந்தியபயத்தன்சிந்தை பொருமுற்றுவெருவுகின்றான்
கருந்தட மலையன் னானை யெதிர்கொண்டு கடன்கள் யாவும்
திருந்திய செய்து செவ்வித் திருமுகநோக்கிச்செப்பும். 748

வந்தகாரணம் யாது? என்று கேட்டான் மாரீசன்.

இராவணன் கூறுதல்

வன்மைத ரித்தோர் மானுடர் மற்றங் கவர்வாளால்
நின்மரு கிக்கு நாசியி ழக்கு நிலைநேர்ந்தார்
என்மர புக்கு நின்மர புக்கு மிதன்மேலோர்
புன்மை தெரிப்பின் வேறினி யெற்றே புகல்வேலோய். 749

சீதையைக் கவரவேண்டும்; அதற்கு நீ துணை
செய்யென்று இராவணன் கூற, மாரீசன் மறுத்துரைத்தல்.

மன்ன நீநின் வாழ்வைமு டித்தாய் மதியற்றாய்
உன்ன னன்றீ தூழ்வினை யென்றே யுணர்கின்றேன்
இன்ன நெஞ்ச னேனுமு ரைப்ப லிதமென்னச்
சொன்ன னன்றே யன்னவ னுக்குத் துணிவெல்லாம். 750

அற்றக ரத்தோ டுன்றலை தீயே யனன்முன்றில்
பற்றினை யுய்த்தாய் பற்பல காலம் பசிகூர
உற்றுயி ருள்ளே தேயவு லந்தா யுழையன்றோ
பெற்றனை செல்வம் பின்னதி கழ்ந்தாற் பெறலாமோ. 751

நாரங் கொண்டார் நாடுக வர்ந்தார் நடையல்லா
வாரங் கொண்டார் மற்றொரு வர்க்காய் மனைவாழும்
தாரங் கொண்டா ரென்றிவர் தம்மைத் தருமந்தான்
ஈருங் கண்டாய் கண்டக ருய்ந்தா ரெவரையா. 752

அந்தர முற்றா னகலிகை பொற்பா லழிவுற்றான்
இந்திர னொப்பா ரெத்தனை யோர்தா மிழிபுற்றார்
செந்திரு வொப்பா ரெத்தனை யோர்நின் றிருவுண்பார்
மந்திர மற்றா ருற்றது ரைத்தாய் மதியற்றாய். 753

வெய்யோர் யாரே வீரவி ராதன் றுணைவெய்யோர்
ஐயோ போன னம்பொடு மும்பர்க் கவனென்றால்
உய்வார் யாரே நம்மினை னக்கொண் டுணர்தோறும்
நையா நின்றே னீயிது ரைத்து நலிவாயோ. 754

எம்பிக் கும்மென் னன்னைத னக்கு மிறுதிக்கோர்
அம்புய்க் கும்போர் வில்லித னக்கு மயல்நிற்கும்
நம்பிக் குந்நம் மாண்மைத விர்ந்தே சயநிற்கும்
கம்பிக் கும்மென் னெஞ்சவ னென்றே கவல்கின்றேன்.

இராவணன் சீறுதல்

கங்கைசடை வைத்தவனெ டுங்கயிலை வெற்போர்
அங்கையினெ டுத்தவென தாடெழின்ம ணித்தோள்
இங்கொர்மனி தற்கெளிய வென்றனையெ னத்தன்
வெங்கணெரி யப்புருவ மீதுறவி டைத்தான். 756

மாரீசன் மீண்டும் மறுத்துரைத்தல்.

யாதுமறி யாயுரைகொ ளாயிகலி ராமன்
கோதைபுனை யாமுனுயிர் கொள்ளைபடு மன்றே
பேதைமதி யாலிஃதொர் பெண்ணுருவ மென்றாய்
சீதையுரு வோநிருதர் தீவினைய தன்றோ. 757

உஞ்சுபிழை யாயுறவி னோடுமென வுன்னு
நெஞ்சுபறை போதுமது நீநினைய கில்லாய்
அஞ்சுமென தாருயிர றிந்தருகு நின்றார்
நஞ்சுநுகர் வாரையிது நன்றெனலு நன்றோ. 758

ஆயிரம டற்கையுடை யானைமழு வாளால்
ஏயெனுமி வைப்பினுயிர் செற்றவெதி ரில்லோன்
மேயவிறன் முற்றுவரி வெஞ்சிலையி னோடும்
தாயகன்வ லித்தகைமை யாமுறுத கைத்தோ. 759

வேதனைசெய் காமவிட மேலிடமெ லிந்தாய்
தீதுரைசெய் தாயினைய செய்கைசிதை வன்றோ
மாதுலனு மாய்மரபின் முந்தையுற வந்தேன்
ஈதுரைசெய் தேனதனை யெந்தைதவிர் கென்றான். 760

இராவணன் சினந்துரைத்தல்.

திக்கயமொ ளிப்பநிலை தேவர்கெட வானம்
புக்கவரி ருக்கைபுகை வித்துலகம் யாவும்
சக்கரந டத்துமெனை யோதயர தன்றன்
மக்கணலி கிற்பரிது நன்றுவலி யன்றோ. 761

மறுத்தனையெ னப்பெறினு நின்னைவடி வாளால்
ஒறுத்தெனது மனக்குறைமு டிப்பதொழி கல்லேன்
வெறுப்பன கிளத்தலுறு மித்தொழிலை விட்டென்
குறிப்பின்வழி நிற்றியுயிர் கொண்டுழலி னென்றான். 762

மாரீசன்

உன்வயி னுறுதி நோக்கி யுண்மையினுணர்த்தினேன்மற்
றென்வயி னுறுதி நோக்கியச்சத்தாலிசைத்தே னல்லேன்

நன்மையுந் தீமை யன்றோ நாசம்வந் துற்ற போது
புன்மையி னுற்ற நீராய் செய்வது புகறி யென்றான். 763

இராவணன்

என்றலு மெழுந்து புல்லி யேறிய வெகுளி நீங்கிக்
குன்றெனக் குவிந்த தோளாய் மாரவேள் கொதிக்கு மம்பால்
பொன்றலி னிராம னம்பாற் பொன்றலே புகழுண்டன்றோ
தென்றலைப்பகையைச்செய்தசீதையைத்தருதி யென்றான்.

"இராமருடன் போர் செய்து வென்று சீதையைக்
கவர்வது நலம்" என்று மாரீசன் கூறுதல்

புறத்தினி யுரைப்ப தென்னே புரவலன் தேவி தன்னைத்
திறத்துழி யன்றி வஞ்சித் தெய்துதல் சிறுமைத் தாகும்
அறத்துள தொக்கு மன்றே யமர்த்தலை வென்று கொண்டுன்
மறத்துறை வளர்த்தி மன்னவென்னமாரீசன்சொன்னான்.

இராவணன் அது நன்றன்று என்னல்

ஆனவ னுரைக்க நக்க வரக்கர்கோ னவரை வெல்லத்
தானையும் வேண்டு மோவென் றடக்கைவாள்தக்கதன்றோ
ஏனைய ரிறக்கிற் றானுந் தமியளா யிறக்கு மன்றே
மானவ ளாத லாலே மாயையின் வலித்து மென்றான். 766

என்னமா மாயம் யான்மற் றியற்றுவ தியம்பு கென்றான்
பொன்னின்மா னாகிப் புக்குப் பொன்னைமால் புணர்த்து கென்ன
அன்னது செய்வே னென்னா மாரீச னமைந்து போனான்
மின்னும்வே லரக்கர் கோனும் வேறொரு நெறியிற் போனான். 767

மானுருவாக மாரீசன் வருதல்

தன்மா னமிலா ததயங் கொளிசால்
மின்வா னமுமண் ணும்விளங் குவதோர்
பொன்மா னுருவங் கொடுபோ யினனால்
நன்மா னனையாள் தனைநா டுறுவான். 768

மலர் பறித்துக் கொண்டிருந்த சீதை அதனைக் கண்டு
கணவன்பால் கூறுதல்.

ஆணிப் பொனிஞ கியதாய் கதிரால்
சேணிற் சுடர்கின் றதுதிண் செவிகால்
மாணிக் கமயத் தொருமா னுளதால்
காணத் தகுமென் றனள்கை தொழுவாள். 769

இது மாயமான் என்று இலக்குவன் கூறுதல்.

ஆண்டங் கிளையோ னுரையா டினனல்
வேண்டும் மெனலால் விளைவன் றிதெனுன்
பூண்டுஞ் சுபொலங் கொடியோ யதுநாம்
காண்டும் மெனும்வள் ளல்கருத் துணர்வான். 770

இராமர் அதனை ஆய்ந்துணராமைக்குக் காரணம்.

நோக்கிய மானை நோக்கி நுதியிழை மதியி னென்றும்
தூக்கில னன்றி தென்ரு னதன்பொருள் சொல்ல லாகும்
சேக்கையி னரவு நீங்கிப் பிறந்தது தேவர் செய்த
பாக்கிய முடைமை யன்ரோ வன்னது பழுது போமோ. 771

சீதை மான்பற்றித் தரவேண்ட, இராமர் இசைவது
குறித்து இலட்சுமணர் தடுத்தல்.

ஐயநுண் மருங்கு நங்கை யஃதுரை செய்ய வையன்
செய்வெனென் றமைய நோக்கித் தெளிவுடைச் செம்மல் செப்பும்
வெய்யவல் லரக்கர் வஞ்சம் விரும்பினர் வினையிற் செய்த
கைதவ மானென் றண்ணல் காணுதி கடையி னென்ருன்.

இராமர்

மாயமேன் மடிவா மன்றே வாளியின் மடிந்த போது
காய்சினத் தவரைக் கொன்று கடன்கழித் தோமு மாதும்
தூயதேற் பற்றிக் கோடுஞ் சொல்லிய விரண்டி னென்றும்
தீயதேயுரைத்தி யென்ருன் றேவரை யிடுக்கண் தீர்ப்பான்.

பகையுடை யரக்க ரென்றும் பலரென்றும் பயிலு மாயம்
மிகையுடைத் தென்றும் பூண்ட விரதத்தை விடுது மென்றல்
நகையுடைத் தாகு மன்றே யாதலி னன்றீ தென்னுத்
தகையுடைத்தம்பிக்கந்நாட் சதுமுகன்ருதை சொன்னுன்.

இலட்சுமணர்

அடுத்தவு மெண்ணிச் செய்த
லண்ணலே யமைதி யன்றோ
விடுத்திதன் பின்னின் றூர்கள்
பலருள ரெனினும் வில்லால்
தொடுத்தவெம் பகழி தூவித்
தொடர்ந்தனென் விரைந்து சென்று
படுக்குவெ னதுவன் றுயிற்
பற்றினென் கொணர்வெ னென்றான். 775

சீதை வேண்டுதல்

ஆயிடை யன்ன மன்னா ளமுதுகுத் தனைய செய்ய
வாயிடை மழலை யின்சொற் கிளியினிற் குழறி மாழ்கி
நாயக நீயே பற்றி நல்கலை போலு மென்னாச்
சேயரிக் குவளை முத்தஞ் சிந்துபு சிதறிப் போனாள். 776

இராமர் புறப்படுதல்

போனவள் புலவிநோக்கிப்புரவலன்பொலன்கொள் தாராய்
மானிது நானே பற்றி வல்லையின் வருவெ னன்றே
கானியன் மயிலன் னாளைக் காத்தனை யிருத்தி யென்னா
வேனகு சரமும் வில்லும் வாங்கினன் விரைய லுற்றான்.

இளையவன் கருத்து

முன்னமு மகலாய் வந்த மூவரி னொருவன் போனான்
அன்னமா ரீச னென்றே யயிர்த்தனெ னிதனை யைய
இன்னமுங் காண்டி வாழி யேகென விருகை கூப்பிப்
பொன்னனாள் புக்க சாலை காத்தனன் புறத்து நின்றே.

மானின் மாயம்

குன்றிடை யிவரு மேகக் குழுவிடைக் குதிக்குங் கூடச்
சென்றிடி னகலுந் தாழிற் றீண்டலாந் தகைமைத் தாகும்
நின்றதே போல நீங்கு நிதிவழி நேய நீட்டும்
மன்றலங் கோதை மாதர் மனமெனப் போயிற் றம்மா. 779

இராமர் இது மாயமான் என உணர்தல்

காயம்வே றாகிச் செய்யுங் கருமம்வே றாகிற் றன்றே
ஏயுமே யென்னின் முன்ன மெண்ணமே யிளவற் குண்டே

ஆயுமே லுறுதல் செல்லா அரக்கரா னவர்கள் செய்த
மாயமே யாய தேநான் வருந்திய தென்றான் வள்ளல். 780

மாரீசன் தப்புதற்கு முயலுதல்

பற்று வானினி யல்லன் பகழியால்
செற்று வானிற் செலுத்தலுற் றானென
மற்ற மாய வரக்கன் மனக்கொளா
உற்ற வேகத்தி னும்பரி னேகினான். 781

இராமர் கணை விடுதல்

நெட்டி லைச்சரம் வஞ்சனை நெஞ்சுறப்
பட்ட தப்பொழு தேபகு வாயினால்
அட்ட திக்கினு மப்புற மும்புக
விட்ட மைத்தொரு குன்றென வீழ்ந்தனன். 782

இராமர் கருதுதல்.

வெய்ய வன்ற னுருவொடு வீழ்தலும்
செய்ய தன்றெனச் செப்பிய தம்பியை
ஐயன் வல்லனென் னருயிர் வல்லனன்
உய்ய வந்தவன் வல்லனென் றுன்னினான். 783

ஆசை நீளத் தரற்றினன் வீழ்ந்தவந்
நீசன் மேனியை நின்றுட னேக்கினான்
மாசின் மாதவன் வேள்வியின் வந்தமா
ரீச னேயிவ னென்பதுந் தேறினான். 784

உழைத்த வாளி யுரம்புகப் புல்லியோன்
இழைத்த மாயையி னென்குர லாலிசைத்
தழைத்த துண்டது கேட்டயர் வெய்துமால்
மழைக்க ணேழையென் றுள்ளம் வருந்தினான். 785

மாற்ற மின்னது மாயமா ரீசனென்
றேற்ற முன்னுணர்ந் தானெனி னென்னுடை
ஆற்றல் தேரு மறிவின னாதலான்
தேற்று மாலிளை யோனெனத் தேறினான். 786

மாள்வ தேபொரு ளாகவந் தானலன்
சூழ்வ தோர்பொரு ளுண்டிவன் சொல்லினால்
மூள்வ தேதமது முடியாமுனம்
மீள்வ தேநல னென்றவன் மீண்டனன். 787

"எனது மொழி வழுவாமல் நீயேகு கான்மீதி
லெனவிரகு குலையாத மாதாவு நேரோத
இசையுமொழி தவறும லேயேகி மாமாது மிளையோனும்
இனிமையொடு வருமாய மாரீச மானவி
குலையவரு கரதூஷ ணவீரர் போர்மாள
இறுகிநெடு மரமேழு தூளாக வேவாலி உயிர்சீறி
அநுமனெடு கவிகூட வாராக நீராழி
அடைசெய்தணை தனிலேறி மாபாவி யூர்மேவி
அவுணர்கிளை கெடநூறி யாலால மாகோப நிருதேசன்
அருணமணி திகழ்பார வீராக ராமோலி
ஒருபதுமோர் கணைவீழ வேமோது போராளி
அடல்மருக குமரேச மேலாய வானோர்கள் பெருமாளே"
(குனகியொரு)—திருப்புகழ்.

சடாயு உயிர்நீத்த படலம்

சீதை துயர்

பிடித்து நல்கிவ் வுழையெனப் பேதையேன்
முடித்த னென்முதல் வாழ்வென மொய்குழல்
கொடிப்ப டிந்த தெனநெடுங் கோளரா
இடிக்கு டைந்த தெனப்புரண் டேங்கினள். 788

குற்றம் வீந்த குணத்தினெங் கோமகன்
மற்றை வாளரக் கன்புரி மாயையால்
இற்று வீழ்ந்தன னென்னவு மென்னயல்
நிற்றி யோவிளை யோயொரு நீ யென்றாள். 789

இலட்சுமணர் தேற்றுதல்

பாரெனக் கனலெனப் புனலெ னப்பகாப்
பேரெனத் திசையென முனியிற் பெருமால்
காரெனக் கரியவக் கமலக் கண்ணனை
யாரெனக் கருதியிவ் விடரி னழ்கின்றீர். 790

இடைந்துபோய் நிசிசரற் கிராம னெவ்வம்வந்
தடைந்தபோ தழைக்குமே யழைக்கு மாமெனின்
மிடைந்தபே ரண்டங்கண் மேல கீழன
உடைந்துபோ மயன்முத லுயிருந் தீயுமால். 791

மாற்றமென் பகர்வது மண்ணும் வானமும்
போற்றவன் றிரிபுர மெரித்த புங்கவன்

ஏற்றினின் றெய்தவில் லிற்ற தெம்பிரான்
ஆற்றலி னமைவதோ ராற்ற லுண்மையோ. 792

பரக்கவென் பகர்வது பகழி பண்ணவன்
துரக்கவங் கதுபடத் தொலைந்து சோர்கின்ற
அரக்கனவ் வுரையெடுத் தரற்றி னனதற்
கிரக்கமுற் றிரங்கலி ரிருத்தி ரீண்டென்றான். 793

சீதை சினந்துரைத்தல்

ஒருபகல் பழகினா ருயிரை யீவரால்
பெருமக னுலைவுறு பெற்றி கேட்டுநீ
வெருவலை நின்றனை வேறென் யானினி
எரியிடை வீழ்ந்துயி ரிறப்ப லீண்டென. 794

இலக்குவன் தடுத்துப் புறப்படுதல்

தாமரை வனத்திடை தாவு மன்னம்போல்
தூமவெங் காட்டெரி தொடர்கின் றாள்தனைச்
சேமவிற் குமரனும் விலக்கிச் சீறடிப்
பூமுக நெடுநிலம் புல்லிச் சொல்லுவான். 795

துஞ்சுவ தென்னைநீர் சொற்ற சொல்லையான்
அஞ்சுவென் மறுக்கிலெ னவலந் தீர்ந்தினி
இஞ்சிரு மடியனே னேகு கின்றனென்
வெஞ்சின விதியினை வெல்ல வல்லமோ. 796

போகின்றே னடியனேன் பொருந்தி வந்துகே
டாகின்ற தரசன்ற னாணை நீர்மறுத்
தேகென் றிருக்கின்றீர் தமியி ரென்றுபின்
வேகின்ற சிந்தையான் விடைகொண் டேகினான். 797

போவது புரிவல்யான் புகுந்த துண்டெனின்
காவல்செ யெருவையின் றலைவன் கண்ணுறும்
ஆவது காக்குமென் றறிவித் தவ்வழித்
தேவர்செய் தவத்தினாற் செம்ம லேகினான். 798

இராவணன் சன்யாசியாக வருதல்

இளையவ னேகலு மிறவு பார்க்கின்ற
வளையெயிற் றிராவணன் வஞ்ச முற்றுவான்
முளைவரித் தண்டொரு மூன்று முப்பகைத்
தளையரி தவத்தவர் வடிவுந் தாங்கினான். 799

வெற்பிடை மதமென வியர்க்கு மேனியன்
அற்பினற் றிரைபுர ளாசை வேலையன்
பொற்பினுக் கணியினைப் புகழின் சேக்கையைக்
கற்பினுக் கரசியைக் கண்ணி னோக்கினான். 800

சேயிதழ்த் தாமரைச் சேக்கை தீர்ந்திவண்
மேயவள் மணிநிற மேனி காணுதற்
கேயுமே யிருபதிங் கிமைப்பில் நாட்டங்கள்
ஆயிர மில்லையென் றல்ல லெய்தினான். 801

தேவரு மவுணருந் தேவி மாரொடும்
கூவல்செய் தொழிலினர் குடிமை செய்திட
மூவுல கமுமிவர் முறையி னாளயான்
ஏவல்செய் துய்குவெ னினியென் றுன்னினான். 802

உளைவுறு துயர்முகத் தொளியி தாமெனின்
முளையெயி றிலங்கிடு முறுவ லென்படும்
தளையவிழ் குழலிவட் கண்டு தந்தவென்
இளையவட் களிப்பெனென் னரசென் றெண்ணினான்.

சீதை வருக எனல்

ஆண்டையா னனையன வுன்னி யாசைமேல்
மூண்டெழு சிந்தனை முறையி லோன்றனைக்
காண்டலுங் கண்ணினீர் துடைத்த கற்பினாள்
ஈண்டெழுந் தருளுமென் றினைய கூறினாள். 804

இராவணன்

இருந்தவன் யாவதிவ் விருக்கை யிங்குறை
அருந்தவன் யாவனீர் யாரை யென்றலும்
விருந்தின ரிவ்வழி விரகி லாரெனப்
பெருந்தடங் கண்ணவள் பேசன் மேயினாள். 805

சீதை

தயரதன் றொல்குலத் தலைவன் றம்பியோ
டுயர்குலத் தன்னைசொ லுச்சி யேந்தினான்
அயர்வில திவ்வழி யுறையு மன்னவன்
பெயரினைத் தெரிகுதிர் பெருமை யீரென்றாள். 806

அனகமா நெறிபட ரடிக ளும்மலால்
நினைவதோர் தெய்வம்வே றிலாத நெஞ்சினாள்

சனகன்மா மகள் பெயர் சனகி காகுத்தன்
மனைவியா னென்றனண் மறுவில் கற்பினாள். 807

அவ்வழி யனையன வுரைத்த வாயிழை
வெவ்வழி வருந்தினிர் விளைந்த மூப்பினிர்
இவ்வழி யிருவினை கடக்க வெண்ணினிர்
எவ்வழி நின்றுமிங் கெய்தி நீரென்றாள். 808

இராவணன்

இந்திரற் கிந்திர னெழுத லாகலாச்
சுந்தர னான்முகன் மரபிற் றோன்றினான்
அந்தரத் தோடுமெவ் வுலகு மாள்கின்றான்
மந்திரத் தருமறை வைகு நாவினான். 809

ஈசனாண் டிருந்தபே ரிலங்கு மால்வரை
ஊசிவே ரொடும்பறித் தெடுக்கு மூற்றத்தான்
ஆசைகள் சுமந்தபே ரளவில் யானைகள்
பூசல்செய் மருப்பினைப் பொடிசெய் தோளினான். 810

அனைத்துல கினுமழ கமைந்த நங்கையர்
எனைப்பல ரவன்றன தருளி னிச்சையோர்
நினைத்தவ ருருகவு முதவ நேர்கிலன்
மனக்கினி யாளொரு மாதர் நாடுவான். 811

நான் அந்த இராவணனது நகரில் வாழ்வோன் என்றான்
சீதை கூறுதல்

வேதமும் வேதிய ருளும் வெஃகலாச்
சேதனை மன்னுயிர் தின்னுந் தீவினைப்
பாதக வரக்கர்தம் பதியின் வைகுதற்
கேதுவென் னுடலமு மிகையென் றெண்ணுவீர். 812

இராவணன் அரக்கர் நல்லவர் என்றான்.
சீதை

திறந்தெரி வஞ்ச னச்சொற் செப்பலுஞ் செப்ப மிக்காள்
அறந்தரு வள்ள லீண்டிங் கருந்தவ முயலு நாளுள்
மறந்தலை திரிந்த வாழ்க்கை யரக்கர்தம் வருக்கத் தோடும்
இறந்தனர் முடிவர் பின்ன ரிடரிலை யுலக மென்றாள். 813

இராவணன்

மானவ ளுரைத்த லோடு மானுட ரரக்கர் தம்மை
மீனென மிளிருங் கண்ணுைப் வேரற வெல்வ ரென்னின்
யானையி னினத்தையெல்லா மிளமுயல் கொல்லும்பின்னும்
கூனுகிர் மடங்க லேற்றைக் குருளைமான் கொல்லு
மென்ருன். 814

சீதை

மின்றிரண் டனைய பங்கி விராதனும் வெகுளி பொங்கக்
கன்றிய மனத்து வென்றிக் கரன்முதற் கணக்கி லோரும்
பொன்றிய பூச லொன்றுங் கேட்டிலிர் போலு மென்ருள்
அன்றவர்க் கடுத்த துன்னி மழைக்கணீ ரருவி சோர்வாள்.

வாளரி வள்ளல் தன்ரு லிலங்கைமா நிருத ரெல்லாம்
கேளொடு மறியு மாறும் வானவர் கிளரு மாறும்
நாளையே காண்டி ரன்றே நவையிலி ருணர்கி லீரோ
மீளருந் தருமந் தன்னை வெல்லுமோ பாவ மென்ருள். 816

இராவணன்

மேருவைப் பறிக்க வேண்டின் விண்ணினை யிடிக்கவேண்டி
னீரினைக் கலக்க வேண்டி னெருப்பினை யவிக்க வேண்டின்
பாரினை யெடுக்க வேண்டிற் பலவினை சிலசொல் லேழாய்
யாரெனக் கருதிச் சொன்ரு யிராவணற் கரிதென்
னென்ருன். 817

சீதை

அரண்டரு திரள்தோள் சால வுளவெனி ளுற்ற லுண்டோ
கரண்டநீ ரிலங்கை வேந்தைச் சிறைவைத்த கழற்கால்
வீரன்
திரண்டதோள் வனத்தை யெல்லாஞ் சிறியதோர் பருவந்
தன்னில்
இரண்டுதோ ளொருவ னன்ரே மழுவிஞ லெறிந்தா
னென்ருள். 818

மாயவேட மகலுதல்

என்றிவ ளுரைத்த லோடு மெரிந்தன நயனந் திக்கிற்
சென்றன திரள்தோள் வானந் தீண்டின மகுடந் திண்கை
ஒன்ருெடொன் றடித்த மேகத்துருமென வெயிற்றி னேளி
மென்றன வெகுளி பொங்க விட்டது மாய வேடம். 819

விண்ணவ ரேவல் செய்ய வென்றவென் வீரம் பாராய்
மண்ணிடைப் புழுவின் வாழு மானுடர் வலிய ரென்றாய்
பெண்ணெனப் பிழைத்தா யன்றே லுன்னையான்
பிசைந்து தின்ன
எண்ணுவெ னெண்ணிற் பின்னை யென்னுயி ரிழப்பெ
னென்றான். 820

குலைவுற லன்ன முன்னம் யாரையுங் கும்பி டாவென்
தலைமிசை மகுட மென்னத் தனித்தனி யினிது தாங்கி
அலகில்பூ ணரம்பை மாத ரடிமுறை யேவல் செய்ய
உலகமீ ரேழு மாளுஞ் செல்வத்து ளுறைதியென்றான். 821

சீதை சீறியுரைத்தல்

செவிகளைத் தளிர்க்கை யாலே சிக்குறச் சேமஞ் செய்தாள்
கவினும்வெஞ் சிலைக்கைவென்றிக் காகுத்தன் கற்பி
னேனைப்
புவியிடை யொழுக்க நோக்காப் பொங்கெரிப் புனித ரீயும்
அவியைநாய் வேட்டதென்ன என்சொனா யரக்கவென்னா.

இராவணன் வணங்குதல்

அணங்கினுக் கணங்க னைய்யின் னைசநோ யகத்துப்
பொங்க
உணங்கிய வுடம்பி னேனுக் குயிரினை யுதவி யும்பர்க்
கணங்குழை மகளிர்க் கெல்லாம் பெரும்பதங் கைக்கொ
ளென்னா
வணங்கின னுலகந் தாங்கு மலையினும் வலிய தோளான்.

பன்னசாலையைப் பேர்த்தெடுத்தல்

ஆண்டா யிடைதீ யவனா யிழையைத்
தீண்டா லெனுமே லுரைசிந் தைசெயாத்
தூண்டா னெனலா முயர்தோள் வலியாற்
கீண்டா னிலம்யோ சனைகீ ழொடுமேல். 824

சீதை புலம்புதல்

விடுதே ரெனவெங் கனல்வெந் தழியும்
கொடிபோல் புரள்வாள் குலைவா ளயர்வாள்
துடியா விழுவாள் துயரா லெழுவாள்
கடிதா வறனே யிதுகா வெனுமால். 825

மலையே மரனே மயிலே குயிலே
கலையே பிணையே களிறே பிடியே
நிலையா வுயிரே னிலதே றினர்போய்
உலையா வலியா ருழைநீ ருரையீர். 826

நிருதா தியர்வே ரறநீண் முகில்போல்
சரதா ரைகள்வீ சினிர்சார் கிலிரோ
வரதா விளையோய் மறுவே துமிலாப்
பரதா விளையோய் பழிபூ ணுதிரோ. 827

மீட்டுமொன் றுரைசெய்வாணீவீரனேல்விரைவின்மற் றுன்
கூட்டரா மரக்கர் தம்மைக் கொன்றுங்கைகொங்கைமூக்கும்
வாட்டினர் வனத்தி லுள்ளார் மானுட ரென்ற வார்த்தை
கேட்டுமிம் மாயஞ் செய்த தச்சத்தின் கிளர்ச்சி யன்றே.

இராவணன்

மொழிதரு மளவி னங்கை கேளிது முரணில் யாக்கை
இழிதரு மனித ரோடே யான்செரு வேற்ப லென்றால்
விழிதரு நெற்றி யான்றன் வெள்ளிவெற் பெடுத்த தோட்குப்
பழிதரு மதனிற் சாலப் பயன்றரும் வஞ்சமென்றான். 829

சடாயு எதிர்தல்

பாழிவன்கிரிகளெல்லாம்பறித்தெழுந்தொன்றொன்று
பூழியி னுதிர விண்ணிற் புடையுறக் கிளர்ந்து பொங்கி
ஆழியு முலகுமொன்று யழிதர முழுதும் வீசும்
ஊழிவெங் காற்றி தென்ன விருசிறை யூதை மோத. 830

கெட்டாய் கிளையோ டுநின்வாழ் வையெலாம்
சுட்டா யிதுவென் னதொடங் கினைநீ
பட்டா யெனவே கொடுபத் தினியை
விட்டே குதியால் விளிகின் றிலையால். 831

பேதாய் பிழைசெய் தனைபே ருலகின்
மாதா வனையா ளைமனக் கொடுநீ
யாதா கநினைத் தனையெண் ணமிலாய்
ஆதா ரநினக் கினியா ருளரோ. 832

முத்தே வரின்மூ லமுதற் பொருளாம்
அத்தே வரிம்மா னிடரா தலினால்

எத்தே வரொடெண் ணுவதெண் ணமிலாப்
பித்தே றினையா தல்பிழைத் தனையால். 833

இராவணன் சடாயுக்குரைத்தல்

வரும்புண் டரம்வா ளியின்மார் புருவிப்
பெரும்புண் டிறவா வகைபே ருதிநீ
இரும்புண் டநிர்மீள் கினுமென் னுழைபிற்
கரும்புண் டசொன்மீள் கிலள்கா ணுதியால். 834

வீணைக் கொடியை முறித்தார்

இடிப்பொத்த முழக்கி னிருஞ்சிறை வீசி யெற்றி
முடிப்பத்தி களைப்படி யிட்டு முழங்கு துண்டம்
கடிப்பக்கடி துற்றவன் காண்டகு நீண்ட வீணைக்
கொடிப்பற்றி யொடித்துயர் வானவ ராசி கொண்டான்.

கவசத்தை யறுத்தார்.

அறுத்தானை யரக்கனு மைம்பதொ டைம்ப தம்பு
செறித்தான் றடமார்பிற் செறித்தலுந்தேவ ரஞ்சி
வெறித்தார் வெறியாமு னிராவணன் வில்லைப் பல்லால்
பறித்தான் பறவைக்கிறை விண்ணவர் பண்ணை யார்ப்ப.

இராவணன் வேல் விட்டான்.

பொன்னேக் கியர்தம் புலநோக்கிய புன்க ணேரும்
இன்னேக் கியரில் வழியெய் தியநல்லி ருந்தும்
தன்னேக் கியநெஞ் சுடையோகியர் தம்மை சார்ந்த
மென்னேக் கியர்நோக் கமுமாமென மீண்ட தவ்வேல். 837

வேகம்முடன் வேலிழந் தான்படை வேறெ டாமுன்
மாகம்மறை யும்படி நீண்ட வயங்கு மான்றேர்ப்
பாகன்றலை யைப்பறித்துப் படர்ந்த கற்பி னுள்பால்
மோகம்படைத் தானுளை வெய்த முகத்தெ றிந்தான். 838

இராவணன் தண்டாலடிக்க சடாயு வீழ்ந்தனர்.

மண்மேல் விழுந்தான் விழலோடும் வயங்குமான்றேர்க்
கண்மேலொளியுந் தொடராவகை தான்கடாவி
விண்மேலெழுந்தா னெழுமெல்லிய லாளும்வெந்தீப்
புண்மேனுழையத் துடிக்கின்றனள்போற் புரண்டாள். 839

கொழுந்தேயனை யாள்குழைந்தேங்கியகொள்கைகண்டான்
அழுந்தே லவலத்திடை யஞ்சலை யன்னை யென்று

எழுந்தானுயிர்த் தானட வெங்கினிப் போவதென்று
விழுந்தானவன் றேர்மிசை விண்ணவர்பண்ணை யார்ப்ப.

மாச்சிச்சிரம் பாய்ந்தவன் மார்பினுந் தோள்கண் மேலும்
ஓச்சிச்சிற காற்புடைத் தான்கடித் தானுலையா
மூச்சிற் றவிரா வணனும் முடிசாய்ந் திருந்தான்
போச்சித்தனை போலுநின் னுற்றலெ னப்பு கன்றுன். 841

இராவணன், சிவன் தந்த வாளால் சிறை வெட்டுதல்

வலியின்றலை தோற்றிலன் மாற்றருந் தெய்வ வாளால்
நலியுந்தலை யென்றஃ தன்றியும் வாழ்க்கை நாளும்
மெலியுங்கடை சென்றுள தாகலின் விண்ணின் வேந்தன்
குலிசம்மெறி யச்சின்ற யற்றதொர் குன்றின் வீழ்ந்தான்.

சீதை துயரம்

விரிந்தார்சிறை கீழுற வீழ்ந்தனன் மண்ணின் விண்ணோர்
இரிந்தாரிழந் தாள்துணை யென்னமுனிக்க ணங்கள்
பரிந்தார்படர் விண்டுவி ஞட்டவர் பைம்பொன் மாரி
சொரிந்தாரது நோக்கிய சீதை துளக்க முற்றுள். 843

வெள்கும்மரக் கன்னெடு விண்புக வார்த்து மிக்கான்
தொள்கின்றலை யெய்திய மானெனச் சோர்ந்து நைவாள்
உள்கும்முயிர்க் கும்முயங் கும்மொரு சார்வு காணுள்
கொள்கொம்பொடி யக்கொடி வீழ்ந்தது போற்குலைந்தாள்.

அல்லலுற் றேனைவந் தஞ்ச லென்றவிந்
நல்லவன் றேற்பதே நரகன் வெல்வதே
வெல்வதும் பாவமோ வேதம் பொய்க்குமோ
இல்லையோ வறமென விரங்கி யேங்கினுள். 845

கற்பழி யாமையென் கடமை யாயினும்
பொற்பழி யாவலம் பொருந்தும் போர்வலான்
விற்பழி யுண்டது வினையி னேன்வந்த
இற்பழி யுண்டதென் றிரங்கி யேங்கினுள். 846

எல்லையில் விசும்பிடை யிருந்த நேமியாய்
சொல்லிய லாய்நெறி தொடர்ந்த தோழமை
நல்லிய லருங்கடன் கழித்த நம்பியைப்
புல்லுதி யோவெனப் பொருமிப் பொங்கினுள். 847

இராவணன் பன்னசாலையைத்
தோள்மேற்கொண்டு சென்றுன்.

18

ஏங்குவாள் தன்மையு மிறகி ழந்தவன்
ஆங்குறு தன்மையு மரக்க ஞேக்கினன்
வாங்கினன் றேரிடை வைத்த மண்ணெடும்
வீங்குதோண் மீக்கொடு விண்ணி னேகினன். 848

சடாயு வருந்துதல்

வந்திலர் மைந்தர்நம் மருகிக் கெய்திய
வெந்துயர் துடைத்தன ரென்னு மெய்ப்புகழ்
தந்திலர் விதியினர் தரும வேலியைச்
சிந்தினர் மேலினிச் செயலென் னுங்கொலோ. 849

வெற்றிய ருளரெனின் மின்னி னுண்ணிடைப்
பொற்றெருடிக் கிங்கிலை புகுதற் பாலதோ
உற்றதை யின்னதென் றுணர கிற்றிலேன்
சிற்றவை வஞ்சனை முடியச் செய்ததோ. 850

பஞ்சனை பாம்பணை யாகப் பள்ளிசேர்
அஞ்சன வண்ணனே யிராம னுதலால்
வெஞ்சின வரக்கனல் வெல்லற் பாலனே
வஞ்சனை யிழைத்தன்ன கள்ள மாயையால். 851

வேரற வரக்கரை வென்று வெம்பழி
தீருமென் சிறுவனுந் தீண்ட வஞ்சுமால்
ஆரியன் றேவியை யரக்க னன்மலர்ப்
பேருல களித்தவன் பிழைப்பில் சாபத்தால். 852

பருஞ்சிறை யின்னன பன்னி யுன்னுவான்
அருஞ்சிறை யுற்றன ளாமெ னுமனம்
பொருஞ்சிறை யிற்றதேற் பூவை கற்பெனும்
இருஞ்சிறை யிறுதென விடரு நீங்கினன். 853

சடாயு மூர்ச்சித்தார்.

சீதையைச் சிறை வைத்தல்

வஞ்சியை யரக்கனும் வல்லை கொண்டு போய்ச்
செஞ்செவே திருவுருத் தீண்ட வஞ்சுவான்
நஞ்சிய லரக்கியர் நடுவ ணுயிடைச்
சிஞ்சுப வனத்திடைச் சிறைவைத் தானரோ. 854

"மூக்கறை மட்டை மகாபல காரணி
சூர்ப்பந கைப்படு மூளி யுதாசனி
மூர்க்க குலத்தி விபீஷணர் சோதரி

முழுமோடி

மூத்த அரக்கன் இராவண னேடியல்
பேற்றி விடக்கம லாலய சீதையை
மோட்டன் வளைத் தொரு தேர்மிசை யேகொடு
முகிலேபோய்

மாக்கன சித்திர கோபுர நீள்படை
வீட்டி லிருத்திய நாளவன் வேரற
மார்க்க முடித்த விலாளிகள் நாயகன் மருகோனே''
—(தாக்கமருக்கொரு) திருப்புகழ்.

சீதை பிரிந்ததன் உள்ளீடு

1. பெண்கள் கணவன் திருவடியை யன்றி வேறு ஒன்றை யும் விரும்புதல் கூடாது; அடியார்களும் இறைவன் இணையடி யன்றி எதனையும் விரும்பார்கள். ''கூடும் அன்பினில் கும்பி டலே யன்றி வீடும்வேண்டா விறலின் விளங்குவார்''.

இந்த நெறியை யுடைய சீதை, அதினின்றும் மாறினால் இடரெய்துவர் என்பதை உலகுக்கு உணர்த்தும் பொருட்டு மானை விரும்பினாள். அதனால் பத்துமாதம் பரவரல் உற்றாள். கற்புடையமாதர் கணவனையன்றி வேறு ஒரு பொருளை விளை யாட்டாகவும் விரும்பக் கூடாது என்பது போதருகின்றது.

2. கற்புடைய மாதர் கணவனுக்கு இப்பொருளைத்தாரும் என்று கட்டளை யிடக்கூடாது. அடியார்களும் ஒருபொருளைக் கொடு என்று இறைவனிடம் யாசிக்கமாட்டார்கள். ''வேண்டத் தக்க தறிவோய் நீ'' என்பர்.

சீதை மான்பற்றித் தாரும் என்று கணவனை ஏவியபடியா லும் கவன்றனள் என்பதை யுணர்க.

3. ஆடவர் மனைவியின் சொற்படி நடப்பதுகூடாது. மங்கையர்க்கரசியார் போன்ற உத்தமபத்தினிகள் சொற்படி நடப்பதனாலே நன்மை பயக்கும். உத்தமபத்தினியாகிய சீதை சாமானிய பணியில் கணவனை ஏவினாள். அப்பணியை மேற் கொண்டதனால் இராமரும் துயருற்றனர். ஆகவே பெண் ணேவல் பெருந்துயர் விளைவிக்கும் என்பதும் அறிக. பெண் ணேவலினால்பெருந்துயர்என்பதை இராமர் உலகுக்குணர்த்தினார்.

இலட்சுமணர் மனநிலை

ஒருமகள் தனிமையை யுன்னி யுள்ளுறும்
பருவரன் மீதிடப் பதைக்கு நெஞ்சினான்
பெருமகன் றனைத்தனி பிரிந்து பேதுறும்
திருநகர் தீரும்ப் பரதன் செய்கையான்.

இராமர் எண்ணுதல்

புன்சொற் கடந்த பகுவா யரக்க
னுரைபொய் யெனுது புகல்வாள்
வன்சொற் கடந்து மடமங் கையேவ
நிலேதேர வந்த மருளே
தன்சொற் கடந்து தளர்கின் றநெஞ்ச
முடையேன் மருங்கு தனியே
என்சொற் கடந்து மனமுந் தளர்ந்த
விளவீரன் வந்த வியல்பே. 856

இலட்சுமணர்

ஏகாது நிற்றி யெனின்யா னெருப்பி
னிடைவீழ்வெ னென்று முடுகா
மாகா னகத்தி னிடையோ டலோடு
மனமஞ்சி வஞ்ச வினேயேன்
போகா திருத்தி னிறவா திருக்கை
புணரா ளெனக்கொ டுணரா
ஆகா திறக்கை யறனன் றெனக்கொ
டிவன்வந்த தென்ன வமலன். 857

இராமர்

வந்தாய் திறத்தி னுளதன் றுகுற்ற
மடவாண் மறுக்க முறுவாள்
சிந்தா குலத்தொ டுரைசெய் தசெய்கை
யதுதீரு மென்று தெளிவாய்
முந்தே தடுக்க வொழியா தெடுத்த
வினேயேன் முடித்த முடிவால்
அந்தோகெடுத்த தெனவுன்னியுன்னி
யழியாத வுள்ள மழிவான். 858

இருவரும் வந்து பார்த்து வருந்தினர்கள்.

மண்சுழன் றது மால்வரை சுழன்றது மதியோர்
எண்சுழன் றது சுழன்றதவ் வெறிகட லேழும்
விண்சு ழன்றது வேதமுஞ் சுழன்றது விரிஞ்சன்
கண்சு ழன்றது சுழன்றது கதிரொடு மதியும். 859

அறத்தைச் சீறுங்கொ லருளேயே சீறுங்கொ லமரர்
திறத்தைச்சீறுங்கொன் முனிவரைச் சீறுங்கொல் தீயோர்

மறத்தைச் சீறுங்கொ லென்கொலோ முடிவென்று
மறையின்
நிறத்தைச் சீறுங்கொல் நெடுந்தகை யோனென நடுங்கா.

இலட்சுமணர்

தேரி னுழியுந் தெரிந்தனந் தீண்டுத லஞ்சிப்
பாரி னேடுகொண் டகழ்ந்ததும் பார்த்தனம் பயனின்
றோருந் தன்மையீ தென்னென்ப துரனிலா தவர்போல்
தூரம் போதன்முன் றொடர்துமென் றிளையவன் றொழுதும்.

அவ்வழியே சென்றார்கள்.

மண்ணின் மேலவன் றேர்சென்ற சுவடெலா மாய்ந்து
விண்ணி னோங்கிய தொருநிலை மெய்யுற வெந்த
புண்ணி னூடுறு வேலென மனமிகப் புழுங்கி
எண்ணி நாமினிச் செய்வதென் னிளவலே யென்றான். 862

'தெற்கு நோக்கிப்போவோம்' என்று, இளையவர் கிளம்பினர்.

ஆகு மன்னதே கருமமென் றத்திசை நோக்கி
ஏகி யோசனை யிரண்டுசென் றாரிடை யெதிர்ந்தார்
மாக மால்வரை கால்பொர மறிந்தது மானப்
பாக வீணையின் கொடியொன்று கிடந்தது பார்மேல். 863

நோக்கி னுலைய நொய்திவ ணெய்திய நுந்தை
மூக்கி னலிது முறிந்தமை முடிந்ததான் மொய்ம்பின்
தாக்கி னனடு வடுத்தது தெரிகிலந் தமியன்
யாக்கை தேம்பிடு மெண்ணரும் பருவங்க ளிறந்தான். 864

இராமர் கூறுதல்

தோள ணிக்குலம் பலவுள குண்டலத் தொகுதி
வாளி மைப்பன பலவுள மணிமுடி பலவால்
நாள னைத்தையுங் கடந்தனன் தமியனந் தாதை
யாளி போல்பவர் பலருளர் பொருதன ரிளையோய். 865

இலட்சுமணர்

திருவி னாயக னுரைசெயச் சுமித்திரை சிங்கம்
தருவி னீளிய தோள்பல தலைபல வென்றால்
பொருது தாதையை யித்தனை நெறிக்கொடு போனான்
ஒருவ னேயவ னிராவண னுமென வுரைத்தான். 866

சடாயுவைக் கண்டு இராமர் மூர்ச்சித்தல்

உயர்த்தி லன்ஞெரு நாழிகை யுணர்விலன் கொல்லென்
றயிர்த்த தம்பியுக் கங்கையி னெடுத்தன னருவிப்
புயற்க லந்தநீர் தெளித்தலும் புண்டரீ கக்கண்
வயர்த்துப் பைப்பய வயர்வுதீர்ந் தினையன பேசும். 867

இராமர் புலம்புதல்

தந்தா தையரைத் தனயர் கொலைநேர்ந்தார்
முந்தா ரேயுள்ளார் முடிந்தான் முனையொருவன்
எந்தா யோவெற் காகநீயு மிறந்தனையோ
அந்தோ வினையே னருங் கூற்ற மானேனே. 868

மாண்டே னேயன்ருே மறையோர் குறைமுடிப்பான்
பூண்டேன் விரத மதனு னுயிர் பொறுப்பேன்
நீண்டேன் மரம்போல நின்ருெழிந்த புன்ருெழிலேன்
வேண்டேனிம் மாமாயப் புன்பிறவி வேண்டேனே. 869

என்ருரம் பற்றுண்ண வேன்ருயைச் சான்ருேயைக்
கொன்ருனு நின்ருன் கொலையுண்டு நீகிடந்தாய்
வன்ருட் சிலையேந்தி வாளிக் கடல்சுமந்து
நின்றேனு நின்றே னெடுமரம்போல் நின்றேனே. 870

சொல்லுடையா ரென்போ லினியுளரோ தொல்வினையேன்
இல்லுடையாள் காண விறகுடையா யெண்ணிலாப்
பல்லுடையா யுன்னைப் படையுடையான் கொன்றகல
வில்லுடையே னின்றேன் விறலுடையே னல்லேனே. 871

சடாயு மூர்ச்சை தெளிந்தார்

உற்ற துணரா துயிருலைய வெய்துயிர்ப்பான்
கொற்றவனைக் கண்டான்ற னுள்ளங் குளிர்ப்புற்ருன்
இற்ற விருசிறகு மின்னுயிரு மேழுலகும்
பெற்றனனே யொத்தான் பெயர்த்தேன் பழியென்ருன்.

பாக்கியத் தாலின்றென் பயனில் பழியாக்கை
போக்குகின்றேன் கண்ணுற்றேன் புண்ணியரே
வம்மினென்று
தாக்கி யரக்கன் மகுடத் தலைதுமித்த
மூக்கினு லுச்சி முறைமுறையே மோக்கின்ருன். 873

வஞ்சனையால் வந்த வரவென்ப தென்னுடைய
நெஞ்சகமே முன்னே நினைவித்த தானுலும்

அஞ்சொல் மயிலை யருந்ததியை நீங்கினிரோ
எஞ்ச லிலாவாற்ற லிருவீரு மென்றுரைத்தான். 874

நிகழ்ந்ததை இளையவர் கூறினர்.
சடாயு அறவுரை

அதிசய மொருவரா லமைக்க லாகுமோ
துதியறு பிறவியி னின்ப துன்பந்தான்
விதிவய மென்பதை மேற்கொ ளாவிடின்
மதிவலி யான்விதி வெல்ல வல்லமோ. 875

பொங்குவெங் கோளரா விசும்பு பூத்தன
வெங்கதிர்ச் செல்வனை விழுங்கி நீங்குமால்
அங்கண்மா ஞாலத்தை விளக்கு மாய்கதிர்த்
திங்களு மொருமுறை வளருந் தேயுமால். 876

வடுக்கண்வார் கூந்த லாளை யிராவணன் மண்ணி னோடும்
எடுத்தன னேகுவானை யெதிர்ந்தென தாற்றல் கொண்டு
தடுத்தனெ னவை தெல்லாந் தவத்தரன் றந்த வாளால்
படுத்தன னிங்கு வீழ்ந்தே னிதுவின்று பட்ட தென்றான்.

இராமரது சீற்றம்

கூறின மாற்றஞ் சென்று செவித்தொளை குறுகாமுன்னங்
ஊறின வுதிரஞ் செங்க ணுயிர்த்தன வுயிர்ப்புச் செந்தீ
ஏறின புருவ மேன்மே லிரிந்தன சுடர்க ளெங்கும்
கீறின தண்ட கோளங் கிழிந்தன கிரிக ளெல்லாம். 878

மண்ணகந் திரிய நின்ற மால்வரை திரிய மற்றைக்
கண்ணகன் புனலுங் காலுங் கதிரொடுந் திரியக் காவல்
விண்ணகந் திரிய மேலை விரிஞ்சனுந் திரிய வீரன்
எண்ணரும்பொருள்களெல்லா மென்பதுதெரிந்ததன்றே.

பெண்டனி யொருத்தி தன்னைப்பேதைவா ளரக்கன்பற்றி
கொண்டன னேக நீயிக் கோளுறக் குலுங்கல் செல்லா
எண்டிசை யிறுதி யான வுலகங்க ளிவற்றை யின்னே
கண்டவா னர்வக ளோடுங் களையுமா றின்று காண்டி. 880

உலகம் அஞ்சுதல்

வெஞ்சுடர்க் கடவுண் மீண்டு மேருவின் மறையலுற்றான்
எஞ்சலி ரிசையி னின்ற யானையு மிரியல் போய
துஞ்சின வுலக மெல்லா மென்பதென் றுணிந்த நெஞ்சின்
அஞ்சின னிளைய கோவு மயலுளோர்க் கவதி யுண்டோ.

சடாயு ஆறுதல் அறைதல்

தெண்டிரை யுலகந் தன்னிற் செறுநர்மாட் டேவல்செய்து
பெண்டிரின் வாழ்வ ரன்றே யிதுவன்றோ தேவர்பெற்றி
பண்டுல களந்தோ னல்கப் பாற்கட லமுத மந்நாள்
உண்டில யிரா னிந்நா ளன்னவர்க் குய்த லுண்டோ. 882

வம்பிழை கொங்கை வஞ்சி வனத்திடைத் தமியள் வைகக்
கொம்பிழை மானின் பின்போய்க் குலப்பழி கூட்டிக்
கொண்டீர்
அம்பிழை வரிவிற் செங்கை யையன்மீ ராயுங் காலை
உம்பிழை யென்ப தல்லா லுலகஞ்செய் பிழையு முண்டோ.

ஆதலான் முனிவா யல்லை யருந்ததி யனைய கற்பிற்
காதலாள் துயர நீக்கித் தேவர்தங் கருத்து முற்றி
வேதநூன் முறையின் யாவும் விதியுளி நிறுவி வேறும்
தீதுள துடைத்தி யென்றான் சேவடிக் கமலஞ் சேர்வான்.

இராமர் சினமகன்று கூறுதல்

ஆயபின் னமலன் றானு மையநீ யமைதி யென்ன
வாயிடை மொழிந்த தன்றி மற்றொரு செயலு முண்டோ
போயதவ் வரக்க னெங்கே புகலெனப் புள்ளின் வேந்தன்
ஓய்வின னுணர்வுந் தேய வுரைத்தில னுயிருந் தீர்ந்தான்.

சடாயு முத்தி

சீதங்கொண் மலரு ளோனுந் தேவரு மென்ப தென்னே
வேதங்கள் காண்கி லாமை வெளிநின்றே மறையும் வீரன்
பாதங்கள்கண்ணிற்பார்த்தான் படிவங்கொ ணெடியபஞ்ச
பூதங்கள் விளியு நாளும் போக்கிலா வுலகம் புக்கான். 886

இராமர் தனது கரங்களால் சடாயுவின் உடம்பை மந்திர நெருப்பால் எரித்து நீர்க்கடன்செய்தார். கதிரவன் மறைந்தான்.

அயோமுகிப் படலம்

இரவில் இராமர் இடர்ப்படுதல்

பூண்ட மானமும் போக்கருங் காதலும்
தூண்ட நின்றிடை தோமுறு மாருயிர்
மீண்டு மீண்டு வெதுப்ப வெதும்பினான்
வேண்டு மோவெனக் கின்னமும் வில்லென்பான். 887

வில்லை நோக்கி நகுமிக வீங்குதோட்
கல்லை நோக்கி நகுங்கடைக் கால்வரும்
சொல்லை நோக்கித் துணுக்கெனுந் தொன்மறை
எல்லை நோக்கினர் யாவரு நோக்குவான். 888

நின்று பல்லுயிர் காத்தற்கு நேர்ந்தயான்
என்று ணைக்குல மங்கையொ ரேந்திழை
தன்று யர்க்குத் தகவிலெ னாயினேன்
நன்று நன்றென் வலியென நாணுமால். 889

சாயுந் தம்பி திருத்திய தண்டளிர்
தீயு மங்கவை தீர்கெனுஞ் செவ்விருந்
தாயு மாவி புழுங்க வழுங்குமால்
வாயு நெஞ்சு புலர மயங்குவான். 890

பொழுது விடிந்தது. பதினெட்டு யோசனை தொலைநடந்து
கடந்து, கிரவுஞ்சாரண்யத்தை|யடைந்தனர்.

இரவு வந்தது; எங்கும் இருள்.

அரண்டரு குஞ்செறி யஞ்சன புஞ்சம்
முரண்டன போலிரு ளெங்கணு முந்தத்
தெருண்டறி வில்லவர் சிந்தையின் முந்தி
இருண்டன மாதிர மெட்டு மிரண்டும். 891

நீர் கொணருமாறு தம்பிக்கு இராமர் கட்டளையிடுதல்

அவ்விடை யெய்திய வண்ணலி ராமன்
வெவ்விடை போலிள வீரனை வீர
இவ்விடை நாடினை நீர்கொணர் கென்றான்
தெவ்விடை வில்லவ னுந்தனி சென்றான். 892

அயோமுகி வருதல்

எங்கணு நாடினன் நீரிடை காணான்
சிங்கமெ னத்தமி யன்றிரி வானை
அங்கவ னத்து ளயோமுகி யான
வெங்கண ரக்கி விரும்பினள் கண்டாள். 893

அழுந்திய சிந்தை யரக்கி யலக்கண்
எழுந்துயர் காதலின் வந்தெதிர் நின்றாள்
புழுங்குமென் னேவொடு புல்லுவெ னன்றி
விழுங்குவெ னேவென விம்மலு ழன்றாள். 894

அவள் தன்மை

உயிர்ப்பி னெருப்புமிழ் கின்றன ளொன்ற
எயிற்றின் மலைக்குல மென்றினி துண்ணும்
வயிற்று வயக்கொடு மாசுணம் வீசு
கயிற்றினி சைத்த முலைக்குழி கண்ணுள். 895

பற்றிய கோளரி யாளி பணிக்கண்
தெற்றிய பாத சிலம்பு சிலம்ப
இற்றுக யாவையு மீறுறு மந்நாள்
முற்றிய ஞாயிறு போலு முகத்தாள். 896

ஆழி வறக்க முகக்க வமைந்த
மூழை யெனப்பொலி மொய்பில வாயாள்
கூழை புறத்து விரிந்ததொர் கொட்பால்
ஊழி நெருப்பி னுருத்தனை யொப்பாள். 897

நீளர வச்சரி தாழ்கை நிரைத்தாள்
ஆளர வப்புலி யார மணைத்தாள்
யாளி யினைப்பல தாலி யிசைத்தாள்
கோளரி யைக்கொடு தாழ்குழை யிட்டாள். 898

இலட்சுமணர் அவளைக் காணல்

நின்றன ளாசையி னீர்கலு ழுங்கண்
குன்றிநி கர்ப்ப குளிர்ப்ப விழிப்பாள்
மின்றிரி கின்ற வெயிற்றின் விளக்கால்
கன்றிரு ளிற்றிரி கோளரி கண்டான். 899

பண்டையி னூசி யிழந்து பதைக்கும்
திண்டிற லாளொடு தாடகை சீராள்
கண்டக ராயவ ரக்கர் கணத்தோர்
ஒண்டொடி யாமிவ ளென்ப துணர்ந்தான். 900

பாவிய ராமிவர் பண்பிலர் நம்பால்
மேவிய காரணம் வேறிலை யென்பான்
மாவியல் கானின் வயங்கிருள் வந்தாய்
யாவள டியுரை செய்கடி தென்றான். 901

அயோமுகி

பேசின னங்கவள் பேசுற நாணுள்
ஊசலு ழன்றழி சிந்தைய ளுந்தான்

நேசமி லன்பின ளாயினு நின்பால்
ஆசையின் வந்தவ யோமுகி யென்ருள். 902

பின்னு முரைப்பவள் பேரெழில் வீரா
முன்ன மொருத்தர் தொடாமுலை யோடும்
பொன்னின் மணித்தட மார்பு புணர்ந்தென்
இன்னுயி ரைக்கடி தீகுதி யென்ருள். 903

இலட்சுமணர்

ஆறிய சிந்தைய ளஃதுரை செய்யச்
சீறிய கோளரி கண்கள் சிவந்தான்
மாறில வார்கணை யிவ்வுரை வாயில்
கூறிடி னின்னுடல் கூறிடு மென்ருன். 904

அயோமுகி

வெங்கத மில்லவள் பின்னரு மேலோய்
இங்குந றும்புனல் நாடுதி யேலுன்
அங்கையி னுலெனை யஞ்சலை யென்ருல்
கங்கையி னீர்கொணர் வென்கடி தென்ருள். 905

இலட்சுமணர்

சுமித்திரை சேயவள் சொன்னசொ லன்ன
கமித்தில னின்னிரு காதொடு நாசி
துமிப்பதன் முன்பக லென்பது சொல்ல
இமைத்திலள் நின்றன ளின்னநி னைந்தாள். 906

இளையோனை எடுத்து விண்ணிடை போகின்ருள்

மந்தரம் வேலையில் வந்ததும் வானத்
திந்திர னூர்பிடி யென்னலு மானள்
வெந்திறல் வேல்கொடு சூரடும் வீரச்
சுந்தர னூர்தரு தோகையு மொத்தாள். 907

இராமர் வருந்துதல்

வெய்தா கியகா னிடைமே வருநீர்
ஐதா தலினே வயலொன் றுளதோ
நொய்தாய் வரவேகமு நொய் திலனல்
எய்தா தொழியா னிதுவென் னைகொலாம். 908

நீர்கண் டனையிவ் வழிமே டினைபோய்ச்
சார்கொண் டெனவித் துணைசார் கிலனால்
வார்கொண் டணிகொங் கையைவெள் வினர்பால்
போர்கொண் டனனே பொருளுண் டிதென. 909

அஞ்சொற் கிளியன் னவணங் கினைமுன்
வஞ்சித் தவிரா வணன்வெள் வினனே
நஞ்சிற் கொடியா னடலைத் தொழிலால்
துஞ்சுற் றனனே விதியின் றுணிவால். 910

தள்ளா வினையேன் றனியா ருயிராய்
உள்ளா யொருநீ யுமொளித் தனையோ
பிள்ளாய் பெரியாய் பிழைசெய் தனையால்
கொள்ளா வுலகுன் னையிதோ கொடிதே. 911

என்னைத் தருமெந் தையையென் னையரைப்
பொன்னைப் பொருகின் றபொலங் குழையாள்
தன்னைப் பிரிவே னுளென வதுதான்
உன்னைப் பிரியா தவுயிர்ப் பலவோ. 912

இன்றே யிறவா தொழியே னெமரோ
பொன்று தொழியார் புகல்வா ருளரோ
ஒன்று கியவுன் கிளையோ ரையெலாம்
கொன்றாய் கொடியா யிதுவுங் குணமோ. 913

இராமர் உயிர்விடத் துணிதல்

அறப்பா லுளதே லவன்முன் னவனைப்
பிறப்பா னுறின்வந் துபிறக் கவென
மறப்பால் வடிவாள் கொடுமன் னுயிரைத்
துறப்பா னுறுகின் றதொடர்ச் சியின்வாய். 914

இலட்சுமணர் அயோமுகியை நாசியறிதல்

பேர்ந்தா னெடுமா யையினிற் பிரியா
ஈர்ந்தா னவள்நா சிபிடித் திளையோன்
சேர்ந்தா ளிடுபூ சல்செவித் தொளையில்
சேர்ந்தார் தலுமே திருமா றெருளா. 915

அவள் குரல் கேட்டு இராமர் அரக்கியென அறிதல்

பரற்றரு கானகத் தரக்கர் பல்கழல்
முரற்றரு வெஞ்சம முரல்கின் றாரெதிர்

உரற்றிய வோசையன்றெருத்தி யூறுபட்
டரற்றிய குரலவ ளரக்கி யேகொலாம். 916

அங்கியி னெடும்படை வாங்கி யங்கது
செங்கையிற் கரியவன் றிரிக்கு மெல்லையில்
பொங்கிரு ளப்புறத் துலகம் புக்கது
கங்குலும் பகலெனப் பொலிந்து காட்டிற்றே. 917

இளையவர் வந்து ஆறுதல் கூறுதல்

வந்தனெ னடியனேன் வருந்தல் வாழிநின்
அந்தமி லுள்ளமென் றறியக் கூறுவான்
சந்தமென் றளிர்புரை சரணஞ் சார்ந்தனன்
சிந்தின நயனம்வந் தனைய செய்கையான். 918

இலக்குவன் நிகழ்ந்தது கூறுதல்

தழுவினன் பன்முறை தாரைக் கண்ணினீர்
கழுவின னண்டவன் கனக மேனியை
வழுவினை யாமென மனக்கொ டேங்கினேன்
எழுவென மலையென இயைந்த தோளினாய். 919

என்னையங் கெய்திய தியம்பு வாயென
அன்னவ னஃதெலா மறியக் கூறலும்
இன்னலு முவகையு மிரண்டு மெய்தினன்
தன்னலா தொருபொருள் தனக்கு மேலிலான். 920

இராமர் மகிழ்தல்

தொல்லிருள் தனைக்கொலத் தொடர்கின் றாளையும்
கொல்லலை நாசியைக் கொய்து நீக்கினாய்
வல்லைநீ மனுமுதன் மரபி னோயெனப்
புல்லின னுவகையிற் பொருமி விம்முவான். 921

பேருந் துயரறப் பேர்ந்து ளோரென
வீரனுந் தம்பியும் விடிவு நோக்குவார்
வாருண நினைந்தனர் வான நீரினால்
தாரணித் தங்கொரு கிரியிற் றங்கினார். 922

இராமர் பள்ளி கொள்ளுதல்

கல்லகல் வெள்ளிடைக் கான கத்துள
பல்லவ மலர்கொடு படுத்த பாயலின்
எல்லையில் துயரினோ டிருந்து சாய்ந்தனன்
மெல்லடி யிளையவன் வருட வீரனே. 923

கவந்தப் படலம்

பொழுது விடிந்தது

நிலம்பொறை யிலதென நிமிர்ந்த கற்பினள்
நலம்பொறை கூர்தரு மயிலை நாடிய
அலம்புறு பறவையு மழுவ வாமெனப்
புலம்புறு விடியலிற் கடிது போயினார். 924

நடுபகலில் ஏகவந்தவனம் அடைந்தனர்

ஐயைந் தடுத்த யோசனையி
னிரட்டி யடவி புடைபடுத்த
வையந் திரிந்தார் கதிரவனும்
வானி னுப்பண் வந்துற்றான்
எய்யுஞ் சிலைக்கை யிருவருஞ்சென்
றிருந்தே நீட்டி யெவ்வுயிரும்
கையின் வளைத்து வயிற்றடக்குங்
கவந்தன் வனத்தின் கண்ணுற்றார். 925

கவந்தன் கையில் அகப்பட்ட உயிர்களின் தன்மை

மரபுளி நிறுத்திலன் புரக்கு மாண்பிலன்
உரனிலா னொருவனுட் டுயிர்கள் போல்வன
வெருவுவ சிந்துவ குவிவ விம்மலோ
டிரிவன மயங்குவ வியல்பு நோக்கினார். 926

இராமர் கூறுதல்

இளவலை நோக்கின னிராம னேழையை
உளைவுசெ யிராவண னுறையு மூருமிவ்
வளைவைய தாகுத லறிதி யையநம்
கிளர்பெருந் துயரமுங் கீண்ட தாமென. 927

இலட்சுமணர்

முற்றிய வரக்கர்த முழங்கு தானையேல்
எற்றிய முரசொலி யேங்குஞ் சங்கிசை
பெற்றில தாகலிற் பிறிதொன் றாமெனச்
சொற்றன னிளையவன் றொழுது முன்னினான். 928

கவந்தன்முன் சென்றனர்

என்றிவை விளம்பிட விளவல் வாசகம்
நன்றென நினைந்தனன் நடந்த நாயகன்

ஒன்றிரண் டியோசனை யுள்புக் கோங்கரு
ஞின்றெனை விருந்தவக் கவந்த னேர்சென்றார். 929

கவந்தன் தன்மை

வெயிற்சுட ரிரண்டினை மேரு மால்வரை
குயிற்றிய வாமெனக் கொதிக்குங் கண்ணினன்
எயிற்றிடைக் கிடையிரு காத மீட்டிய
வயிற்றிடை வாயெனு மகர வேலையான். 930

தொகைக்கனற் கருமகன் றுருத்தித் தூம்பெனப்
புகைக்கொடி கனலொடு பொடிக்கு மூக்கினன்
பகைத்தகை நெடுங்கடற் பருகும் பாவகன்
சிகைக்கொழுந் திதுவெனத் திருகு நாவினன். 931

இராம லட்சுமணர் காணுதல்

நீர்புகு நெடுங்கட லடங்கு நேமிசூழ்
பார்புகு நெடும்பகு வாயைப் பார்த்தனர்.
சூர்புக லரியதோ ரரக்கர் தொன்மதில்
ஊர்புகு வாயிலோ விதுவென் றுன்னினர். 932

இலட்சுமணர்

அவ்வழி யிளையவ னமர்ந்து நோக்கிய
வெவ்விய தொருபெரும் பூதம் வில்வலாய்
வவ்விய தன்கையின் வளைத்து வாய்ப்பெயும்
செய்வதெ னிவணெனச் செம்மல் சொல்லுவான். 933

இராமர்

பாரிட மேயிது பரவை சுற்றுறும்
பாரிட மரிதெனப் பரந்த மெய்யது
பாரிடம் வலம்வரப் பரந்த கையது
பாரிடந் தெடுத்தமா வனைய பாழியாய். 934

தோகையும் பிரிந்தன ளெந்தை துஞ்சினன்
வேகவெம் பழிசுமந் துழல வேண்டலேன்
ஆதலின் யானினி யிதனுக் காமிட
மேகுதி யீண்டுநின் றிளவலே யென்றான். 935

இல்லியல் புடையநீ ரளித்த வின்சொலாம்
வல்லியவ் வரக்கர்தம் மனையு ளாளெனச்
சொல்லிநன் மலையெனச் சுமந்த தூணியென்
வில்லினென் செல்வெனோ மிதிலை வேந்தன்பால். 936

இலட்சுமணர்

ஆண்டா னின்னன பன்னிட வையற் கிளைவீரன்
ஈண்டியா னுன்பின் னேகிய பின்னிவ் விடர்வந்து
மூண்டான் முன்னே யாருயி ரோடு முடியாதே
மீண்டே போதற்காமெனி னன்றென்விளையென்ருன். 937

என்ரு யுன்முன் னேவிய யாவு மிசையின்னல்
பின்ரு தெய்திப் பேரிசை யாளற் கழிவுண்டேல்
பொன்ரு முன்னம் பொன்றுதி யென்ரு னுரைபொய்யா
நின்ரு லன்ரே நிற்பது வாய்மை நிலையம்மா. 938

ஓதுங் காலப் பல்பொருண் முற்றுற் ருருவாத
வேதஞ் சொல்லுந் தேவரும் வீயுங் கடைவீயாய்
மாதங் கந்தின் றுய்ந்திவ் வனத்தின் றலைவாழும்
பூதங் கொல்லப் பொன்றுதி போலும் பொருளுண்டோ.

இருவரும் மாறி மாறி முன் சென்றனர்

என்று முன்னே சொல்லுமி ளங்கோ விறையோற்கு
முன்னே செல்ல முன்னவ னன்று னினுமுந்தத்
தன்னே ரில்லாத் தம்பிந டுப்பான் பிறரில்லை
அன்னே கண்டா ரும்பரும் வெய்துற் றழுதாரால். 940

கவந்தன், 'நீவிர் யாவர்?' எனக் கேட்டனன்.
அவன் கரங்களைத் துணித்தனர்.

அழிந்து ளாரல ரிகழ்ந்தன ரென்னையென் றழன்ருன்
பொழிந்த கோபத் தன்புதுப் பொறிமயிர்ப் புறம்பொடிப்ப
விழுங்கு வேனென வீங்கலும் விண்ணுற வீரர்
எழுந்த தோள்களை வாள்களா லரிந்தன ரிட்டார். 941

அவன் நல்லுருப் பெற்று நின்ருன்.

ஆளு நாயக னங்கையிற் றீண்டிய வதனுல்
மூளுஞ் சாபத்தின் முந்திய தீவினை முடித்தான்
தோளும் வாங்கிய தோமுடை யாக்கையைத் துறவா
நீள நீங்கிய பறவையின் விண்ணுற நிமிர்ந்தான். 942

கவந்தன் துதி

ஈன்றவனே வெப்பொருளு மெல்லைதீர் நல்லறத்தின்
சான்றவனே தேவர் தவத்தின் றனிப்பயனே
மூன்றுகவ டாய் முளைத் தெழுந்த மூலமோ
தோன்றியிரு வினையேன்சாபத் திடர்தொடைத்தாய். 943

மூலமே யில்லா முதல்வனே நீ முயலும்
கோலமே யார்க்குந் தெரிவரிய கொள்கைத்தால்
ஆலமோ வாலினடை யோவடை கிடந்த
பாலனோ வாதிப் பரனோ பகராயே. 944

காண்பார்க்குங் காணப்படு பொருட்குங் கண்ணாகிப்
பூண்பாய்போல் நிற்றியால் யாதொன்றும் பூணாதாய்
மாண்பா லுலகை வயிற்றொளித்து வாங்குதியால்
ஆண்பாலோ பெண்பாலோ வப்பாலோ வெப்பாலோ. 945

ஆதிப் பிரமனுநீ யாதிப் பரமனுநீ
ஓதி யுறுபொருளுக் கப்பாலுண் டாயினுநீ
சோதிச் சுடர்ப்பிழம்பு நீயென்று சொல்லுகின்ற
வேத முறைசெய்தால் வெள்காரோ வேறுள்ளார். 946

மாயப் பிறவி மயல்நீக்கி மாசிலாக்
காயத்தை நல்கித் துயரின் கரையேற்றிப்
பேயொத்தேன் பேதைப் பிணக்கறுத்த வெம்பெருமான்
நாயொத்தே னென்ன நலனிழைத்தே னென்றான். 947

நீ யார்? என, அவன் கூறுதல்

சந்தப்பூ ணலங்கல் வீர தனுவெனு நாமத் தேனோர்
கந்தர்ப்பன் சாபத் தாலிக் கடைப்படு பிறவி கண்டேன்
வந்துற்றீர்மலர்க்கை தீண்ட முன்னுடைவடிவம்பெற்றேன்
எந்தைக்கு மெந்தை நீரே யிசைப்பது கேண்மி னென்றான்.

கணையுலாஞ் சிலையி னீரைக் காக்குந ரின்மை யேனும்
இணையிலாள் தன்னை நாடற் கேயன செய்தற் கேற்கும்
புணையிலா தவர்க்கு வேலை போக்கரி தன்ன தேபோல்
துணையிலா தவர்க்குமின்று பகைப்புலந்தொலைத்துநீக்கல்.

பழிப்பறு நிலைமை யாண்மை பகர்வதென் பதும பீடத்
துழிப்பெருந்தகைமைசான்ற வந்தணனுயிர்த்தவெல்லாம்
அழிப்பதற் கொருவ னான வண்ணலு மறிதி ரன்றே
ஒழிப்பருந் திறற்பல் பூத கணத்தொடு முறையு முண்மை.

ஆயது செய்கை யென்ப தறத்துறை நெறியி னெண்ணித்
தீயவர்ச் சேர்க்கி லாது செவ்வியோர்ச் சேர்த்துச்செய்தல்
தாயினு முயிர்க்கு நல்குஞ் சவரியைத் தலைப்பட் டன்னா
ளேயதோர் நெறியி னெய்தி யிரலையின் குன்ற மேறி. 951

கதிரவன் சிறுவனாய கனகவா ணிறத்தி னானை
எதிரெதிர் தழுவி நட்பின் இனிதமர்ந் தவணி னீண்ட

வெதிர்பொருந் தோளி னாளை நாடுதல் விழுமி தென்றான்
அதிர்கழல் வீரர் தாமு மன்னதே யமைவ தானார். 952

அவ்வண்ணமே இராமலட்சுமணர் மதங்கமலை சார்ந்தனர்.
பொழுதுபட்டது.

சவரி பிறப்பு நீங்கு படலம்

சவரியைக் கண்டு நலம் வினவல்

அன்ன தா மிருக்கை நண்ணி யாண்டுமின் றளவில் காலந்
தன்னையே நினைந்து நோற்குஞ் சவரியைத்தலைப்பட்டன்னாட்
கின்னுரை யருளித் தீதின் றிருந்தனை போலும் என்றான்
முன்னிவற்கிதுவென் றெண்ண லாவதோர்மூலமில்லான்.

விருந்து செய்தாள்

ஆண்டவ ளன்பினேத்தி யழுதிழி யருவிக் கண்ணள்
மாண்டதென் மாயப் பாசம் வந்தது வரம்பில் காலம்
பூண்டமா தவத்தின் செல்வம் போயது பிறவி யென்பாள்
வேண்டிய கொணர்ந்து நல்க விருந்துசெய் திருந்த வேலை.

ஈசனுங் கமலத் தோனு மிமையவர் யாரு மெந்தை
வாசவன் றானு மீண்டு வந்தனர் மகிழ்ந்து நோக்கி
ஆசறு தவத்திற்கெல்லை யணுகிய திராமற் காய
பூசனை விரும்பி யெம்பாற் போதுதி யென்று போனார். 955

இருந்தன னெந்தை நீயீண் டெய்துதி யென்னுந் தன்மை
பொருந்திட வின்று தானென் புண்ணியம் பூத்த தென்ன
அருந்தவத் தரசி தன்னை யன்புற நோக்கி நங்கள்
வருந்துறு துயரந் தீர்த்தா யம்மனை வாழி யென்றார். 956

சவரி சுக்கிரீவனுறைவிடங் கூறினாள்

வீட்டினுக் கமைவ தான மெய்ந்நெறி வெளியிற் றாகக்
காட்டுறு மறிஞ ரென்ன வன்னவள் கழறிற் றெல்லாங்
கேட்டன னென்ப மன்னோகேள்வியாள் செவிகண்முற்றுந்
தோட்டவ ருணர்வி னுண்ணும் அமுதத்தின் சுவையாய்நின்றான்.

சவரி முத்தி

பின்னவ ளுழன்று பெற்ற யோகத்தின் பெற்றி யாலே
தன்னுடல் துறந்து தானத் தனிமையி னினிதுசார்ந்தாள்
அன்னது கண்ட வீர ரதிசய மளவின் றெய்திப்
பொன்னடிக்கழல்க ளார்ப்பப்புகன்றமா நெறியிற்போனார்.

ஆரணிய காண்டம் முற்றிற்று.

கிட்கிந்தா காண்டம்

பம்பா நதிப் படலம்

இராமரும் இலட்சுமணரும் ரிச்ய மூக மலையில் வந்து
பம்பா நதியில் நீராடினார்கள்.

அரசு மவ்வழி நின்றரி தெய்தியத்
திரைசெய் தீர்த்தமுஞ் செய்தவ வுண்மையால்
வரைசெய் மாமத வாரண நாணுற
விரைசெய் பூம்புன லாடலை மேயினான் 959

அனுமப்படலம்

எய்தி னார்சவரி நெடிதேய மால்வரை யெளிதின்
னொய்தி னேறின ரதனி னோன்மைசேர் கவியரசு
செய்வ தோர்கில னிவர்க டெவ்வரா மெனவெருவி
உய்து நாமென விரைவி னோடினான் மலைமுழையின். 960

வாலி யனுப்ப வந்தவர்கள் என்று கருதி யஞ்சி யோடி சுக்கிரீவனுதியோர் பதுங்கினார்கள். மாருதி வந்து மறைந்து நின்று பார்க்கின்றார்.

தேவருக் கொருதலைவ ராமுதற் றேவரெனின்
மூவர்மற் றிவரிருவர் மூரிவிற் கரரிவரை
யாவரொப் பவருலகின் யாதிவர்க் கரியபொருள்
கேவலத் திவர்நிலைமை தேர்வதெக் கிழமைகொடு. 961

சிந்தையிற் சிறிதுதுயர் சேர்வுறத் தெருமரலின்
னொந்தயர்த் தனரனையர் நோவுறச் சிறியரலர்
அந்தரத் தமரரலர் மானுடப் படிவர்மயர்
சிந்தனைக் குரியபொருள் தேடுதற் குறுநிலையர். 962

தருமமுந் தகவு மிவர் தனமெனுந் தகையரிவர்
கருமமும் பிறிதொர் பொருள் கருதியன் றதுகருதின்
அருமருந் தனையதிடை யழிவுவந் துளததனை
இருமருங் கினுநெடிது துருவுகின் றனரிவர்கள். 963

கதமெனும் பொதுமையிலர் கருணையின் கடலனையர்
இதமெனும் பொருளலதொ ரியல்புணர்ந் திலரிவர்கள்
சதமனஞ் சுறுநிலையர் தருமனஞ் சுறுசரிதர்
மதனனஞ் சுறுவடிவர் மறலியஞ் சுறுவிறலர். 964

தன்கன்று கண்ட வன்ன தன்மைய தறுகட் பேழ்வாய்
மின்கன்று மெயிற்றுக் கோண்மா வேங்கையென் றினைய
வேயும்
பின்சென்று காதல் கூரப் பேழ்கணித் திரங்கு கின்ற
என்கன்று கின்ற வெண்ணிற் பற்பலவிவரை யம்மா. 965

மயின்முதற் பறவை யெல்லா மணிநிறத் திவர்கண் மேனி
வெயிலுறற் கிரங்கி மீதா விருஞ்சிறைப் பந்தர் வீசி
எயில்வகுத் தெய்து கின்ற வினமுகிற் கணங்களெங்கும்
பயில்வுறத் திவலை சிந்திப் பயப்பயத் தழுவும் பாங்கர். 966

காயெரி கனலும் கற்கள் கள்ளுடை மலர்க ளேபோல்
தூயசெங்கமலபாதந்தோய்தொறுங் குழைந்து தோன்றும்
போயின திசைகள் தோறு மரனெடு புல்லு மெல்லாம்
சாய்வுறுந் தொழுவ போலிங் கிவர்களோ தரும மாவார்.

இராமர் யார் என்று வினவ, மாருதி கூறுதல்.

மஞ்செனத் திரண்ட கோல மேனிய மகளிர்க் கெல்லாம்
நஞ்செனத் தகைய வாகி நளிரிரும் பனிக்குத் தேம்பாக்
கஞ்சமொத் தலர்ந்த செய்ய கண்ணயான் காற்றின்
வேந்தற்
கஞ்சனை வயிற்றில் வந்தே னுமமு மநும னென்றுன். 968

இம்மலை யிருந்து வாழு மெரிகதிர்ப் பரிதிச் செல்வன்
செம்மலுக் கேவல் செய்வேன் றேவநும் வரவு நோக்கி
விம்மலுற் றனையா னேவ வினவிய வந்தே னென்றுன்
எம்மலைக் குலமுந் தாழ விசைசுமந் தெழுந்த தோளான்.

இராமர் இளையானிடம் வியத்தல்

இல்லாத வுலகத் தெங்கு மிங்கிவ னிசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக் கடலுமே யென்னுங் காட்சி
சொல்லாலே தோன்றிற் றன்றே யார்கொலிச் சொல்லின்
செல்வன்
வில்லார்தோ ளிளைய வீர விரிஞ்சனோ விடைவல் லானோ.

மற்றுமிவ் வுலகத் துள்ள முனிவர்வா னவர்க ளாரிச்
சொற்றிற முடையார் மற்றைச் சுருதியின் றுகுதி யாவும்
முற்றறி தருமிம் மாணி மொழிக்கெதிர் முதல்வ ராய
பெற்றியர் மூவர்க் கேயும் பேராற்ற லரிது மன்னோ. 971

எவ்வழி யிருந்தான் சொன்ன கவிக்குலத் தரசன் யாங்கள்
அவ்வழி யவனைக் காணு மருத்தியா லணுக வந்தேம்
இவ்வழி நின்னை யுற்ற வெமக்குநீ யின்சொ லன்ன
செவ்வழி யுள்ளத் தோனைக் காட்டுதி தெரிய வென்றான்.

மாருதி

மாதிரப் பொருப்போ டோங்கி வரம்பிலா வுலகின் மற்றிப்
பூதரப் புயத்து வீரர் நும்மொக்கும் புனிதர் யாரே
ஆதரித் தவனைக் காண்டற் கணுகினி ரென்னி னன்னான்
தீதவித் தமையச் செய்த செய்தவச் செல்வ நன்றே. 973

ஒடுங்கலி லுலகம் யாவு முவந்தன வுதவி வேள்வி
தொடங்கின மற்று முற்றத் தொல்லறந் துணிவரன்றேல்
கொடுங்குலப் பகைஞ ரிகிக் கொல்லிய வந்த கூற்றை
நடுங்கினர்க் கபய நல்கு மதனினு நல்ல துண்டோ. 974

எம்மையே காத்தி ரென்றற்கெளிதரோவிமைப்பிலாதோர்
தம்மையே முதலிட் டான்ற சராசரஞ் சமைந்த வாற்றல்
மும்மையே மூலகுங் காக்கு முதல்வநீர் முருகற் செவ்வி
உம்மையே புகல்புக் கேமுக் கிதின்வரு முறுதி யுண்டோ.

யாரென விளம்பு கேனு னெங்குலத் தலைவற் கும்மை
வீரநீர்பணித்திரென்றான் மெய்ம்மையின்வேலிபோல்வான்
வார்கழ லிளைய வீரன் மரபுளி வாய்மை யாதும்
சோர்வில னிலைமையெல்லாந் தெரிவுறச்சொல்லலுற்றான்.

இளையவன்

அன்னவன் சிறுவ னுமிவ் வாண்டகை யன்னை யேவத்
தன்னுடை யுரிமைச் செல்வந் தம்பிக்குத் தகவி னல்கி
நன்னெடுங் கானஞ் சேர்ந்தா னுமமு மிராம னென்பான்
இந்நெடுஞ் சிலைவ லானுக் கேவல்செய் யடியன் யானே.

இராவணன் இழைத்த மாய நிகழ்ச்சிகளைக் கூற மாருதி அடிபணிந்தார். பணிதல் முறையன்று என்று இராமர் கூற, அநுமந்தர் தன்னுருக் காட்டி விசுவரூப மெடுத்தல்.

கண்டில னுலக மூன்றுங் காலினுற் கடந்து கொண்ட
புண்டரீ கக்கணுழிப் புரவலன் பொலன்கொள் சோதி
குண்டல வதன மென்றாற் கூறலாந் தகைமைத் தன்றால்
பண்டைநூற் கதிரோன் சொல்லப்படித்தனன்படிவமம்மா.

இராமர் வியந்து கூறுதல்

தாட்படாக் கமல மன்ன தடங்கணுன் றம்பிக் கம்மா
கீட்படா நின்ற நீக்கிக் கிளர்படா தாகி யென்றும்
நாட்படா மறைக ளாலு நவைபடா ஞானத் தாலும்
கோட்படாப் பதமே யைய குரக்குருக் கொண்டதென்ருன்.

நல்லன நிமித்தம் பெற்றே நம்பியைப் பெற்றே நம்பால்
இல்லையே துன்ப மான தின்பமு மெய்திற் றின்னும்
வில்லிஞ யிவனைப் போலாங் கவிகுலக் குரிசில் வீரன்
சொல்லிஞலேவல் செய்வா னவனிலை சொல்லற்பாற்ரே.

நட்புகோட் படலம்

மாருதி சுக்ரீவனிடம் போய் கூறுதல்.

போனமந் தரமணிப் புயநெடும் புகழிஞன்
ஆனதன் பொருசினத் தரசன்மா டணுகிஞன்
யானுமுன் குலமுமிவ் வுலகுமுய்ந் தனமெஞ
மானவன் குணமெலா நினையுமா மதியிஞன். 981

மேலவன் றிருமகற் குரைசெய்தான் விரைசெய்தார்
வாலியென் றளவிலா வலியிஞ னுயிர்தெறக்
காலன்வந் தனனிடர்க் கடல்கடந் தனமெஞ
ஆலமுண் டவனினின் றருநடம் புரிகுவான். 982

மண்ணுளார் விண்ணுளார் மாறுளார் வேறுளார்
எண்ணுளார் திசையுளா ரியலுளா ரிசையுளார்
கண்ணுளா ராயிஞர் பகையுளார் கழிநெடும்
புண்ணுளா ராருயிர்க் கமிழ்தமே போலுளார். 983

சூழிமால் யானையார் தொழுகழற் றயரதன்
பாழியா லுலகெலா மொருவழிப் படரவாழ்
ஆழியான் மைந்தர்பே ரறிவிஞ ரழகிஞர்
ஊழியா ரெளிதினிற் கரசுதந் துதவுவார். 984

நீதியார் கருணையின் னெறியிஞர் நெறிவயிற்
பேதியா நிலைமையா ரெவரினும் பெருமையார்
போதியா தளவிலா வுணர்விஞர் புகழிஞர்
காதிசேய் தருகடற் கடவுள்வெம் படையிஞர். 985

வேலிகற் சினவுதா டகைவிளிந் துருளவிற்
கோலியக் கொடுமையாள் புதல்வரைக் கொன்றுதன்

காலியற் பொடியினு னெடியகற் படிவமாம்
ஆலிகைக் கரியபே ருருவளித் தருளினன். 986

உளைவயப் புரவியா னுதவவுற் றொருசொலால்
அளவில்கற் புடையசிற் றவைபணித் தருளலால்
வளையுடைப் புணரிசூழ் மகிதலத் திருவெலாம்
இளையவற் குதவியித் தலையெழுந் தருளினன். 987

தெவ்விரா வகைநெடுஞ் சிகைவிரா மழுவினன்
அவ்விரா மனையுமா வலிதொலைத் தருளினன்
இவ்விரா கவன்வெகுண் டெழுமிரா வணையனும்
வெவ்விரா தனையிரா வகைதுடைத் தருளினன். 988

ஆயமா னுகர்தா மாழியா னேயலால்
காயமா னயினன் யாவனே காவலா
நீயமா னேர்தியா னேருமா ரீசனார்
மாயமா னயினன் மாயமா னயினன். 989

முனைவரும் பிறருமேன் முடிவரும் பகலெலாம்
இனையர்வந் துறுவரென் றியல்தவம் புரிகுவார்
வினையெனுஞ் சிறைதுறந் துயர்பதம் விரவினார்
எனையரென் றுரைசெய்கே னிரவிதன் சிறுவனே. 990

மாயையான் மதியிலா நிருதர்கோன் மனைவியைத்
தீயகா னெறியினுய்த் தனனவட் டேடுவார்
நீயையா தவமிழைத் துடைமையா னெடுமனம்
தூயையா வுடையையா லுறவினைத் துணிகுவார். 991

சுக்ரீவன் இராமரை யடைதல்

கண்டன னென்ப மன்னோ கதிரவன் சிறுவன் காமர்
குண்டலந் துறந்த கோல வதனமுங் குளிர்க்கும் கண்ணும்
புண்டரி கங்கள் பூத்துப் புயல்தழீஇப் பொலிந்த திங்கள்
மண்டல முதயஞ் செய்த மரகதக் கிரிய னானை. 992

நோக்கினா னெடிது நின்றா னெடிவருங் கமலத் தண்ணல்
ஆக்கிய உலக மெல்லா மன்றுதொட் டின்று காறும்
பாக்கியம் புரிந்த வெல்லாங் குவிந்திரு படிவ மாகி
மேக்குயர் தடந்தோள்பெற்றுவீரராய் விளைந்தவென்பான்.

கூட்டமொத்திருந்தவீரர்குறித்ததோர்பொருட்குமுன்னாள்
ஈட்டிய தவமும் பின்னர் முயற்சியு மியைந்ததொத்தார்

மீட்டும்வா ளரக்க ரென்னுந் தீவினை வேரின் வாங்கக்
கேட்டுணர் கல்வி யோடு ஞானமும் கிடைத்த தொத்தார்.

ஆயதோ ரவதி யின்க ணருக்கன்சே யரசை நோக்கித்
தீவினை தீய நோற்று ரென்னின்யார் செல்வ நின்னை
நாயக முலகுக் கெல்லா மென்னலா நலமிக் கோயை
மேயினன் விதியே நல்கின் மேவலா காதென் னென்ருன்.

மையறு தவத்தின் வந்த சவரியிம் மலையில் நீவந்
தெய்தினை யிருந்த தன்மை யியம்பினள் யாங்க ளுற்ற
கையறு துயர நின்னுற் கடப்பது கருதி வந்தோம்
ஐயநிற் றீரு மென்ன வரிகுலத் தரசன் சொல்வான். 996

சுக்ரீவன்

முரணுடைத் தடக்கையோச்சி முன்னவன் பின்வந்தேனை
இருணிலப் புரத்தின் காறு முலகெங்குந் தொடரவிக்குன்
றரணுடைத் தாகியுய்ந்தே னுருயிர் துறக்க லாற்றேன்
சரணுனைப்புகுந்தே னென்னைத்தாங்குதல்தருமமென்ருன்.

இராமர்

மற்றினி யுரைப்ப தென்னே வானிடை மண்ணி னின்னைச்
செற்றவ ரென்னைச் செற்றார் தீயரே யெனினு முன்னோ
டுற்றவ ரெனக்கு முற்று ருன்கிளை யெனதென் காதற்
சுற்றமுன் சுற்ற நீயே யின்னுயிர்த் துணைவனென்ருன்.

அனைவரு மகிழ்ந்தார்

ஆர்த்தது குரக்குச் சேனை யஞ்சனைச் சிறுவன் மேனி
போர்த்தன பொடித்த ரோமப் புளகங்கள் பூவின் மாரி
தூர்த்தனர்விண்ணோர்மேகஞ் சொரிந்தனவநகன்சொன்ன
வார்த்தையெக் குலத்து ளோர்க்கு மறையினு மெய்யென்
றுன்னு. 999

சுக்ரீவன் இருக்கைபோய் விருந்து வைத்தல்.

இராமர்

விருந்து மாகியம் மெய்ம்மை யன்பினோ
டிருந்து நோக்கிநின் றிறைவன் சிந்தியாப்
பொருந்து நன்மனைக் குரிய பூவைவயைப்
பிரிந்து ளாய்கொலோ நீயும் பின்னென்ருன். 1000

இராமருக்கு மாருதி வாலி வரலாறு கூறுதல்.

நாலு வேதமா நவையி லார்கலி
வேலி யன்னதோர் மலையின் மேலுளான்
சூலி தன்னருட் டுறையின் முற்றினான்
வாலி யென்றுளான் வரம்பி லாற்றலான். 1001

கழறு தேவரோ டவுணர் கண்ணினின்
றுழலு மந்தரத் துருவு தேயமுன்
அழலுங் கோளரா வகடு தேய்விடச்
சுழலும் வேலையைக் கடையுந் தோளினான். 1002

கிட்டி னார்பொரக் கிடைக்கி னன்னவர்
பட்ட நல்வரம் பாக மெய்துவான்
எட்டு மாதிரத் திறுதி நாளுமுற்
றட்ட மூர்த்திதாள் பணியு மாற்றலான். 1003

படர்ந்த நீணெடுந் தலைப ரப்பிமீ
தடர்ந்து பாரம்வந் துறவ நந்தனுங்
கிடந்து தாங்குமிக் கிரியை மேயினான்
நடந்து தாங்குமிப் புவன நாளெலாம். 1004

வெள்ள மேழுபத் துளது மேருவைத்
தள்ள லானதோ ளரிகள் தானையான்
உள்ள மின்றியவ் வுயிரை யஞ்சலால்
வள்ள லேயவன் வாழ வாழுமால். 1005

மாயாவி என்ற அரக்கன் வந்து போருக்கழைத்து
பிலத்துள் சென்று போரிட்டான்.

ஏகி வாலியு மிருது வேழொடேழ்
வேக வெம்பிலந் தடவி வெம்மையான்
மோக வென்றிமேன் முயல்பின் வைகிடச்
சோக மெய்தினன் றுணை துளங்கினான். 1006

அழுத ழுங்குறு மிவனை யன்பினில்
தொழுதி ரந்துநின் றொழிலி தாதலால்
எழுது வென்றியா யரசு செய்கெனப்
பழுதி தென்றனன் பரியு நெஞ்சினான். 1007

என்று தானுமவ் வழியி ரும்பிலம்
சென்று முன்னவற் றேடு வேனவற்

கொன்று ளான்றனைக் கொலவொ ணாதெனிற்
பொன்று வேனெனாப் புகுதன் மேயினான். 1008

அன்ன நாளின்மா யாவி யப்பிலத்
தின்ன வாயினூ டெய்து மென்னயாம்
பொன்னின் மால்வரைப் பொருப்பொ ழித்துவே
றுன்னு குன்றெலா முடன டுக்கினேம். 1009

வாலி மீண்டும் வந்தான்

வணங்கி யண்ணநின் வரவி லாமையான்
உணங்கி யுன்வழிப் படர வுன்னுவேற்
கிணங்க ரின்மையா லிறைவ நும்முடைக்
கணங்கள் காவலுன் கடன்மை யென்றனர். 1010

வாலியின் சினந் தணியவில்லை

அடல்க டந்ததோ ளவனை யஞ்சிவெங்
குடல்க லங்கியெங் குலமொ டுங்கமுன்
கடல்க டைந்தவெங் கரத லங்களால்
உடல்க டைந்தன னிவனு லைந்தனன். 1011

எந்தை மற்றவ னெயிற துக்குமேல்
அந்த கற்குமோ ரரணு மில்லையால்
இந்த வெற்பின்வந் திவனி ருந்தனன்
முந்தை யுற்றதோர் சாப முண்மையால். 1012

உருமை யென்றிவற் குரிய தாரமாம்
அரும ருந்தையு மவன்வி ரும்பினான்
இருமை யுந்துறந் திவனி ருந்தனன்
கரும மிங்கிதே கடவு ளென்றனன். 1013

இராமர் சினமடைதல்

பொய்யி லாதவன் வரன்முறை யிம்மொழி புகல
ஐய னாயிரம் பெயருடை யமலர்க்குமமலன்
வைய நுங்கிய வாயிதழ் துடித்தது மலர்க்கண்
செய்ய தாமரை யாம்பலம் போதெனச் சிவந்த. 1014

ஈர நீங்கிய சிற்றவை சொற்றன ளென்ன
ஆரம் வீங்குதோட் டம்பிக்குத் தன்னர சுரிமைப்
பார மீந்தவன் பரிவில னொருவன்ற னிளையோன்
தாரம் வெளவின னென்றசொற் றரிக்குமா றுளதோ. 1015

உலக மேழினு டேழும்வந் தவனுயிர்க் குதவி
விலகு மென்னினும் வில்லுடை வாளியின் வீட்டித்
தலைமை யோடுநின் றாரமு முனக்கின்று தருவேன்
புலமை யோயவ னுறைவிடங் காட்டென்று புகன்றான்.

சுக்ரீவாதியர் தனி யிருந்து ஆய்தல்;
மாருதி உறுதியுரை

உன்னி னேனின துள்ளத்தி னுள்ளத்தை யுரவோய்
அன்ன வாலியைக் காலனுக் களிப்பதோ ராற்றல்
இன்ன வீரர்பா லில்லையென் றயிர்த்தனை யினியான்
சொன்ன கேட்டவை கடைப்பிடிப் பாயெனச் சொன்னான்.

சங்கு சக்கரக் குறியுள தடக்கையிற் றாளில்
எங்கு மித்தனை யிலக்கணம் யாவர்க்கு மில்லை
செங்கண் விற்கரத் திராமனத் திருநெடு மாலே
இங்கு தித்தன னீண்டற நிறுத்துதற் கின்னும். 1018

பிறிது மன்னவன் பெருவலி யாற்றலைப் பெரியோய்
அறிதி யென்னினுண் டுபாயமு மஃதரு மரங்கள்
நெறியி னின்றன வேழினை றுருவவிந் நெடியோன்
பொறிகொள் வெஞ்சரம் போவது காணெனப் புகன்றான்.

மராமரப் படலம்

வள்ள லிந்திரன் மைந்தற்குந் தம்பிக்கும் வயிர்த்த
உள்ள மேயென வொன்றினை றுள்வயிர்ப் புடைய
தெள்ளு நீரிடைக் கிடந்தபார் சுமக்கின்ற சேடன்
வெள்ளி வெண்படங் குடைந்துகீழ் போகிய வேர. 1020

இராமர் வில் நாணொலி

ஒக்க நின்றதெவ் வுலகமு மங்கங்கே யோசை
பக்க நின்றவர்க் குற்றது பகர்வதெப் படியோ
திக்க யங்களு மயங்கின திசைகளுந் திகைத்த
புக்க யன்பதி சலிப்புற வொலித்ததப் பொருவில். 1021

அரிந்த மன்சிலை நாணொடி தார்த்தலு மமரர்
இரிந்து நீங்கினர் கற்பத்தி னிறுதியென் றயிர்த்தார்
பரிந்த தம்பியே பாங்குநின் றான்மற்றைப் பல்லோர்
புரிந்த தன்மையை யுரைசெயிற் பழியவர்ப் புணரும். 1022

ஏழு மாமர முருவிக்கீ ழுலகமென் றிசைக்கும்
ஏழு மூடுபுக் குருவிப்பின் னுடனடுத் தியன்ற
ஏழி லாமையான் மீண்டதவ் விராகவன் பகழி
ஏழு கண்டபி னுருவுமா லொழிவதன் றின்னும். 1023

ஏழு வேலையு முலகமே லுயர்ந்தன வேழும்
ஏழு குன்றமு மிருடிக ளெழுவரும் புரவி
ஏழு மங்கைய ரெழுவரு நடுங்கின வென்ப
ஏழு பெற்றதோ விக்கணைக் கிலக்கமென் றெண்ணி. 1024

சுக்ரீவன் துதி

வையநீ வானுநீ மற்றுநீ மலரின்மேல்
ஐயனீ யாழிநீ யாழிவா ழமலனீ
செய்யதீ வினைதெறுந் தேவுநீ நாயினேன்
உய்யவந் துதவினை யுலகமுண் டுதவினாய். 1025

வழியில் துந்துபி எலும்பைக் கண்டு இராமர் 'அதன் தன்மை யாது?' என வினவினார்.

துந்துபிப படலம்

துந்துபி என்ற அரக்கன் திருமாலைப் போருக் கழைக்க, அவர் உருத்திர மூர்த்தியிடம் அனுப்பினார். அவர் வாலியிடம் அனுப்பினார். துந்துபி எருமை வடிவத்தில் வந்து வாலியுடன் பெரும்போர் செய்தான். அவனை எடுத்து வாலி எறிய மதங்க மலையில் வீழ்ந்து மடிந்தான். உதிரம் தெறித்தது கண்டு "இம் மலை வரின் மாள்க" என்று வாலிக்கு மதங்கர் சாபமிட்டனர்.

கேட்டன னமலனுங் கிளந்த வாறெலாம்
வாட்டொழி லிளவலை யிதனை மைந்தநீ
ஓட்டென வவன் கழல் விரலி னுந்தினான்
மீட்டது விரிஞ்சனு டுற்று மீண்டதே. 1026

கலன்காண் படலம்

இவ்வழி யாமியைந் திருந்த தோரிடை
வெவ்வழி யிராவணன் கொணர மேலைநாள்
செவ்வழி நோக்கிநின் தேவியே கொலாம்
கவ்வையி னரற்றினள் கழிந்த சேணுளாள். 1027

உழையரி னுணர்த்துவ துளதென் றுன்னியோ
குழைபொரு கண்ணினாள் குறித்த தோர்ந்திலம்

மழைபொரு கண்ணிணை வாரி யோடுதன்
இழைபொதிந் திட்டன ளியாங்க ளேற்றனம். 1028

"கடுந்தே ரிராமன் உடன் புணர் சீதையை
வலித்தகை யரக்கன் வவ்விய ஞான்றை
நிலஞ்சேர் மதாணி கண்ட குரங்கின்"
புறநானூறு.—(378)

கலன்கண்டு இராமர் துயருறுதல்

விலங்கெழிற் றோளிளுய் விணையி னேனுமிவ்
விலங்குவிற் கரத்தினு மிருக்க வேயவள்
கலன்கழித் தனளிது கற்பு மேவிய
பொலன்குழைத் தெரிவையர் புரிந்து ளோர்கள்யார்.

கருங்கடல் தொட்டனர் கங்கை தந்தனர்
பெரும்புலி மானொடு புனலு மூட்டினர்
பெருந்தகை யென்குலத் தரசர் பின்னொரு
திருந்திழை துயரநான் தீர்க்க நோற்றிலேன். 1030

விரும்பெழி லெந்தையார் மெய்ம்மை வீயுமேல்
வரும்பழி யென்றலான் மகுடஞ் சூடலேன்
கரும்பழி சொல்லியைப் பகைஞன் கைக்கொளப்
பெரும்பழி சூடினேன் பிழைத்த தென்னரோ. 1031

அநுமன்

கொடுந்தொழில் வாலியைக் கொன்று கோமகன்
கடுங்கதி ரோன்மக ஞக்கிக் கைவளர்
நெடும்படை கூட்டினு லன்றி நேடரி
தடும்படை யரக்கர்த மிருக்கை யாணையாய். 1032

ஏழுபத் தாகிய வெள்ளத் தெம்படை
ஊழியிற் கடலென வுலகம் போர்க்குமால்
ஆழியைக் குடிப்பினு மயன்செ யண்டத்தைக்
கீழ்மடுத் தெடுப்பினுங் கிடைத்த செய்யுமால். 1033

வாலி வாழ் மலை சென்றார்கள்.

வாலி வதைப் படலம்

அவ்விடத்தி ராமனீ யழைத்து வாலி யானதோர்
வெவ்விடத்தின் வந்துபோர் விளைக்குமேல்லை வேறுநின்
றெவ்விடத் துணிந்தமைந்த தென்கருத்தி தென்றனன்
தெவ்வடக்கும் வென்றியானு நன்றிதென்று சிந்தியா.

சுக்ரீவன் வாலியைப் போருக் கழைத்து ஆர்த்தனன். அதனைக் கேட்ட வாலி சீறுதல்

மாற்பெருங் கடகரி முழக்கம் வாளரி
ஏற்பது செவித்தலத் தென்ன வோங்கிய
ஆர்ப்பொலி கேட்டன னமளி மேலொரு
பாற்கடல் கிடந்ததே யனைய பான்மையால் 1035

உருத்தனன் பொரவெதிர்ந் திளவ லுற்றமை
வரைத்தடந் தோளினன் மனத்தி னெண்ணினன்
சிரித்தன னவ்வொலி திசையி னப்புறத்
திரித்ததவ் வுலகமொ ரேழொ டேழையே. 1036

வந்தனென் வந்தனெ னென்ற வாசகம்
இந்திரி முதற்றிசை யெட்டுங் கேட்டன
சந்திரன் முதலிய தார கைக்குழாம்
சிந்தின மணிமுடி சிகரந் தீண்டவே. 1037

தாரை தடுத்துரைத்தல்

விலக்கலை விடுவிடு விளித்து ளானுரம்
கலக்கியக் கடல்கடைந் தமுது கண்டென
உலக்கவின் னுயிர்குடித் தொல்லை மீள்குவல்
மலைக்குல மயிலென மடந்தை கூறுவாள். 1038

கொற்றவ நின்பெருங் குவவுத் தோள்வலிக்
கிற்றைய னல்லனு லீடுண் டேகுவான்
பெற்றிலன் பிறந்திலன் பெயர்த்தும் போர்செயற்
குற்றது நெடுந்துணை யுடைமை யாலென்றாள். 1039

வாலி

மந்தர நெடுவரை மத்து வாசுகி
அந்தமில் கடைகயி றடைக லாழியான்
சந்திரன் றாணெதிர் தருக்கின் வாங்குநர்
இந்திரன் முதலிய வமர ரேனையோர். 1040

பெயர்வுற வலிக்கவு மிடுக்கில் பெற்றியார்
அயர்வுற லுற்றதை நோக்கி யானது
தயிரெனக் கடைந்தவர்க் கமுதந் தந்ததும்
மயிலியற் குயின்மொழி மறக்க லாவதோ. 1041

பேதைய ரெதிர்குவ ரெனினும் பெற்றுடை
ஊதிய வரங்களு முரமு முள்ளதிற்
பாதியு மென்னதாற் பகைப்ப தெங்ஙனம்
நீதுய ரொழிகென நின்று கூறினன். 1042

தாரை

அன்னது கேட்டவ ளரச வாயவற்
கின்னுயிர் நட்பமைந் திராம னென்பவன்
உன்னுயிர் கோடலுக் குடன்வந் தானெனத்
துன்னிய வன்பினர் சொல்லின ரென்றாள். 1043

வாலி

உழைத்தவல் லிருவினைக் கூறு காண்கிலா
தழைத்தய ருலகினுக் கறத்தி றுறெலாம்
இழைத்தவற் கியல்பல வியம்பியென் செய்தாய்
பிழைத்தனை பாவியுன் பெண்மையா லென்றான். 1044

இருமையு நோக்குறு மியல்பி னாற்கிது
பெருமையோ விங்கிதிற் பெறுவ தென்கொலோ
அருமையி னின்றுயி ரளிக்கு மாறுடைத்
தருமமே தவிர்க்குமோ தன்னைத் தானரோ. 1045

ஏற்றபே ருலகெலா மெய்தி யீன்றவள்
மாற்றவ ளேவமற் றவள்தன் மைந்தனுக்
காற்றரு முவகையா லளித்த வையனைப்
போற்றலை யின்னன புகறற் பாலையோ. 1046

நின்றபே ருலகெலா நெருக்கி நேரினும்
வென்றிவெஞ் சிலையலாற் பிறிது வேண்டுமோ
தன்றுணை யொருவருந் தன்னில் வேறிலான்
புன்றொழிற் குரங்கொடு புணரு நட்பனோ. 1047

தம்பிய ரல்லது தனக்கு வேறுயிர்
இம்பரி னிலதென வெண்ணி யேய்ந்தவன்
எம்பியும் யானுமுற் றெதிர்ந்த போரிடை
அம்பிடை தொடுக்குமோ வருளி னாழியான். 1048

வாலி வருதல்

நின்றானெதிர் யாவரு நெஞ்சு நடுங்கி யஞ்சத்
தன்றோள் வலியாற் றகைமால்வரை சாலும் வாலி

குன்றாடு வந்துற்றனன் கோளவுணன் குறித்த
வன்றூணிடைத் தோன்றியமா நரசிங்கமென்ன. 1049

இலட்சுமணர்

ஆற்றுது பின்னும் பகர்வா னறத்தா றழுங்கத்
தேற்றுது செய்வார்களைத் தேறுதல் செவ்வி தன்றல்
மாற்றுனெனத் தம்முனைக் கொல்லிய வந்து நின்றான்
வேற்றூர்கள் திறத்திவன் றஞ்சமென் வீர வென்றான்.1050

இராமர்

அத்தாவிது கேளென வாரியன் கூறுவானிப்
பித்தாய விலங்கி னொழுக்கினைப் பேசலாமோ
எத்தா யர்வயிற் றினும்பின் பிறந்தார்க ளெல்லாம்
ஒத்தாற் பரதன் பெரிதுத் தமனுதை லுண்டோ. 1051

போர்த்திறம்

தந்தோள்வலி மிக்கவர் தம்மொரு தாய்வயிற்றின்
வந்தோர்மட மங்கை பொருட்டு மலைக்க லுற்றார்
சிந்தோடரி யொண்கட் டிலோத்தமை காதல் செற்ற
சுந்தோப சுந்தப்பெயர்த் தொல்லையி னேருமொத்தார்.

ஊகங்களி னுயகர் வெங்கணு மிழ்ந்த தீயான்
மேகங்க ளெரிந்தன வெற்பு மெரிந்த திக்கின்
நாகங்க ணடுங்கின நானில முங்கு லைந்த
மாகங்களை நண்ணிய விண்ணவர் போய் மறைந்தார். 1053

விண்மே லினரோநெடு வெற்பின் முகட்டினரோ
மண்மே லினரோபுற மாதிர வீதியாரோ
கண்மே லினரோ வெனயாவருங் காண நின்றார்
புண்மே லிரத்தம் பொடிப்பக் கடிப்பார் புடைப்பார். 1054

உரத்தி னன்மடுத் துந்துவர் பாதமிட் டுதைப்பர்
கரத்தி னல்விசைத் தெற்றுவர் கடிப்பர்நின் றிடிப்பர்
மரத்தினு லடித் துரப்புவர் பொருப்பினம் வாங்கிச்
சிரத்தின் மேலெறிந் துறுக்குவர் தெழிப்பர் தீ விழிப்பர்.

வாலி னுலுரம் வரிந்தனர் நெரிந்துக வலிப்பர்
காலி னுனெடுங் கால்பிடித் துடற்றுவர் கழல்வர்
வேலி னுலற வெறிந்தன விறல்வலி யுகிரால்
தோலி னுலுட னெடுவரை முழையெனத் தொளைப்பர்.

அன்ன தன்மைய ராற்றலி னமர்புரி பொழுதின்
வன்னெ டுந்தடந் திரள்புயத் தடுதிறல் வாலி
சொன்ன தம்பியைத் தும்பியை யரிதொலைத் தென்ன
கொன்ன கங்களிற் கரங்களிற் குலைந்துகமலைந்தான். 1057

சுக்ரீவன் இராமரிடம் வந்து கொடிப்பூமாலை சூடிச் செல்லல்

மலைந்த போதினைந் திரவிசே யையன்மா டணுகி
உலைந்த சிந்தையோ டுணங்கினன் வணங்கிட வுள்ளம்
குலைந்தி டேலுமை வேற்றுமை தெரிந்திலங் கொடிப்பூ
மிலைந்து செல்கென விடுத்தன னெதிர்த்தனன் மீட்டும்.

அயிர்த்த சிந்தைய னந்தகன் குலைகுலைந் தஞ்சச்
செயிர்த்து நோக்கினன் சினத்தொடு சிறுநகை செய்யா
வயிர்த்த கையினுங் காலினுங் கதிர்மகன் மயங்க
உயிர்த்த லந்தொறும் புடைத்தன னடித்தன
னுதைத்தான். 1059

கக்கி ஞனுயி ருயிர்ப்பொடுஞ் செவிகளிற் கண்ணின்
உக்க தாங்கெரிப் படலையோ டுதிரத்தி ஞெழுக்கம்
திக்கு நோக்கினன் செங்கதி ரோன்மகன் செருக்கிப்
புக்கு மீக்கொடு நெருக்கின னிந்திரன் புதல்வன். 1060

இராமர் கணை தொடுத்தல்

எடுத்துப் பாரிடை யெற்றுவாம் பற்றியென் றிளவல்
கடித்த லத்தினுங் கழுத்தினுந் தன்னிரு கரங்கள்
மடுத்து மீக்கொண்ட வாலிமேற் கோலொன்று வாங்கித்
தொடுத்து நாணொடு தோளிறுத் திராகவன் றுரந்தான்.

வாலி வீழ்ந்து சிந்தித்தல்

அலங்கு தோள்வலி யழிந்தனன் தம்பியை யருளான்
வலங்கொள் பாரிடை யெற்றுவா னுற்றபோர் வாலி
கலங்கி வல்விசைக் கால்கிளர்ந் தெறிவுறக் கடைக்கால்
விலங்கன் மேருவும் வேர்பறிந் தாயென வீழ்ந்தான். 1062

வெற்றி வீரன தடுகணை யவன்மிட லுரத்தூ
டுற்ற தப்புறத் துருதமு னுறுவலிக் கரத்தால்
பற்றி வாலினும் காலினும் பிணித்தகப் படுத்தான்
கொற்ற வெங்கொடு மறலியுஞ் சிரதலங் குலைந்தான். 1063

எழுந்து வான்முக டிடித்துகப் படுப்பலென் றிவரும்
உழுந்துபேர்வுழீ இத்திசை திரிந்திறுப்பலென்றுறுக்கும்
விழுந்து பாரினை வேரொடும் பரிப்பலென் றோரும்
அழுந்து மிச்சர மெய்தவ ஞர்கொலலென் றயிர்க்கும். 1064

எற்றுங் கையினை நிலத்தொடு மெரிப்பொறி பறக்கச்
சுற்று நோக்குறுஞ் சுடுசரத் தைத்துணைக் கரத்தால்
பற்றி வாலினுங் காலினும் வலியுறப் பறிப்பான்
உற்று ருமையி னுலேவுறு மலேயென வுருளும். 1065

தேவ ரோவென வயிர்க்குமத் தேவரிச் செயலுக்
காவ ரோவவர்க் காற்றலுண் டோவெனு மயலோர்
யாவ ரோவென நகைசெயு மொருவனே யிறைவர்
மூவ ரோடுமொப் பான்செய லாமென மொழியும். 1066

நேமி தான்கொலோ நீலகண் டன்னெடுஞ் சூலம்
ஆமி தாங்கொலோ வன்றெனிற் குன்றுரு வயிலும்
நாம விந்திரன் வச்சிரப் படையுமென் னடுவட்
போமெ னுந்துணை போதுமோ யாதெனப் புழுங்கும். 1067

ஓங்க ரும்பெருந் திறலுடை மனத்தனுள் ளத்தன்
வாங்கி ஞன்மற்றவ் வாளியை யாளிபோல் வாலி
ஆங்கு நோக்கின ரமரரு மவுணரும் பிறரும்
வீங்கி ஞர்கள்தோள் வீரரை யார்விய வாதார். 1068

சுக்ரீவன் சோகம்

வாசத் தாரவன் மார்பெனு மலேவழங் கருவி
ஓசைச் சோரியை நோக்கின னுடன்பிறப் பென்னும்
பாசத் தாற்பிணிப் புண்டவத் தம்பியும் பசுங்கண்
நேசத் தாரைகள் சொரிதர நெடுநிலஞ் சேர்ந்தான். 1069

மும்மைசா லுலகுக் கெல்லா மூலமந் திரத்தை முற்றும்
தம்மையே தமக்கு நல்குந் தனிப்பெரும்பதத்தைத் தானே
இம்மையே யெழுமைநோய்க்கு மருந்தினை யிராமனென்னும்
செம்மைசேர் நாமந்தன்னைக் கண்களிற் றெரியக்கண்டான்.

இல்லறந் துறந்த நம்பி யெம்மனோர்க் காகத் தங்கள்
வில்லறந் துறந்த வீரன் றோன்றலால் வேத நூலிற்
சொல்லறந் துறந்தி லாத சூரியன் மரபுந் தொல்லே
நல்லறந் துறந்த தென்ன நகைவர நாணுட் கொண்டான்.

வெள்கிட மகுடஞ் சாய்க்கும் வெடிபடச் சிரிக்கு மீட்டும்
உள்கிடு மிதுவுந் தானே ரோங்கற மோவென் றுன்னும்
முள்கிடுங் குழியிற் புக்க மூரிவெங் களிநல் யானை
தொள்கொடுங் கிடந்த தென்னத் துயருழன் றழிந்து
சோர்வான். 1072

இராமர் தோன்றுதல்

இறைதிறம் பினறு லென்னே
யிழிந்துளோ ரியற்கை யென்னின்
முறைதிறம் பினறு லென்று
மொழிகின்ற முகத்தான் முன்னர்
மறைதிறம் பாத வாய்மை
மன்னர்க்கு முன்னஞ் சொல்லும்
துறைதிறம் பாமற் காக்கத்
தோன்றினன் வந்து தோன்ற. 1073

வாலி சினவுரை

வாய்மையு மரபுங் காத்து மன்னுயிர் துறந்த வள்ளல்
தூயவன் மைந்த னேநீ பரதன்முன் றோன்றி னையே
தீமைதான் பிறரைக் காத்துத் தான்செய் தாற் றீங்கன்
றோமோ
தாய்மையு மன்றி நட்புந் தருமமுந் தழுவி நின்றாய். 1074

கோவியற் றரும முங்கள் குலத்துதித் தோர்கட் கெல்லாம்
ஓவியத் தெழுத வொண்ணு வுருவத்தா யுடைமை யன்றோ
ஆவியைச் சனகன் பெற்ற வன்னத்தை யமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னைத் திகைத்தனை போலுஞ்
செய்கை. 1075

அரக்கரோ ரழிவு செய்து கழிவரே லதற்கு வேறோர்
குரக்கினத் தரசைக் கொல்ல மனுநெறி கூறிற் றுண்டோ
இரக்கமெங் குகுத்தா யென்பா லெப்பிழை கண்டா யப்பா
பரக்கழி யிதுநீ பூண்டாற் புகழையார் பரிக்கற் பாலார்.

கூட்டொரு வரையும் வேண்டாக் கொற்றவ பெற்றதாதை
பூட்டிய செல்வ மாங்கே தம்பிக்குக் கொடுத்து போந்து
நாட்டொரு கருமஞ் செய்தா யெம்பிக்கிவ் வரசை நல்கிக்
காட்டொரு கருமஞ் செய்தாய் கருமந்தா னிதின்மே
லுண்டோ. 1077

இருவர்போ ரெதிருங் காலை யிருவரு நல்லுற் ருரே
ஒருவர்மேற்கருணை தூண்டியொருவர்மேலொளித்துநின்று
வரிசிலை குழைய வாங்கி வாயம்பு மருமத் தெய்தல்
தருமமோ பிறிதொன் ருமோ தருகில தென்னும் பக்கம்.

வீர மன்று விதியன்று மெய்ம்மையின்
வார மன்றுநின் மண்ணினுக் கென்னுடல்
பார மன்றுபகை யன்று பண்பொழிந்
தீர மன்றிதுவென் செய்த வாறுநீ. 1079

செயலைச் செற்ற பகைதெறு வான்றெரிந்
தயலைப் பற்றித் துணையமைந் தாயெனின்
புயலைப் பற்றுமப் பொங்கரி போக்கியோர்
முயலைப் பற்றுவ தென்ன முயற்சியோ. 1080

காரி யன்றக ளங்கநிறத் தொன்மை
ஊரி யன்றம திக்குள தாமெனச்
சூரி யன்மர புக்குமோர் தொன்மறு
ஆரியன்பிறந் தாக்கினை யாமரோ. 1081

நூலி யற்கையு நுங்குலத் துந்தையர்
போலி யற்கையுஞ் சீலமும் போற்றலை
வாலி யைப்படுத் தாயலை மன்னற
வேலி யைப்படுத் தாய்விறல் வீரனே. 1082

தார மற்றொரு வன்கொளத் தன்கையிற்
பார வெஞ்சிலை வீரம் பழிப்பதே
நேரு மன்றும றைந்துநி ராயுதன்
மார்பி னெய்யவோ வில்லிகல் வல்லதே. 1083

இராமர்

கொல்லலுற்றனை யும்பியைக் கோதவற்
கில்லை யென்பது ணர்ந்து மிரங்கலை
அல்லல் செய்யே லுனக்கப யம்பிழை
புல்ல லென்னவும் புல்லலை போங்கினாய். 1084

ஈர மாவது மிற்பிறப் பாவதும்
வீர மாவதுங் கல்வியின் மெய்ந்நெறி
வார மாவதும் மற்றொரு வன்புணர்
தார மாவதை தாங்குந் தருக்கதோ. 1085

தரும மின்னதெ னுந்தகைத் தன்மையும்
இருமை யுந்தெரிந் தெண்ணலை யெண்ணிஞல்
அருமை யும்பிதன் ஞருயிர்த் தேவியைப்
பெருமை நீங்கினை யெய்தப் பெறுதியோ. 1086

ஆத லானு மவனெனக் காருயிர்க்
காத லானென லானுநிற் கட்டனென்
ஏதி லாரு மெளியரென் ருரையும்
தீது தீர்ப்பதென் சிந்தைக் கருத்தரோ. 1087

வாலி

மணமு மில்லை மறைநெறி வந்தன
குணமு மில்லைக் குலமுதற் கொத்தன
உணர்வு சென்றுழிச் செல்லு மொழுக்கலால்
நிணமு நெய்யு மிணங்கிய நேமியாய். 1088

இராமர்

நலங்கொள் தேவரிற் ருேன்றி நவையறக்
கலங்க லாவற நன்னெறி காண்டலின்
விலங்க லாமை விளங்கிய தாதலான்
அலங்க லார்க்கி தடுப்பதன் ருமரோ. 1089

பொறியின் யாக்கைய தோபுல ஞேக்கிய
அறிவின் மேலதன் ருேவறத் தாறுதான்
நெறியு நோன்மையை நேர்நின்று ணர்ந்தநீ
பெறுதி யோபிழை யுற்றுறு பெற்றிதான். 1090

மாடு பற்றி யிடங்கர் வலித்திடக்
கோடு பற்றிய கொற்றவற் கூயதோர்
பாடு பெற்ற வுணர்வின் பயத்திஞல்
வீடு பெற்ற விலங்கும் விலங்கரோ. 1091

சிந்தை நல்லறத் தின்வழிச் சேர்தலால்
பைந்தொ டித்திரு வின்பரி வாற்றுவான்
வெந்தொ ழிற்றிறல் வீடுபெற் றெய்திய
எந்தை யும்மெரு வைக்கர சல்லனே. 1092

நன்று தீதென் றியல்தெரி நல்லறி
வின்றி வாழ்வதன் ருேவிலங் கின்னிடை
நின்ற நன்னெறி நீயறி யாநெறி
ஒன்று மின்மையுன் வாய்மையு ணர்த்துமால். 1093

தக்க வின்ன தகாதன வின்னவென்
றொக்க வுன்னல ராயி னுயர்ந்துள
மக்க ளும்விலங் கேமனு வின்னெறி
புக்க வேலவ் விலங்கும் புத்தேளிரே. 1094

இனைய தாதலி னெக்குலத் தியாவர்க்கும்
வினையி னல்வரு மேன்மையுங் கீழ்மையும்
அனைய தன்மை யறிந்து மழித்தனை
மனையின் மாட்சியென் றுன்மனு நீதியான் 1095

வாலி திருந்தித் துதித்தல்

கவிகுலத் தரசு மன்னன் கட்டுரை மனத்திற் கொண்டான்
அவியுறு மனத்த னாகி யறத்திற னழியச் செய்யான்
புவியிடை யண்ண லென்ப தெண்ணினன் பொருந்தி முன்னே
செவியுறு கேள்விச் செல்வன் சென்னியை யிறைஞ்சிச் சொன்னான். 1096

தாயென வுயிர்க்கு நல்கித் தருமமுந் தகவுஞ் சால்பும்
நீயென நின்ற நம்பி நெறியினி னோக்கி நேர்மை
நாயென நின்ற வெம்பால் நவையற வுணர லாமே
தீயென பொறுத்தி யென்றான் சிறியன சிந்தி யாதான்.

இரந்தனன் பின்னு மெந்தை யாவது மெண்ண றேற்றாக்
குரங்கெனக் கருதி நாயேன் கூறிய மனத்துக் கொள்ளேல்
அரந்தைவெம் பிறவி யென்னோய்க் கருமருந் தனையவையா
வரந்தரு வள்ளா லொன்று கேளென மறுத்துஞ் சொல்வான். 1098

ஏவுகூர் வாளியா லெய்துநா யடியனேன்
ஆவிபோம் வேலைவா யறிவுதந் தருளினாய்
மூவர்நீ முதல்வனீ முற்றுநீ மற்றுநீ
பாவநீ தருமநீ பகையுநீ யுறவுநீ. 1099

மற்றினி யுதவி யுண்டோ வானினு முயர்ந்த மானக்
கொற்றவ நின்னை யென்னைக் கொல்லிய கொணர்ந்து தொல்லைச்
சிற்றினக் குரங்கி னோடுந் தெரிவுறச் செய்த செய்கை
வெற்றர செய்தி யெம்பி வீட்டர செனக்கு விட்டான். 1100

ஓவிய வுருவ நாயே னுளதொன் றுபெறுவ துன்பால்
பூவிய னறவ மாந்திப் புந்திவே றுற்ற போது
தீவினை யியற்று மேனு மெம்பிமேற் சீறி யென்மேல்
ஏவிய பகழி யென்னுங் கூற்றினை யேவ லென்றான். 1101

இன்னுமொன் றிரப்ப துண்டா லெம்பியை யும்பி மார்கள்
தன்முனைக் கொல்வித் தானென் றிகழ்வரேற் றடுத்தி
தக்கோய்
முன்முனே மொழிந்தா யன்றேயிவன் குறைமுடிப்ப தையா
பின்னவன் வினையின் செய்கையதனையும் பிழைக்கலாமோ.

அனுமனென் பவனை யாழி யையநின் செய்ய செங்கைத்
தனுவென நினைதி மற்றென் றம்பிநின் றம்பி யாக
நினைதியோர் துணைவ ரின்றே ரனையவ ரிலைநீ யீண்டவ்
வனிதையை நாடிக்கோடி வானினு முயர்ந்த தோளாய்.

என்றவர்க் கியம்பிப் பின்ன ரிருந்தன னிளவல் தன்னை
வன்றுணைத் தடக்கை நீட்டி வாங்கினன் றழுவி மைந்த
ஒன்றுனக் குரைப்ப துண்டா லுறுதியஃ துணர்ந்துகோடி
குன்றினு முயர்ந்த தோளாய் வருந்தலை யென்று கூறும்.

வாலி தம்பிக்குரைத்தல்

மறைகளு முனிவர் யாரு மலர்மிசை யயனு மற்றைத்
துறைகளின் முடிவுஞ் சொல்லுந் துணிபொருள் துணிவிற்
றாக்கி
அறைகழ லிராம னாகி யறநெறி நிறுத்த வந்த
இறையொரு சங்கை யின்றி யெண்ணுதி யெண்ண
மிக்கோய். 1105

கைதவ மியற்றி யாண்டுங் கழிப்பருங் கணக்கில் தீமை
வைகலும் புரிந்து ளாரும் வானுயர் நிலையை வள்ளல்
எய்தவர் பெறுவ ரென்றா லிணையடி யிறைஞ்சி யேவல்
செய்தவர் பெறுவ தையா செப்பலாஞ் சீர்மைத் தாமோ.

மதவியல் குரக்குச் செய்கை மயர்வொடு மாற்றி வள்ளல்
உதவியை யுன்னி யாவி யுற்றிடத் துதவு கிற்றி
பதவியை யெவர்க்கு நல்கும் பண்ணவன் பணித்த யாவும்
சிதைவில செய்து நொய்திற் றீர்வரும் பிறவி தீர்தி. 1107

என்னவித் தகைய வாய வுறுதிகள் யாவு மேங்கும்
பின்னவற் கியம்பி நின்ற பேரெழி லானை நோக்கி
மன்னவர்க் கரசன் மைந்த மற்றிவன் சுற்றத் தோடும்
உன்னடைக் கலமென் றுந்தி யுயர்கர முச்சி வைத்தான்.

அங்கதன் வருதல்

வைத்தபின் னுரிமைத் தம்பி மாமுக நோக்கி வல்லே
உய்த்தனை கொணர்தி யுன்ற னேங்கரு மகனை யென்ன
அத்தலை யவனை யேவி யழைத்தலி னணைந்தா னென்ப
கைத்தலத் துவரி நீரைக் கலக்கினன் பயந்த காளை. 1109

எந்தையேயெந்தையேயிவ்வெழுதிரைவளாகத்தியார்க்கும்
சிந்தையாற் செய்கை யாலோர் தீவினை செய்திலாதாய்
நொந்தனை யதுதா னிற்க நின்முக நோக்கிக் கூற்றம்
வந்ததே யன்றோ வஞ்சா தாரதன் வலியைத் தீர்ப்பார்.

வாலி மகனைத் தேற்றியுரைத்தல்

தோன்றலுமிறத்தல் தானுந்துகளறத்துணிந்துநோக்கின்
மூன்றுல கத்தி னோர்க்கு மூலத்தே முடிந்த வன்றே
யான்றவமுடைமையாலிவ் விறுதிவந் திசைந்ததியார்க்கும்
சான்றென நின்ற வீரன் றான்வந்து வீடு தந்தான். 1111

பாலமை தவிர்நீ யென்சொற் பற்றுதி யென்னி னைய
மேலொரு பொருளு மில்லா மெய்ப்பொருள் வில்லுந்
தாங்கிக்
கால்தரை தோய நின்று கட்புலக் குற்ற தம்மா
மால்தரும் பிறவி நோய்க்கு மருந்தென வணங்கு மைந்த.

என்னுயிர்க் கிறுதி செய்தா னென்பதை யிறையுமெண்ணு
துன்னியிர்க் குறுதி செய்தி யிவற்கம ருற்ற துண்டேல்
பொன்னுயிர்த் தொளிரும்பூணுய் போதுதிநிலைமைநோக்கி
மன்னுயிர்க் குறுதி செய்வான் மலரடி சுமந்து வாழ்தி.

இராமருக்கு வாலி கூறுதல்

நெய்யடை நெடுவேற் றனை நீனிற நிருத ரென்னும்
துய்யடைக் கனலி யன்ன தோளினன் றெழிலுந் தூயன்
பொய்யடை யுள்ளத் தார்க்குப் புலப்படாப் புலவமற் றுன்
கையடை யாகு மென்றவ் விராமற்குக் காட்டுங் காலை. 1114

வாலி முத்தி பெறுதல்

தன்னடி தாழ்த லோடுந் தாமரைத் தடங்க ணானும்
பொன்னுடை வாளை நீட்டி நீயிது பொறுத்தி யென்றான்
என்னலு முலக மேழு மேத்தின விறந்து வாலி
அந்நிலை துறந்து வானுக் கப்புறத் துலக னானன். 1115

கையவ ணெகிழ்த லோடுங் கடுங்கணை கால வாலி
வெய்யமார் பகத்துட் டங்கா துருவிமேக் குயர மீப்போய்த்
துய்யநீர்க் கடலுட் டோய்ந்து தூய்மல ரமரர் சூட்ட
ஐயன்வெவ் விடாத கொற்றத் தாவம்வந் தடைந்த
தன்றே. 1116

"வாலிமார் பைத்துணிய ஏழ்மரா இற்றுவிழ
வாளிபோ டக்கருது மநுராமன்
—(வேலைவாளை) திருப்புகழ்.

[வாலிவத நியாயம்

வாலியை வதைத்தது நியாயமா? என்று ஐயுறுவார் பலர்; அதனை இங்கு விளக்குதும்.

"மன்னர்கள் மறைந்துநின்று வேட்டையாடுவது மன்னறம். ஆகவே நீ விலங்காதலி**ன்** மறைந்து கொன்றே**ன்**" என்று முடிக்கின்றார் வால்மீகி முனிவர்.

"மனிதன், விலங்கு என்பது உடம்பைப் பற்றியதன்று, அறிவைப் பொறுத்தே அது அமைந்துளது. ஆகவே நீ சகல நீதிகளையும் அறிந்தவன். நீ விலங்கன்று. ஆகவே உன்னைத் தண்டித்தேன்" என்று முடிக்கின்றார் கம்பர்.

மறைந்து கொன்றது நியாயமா? என்பது ஒன்றுதான் சிந்தனைக்குரியது. இலக்குவன் சொன்னதாக உள்ள இரு பாடல்கள் இடைச் செருகல். அது தக்க பதிலன்று.

இந்திரனை வென்றார்கள் இந்திரஜித்தும் இராவணனும். இந்திரன் இமையவருடன் சென்று திருமாலிடம் முறையிட்டான். இந்திரனை வாலியாகப் பிறந்து வானரத் தலைவனாக இருக்குமாறும், தான் ராமாவதாரம் எடுத்து வருவதாகவும் திருமால் கட்டளையிட்டார்.

அவ்வாறு பிறந்த வாலி இராவணனுடன் உறவுகொண்டு தோழமையானான். 'உன்னுறவு என்னுறவு; உன் பகை என் பகை' என்று ஒப்பந்தம் செய்துகொண்டான். இராமர்

வருகின்றார். முன் செய்த ஏற்பாட்டிற்கு விரோதமாக வாலி நடந்ததால் அவனைப் பழைய உலகிற்குத் தண்டித்து அனுப்பி விட்டார்.

தவறாக நடித்த ஒரு நடிகனை நாடகாசிரியர் திரை மறைவிலிருந்து உள்ளே இழுத்து விடுவதுபோல் என்றறிக.

"நீ இந்திரன்; நான் திருமால்; இளையவன் ஆதிசேடன். நீ வந்தவரவை மறந்து தவறாகப் பகைவனுடன் நட்பு கொண்டாய் என்று கூறக்கூடாது. அவ்வாறு கூறின் இலக்குவன் தன் மருமகனாகிய இந்திரஜித்தைக் கொல்லாது அவனுடன் உறவு கொள்வான். ஆதலின் காரணங் கூறாது கண்டித்தனர் என உணர்க. அவன் கண்ணுக்கு மட்டும் தெரியுமாறு தனது பழைய வடிவைக் காட்டினார். அது கண்டே அவன் "மூவர் நீ முதல்வன் நீ" என்றும், சுக்ரீவனுக்கும் அங்கதனுக்கும் அவரைக் கடவுள் என்றும் கூறினான் என அறிக.]

அரசியற் படலம்

தாரை புலம்புதல்

வரைசேர் தோளிடை நாளும் வைகுவேன்
கரைசே ராவிடர் வேலை காண்கலேன்
உரைசே ராருயி ரேயென் னுள்ளமே
அரைசே யானிது காண அஞ்சினேன். 1117

நறிதா நல்லமிர் துண்ண நல்கலின்
பிறியா வின்னுயிர் பெற்ற பெற்றிதாம்
அறியா ரோநம ரார தன்றெனின்
சிறியா ரோவுப காரஞ் சிந்தியார். 1118

அணங்கார் பாகனை யாசை தோறுமுற்
றுணங்கா வொண்மலர் கொண்டு ளன்பொடும்
இணங்காக் காலமி ரண்டொ டொன்றினும்
வணங்கா தித்துணை வைக வல்லையோ. 1119

வரையார் தோள்பொடி யாட வைகுவாய்
தரைமே லாயுறு தன்மை யீதெனக்
கரையா தேனிடு பூசல் கண்டுமொன்
றுரையா யென்வயி னூனம் யாவதோ. 1120

நையா நின்றனெ னானிருந் திங்ஙன்
மெய்வா னோர்திரு நாடு மேவினாய்

ஐயா நீயென தாவியென்பது
பொய்யோ பொய்யுரை யாத புண்ணியா. 1121

செருவார் தோளநின் சிந்தை யுளேனெனின்
மருவார் வெஞ்சர மெனேயும் வௌவுமால்
ஒருவே னுள்ளுளே யாகி னுய்தியால்
இருவே முள்ளிரு வேமி ருந்திலேம். 1122

எந்தாய் நீயமிழ் தீய யாமெலாம்
உய்ந்தே மென்றுப கார முன்னுவார்
நந்தா நாண்மலர் சிந்தி நண்பொடு
வந்தா ரோவெதிர் வானு ளோரெலாம். 1123

ஓயா வாளி யொளித்துநின் றெய்வான்
ஏயா வந்தவி ராம னென்றுளான்
வாயா லேயின னென்னின் வாழ்வெலாம்
ஈயா யோவமிழ் தேயு மீகுவாய். 1124

சொற்றேன் முந்துற வன்ன சொற்கொளாய்
அற்றா னன்னது செய்க லானென
உற்றா யும்பியை யூழி காணுநீ
இற்றாய் நானுனே யென்று காண்கெனே. 1125

நீறா மேருவு நீசெ ருக்கினல்
மாறோர் வாளியுன் மார்பை யீர்வதோ
தேறேன் யானிது தேவர் மாயமோ
வேறோர் வாலிகொ லாம்வி ளிந்துளான். 1126

வாலியின் உடம்பை எரித்து நீர்க்கடன் புரிதல்.
இராமர் கட்டளை

அதுகா லத்த வருட்கு நாயகன்
மதிசால் தம்பியை வல்லே யேவினன்
கதிரோன் மைந்தனே யைய கைகளால்
விதியான் மௌலி மிலேச்சுவா யென்றான். 1127

சுக்ரீவ மகுடாபிஷேகம்

மறையோ ராசி வழங்க வானுளோர்
நறைதோய் நாண்மலர் தூவ நன்னெறிக்
கிறையோன் றன்னினே யோனவ் வேந்தலேத்
துறையோர் நூன்முறை மௌலி சூட்டினன். 1128

இராமர் சுக்ரீவனுக்கு உரைக்கும்

அரச நீதி

செய்வன செய்தல் யாண்டுந் தீயன சிந்தி யாமல்
வைவன வந்த போதும் வசையில வினிய கூறல்
மெய்யன வழங்கல் யாவு மேவின வெஃக லின்மை
உய்வன வாக்கித் தம்மோ டுயர்வன வுயர்ந்த தோளாய்.

சிறியரென் றிகழ்ந்து நோய்வு செய்வன செய்யன் மற்றிந்
நெறியிகழ்ந் தியானோர் தீமை யிழைத்தலா லுணர்ச்சி நீண்டு
குறியதா மேனி யாய கூனியாற் குவவுத் தோளாய்
வெறியன வெய்தி நொய்தின் வெந்துயர்க் கடலின் வீழ்ந்தேன். 1130

மங்கையர் பொருட்டா லெய்து மாந்தர்க்கு மரணமென்றல்
சங்கையின் றுணர்தி வாலி செய்கையாற் சாலு மின்னும்
அங்கவர் திறத்தி னானே யல்லலும் பழியு மாதல்
எங்களிற் காண்டி யன்றே யிதற்குவே றேதி யாதோ. 1131

சுக்ரீவன் தன் நகரில் வந்திருக்க வேண்ட,
இராமர் காடு வரலாகாதென்று கூறினார்.

வாலிகா தலனு மாண்டு மலரடி வணங்கி னானை
நீலமா மேக மன்ன நெடியவ னருளி னோக்கிச்
சீலநீ யுடையை யாத லிவன்சிறு தாதை யென்னு
மூலமே தந்த நுந்தை யாமென முறையி னிற்றி. 1132

அநுமன் "அடியேன் இங்கிருந்து பணி செய்வேன்"
என இராமர் கூறுதல்

ஆன்றவற் குரிய தாய வரசினை நிறுவி யப்பால்
ஏன்றெனக் குரிய தாய கருமமு மியற்றற் கொத்த
சான்றவர் நின்னி னில்லை யாதலாற் றருமந் தானே
போன்றநீ யானே வேண்ட வத்தலை போதி யென்றான்.

சுக்ரீவன் ஆட்சி

ஆரிய னருளிற் போயவ் வகன்மலை யகத்த னான
சூரியன் மகனு மானத் துணைவருங் கிளையுஞ் சுற்றத்
தாரையை வணங்கி யன்னாள் தாயெனத் தந்தை முந்தைச்
சீரியன் சொல்லே யென்னச் செவ்விதி னரசு செய்தான்.

கார்காலப் படலம்

மாவியல் வடதிசை நின்று வானவன்
ஓவிய மேயென வொளிக்க வின்குலாம்
தேவியை நாடிய முந்தித் தென்றிசைக்
கேவிய தூதென விரவி யேகினான். 1135

பையணைப் பஃறலைப் பாந்த ளேந்திய
மொய்ந்நிலத் தகளியின் முழங்கு நீர்நெயின்
வெய்யவன் விளக்கமா மேருப் பொற்றிரி
மையெடுத் தொத்தது மழைத்த வானமே. 1136

வண்ணவிற் கரதலத் தரக்கன் வாளினன்
விண்ணிடைக் கடிதுகொண் டேகும் வேலையில்
பெண்ணினிற் கருங்கல மனைய பெய்வளை
கண்ணெனப் பொழிந்தது கால மாரியே. 1137

இராமர் துயரம்

வானக மின்னினு மழைமு ழங்கினும்
யானக மெலிகுவே னெயிற்ற ராவணக்
கானகம் புகுந்தியான் முடித்த காரியம்
மேனகுங் கீழ்நகு மினியென் வேண்டுமால். 1138

நெய்யடை தீயெதிர் நிறுவி நிற்கவள்
கையடை யென்றவச் சனகன் கட்டுரை
பொய்யடை யாக்கிய பொறியி லேனொடு
மெய்யடை யாதினி விளிதல் நன்றரோ. 1139

இலக்குவன் தேற்றுதல்

திரைசெயத் திண்கட லமிழ்தஞ் செங்கணான்
உரைசெயத் தரினுமத் தொழிலு வந்திலன்
வரைமுதற் கலப்பைகண் மாடு நாட்டித்தன்
குரைமலர்த் தடக்கையாற் கடைந்து கொண்டனன். 1140

கிட்கிந்தைப் படலம்

இராமர் இலட்சுமணரைக் கிட்கிந்தைக்கு அனுப்புதல்

பெறல ருந்திருப் பெற்றுத விப்பெருந்
திறனி னைந்திலன் சீர்மையிற் றீர்ந்தனன்

அறம றந்தன னன்புகி டக்கநம்
மறன றிந்திலன் வாழ்வின் மயங்கினன். 1141

நன்றி கொன்றரு நட்பினை நாரறுத்
தொன்று மெய்ம்மை சிதைத்துரை பொய்த்துளார்க்
கொன்று நீக்குதல் குற்றத்தி னீங்குமால்
சென்று மற்றவன் சிந்தையைத் தேர்குவாய். 1142

வெம்பு கண்டகர் விண்புக வேரறுத்
திம்பர் நல்லறஞ் செய்ய வெடுத்தவிற்
கொம்பு முண்டருங் கூற்றமு முண்டுங்கள்
அம்பு முண்டென்று சொல்லுநம் மாணையே. 1143

நஞ்ச மன்னவரை நலிந்தாலது
வஞ்ச மன்று மனுவழக் காதலான்
அஞ்சி லம்பதி லொன்றறி யாதவன்
நெஞ்சி னின்று நிலாவ நிறுத்துவாய். 1144

ஊரு மாளு மரசுமுஞ் சுற்றமும்
நீரு மாளுதி ரென்பது நேர்ந்தநாள்
வாரும் வாரலி ராமெனின் வானரப்
பேரு மாளு மெனும்பொருள் பேசுவாய். 1145

இன்னு நாடுது மிங்கிவர்க் கும்வலி
துன்னி னுரையெ னத்துணிந் தாரெனின்
உன்னை வெல்ல வுலகொரு மூன்றினும்
நின்ன லாற்பிற ரின்மை நிகழ்த்துவாய். 1146

நீதி யாதி நிகழ்த்தினை நின்றது
வேதி யாத பொழுது வெகுண்டவன்
சாதி யாதவர் சொற்றரத் தக்கனை
போதி யாதியென் றுன்புகழ்ப் பூணினன். 1147

இலட்சுமணர் செல்லுதல்

வெம்பு கானிடைப் போகின்ற வேகத்தால்
உம்பர் தோயு மராமரத் தூடுசெல்
அம்பிற் சென்றன னன்றடல் வாலிதன்
தம்பி மேற்செலு மானவன் தம்பியே. 1148

கண்ட வானரங் காலனைக் கண்டபோல்
மண்டி யோடின வாலி மகற்கையா

கொண்ட சீற்றத் திளையோன் குறுகினன்
சண்ட வேகத்தி னலென்று சாற்றலும். 1149

அங்கதன் சுக்ரீவன்பால் சென்ருன்.

நளனி யற்றிய நாயகக் கோயிலுள்
தளம லர்த்தகப் பள்ளியிற் ரூழ்குழல்
இளமு லைச்சிய ரேந்தடி தைவர
விளைது யிற்கு விருந்து விரும்புவான். 1150

சுக்ரீவன் எழாமையால் அநுமனுடன் தாரைபால்
சென்று கூறினன்; தாரை கூறுதல்.

எய்தி மேற்செயத் தக்கதெ தன் னென்றலும்
செய்திர் செய்தற் கருநெடுந் தீயன
நொய்தி லன்னவை நீக்கவு நோக்குதிர்
உய்திர் போலு முதவிகொன் றீரெனு. 1151

தேவி நீங்கவத் தேவரிற் சிரியன்
ஆவி நீங்கினன் போலயர் வானது
பாவியாது பருகுதிர் போலுநும்
காவி நாண்மலர்க் கண்ணியர் காதனீர். 1152

திறம்பி னீர்மெய் சிதைத்தி ருதவியை
நிறம்பொ லீஇருங்கள் தீவினை நேர்ந்ததால்
மறஞ்செய் வானுறின் மாளுதிர் மற்றினிப்
புறஞ்செய் தாவதெ னென்கின்றபோதின்வாய். 1153

வானரங்கள் கோட்டை வாயிற் கதவடைத்தல்

கோளு றுத்தற் கரிய குரக்கினம்
நீளெ ழுத்தொ டருநெடு வாயிலைத்
தாளு றுத்தித் தடவரை தந்தன
மூளு றுத்தி யடுக்கின மொய்ம்பினல். 1154

இலட்சுமணர் அதனைக் காலால் கடிதல்

காவன் மாமதி லுங்கத வுங்கடி
மேவும் வாயி லடுக்கிய வெற்பொடும்
தேவு சேவடி தீண்டலுந் தீண்டரும்
பாவ மாமெனப் பற்றழிந் திற்றவால். 1155

தாரை மகளிரொடு வருதல்

நீரெ லாமய னீங்குமி னோர்ந்தியான்
வீர னுள்ளம் விளங்குவ லென்றலும்
பேர நின்றனர் யாவரும் பேர்கலாத்
தாரை சென்றனள் தார்குழ லாரொடும். 1156

தாமரை வதனஞ் சாய்த்துத் தனுநெடுந் தரையி னூன்றி
மாமியர் குழுவின் வந்தா ளெனமைந்த னிற்பப்
பூமியி லணங்க னார்தம்பொதுவிடைப்புகுந்து பொற்றோள்
தூமன நெடுங்கட் டாரை நடுங்குவா ளினைய சொன்னாள்.

அந்தமில் கால நோற்ற வாற்றலுண் டாயி னன்றி
இந்திரன் முதலி னோரா லெய்தலா மியல்பிற் றன்றே
மைந்த நின் பாதங் கொண்டெம் மனைவரப் பெற்று வாழ்ந்தோம்
உய்ந்தனம்வினையுந்தீர்ந்தேமுறுதிவேறினியாங்குண்டோ.

ஆர்கொலோ வுரைசெய் தாரென் றருள்வரச் சீற்றமஃகாப்
பார்குலா முழுவெண் டிங்கள் பகல்வந்த படிவம் போலும்
ஏர்குலா முகத்தி னாளை யிறைமுக மெடுத்து நோக்கித்
தார்குலா மலங்கன் மார்பன் றாயரை நினைந்து நைந்தான்.

மங்கல வணியை நீக்கி மணியணி துறந்து வாசக்
கொங்கலர் கோதை மாற்றிக் குங்குமஞ் சாந்தங்கொட்டாப்
பொங்குவெம்முலைகள்பூகக்கழுத்தொடு மறையப்போர்த்த
நங்கையைக் கண்ட வள்ளல் நயனங்கள் பனிப்ப நின்றான்.

இலட்சுமணர் மொழி

சேனையும் யானுந் தேடித் தேவியைத் தருவ லென்று
மானவற் குரைத்த மாற்ற மறந்தன னருக்கன் மைந்தன்
ஆனவ னமைதி வல்லை யறியென வருளின் வந்தேன்
மேனிலை யனையான் செய்கை விளைந்தவா விளம்பு கென்றான். 1161

தாரை

சீறுவா யல்லை யைய சிறியவர் தீமை செய்தால்
ஆறுவாய் நீய லான்மற் றருள ரயர்ந்தா னல்லன்
வேறுவே றுலக மெங்குந் தூதரை விடுத்த வெல்லை
ஊறுமா நோக்கித் தாழ்த்தா னுதவிமா றுதவியுண்டோ.

அநுமன் வருகை

வந்தடி வணங்கி நின்ற மாருதி வதன நோக்கி
அந்தமில் கேள்வி நீயு மயர்த்தனை யாகு மன்றே
முந்தின செய்கை யென்றான் முனிவினு முளைக்கு மன்பான்
எந்தைகேட் டருளு கென்று வியம்பின னியம்ப வல்லான்.

சிதைவகல் காதற் றாயைத் தந்தையைக் குருவைத் தெய்வப்
பதவியந் தணரை யாவைப் பாலரைப் பாவை மாரை
வதைபுரி குநர்க்கு முண்டா மாற்றலா மாற்றன் மாயா
உதவிகொன் றார்க்கென் றேனு மொழிக்கலா முபாய முண்டோ. 1164

மறந்திலன் கவியின் வேந்தன் வயப்படை வருவிப்பாரைத்
திறந்திற மேவி யன்னான் செம்மையிற் சிறிய றுளன்
அறந்துணை நுமக்குத் தான்றன் வாய்மையை யழிக்கு மாயின்
பிறந்திலே னன்றே யொன்றோ நரகமும் பிழைப்பதன்றால்.

இலட்சுமணர்

தாழ்வித்தீ ரல்லீர் பன்னாள் தருக்கிய வரக்கர் தம்மை
வாழ்வித்தீரிமையோர்க்கின்னல்வருவித்திர் மரபிற்றீராக்
கேள்வித்தீ யாளர் துன்பங் கிளர்வித்தீர் பாவந் தன்னை
மூள்வித்தீர் முனியா தானை முனிவித்தீர் முடிதிரென்றான்.

அங்கதன் பணிதல்

வல்லமந் திரிய ரோடு வாலிகா தலனு மைந்தன்
அல்லியங் கமல மன்ன வடிபணிந் தச்சந் தீர்ந்தான்
வில்லியு மவனை நோக்கி விரைவினென் வரவு வீர
சொல்லுதி நுந்தைக் கென்று னன்றெனத் தொழுது போனான். 1167

அங்கதன் சுக்ரீவன்பால் சென்று முயன்று எழுப்பி
நிகழ்ந்தவை முழுவதும் கூறினன்.

சொற்றலு மருக்கன் றோன்றல் சொல்லுவான் விண்ணின் மண்ணின்
நிற்குரி யார்கள் யாவ ரனையவர் சினத்தி னேர்ந்தால்
விற்குரி யாரித் தன்மை வெகுளியின் விரைவி னெய்தி
எற்குரை யாது நீரி தியற்றிய தென்கொ லென்றான். 1168

உணர்த்தினேன் முன்னர் நீயஃ துணர்ந்திலை யுணர்விற்
றீர்ந்தாய்
புணர்ப்பதொன் றின்மை நோக்கி மாருதிக் குரைப்பான்
போனேன்
இணர்த்தொகை யீன்ற பொற்ரு ரெறுழ்வலித்
தடந்தோ ளெந்தாய்
கணத்திடை யவனை நீயுங் காணுதல் கருமமென்றான்.

மதுவை நிந்தித்தல்

உறவுண்டசிந்தையானு முரைசெய்வா னொருவர்க்கின்னம்
பெறலுண்டே யவரா லீண்டி யான் பெற்றபே ருதவியுற்ற
திறலுண்டோ வென்னிற் றீர்வானிறந்தபே ரிடரை
யெல்லாம்
நறவுண்டு மறந்தேன் காண நாணுவன் மைந்தவென்ருன்.

ஏயின விதுவ லான்மற் றேழைமைப் பாலதென்னோ
தாயிவண்மனைவியென்னுந்தெளிவன்றேற் றருமமென்னும்
தீவினை யைந்தி னொன்ரு மன்றியுந் திருக்கு நீங்கா
மாயையின் மயங்கு கின்ரு மயக்கின்மேன் மயக்கும்
வைத்தாம். 1171

தெளிந்துதீவினையைத்தீர்ந்தோர்பிறவியைத்தீர்வரென்று
விளிந்திலா வுணர்வி னோரும் வேதமும் விளம்ப வேயும்
நெளிந்துறை புழுவை நீக்கி நறவுண்டு நிறைகின் றேனல்
அளிந்தகத் தெரியுந் தீயை நெய்யினு லவிக்கின் ருரில்.

வஞ்சமுங் களவும் பொய்யு மயக்கமு மரபில் கொட்பும்
தஞ்சமென் ருரை நீக்குந் தன்மையுங் களிப்புந் தாக்கும்
கஞ்சமெல் லணங்குந் தீருங் கள்ளினு லருந்தி னுரை
நஞ்சமுங் கொல்வ தல்லா னரகினை நல்காதன்றே. 1173

ஐயநா னஞ்சி னேனிந் நறவினி னரிய கேடு
கையினு லன்றி யேயுங் கருதுதல் கரும மன்ருல்
வெய்யதா மதுவையின்னும்விரும்பினே னென்னின்வீரன்
செய்யதா மரைகளன்ன சேவடி சிதைக்கவென்றான். 1174

சுக்ரீவன் மகளிர் வரிசைப் பொருள்கள் ஏந்த வாயிலில் வந்து தேவரும் மருளச் சென்று எதிர்கொண்டான். இருவரும் தழுவிக்கொண்டார்கள். "அரியணைமீது இரு" என இளையோன் இயம்புவான்.

1141

கல்லிணை மனத்தினை யுடைக்கை கேசியால்
எல்லிணை மணிமுடி துறந்த வெம்பிரான்
புல்லிணை வைகயான் பொன்செய் பூத்தொடர்
மெல்லிணை வைகவும் வேண்டு மோவென்றான். 1175

என்றவ னுரைத்தலு மிரவி காதலன்
நின்றனன் விம்மினன் மலர்க்க ணீருகக்
குன்றென வுயர்ந்தவக் கோயிற் குட்டிம
வன்றலத் திருந்தனன் மனுவின் கோமகன். 1176

'அமுதுண்ணவேண்டும்' என, இளையோன் கூறுவது

மூட்டிய பழியெனு முருங்கு தீயவித்
தாட்டினை கங்கைநீ ரரசன் றேவியைக்
காட்டினை யெனினெமைக் கடலி னரமிழ்
தூட்டினை யாற்பிறி துயிரு மில்லையால். 1177

பச்சிலை கிழங்குகாய் பரம னுங்கிய
மிச்சிலே நுகர்வது வேறு தாவென்று
நச்சிலேன் நச்சினே னுயி ருயுண்ட
எச்சிலே யதுவிதற் கைய மில்லையால். 1178

அன்றியு மொன்றுள தைய யானினிச்
சென்றனென் கொணர்ந்தடை திருத்தி னலது
நுன்றுணைக் கோமக னுகர்வ தாதலான்
இன்றிறை தாழ்த்தலு மினிதன் றுமென்றான். 1179

சுக்ரீவன் புறப்படுதல்

போயின தூதரிற் புகுதுஞ் சேனையை
நீயுடன் கொணருதி நெடுவ லோயென
ஏயின னநுமனை யிருத்தி யீண்டென
நாயக னிருந்துழிக் கடிது நண்ணுவான். 1180

ஒன்பதாயிரம் கோடி சேனைகள் உடன் சென்றன.

வீரனுக் கிளையவன் விளங்குஞ் சேவடி
பாரினிற் சேறலிற் பரிதி மைந்தனும்
தாரினிற் பொலங்கழ றழங்கத் தாரணித்
தேரினிற் சென்றனன் சிவிகை பின்செல. 1181

கண்ணிய கணிப்பருஞ் செல்வக் காதல்விட்
டண்ணலை யடிதொழ வணையு மன்பினால்

நண்ணிய கவிக்குலத் தரச னுள்தொறும்
புண்ணியற் றெழுகழற் பரதன் போன்றனன். 1182

சுக்ரீவன் சென்று இராமரை வணங்கினான்.

அவர் அன்புடன் தழுவி நலம் வினவினார்.

சுக்ரீவன் உறுதல்

பின்னரும் விளம்புவான் பெருமை யோய்நின
தின்னரு ளுதவிய செல்வ மெய்தினேன்
மன்னவ நின்பணி மறுத்து வைகியென்
புன்னிலைக் குரக்கியல் புதுக்கினே னென்றான்.

பெருந்திசை யனைத்தையும் பிசைந்து நேடினேன்
தருந்தகை யமைந்துமத் தன்மை செய்திலேன்
திருந்திழை திறத்தினாற் றெளிந்த சிந்தைநீ
வருந்தினை யிருப்பயான் வாழ்வின் வைகினேன்.

இராமர்

திருவுறை மார்பனுந் தீர்ந்த தேயும்வந்
தொருவருங் காலமுன் னுரிமை யோருரை
தருவினைத் தாகையிற் றாழ்விற் றாகுமோ
பரதனீ யினையன பகரற் பாலையோ. 1185

அநுமன் எங்கே? என்றார்

கோடியோ ராயிரங் குறித்த கோதில்தூ
தோடின நெடும்படை கொணர லுற்றவால்
நாடரக் குறித்தது மின்று நாளையவ்
வாடலந் தானையோ டவனு மெய்துமால். 1186

சுக்ரீவாதியர்க்கு இன்று போய் நாளை வருமாறு கட்டளையிட, யாவரும் கிட்கிந்தை சென்றனர்.

தானைகாண் படலம்

1. சதவலி — பத்தாயிரங்கோடி சேனையுடன் வந்தான்.
2. சுதேட்சனன் (தாரை தந்தை) — பத்துநூறாயிரங் கோடி சேனையுடன் வந்தான்.
3. தாரன் — நாற்பத்தொண்ணாயிரங்கோடி சேனையுடன் வந்தான்.

4. கேசரி — ஐம்பது நூறுயிரங் கோடி சேனையுடன் வந்தான்.
5. இடும்பன் (சாம்பவான் தம்பி) — இரண்டாயிரங் கோடி (கரடிக் கூட்டம்) சேனையுடன் வந்தான்.
6. கவாட்சன் (பசுக்கண் போன்றவன்) — நாலாயிரங் கோடி சேனையுடன் வந்தான்.
7. பனசன்—பன்னீராயிரங்கோடி சேனையுடன் வந்தான்.
8. நீலன் — ஐம்பது கோடி சேனையுடன் வந்தான்.
9. ததிமுகன் — முப்பது கோடி சேனையுடன் வந்தான்.
10. கயன்—முப்பதினுயிரங் கோடி சேனையுடன் வந்தான்.
11. ஜாம்பவான்— ஆயிரத்தறுநூறு கோடி சேனையுடன் வந்தான்.
12. துன்முகன் — இருபத்து நாலாயிரங் கோடி சேனையுடன் வந்தான்.
13. துமிந்தன் — கோடி கோடி நூறுயிரம் சேனையுடன் வந்தான்.
14. மயிந்தன், மற்சகன், கோமுகன் — நூறுலட்சங் கோடி சேனையுடன் வந்தனர்.
15. குமுதன் — ஒன்பது கோடி சேனையுடன் வந்தான்.
16. பதுமுகன்— நாற்பத்தொன்பதினுயிரங் கோடி சேனையுடன் வந்தான்.
17. இடபன் — தொள்ளாயிரங் கோடி சேனையுடன் வந்தான்.
18. தீர்க்கபாதன், விந்தன், சரபன் — எண்ணுயிரங் கோடி சேனையுடன் வந்தனர்.
19. அநுமான் — இருபத்தையாயிரங் கோடி சேனையுடன் வந்தான்.
20. நளன் — நூறுயிரங் கோடி சேனையுடன் வந்தான்.
21. கும்பகன், சங்கன் —அளவற்ற சேனையுடன் வந்தனர்.

வானரசேனையின் ஆற்றல்

ஒடிக்கு மேல்வட மேருவை வேரொடு மொடிக்கும்
இடிக்கு மேனெடு வானக முகட்டையு மிடிக்கும்
பிடிக்கு மேற்பெருங் காற்றையுங் கூற்றையும் பிடிக்கும்
குடிக்கு மேற்கட லேழையும் குடங்கையிற் குடிக்கும். 1187

இராமர் சேனைகளைக் காணல்

அத்தி யொப்பெனி னன்னவை யுணர்ந்தவ ருளரால்
வித்த கர்க்கினி யுரைக்கலா முவமைவே றியாதோ
பத்தி ரட்டிநன் பகலிர வொருவலர் பார்ப்பார்
எத்தி றத்தினு நடுவுகண் டிலர்முடி வென்றே. 1188

ஈசன் மேனியை யீரைந்து திசைகளை யீண்டிவ்
வாசில் சேனையை யைம்பெரும் பூதத்தை யறிவைப்
பேசும் பேச்சினைச் சமயங்கள் பிணக்குறும் பிணக்கை
வாச மாலையா யாவரே முடிவெண் ணவல்லார். 1189

"நெடிய னங்கனு மானோ டேயெழு
பதுவெ ளங்கவி சேனை சேவித
நிருப னம்பரர் கோமான் ராகவன் மருகோனே"
— (மகரகுண்டல) திருப்புகழ்

நாடவிட்ட படலம்

பொது சேனாபதி நீலன்

ஆறு பத்தெழு கோடிய னீகருக்
கேறு கொற்றத் தலைவரி வர்க்குமுன்
கூறு சேனைப் பதிகொடுங் கூற்றையும்
நீறு செய்திடு நீலனென் றோதினன். 1190

சுக்ரீவன் அநுமனுக்குரைத்தல்

அவனு மண்ண லநுமனை யையநீ
புவன மூன்றுநின் றுதையிற் புக்குழல்
தவன வேகத்தை யோர்கிலை தாழ்த்தனை
கவன மார்க்குரங் கின்செயல் காட்டியோ. 1191

ஏகி யேந்திழை தன்னை யிருந்துழீஇ
நாக நாடுக நானில னுடுக
போக பூமி பொருந்திட வல்லநின்
வேக மீண்டு வெளிப்பட வேண்டுமால். 1192

தென்றி சைக்கணி ராவணன் சேணகர்
என்றி சைக்கின்ற தென்னறி வின்னணம்
வன்றி சைக்கினி மாருதி நீயலால்
வென்றி சைக்குரி யார்பிறர் வேண்டுமோ. 1193

தாரை மைந்தனுஞ் சாம்பனுந் தாமுதல்
வீரர் யாவரு மேம்படு மேன்மையாற்
சேர்க நின்னொடுந் திண்டிறற் சேனைகள்
பேர்க வெள்ளமி ரண்டொடும் பெற்றியால். 1194

குடதி சைக்கட் சுசேடணன் குபேரன்வாழ்
வடதி சைக்கட் சதவலி வாசவன்
இடதி சைக்கண் வினதன் விறற்றரு
படையொ டுற்றுப் படர்கெனப் பன்னினான். 1195

வெற்றி வானர வெள்ளமி ரண்டொடும்
சுற்றி யோடித் துருவி யொருமதி
முற்று ருதமுன் முற்றுதி ரிவ்விடை
கொற்ற வாகையி னீரெனக் கூறினான். 1196

விந்தம், நருமதை, ஏமகூடம், விதர்ப்பம், தண்டகம், முண்டகத்துறை, பாண்டுமலை, கோதாவரி, முருகனிருந்த சுவணம், சூரியகாந்திமலை, சந்திரகாந்திமலை, கொங்கணம், குலிந்தம் இவைகளிலெல்லாம் தேடுங்கள்.

அருந்ததி மலையைப் பற்றிக் கூறுதல்

அரனதிக னுலகளந்த வரியதிக
னென்றுரைக்கு மறிவி லோர்க்குப்
பரகதிசென் றடைவரிய பரிசேபோற்
புகலரிய பண்பிற் றுமால்
சுரநதியி னயலதுவான் றோய்குடுமிச்
சுடர்த்தொகைய தொழுதோர்க் கெல்லாம்
வரனதிகந் தருந்தகைய வருந்ததியா
நெடுமலையை வணங்கி யப்பால். 1197

வேங்கடகிரியைப் பற்றிக் கூறினான்.

கோடுறுமால் வரையதனைக் குறுகுதிரே
லுங்நெடிய கொடுமை நீங்கி
வீடுறுதி ராதலான் விலங்குதிரப்
புறத்துணீர் மேவு தொண்டை

நாடுறுதி ருற்றதனை நாடியதற்
பின்னையவை நளிர்நீர்ப் பொன்னிச்
சேடுறுதண் புனற்றெய்வத் திருநதியி
னிருகரையுஞ் சேர்திர் மாதோ. 1198

சோழநாடு சென்று, பாண்டிநாடு கடந்து
பொதியமலை செல்லுங்கள்.

தென்றமிழ்நாட் டகன்பொதியிற் றிருமுனிவன்
றமிழ்ச்சங்கஞ் சேர்கிற் றீரேல்
என்றுமவ னுறைவிடமா மாதலா
னம்மலையை யிடத்திட் டேகிப்
பொன்றிணிந்த புனல்பெருகும் பொருநையெனுந்
திருநதியின் பொழிய நாகக்
கன்றுவளர் தடஞ்சாரன் மகேந்திரமா
நெடுவரையுங் கடலுங் காண்டிர். 1199

இராமர் மாருதிக்கு அடையாளமும் ஆழியும்
அறிவித்தளித்தல்

முன்னைநான் முனியொடும் முதியநீர் மிதிலைவாய்ச்
சென்னிநீண் மாலையான் வேள்விகா ணியசெல
அன்னமா டுறையுளுக் கருகுநின் றுளையக்
கன்னிமா டத்திடைக் கண்டதுங் கழறுவாய். 1200

வரைசெய்தாள் வில்லிறுத் தவனமா முனியொடும்
விரசினு னல்லனேல் விடுவல்யா னுயிரெனுக்
கரைசெயா வேலையிற் பெரியகற் பினள்தெரிந்
துரைசெய்தா ளஃதெலா முணரநீ யுரைசெய்வாய். 1201

மல்லன்மா நகர்துறந் தேகுநாண் மதிதொடும்
கல்லின்மா மதின்மணிக் கடைகடந் திடுதன்முன்
எல்லைதீர் வரியவெங் கானம்யா தோவெனுச்
சொல்லினு ளஃதெலா முணரநீ சொல்லுவாய். 1202

இனையவா றுரைசெயா வினிதினே குதியெனு
வனையுமா மணிநன்மோ திரமளித் தறிஞநின்
வினையெலா முடிகெனு விடைகொடுத் துதவலும்
புனையும்வார் கழலினு னருளொடும் போயினுன். 1203

"வெங்கைச் சுக்ரீவர் படையையி
லங்கைக்குப் போக விடவல
வென்றிச் சக்ரேசன் மிகமகிழ் மருகோனே"
—(சங்கை) திருப்புகழ்

பிலநீங்கு படலம்

மாருதி முதலியோர் விந்த மலையில் தேடுதல்

அந்நெடுங் குன்றமோ டவிர்மணிச் சிகரமும்
பொன்னெடுங் கொடுமுடிப் புரைகளும் புடைகளும்
நன்னெடுந் தாழ்வரை நாடினார் நவையிலார்
பன்னெடுங் காலமா மென்னவோர் பகலிடை. 1204

ஏமகூடம்

இம்மலை காணுது மேழைமா னையச்
செம்மலை நீக்குதுஞ் சிந்தைத் தீதென
விம்மலுற் றுவகையின் விளங்கு முள்ளத்தார்
அம்மலை யேறினா ரச்ச நீங்கினார். 1205

பிரிந்து தேடி மகேந்திர மலையில் கூடுவோம் எனத்
திட்ட மிட்டனர்.

பாலைவனம் எய்தினர்

மாருதி முதலிய வயிரத் தோள்வயப்
போர்கெழு வீரரே குழுமிப் போகின்றார்
நீரெனும் பெயருமந் நெறியி னீங்கலால்
சூரியன் வெருவுமோர் சுரத்தை நண்ணினார். 1206

புள்ளடை யாவிலங் கரிது புல்லொடும்
கள்ளடை மரனில கல்லுந் தீந்தக
டுள்ளிடை யரவநுண் பொடியொ டொட்டலின்
வெள்ளிடை யல்லதொன் றரிதவ் வெஞ்சுரம். 1207

நீட்டிய நாவினர் நிலத்திற் றீண்டுதோ
றாட்டிய வெம்மையா லுலையுங் காலினர்
காட்டினுங் காய்ந்ததங் காயந் தீதலால்
சூட்டகன் மேலெழு பொரியிற் றுள்ளினார். 1208

பிலத்துட் புகுதல்

மீச்செல வரிதினி விளியி னல்லது
தீச்செல வொழியவுந் தடுக்குந் திண்பில

வாய்ச்செலல் நன்றென மனத்தி னெண்ணினர்
போய்ச்சில அறிதுமென் றதனிற் போயினர். 1209

இருள் மிகுதி

எழுகிலர் காலெடுத் தேகு மெண்ணிலர்
வழியுள தாமெனு முணர்வு மாற்றினர்
இழுகிய நெய்யெனு மிருளி னேக்கத்துள்
முழுகிய மெய்யென வுயிர்ப்பு முட்டினர். 1210

நின்றனர் செய்வதோர் நிலைமை நோக்கலர்
பொன்றின ராமெனப் பொருமும் புந்தியர்
வன்றிறன் மாருதி வல்லை யோவெமை
இன்றிது காக்கவென் றிரந்து கூறினர். 1211

அநுமனுடைய வாலைப்பற்றி யேகினர்

உய்வுறுத் துவென்மன முலையி ருழின்வால்
மெய்யுறப் பற்றுதிர் விடுகி லீரெனக்
ஐயனக் கணத்தினின் றகலு நீணெறி
கையினிற் றடவிவெங் காலி னேகினன். 1212

பன்னிரண் டியோசனை படர்ந்த மெய்யினன்
மின்னிரண் டனையகுண் டலங்கள் வில்லிடத்
துன்னிருள் தொலைந்திடத் துருவி யேகினன்
பொன்னெடுங் கிரிநிகர் பொலிந்த தோளினன். 1213

பிலத்துள் ஒரு நகரங் காணுதல்

கண்டனர் கடிநகர் கமலத் தொண்கதிர்
மண்டல மறைந்துறைந் தனைய மாண்பது
விண்டல நாணுற விளங்கு கின்றது
புண்டரி கத்தவள் வதனம் போன்றது. 1214

அமிழ்துலை யயினியை யடுத்த வுண்டியும்
தமிழ்நிகர் நறவமுந் தணிதண் டேறலும்
இமிழ்கனிப் பிறக்கமும் பிறவு மின்னன
கமழ்வுறத் தோன்றிய கணக்கில் கொட்பது. 1215

கன்னிநெடு மாநகர மன்னதெதிர் கண்டார்
இந்நகர மாமிகலி ராவணன தூரென்
றுன்னியுரை யாடினரு வந்தனர் வியந்தார்
பொன்னினெடு வாயிலத னூடினிது புக்கார். 1216

இது மாயா நகரோ? சுவர்க்கமோ? என ஐயுற்றனர்.

சாம்பன் கூறுதல்

சாம்பனவ ெனுன்றுரைசெய் வானெழுச லத்தால்
காம்பனைய தோளியையொ ளித்தபடு கள்வன்
நாம்புக வமைத்தபொறி நன்றுமுடி வின்றால்
ஏம்பலினி மேலைவிதி யான்முடியு மென்றான். 1217

மாருதி

இன்றுபில னீதிடையி னேறரிதெ னிற்பார்
தின்றுசக ரர்க்கதிக மாகிநனி சேறும்
அன்றதெனின் வஞ்சனை யரக்கரை யடங்கக்
கொன்றெழுது மஞ்சலென மாருதி கொதித்தான். 1218

அங்கு தவமகளைக் கண்டனர்

மற்றவரு மற்றதும னக்கொள வலித்தார்
உற்றனர்பு ரத்திடையவ் வொண்சுடரி னுள்ளோர்
நற்றவ மனைத்துமுரு நண்ணியொளி பெற்ற
கற்றைவிரி பொற்சடையி னளையெதிர் கண்டார். 1219

அவளைச் சீதையென வானரர் நினைத்தல்

இருந்தன ளிருந்தவளை யெய்தின ரிறைஞ்சா
அருந்ததி யெனத்தகைய சீதையவ ளாகல்
பரிந்தனர் பதைத்தனர் பணித்தகுறி பண்பில்
தெரிந்துணர்தி மற்றிவள்கொல் தேவியென லோடும். 1220

அநுமன்

எக்குறியொ டெக்குணமெ டுத்திவனு ரைக்கேன்
இக்குறியு டைக்கொடியி ராமன்மனை யாளேர
அக்குவட முத்தமணி யாரமதி னேர்நின்
றெக்குமெனி னெக்குமென மாருதி யுரைத்தான். 1221

அப் பெண் இவர்களை வினவ தமது வரலாற்றை வானரர் உரைத்தனர். அவள் ஆனந்தமுற்று உணவு முதலியன தந்து உபசரித்தாள்.

மாருதி, "நீ யார்?" என வினவினர்.

என்பெயர் சுயம்பிரபை; மயன்மகளுக்காக அயன் படைத்தது இப்பிலம். அரம்பையருள் ஏமை யென்பவளை மயன் விரும்ப, நான் இருவரையும் இங்கு புணர்த்திவைத்தேன்.

இந்திரன் தேடிவந்து மயனைக் கொன்று, என்னைக் காவலாக்கி, பிலவழியை இருளாகச் சபித்தான்; பின்னர் நான் வேண்ட "இராம சேவகர்களாகிய வானரங்களால் இடர் கெடும்" என்றான்.

ஐயிருப தோசனைய மைந்தபில மையா
மெய்யுளது மேலுலக மேறுநெறி காணா
உய்யுநெறி யுண்டுதவு வீரெனினு பாயம்
செய்யும்வகை யுண்டெனினி னைத்திர்சிறி தென்றாள். 1222

மாருதி விசுவரூபமெடுத்து பிலத்தைப் பிடுங்கிக் கடலில் எறிந்தனர். வானரர் மண்ணுலகத்தில் குதித்தனர்.

சுயம்பிரபை விண்ணுலகம் சென்றாள்.

இன்றுமுள மேல்கட லியக்கில்பில தீவா
நின்றுநிலை பெற்றுளது நீணுதலி யோடும்
குன்றுபுரை தோளவ ரெழுந்துநெறி கொண்டார்
பொன்றிணி விசும்பினிடை நன்னுதலி போனாள்.

மாருதி வலித்தகைமை பேசிமற வோரும்
பாரிடை நடந்துபக லெல்லைபட ரப்போய்
நீருடைய பொய்கையெனு நேமியிடை நின்றார்
தேருடை நெடுந்தகையு மேலைமலை சென்றான். 1224

ஆறு செல் படலம்

வானரர் உறங்கும்போது ஒரு அரக்கன் வருதல்

கண்டார் பொய்கைக் கண்ணக னன்னீர்க் கரைகாமுற்
றுண்டார் தேனு மொண்கனி காயு மொருசூழல்
கொண்டா ரன்றே யின்றுயில் குன்றிற் குறியெய்தித்
தண்டார் வென்றித் தானவன் வந்தான் றகைவில்லான்.

மலையே போல்வான் மால்கட லொப்பான் மறமுற்றக்
கொலையே யொப்பான் கூற்றை நிகர்ப்பான் கொடுமைக்
கோர்
நிலையே போல்வா னீர்மையி லாதா னிமிர்திங்கட்
கலையே போலுங் காலவெ யிற்றான் கனல்கண்ணன் 1226

அங்கதனை அரக்கரழைத்தல்

பொய்கை யென்னதென் றுணர்ந்தும் புல்லியோர்
எய்தி னார்கள்யா ரிதுவெ னாவெனா

ஐய னங்கத னலங்கன் மார்பினிற்
கையின் மோதினன் கால னேயனான். 1127

அங்கதன் அவனைக் கொல்லுதல்

மற்றி மைந்தனு முறக்க மாறினன்
இற்றி வன்கொலா மிலங்கை வேந்தென
எற்றி னனேநே ரெற்றி னனவன்
முற்றி னிகற் காதி மூர்த்தியான். 1128

வானரர் எழுந்து சூழ்ந்து வியந்து இவன் யார்?
என்று வினவ, சாம்பன் உரைத்தல்.

யானி வன்றனைத் தெரிய வெண்ணினேன்
தூநி வந்தவேற் றுமிர னென்னும்பே
ரானிவ் வாழ்புனற் பொய்கை யாளுமோர்
தான வன்னெனச் சாம்பன் சாற்றினன். 1229

வானரர் கோதாவரியை யடைதல்

எழுகின்ற திரையிற் றாகி யிழிகின்ற மணிநீர் யாறு
தொழுகின்றசனகன்வேள்விதொடங்கியசுருதிச்சொல்லால்
உழுகின்ற பொழுதி னீன்ற வொருமகட் கிரங்கி ஞாலம்
அழுகின்ற கலுழி மாரி யாமெனப் பொலிந்த தன்றே. 1230

தொண்டைநாடு வருதல்

சூடி யாண்டச் சுரிகுழற் றோகையைத்
தேடி வார்புனற் றெண்டிரைத் தண்டக
நாடு நண்ணுகின் றார்மறை நாவலர்
வேட மேயினர் வேண்டுரு மேவுவார். 1231

செல்வ ரென்றும் வடகலை தென்றமிழ்ச்
சொல்வ ரம்பின ரென்றுஞ் சுமடரைக்
கொல்வ ரென்றுங் கொடுப்பன ரென்றுமவ்
வில்வ ரம்பி லிறைவனை யேத்துவார். 1232

சோழநாடு தேடி பாண்டிநா டெய்தினர்

அத்தி ருத்தகு நாட்டினை யண்டர்நா
டொத்தி ருக்குமென் றாலுரை யொக்குமோ
எத்தி றத்தினு மேழுல கும்புகழ்
முத்து முத்தமி ழுந்தந்து முற்றலால். 1233

மகேந்திரமலை பார்த்து தென்கடல் சென்றனர்.

சம்பாதிப் படலம்

கடலின் காட்சி

மழைத்தவிண் ணகமென முழங்கி வானுற
விழைத்தவெண் டிரைக்கர மெடுத்தி லங்கையாள்
உழைத்தடங் கண்ணியென் றுரைத்திட் டூழின்வந்
தழைப்பதே கடுக்குமவ் வாழி நோக்கினர். 1234

வானரர் மனம் வாடி ஆராய்தல்

அற்றது நாள்வரை யவதி யாட்சியும்
உற்றில மிராகவ னுயிரும் பொன்றுமால்
கொற்றவ னாணையுங் குறித்து நின்றனம்
இற்றது நஞ்செய லினியென் றெண்ணினர். 1235

அருந்தவம் புரிதுமோ வன்ன தன்றெனின்
மருந்தரு நெடுங்கடு வுண்டு மாய்துமோ
திருந்திய தியாதது செய்து தீர்துமென்
றிருந்தனர் தம்முயிர்க் கிறுதி யெண்ணுவார். 1236

அங்கதன்

நாடிநாங் கொணருது நளினத் தாளைவான்
மூடிய வுலகினை முற்று முட்டியென்
றூடவர் திலகனுக் கன்பி னுரெனப்
பாடவம் விளம்பினம் பழியின் மூழ்குவான். 1237

எந்தையு முனியு மெம்மிறை யிராமனும்
சிந்தனை வருந்துமச் செய்கை காண்குறேன்
நுந்துவெ னுயிரினை நுணங்கு கேள்வியீர்
புந்தியி னன்னது புகல்வி ராமென்றான். 1238

சாம்பன்

விழுமிய துரைத்தனை விசயம் வீற்றிருந்
தெழுவொடு மலையொடு மிகலுந் தோளினாய்
அழுதுமோ விருந்துநம் மன்பு பாழ்படத்
தொழுதுமோ சென்றெனச் சாம்பன் சொல்லினான்.

நாங்கள் இறப்போம் எனல். அங்கதன்

என்றவ னுரைத்தலு மிருந்த வாலிசேய்
குன்றுறழ்ந் தெனவளர் குவவுத் தோளினீர்

பொன்றிநீர் மடியயான் போவ னேலது
நன்றதோ வுலகமு நயக்கற் பாலதோ. 1240

எல்லைநம் மிறுதி யாய்க்கு மெந்தைக்கும் யாவ ரேனும்
சொல்லவுங் கூடுங் கேட்டாற் றுஞ்சவு மடுக்குங் கண்ட
வில்லியு மிளைய கோவும் வீவது திண்ண மச்சொல்
மல்லனீ ரயோத்தி புக்கால் வாழ்வரோ பரதன் மற்றோர்.

பரதனும் பின்னு ளோனும் பயந்தெடுத் தவரு மூரும்
சரதமே முடிவர் கெட்டேன் சனகியென் றுலகஞ் சாற்றும்
விரதமா தவத்தின் மிக்க விளக்கினு லுலகத் தியார்க்கும்
கரைதெரி விலாத துன்பம் விளைந்தவா வெனக்க
லுழ்ந்தான். 1242

சாம்பன்

நீயுநின் றுதைய நீங்க நின்குலத்
தாயம்வந் தவரொடுந் தநய ரில்லையால்
ஆயது கருதின மன்ன தன்றெனின்
நாயக ரிறுதியும் நவிலற் பாலதோ. 1243

ஏகுநீ யவ்வழி யெய்தி யிவ்வழித்
தோகையைக் கண்டிலா வகையுஞ் சொல்லியென்
சாகையு முணர்த்துதி தவிர்த்தி சோகம்போர்
வாகையா யென்றனன் வரம்பி லாற்றலான். 1244

அநுமன்

அவனவை யுரைத்தபின் னனுமன் சொல்லுவான்
புவனமூன் றினுமொரு புடையிற் புக்கிலம்
கவனமாண் டவரெனக் கருத்தி லாரெனத்
தவனவே கத்திநீர் சலித்தி ரோவென்றான். 1245

பின்னருங் கூறுவான் பிலத்தில் வானத்தில்
பொன்வரைக் குடுமியுற் புறத்து ளண்டத்தில்
நன்னுதற் றேவியைக் காண்டு நாமெனிற்
சொன்னநா ளவதியை யிறைவன் சொல்லுமோ. 1246

நாடுத லேநல மின்னு நாடியத்
தோடலர் குழலிதன் றுயரிற் சென்றமர்
வீடிய சடாயுவைப் போல வீடுதல்
பாடவ மல்லது பழியிற் றுமென்றான். 1247

சம்பாதி வருதல்

என்றலுங் கேட்டன னெருவை வேந்தன்றன்
பின்றுணை யாகிய பிழைப்பில் வாய்மையான்
பொன்றின னென்றசொற் புலம்பு நெஞ்சினன்
குன்றென நடந்தவர்க் குறுகன் மேயினன். 1248

சம்பாதியை அரக்கனென அநுமன் ஐயுறுதல்

எய்தின னிருந்தவ ரிரியல் போயினர்
ஐயனம் மாருதி யழலுங் கண்ணினன்
கைதவ நிசிசரக் கள்ள வேடத்தை
உய்திகொ லினியென வுருத்து முன்னின்றான். 1249

வெங்கதம் வீசிய மனத்தன் விம்மலன்
பொங்கிய சோரிநீர் பொழியுங் கண்ணினன்
சங்கையிற் சழக்கில னென்னுந் தன்மையை
இங்கித வகையினு லெய்த நோக்கினன். 1250

சம்பாதி சடாயுவைக் கொன்றது யார்?
என மாருதி கூறுதல்.

உன்னைநீ யுள்ளவா றுரைப்பி னுற்றதைப்
பின்னையா நிரப்புதல் பிழைப்பின் றாகுமால்
என்னமா ருதியெதி ரெருவை வேந்தனும்
தன்னையாந் தன்மையைச் சாற்றன் மேயினன். 1251

மாருதி

கூறிய வாசகங் கேட்டுக் கோதிலான்
ஊறிய துன்பத்தி னுவரி யுட்புகா
ஏறின னுணர்த்தின னிகலி ராவணன்
வீறிய வாளிடை விளிந்த தாமென்றான். 1252

சம்பாதி வருந்துதல்

இளையா நீள்சிற கின்றி வெந்துகத்
தளையா னேனுயிர் போதல் தக்கதால்
வளையா நேமியன் வன்மை சால்வலிக்
கிளையா னேயிது வென்ன மாயமோ. 1253

ஒன்று மூன்றுல கத்து ளோரையும்
வென்றா னென்னினும் வீர நிற்குநேர்

நின்ருனேயவ் வரக்க னின்னேயும்
கொன்ருனேயிது வென்ன கொள்கையோ. 1254

ஜடாயுவை இராவணன் கொல்லக் காரணம் யாது
என மாருதி நிகழ்ந்தது கூறினர்.

சம்பாதி கேட்டு மகிழ்தல்

விளித்தா னன்னது கேட்டு மெய்ம்மையோய்
தெளித்தா டத்தகு தீர்த்தன் மாட்டுயிர்
அளித்தா னேயது நன்று நன்றெனக்
களித்தான் வாரி கலுழ்ந்த கண்ணினன். 1255

பைந்தா ரெங்களி ராமன் பத்தினி
செந்தாள் வஞ்சி திறத்தி றந்தவன்
மைந்தா வெம்பி வரம்பில் சீர்த்தியோ
டுய்ந்தா னல்லது லந்த துண்மையோ. 1256

நீர்க்கடன் செய்தார்.

வாழ்வித் தீரெனே மைந்தர் வந்துநீர்
ஆழ்வித் தீரலீர் துன்ப வாழிவாய்
கேள்வித் தீவினே கீறி னீரிருள்
போழ்வித் தீருரை பொய்யி னீங்கினீர். 1257

எல்லீ ரும்மவ் விராம நாமமே
சொல்லீ ரென்சிறை தோன்றுஞ் சோர்விலா
நல்லீ ரப்பய னண்ணு நல்லசொல்
வல்லீர் வாய்மை வளர்க்கும் மாண்பினீர். 1258

ராம நாமம் ஓத சிறை முளேத்தல்

என்ரு னன்னது காண்டும் யாமெனு
நின்ருர் நின்றுழி நீல மேனியான்
நன்ரு நாம நவின்று நல்கினர்
வன்ரே ளான்சிறை வானந் தாயவே. 1259

வானரர் அவரை அஞ்சலித்து அவர் வரலாறு கேட்க,
அவர் உரைத்தல்.

சூரியனுடைய தேர்ப்பாகன் அருணன். அவனுடைய புதல்வர்கள் சம்பாதி, சடாயு என்போர். அவருள் மூத்தவன் நான் சம்பாதி. சூரியனுலகம் புக எண்ணி நாங்கள் பறந்த போது, கதிரவன் வெம்மை தாங்காது என் இளவல் தவித்தான்.

நான் அவனுக்கு நிழல் தந்தேன். அதனால் சிறை தீய்ந்து வீழ்ந்தேன். இராம தூதர்களால் சிறை முளைக்கும் என்று கதிரவன் வரம் ஈந்தான். லோக்சாரங்கன் என்னும் முனிவர் தேற்றத் தேறி இங்கிருந்தேன்.

"நீவிர் வந்த காரணம் யாது?" என, அவர்கள் தமது முயற்சியை மொழிந்தனர்.

சம்பாதி கூறுவது

பாகொன்று குதலை யாளைப் பாதக வரக்கன் பற்றிப்
போகின்ற பொழுது கண்டேன் புக்கன னிலங்கை புக்கு
வேகின்ற வுள்ளத் தாளை வெஞ்சிறை யகத்து வைத்தான்
ஏகுமின் காண்டி ராங்கே யிருந்தன ளிறைவி யின்னும்.

ஓசனை யொருநூ றுண்டா லொலிகட லிலங்கையவ்வூர்
பாசவெங் கரத்துக் கூற்றுங் கட்புலன் பரப்ப வஞ்சும்
நீசனவ் வரக்கன் சீற்ற நெருப்புக்கு நெருப்பு நீங்கள்
ஏசறுங் குணத்தீர் சேற லெப்பரி சியைவ தென்றான்.

"எல்லோரும் கடல் கடந்து போக முடியாது. ஒருவர் சென்று தேடுக. காக்குநர் இன்றி வாடுங் கழுகுகளைக் காக்கப் போவேன்" என்று அவர் பறந்து சென்றார்.

மகேந்திரப் படலம்

பொய்யுரை செய்யான் புள்ளர சென்றே புகலுற்றார்
கையுறை நெல்லித் தன்மையி னெல்லாங் கரைகண்டாம்
உய்யுரை பெற்றா நல்லவை யெல்லா முறவெண்ணிச்
செய்யுமி னென்றே செய்வகை நொய்திற் செயவல்லீர்.

கடல் கடப்போர் யார்? என ஆய்தல்

நீலன்மு தற்பேர் போர்கெழு கொற்ற நெடுவீரர்
சாலவு ரைத்தார் வாரிக டக்குந் தகவின்மை
வேலை கடப்பன் மீளமி டுக்கின் றெனவிட்டான்
வாலிய ளிக்கும் வீரவ யப்போர் வசையில்லான். 1263

சாம்பன்

வேதம னைத்துந் தேர்தர வொட்டா வொருமெய்யன்
பூதல முற்று மோரடி வைத்துப் பொலிபோழ்தியான்
மாதிர மெட்டுஞ் சூழ்பறை வைத்தே வரமேரு
மோதவி ளைத்தே தாளுலை விற்றேன் விறன்மொய்ம்பீர்.

சாம்பன் அநுமன் பெருமையை யுரைத்தல்

மேலைவி ரிஞ்சன் வீயினும் வீயா மிகைநாளீர்
நூலை நயந்து நுண்ணி துணர்ந்தீர் நுவல்தக்கீர்
காலனு மஞ்சுங் காய்சின மொய்ம்பின் கடைநின்றீர்
ஆலநு கர்ந்தா னுமென வெம்போ ரடர்கிற்பீர். 1265

வெப்புறு செந்தீ நீர்வளி யாலும் விளியாதீர்
செப்புறு தெய்வப் பல்படை யாலுஞ் சிதையாதீர்
ஒப்புறி னொப்பார் நும்மல தில்லீ ரொருகாலே
குப்புறி னண்டத் தப்புற மேயுங் குதிகொள்வீர். 1266

மேருகி ரிக்கு மீதுற நிற்கும் பெருமெய்யீர்
மாரிது ளிக்குந் தாரையி டுக்கும் வரவல்லீர்
பாரையெ டுக்கு நோன்மைவ லத்தீர் பழியற்றீர்
சூரிய னைச்சென் றெண்கைய கத்துந் தொடவல்லீர். 1267

நீதியி னின்றீர் வாய்மைய மைந்தீர் நினைவாலும்
மாதர்ந லம்பே ணாது வளர்ந்தீர் மறையெல்லாம்
ஓதியு ணர்ந்தீ ரூழிக டந்தீ ருலகினும்
ஆதிய யன்றா னேயென யாரு மறைகின்றீர். 1268

சாம்பனி யம்பத் தாழ்வத னத்தா மரைநாப்பண்
ஆம்பல்வி ரிந்தா லன்னசி ரிப்பா னறிவாளன்
கூம்பலொ டுஞ்சேர் கைக்கம லத்தன் குலமெல்லாம்
ஏம்பல்வ ரத்தன் சிந்தைதெ ரிப்பா னிவை சொன்னான்.

மாருதி மறுமொழி

இலங்கையை யிடந்து வேரோ டிவ்வயிற் றருகென் றாலும்
விலங்கினர் தம்மை யெல்லாம் வேரொடும் விளிய நூறிப்
பொலங்குழை மயிலைக் கொண்டு போதெனப் புகன்றிட்
டாலும்
கலங்கலீ ருரைத்த மாற்ற முடிக்குவல் கடிது காண்டீர்.

ஓசனை யொன்று நூறு முள்ளடி யுள்ள தாக
ஈசன்மண் ணளந்த தேய்ப்ப விருங்கட லினிது தாவி
வாசவன் முதலோர் வந்து மலையினு மிலங்கை வாழும்
நீசரை யெல்லா நூறி நினைத்தது முடிப்பல்பின்னும். 1271

நீயிரே நினையின் முன்னே நெடுந்திரைப் பரவை யேழும்
தாயுல கனைத்தும் வென்று தையலைத் தருதற் கொத்தீர்
போயிது புரிதி யென்று புலமைதீர் புன்மை காண்டற்
கேயினி ரென்னி லென்னிற் பிறந்தவர் யாவ ரின்னும்.

முற்றுநீ ருலக முற்றும் விழுங்குவான் முழங்கி முந்நீர்
உற்றதே யெனினு மண்ட முடைந்துபோ யுயர்ந்ததேனும்
இற்றைநும் மருளு மெங்கோ னேவலு மிரண்டு பாலும்
கற்றைவார் சிறைக ளாகக் கலுழனில் நடப்பல் காண்டீர்.

மாருதி பேருருவெடுத்தல்

பார்நிழல் பரப்பும் பொற்றேர் வெயிற்கதிர்ப் பரிதி மைந்தன்
போர்நிழல் பரப்பு மேலோர் புகழென வுலகம் புக்குத்
தார்நிழல் பரப்புந் தோளான் றடங்கடல் தாவா முன்னம்
நீர்நிழ லுவரி தாவி யிலங்கைமேற் செல்ல நின்றான். **1274**

கிட்கிந்தா காண்டம் முற்றிற்று.

சுந்தரகாண்டம்

கடல் தாவு படலம்

அநுமான் விசுவரூபம் எடுத்து நிற்றல்

ஆண்டகையாண்டவ்வானோர் துறக்கநாடருகர்கண்டான்
ஈண்டிது தான்கொல் வேலை யிலங்கையென் றையமெய்தா
வேண்டரு விண்ணுடென்னுமெய்மைகண் டுள்ள மீட்டான்
காண்டகு தோகையும்பரில்லெனக்கருத்துட்கொண்டான்.

கண்டன னிலங்கை மூதூர்க் கடிபொழிற் கனக நாஞ்சில்
மண்டல மதிலுங் கொற்ற வாயிலு மணியிற்செய்த
வெண்டளக் கனக மாட வீதியும் பிறவு மெல்லாம்
அண்டமுந் திசைக ளெட்டும் நடுங்கத்தோள் கொட்டி
யார்த்தான். 1276

இத்திற நிகழும் வேலை யிமையவர் முனிவர் மற்றை
முத்திறத் துலகத் தாரு முறைமுறை விரைவின்
மொய்த்தார்
தொத்துறு மலருஞ் சாந்துஞ் சுண்ணமு மணியுந் தூவி
வித்தக சேறியென்றார் வீரனும் விரைவ தானான். 1277

அநுமான் பாய்தல்

விளித்துப்பின் வேலை தாவும் வீரன்வால் வேத மெய்க்கும்
அளித்துப்பி னநும னென்னு மறந்துணை பெற்ற தாயும்
களித்துப்புன் றொழின்மே னின்ற வரக்கர்கண் ணுறுவ
ராமென்
றொளித்துப்பின்செல்லுங்காலபாசத்தை யொத்ததன்றே.

இடையில் மைநாக மலை தோன்ற அநுமன் உதைத்தல்

உந்தாமு னுலைந்துயர் வேலை யொளித்த குன்றம்
சிந்தாகுல முற்றது பின்னருந் தீர்வி லன்பால்
வந்தோங்கி யாண்டோர் சிறுமா னிடவேட மாகி
எந்தா யிதுகேளென வின்ன விசைத்த தன்றே. 1279

வேற்றுப் புலத்தோ னெனலைய விலங்க லெல்லாம்
மாற்றுச் சிறையென் றரிவச்சிர மாண வோச்ச
வீற்றுப்பட நூறிய வேலையின் வேலை யுய்த்துக்
காற்றுக் கிறைவ னெனைக்காத் தனனன்பு காக்க. 1280

மைநாகன் என்பால் தங்கி உணவு செய்யவேண்டும்
என்று வேண்டுதல்

ஈண்டியான் கடிதேகி யிலங்கை விலங்க லெய்தி
ஆண்டானடி மைத்தொழி லாற்றலி னுற்ற லுண்டேல்
மீண்டியா னுகர்வென் னல்விருந் தெனவேண்டிமெய்ம்மை
பூண்டானவன் கட்புலம் பிற்பட முந்து போனான். 1281

தேவர் தூண்டுதலில் சுரசை என்ற தேவமாது வருதல்

மூன்றுற்ற தலத்திடை முற்றிய துன்பம் வீப்பான்
ஏன்றுற்று வந்தான் வலிமெய்ம்மை யுணர்த்து நீயென்
றூன்றுற்ற வானோர் குறைநேர வரக்கி யாகித்
தோன்றுற்று நின்றாள் சுரசைப்பெயர்ச் சிந்தை தூயாள்.

பேழ்வாயொ ரரக்கி யுருக்கொடு பெட்பி னோங்கிக்
கோழ்வாயரி யின்குலத் தாய்கொடுங் கூற்று முட்க
வாழ்வாயெனக் காமிட மாய்வரு வாய்கொ லென்னா
நீழ்வாய்விசும் பின்றன துச்சி நெருங்கி நின்றாள். 1283

தீயேயென லாய பசிப்பிணி தீர்த்தல் செய்வாய்
ஆயேவிரை வுற்றெனை யண்மினை வண்மையாள
நீயேயினி வந்தெ னிணங்கொள் பிணங்கெ யிற்றின்
வாயேபுகு வாய்வழி மற்றிலை வானி னென்றாள். 1284

பெண்பாலொரு நீபசிப் பீழை யொறுக்க நொந்தாய்
உண்பாயென தாக்கையை யானுத வற்கு நேர்வல்
விண்பாலவர் நாயக னேவலி ழைத்து மீண்டால்
நண்பாலெனச் சொல்லிய நல்லறி வாளன் நக்கான். 1285

சுரசை வாய்வழி சென்று மீளல்

நீண்டானுட னேசுருங் காநிமிர் வாள்வ யிற்றின்
ஊண்டானென வுற்றொரு யிர்ப்புயி ராத முன்னர்
மீண்டானது கண்டனர் விண்ணுறை வோர்க ளெம்மை
ஆண்டான்வல னென்றலர் தூஉய்நெடி தாசி சொன்னார்.

மின்மேற்படர் நோன்மைய னுயுடல் வீங்கி நீங்கத்
தன்மேனிய ளாயவள் தாயினும் அன்பு தாழ
என்மேன்முடி யாதன வென்றினி தேத்தி நின்றாள்
பொன்மேனிய னுநெடி தாசி புனைந்து போனான். 1287

அங்காரதாரை எதிர்த்தல்
(சாயாக்கிராஹி—நிழலைக்கொண்டு ஆளை இழுப்பவள்)

வெங்கார்நி றப்புணரி வேறேயு மொன்றைப்
பொங்கார்க லிப்புனற ரப்பொலிவ தேபோல்
இங்கார்க டத்திரெனே யென்னுவெ ழுந்தாள்
அங்கார தாரைபெரி தாலால மன்னாள். 1288

சாயாவ ரந்தழுவி னுய்தழிய பின்னும்
ஓயாது வந்தவிசை கண்டுணர கில்லாய்
வாயால ளந்துநெடு வான்வழிய டைத்தாய்
நீயாரை யென்னையிவ ணின்றநிலை யென்றான். 1289

பெண்பாலெ னக்கருது பெற்றியொழி யுற்றால்
விண்பால வர்க்குமுயிர் வீடுறுதன் மெய்யே
கண்பால டுத்தவுயிர் காலன்வரு மேனும்
உண்பான ருத்தியதொ ழிப்பரிய தென்றான். 1290

திறந்தாளெ யிற்றையவ ளண்ணலிடை சென்றான்
அறந்தான ரற்றியத யர்த்தமர ரெய்த்தார்
இறந்தானெ னக்கொடொரி மைப்பதனின் முன்னம்
பிறந்தானெ னப்பெரிய கோளரிபெ யர்ந்தான். 1291

மாருதி இலங்கை சேர்தல்

தசும்புடைக் கனக நாஞ்சிற் கடிமதில் தரித்து நோக்கான்
அசும்புடைப் பிரசத் தெய்வக் கற்பக நாட்டை யண்மி
விசும்பிடைச்செல்லும்வீரன் விலங்கிவேறிலங்கைமூதூர்ப்
பசுஞ்சுடர்ச் சோலைத் தாங்கோர் பவளமால் வரையிற்
பாய்ந்தான். 1292

ஊர்தேடு படலம்

இலங்கையின் பெருமை

மரம டங்கலுங் கற்பக மனையெலாங் கனகம்
அரம டந்தையர் சிலதிய ரரக்கியர்க் கமரர்
உரம டங்கிவந் துழையரா யுழல்பவ ரொருவர்
தரம டங்குவ தன்றிது தவஞ்செய்த தவமால். 1293

பளிக்கு மாளிகைத் தலந்தொறு மிடந்தொறும் பசுந்தேன்
துளிக்குங் கற்பகத் தண்ணுறுஞ் சோலைகள் தோறும்

அளிக்குந் தேறலுண் டாடுநர் பாடுந ராகிக்
களிக்கின் றாரலாற் கவல்கின்றா ரொருவரைக்காணேன்.

சூரியன் மேற்கே மறைதல்

என்றன னிலங்கை நோக்கி யினையன பலவு மெண்ணி
நின்றவா ளரக்கர் வந்து நேரினு நேர்வ ரென்னாத்
தன்றகை யனைய மேனி சுருக்கியச் சரளச் சாரற்
குன்றிடை யிருந்தான் வெய்யோன் குரைகடல் குளிப்ப
தானான்.1295

ஏய்வினை யிறுதியிற் செல்வ மெய்தினான்
ஆய்வினை மனத்திலா னறிஞர் சொற்கொளான்
வீவினை நினைக்கிலா னொருவன் மெய்யிலான்
தீவினை யெனவிருள் செறிந்த தெங்குமே. 1296

சித்திரப் பத்தியிற் றேவர் சென்றனர்
இத்துணை தாழ்ந்தன முனியு மென்றுதம்
முத்தினா ரங்களு முடியின் மாலையும்
உத்தரீ யங்களு மிரிய வோடுவார். 1297

கோட்டை வாயில்

மேருவைநி றுத்திவெளி செய்ததுகொல் விண்ணோர்
ஊர்புகவ மைத்தபடி கால்கொலுல கேழும்
சோர்விலநி லைக்கநடு விட்டதொரு தூணோ
நீர்புகுக டற்குவழி யோவெனநி னைந்தான். 1298

கருங்கடல் கடப்பதரி தன்றுநகர் காவற்
பெருங்கடல் கடப்பதரி தெண்ணமிறை பேரின்
அருங்கடன் முடிப்பதரி தாமமர் கிடைக்கின்
நெருங்கமர் கிடக்குநெடு நாளெனநி னைந்தான். 1299

மதில் மேல் ஏறிக்கடக்க முயலுதல்.

இலங்கைக் காவற்காரி இலங்கணி

எட்டுத் தோளாள் நாலுமு கத்தா ளுலகேழும்
தொட்டுப் பேருஞ் சோதிநி றத்தாள் சுழல்கண்ணாள்
முட்டிப் பேரின் மூவுல கத்தை முதலோடும்
கட்டிச் சீறுங் காவல்வ லத்தாள் கமையில்லாள். 1300

எல்லா முட்கு மாழியி லங்கை யிகன்மூதூர்
நல்லா ளவ்வூர் வைகுறை யொக்கு நயனத்தாள்

நில்லாய் நில்லா யென்றுரை நேர்வாள் நினையாமுன்
வல்லே சென்றாள் மாருதி கண்டான் வருகென்றான். 1301

ஆகா செய்தா யஞ்சலை போலு மறிவில்லாய்
சாகா மூலந் தின்றுழல் வார்பாற் சலமென்னும்
பாகா ரிஞ்சிப் பொன்மதில் தாவிப் பதையாதே
போகா யென்றாள் பொங்கன லென்னப் புகைகண்ணாள்.

களியா வுள்ளத் தண்ணன் மனத்திற் கதமூழ்க
விளியாநின்றே நீதிந லத்தின் வினையோர்வான்
அளியா லிவ்வூர் காணுந லத்தி னணைகின்றேன்
எளியே னுற்றால் யாவது னக்கிங் கிழவென்றான். 1303

என்னு முன்ன மேகென வேகா தெதிர்மாற்றம்
சொன்னு யேநீ யாவன டாதொல் புரமட்டான்
அன்னு ரேனு மஞ்சுவ ரெய்தற் களியுற்றாள்
உன்னு லெய்து மூர்கொலிவ் வூரென் றுறநக்காள். 1304

நக்கா ளைக்கண் டையன்ம னத்தோர் நகைகொண்டான்
நக்காய் நீயார் யார்சொல வந்தா யுனதாவி
உக்கா லேதா மோடலை யென்றா ளினியிவ்வூர்
புக்கா லன்றிப் போகிலெ னென்றான் புகழ்கொண்டான்.

வஞ்சங் கொண்டான் வானர மல்லன் வருகாலன்
துஞ்சுங் கண்டா லென்னையி வன்சூழ் திரையாழி
நஞ்சங் கண்ட கண்ணுத லைப்போல் நகுகின்றான்
நெஞ்சங் கண்டே கல்லென நின்றே நினைவுற்றாள். 1306

கொல்வா மன்றேற் கோளுறு மிவ்வூ ரெனல்கொண்டாள்
வெல்வாய் நீயே வென்றியெ னத்தன் விழிதோறும்
வல்வாய் தோறும் வெங்கனல் பொங்க மதில்வாயில்
செல்வா யென்னு மூவிலை வேலைச் செலவிட்டாள். 1307

மாருதி அச் சூலத்தைப் பிடித்து ஒடித்தனர்.

ஏனைய ஆயுதங்களையும் ஒடித்தெறிந்தனர்.

அவள் மலையைப் பிடுங்கி அடிக்க வந்தாள்.

அடியா முன்ன மங்கைய னைத்து மொருகையால்
பிடியா வென்னே பெண்ணிவள் கொல்லிற் பிழையென்னு
ஒடியா நெஞ்சத் தோரடி கொண்டா னுயிரோடும்
இடியே றுண்ட நாக மெனப்பா ரிடைவீழ்ந்தாள். 1308

இலங்கணி துதித்தல்

ஐயகேள் வைய நல்கு மயனரு ளமைதி யாக
எய்தியிம் மூதூர் காப்பெ னிலங்கைமா தேவி யென்பேர்
செய்தொழி லிழுக்கி யுள்ளந் திகைத்திந்தச் சிறுமை
செய்தேன்
உய்தியென் றளித்தி யாயி னுணர்த்துவ லுண்மை
யென்றாள்.

எத்தனை காலங் காப்பல் யானிந்த மூதூரென்று
முத்தனைவினவினேற்குமுரண்வலிக்குரங்கொன்றுன்னைக்
கைத்தல மதனாற் றீண்டிக் காய்ந்தவன்றென்னைக்காண்டி
சித்திர நகரம் பின்னைச் சிதைவது திண்ண மென்றான்.

அன்னதே முடிந்ததைய அறம்வெல்லும் பாவந்தோற்கும்
என்னுமீ தியம்ப வேண்டுந் தகையதோவினிமற் றுன்னால்
உன்னிய வெல்லா முற்று முனக்குமுற் றுத துண்டோ
பொன்னகர் புகுதி யென்னாப் புகழ்ந்தவ ளிறைஞ்சிப்
போனாள். 1311

மாருதி சீதையைத் தேடுதல்

ஆத்துறு சாலை தோறு மானையின் கூடந் தோறும்
மாத்துறு மாடந் தோறும் வாசியின் பந்தி தோறும்
காத்துறு கடைகள் தோறுங் கருங்கடல் கடந்த காலால்
பூத்தொறு மவாவிச் செல்லும் பொறிவரி வண்டிற்
போனான். 1312

ஈட்டுவார் தவம லான்மற் றீட்டினு லியைவ தின்மை
காட்டினார் விதியா ரஃது காண்கிற்பார் காண்மி னம்மா
பூட்டுவார் முலைபொ றுத பொய்யிடை நையப்பூநீர்
ஆட்டுவா ரமரர் மாத ராடுவா ரரக்கர் மாதர். 1313

கும்பகருணன் மாளிகை சென்று கண்டார்

மூசிய வுயிர்ப்பெனு முடுகு வாதமும்
வாசலின் புறத்திடை நிறுவி வன்மையான்
நாசியி னளவையி னடத்தக் கண்டவன்
கூசினன் குதித்தனன் விதிர்த்த கையினான். 1314

குறுகி நோக்கிமற் றவன்றலை யொருபதுங் குறித்த
இறுகு திண்புய மிருபதிங் கிவனில னென்னா

மறுகி யேறிய முனிவெனும் வடவைவெங் கனலை
அறிவெ னும்பெரும் பரவையம் புனலிஞ லவித்தான்.

மணிகொள் வாயிலுட் சாளரத் தாள்களின் மலரில்
கணிகொ ளுளத்திற் காலினும் புகையினுங் கலக்கும்
நுணுகும் வீங்குமற் றவனிலை யாவரே நுவல்வார்
அணுவின் மேருவி ஞழியா னெனச்செலு மநுமன். 1316

வீடணன் மாளிகை சேர்தல்.

பளிக்கு வேதிகைப் பவளத்தின் கூடத்திற் பசுந்தேன்
துளிக்குங் கற்பகப் பந்தரிற் கருநிறத் தோரை
வெளித்து வைகுவ தரிதென வவருரு மேவி
ஒளித்து வாழ்கின்ற தருமமன் ஞன்றனை யுற்ருன். 1317

உற்று நின்றவ னுணர்வைத்தன் னுணர்விஞலுணர்ந்தான்
குற்ற மில்லதோர் குணமுள னிவனெனக் கொண்டான்
செற்ற நீங்கிய மனத்தின னெருசிறை சென்ருன்
பொற்றை மாடங்கள் கோடியோர் கொடியிடைப் புக்கான்.

இந்திரஜித்தின் மாளிகை

வளையும் வாளெயிற் றரக்கனே கணிச்சியான் மகனே
அளையில் வாளரி யனையவன் யாவனே அறியேன்
இளைய வீரனு மேந்தலு மிருவரும் பலநாள்
உளைய வுள்ளபோ ரிவனெடு முளதென வுணர்ந்தான்.

கரிய நாழிகை பாதியிற் காலனும்
வெருவி யோடு மரக்கர்தம் வெம்பதி
ஒருவ னேயொரு பன்னிரு யோசனைத்
தெருவு மும்மைநூ ருயிரந் தேடிஞன். 1320

நித்தநிய மத்தொழில ராய்நிறையு ஞானத்
துத்தமரு றங்கினர்கள் யோகியர்து யின்ருர்
மத்தமத வெங்களிறு றங்கினம யங்கும்
பித்தரு முறங்கினரி னிப்பிறரி தென்னும் 1321

இராவணனுறைவிடம் அடைதல்

கண்டு கண்ணெடு கருத்தொடு கடாவினன்
காரணங் கடைநின்ற
துண்டு வேறெரு சிறப்பெங்க ணுயகற்
குயிரினு முரியானைக்

கொண்டு போந்தவன் வைத்ததோ
ருறையுள்கொல் குலமணி மனைக்கெல்லாம்
விண்டு வின்றட மார்பினின் மணியொத்த
திதுவென வியப்புற்றான். 1322

அரம்பை மேனகை திலோத்தமை
யுருப்பசி யாதியர் மலர்க்காமன்
சரம்பெய் தூணிபோற் றளிரடி
தாங்தொடச் சாமரை பணிமாறக்
கரும்பை யுஞ்சுவை கைப்பித்த சொல்லியர்
காமரங் கனியாழின்
நரம்பி னின்னிசை செவிபுக நாசியிற்
கற்பக விரைநாற. 1323

மண்டோதரியைக் கண்டு ஐயுறுதல்

இன்ன தன்மையி னெரிமணி விளக்கங்க
ளெழில்கெடப் பொலிகின்ற
தன்ன தின்னொளி தழைப்புறத்
துயிலுறு தையலைத் தகைவில்லான்
அன்ன ளாகிய சானகி யிவளென
வயிர்த்தகத் தெழுவெந்தீ
துன்னு மாருயி ருடலொடு சுடுவதோர்
துயருழந் திவை சொன்னான். 1324

எற்பு வான்றொடர் யாக்கையாற்
பெறும்பய னிகந்தனெ னிதுநிற்க
அற்பு வான்றனை யிற்பிறப் பதனொடு
மிகழ்ந்துதன் னருந்தெய்வக்
கற்பு நீங்கிய கனங்குழை யிவளெனிற்
காகுத்தன் புகழோடும்
பொற்பும் யானுமிவ் விலங்கையு மரக்கரும்
பொன்றுது மின்றென்றான். 1325

இலக்க ணங்களுஞ் சிலவுள வென்னினு
மெல்லைசென் றிறுக்கில்லா
அலக்க ணெய்துவ தணியதுண் டென்றெடுத்
தறைகுவ திவள்யாக்கை

மலர்க்க ருங்குழல் சோர்ந்துவாய் வெரீஇச்சில
மாற்றங்கள் பறைகின்றாள்
உலக்கு மிங்கிவள் கணவனு மழிவுமிவ்
வியனயர்க் குளதென்றான். 1326

இராவணனைக் காணல்

ஆய பொற்கலத் தாய்வளை யரம்பைய ராயிர ரணிநின்று
தூய பொற்கவ ரித்திர ளியக்கிடச் சுழிபடு பசுங்காற்றின்
வீய கற்பகத் தேன்றுளி விராயன வீழ்தொறு நெடுமேனி
தீய நற்றொடிச் சீதையை நினைதொறு முயிர்த்துயிர்
தேய்வானை. 1327

மாருதியின் சீற்றம்

தோளாற்ற லென்னாகு மேனிற்குஞ் சொல்லென்னும்
வாளாற்ற கண்ணாளை வஞ்சித்தான் மணிமுடியென்
தாளாற்ற லாலிடித்துத் தலைபத்துந் தகர்த்தென்றன்
ஆளாற்றல் காட்டேனா லடியேனாய் முடியேனே. 1328

என்றாக்கி யெயிறுகடித் திருகரனும் பிசைந்தெழுந்து
நின்றாக்கி யுணர்ந்துரைப்பா னேமியோன் பணியன்றால்
ஒன்றாக்கி யொன்றிழைத்த லுணர்வுடைமைக்
குரித்தன்றால்
பின்றாக்கி னிதுசாலப் பிழையாகு மெனப்பெயர்ந்தான்.

ஆலம்பார்த் துண்டவன்போ லாற்றலமைந்
துளரெனினும்
சீலம்பார்க் குரியோர்க ளெண்ணாது செய்பவோ
மூலம்பார்க் குறினுலகை முற்றுவிக்கு முறைதெரினும்
காலம்பார்த் திறைவேலை கடவாத கடலொத்தான். 1330

இற்றைப்போர்ப் பெருஞ்சீற்ற மென்னோடு முடிந்திடுக
கற்றைப்பூங் குழலாளைச் சிறைவைத்த கண்டகனை
முற்றப்போர் முடித்ததொரு குரங்கென்றால் முனைவீரன்
கொற்றப்போர்ச் சிலைத்தொழிற்குக் குறைவுண்டா
மெனக்குறைந்தான். 1331

மாருதியின் வருத்தம்

கொன்றானோ கற்பழியாக் குலமகளைக் கொடுந்தொழிலால்
தின்றானோ வப்புறத்தே செறித்தானோ சிறையறியேன்

ஒன்றுனுமுணரகிலேன் மீண்டினிப்போயென்னுரைக்கேன்
பொன்ருத பொழுதெனக்குக் கொடுந்துயரம் போகாதால்.

கண்டுவரு மென்றிருக்குங் காகுத்தன் கவிக்குலத்தோன்
கொண்டுவரு மென்றிருக்கும் யானிழைத்த கோளிதுவால்
புண்டரிக நயனத்தான் பாலின்னம் போவேனே
விண்டவரோ டுடன்வீயா தியான்வாளா விளிவேனே.

ஏழுநா ரேசனசூழ்ந் தெயில்கிடந்த திவ்விலங்கை
வாழுமா மன்னுயிர்யான் காணுத மற்றில்லை
ஊழியான் பெருந்தேவி யொருவரையும் யான்காணேன்
ஆழிதா யிடராழி யிடையேவீழ்ந் தழிவேனே. 1334

வல்லரக்கன் றனைப்பற்றி வாயாறு குருதியுகக்
கல்லரக்குங் கரதலத்தாற் காட்டென்று காண்கேனே
எல்லரக்கு மயினுதிவே லிராவணனு மிவ்வூரும்
மெல்லரக்கி னுருக்கியுக வெந்தழலால் வேய்கேனே. 1335

எருவைக்கு முதலாய சம்பாதி யிலங்கையிலத்
திருவைக்கண் டனனென்ரு னவனுரையுஞ் சிதைந்ததால்
கருவைக்கு நெடுநகரைக் கடலிடையே கரையாதென்
உருவைக்கொண் டின்னமுநா னுளெனுகி யுழல்கேனே.

வடித்தாய்பூங் குழலாளை வானறிய மண்ணறியப்
பிடித்தானிவ் வடலரக்க னெனுமாற்றம் பிழையாதால்
எடுத்தாழி யிலங்கைதனை யிருங்கடலி னிட்டிவனை
முடித்தாலேயான்முடிதன் முறைமன்றவென் றுணர்வான்.

காட்சிப் படலம்

மாடு நின்றவம் மணிமலர்ச் சோலையை மருவித்
தேடி யவ்வழி காண்பெனேற் றீருமென் சிறுமை
ஊடு கண்டிலெ னெனிற்பின்ன ருரியதொன் றில்லை
வீடு வேன்மற்றிவ் விலங்கன்மே லிலங்கையை வீட்டி.

அரக்கியர் நடுவே அம்மையின் அல்லல்

துயிலெனக் கண்க ளிமைத்தலு முகிழ்த்தலுந் துறந்தாள்
வெயிலிடைத் தந்த விளக்கென வொளியிலா மெய்யாள்
மயிலியற் குயின் மழலையாண் மானிளம் பேடை
அயிலெயிற் றுவெம் புலிக்குழாத் தகப்பட்ட தன்னாள்.

விழுதல் விம்முதல் மெய்யுற வெதும்புதல் வெருவல்
எழுத லேங்குத லிரங்குத லிராமனை யெண்ணித்
தொழுதல் சோருதல் துளங்குதல் துயருழந் துயிர்த்தல்
அழுத லன்றிமற் றயலொன் றுஞ் செய்குவ தறியாள். 1340

துப்பி னுற்செய்த கைகொடு கால்பெற்ற துளிமஞ்
சொப்பி னுன்றனை நினைதொறு நெடுங்கண்க ளுகுத்த
அப்பி னுனைனைந் தருந்துய ருயிர்ப்புடை யாக்கை
வெப்பி னுற்புலர்ந் தொருநிலை யுருதமென் துகிலாள். 1341

அரிது போகவோ விதிவலி கடத்தலென் றஞ்சிப்
பரிதி வானவன் குலத்தையும் பழியையும் பாராச்
சுருதி நாயகன் வரும்வரு மென்பதோர் துணிவால்
கருதி மாதிர மனைத்தையு மளக்கின்ற கண்ணுள். 1342

ஆவி யந்துகில் புனைவதொன் றன்றிவே றறியாள்
தூவி யன்னமென் புனலிடைத் தோய்கிலா மெய்யாள்
தேவு தென்கட லமிழ்துகொண் டநங்கவேள் செய்த
ஓவி யம்புகை யுண்டதே யொக்கின்ற வுருவாள். 1343

கண்டி லன்கொலா மிளவலுங் கனைகடல் நடுவண்
உண்டி லங்கையென் றுணர்ந்திலருலகெலா மொறுப்பான்
கொண்டி ருந்தமை யறிகில ராமெனக் குழையாப்
புண்டி றந்ததி னெரிநுழைந் தாலெனப் புகைவாள். 1344

மாண்டு போயின னெருவைகட் கரசன்மன் மற்றோர்
யாண்டை யென்னிலை யறிவுறுப் பார்களிப் பிறப்பில்
காண்ட லேவரி தென்றென்று விம்முறுங் கலங்கும்
மீண்டு மீண்டுபுக் கெரிநுழைந் தாலென மெலிவாள். 1345

என்னை நாயக னிளவலை யெண்ணலா வினையேன்
சொன்ன வார்த்தைகேட் டறிவில ளெனத்துறந் தானோ
முன்னை யூழ்வினை முடிந்ததோ வென்றென்று முறையால்
பன்ன வாய்புலர்ந் துணர்வுதேய்ந் தாருயிர்பதைப்பாள்.

அருந்து மெல்லட காரிட வருந்துமென் றழுங்கும்
விருந்து கண்டபோ தென்னுறு மோவென்று விம்மும்
மருந்து முண்டுகொல் யான்கொண்ட நோய்க்கென்று மயங்கும்
இருந்த மாநிலஞ் செல்லரித் திடவுமாண் டெழாதாள். 1347

வன்கண் வஞ்சனை யரக்கரித் துணைப்பகல் வையார்
தின்ப ரென்னிலிச் செயத்தக்க தென்றுதீர்ந் தானே
தன்குலப்பொறை தன்பொறை யெனத்தணிந் தானே
என்கொ லெண்ணுவே னென்னுமங் கிராப்பக லில்லாள்.

பெற்ற தாயருந் தம்பியும் பெயர்த்தும்வந் தெய்திக்
கொற்ற மாநகர் கொண்டிறந் தார்களோ குறித்துச்
சொற்ற வாண்டெலா முறைந்தன்றி யந்நகர் துன்னன்
உற்ற துண்டெனப் படருழந் துருதநோ யுறுவாள். 1349

தெம்ம டங்கிய சேணிலங் கேகயர்
தம்ம டந்தையுன் றம்பிய தாமெனு
மும்ம டங்கு பொலிந்த முகத்தினன்
வெம்ம டங்கலை யுன்னி வெதும்புவாள். 1350

மெய்த்தி ருப்பத மேவென்ற போதினும்
இத்தி ருத்துறந் தேகென்ற போதினும்
சித்தி ரத்தி னலர்ந்தசெந் தாமரை
ஒத்தி ருந்த முகத்தினை யுன்னுவாள். 1351

தேங்கு கங்கைத் திருமுடிச் செங்கணன்
வாங்கு கோல வடவரை வார்சிலை
ஏங்கு மாத்திரத் திற்றிரண் டாய்விழ
வீங்கு தோளை நினைந்து மெலிந்துளாள். 1352

இன்ன லம்பர வேந்தற் கியற்றிய
பன்ன லம்பதி னாலா யிரம்படை
கன்னன் மூன்றிற் களப்படக் கால்வளை
வின்ன லம்புகழ்ந் தேற்றி வெதும்புவாள். 1353

ஆழநீர்க் கங்கை யம்பி கடாவிய
ஏழை வேடனுக் கெம்பிநின் றம்பிநீ
தோழன் மங்கை கொழுந்தி யெனச்சொன்ன
வாழி நண்பினை யுன்னி மயங்குவாள். 1354

உரங்கொ டேமலர்ச் சென்னி யுரிமைசால்
வரங்கொள் பொன்முடி தம்பி வனைந்திலன்
திரங்கு செஞ்சடை கட்டிய செய்வினைக்
கிரங்கி யேங்குவ தெண்ணி யிரங்குவாள். 1355

பரித்த செல்வ மொழியப் படருநாள்
அருத்தி வேதியர்க் கான்குல மீந்தவர்

கருத்தி ஞசைக் கரையின்மை கண்டிறை
சிரித்த செய்கை நினைந்தழுஞ் செய்கையாள். 1356

மழுவின் வாளினன் மன்னரை மூவெழு
பொழுதி னூறிப் புலவுறு புண்ணினீர்
முழுகி னூன்றவ மொய்ம்பொடு மூரிவில்
தழுவு மேன்மை நினைந்துயிர் சாம்புவாள். 1357

ஏக வாளியை இந்திரன் காதன்மேல்
போக வேவி யதுகண் பொடித்தநாள்
காக முற்றுமோர் கண்ணில வாக்கிய
வேக வென்றியைத் தன்றலை மேற்கொள்வாள். 1358

திரிசடையிடங் கூறுதல்

ஆயிடைத் திரிசடை யென்னு மன்பினுள்
தாயினு மினியவள் தன்னை நோக்கினுள்
தூயைநீ கேட்டியென் துணைவி யாமெனு
மேயதோர் கட்டுரை விளம்பன் மேயினுள். 1359

முனியொடு மிதிலையின் முதல்வன் முந்துநாள்
துனியறு புருவமுந் தோளு நாட்டமும்
இனியன துடித்தன வீண்டு மாண்டென
நனிதுடிக் கின்றன வாய்ந்து நல்குவாய். 1360

மறந்தனெ னிதுவுமோர் மாற்றங் கேட்டியால்
அறந்தரு சிந்தையென் னுவி நாயகன்
பிறந்தபார் முழுவதுந் தம்பி யேபெறத்
துறந்துகான் புகுந்தநாள் வலந்து டித்ததே. 1361

நஞ்சனை யான்வனத் திழைக்கு நாளிடை
வஞ்சனை யால்வலந் துடித்த வாய்மையால்
எஞ்சல வீண்டுதா மிடந்து டித்ததால்
அஞ்சலென் றிரங்குதற் கடுப்ப தியாதென்றுள். 1362

திரிசடை தேற்றுதல்

உன்னிறம் பசப்புற வுயிரு யிர்ப்புற
இன்னிறத் தேனிசை யினிய நண்பினுல்
மின்னிற மருங்குலாய் செவியின் மெல்லெனப்
பொன்னிறத் தும்பிவந் தூதிப் போயதால். 1363

ஆயது தேறினுன் ஞவி நாயகன்
ஏயது தூதுவந் தெதிர்த லுண்மையால்
தீயது தீயவர்க் கெய்தல் திண்ணமென்
வாயது கேளென மறித்துங் கூறுவாள். 1364

எண்ணெய்பொன் முடிதொறு மிழுகி யீறிலாத்
திண்ணெடுங் கழுதைபேய் பூண்ட தேரின்மேல்
அண்ணலவ் விராவண னரத்த வாடையன்
நண்ணினன் றென்புல னவையில் கற்பினுய். 1365

மக்களுஞ் சுற்றமு மற்று ளோர்களும்
புக்கன ரப்புலம் போந்த தில்லையால்
சிக்கற நோக்கினென் றீய வின்னமும்
மிக்கன கேட்கென விளம்பன் மேயினுள். 1366

ஆண்டகை யிராவணன் வளர்க்கு மவ்வனம்
ஈண்டன விறந்தவா லினங்கொள் செஞ்சிகைத்
தூண்டரு மணிவிளக் கழலுந் தொன்மனை
கீண்டதால் வானவே றெறியக் கீழைநாள். 1367

மங்கையர் மங்கலத் தாலி மற்றையோர்
அங்கையின் வாங்கின ரெவரு மன்றியே
கொங்கையின் வீழ்ந்தன குறித்த வாற்றினல்
இங்கித னற்புத மின்னுங் கேட்டியால். 1368

திரிசடை கனவு நிலை கழறல்

என்றன ளியம்பிவே றிசைப்பக் கேட்டியால்
இன்றிவ ணிப்பொழு தியைந்த தோர்கனு
வன்றுணைக் கோளரி யிரண்டு மாறிலாக்
குன்றிடை யுழுவையங் குழுக்கொண் டண்டியே. 1369

வரம்பிலா மதகரி யுறையு மவ்வனம்
நிரம்புற வளைந்தன நெருங்கி நேர்ந்தன
குரம்பறு பிணம்படக் கொன்ற மாறிலாப்
புரம்புக விருந்ததோர் மயிலும் போயதால். 1370

ஆயிரந் திருவிளக் கமைய மாட்டிய
சேயொளி விளக்கதொன் றேந்திச் செய்யவள்
நாயகன் றிருமனை நின்று நண்ணுதல்
மேயினள் வீடணன் கோயின் மென்சொலாய். 1371

பொன்மனை புக்கவப் பொருவில் போதினில்
என்னைநீ யுணர்த்தினை முடிந்த தில்லென
அன்னையே யதன்குறை காணென் றுயிழை
இன்னமுந் துயில்கென விருகை கூப்பினள். 1372

மாருதி வருதல்

இவ்விடை யண்ணலவ் விராம னேவிய
வெவ்விடை யனையபோர் வீரத் தூதனும்
அவ்விடை யெய்தின னிரிதி ரேக்குவான்
நொவ்விடை மடந்தைதன் னிருக்கை நோக்கினன். 1373

அங்குள்ள அரக்கியரது தன்மை

வயிற்றிடை வாயினர் வளைந்த நெற்றியில்
குயிற்றிய விழியினர் கொடிய நோக்கினர்
எயிற்றினுக் கிடையிடை யானை யாளிபேய்
துயிற்கொள்வெம் பிலனெனத் தொட்ட வாயினர். 1374

ஒருபது கையின ரொற்றைச் சென்னியர்
இருபது தலையின ரிரண்டு கையினர்
வெருவருந் தோற்றத்தர் விகட வேடத்தர்
பருவரை யெனமுலை பலவு நாற்றினர். 1375

சூலம்வாள் சக்கரந் தோட்டி தோமரம்
காலவேல் கற்பணங் கற்ற கையினர்
ஆலமே யுருவுகொண் டனைய மேனியர்
வாலமே தரித்தவன் வெருவும் வன்மையர். 1376

கரிபரி வேங்கைமாக் கரடி யாளிபேய்
அரிநரி நாயென வணிமு கத்தினர்
வெரிநுறு முகத்தினர் விழிகள் மூன்றினர்
புரிதரு கொடுமையர் புகையும் வாயினர். 1377

கொடிய அரக்கியரைக் கண்டு அம்மை அஞ்சுதல்.
மாருதி தாயாரைக் காணுதல்

கடக்கரு மரக்கியர் காவல் சுற்றுளாள்
மடக்கொடிச் சீதையா மாத ரேகொலாம்
கடற்றுணை நெடியதன் கண்ணி னீர்ப்பெருந்
தடத்திடை யிருந்ததோ ரன்னத் தன்மையாள். 1378

வீடின தன்றறன் யானும் வீகலேன்
தேடினென் கண்டனென் றேவி யேயெனு
ஆடினன் பாடின னுண்டு மீண்டும்பாய்ந்
தோடின னுலாவின னுவகைத் தேனுண்டான். 1379

மூவகை யுலகையு முறையி னீக்கிய
பாவிதன் னுயிர்கொள்வா னிழைத்த பண்பிதால்
ஆவதே யையமி லரவி னீங்கிய
தேவனே யவனிவள் கமலச் செல்வியே. 1380

புனைகழ லிராகவன் புயத்தை யோபுகழ்
வனிதையர் திலகத்தின் மனத்தின் மாண்பையோ
வனைகழ லரசரின் வண்மை வீக்கிடும்
சனகர்தங் குலத்தையோ யாதைச் சாற்றுகேன். 1381

தேவரும் பிழைத்திலர் தெய்வ வேதியர்
ஏவரும் பிழைத்தில ரறமு மீறின்றால்
யாவதிங் கினிச்செய லரிய தெம்பிராற்
காவவென் னடிமையும் பிழைத்தின் றுமன்றே. 1382

பேணநோற் றதுமனைப் பிறவி பெண்மைபோல்
நாணநோற் றுயர்ந்தது நங்கை தோன்றலால்
மாணநோற் றீண்டிவ ளிருந்த வாறெலாம்
காணநோற் றிலனவன் கமலக் கண்களால். 1383

தருமமே காத்ததோ சழக்கன் றன்வினைக்
கருமமே காத்ததோ கற்பின் காவலோ
அருமையே யருமையே யாரி தாற்றுவார்
ஒருமையே யெம்மனோர்க் குரைக்கற் பாலதோ. 1384

நிந்தனைப் படலம்

இராவணன் வருதல்

உருப்பசி யுடைவா ளெடுத்தனள் தொடர
மேனகை வெள்ளடை யுதவச்
செருப்பினைத் தாங்கித் திலோத்தமை செல்ல
அரம்பையர் குழாம்புடை சுற்றக்
கருப்புரச் சாந்துங் கலவையு மலருங்
கலந்துமிழ் பரிமள கந்தம்
மருப்புடைப் பொருப்போர் மாதிரக் களிற்றின்
வரிக்கைவாண் மூக்கிடை மடுப்ப. 1385

இனையதோர் தன்மை யெறுழ்வலி யரக்க
ரேந்தல்வந் தெய்துகின் றுனே
அனையதோர் தன்மை யஞ்சனைச் சிறுவன்
கண்டன னமைவுற நோக்கி
வினையமுஞ் செயலு மேல்விளை பொருளு
மிவ்வழி விளங்குமென் றெண்ணி
வனைகழ லிராமன் பெரும்பெய ரோதி
யிருந்தனன் வந்தயன் மறைந்தே. 1386

ஆயிடை யரக்க னரம்பையர் குழுவு மல்லவும் வேறய லகல
மேயினன் பெண்ணின் விளக்கெனுந் தகையா ளிருந்துழி
யாண்டவள் வெருவிப்
போயின வுயிர ளாமென நடுங்கிப் பொறிவரி யெறுழ்வலிப்
புகைக்கண்
காய்சின வுழுவை தின்னிய வந்த கலையிளம் பிணையெனக்
கரைந்தாள். 1387

கூசி யாவி குலைவுறு வாளையும்
ஆசை யாலுயி ராசழி வானையும்
காசில் கண்ணிணை சான்றெனக் கண்டனன்
ஊச லாடி யுளையு முளத்தினுன் 1388

இராவணன் சீதையிடம் வந்து கூறுதல்

அவ்வி டத்தரு கெய்தி யரக்கன்றுன்
எவ்வி டத்தெனக் கின்னரு ளீவது
நொவ்வி டைக்குயி லேநுவல் கென்றனன்
வெவ்வி டத்தை யமிழ்தென வேண்டுவான். 1389

இன்றி றந்தன நாளையி றந்தன
என்றி றந்தருந் தன்மையி தாலெனைக்
கொன்றி றந்தபின் கூடுதி யோகுழை
சென்றி றங்கிம றந்தரு செங்கணுய். 1390

பூந்தண் வார்குழற் பொற்கொழுந் தேபுகழ்
ஏந்து செல்வ மிகழ்ந்தனை யின்னுயிர்க்
காந்தன் மாண்டிலன் காடுக டந்துபோய்
வாழ்ந்த வாழ்வது மானிடர் வாழ்வன்றே. 1391

ஈண்டு நாளு மிளமையு மீண்டில
மாண்டு மாண்டு பிறிதுறு மாலைய

வேண்டு நாள்வெறி தேவிளிந் தாலினி
யாண்டு வாழ்வவ் விடருழன் றுழ்தியோ. 1392

வீட்டுங் காலத் தலறிய மெய்க்குரல்
கேட்டுங் காண்டற் கிருத்திகொல் கிள்ளை நீ
நாட்டுங் கானெடு நல்லறத் தின்பயன்
ஊட்டுங் காலத் திகழ்வ துறுங்கொலோ. 1393

தேவர் தேவியர் சேவடி கைதொழும்
தாவின் மூவுல கின்றனி நாயகம்
மேவு கின்றது நுன்கண் விலக்கினே
யாவ ரேழையர் நின்னி னிலங்கிழாய். 1394

குடிமை மூன்றுல குஞ்செயுங் கொற்றத்தென்
அடிமை கோடி யருளுதி யாலெனு
முடியின் மீது முகிழ்த்துயர் கையினன்
படியின் மேல்விழுந் தான்பழி பார்க்கலான். 1395

சீதையின் சினவுரை

காய்ந்தன சலாகை யன்ன வுரைவந்து கதுவா முன்னம்
தீய்ந்தன செவிக ளுள்ளந் திரிந்தது சிவந்தசோரி
பாய்ந்தன கண்க ளொன்றும் பரிந்தில ளுயிர்க்கும் பெண்மைக்
கேய்ந்தன வல்லா வெய்ய மாற்றங்க ளினைய சொன்னாள்.

மல்லடு திரள்தோள் வஞ்சன் மனம்பிறி தாகும் வண்ணம்
கல்லொடுந் தொடர்ந்த நெஞ்சங் கற்பின்மேற் கண்ட துண்டோ
இல்லொடுந் தொடர்ந்த மாதர்க் கேய்வன வல்ல வெய்ய
சொல்லிது தெரியக் கேட்டி துரும்பெனக் கனன்று சொன்னாள். 1397

மேருவை யுருவல்வேண்டின் விண்பிளந்தேகல்வேண்டின்
ஈரெழு புவனம் யாவு முற்றுவித் திடுதல் வேண்டின்
ஆரியன் பகழி வல்ல தறிந்திருந் தறிவி லாதாய்
சீரிய வல்ல சொல்லித் தலைபத்துஞ் சிந்து வாயோ. 1398

அஞ்சினை யாத லானன் றாரிய னற்ற நோக்கி
வஞ்சனை மானென் றேவி மாயையான் மறைத்து வந்தாய்
உய்ஞ்சனை போதி யாயின் விடுதியுன் குலத்துக்கெல்லாம்
நஞ்சினை யெதிர்ந்த போது நோக்குமோ நினது நாட்டம்.

தோற்றனைபறவைக்கன்று துள்ளுநீர்வெள்ளஞ்சென்னி
ஏற்றவன் வாளால் வென்ரு யன்றெனி னிறத்தி யன்றே
நோற்றநோன் புடைய வாழ்நாள் வரமிவை நுனித்த
வெல்லாம்
கூற்றினுக் கன்றே வீரன் சரத்திற்குங்குறித்ததுண்டோ.

குன்றுநீ யெடுத்தநாள்தன் சேவடிக் கொழுந்தா லுன்னை
வென்றவன் புரங்கள் வேவத் தனிச்சரந் துரந்த மேரு
என் துணைக் கணவ ஞற்றற் குரனிலா திற்று வீழ்ந்த
அன்றெழுந் துயர்ந்த வோசை கேட்டிலை போலு மம்மா.

மலையெடுத் தெண்டிசை காக்கு மாக்களை
நிலைகெடுத் தேனெனு மாற்ற நேருநீ
சிலையெடுத் திளையவ னிற்கச் சேர்ந்திலை
தலையெடுத் தின்னமும் மகளில் தாழ்தியோ. 1402

வெஞ்சின வரக்கரை விளித்து வீயுமோ
வஞ்சனை நீசெய வள்ளல் சீற்றத்தால்
எஞ்சலி லுலகெலா மெஞ்சு மெஞ்சுமென்
றஞ்சுகின் றேனிதற் கறனுஞ் சான்றரோ. 1403

மானுய ரிவரென மனக்கொண் டாயெனின்
கானுயர் வரைநிகர் கார்த்த வீரியன்
தானொரு மனிதனுற் றளர்ந்து ளானெனின்
தேனுயர் தெரியலான் றன்மை தேர்தியால். 1404

இருவரென் றிகழ்ந்தனை யென்னின் யாண்டெல்லை
ஒருவனன் றேயுல கழிக்கு மூழியான்
செருவருங் காலையென் மெய்ம்மை தேர்தியால்
பொருவருந் திருவிழந் தநாயம் பொன்றுவாய். 1405

உன்னையுங் கேட்டு மற்றுன் னூற்றமு முடைய நாளும்
பின்னையிவ் வரக்கர் சேனைப் பெருமையு முனிவர் பேணிச்
சொன்னபி னுங்கை மூக்கு மும்பியர் தோளுந் தாளும்
சின்னபின் னங்கள் செய்த வதனைநீ சிந்தி யாயோ. 1406

ஆயிரந் தடக்கை யானின் னைந்நான்கு கரமும் பற்றி
வாய்வழி குருதி சோரக் குத்திவான் சிறையில் வைத்த
தாயவன்வயிரத்தோள்கள் துணித்தவன்றொலைந்தமாற்றம்
நீயறிந் திலையோ வேகு நெறியறிந் திலாத நீசா. 1407

இராவணன் சீறுதல்

வளர்ந்த நாணினன் மாதிர மனைத்தையு மறைவித்
தளந்த தோளின னனல்சொரிகண்ணின னிவளைப்
பிளந்துதின்பெனென் றுடன்றவன் பெயர்ந்தனன்பெயரான்
கிளந்த சீற்றமுங் காதலு மெதிரெதிர் கிடைப்ப. 1408

அநுமன் சினம்

அன்ன காலையி னநுமனு மருந்ததிக் கற்பின்
என்னை யாளுடை நாயகன் றேவியை யென்முன்
சொன்ன நீசன்கை தொடுவதன் முன்றுகைத் துழக்கிப்
பின்னை நின்றது செய்குவே னென்பது பிடித்தான். 1409

தனியி னின்றனன் றலைபத்துங் கடிதுகத் தாக்கிப்
பனியின் வேலையி லிலங்கையைக் கீழுறப் பாய்ச்சிப்
புனித மாதவத் தணங்கினைச் சுமந்தனன் போவான்
இனிதி னென்பது நினைந்தனன் கரம்பிசைந் திருந்தான்.

இராவணன் மீட்டுங் கூறுதல்

ஒன்றுகே ளுரைக்க நிற்கோ ருயிரென வுரியோன்றன்னைக்
கொன்றுகோ ளிழைத்தால் நீநின் னுயிர்விடிற் கூற்றங் கூடும்
என்றவ னுயிரு நீங்கு மென்பதை யிதைய வெண்ணி
அன்றுநான் வஞ்சஞ் செய்த தாரெனக் கமரில் நேர்வார்.

சிற்றியற் சிறுமை யாற்றல் சிறுதொழின் மறவ ரோடே
முற்றிய தாவில் வீர முனிவென்கண் விளையா தேனும்
இற்றையிற் பகலி னெய்தி யிருவரை யொருகை யாலே
பற்றினென் கொணருந் தன்மை காணுதி பழிப்பிலாதாய்.

பதவிய மனித ரேனும் பைந்தொடி நின்னைத் தந்த
உதவியை யுணர நோக்கி னுயிர்கொலைக் குரிய ரல்லர்
சிதைவுற லவர்க்கு வேண்டிற் செய்திறன் றேர்ந்த தெண்ணின்
இதனினக் கீதே யாகி னியற்றுவல்காண்டி யின்னும். 1413

பள்ளநீ ரயோத்தி நண்ணிப் பரதனே முதலி னோராண்
டுள்ளவர் தம்மை யெல்லா முயிர்குடித் தூழித் தீயின்
வெள்ளநீர் மிதிலை யோரை வேரறுத் தெளிதி னெய்திக்
கொள்வெனின் னுயிரு மென்னை யறிந்திலை குறைந்த நாளோய். 1414

இராவணன் சீதையை இசைவிக்குமாறு
அரக்கியர்க்கு ஆணை தந்தகலல்.

அரக்கியர் செயல்

முன்முன் னின்றூர் கண்கனல் சிந்த முடுகுற்றூர்
மின்மின் னென்னுஞ் சூலமும் வேலு மிவையோச்சிக்
கொன்மின் கொன்மின் கொன்றுகு றைத்துக் குடரார்த்
தின்மின் றின்மி னென்றுதெ ழித்தார் சிலரெல்லாம். 1415

அறிந்தா ரன்ன முச்சடை யென்பா ளவள்சொல்லப்
பிறிந்தார் சீற்ற மன்னனை யஞ்சிப் பிறிதில்லாச்
செறிந்தா ராய தீவினை யன்னூர் தெறலெண்ணூர்
நெறிந்தா ரோதிப் பேதையு மாவி நிலைநின்றாள். 1416

உருக்காட்டுப் படலம்

மாருதி மந்திரத்தால் அரக்கியர் மயங்குதல்

காண்டற் கொத்த காலமு மீதே தெறுகாவல்
தூண்டற் கொத்த சிந்தையி னூருந் துயில்கில்லார்
வேண்டத் துஞ்சா ரென்றொரு விஞ்சை வினைசெய்தான்
மாண்டற் குற்றூ ராமென வெல்லா மயர்வுற்றூர். 1417

அன்னையின் அருந்துயர்

பொறையிருந் தாற்றியென் னுயிரும் போற்றினேன்
அறையி ருங்கழ லவற்காணு மாசையால்
நிறையிரும் பல்பகல் நிருதர் நீணகர்
சிறையிருந் தேனையப் புனிதன் றீண்டுமோ. 1418

சொற்பிரி யாப்பழி சுமந்து தூங்குவேன்
நற்பிறப் புடைமையு நாணு நன்றரோ
கற்புடை மடந்தையர் கதையு ளோர்கள்தாம்
இற்பிரிந் துய்ந்தவர் யாவர் யானலால். 1419

பிறர்மனை யெய்திய பெண்ணைப் பேணுதல்
திறனல தென்றுயிர்க் கிறைவன் றீர்ந்தனன்
புறனல ரவனுறப் போது போக்கியான்
அறனல தியற்றிவே றென்கொண் டாற்றுகேன். 1420

அன்பழி சிந்தைய ராய வாடவர்
வன்பழி சுமக்கினுஞ் சுமக்க வானுயர்

துன்பழி பெரும்புகழ்க் குலத்துட் டோன்றினேன்
என்பழி துடைப்பவ ரென்னின் யாவரே. 1421

வஞ்சனை மானின்பின் மன்னைப் போக்கியென்
மஞ்சனை வைதுபின் வழிக்கொள் வாயென
நஞ்சனை யானகம் புகுந்த நங்கையான்
உய்ஞ்சனெ னிருத்தலு முலகங் கொள்ளுமோ. 1422

வருந்தலின் மானமா வனைய மாட்சியர்
பெருந்தவ மடந்தையர் முன்பு பேதையேன்
கருந்தனி முகிலினைப் பிரிந்து கள்வரூர்
இருந்தவ ளிவளென வேச நிற்பெனோ. 1423

அற்புத னரக்கர்தம் வருக்க மாசற
விற்பணி கொண்டருஞ் சிறையின் மீட்டநாள்
இற்புகத் தக்கலை யென்னின் யானுடைக்
கற்பினை யெப்பரி சிழைத்துக் காட்டுகேன். 1424

சீதை இறக்கத் துணிதல்

ஆதலா னிறத்தலே யறத்தி னாறெனச்
சாதல்காப் பவருமென் றவத்திற் சாம்பினார்
ஈதலா திடமும்வே றில்லை யென்றொரு
போதுலா மாதவிப் பொதும்ப ரெய்தினாள். 1425

அநுமன் தோன்றுதல்

கண்டன னநுமனுங் கருத்து மெண்ணினான்
கொண்டனன் றுணுக்கமெய் தீண்டக் கூசுவான்
அண்டர்நா யகனருட் டூதன் யானெனாத்
தொண்டைவாய் மயிலினைத் தொழுது தோன்றினான். 1426

அடைந்தனெ னடியனே னிராம னாணையால்
குடைந்துல கனைத்தையு நாடுங் கொட்பினால்
மிடைந்தவ ருலப்பிலர் தவத்தை மேவலான்
மடந்தைநின் சேவடி வந்து நோக்கினேன். 1427

ஈண்டுநீ யிருந்ததை யிடரின் வைகுறும்
ஆண்டகை யறிந்தில னதற்குக் காரணம்
வேண்டுமே யரக்கர்தம் வருக்கம் வேரொடு
மாண்டில வீதலான் மாறு வேறுண்டோ. 1428

என்றவ னிறைஞ்ச நோக்கி யிரக்கமு முனிவு மெய்தி
நின்றவ னிருத னல்ல னெறிநின்று பொறிக ளைந்தும்
வென்றவ னல்ல னாகின் விண்ணவ னாகை வேண்டும்
நன்றுணர் வுரையன் றூய னவையிலன் போலு மென்னா.

அரக்கனே யாக வேறோ ரமரனே யாக வன்றிக்
குரக்கினத் தலைவ னேதா னாகுக கொடுமை யாக
இரக்கமே யாக வந்திங் கெம்பிரான் நாமஞ் சொல்லி
உருக்கின னுணர்வைத் தந்தா னுயிரிதி னுதவியுண்டோ.

சீதை வினவுதல்

எனநினைத் தெய்த நோக்கி யிரங்குமெ னுள்ளங் கள்ளம்
மனனகத் துடைய ரா்ய வஞ்சகர் மாற்ற மல்லன்
நினைவுடைச்சொற்கள்கண்ணீர்நிலம்புகப் புலம்பாநின்றான்
வினவுதற் குரிய னென்னா வீரநீ யாவ னென்றாள். 1431

அநுமன் கூறுதல்

ஆயசொற் றலைமேற் கொண்ட வங்கைய னன்னை நின்னைத்
தூயவன் பிரிந்த பின்பு தேடிய துணைவன் றெல்லைக்
காய்கதிர்ச்செல்வன்மைந்தனகவிக்குலமவற் றுக்கெல்லாம்
நாயகன் சுக்கி ரீவ னென்றுள னவையிற் றீர்ந்தான். 1432

மற்றவன் முன்னோ னந்நா ளிராவணன் வலிதன் வாலின்
இற்றுகக் கட்டியெட்டுத் திசையினு மெழுந்து பாய்ந்த
வெற்றியன் றேவர் வேண்ட வேலையை விலங்கன் மத்தில்
சுற்றிய நாகந் தேய வமுதெழக் கடைந்த தோளான். 1433

அன்னவன் றன்னை யுங்கோ னம்பொன்று லாவி வாங்கிப்
பின்னவற் கரசு நல்கித் துணையெனப் பிடித்தா னங்கள்
மன்னவன் றனக்கு நாயேன் மந்திரத் துள்ளேன் வானின்
நன்னெடுங் காலின் மைந்த னுமமு மநும னென்றான்.

எழுபது வெள்ளங் கொண்ட வெண்ணன வுலகமெல்லாம்
தழுவிநின் றெடுப்ப வேலை தனித்தனிக் கடக்குந் தாள
குழுவின வுங்கோன் செய்யக் குறித்தது குறிப்பி னுன்னி
வழுவில செய்தற் கொத்த வானரம் வானி னீண்ட. 1435

புன்றொழிலரக்கன்கொண்டு போந்தநாள் பொதிந்ததூசின்
குன்றினெம் மருங்கி னிட்ட வணிகலக் குறியி னாலே
வென்றியா னடியன் றன்னை வேறுகொண் டிருந்துகூறித்
தென்றிசை சேறி யென்றா னவனருள் சிதைவ தாமோ.

கொற்றவெற்காண்டுக்காட்டிக்கொடுத்தபோதடுத்ததன்மை
பெற்றியி னுணர்தற் பாற்ரோ வுயிர்நிலே பிறிதுமுண்டோ
இற்றைநா ளளவு மன்னு வன்றுநீ யிழித்து நீத்த
மற்றைநல் லணிகள் காணுன் மங்கலங் காத்த மன்னே.

ஆயவன் றன்மை நிற்க வங்கதன் வாலி மைந்தன்
ஏயவன் றென்பால் வெள்ள மிரண்டினே டெழுந்துசேனே
மேயின படர்ந்து திர வனேயவன் விடுத்தா னென்னேப்
பாய்புனலிலங்கைமூதூர்க்கென்றனன்பழியை வென்ருன்.

அநுமன் அடையாளங் கூறுதல்

[நாலாயிரப்பிரபந்தம் — பெரியாழ்வார் திருமொழி

"நெறிந்தகருங் குழல் மடவாய்
நின்னடியேன் விண்ணப்பம்
செறிந்தமணி முடிச்சனகன்
சிலேயிறுத்து நினேக்கொணர்ந்த
தறிந்து அரசு களேகட்ட
அருந்தவத்தோ னிடைவிலங்க
செறிந்தசிலே கொடுதவத்தைச்
சிதைத்ததுமோ ரடையாளம். (1)

வாரணிந்த முலேமடவாய்
வைதேகீ விண்ணப்பம்
தேரணிந்த அயோத்தியர்கோன்
பெருந்தேவீ கேட்டருளாய்
கூரணிந்த வேல்வலவன்
குகனேடுங் கங்கை தன்னில்
சீரணிந்த தோழமை
கொண்டதுமோ ரடையாளம். (2)

மானமரு மென்னேக்கி
வைதேகீ விண்ணப்பம்
கானமருங் கல்லதர்போய்க்
காடுறைந்த காலத்து
தேனமரும் பொழிற்சாரல்
சித்திர கூடத்திருப்ப
பால்மொழியாய் பரதனம்பி
பணிந்ததுமோ ரடையாளம். (3)

சித்திர கூடத்திருப்ப
சிறுகாக்கை முலை தீண்ட
அத்திரமே கொண்டெறிய
அனைத்துலகுந் திரிந்தோடி
வித்தகனே ராமாவோ
நின்னபயம் என்றழைப்ப
அத்திரமே அதன்கண்ணை
அறுத்ததுமோ ரடையாளம். (4)

மின்னொத்த நுண்ணிடையாய்
மெய்யடியேன் விண்ணப்பம்
பொன்னொத்த மானொன்று
புகுந்தினிது விளையாட
நின்னன்பின் வழிநின்று
சிலைபிடித்தெம் பிரானேக
பின்னேயங் கிலக்குமணன்
பிரிந்ததுமோ ரடையாளம். (5)

மைத்தகுமா மலர்க்குழலாய்
வைதேகீ விண்ணப்பம்
ஒத்தபுகழ் வானரக்கோ
னுடனிருந்து நினைத்தேட
அத்தகுசீ ரயோத்தியர்கோ
னடையாள மிவைமொழிந்தான்
இத்தகையா லடையாளம்
ஈதவன்கை மோதிரமே. (6)]

அநுமன் தந்த ஆழியை அம்மை கண்டு மகிழ்தல்

இழந்தமணி புற்றர வெதிர்ந்ததென லானாள்
பழந்தன மிழந்தன படைத்தவரை யொத்தாள்
குழந்தையை யுயிர்த்தமல டிக்குவமை கொண்டாள்
உழந்துவிழி பெற்றதொ ருயிர்ப்பொறையு மொத்தாள்.

வாங்கினள் முலைக்குவையில் வைத்தனள் சிரத்தால்
தாங்கினள் மலர்க்கண்மிசை யொத்தினள் தடந்தோள்
வீங்கினள் மெலிந்தனள் குளிர்ந்தனள் வெதுப்போ
டேங்கின ளுயிர்த்தன ளிதின்ன தெனலாமே. 1440

மோக்குமுலை வைத்துற முயங்குமொளிர் நன்னீர்
நீக்கிநிறை கண்ணிணை ததும்பநெடு நீள
நோக்குநுவ லக்கருது மொன்றுநுவல் கில்லாள்
மேக்குநிமிர் விம்மலள் விழுங்கலுறு கின்றாள். 1441

இருந்துபசி யாலிட ருழந்தவர்க ளெய்தும்
அருந்துமமு தாகிய தறத்தவரை யண்மும்
விருந்துமென லாகியது வீயுமுயிர் மீளும்
மருந்துமென லாகியது வாழிமணி யாழி. 1442

மாருதியை வாழ்த்தல்

மும்மையா முலகந் தந்த முதல்வற்கு முதல்வன் றூதாய்ச்
செம்மையா லுயிர்தந் தாய்க்குச் செயலென்ஞ லெளிய
துண்டோ
அம்மையா யத்த னைய வப்பனே யருளின் வாழ்வே
இம்மையே மறுமை தானு நல்கினை யிசையோ டென்றாள்.

பாழிய பணைத்தோள் வீர துணையிலேன் பரிவு தீர்த்த
வாழிய வள்ளலேயான்மறுவிலா மனத்தே னென்னின்
ஊழியோர் பகலா யோதும் யாண்டெலா முலகமேழும்
ஏழும்வீ வுற்ற ஞான்று மின்றென இருத்தி யென்றாள்.

அம்மை இராமர் எங்கிருக்கின்றார்? என்று வினவ, மாருதி, சீதை பிரிந்தபின் நிகழ்ந்த செயல் அனைத்துங் கூறினார்.

"சிறிய உருவுடைய நீ எவ்வாறு கடல் கடந்தாய்?" என்றாள்.

நையுறு சிந்தையள் நயன வாரியின்
தொய்யல்வெஞ் சுழியிடைச் சுழிக்கு மேனியள்
ஐயநீ யளப்பரு மளக்கர் நீந்தினை
எய்திய தெப்பரி சியம்புவா யென்றாள். 1445

சுருங்கிடை யுன்னொரு துணைவன் றூயதாள்
ஒருங்குடை யுணர்வினோ ரோய்வின் மாயையின்
பெருங்கடல் கடந்தனர் பெயரும் பெற்றிபோல்
கருங்கடல் கடந்தனென் காலி னாலென்றான். 1446

இத்துணைச் சிறியதோ ரெண்ணில் யாக்கையை
தத்தினை கடலது தவத்தி னாயதோ
சித்தியி னியன்றதோ செப்பு வாயென்றாள்
முத்தினு நிலவினு முறுவன் முற்றினாள். 1447

அநுமன் விசுவரூபம் காட்டல்

வஞ்சியம் மருங்குலம் மறுவில் கற்பினுள்
கஞ்சமும் புரைவன கழலுங் கண்டிலாள்
துஞ்சின ரரக்கரென் றுவக்குஞ் சூழ்ச்சியாள்
அஞ்சினெ னிவ்வுரு வடங்குவா யென்முள். 1448

சீதையின் வியப்புரை

ஆழிநெடுங்கை யாண்டகைதன் னருளும் புகழுமழிவின்றி
ஊழிபலவு நிலைநிறுத்தற் கொருவ னீயே யுளையானுய்
பாழி நெடுந்தோள் வீராநின் பெருமைக் கேற்பப் பகையிலங்கை
ஏழு கடற்கு மப்புறத்த தாகா திருந்த திழிபன்றே. 1449

மின்னே ரெயிற்று வல்லரக்கர் வீக்க நோக்கி வீரற்குப்
பின்னே பிறந்தா னல்லதோர் துணையிலாத பிழைநோக்கி
உன்னு நின்றே யுடைகின்றே னெழிந்தே னைய முயிருயிர்த்தேன்
என்னே நிருத ரென்னுவ ரிவனே யெங்கோன் றுணை யென்றுல். 1450

மாண்டே னெனினும் பழுதன்றே
யின்றே மாயச் சிறைநின்றும்
மீண்டே னென்னை யொறுத்தாரைக்
குலங்க ளோடும் வேரறுத்தேன்
பூண்டே னெங்கோன் பொலன்கழலும்
புகழே யன்றிப் புன்பழியும்
தீண்டே னென்று மனமகிழ்ந்தாள்
திருவின் முகத்துத் திருவன்னுள். 1451

மாருதி வசனம்

அண்ணற் பெரியோ னடிவணங்கி
யறிய வுரைப்பா னருந்ததியே
வண்ணக் கடலி னிடைக்கிடந்த
மணலிற் பலரால் வானரத்தின்
எண்ணற் கரிய படைத்தலைவ
ரிராமற் கடியார் யானவர்தம்
பண்ணைக் கொருவ னெனப்போந்தே
னேவக் கடவ பணிசெய்வேன். 1452

வெள்ள மேழு பத்துள தால் வீரன் சேனை யிவ்வேலைப்
பள்ள மொருகை நீரள்ளிக் குடிக்கச்சாலும் பான்மையதோ
கள்ள வரக்கர் கடியிலங்கை காணு தொழிந்த தாலன்றே
உள்ள துணையு முளதாவ தறிந்து பின்னு முளதாமோ.

சூடாமணிப் படலம்

அநுமன் கூறுதல்

கேட்டியடி யேனுரைமு னிந்தருளல் கேளார்
வீட்டியிடு மேலவனை வேறல்வினை யன்றல்
ஈட்டியினி யென்பலவி ராமனெதிர் நின்னைக்
காட்டியடி தாழ்வெனிது காண்டியிது காலம். 1454

அறிந்திடை யரக்கர்தொடர் வார்களுள ராமேல்
முறிந்துதிர நூறியெதி ரென்சின முடிப்பேன்
நெறிந்தகுழ னின்னிலைமை கண்டுநெடி யோன்பால்
வெறுங்கைபெய ரேனொருவ ராலும்விளி யாதேன். 1455

இலங்கையொடு மேகுதிகொ லென்னினு மிடந்தேன்
வலங்கொளொரு கைத்தலையில் வைத்தெதிர் தடுப்பான்
விலங்கினரை நூறிவரி வெஞ்சிலையி னோர்தம்
பொலன்கொள்கழல் தாழ்குவெனி தன்னைபொருளன்றல்.

இருக்குமதில் சூழ்கடியி லங்கையை யிமைப்பின்
உருக்கியெரி யாவிகல ரக்கரையு மொன்றே
முருக்கிநிரு தக்குலமு டித்துவினை முற்றிப்
பொருக்கவகல் கென்னினும தின்றுபுரி கின்றேன். 1457

வேறினிவி ளம்பவுள தன்றுவிதி யாலிப்
பேறுபெற வென்கணருள் தந்தருளு பின்போய்
ஆறுதுய ரஞ்சொலிள வஞ்சியடி யன்றேள்
ஏறுகடி தென்றுதொழு தின்னடிப ணிந்தான். 1458

அன்னையின் அறவுரை

ஏய நன்மொழி யெய்த விளம்பிய
தாயின் முன்னிய கன்றனை யான்றனை
ஆய தன்மை யரியதன் றெனத்
தூய மென்சொ லினையன சொல்லினள். 1459

அரிய தன்றுநின் னாற்றலுக் கேற்றதே
தெரிய வெண்ணினை செய்வதுஞ் செய்தியே

உரிய தன்றென வோர்கின்ற துண்டதென்
பெரிய பேதைமைச் சின்மதிப் பெண்மையால். 1460

வேலை யின்னிடை யேவந்து வெய்யவர்
கோலி வெஞ்சர நின்னெடுங் கோத்தபோ
தால மன்னவர்க் கல்லையெற் கல்லையால்
சால வுந்தடு மாறுந் தனிமையோய். 1461

அன்றி யும்பிறி துள்ளதொன் ருரியன்
வென்றி வெஞ்சிலை மாசுணும் வேறினி
நன்றி யென்பதம் வஞ்சித்த நாய்களின்
நின்ற வஞ்சனை நீயு நினைத்தியோ. 1462

அல்லன் மாக்க ளிலங்கைய தாகுமோ
எல்லைநீத்த வுலகங்கள் யாவுமென்
சொல்லி னுற்சுடு வேனது தூயவன்
வில்லி னுற்றற்கு மாசென்று வீசினேன். 1463

வேறு முண்டுரை கேளது மெய்ம்மையோய்
ஏறு சேவகன் மேனியல் லாலிடை
ஆறு மைம்பொறி நின்னையு மாணெனக்
கூறு மிவ்வுருத் தீண்டுதல் கூடுமோ. 1464

தீண்டு வானெனி னித்தனைச் சேண்பகல்
ஈண்டு மோவுயிர் மெய்யினி மைப்பின்முன்
மாண்டு தீர்வனென் றேநிலம் வன்மையால்
கீண்டு கொண்டெழுந் தேகினன் கீழ்மையான். 1465

மேவு சிந்தையின் மாதரை மெய்தொடின்
தேவு வன்றலை சிந்துக தீதெனப்
பூவின் வந்தபு ராதன னேபுகல்
சாவ முண்டென தாருயிர் தந்ததால். 1466

அன்ன சாவ முளதென வாண்மையான்
மின்னு மௌலியன் மெய்ம்மையன் வீடணன்
கன்னி யென்வயின் வைத்த கருணையாள்
சொன்ன துண்டு துணுக்க மகற்றுவாள். 1467

ஆண்டு நின்று மரக்க னகழ்ந்துகொண்
டீண்டு வைத்த திளவ லியற்றிய
நீண்ட சாலை யொடுநிலை நின்றது
காண்டி யையநின் மெய்யுணர் கண்களால். 1468

தீர்வி லேனி தொருபக லுஞ்சிலே
வீரன் மேனியை மானுமிவ் வீங்குநீர்
நார நாண்மலர்ப் பொய்கையை நண்ணுவேன்
சோரு மாருயிர் காக்குந் துணிவினல். 1469

ஆத லானது காரிய மன்றைய
வேத நாயகன் பாலினி மீண்டனே
போதல் காரிய மென்றனள் பூவையக்
கோதி லானு மினேயன கூறினன். 1470

அநுமன் தொழுது, "ஐயனுக்கு என் சொலவேண்டும்" என்று வினவுதல்

இருளு ஞாலமி ராவண னலிது
தெருளு நீயினிச் சில்பகல் தங்குறின்
மருளு மன்னவற் கியான்சொலும் வாசகம்
அருளு வாயென் றடியி னிறைஞ்சினன். 1471

அன்னேயின் திருமொழி

இன்னு மீண்டொரு திங்க ளிருப்பல்யான்
நின்னே நோக்கிப் பகர்ந்தது நீதியோய்
பின்னே யாவி பிடிக்கின்றி லேனந்த
மன்ன னணே யிதனே மனக்கொள்நீ. 1472

ஆரந் தாழ்திரு மார்பற் கமைந்ததோர்
தாரந் தானல ளேனுந் தயாவெனும்
ஈரந் தானகத் தில்லேயென் ருலுந்தன்
வீரங் காத்தலே வேண்டென்று வேண்டுவாய். 1473

ஏத்தும் வென்றி யிளேயவற் கொரு
வார்த்தை கூறுதி மன்னரு ளாலெனேக்
காத்தி ருந்தவற் கேகட னென்றிடை
கோத்த வெஞ்சிறை வீடென்று கூறுவாய். 1474

திங்க ளொன்றினென் செய்தவந் தீர்ந்ததால்
இங்கு வந்தில னேயெனின் யாணர்நீர்க்
கங்கை யாற்றங் கரையபடி யேற்குத்தன்
செங்கை யாற்கடன் செய்கென்று செப்புவாய். 1475

சிறக்கு மாமியர் மூவர்க்குஞ் சீதையாண்
டிறக்கின் ருள்தொழு தாளெனு மின்னசொல்

அறத்தி ஞயகன் பாலரு ளின்மையால்
மறக்கு மாயினு நீமற வேலையா. 1476

வந்தெ னைக்கரம் பற்றிய வைகல்வாய்
இந்த விப்பிற விக்கிரு மாதரைச்
சிந்தை யாலுந் தொடேனென்ற செவ்வரம்
தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய். 1477

ஈண்டு நானிருந் தின்னுயிர் மாயினும்
மீண்டு வந்து பிறந்துதன் மேனியைத்
தீண்ட லாவதோர் தீவினை தீர்வரம்
வேண்டி னுள்தொழு தென்று விளம்புவாய். 1478

அரசு வீற்றிருந் தாளவு மாய்மணிப்
புரசை யானையின் வீதியிற் போகவும்
விரசு கோலங்கள் காண விதியிலேன்
உரைசெய் தென்னையென் னூழ்வினை யுன்னுவேன்.

தன்னை நோக்கி யுலகந் தளர்தற்கும்
அன்னை நோய்க்கும் பரதனங் காற்றுறும்
இன்ன ஞேய்க்குமங் கேகுவ தன்றியே
என்னை நோக்கியிங் கெங்ஙன மெய்துமோ. 1480

எந்தையாய் முதலிய கிளைஞர் யார்க்குமென்
வந்தனை விளம்புதி கவியின் மன்னனைச்
சுந்தரத் தோளனைத் தொடர்ந்து காத்துப்போய்
அந்தமி னெடுநகர்க் கரச ஞக்கென்பாய். 1481

அநுமன் அம்மையைத் தேற்றுதல்

வீவாய் நீயிவண் மெய்யஃதே
ஓய்வா னின்னுயி ருய்வாளும்
போய்வா னந்நகர் புக்கன்றே
வேய்வான் மௌலியு மெய்யன்றே. 1482

புளிக்குங் கண்டகர் புண்ணீருள்
குளிக்கும் பேய்குடை யுந்தோறும்
ஒளிக்குந் தேவரு வந்துள்ளம்
களிக்கும் நல்வினை காணுயோ. 1483

சூலிரும் பெருவயி றலைத்துச் சோர்வுறும்
ஆலியங் கண்ணிய ரறுத்து நீத்தன

வாலியுங் கடப்பரு வனப்ப வானுயர்
தாலியம் பெருமலை தயங்கக் காண்டியால். 1484

விண்ணினீ ளியநெடுங் கழுகும் வெஞ்சிறை
எண்ணினீ ளியபெரும் பறவை யீட்டமும்
புண்ணினீர்ப் புணரியிற் படிந்து பூவையர்
கண்ணினீ ராற்றினிற் குளிப்பக் காண்டியால். 1485

கரம்பயின் முரசினங் கறங்கக் கைதொடர்
நரம்பினு மிமிழிசை நவில நாடகம்
அரம்பைய ராடிய வரங்கி னுண்டொழிற்
குரங்குகண் முறைமுறை குனிப்பக் காண்டியால். 1486

வினையுடை யரக்கரா மிருந்தை வெந்துகச்
சனகியென் றொருதழ னடுவண் தங்கலான்
அனகன்கை யம்பெனு மளவி லூதையால்
கனகநீ டிலங்கைநின் றுருகக் காண்டியால். 1487

தாக்கிக விராவணன் றலையிற் றுவின
பாக்கிய மனையநின் பழிப்பின் மேனியை
நோக்கிய கண்களை நுதிகொண் மூக்கினால்
காக்கைகள் கவர்ந்துகொண் டுண்ணக் காண்டியால்.

ஈண்டொரு திங்களிவ் விடரின் வைகுதல்
வேண்டுவ தன்றுநான் விரைவில் வீரனைக்
காண்டலே குறைவுபின் காலம் வேண்டுமோ
ஆண்டகை யினியொரு பொழுது மாற்றுமோ. 1489

எண்ணரும் பெரும்படை நாளை யிந்நகர்
நண்ணிய பொழுதது நடுவ ணங்கைநீ
விண்ணுறக் கருளன்மேல் விளங்கும் விண்டுவிற்
கண்ணனை யென்னெடு வெரிகிற் காண்டியால். 1490

அங்கதன் றோண்மிசை யிளவ லம்மலை
பொங்குவெங் கதிரெனப் பொலியப் போர்ப்படை
இங்குவந் திருக்குநீ யிடரு மையமும்
சங்கையு நீங்குதி தனிமை நீங்குவாய். 1491

அநுமனிடம் அம்மை அடையாளம் கூறுதல்

என்னெ ரின்னுயிர் மென்கிளிக் கியார்பெய ரீகேன்
மன்ன வென்றலு மாசறு கைகயன் மாதென்

அன்னே தன்பெய ராகென வன்பினெ டன்னுட்
சொன்ன மெய்ம்மொழி சொல்லுதி மெய்ம்மை
தொடர்ந்தோய். 1492

சூடாமணி தருதல்.

வாங்கி னள்தன் மலர்க்கையி னன்னது முன்னு
ஏங்கி னளவ் வநுமனு மென்கொலி தென்னு
வீங்கி னன்வியந் தானுல கேழும் விழுங்கித்
தூங்கு காரிருண் முற்று மிரிந்தது சுற்றி. 1493

சூடை யின்மணி கண்மணி யொப்பது தொன்னுள்
ஆடை யின்கணி ருந்தது பேரடை யாளம்
நாடி வந்தென தின்னுயிர் நல்கிய நம்பா
கோடி யென்றுகொ டுத்தனண் மெய்ப்புகழ்
கொண்டாள். 1494

தொழுது வாங்கினன் சுற்றிய தூசினன் முற்றப்
பழுது றுவகை பந்தனை செய்தனன் வந்தித்
தழுது மும்மை வலங்கொ டிறைஞ்சின னன்போ
டெழுது பாவையு மேத்தின ளேகின னிப்பால். 1495

[சூடாமணியின் வரலாறு

பாற்கடலை அமரர் கடைந்தபோது அமிர்தத்துடன் சிந்தா மணி, கௌஸ்துபமணி, சூடாமணி என்ற மூன்று மணிகள் பிறந்தன. சிந்தாமணியை இந்திரனும், கௌஸ்துப மணியை திருமாலும் அடைந்தனர். அமிர்தம் கடையத் துணை புரிந்த நிமி யென்ற மன்னனுக்கு சூடாமணியை அளித்தனர்.

அவன் மரபுளோர் அதனை வைத்துப் பூசித்தனர். இறுதி யில் வந்த ஜனகர் தனக்கு ஆண் மகவு இன்மையால் அதனைத் தலையில் வைக்கும் அணிகலமாகச் செய்து தன் புதல்வி சீதைக் குத் தந்தனர்.

அமிர்தத்துடன் பிறந்த மணியாதலின் அன்னை அணிகலங் களைக் கழற்றி எறிந்தபோது இதனை எறியாது துணியில் முடிந்து வைத்திருந்தாள்.]

பொழிலிறுத்த படலம்

மாருதி கருத்து

ஈனமுறு பற்றலரை யெற்றியெயின் மூதூர்
மீனநில யத்தினுக வீசிவிழி மானை
மானவன்ம லர்க்கழலின் வைத்துமிலெ னென்றால்
ஆனபொழு தெப்பரிசி னுனடிய னுவேன். 1496

கண்டநிரு தக்கடல் கலக்கினென் வலத்தில்
திண்டிற லரக்கனு மிருக்கவொர் திறத்தின்
மண்டவுத ரத்தவண் மலர்க்குழல் பிடித்துக்
கொண்டுசிறை வைத்திடுத லிற்குறைவ துண்டோ. 1497

இப்பொழி லிணைக்கடி திறுக்குவெ னிறுத்தால்
அப்பெரிய பூசல்செவி சார்தலு மரக்கர்
வெப்புறு சினத்தரெதிர் மேல்வருவர் வந்தால்
துப்புற முருக்கியுயி ருண்பலிது சூதால். 1498

வந்தவர்கள் வந்தவர்கண் மீள்கிலர் மடிந்தால்
வெந்திற லரக்கனும் விலக்கரு வலத்தால்
முந்துமெனி னன்னவன் முடித்தலை முசித்தென்
சிந்தையுறு கோபமு மவித்தினிது செல்வேன். 1499

அசோகவனத்தை யழித்தல்

முடிந்தன பிளந்தன முறிந்தன நெரிந்த
மடிந்தன பொடிந்தன மறிந்தன முறிந்த
இடிந்தன தகர்ந்தன வெரிந்தன கரிந்த
ஒடிந்தன வொசிந்தன வுதிர்ந்தன பிதிர்ந்த. 1500

மணிகொள் குட்டிம மட்டித்து மண்டபம்
துணிப டுத்தயல் வாவிகள் தூர்த்தொளிர்
திணிசு வர்த்தலஞ் சிந்திச் செயற்கரும்
பணிப டுத்துயர் குன்றம் படுத்தரோ. 1501

தோட்டொடுந் துதைந்த தெய்வ மரந்தொறுந் தொடுத்த புட்பம்
கூட்டொடுந்துறக்கம்புக்ககுன்றெனக்குவவுத்திண்டோள்
சேட்டகன் பரிதிமார்பன் சீறியுந் தீண்டல் தன்னால்
மீட்டவன் கருணை செய்தாற் பெறும்பதம்விளம்பலாமோ.

பொய்ம்முறை யரக்கர்காக்கும் புள்ளுறை புதுமென்சோலை
விம்முறு முள்ளத் தன்ன மிருக்குமவ் விருக்கமொன்றும்
மும்முறை யுலகமெல்லா முற்றுற முடிவ தான
அம்முறை யையன் வைகு மாலென நின்ற தம்மா. 1503

அரக்கியர் அம்மையைக் கேட்டல்

இன்னன நிகழும் வேலை யரக்கிய ரெழுந்து பொங்கிப்
பொன்மலை யென்ன நின்ற புனிதனைப் புகன்று நோக்கி
அன்னையீ தென்னை மேனி யார்கொலென் றச்ச முற்றார்
நன்னுதல் தன்னை நோக்கி யறிதியோ நங்கை யென்றார்.

அம்மை விடை

தீயவர் தீய செய்தல் தீயவர் தெரியி னல்லால்
தூயவர் துணித லுண்டே நும்முடைச் சூழ லெல்லாம்
ஆயமா னெய்த வம்மா னிளையவ னரக்கர் செய்த
மாயமென் றுரைக்க வேயு மெய்யெனமையல்கொண்டேன்.

மாருதி ஒரு ஓம மண்டபத்தைப் பிடுங்கி
இலங்கை மீது எறிந்தார்.

விட்டன னிலங்கை தன்மேல் விண்ணுற விரிந்த மாடம்
பட்டன பொடிக ளான பகுத்தன பாங்கு நின்ற
சுட்டன பொறிகள் பின்னைத் துளங்கின ரரக்கர் தாமும்
கெட்டனர் வீர ரம்மா பிழைப்பரோ கேடு சூழ்ந்தார். 1506

காவல்புரியுந் தேவர் சென்று இராவணனுக்குரைத்தல்

அரிபடு சீற்றத் தான்ற னருகுசென் றடியின் வீழ்ந்தார்
கரிபடு திசையி னீண்ட காவலாய் காவ லாற்றோம்
கிரிபடு குவவுத் திண்டோட் குரங்கிடை கிழித்து வீச
எரிபடு துகிலி னெய்தி னிற்றது கடிகா வென்றார். 1507

ஆடகத் தருவிண் சோலை பொடிபடுத் தரக்கர் காக்கும்
தேடரு மோமம் வாங்கி யிலங்கையுஞ் சிதைத்த தம்மா
கோடர மொன்றே நன்றி திராக்கதர் கொற்றஞ் சொற்றல்
மூடரு மொழியா ரென்ன மன்னனு முறுவல் செய்தான்.

தேவர்கள் பின்னு மன்ன வதனுருச் சுமக்குந் திண்மைப்
பூவல யத்தையன்றோபுகழ்வது புலவர் போற்றும்
மூவரி னொருவ னென்று புகல்கினு முடிவிலாத
ஏவமக் குரங்கை யைய காணுதி யின்னே யென்றார். 1509

மண்டலங் கிழிந்த வாயின் மறிகடன் மோழை மண்ட
எண்டிசை சுமந்த மாவுந் தேவரு மிரியல் போகத்
தொண்டைவா யரக்கி மார்கள் சூல்வயி றுடைந்து சோர
அண்டமும் பிளந்து விண்ட தாமென வநும ஞார்த்தான்.

கிங்கரர் வதைப் படலம்

இராவணன் கட்டளை

புல்லிய முறுவல் தோன்றப் பொருமையுஞ் சிறிது பொங்க
எல்லையி லாற்றன் மாக்க ளெண்ணிறந் தாரை யேவி
வல்லையி னகலா வண்ணம் வானையும் வழியை மாற்றிக்
கொல்லலீர் குரங்கை நொய்திற் பற்றுதிர் கொணர்தி
ரென்றான். 1511

கிங்கரர் பெருமை

சூலம்வாண் முசலங் கூர்வேல் தோமரந் தண்டு பிண்டி
பாலமே முதலா வுள்ள படைக்கலம் பரித்த கையர்
ஆலமே யனைய மெய்ய ரகலிட மழிவு செய்யும்
காலமே லெழுந்த மூரிக் கடலெனக் கடிது செல்வார். 1512

நானில மதனி னுண்டு போரென நவிலி னச்சொல்
தேனினுங்களிப்புச்செய்யுஞ்சிந்தையர்த்தெரித்துமென்னின்
கானினும் பெரியர் ஓசை கடலினும் பெரியர் கீர்த்தி
வானினும் பெரியர் மேனி மலையினும் பெரியர் மாதோ.

கட்டிய வாள ரிட்ட கவசத்தர் கழலர் திக்கைத்
தட்டிய தோளர் மேகந் தடவிய கையர் வானை
எட்டிய முடியர் தாளா லிடறிய பொருப்ப ரீட்டிக்
கொட்டிய பேரி யென்ன மழையெனக் குமுறுஞ் சொல்லார்.

வாளுறை விதிர்க்கின் றாரும் வாயினை மடிக்கின் றாரும்
தோளுறத் தட்டிக் கல்லைத் துகள்படத் துகைக்கின் றாரும்
தாள்பெயர்த் திடம்பெ றாது தருக்கினர் நெருக்கு வாரும்
கோள்வளை யெயிறு தின்று தீயெனக் கொதிக்கின் றாரும்.

வரைகளையிடறுமி னென்றான்மறிகடல் பருகுமினென்றால்
இரவியை விழவிடு மென்றாலெழுமழை பிழியுமினென்றால்
அரவினதரசனையொன்றோதரையினைடைறையுமினென்றால்
தரையினை யெடுமெடு மென்றாலொருவர தமைதல்
சமைந்தார். 1516

அநுமன் போர்த்திறம்

பற்றித் தாளொடு தோள்பறித் தெறிந்தனன் பாரின்
இற்ற வெஞ்சிறை வெற்பின மாமெனக் கிடந்தார்
கொற்ற வாலிடைக் கொடுந்தொழி லரக்கரை யடங்கச்
சுற்றி வீசலிற் பம்பர மாமெனச் சுழன்ருர். 1517

தாள்க ளாற்பலர் தடக்கைக ளாற்பலர் தாக்கும்
தோள்க ளாற்பலர் சுடர்விழி யாற்பலர் தொடரும்
கோள்க ளாற்பலர் குத்துக ளாற்பலர் தத்தம்
வாள்க ளாற்பலர் மரங்களி ளுற்பலர் மடிந்தார். 1518

கருதி வாலினுங் கையினுங் காலினுங் கட்டிச்
சுருதி யேயன்ன மாருதி மரத்திடை துரப்பான்
நிருதரெந்திரத் திடுகரும் பாமென நெரிவார்
குருதி சாறெனப் பாய்வது குரைகடற் கூனில். 1519

தத்த மாடங்கள் தம்முட லாற்சிலர் தகர்த்தார்
தத்த மாதரைத் தங்கழ லாற்சிலர் சமைத்தார்
தத்த மாக்களைத் தம்படை யாற்சிலர் தடிந்தார்
எற்றி மாருதி தடக்கைக ளான்விசித் தெறிய. 1520

பெயர்க்குஞ் சாரிகை கறங்கெனத் திசைதொறும் பெயர்வின்
உயர்க்கும் விண்மிசை யோங்கலின் மண்ணின்வந் துறலின்
அயர்ந்து வீழ்ந்தன ரழிந்தன ரரக்கரா யுள்ளார்
வெயர்த்தி லன்மிசை யுயிர்த்தில னல்லற வீரன். 1521

தூதரோடி இராவணன் பால் உரைத்தல்

விரைவி னுற்றனர் விம்மலுற் றியாதொன்றும் விளம்பார்
கரத லத்திுறைற் பட்டதுங் கட்டுரைக் கின்ருர்
தரையி னிற்கிலர் திசைதொறு நோக்கினர் சலிப்பார்
அரசன் மற்றவ ரலக்கணே யுரைத்திட வறிந்தான். 1522

இறந்து நீங்கின ரோவின்றெ ளுணையை யிகழ்ந்து
துறந்து நீங்கின ரோவென்றி வெஞ்சமர் தொலைந்தார்
மறந்து நீங்கின ரோவென்கொல் வந்ததென் றுரைத்தான்
நிறஞ்செ ருக்குற வாய்தொறு நெருப்புமிழ் கின்ருன். 1523

சலந்தலைக் கொண்டன ராய தன்மையார்
அலந்திலர் செருக்களத் தஞ்சி னுரலர்

புலந்தெரி பொய்க்கரி புகலும் புன்கணோர்
குலங்களி னவிந்தனர் குரங்கினா லென்றார். 1524

மீட்டவ ருரைத்திலர் பயத்தின் விம்முவார்
தோட்டல ரினமலர்த் தொங்கன் மோலியான்
வீட்டிய தரக்கரை யென்னும் வெவ்வுரை
கேட்டதோ கண்டதோ கிளத்து வீரென்றான். 1525

கண்டன மொருபுடை நின்று கண்களால்
தெண்டிரைக் கடலென வளைந்த சேனையை
மண்டலந் திரிந்தொரு மரத்தி னாலடித்
துண்டதக் குரங்கின மொழிவ தன்றென்றார். 1526

சம்புமாலி வதைப்படலம்

இராவணன் சம்புமாலியை ஏவுதல்

கூம்பின கைய னின்ற குன்றெனக் குவவுத் திண்டோட்
பாம்பிவர் தறுகட் சம்பு மாலியென் பவனைப் பாரா
வாம்பரித் தானை யோடு வளைத்ததன் மறனை மாற்றித்
தாம்பினிற் பற்றித் தந்தென் மனச்சினந் தணித்தி
யென்றான். 1527

சேனையின் அளவு

ஆயிர மைந்தொ டைந்தா மாழியந் தடந்தே ரத்தேர்க்
கேயின விரட்டி யானை யானையி னிரட்டி பாய்மா
போயின பதாதி சொன்ன புரவியி னிரட்டி போலாம்
தீயவன் றடந்தேர் சுற்றித் தெற்றெனச் சென்ற சேனை.

நந்தன வனத்துள் நின்ற நாயகன் றூதன் றானும்
வந்தில ரரக்க ரென்னு மனத்தினன் வழியை நோக்கிச்
சந்திரன் முதல வான மீனெலாந் தழுவ நின்ற
இந்திர தனுவிற் றோன்றுந் தோரண மிவர்ந்து நின்றான்.

அநுமன் ஆர்ப்பு

நின்றன திசைக்கண் வேழ நெடுங்களிச் செருக்கு நீங்கத்
தென்றிசை நமனு முள்ளந் துணுக்கெனச் சிந்தி வானில்
பொன்றலின் மீன்க ளெல்லாம் பூவென வுதிரப் பூவும்
குன்றமும் பிளக்க வேலை துளக்குறக் கொட்டி னான்றோள்.

அவ்வழி யரக்க ரெல்லா மலைநெடுங் கடலி னார்த்தார்
செவ்வழிச் சேற லாற்றார் பிணப்பெருங் குன்றந் தெற்றி

வெவ்வழி குருதி வெள்ளம் புடைமிடைந் துயர்ந்து வீங்க
எவ்வழிச் சேரு மென்ருர் தமருடம் பிடறி வீழ்வார். 1531

அநுமன் போர்

கரிகொடு கரிகளைக் களப்படப் புடைத்தான்
பரிகொடு பரிகளைத் தலத்திடைப் படுத்தான்
வரிசிலை வயவரை வயவரின் மடித்தான்
நிரைமணித் தேர்களைத் தேர்களி னிரைத்தான். 1532

வென்றிவெம் புரவியின் வெரிநினும் விரவார்
மன்றலந் தாரணி மார்பினு மணித்தேர்
ஒன்றினின் றொன்றினு முயர்மத மழைதாழ்
குன்றினுங் கடையுகத் துருமெனக் குதித்தான். 1533

பிரிவரு மொருபெருங் கோலெனப் பெயரா
இருவினை துடைத்தவ ரறிவென வெவர்க்கும்
வருமுலை விலைக்கென மதித்தனர் வழங்கும்
தெரிவையர் மனமெனக் கறங்கெனத் திரிந்தான்.

சம்புமாலியை நோக்கி மாருதி கூறுதல்

ஏதி யொன்ருற் றேரு மஃதா லெளியோ ருயிர்கோடல்
நீதி யன்று லுடன்வந் தாரைக் காக்கு நிலையில்லாய்
சாதி யன்றேற் பிறிதென் செய்தி யவர்பின் றனிநின்ருய்
போதி யென்ருன் பூத்தம ரம்போற் புண்ணூற்
பொலிகின்ருன். 1535

சம்புமாலியை மாய்த்தல்

சலித்தா னையன் கையா லெய்யுஞ் சரத்தை யுகச்சாடி
ஒலித்தா ரமரர் கண்டா ரார்ப்பத் தேரி னுட்புக்குக்
கலித்தான் சிலையைக் கையால் வாங்கிக் கழுத்தி
னிடையிட்டு
வலித்தான் பகுவாய் மடித்த மலைபோற் றலைமண்
ணிடைவீழ. 1536

தூதர் இராவணனிடம் கூறுதல்

புக்கா ரமரர்பொலந்தா ரரக்கன் பொருவில் பெருங்கோயில்
விக்கா நின்ருர் விளம்ப லாற்ருர் வெருவி விம்முவார்
நக்கா னரக்க னடுங்க லென்ரு னைய நமரெல்லாம்
உக்கார் சம்பு மாலி யுலந்தா னென்றே குரங்கென்ருர்.

பஞ்சசேனுபதிகள் வதைப்படலம்

மாருதியைப் பற்ற இராவணன் புறப்பட்டபோது பஞ்சசேனுபதிகள் தடுத்துரைத்தல்

உறுவ தென்கொலோ வானிழி வென்பதொன் றுடையார்
பெறுவ தியாதொன் றுங்காண்கிலர்கேட்கிலர்பெயர்ந்தார்
சிறுமை யீதொப்ப தியாதுநீ குரங்கின்மேற் சேறின்
முறுவல் பூக்குமன் றேநின்ற மூவர்க்கு முகங்கள். 1538

ஆனைமேன் முரச றைந்தனர் வள்ளுவ ரமைந்தார்
பேன வேலையிற் புடைப ரந்தது பெருஞ்சேனை
சோனை மாமழை முகிலெனப் போர்ப்பணை துவைப்ப
மீன வானிடை மின்னெனப் படைக்கல மிடைந்த. 1539

சேனையின் தொகை

ஆழித் தேர்த்தொகை யைம்பதி னுயிர மஃதே
சூழிப் பூட்கைக் குத்தொகை யவற்றிரட்டி யின்றுகைய
ஊழிக் காற்றன்ன புரவிமற் றவற்றினுக் கிரட்டி
பாழித் தோணெடும் படைக்கலப் பதாதியின் பகுதி. 1540

தொக்க தாம்படை சுரிகுழன் மடந்தையர் தொடிக்கை
மக்கள் தாயர்மற் றியாவருந் தடுத்தனர் மறுகி
ஒக்க வேகுதுங் குரங்கினுக் குயிர்தர வொருவர்
புக்கு மீண்டில ரென்றழு திரங்கினர் புலம்பி. 1541

கைப ரந்தெழு சேனையங் கடலிடைக் கலந்தார்
செய்கை தாம்வருந் தேரிடைக் கதிரெனச் செல்வார்
மெய்க லந்தமா நிகர்வரு முவமையை வென்றூர்
ஐவ ரும்பெரும் பூதமோ ரைந்துமொத் தமைந்தார். 1542

வாச வன்வயக் குலிசமும் வருணன்றன் கயிறும்
ஏசில் தென்றிசைக் கிழவன்ற னெரிமுளை யெழுவும்
ஈசன் வன்றனிச் சூலமு மென்றிவை யொன்றும்
ஊசி போல்வதோர் வடுச்செயா நெடும்புய முடையார்.

பானிறுத் தந்தணன் பணிய னுகிநின்
கோனினைத் திலனென வுலகங் கூறலும்
நீனிறத் திராவணன் முனிவு நீக்குவான்
காலனைக் காலினிற் கையிற் கட்டினூர். 1544

அமரர் அச்சம்

அரக்கர தாற்றலு மளவில் சேனையின்
தருக்குமம் மாருதி தனிமைத் தன்மையும்
பொருக்கென நோக்கிய புரந்த ராதியர்
இரக்கமு மவலமுந் துளக்கு மெய்தினர். 1545

அநுமன் மகிழ்ச்சி

இற்றன ரரக்கரிப் பகலு ளேயெனக்
கற்றுணர் மாருதி களிக்குஞ் சிந்தையான்
முற்றுறச் சுலாவிய முடிவில் தானையைச்
சுற்றுற நோக்கித்தன் றோளை நோக்கினன். 1546

புன்றலைக் குரங்கிது போலு மாலமர்
வென்றது விண்ணவர் புகழை வேரொடும்
தின்றவல் லரக்கரைத் திருகித் தின்றதால்
என்றன ரயிர்த்தனர் நிருத ரெண்ணிலார். 1547

எறிந்தன ரெய்தன ரெண்ணி றந்தன
பொறிந்தெழு படைக்கல மரக்கர் போக்கினர்
செறிந்தன மயிர்ப்புறந் தினவு தீர்வுறச்
சொறிந்தன வெனவிருந் தையன் தூங்கினன். 1548

போர் புரிதல்

வார்மதக் கரிகளின் கோடு வாங்கிமாத்
தேர்படப் புடைக்குமத் தேரின் சில்லியால்
வீரரை யுருட்டுமவ் வீரர் வாளினால்
தாருடைப் புரவியைத் துணியத் தாக்குமால். 1549

இரண்டுதே ரிரண்டுகைத் தலத்து மேந்திவே
றிரண்டுமால் யானைபட் டுருள வெற்றுமால்
இரண்டுமால் யானைகை யிரண்டி னேந்திவே
றிரண்டுபா லினும்வரும் பரியை யெற்றுமால். 1550

மாயிரு நெடுவரை வாங்கி மண்ணினிட்
டாயிரந் தேர்பட வரைக்கு மாலழித்
தாயிரங் களிற்றையோர் மரத்தி னாலடித்
தேயெனு மாத்திரை யெற்றி முற்றுமால். 1551

உலந்தது தானை யுவந்தன ரும்பர்
அலந்தலை வுற்றதவ் வாழி யிலங்கை

கலந்த தழுங்குர லின்கட லோதை
வலந்தரு தோளவ ரைவரும் வந்தார். 1552

ஐவருள் ஒருவன் மாய்தல்

முறிந்தது மூரிவி லம்முறி யேகொ
டெறிந்த வரக்கனோர் வெற்பை யெடுத்தான்
அறிந்த மனத்தவ னவ்வெழு வேகொ
டெறிந்த வரக்கனை யின்னுயி ருண்டான். 1553

மாருதி ஒருவனைத் தேருடன் விண்ணில் எறிந்தார்.

ஏய்ந்தெழு தேரிமிழ் விண்ணினை யெல்லாம்
நீந்திய தோடி நிமிர்ந்தது வேகம்
ஓய்ந்தது வீழ்வதன் முன்னுயர் பாரில்
பாய்ந்தவன் மேலுடன் மாருதி பாய்ந்தான். 1554

மாருதி அவனை மாய்த்தனர்.

திரண்டுயர் தோளினை யஞ்சனை சிங்கம்
அரண்டரு விண்ணுறை வார்களு மஞ்ச
முரண்டரு தேரவை யாண்டொரு மூன்றின்
இரண்டுமி ரண்டுகை யிற்கொடெ ழுந்தான். 1555

கானிமிர் வெஞ்சிலை கையினி றுத்தான்
ஆனவர் தூணியும் வாளு மகைத்தான்
ஏனைய வெம்படை யில்லவ ரெஞ்சார்
வானிடை நின்றுயர் மல்லின் மலைந்தார். 1556

இருவரையும் மாய்த்தனர்

நின்றன னேனைய னின்றது கண்டான்
குன்றிடை வாவுறு கோளரி போல
மின்றிரி வன்றலை மீதுகு தித்தான்
பொன்றிய வன்புவி தேரொடு புக்கான். 1557

வஞ்சமுங் களவும் வெஃகி வழியலா வழிமே லோடி
நஞ்சினுங் கொடிய ராகி நவைசெயற் குரிய நீரார்
வெஞ்சின அரக்க ரைவ ரொருவனே வெல்லப் பட்ட
அஞ்செனும் புலன்க ளொத்தா ரவனுநல் லறிவை
யொத்தான். 1558

தூதரோடி இராவணனுக்குரைத்தனர்

தானையு முலந்த தைவர் தலைவருஞ் சமைந்தார் தாக்கப்
போனபின் மீள்வேம் யாமே யதுவும்போர் புரிகிலாமை
வானையும் வென்று ளோரை வல்லையின் மடிய நூறி
ஏனைய ரின்மை சோம்பி யிருந்ததக் குரங்கு மென்றார்.1559

அட்சகுமாரன் வதைப் படலம்

அட்ச குமாரன் போருக்குப் புறப்படுதல்

கேட்டலும் வெகுளி வெந்தீக் கிளர்ந்தெழு முயிர்ப்பனுகித்
தோட்டலர்தெரியன்மாலைவண்டொடுஞ்சுறுக்கொண்டேற
ஊட்டரக் குண்ட போலு நயனத்தா னெருப்பட் டானைத்
தாட்டுணை தொழுது மைந்தன் தடுத்திடை தருதி
யென்றான். 1560

முக்கணு னார்தி யன்றேன் மூன்றுல கடியிற் றாயோன்
ஒக்கவூர் பறவை யன்றே லவன்றுயி லுரக மன்றேல்
திக்கய மல்ல தேற்புன் குரங்கின்மேற் சேறி போலாம்
இக்கட னடியேற் கீதி யிருத்தியீண் டினிதினெந்தாய்.1561

மந்திரக் கிழவர் மைந்தர் மதிநிறை யமைச்சர் மக்கள்
தந்திரத் தலைவ ரீன்ற தநயர்கள் பிறருந் தாதைக்
கந்தரத் தரம்பை மாரிற் றோன்றின ராதி யாயோர்
எந்திரத் தேரர் சூழ்ந்தா ரீரிரண் டிலக்கம் வீரர். 1562

அநுமன் இவன் யாரெனக் கருதுதல்

இந்திர சித்தோ மற்றவ் விராவண னேயோ வென்னுச்
சிந்தையி னுவகை கொண்டு முனிவுற்ற குரக்குச் சீயம்
வந்தனன் முடிந்த தன்றோ மனக்கருத் தென்ன வாழ்த்திச்
சுந்தரத் தோளை நோக்கி யிராமனைத் தொழுது சொன்னான்.

எண்ணிய விருவர் தம்மு ளொருவனால் யான்முன் செய்த
புண்ணியமுள தாலெங்கோன் றவத்தொடும்பொருந்தினானே
நண்ணின னு நின்றேன் காலனு நணுகி நின்றான்
கண்ணிய கரும மின்றே முடிக்குவென் கடிதி னென்றான்.

பழியில துருவென் றாலும் பஃறலை யரக்க னல்லன்
விழிகளா யிரமுங் கொண்ட வேந்தைவென் றானு மல்லன்
மொழியின்மற்றெவர்க்குமேலாமுரட்டொழின்முருகனல்லன்
அழிவிலொண் குமரன் யாரோ அஞ்சனக் குன்ற மன்னன்.

அட்சகுமாரன் கூறுதல்

என்றவ னுவந்து விண்டோ யிந்திர சாபமென்ன
நின்றதோ ரணத்தி னும்ப ரிருந்ததோர் நீதி யானை
வன்றொழி லரக்க னேக்கி வாளெயி றிலங்க நக்கான்
கொன்றதிக் குரங்குபோலாமரக்கர்தங் குழுவையென்றான்.

சாரதி யுரை

அன்னதா மச்சொற் கேட்ட சாரதி யைய கேண்மோ
இன்னதா மென்ன லாமோ வுலகிய லிகழ லம்மா
மன்னனோடெதிர்ந்தவாலிகுரங்கென்றான் மற்றுமுண்டோ
சொன்னது துணிவிற் கொண்டு சேறியென் றுணரச்
சொன்னான். 1567

போர்த் திறம்

காயெரி முளிபுற் கானிற் கலந்தெனக் காற்றின் செம்மல்
ஏயெனு மளவிற் கொல்லு நிருதர்க்கோ ரெல்லை யில்லை
போயவ ருயிரும் போகித் தென்புலம் படர்தல் பொய்யா
தாயிர கோடி தூத ருளர்கொலோ நமனுக் கம்மா. 1568

அட்சனுடன் அநுமன் போர்புரிதல்

தேரிற் சென்றெதிர் கோல்கொள் வானுயிர்
தின்று னப்பொரு செறிதிண்டேர்
பாரிற் சென்றது பரிபட் டனவவன்
வரிவிற் சிந்திய பகழிக்கோல்
மார்பிற் சென்றன சிலபொற் றோளிடை
மறைவுற் றனசில மறவோனும்
நேரிற் சென்றவன் வயிரக் குனிசிலை
பற்றிக் கொண்டெதி ருறநின்றான். 1569

ஒருகை யாலவன் வயிரத் திண்சிலை யுற்றுப்
பற்றலு முரவோனும்
இருகையா லிவன் வலியா முன்ன
மதிற்றோடியதிவர் பொற்றோளான்
சுரிகை யாலவ னுருவிக் குத்தலு மதலைச்
சொற்கொடு வருதூதன்
பொருகை யாலிடை பிதிர்வித் தான்முதிர்
பொறியோடும் படிபறியாவே. 1570

அட்சனை மண்ணில் தேய்த்தல்

நீத்தா யோடின வுதிரப் பெருநதி
நீரா கச்சிலை பாராகப்
போய்த்தாழ் செறிதசை யரிசிந் தினபடி
பொங்கப் பொருமுயிர் போகாமுன்
மீத்தா நிமிர்சுடர் வயிரக் கைகொடு
பிடியா விண்ணொடு மண்காணத்
தேய்த்தா னூழியி னுலகேழ் தேயினு
மொருதன் புகழிறை தேயாதான். 1571

ஏனையோர் அஞ்சி யகல்கின்றார்

மீனாய் வேலையை யுற்றார் சிலர்சிலர்
பசுவாய் வழிதொறு மேய்வுற்றார்
ஊனார் பறவையின் வடிவுற் றார்சிலர்
சிலர்நான் மறையவ ருருவானார்
மானார் கண்ணிள மடவா ராயினர்
முன்னே தங்குழல் வகிர்வுற்றார்
ஆனார் சிலர்சில ரையா நின்சர
ணென்றார் நின்றவ ரரியென்றார். 1572

ஓடினா ருயிர்கள்வா டுடல்கள்போ லுதவியால்
வீடினார் வீடினார் மிடலுடற் குவைகள்வாய்
நாடினார் மடநலார் நவையிலா நண்பரைக்
கூடினா ரூடினா ரும்பர்வாழ் கொம்பனார். 1573

மண்டோதரி வருந்துதல்

கயன்மகிழ் கண்ணிணை கலுழி கான்றுகப்
புயன்மகிழ் புரிகுழல் பொடிய ளாவுற
அயன்மகன் மகன்மக னடியின் வீழ்ந்தனள்
மயன்மகள் வயிறலைத் தலறி மாழ்கினாள். 1574

தாவருந் திருநகர்த் தைய லார்முதல்
ஏவரு மிடைவிழுந் திரங்கி யேங்கினார்
காவலன் கான்மிசை விழுந்து காவன்மாத்
தேவரு மழுதனர் களிக்குஞ் சிந்தையார். 1575

பாசப் படலம்

இந்திரசித்து புறப்படுதல்

அரஞ்சுடர் வேற்றன தனுச னிற்றசொல்
உரஞ்சுட வெரியுயிர்த் தொருவ னேங்கினன்
புரஞ்சுட வரிசிலைப் பொருப்பு வாங்கிய
பரஞ்சுட ரொருவனைப் பொருவும் பான்மையான். 1576

ஏறினன் விசும்பினுக் கெல்லை காட்டுவ
ஆறிரு நூறுபேய் பூண்ட வாழித்தேர்
கூறின கூறின சொற்கள் கோத்ததால்
பீறின நெடுந்திசை பிளந்த தண்டமே. 1577

தம்பியை யுன்னுந் தோறுந் தாரைநீர் ததும்புங்கண்ணன்
வம்பியல் சிலையை நோக்கி வாய்மடித் துருத்து நக்கான்
கொம்பியன் மாய வாழ்க்கைக்குரங்கினற் குரங்காவாற்றல்
எம்பியோடேய்ந்தானெந்தைபுகழன்றேதேய்ந்ததென்றான்.

இராவணனிடம் வந்து இந்திரசித்து கூறுதல்

கிங்கரர் சம்பு மாலி கேடிலா ஐவ ரென்றிப்
பைங்கழ லரக்க ரோடு முடன்சென்ற பகுதிச் சேனை
இங்கொரு வருமீண் டார்தா மில்லையேற் குரங்கதெந்தாய்
சங்கர னயன்மா லென்பார் தாமெனுந் தகைய தாமே.

கானிடை யத்தைக் குற்ற குற்றமுங் கரனார் பாடும்
யானுடை யெம்பி வீந்த இடுக்கணும் பிறவுமெல்லாம்
மானிட ரிருவ ரானும் வானர மொன்றி னானும்
ஆனிடத் துளவென் வீர மழகிற்றே யம்மவென்றான். 1580

மாருதி இந்திரசித்துவை நோக்கி மகிழ்தல்

கட்டேறு நறுங்கமழ் கண்ணியிக் காளை யென்கைப்
பட்டாலது வேயவ் விராவணன் பாடு மாகும்
கெட்டோமென வெண்ணியக் கேடருங் கற்பி னாளை
விட்டேகு மதன்றி யரக்கரும் வெம்மை தீர்வார். 1581

மாருதி இந்திரசித்துடன் வந்த சேனைகளைக் கொன்றனர்.

தேரும் யானையும் புரவியு மரக்கருஞ் சிந்திப்
பாரின் வீழ்தலுந் தானொரு தனிநின்ற பணைத்தோள்
வீர வீரனு முறுவலும் வெகுளியும் வீங்க
வாரும் வாருமென் றழைக்கின்ற வநுமன்மேல் வந்தான்.

இந்திரசித்தன் நாணொலி

புரந்த ரன்றலை பொதிரெறிந் திடப்புயல் வானில்
பரந்த பல்லுரு மேற்றினம் வெறித்துயிர் பதைப்ப
நிரந்த ரந்தலை நெடுநிலஞ் சுமந்தபே ருரகன்
சிரந்து ளங்கிட வரக்கன்வெஞ் சிலையைநாணெறித்தான்.

மாருதி தோள் புடைத்தல்

ஆண்ட நாயகன் தூதனு மயனுடை யண்டம்
கீண்ட தாமெனக் கிரியுக நெடுநிலங் கிழிய
நீண்ட மாதிரம் வெடிபட வவனெடுஞ் சிலையில்
பூண்ட நாணிறத் தன்னெழிற் றோள்களைப் புடைத்தான்.

இந்திரசித்து

நல்லை நல்லையிஞ் ஞாலத்துள் நின்னைக்க நல்லார்
இல்லை யில்லையா லெறுழ்வலிக் கியாரொடு மிகல
வல்லை வல்லையின் றுகுநீ படைத்துள வாழ்நாட்
கெல்லை யெல்லையென் றிந்திர சித்துவு மிசைத்தான். 1585

மாருதி

நாளுக் கெல்லையு நிருதரா யுலகத்தை நலியும்
கோளுக் கெல்லையுங் கொடுந்தொழிற் கெல்லையுங்கொடியீர்
வாளுக் கெல்லையும் வந்தன வகைகொண்டு வந்தேன்
தோளுக்கெல்லையொன் றில்லையென் றநுமனுஞ்சொன்னான்

இந்திரசித்து மாருதிமீது கணை பல அழுத்தினான்.

குறிது வானென்று குறைந்திலனெடுஞ்சினங்கொண்டான்
மறியும் வெண்டிரை மாகட லுலகெலாம் வழங்கிச்
சிறிய தாய்சொன்ன திருமொழி சென்னியிற் சூடி
நெறியி னின்றதன் னாயகன் புகழென நிமிர்ந்தான். 1587

பாக மல்லது கண்டில னநுமனைப் பார்த்தான்
மாக வன்றிசை பத்தொடும் வரம்பிலா வுலகிற்
கேக நாதனை யெறுழ்வலித் தோள்பிடித் தீர்த்த
மேக நாதனு மயங்கின னாமென வியந்தான். 1588

நீண்ட வீரனு நெடுந்தடங் கைகளை நீட்டி
ஈண்டு வெஞ்சர மெய்தன வெய்திடா வண்ணம்
மீண்டு போய்விழ வீசியாங் கவன்மிடற் றடந்தேர்
பூண்ட மாவொடு சாரதி தரைப்படப் புடைத்தான். 1589

மாருதி அவன் வில்லை முறிக்க, இந்திரசித்து
இந்திரனிடம் பறித்த வில்லை எடுத்தான்.
மாருதி மராமரம் பிடுங்கி எறிந்தனர்.

பாரமாமர முடியுடைத் தலையிடைப் படலும்
தாரை யின்னெடுங் கற்றைகள் சொரிவன தயங்க
ஆர மால்வரை யருவியி னழிகெழுங் குருதி
சோர நின்றுடல் துளங்கினன் அமரரைத் தொலைத்தான்.

இந்திரசித்து ஆயிரங் கணை விடுத்தான்.

உய்த்த வெஞ்சர முரத்தினுங் கரத்தினு மொளிப்பக்
கைத்த சிந்தையன் மாருதி நனிதவ கனன்றான்
வித்த கன்சிலை விடுகணை விசையினுங் கடுகி
அத்த டம்பெருந் தேரொடு மெடுத்தெறிந் தார்த்தான்.
விழுந்து பாரடை யாமுன மின்னெனு மெயிற்றான்
எழுந்து மாவிசும் பெய்தின னிடையவன் படையில்
செழுந்தண் மாமணித் தேர்க்குலம் யாவையுஞ் சிதைய
உழுந்து பேர்வதன் முன்னெடு மாருதி யுதைத்தான். 1592

பிரமாத்திரம் விடுதல்

பூவும் பூநிற வயினியுந் தீபமும் புகையும்
தாவில் பாவனை யாற்கொடுத் தருச்சனை சமைத்தான்
தேவி யாவையு முலகமுந் திருத்திய தெய்வக்
கோவி னான்முகன் படைக்கலந் தடக்கையிற்கொண்டான்.

மாருதி சாய்தல்

சாய்ந்த மாருதி சதுமுகன் படையெனுந் தன்மை
ஆய்ந்து மற்றித னாணையை யவமதித் தகறல்
ஏய்ந்த தன்றென வெண்ணினன் கண்முகிழ்த் திருந்தான்
ஓய்ந்த தாமிவன் வலியென வரக்கன்வந் துற்றான். 1594
கறுத்த மாசுணங் கனகமா மேனியைக் கட்ட
அறத்துக் காங்கொரு தனித்துணை யாநின்ற வநுமன்
மறத்து மாருதம் பொருதநாள் வாளரா வரசு
புறத்துச் சுற்றிய மேருமால் வரையையும் போன்றான்.

பிணிவீட்டுப் படலம்

அரக்கர் மகிழ்ச்சி

எய்யுமின் ஈருமின் னெறிமின் போழுமின்
கொய்யுமின் குடரினைக் கூறு கூறுகள்

செய்யுமி னுலகிடைத் தேய்மின் றின்னுமின்
உய்யுமே லில்லைநம் முயிரென் றோடுவார். 1596

நச்சடை படைகளா னலியு மீட்டதோ
வச்சிர முடன்மறி கடலின் வாய்மடுத்
துச்சியி னழுத்துமி னுருத்த தின்றெனின்
கிச்சிடை யிடுமெனக் கிளக்கின் றார்சிலர். 1597

எந்தையை யெம்பியை யெம்முன் னோர்களைத்
தந்தனை போகெனத் தடுக்கின் றார்பலர்
அந்தரத் தமரர்த மாணை யாலிவன்
வந்தனெ் றுயிர்கொள மறுகி னார்பலர். 1598

ஓங்கலம் பெருவலி யுயிரி னன்பரை
நீங்கல மின்றோடு நீங்கி னமினி
ஏங்கல மிவன்சிரத் திருந்த லாற்றிரு
வாங்கல மென்றழு மாத ரார்பலர். 1599

ஆர்ப்புற வஞ்சின ரடங்கி னார்பலர்
போர்ப்புறச் செயலினைப் புகல்கின் றார்பலர்
பார்ப்புறப் பார்ப்புறப் பயத்தி னற்பதைத்
தூர்ப்புறத் திரியலுற் றோடு வார்பலர். 1600

ஒளிவரு நாகத்துக் கொல்கி யன்றுதன்
இளிவர லின்றுபின் னெண்ணம் வேறெனக்
களிவரு சிந்தையாற் காண்டி நங்களைச்
சுளிகலை யாமெனத் தொழுகின் றார்சிலர். 1601

பைங்கழ லநுமனைப் பிணித்த பாந்தளைக்
கிங்கர ரொருபுடை கிளர்ந்து பற்றினர்
ஐம்பதி னுயிர ரளவி லாற்றலர்
மொய்ம்பினி னெறும்வலிக் கருளன் மும்மையார். 1602

ஆண்டொழி லநுமனு மவரொ டேகினன்
மீண்டிலன் வேறிலன் விரும்ப லுற்றிலன்
ஈண்டிது வேதொடர்ந் திலங்கை வேந்தனைக்
காண்டலே நலனெனக் கருத்தி னெண்ணினன். 1603

மாருதி மனக்கருத்து

எந்தைய தருளினு மிராமன் சேவடி
சிந்தைசெய் நலத்தினுஞ் சீதை வானவர்

தந்துள வரத்தினுந் தறுகட் பாசமும்
சிந்துவெ னயர்வுறு சிந்தை சீரிதால். 1604

வாலிதன் னிறுதியு மரத்துக் குற்றதும்
கூலவெஞ் சேனையின் குணிப்பி லாமையும்
மேலவன் காதலன் வலியு மெய்மையான்
நீனிறத் திராவண னெஞ்சி னிற்குமால். 1605

ஆதலா னரக்கனை யெய்தி யாற்றலும்
நீதியு மனக்கொள நிறுவி நின்றவும்
பாதியின் மேற்செல நாறிப் பைப்பையப்
போதலே கருமமென் றநுமன் போயினான். 1606

இராவணன் மகிழ்ச்சி

எல்லையி லுவகையா லிவர்ந்த தோளினன்
புல்லுற மலர்ந்தகட் குமுதப் பூவினன்
ஒல்லையி னேடிநீ ருரைத்தென் னாணையால்
கொல்லலிர் தருகெனக் கூறுவீ ரென்றான். 1607

சீதை இதனைக் கேட்டு இரங்கல்

ஆழி காட்டியென் னாருயிர் காட்டினாய்க்
கூழி காட்டுவெ னென்றுரைத் தேனது
வாழி காட்டுமென் றுண்டுன் வரைப்புயப்
பாழி காட்டி யரும்பழி காட்டினாய். 1608

ஏயப் பன்னின வின்னன தன்னுயிர்
தேயக் கன்று பிடியுறத் தீங்குறு
தாயைப் போலத் தளர்ந்து மயர்ந்தனள்
தீயைச் சுட்டதொர் கற்பெனுந் தீயினாள். 1609

மாருதி இராவணனைக் கண்டு நாகத்தைக் கண்ட
கருடனைப்போல் சீறினார்.

உறங்கு கின்றபோ துயிருண்டல் குற்றமென் றொழிந்தேன்
பிறங்கு பொன்மணி யாசனத் திருக்கவும் பெற்றேன்
திறங்க ளென்பல சிந்திப்ப திவன்றலை சிதறி
அறங்கொள் கொம்பினை மீட்டுட னகல்வனென்
றமைந்தான். 1610

தேவர் தானவர் முதலினர் சேவகன் றேவி
காவல் கண்டிவ ணிருந்தவர் கட்புலன் கதுவப்

பாவ காரிதன் முடித்தலை பறித்திலெ னென்றால்
ஏவ தியானினி மேற்செயு மாள்வினை யென்றான். 1611

கொல்லலாம் வலத்தனு மல்லன் கொற்றமும்
வெல்லலாந் தரத்தனு மல்லன் மேலைநாள்
அல்லெலாந் திரண்டன நிறத்த னற்றலை
வெல்லலா மிராமனாற் பிறரும் வெல்வரோ. 1612

என்னையும் வெலற்கரி திவனுக் கீண்டிவன்
தன்னையும் வெலற்கரி தெனக்குத் தாக்கினால்
அன்னவே காலங்கள் கழியு மாதலால்
துன்னருஞ் செருத்தொழில் தொடங்கல் தூயதோ. 1613

ஏழுய ருலகங்கள் யாவு மின்புறப்
பாழிவன் புயங்களோ டரக்கன் பஃறலைப்
பூழியிற் புரட்டலென் பூணிப் பாமென
ஊழியான் விளம்பிய வுரையு மொன்றுண்டால். 1614

இங்கொரு திங்களே யிருப்பல் யானென
அங்கண யகன்றனை தானை கூறிய
மங்கையு மின்னுயிர் துறத்தல் வாய்மையால்
பொங்குவெஞ் செருவிடைப் பொழுது போக்கினால். 1615

ஆதலா னமர்த்தொழி லழகிற் றன்றருந்
தூதனாந் தன்மையே தூய்தென் றுன்னினான்
வேதநா யகன்றனித் துணைவன் வென்றிசால்
ஏதில்வா ளரக்கன திருக்கை யெய்தினான். 1616

தீட்டிய வாளெனத் தெறுகட் டேவியர்
ஈட்டிய குழுவிடை யிருந்த வேந்தற்குக்
காட்டின னநுமனைக் கடலி னாமு
தாட்டிய வும்பரை யுலைய வோட்டினான். 1617

மாருதியை இராவணனுக்குக் காட்டுதல்

புவனமெத் தனையவை யனைத்தும் போர்கடந்
தவனையுற் றரியுரு வான வாண்டகை
சிவனெனச் செங்கண னென்னச் சேவகன்
இவனெனக் கூறிநின் றிருகை கூப்பினான். 1618

இராவணன் வினா

நேமியோ குலிசியோ நெடுங்க ணிச்சியோ
தாமரைக் கிழவனோ தறுகட் பஃறலைப்

பூமிதாங் கொருவனே பொருது முற்றுற
நாமமு முருவமுங் கரந்து நண்ணினாய். 1619

நின்றிசைந் துயிர்கவர் நீலக் காலனே
குன்றிசைத் தயிலுற வெறிந்த கொற்றனே
தென்றிசைக் கிழவனே திசைநின் றாட்சியர்
என்றிசைக் கின்றவர் யாருள் யாவனீ. 1620

அந்தணர் வேள்வியி னாக்கி யாணையின்
வந்துற விடுத்ததோர் வயவெம் பூதமோ
முந்தொரு மலருளோ னிலங்கை முற்றுறச்
சிந்தெனத் திருத்திய திகிரித் தெய்வமோ. 1621

ஆரைநீ யென்னையிங் கெய்து காரணம்
ஆருனை விடுத்தவ ரறிய வாணையால்
சோர்விலை சொல்லுதி யென்னச் சொல்லினான்
வேரொடு மமரர்தம் புகழ்வி ழுங்கினான். 1622

மாருதி விடை

சொல்லிய வனைவரு மல்லென் சொன்னவப்
புல்லிய வலியினே ரேவல் பூண்டிலென்
அல்லியங் கமலமே யனைய செங்கணோர்
வில்லிதன் றூதன்யா னிலங்கை மேயினேன். 1623

அனையவன் யாரென வறிதி யாதியேல்
முனைவரு மமரரு மூவர் தேவரும்
எனையவ ரெனையவர் யாவர் யாவையும்
நினைவரு மிருவினை முடிக்க நின்றுளோன். 1624

ஈட்டிய வலியு மேனை யியற்றிய தவமும் யாணர்
கூட்டிய படையுந் தேவர் கொடுத்தநல் வரமுங் கோட்பும்
தீட்டிய பிறவு மெய்தித் திருத்திய வாழ்வு மெல்லாம்
நீட்டிய பகழி யொன்றான் முதலொடு நீக்க நின்றான்.

தேவரும் பிறரு மல்லன் றிசைக்களி றல்லன் றிக்கிற்
காவல ரல்ல னீசன் கைலையங் கிரியு மல்லன்
மூவரு மல்லன் மற்றை முனிவரு மல்ல னெல்லைப்
பூவல யத்தை யாண்ட புரவலன் புதல்வன் போலாம்.

மூலமு நடுவு மீறு மில்லதோர் மும்மைத் தாய
காலமுங் கணக்கு நீத்த காரணன் கைவி லேந்திச்

சூலமுந் திகிரி சங்குங் கரகமுந் துறந்து தொல்லை
ஆலமு மலரும் வெள்ளிப் பொருப்பும்விட் டயோத்தி
வந்தான். 1627

அறந்தலை நிறுத்தி வேத மருள்சுரந் தறைந்த நீதித்
திறந்தெரிந் துலகம் பூணச் செந்நெறி செலுத்தித் தீயோர்
இறந்துக நூறித் தக்கோ ரிடர்துடைத் தேக வீண்டு
பிறந்தனன்றன்பொற் பாதமேத்துவார் பிறப்பறுப்பான்.

அன்னவற் கடிமை செய்வே னுமமு மநும னென்பேன்
நன்னுதல் தன்னைத் தேடி நாற்பெருந் திசையும் போந்த
மன்னரிற் றென்பால் வந்த தானைக்கு மன்னன் வாலி
தன்மகனவன்றன் றூதன்வந்தனென் றனியே னென்றான்.

இராவணன்

என்றலு மிலங்கை வேந்த னெயிற்றின மெழிலி நாப்பண்
மின்றிரிந் தன்ன நக்கு வாலிசேய் விடுத்த தூத
வன்றிற லாய வாலி வலியன்கொ லரசின் வாழ்க்கை
நன்றுகொ லென்ன லோடு நாயகன் றூத னக்கான். 1630

மாருதி

அஞ்சலை யரக்க பார்விட் டந்தர மடைந்தா னன்றே
வெஞ்சின வாலி மீளான் வாலும்போய் விளிந்த தன்றே
அஞ்சன மேனியான்ற னடுகணை யொன்றான் மாழ்கித்
துஞ்சின னெங்கள் வேந்தன் சூரியன் சேயென்ற லென்றான்.

இராவணன்

தம்முனைக் கொல்வித் தன்னாற் கொன்றவற் கன்பு சான்ற
உம்மினத் தலைவ னேவ யாதெனக் குணர்த்த லுற்ற
தெம்முனைத் தூது வந்தா யிகல்புரி தன்மை யென்னை
நும்முனைக் கொல்லா நெஞ்ச மஞ்சலை நுவறி யென்றான்.

மாருதி கூறும் நீதி

வறிது வீழ்த்தனை வாழ்க்கையை மன்னறம்
சிறிது நோக்கலை தீமை திருத்தினாய்
இறுதி யுற்றுள தாயினு மின்னுமோர்
உறுதி கேட்டி யுயிர்நெடி தோம்புவோய். 1633

போயிற்றீர் நும்புலன் வென்று போற்றிய
ஆயிற் றீர்வரி தாகிய மாதவம்

காயிற் றீர்வருங் கேடருங் கற்பினுள்
தீயிற் றூயவ ளைத்துயர் செய்ததால். 1634

திறந்தி றம்பிய காமச் செருக்கினல்
மறந்து தத்த மதியின் மயங்கினர்
இறந்தி றந்திழிந் தேறுவ தேயலால்
அறந்தி றம்பின ராருள ராயினர். 1635

வெறுப்புண் டாய வொருத்தியை வேண்டினல்
மறுப்புண் டாயபின் வாழ்கின்ற வாழ்வினின்
உறுப்புண் டாய்நடு வோங்கிய நாசியை
அறுப்புண் டால தழகென லாகுமே. 1636

புரம்பி ழைப்பருந் தீப்புகப் பொங்கியோன்
நரம்பி ழைத்தன பாடலி னல்கிய
வரம்பி ழைக்கு மறைபிழை யாதவன்
சரம்பி ழைக்குமென் றெண்ணுதல் சாலுமோ. 1637

ஆத லாற்ற னரும்பெறற் செல்வமும்
ஓது பல்கிளை யும்முயி ரும்பெறச்
சீதை யைத்தரு கென்றெனச் செப்பினன்
சோதி யான்மக னிற்கெனச் சொல்லினன். 1638

இராவணன்

என்ற லும்மிவை சொல்லிய தெற்கொரு
குன்றின் வாழுங் குரங்குகொ லாமிது
நன்று நன்றென மாநகை செய்தனன்
வென்றி யென்றென் றுதானன்றி வேறிலான். 1639

குரக்கு வார்த்தையு மானிடர் கொற்றமும்
இருக்க நிற்கநீ யென்கொல டாவிரும்
புரத்தி னுட்டருந் தூது புகுந்தபின்
அரக்கரைக் கொன்ற தஃதுரை யாயென்றான். 1640

மாருதி

காட்டு வாரின்மை யாற்கடி காவினை
வாட்டி னேனென்னைக் கொல்லவந் தார்களை
வீட்டி னேன்பின்னு மென்மையி னுலுன்றன்
மாட்டு வந்தது காணு மதியினல். 1641

இராவணன்

என்னு மாத்திரத் தீண்டெரி நீண்டுக
மின்னும் வாளெயிற் றன்சினம் வீங்கினுன்
கொன்மி னென்றனன் கொல்லியர் சேர்தலும்
நின்மி னென்றனன் வீடண னீதியான். 1642

வீடணன்

அந்தண னுலக மூன்று மாதியி னறத்தி னுற்றல்
தந்தவ னன்புக் கான்ற தவநெறி யுணர்ந்த தக்கோய்
இந்திரன் கரும மாற்று மிறைவனீ யியம்பு தூது
வந்தனெ னென்ற பின்புங்கோறியோமறைகள் வல்லோய்.

பூதலப்புரம்பினண்டப்பொகுட்டி னுட்புறத்துட் பொய்தீர்
வேதமுற் றியங்குவைப்பின் வேறுவே றிடத்து வேந்தர்
மாதரைக் கொலைசெய் தார்க ளுளரென வரினும் வந்த
தூதரைக் கொன்று ளார்கள் யாவரே தொல்லைநல்லோர்.

இளையவள் தன்னைக் கொல்லா திருசெவி மூக்கொ டீர்ந்து
விளைவுரை யென்று விட்டார் வீரராய் மெய்மை யோர்வார்
களைதியே லாவி நம்பா லிவன்வந்து கண்ணிற் கண்ட
அளவுரை யாமற் செய்தி யாதியென்றமையச் சொன்னுன்.

இராவணன் கட்டளை

நல்ல துரைத்தாய் நம்பியிவ னவைசெய் தானே யானுலும்
கொல்லல் பழுதே போயிடைநீ கூறிக் கொணர்தி
கடிதென்னுத்
தொல்லை வாலை மூலமறச் சுட்டு நகரைச் சூழ்போக்கி
எல்லைக் கடக்க விடுமின்க ளென்று னின்று
ரிரைத்தெழுந்தார். 1646

அநுமன் வாலில் கயிறு சுற்றுதல்

நாட்டி னகரி னடுவுள்ள கயிறு நவிலுந் தகைமையவே
வீட்டி னூச னெடும்பாச மற்ற தேரும் விசிதுறந்த
மாட்டும் புரவி யாயமெலா மருவி வாங்குந் தொடையழிந்த
பூட்டும் வல்லி மூட்டோடும் புரசை யிழந்த போர்யானை.

தாலிக் கயிறு நீங்க ஏனைய கயிறுகளை யெல்லாம்
கொணர்ந்து சுற்றினுர்கள்.

அநுமன் மகிழ்ச்சி

கடவுட் படையைக் கடந்தறத்தி ஞனை கடந்தே ஞகாமே
விடுவித்தளித்தார்தெவ்வரேவெனறேனன்ருேவிவர்வென்றி
சுடுவிக்கின்றதிவ்வூரைச்சுடுகென்றுரைத்ததுணிவென்று
நடுவுற்றமைய வுறநோக்கி முற்று முவந்தானவையற்ருன்.

நொய்ய பாசம் புறம்பிணிப்ப
நோன்மை யிலன்போ லுடனுணங்கி
வெய்ய வரக்கர் புறத்தலைப்ப
வீடு முணர்ந்தே விரைவில்லா
ஐயன் விஞ்சை தனையறிந்து
மறியா தான்போ லவிஞ்சையெனு
பொய்யை மெய்போல் நடிக்கின்ற
யோகி போன்ருன் போகின்ருன். 1649

வேந்தன் கோயில் வாயில்தொறும்
விரைவிற் கடந்து வெள்ளிடையின்
போந்து புறநின் றிரைக்கின்ற
பொறைதீர் மறவர் புரஞ்சுற்ற
ஏந்து நெடுவால் கிழிசுற்றி
முற்றுந் தோய்ந்தா ரிழுதெண்ணெய்
காந்து கடுந்தீக் கொளுத்தினு
ரார்த்தா ரண்டங் கடிகலங்க. 1650

அந்த நகருங் கடிகாவு மழிவித் தக்கன் முதலாயோர்
சிந்த நூறிச் சீதையொடும் பேசி மனிதர் திறஞ்செப்ப
வந்த குரங்கிற் குற்றதனை வம்மின் காண வம்மென்று
தந்தந் தெருவும் வாயில்தொறும் யாரு மறியச் சாற்றினுர்.

சீதை வரம் தருதல்

ஆர்த்தா ரண்டத் தப்புறத்து
மறிவிப் பார்போ லங்கோடிங்
கீர்த்தார் முரச மெற்றினு
ரிடித்தார் தெழித்தா ரெம்மருங்கும்
பார்த்தா ரோடிச் சானகிக்கும்
பகர்ந்தாரவளு முயிர்பதைத்தாள்
வேர்த்தா ளுலந்தாள் விம்மினுள்
விழுந்தா ளழுதாள் வெய்துயிர்த்தாள். 1652

தாயே யனைய கருணையான் றுணையேயேதுந் தகைவில்லா
நாயே யனைய வல்லரக்கர் நலியக் கண்டா னல்காயோ
நீயே யுலகுக் கொருசான்று நிற்கே தெரியுங் கற்பதனில்
தூயே னென்னிற் றெழுகின்றேன் எரியே யவனைச்
சுடலென்றாள். 1653

வெற்பினை லியன்ற தன்ன மேனியை விழுங்கி வெந்தீ
நிற்பினுஞ் சுடாது நின்ற நீர்மையை நினைவி னோக்கி
அற்பின ரருத சிந்தை யநுமனுஞ் சனகன் பாவை
கற்பினை லியன்ற தென்பான் பெரியதோர் களிப்பனானன்.

அற்றையவ் விரவிற் றுன்ற னறிவினன் முழுது முன்னப்
பெற்றில னெனினு மாண்டொன் றுள்ளது பிழையு றாமே
மற்றுறு பொறிமுன் செல்ல மறைந்துசெல் லறிவு மானக்
கற்றிலா வரக்கர் தாமே காட்டலிற் றெரியக் கண்டான்.

இற்றவா ளரக்கர் நூறு யிரவரு மிழந்த தோளார்
முற்றின ருலந்தா ரையன் மொய்ம்பினோ டுடலை மூழ்கச்
சுற்றிய கயிற்றி னோடுந் தோன்றுவா னரவின் சுற்றம்
பற்றிய கலுழ னென்னப் பொலிந்தனன் விசும்பின்
பாலான். 1656

அப்புறழ் வேலை காறு மலங்குபே ரிலங்கை தன்னை
எப்புறத் தளவுந் தீய வொருகணத் தெரித்த கோட்பால்
துப்புறழ் மேனி யண்ணல் மேருவிற் குழையத் தோளால்
முப்புரத் தெய்த கோலே யொத்ததம் மூரிப் போர்வால்.

இலங்கை எரியூட்டுப்படலம்

கொடியைப் பற்றி விதானங் கொளுத்தியே
நெடிய தூணைத் தழுவி நெடுஞ்சுவர்
முடியச் சுற்றி முழுது முருக்கிற்றால்
கடிய மாமனை தோறுங் கடுங்கனல். 1658

மருங்கின் மேலொரு மகவுகொண் டொருதனி மகவை
அருங்கை யாற்பற்றி மற்றொரு மகவுபின் னரற்ற
நெருங்கி னாரொடு நெறிகுழல் சுறுக்கொள நீக்கிக்
கருங்க டற்றலை வீழ்ந்தன ரரக்கியர் கதறி. 1659

வெருளும் வெம்புகைப் படலையின் மேற்செல வெருவி
இருளும் வெங்கடல் விழுந்தன வெழுந்தில பறவை

மருளின் மீன்கணம் விழுங்கிட வுலந்தன மனத்தோர்
அருளில் வஞ்சரைத் தஞ்சமென் றடைந்தவ ரனைய. 1660

"இருங்கானகம்போ யிளங்காளை பின்போ
கவெங்கே மடந்தை எனவேகி
எழுந்தே குரங்கா லிலங்கா புரந்தீ
இடுங்கா வலன்றன் மருகோனே".
—(பெருங்காரியம்) திருப்புகழ்

இராவணன் சுற்றமுடன் விமானமூர்ந்து
விண்ணிடை நிற்றல்

அனைய காலையி னரக்கனு மரிவையர் குழுவும்
புனைம ணிப்பொலி புட்பக விமானத்துப் போனார்
நினையு மாத்திரை யாவரு நீங்கினர் நினையும்
வினையி லாமையில் வெந்ததவ் விலங்கன்மே லிலங்கை.

ஆழித் தேரவ னரக்கரை யழலெழ நோக்கி
ஏழுக் கேழென வடுக்கிய வுலகங்க ளெரியும்
ஊழிக் காலம்வந் துற்றதோ பிறிதுவே றுண்டோ
பாழித் தீச்சுட வந்ததென் னகரெனப் பகர்ந்தான். 1662

இராவணன் இலங்கை எரியக் காரணம் கேட்டல்

கரங்கள் கூப்பினர் தங்கிளை திருவொடுங் காணார்
இரங்கு கின்றவல் லரக்கரீ தியம்பின ரிறையோய்
தரங்க வேலையி னெடியதன் வாலிட்ட தழலால்
குரங்கு சுட்டதீ தென்றலு மிராவணன் கொதித்தான்.

உண்ட நெருப்பைக்
கண்டனர் பற்றிக்
கொண்டணை கென்றான்
அண்டரை வென்றான். 1664

உற்றக லாமுன்
கற்றகு ரங்கைப்
பற்றுமி னென்றான்
முற்று முனிந்தான். 1665

பற்றுதிர் பற்றுதி ரென்பார்
எற்றுதி ரெற்றுதி ரென்பார்
முற்றினர் முற்று முனிந்தார்
கற்றுணர் மாருதி கண்டான். 1666

ஏல்கொடு வஞ்ச ரெதிர்ந்தார்
கால்கொடு கைகொடு கார்போல்
வேல்கொடு கோலினர் வெந்தீ
வால்கொடு தானும் வளைந்தான். 1667

மஞ்சுறழ் மேனியர் வன்றுள்
மொய்ம்பினர் வீரர் முடிந்தார்
ஐம்பதி னுயிர ரல்லார்
பைம்புனல் வேலை படிந்தார். 1668

வந்தவர் சொல்ல மகிழ்ந்தான்
வெந்திறல் வீரன் வியந்தான்
உய்ந்தன னென்ன வுயர்ந்தான்
பைந்தொடி தாள்கள் பணிந்தான். 1669

பார்த்தனள் சானகி பாரா
வேர்த்தெரி மேனி குளிர்ந்தாள்
வார்த்தையென் வந்தனை யென்னப்
போர்த்தொழில் மாருதி போனான். 1670

மாருதி இவ்வாறு இலங்கையை எரித்துவிட்டுக் கதிர்காமம் போய் மாணிக்க கங்கையில் முழுகி முருகவேளைத் தொழுது அருள் பெற்றுப் புறப்பட்டார்.

இந்தக் கருத்தை அருணகிரியார் கூறுகின்றார்.

குடக்குச் சிலதூதர் தேடுக
வடக்குச் சிலதூதர் நாடுக
குணக்குச் சிலதூதர் தேடுக வெனமேவிக்
குறிப்பிற் குறிகாணு மாருதி
யினித்தெற் கொருதூது போவது
குறிப்பிற் குறிபோன போதிலும் வரலாமோ
அடிக்குத் திரகார ராகிய
வரக்கர்க் கிளையாத தீரனு
மலைக்கப் புறமேவி மாதுறு வனமேசென்
றருட்பொற் றிருவாழி மோதிர
மளித்துற் றவர்மேல் மனோகர
மளித்துக் கதிர்காம மேவிய பெருமாளே.
—(உடுக்கத்துகில்) திருப்புகழ்.

திருவடி தொழுத படலம்

அநுமன் புறப்பாடு

நீங்குவென் விரைவி னென்னு நினைவினன் மருங்கு நின்ற
தாங்கொரு குடுமிக் குன்றை யருக்கனி னணைந்தவையன்
வீங்கின னுலகை யெல்லாம் விழுங்கின னென்ன வீரன்
பூங்கழல்தொழுது வாழ்த்தி விசும்பிடைக்கடிது போனான்.

மைந்நாக மென்ன நின்ற குன்றையு மரபி னெய்திக்
கைந்நாக மனையோ னுற்ற துணர்த்தினன் கணத்தின் காலைப்
பைந்நாக நிற்கும் வீரர் தன்னெடு வரவு பார்க்கும்
கொய்ந்நாக நறுந்தேன் சிந்துங் குன்றிடைக் குதியுங் கொண்டான். 1672

போய்வருங் கரும முற்றிற் றென்பதோர்பொம்மல்பொங்க
வாய்வெரீஇ நின்ற வென்றி வானர வீரர் மன்னோ
பாய்வரு நீளத் தாங்க ணிருந்தன பறவைப் பார்ப்புத்
தாய்வரக் கண்ட தன்ன வுவகையில் தளிர்த்தா ரம்மா.

அழுதனர் சிலவர் முன்னின் றார்த்தனர் சிலவ ரண்மித்
தொழுதனர் சிலவ ராடித் துள்ளினர் சிலவ ரள்ளி
முழுதுற விழுங்கு வார்போன்மொய்த்தனர்சிலவர்சுற்றும்
தழுவினர் சிலவர் கொண்டு சுமந்தனர் சிலவர் தாங்கி.

தேனொடு கிழங்கு காயு நறியன அரிதிற் றேடி
மேன்முறை வைத்தே மண்ணல் நுகர்ந்தனை மெலிவு தீர்தி
மானவாண் முகமே நங்கட் குரைத்தது மாற்ற மென்று
தானுயர் சாக மெல்லா முறைமுறை சிலவர் தந்தார். 1675

தாள்களின் மார்பிற்றோளிற் றலைகளிற்றடைக்கைதம்மின்
வாள்களின் வேலிற்கோலின்மழையினின்வகுத்தபுண்கள்
நாள்கண்மே லுலகிற் சென்ற வெண்ணன நம்பிக் கண்ண
ஊழ்கொள நோக்கி நோக்கி யுயிருக வுளைந்துயிர்த்தார்.

வாலிகா தலனை முந்தை வணங்கினனெண்கின் வேந்தைக்
காலுறப் பணிந்து பின்னைக் கடன்முறை கடவோர்க் கெல்லாம்
மேலுற வியற்றி யாங்கணிருந்திவணிருந்தோர்க்கெல்லாம்
ஞாலநா யகன்றன் றேவி சொல்லினள் நன்மையென்றான்.

ஆண்டகை தேவி யுள்ளத் தருந்தவ மமையச் சொல்லிப்
பூண்டபேரடையாளங்கைக் கொண்டதும் புகன்றுபோரில்
நீண்டவா ளரக்க ரோடு நிகழ்ந்தது நெருப்புச் சிந்தி
மீண்டதும் விளம்பான் றுன்றன் வென்றியை யுரைப்ப
வெள்கி. 1678

பொருதமை புண்ணே சொல்லவென்றமைபோந்ததன்மை
உரைசெய வூர்தி யிட்ட தோங்கிரும் புகையே யோதக்
கருதலர் பெருமை தேவி மீண்டிலாச் செயலே காட்டத்
தெரிதரவுணர்ந்தேம் பின்னரென்னினிச் செய்துமென்றார்.

யாவரும் வரும்வழியில் பசியால் வாடிய வாநரங்கள்
அங்கதனைப் பணிந்து மதுவனர் தேனை யுண்ண
அநுமதி கேட்டனர்.

அங்கதன் றன்னை யண்மி யனைவரு மிருகை கூப்பிக்
கொங்குதங் கலங்கன் மார்ப நின்னுடைக் குரக்குச் சேனை
வெங்கத மொழிந்து சால வருந்தின வேடை யோடி
இங்கிதற் களித்தல் வேண்டு மிரு ளுமிழ் பிரச மென்றார்.

தேனுண்டல்

ஒருவர்வாய்க் கொள்ளுந் தேனை
யொருவருண் டெளிதிற் போவார்
ஒருவர்கைக் கொள்ளுந் தேனை
யொருவர்கொண் டோடிப் போவார்
ஒருவரோ டொருவ ரொன்றத்
றழுவுவர் விழுவ ரோடி
ஒருவர்மே லொருவ ரேறி
யோகையென் றுவகை கூர்வார். 1681

காவலர் மதுவனத் தலைவன் ததிமுகனிடம் கூறுதல்

உரங்கிளர் மதுகை யான்ற ஞணையா லுறுதி கொண்டே
குரங்கினந் தம்மை யெல்லாம்விலக்கினங் கொடுமை கூறிக்
கரங்களா லெற்ற நொந்தேங் காவலோ யென்ன லோடும்
தரங்கிளர் தாதை பட்ட தறிந்திலன் றநயன் போலும்.

ததிமுகன் அங்கதனை எதிர்த்தல்

இந்திரன் வாலிக் கீந்த இன்சுவை மதுவின் கானம்
அந்தரத் தவர்க்கு நோக்கற் கரியவென் ஞணை தன்னைச்
சிந்தினை கதிரோன் மைந்தன் றிறலினை யறிதி யன்றே
மந்தர மனைய தோளா யிற்றதுன் வாழ்க்கை யின்றே.

மதுவனந் தன்னை யின்னே மாட்டுவித் தனைநீ யென்னுக்
கதுமென வாலி செய்மே லெறிந்தனன் கருங்கற் பாறை
அதுதனைப் புறங்கை யாலே யகற்றியங் கதனுஞ் சீறித்
ததிமுகன் றன்னைப் பற்றிக் குத்தினன் றடக்கைதன்னல்.

வாய்வழி குருதி சோர மணிக்கையான் மலங்க மோதிப்
போய்மொழி கதிரோன் மைந்தற் கென்றவன் றன்னைப் போக்கித்
தீயெழும் வெகுளி பொங்க மற்றவன் சேனை தன்னைக்
காய்கனல் பொழியுங் கையாற் குத்துதிர் கட்டியென்றான்.

ரிச்யமுகமலையில் இராமர் சோகம்

கார்வரை யிருந்தனன் கதிரின் காதலன்
சீரிய சொற்களிற் றெருட்டச் செங்கணன்
ஆருயி ராயிர முடைய னமெனச்
சோர்தொறுஞ்சோர்தொறுமுயிர்த்துத்தோன்றினன்.

மாண்டன ளவளிவண் மாண்ட வார்த்தையை
மீண்டவர்க் குரைத்தலின் விளிதல் நன்றெனப்
பூண்டதோர் துயர்கொடு பொன்றி னார்கொலோ
தேண்டின ரின்னமுந் திரிகின் றார்கொலோ. 1687

கண்டன ரரக்கரைக் கறுவு கைமிக
மண்டமர் தொடங்கினர் வஞ்சர் மாயையால்
விண்டல மதனின்மே யினர்கொல் வேறிலாத்
தண்டலி னெடுஞ்சிறை தனைபட் டார்கொலோ. 1688

கூறின நாளவ ரிருக்கை கூடலம்
ஏறலஞ் சுதுமென இன்ப துன்பங்கள்
ஆறின ரருந்தவ மயர்கின் றார்கொலோ
வேறவர்க் குற்றதென் விளம்பு வாயென்றான். 1689

ததிமுகன் சென்று கூறுதல்

என்றுரைத் திடருழந் திருக்கும் வேலையில்
வன்றிறற் றதிமுகன் வான ரேசன்முன்
தன்றலைப் பொழிதரு குருதி தன்னொடும்
குன்றெனப் பணிந்தன னிருகை கூப்பியே. 1690

எழுந்துநின் றையகே ளின்று நானையோ
டழிந்தது மதுவன மடைய வென்றலும்

வழிந்திடு குருதியின் வதன நோக்கியே
மொழிந்திடங் கியாரது முடித்து ளோரென. 1691

நீலனுங் குமுதனு நெடிய குன்றமே
போலுயர் சாம்பனும் புணரி போர்த்தென
மேலெழு சேனையும் விரைவின் வந்துருச்
சால்புடை மதுவனந் தனைய ழிப்பவே. 1692

இமைத்தன்முன் வாலிசே யெழில்கொள் யாக்கையைச்
சமைத்தியென் றெறிதரப் புறங்கை யாற்றகைந்
தமைத்தரு கனலென வழன்றெற் பற்றியே
குமைத்துயிர் பதைப்பநீ கூறு போயென்ருன். 1693

சுக்ரீவன்

பண்டரு கிளவியாள் தன்னைப் பாங்குறக்
கண்டன ரன்னதோ களிப்பி ஞலவர்
வண்டுறை மதுவன மழித்து மாந்திய
தண்டநா யகவினி யவலந் தீர்கென. 1694

ததிமுகனை நோக்கி சுக்ரீவன்

அன்றியும் வாலிசே யரச தாதலின்
பின்றுதல் தீதரோ பிணங்குஞ் சிந்தையாய்
ஒன்றுநீ யுணரலை யுறுதி வேண்டுமேல்
சென்றவன் றனைச்சரண் சேர்தி யீண்டென. 1695

ததிமுகன் அங்கதன்பால் வருதல்

கண்டனன் வாலிசேய் கறுவு கைமிக
விண்டவ னம்மெதிர் மீண்டு ளானெனின்
உண்டிடு குதுமுயி ரென்ன வுன்னிஞன்
தொண்டெனத் ததிமுகன் தொழுது தோன்றிஞன்.

போழ்ந்தன யான்செய்த குறைபொ றுக்கென
வீழ்ந்தன னடிமிசை வீழ வாலிசேய்
தாழ்ந்துகை பற்றிமெய் தழீஇக்கொண் டும்மையான்
சூழ்ந்ததும் பொறுக்கென முதன்மை சொல்லிஞன்.

யாமுதற் குறித்தநா ளிறத்த லெண்ணியே
ஏமுறத் துயர்துடைத் தளித்த வேற்றம்போல்
தாமரைக் கண்ணவன் றுயரந் தள்ளநீர்
போமெனத் தொழுதுமுன் னநுமன் போயிஞன்.

மாருதி வருதல்

எய்தின னநுமனு மெய்தி யேந்தல்தன்
மொய்கழல் தொழுகிலன் முளரி நீங்கிய
தையலை நோக்கிய தலையின் கையினன்
வையகந் தழீஇநெடி திறைஞ்சி வாழ்த்தினன். 1699

திண்டிற லவன்செயல் தெரிய நோக்கினன்
வண்டிற லோதியும் வலியள் மற்றிவன்
கண்டது முண்டவள் கற்பு நன்றெனக்
கொண்டனன் குறிப்பினு லுணருங் கொள்கையான்.

கண்டனென் கற்பினுக் கணியைக் கண்களால்
தெண்டிரை யலைகட லிலங்கைத் தென்னகர்
அண்டர்நா யகவினி துறத்தி யையமும்
பண்டுள துயருமென் றநுமன் பன்னுவான். 1701

உன்பெருந் தேவி யென்னு முரிமைக்கு முன்னைப் பெற்ற
மன்பெரு மருகி யென்னும் வாய்மைக்கு மிதிலை மன்னன்
தன்பெருந் தனயை யென்னுந் தகைமைக்குந் தலைமை சான்றுள்
என்பெருந் தெய்வ மையா வின்னமுங் கேட்டி யென்பான்.

பொன்னல தில்லைப் பொன்னை யொப்பெனப் பொறையி னின்றுள்
தன்னல தில்லைத் தன்னை யொப்பெனத் தனக்கு வந்த
நின்னல தில்லை நின்னை யொப்பென நினக்கு நேர்ந்தாள்
என்னல தில்லை யென்னை யொப்பென வெனக்கு மீந்தாள்.

உன்குல முன்ன தாக்கி யுயர்புகழ்க் கொருத்தி யாய
தன்குலந் தன்ன தாக்கித் தன்னையித் தனிமை செய்தான்
வன்குலங் கூற்றுக் கிந்தவ் வானவர் குலத்தை வாழ்வித்
தென்குல மெனக்குத் தந்தா ளென்னினிச் செய்வ தெம்மோய். 1704

விற்பெருந் தடந்தோள் வீர வீங்குநீ ரிலங்கை வெற்பின்
நற்பெருந் தவத்த ளாய நங்கையைக் கண்டே னல்லேன்
இற்பிறப் பென்ப தொன்று மிரும்பொறை யென்ப தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றுங் களிநடம் புரியக்கண்டேன்.

கண்ணினு முளைநீ தையல் கருத்தினு முளைநீ வாயின்
எண்ணினு முளைநீ கொங்கை யிணைக்குவை தன்னி
னெவ்வா
தண்ணல்வெங் காமனெய்த அலரம்பு தொளைத்த வாறுப்
புண்ணினு முளைநீ நின்னைப் பிரிந்தமை பொருந்திற்றுமோ.

வேலையுளிலங்கையென்னும் விரிநக ரொருசார் விண்டோய்
காலையு மாலை தானு மில்லதோர் கனகக் கற்பச்
சோலையங் கதனி னும்பி புல்லினுற் றுடுத்த தூய
சாலையி னிருந்தா ளைய தவஞ்செய்த தவமாந் தையல்.

தீண்டில னென்னும் வாய்மை திசைமுகன் செய்தமுட்டை
கீண்டில தநந்த னுச்சி கிழிந்தில தெழுந்து வேலை
மீண்டில சுடர்கள் யாவும் விழுந்தில் வேதஞ் செய்கை
மாண்டில தென்னுந் தன்மை வாய்மையா னுணர்தி
மன்னே. 1708

இலங்கையை முழுது நாடி யிராவண னிருக்கை யெய்திப்
பொலங்குழை யவரை யெல்லாம் பொதுவுற நோக்கிப்
போந்தேன்
அலங்குதண் சோலை புக்கே னவ்வழி யணங்க னாளைக்
கலங்குதெண் டிரையிற் றுய கண்ணினீர்க் கடலிற்
கண்டேன். 1709

அரக்கிய ரளவற் றுரு மலகையின் குழுவு மஞ்சச்
செருக்கினல் கண்டு செய்ய மெய்க்கனல் தீக்கச் சீர்த்த
இரக்கமென் றுென்று தானே யேந்திழை வடிவ மெய்தித்
தருக்கிய சிறையுற் றன்ன தகையளத் தமியளம்மா. 1710

தையலை வணங்கற் கொத்த விடைபெறுந்தன்மைநோக்கி
ஐயயா னிருந்த காலை யலங்கல்வே லிலங்கை வேந்தன்
எய்தின னிரந்து கூறி யிறைஞ்சின னிருந்து நங்கை
வெய்துரை சொல்லச் சீறிக் கோறன்மேற் கொண்டு
விட்டான். 1711

ஆயிடை யணங்கின் கற்பு மையநின் னருளுஞ் செய்ய
தூயநல் லறனு மென்றிங் கினையன தொடர்ந்து காப்பப்
போயின னரக்கிமாரைச் சொல்லுமின் பொதுவினென்றுங்
கேயின னவரெ லாமென் மந்திரத் துறங்கி யிற்றுர். 1712

அன்னதோர் பொழுதி னங்கை யாருயிர் துறப்ப தாக
உன்னினள் கொடியொன் றேந்திக்கொம்பொடு முறைப்பச் சுற்றித்
தன்மணிக் கழுத்திற்சார்த்து மளவையிற்றடுத்து நாயேன்
பொன்னடி வணங்கி நின்று நின்பெயர் புகன்ற போதில்.

வஞ்சனை யரக்கர் செய்கை யிதுவென மனக்கொண்டேயும்
அஞ்சன வண்ணத் தான்றன் பெயருரைத் தளியை யென்பால்
துஞ்சுறு பொழுதிற் றந்தாய் துறக்கலென் றுவந்து சொன்னாள்
மஞ்செ்சன வனமென் கொங்கை வழிகின்றமழைக்கணீராள்.

அறிவினிற் றேறிச் சொன்ன பேரடை யாளம் யாவும்
செறிவுற நோக்கி நாயேன் சிந்தையிற் றிருக்க மின்மை
முறிவர வெண்ணி வண்ண மோதிரங் காட்டக் கண்டாள்
இறுதியி னுயிர்தந் தீயு மருந்தொத்த தனைய தெந்தாய்.

ஒருகணத் திரண்டு கண்டே னொளிமணி யாழி யான்ற
திருமுலைத் தடத்து வைத்தாள் வைத்தலுஞ் செல்வ நின்பால்
விரகமென் பதனின் வந்த வெங்கொழுந் தீயி னல்வெந்
துருகிய துடனே யாறி வலித்தது குளிர்ப்புள் ளூற. 1716

வாங்கிய வாழி தன்னை வஞ்சரூர் வந்த தாமென்
றுங்குயர் மழைக்க ணீரா லாயிரங் கலச மாட்டி
ஏங்கின ளிருந்த தல்லா லியம்பல ளெய்த்த மேனி
வீங்கினள் வியந்ததல்லாலிமைத்திலளுயிர்ப்பு விண்டாள்.

அன்னவர்க் கடிய னேனிற் பிரிந்தபி னடுத்த வெல்லாம்
சொன்முறைய யறியச் சொல்லித் தோகைநீ யிருந்த சூழல்
இன்னதென் றறிகி லாமே யித்தனை தாழ்த்த தென்றே
மன்னநின்வருத்தப்பாடுமுணர்த்தினெனுயிர்ப்புவந்தாள்.

இங்குள தன்மை யெல்லா மியைபுளி யியையக் கேட்டாள்
அங்குள தன்மை யெல்லா மடியனுக் கறியச் சொன்னாள்
திங்களொன் றிருப்பெ னின்னே திருவுளந் தீர்ந்த பின்னை
மங்குவெ னுயிரோ டென்றுன் குரைகழற் றலைக்கண் வைத்தாள். 1719

வைத்தபின் துகிலின் வைத்த மாமணிக் கரசை வாங்கிக்
கைத்தலத் தினிதி னீந்தாள் தாமரைக் கண்க ளார
வித்தக காண்டி யென்று கொடுத்தனன் வேத நன்னூல்
உய்த்துள கால மெல்லாம் புகழொடு மொக்க நிற்பான்.

இராமர் முதலியோர் தென்றிசை நோக்கிப் புறப்படுதல்.

ஆண்டையி னருக்கன் மைந்த னையகே ளரிவை நம்பால்
காண்டலுக் கெளிய ளானா ளென்றலுங் காலந் தாழ
ஈண்டினு மிருத்தி போலா மென்றன னென்ற லோடும்
தூண்டிரண் டனைய தோளான் பொருக்கென வெழுந்து
சொன்னான். **1721**

வீரரும்விரைவிற்போனார்விலங்கன்மேலிலங்கைவெய்யோர்
சோர்விலாக் காவற் பாடும் பெருமையு மரணுஞ் சொற்ற
கார்நிறத் தரக்க ரென்போர் முதலிய கணிப்பி லாத
வார்கழ லநுமன் சொல்ல வழிநெடி தெளிதிற் போனார்.

அந்நெறி நெடிது செல்ல வரிக்குலத் தரச னோடு
நன்னெறிக் குமரர் போக நயந்துடன் புணர்ந்த சேனை
இன்னெடும் பழுவக் குன்றிற் பகலெலா மிருத்த பின்னர்
பன்னிரு பகலிற் சென்று தென்றிசைப் பரவை கண்டார்.
1723

சுந்தர காண்டம் முற்றிற்று.

உயுத்த காண்டம்

கடல்காண் படலம்

இராமர் கடலைக் கண்டார்.

அக் கடல் தருங் காட்சி

சேய காலம் பிரிந்தகலத்
திரிந்தான் மீண்டுஞ் சேக்கையின் பால்
மாயன் வந்தா னினிவளர்வா
னென்று கருதி வருந்தென்றல்
தூய மலர்போ னுரைத்தொகையு
முத்துஞ் சிந்திப் புடைசுருட்டிப்
பாய லுதறிப் படுப்பதே
யொத்த திரையின் பரப்பம்மா. 1724

நென்னற் கண்ட திருமேனி
யின்று பிறிதாய் நிலைதளர்வான்
தன்னைக் கண்டு மிரங்காது
தனியே கதறுந் தடங்கடல்வாய்ப்
பின்னற் றிரைமேற் றவழ்கின்ற
பிள்ளைத் தென்றல் கள்ளுயிர்க்கும்
புன்னைக் குறும்பூ நறுஞ்சுண்ணம்
பூசா தொருகாற் போகாதே. 1725

இந்து வன்ன நுதற்பேதை
யிருந்தா ணீங்கா விடர் கொடியேன்
தந்த பாவை தவப்பாவை
தனிமை தகவோ வெனத்தளர்ந்து
சிந்துகின்ற நறுந்தரளக்
கண்ணீர் ததும்பித் திரைத்தெழுந்து
வந்து வள்ளன் மலர்த்தாளின்
வீழ்வ தேய்க்கு மறிகடலே. 1726

மந்திரப்படலம்

இலங்கையைப் புதுப்பித்தல்

பூவரு மயனொடும் புகுந்து பொன்னகர்
மூவகை யுலகினு மழகு முற்றுற
ஏவன வியற்றினன் கணத்தி னென்பரால்
தேவரு மருள்கொளத் தெய்வத் தச்சனே. 1727

பொன்னினு மணியினு மமைந்த பொற்புடை
நன்னகர் நோக்கின ளுகை நோக்கினன்
முன்னையி னழகுடைத் தென்று மொய்கழல்
மன்னனு முவந்துதன் முனிவு மாறினன். 1728

திருநகர் முழுவதுந் திருந்த நோக்கிய
பொருகழ லிராவண னயற்குப் பூசனை
வரன்முறை யியற்றிநீ வழிக்கொள் வாயென்றான்
அரியன தச்சற்கு முதவி யாணையான். 1729

ஆராய்ச்சி மண்டபம்போய் இராவணன் இருத்தல்

முனைவருந் தேவரு மற்று முற்றுளோர்
எனைவருந் தவிர்கென வேய வாணையான்
புனைகுழன் மகளிரோ டிளைஞர்ப் போக்கினன்
நினைவுறு காரிய நிகழ்த்து நெஞ்சினன். 1730

பண்டிதர் பழையவர் கிழவர் பண்பினர்
தண்டலின் மந்திரத் தலைவர் சார்கெனக்
கொண்டுட னிருந்தனன் கொற்ற வாணையான்
வண்டொடு காலையும் வரவை மாற்றினன். 1731

இராவணன் இயம்புதல்

சுட்டது குரங்கெரி சூறை யாடிடக்
கெட்டது கொடிநகர் கிளையு நண்பரும்
பட்டனர் பரிபவம் பரந்த தெங்கணும்
இட்டதிவ் வரியணை யிருந்த தென்னுடல். 1732

ஊறுகின் றனகிணை றுதிர மொண்ணகர்
ஆறுகின் றிலதன லகிலு நாவியும்
கூறுமங் கையர்நறுங் கூந்த லின்சுறு
நாறுகின் றதுநுகர்ந் திருத்தும் நாமெலாம். 1733

சேனுதிபன் பிரகஸ்தன்

வஞ்சனை மனிதரை யியற்றி வாணுதற்
பஞ்சன மெல்லடி மயிலைப் பற்றுதல்
அஞ்சினர் தொழிலென வறிவித் தேற்கது
தஞ்செனு வுணர்ந்திலை யுணருந் தன்மையோய். 1734

கரன்முதல் வீரரைக் கொன்ற கள்வரை
விரிகுழ லுங்கைமூக் கரிந்த வீரரைப்

பரிபவஞ் செய்ஞ்ஞரைப் படுக்க லாதுநீ
அரசிய லழிந்தெதென் றயர்தி போலுமால். 1735

தேவரு மடங்கின ரியக்கர் சிந்தினர்
தாவருந் தானவர் தருக்குத் தாழ்ந்தனர்
யாவரு மிறைவரென் றிறைஞ்சு மேன்மையர்
மூவரு மொதுங்கின ருனக்கு மொய்ம்பினோய். 1736

போயின குரங்கினைத் தொடர்ந்த போயவண்
ஏயின ருயிர்குடித் தெவ்வந் தீர்கலம்
வாயினு மனத்தினும் வெறுத்து வாழ்துமேல்
ஓயுநம் வலியென வுணரக் கூறினன். 1737

மகோதரன்

வெள்ளியங் கிரியினை விடையின் பாகனோ
டள்ளிவிண் டொடவெடுத் தார்த்த ஆற்றலாய்
சுள்ளியி னிருந்துறை குரங்கின் றோள்வலிக்
கெள்ளுதி போலுநின் புயத்தை யெம்மொடும். 1738

இடுக்கிவ ணியம்புவ தில்லை யீண்டெனை
விடுக்குவை யாமெனிற் குரங்கை வேரறுத்
தொடுக்கரு மனிதரை யுயிருண் டுன்பகை
முடிக்குவென் யானென முடியக் கூறினன். 1739

வச்சிர தந்தன்

போயின மனிதரைக் குரங்கைப் பூமியில்
தேயுமின் கைகளாற் றின்மி னென்றெமை
ஏயினை யிருக்குவ தன்றி யென்னினி
ஆயும தெம்வயி னயிர்ப்புண் டாங்கொலோ. 1740

துன்முகன்

கண்ணிய மந்திரக் கருமங் காவல
மண்ணியன் மனிதருங் குரங்கு மற்றவும்
உண்ணிய வமைந்தன வுணவுக் குட்குமேல்
திண்ணிய வரக்கரிற் றீரர் யாவரே. 1741

மகாபார்சுவன், (பெரும்பக்கன்) பிசாசன், பானுகோபன், வேள்விப் பகைஞன், தூமிராட்சன் முதலியோர் தத்தம் மனநிலை கூறினார்கள்.

கும்பகர்ணன்.

நீயயன் முதற்குல மிதற்கொருவ னின்ருய்
ஆயிர மறைப்பொரு ளுணர்ந்தறி வமைந்தாய்
தீவினை நயப்புறுதல் செய்தனை தெரிந்தால்
ஏயினவு றத்தகைமை யித்துணைய வேயோ. 1742

ஓவிய மமைந்தநகர் தீயுணவு ளூந்தாய்
கோவிய லழிந்ததென வேருெரு குலத்தோன்
தேவியை நயந்துசிறை வைத்தசெயல் நன்ருே
பாவிய ருறும்பழி யிதிற்பழியு முண்டோ. 1743

நன்னக ரழிந்ததென நாணினை நயத்தால்
உன்னுயி ரெனத்தகைய தேவியர்க ளுன்மேல்
இன்னகை தரத்தர வொருத்தன் மனையுற்ருள்
பொன்னடி தொழத்தொழ மறுத்தல்புகழ் போலாம்.

ஆசில்பர தாரமவை யஞ்சிறை யடைப்பேம்
மாசில்புகழ் காதலுறு வேம்வளமை கூறப்
பேசுவது மானமிடை பேணுவது காமம்
கூசுவது மானுடரை நன்றுநம கொற்றம். 1745

ஊறுபடை யூறுவதன் முன்னமொரு நாளே
ஏறுகட லேறிநரர் வானரரை யெல்லாம்
வேறுபெய ராதவகை வேரொடு மடங்க
நூறுவது வேகரும மென்பது நுவன்ருன். 1746

இராவணன் சினந்துரைத்தல்

நன்றுரைசெய் தாய்குமர நானிது நினைந்தேன்
ஒன்றுமினி யாய்தல்பழு தொன்னலரை யெல்லாம்
கொன்றுபெயர் வாநமகொ டிப்படைக ளெல்லாம்
இன்றெழுதல் நன்றெனவி ராவணனி சைத்தான். 1747

இந்திரசித்து

யானையிலர் தேர்புரவி யாதுமில ரேவும்
தானையிலர் நின்றதவ மொன்றுமிலர் தாமோர்
கூனன்முது கின்சிறுகு ரங்குகொடு வெல்வார்
ஆனவரு மானுடர்நம் மாணமையினி தன்ருே. 1748

நீருநில னுங்நெடிய காலுநிமிர் வானும்
பேருமுல கியாவுமொரு நாள்புடை பெயர்ந்தே

யாருமொழி யாமைநரர் வானரர்க ளென்பார்
வேருமொழி யாதவகை கொன்றலது மீளேன். 1749

வீடணர் இந்திரசித்தை மறுத்துரைத்தல்

நூலினு னுணங்கிய வறிவு நோக்கினை
போலுமா லுறுபொரு ளுணரும் பூட்சியோய்
காலமேல் விளைபொரு ளுணருங் கற்பிலாப்
பாலனீ யினையன பகரற் பாலையோ. 1750

கருத்திலான் கண்ணிலா னொருவன் கைக்கொடு
திருத்துவான் சித்திர மனைய செப்புவாய்
விருத்தமே தகையவர் வினைய மந்திரத்
திருத்தியோ விளமையான் முறைமை யெண்ணிலாய். 1751

இராவணனை நோக்கி யியம்புதல்

எந்தைநீ யாயுநீ யெம்முனீ தவம்
வந்தனைத் தெய்வநீ மற்று முற்றுநீ
இந்திரப் பெரும்பத மிழக்கின் றுயென
நொந்தனெ னுகலி னுவல்வ தாயினேன். 1752

கற்றுறு மாட்சியென் கண்ணின் றுயினும்
உற்றுறு பொருள்தெரிந் துணர்த லோயினும்
சொற்றுறு சூழ்ச்சியின் றுணிவு சோரினும்
முற்றுறக் கேட்டபின் முனிதி மொய்ம்பினேய். 1753

கோனகர் முழுவது நினது கொற்றமும்
சானகி யெனும்பெய ருலகின் றம்மனை
ஆனவள் கற்பினல் வெந்த தல்லதோர்
வானரஞ் சுட்டதென் றுணர்தன் மாட்சியோ. 1754

ஏறிய நெடுந்தவ மிழைத்த வெல்லைநாள்
ஆறிய பெருங்குணத் தறிவ னுணையால்
கூறிய மனிதர்பாற் கொற்றங் கொள்ளலை
வேறினி யவர்வயின் வென்றி யாவதோ. 1755

ஏயது பிறிதுணர்ந் தியம்ப வேண்டுமோ
நீயொரு தனியுல கேழு நீந்துவாய்
ஆயிரந் தோளவற் காற்றல் தோற்றனை
மேயினை யாமெனின் விளம்ப வேண்டுமோ. 1756

மேலுயர் கயிலையை வென்ற மேலைநாள்
நாலுதோள் நந்திதா னவின்ற சாபத்தால்
கூலவான் குரங்கினுற் குறுகுங் கோளது
வாலிபாற் கண்டனம் வரம்பி லாற்றலாய். 1757

தீயிடைக் குளித்தவத் தெய்வக் கற்பினுள்
வாயிடை மொழிந்தசொன் மறுக்க வல்லமோ
நோயுனக் கியானென நுவன்று ளாளவள்
ஆயவள் சீதைபண் டமுதிற் றேன்றினுள். 1758

கோசிகப்பெயருடைக்குலமுனித்தலைவனக்குளிர்மலர்ப்பே
ராசனத் தவனெடெவ் வுலகமுந் தருவெனென் றமைய
லுற்றுன்
ஈசனிற் பெருபடைக்கலமிமைப்பளவினெவ் வுலகும் யாவும்
நாசமுற் றிடநடப்பனகொடுத்தவைபிடித்துடையர் நம்பர்.

எறுழ்வலிப் பொருவில்தோ ளவுணரோ
டமரர்பண் டிகல்செய்காலத்
துறுதிறற் கலுழன்மீ தொருவனின்
றமர்செய்தா னுடையவில்லும்
தெறுசினத் தவர்கண்முப் புரநெருப்
புறவுருத் தெய்வவம்பும்
குறுமுனிப் பெயரினு னிறைதவர்க்
கிறைதரக் கொண்டு நின்றுன். 1760

இசையுஞ் செய்கையு முயர்குலத் தியற்கையு மெஞ்ச
வசையுங் கீழ்மை மீக்கொளக் கிளையொடு மடியா
தசைவில் கற்பினவ் வணங்கைவிட் டருளுதி யிதன்மேல்
விசைய மில்லெனச் சொல்லினனறிஞரின் மிக்கோன். 1761

இராவணன்

கேட்ட வாண்டகை கரத்தொடு கரதலங் கிடைப்பப்
பூட்டி வாய்தொறும் பிறைக்குலம் வெண்ணிலாப் பொழிய
வாட்ட டந்தவ ழாரமும் வயங்கொளி மார்பும்
தோட்ட டங்களுங் குலுங்கநக் கிவையிவை சொன்னுன்.

இச்சை நல்லன வுறுதிக ளிசைக்குவெ னென்றுய்
பிச்சர் சொல்லுவ சொல்லினை யென்பெரு விறலைக்
கொச்சை மானுடர் வெல்குவ ரென்பது குறித்த
தச்ச மோவவர்க் கன்பிறே யாவதோ வையா. 1763

ஈங்கு மானுடப் பசுக்களுக் கிலேவர மென்ருய்
தீங்கு சொல்லினை திசைகளை யுலகொடுஞ் செருக்கால்
தாங்கு மானையைத் தள்ளியத் தழல்நிறத் தவனை
ஓங்கல் தன்னெடு மெடுக்கவும் வரங்கொண்ட துளதோ.

நந்தி சாபத்தி னமையடுங் குரங்கெனில் நம்பால்
வந்த சாபங்க ளெனைப்பல வவைசெய்த வலியென்
இந்தி யாதிக ளவித்தவர் தேவர்நம மிறுதி
சிந்தி யாதவர் யாரவை நம்மையென் செய்த. 1765

அரங்கி னுடுவாற் கன்புபூண் டுடைவர மறியேன்
இரங்கி யானிற்ப வென்வலி யவன்வயி னெய்த.
வரம்கொள் வாலிபாற் ருேற்றனென் மற்றும்வே றுள்ள
குரங்கெ லாமெனை வெல்லுமென் றெங்ஙனங் கோடி. 1766

ஊன வில்லிறுத் தோட்டைமா மரத்துளம் போட்டிக்
கூனி சூழ்ச்சியா லரசழிந் துயர்வனங் குறுகி
யானி ழைத்திட இல்லிழந் தின்னுயிர் சுமக்கும்
மானுடன் வலி நீயலா தாருளர் மதிப்பார். 1767

இந்தி ரன்றனை யிருஞ்சிறை யிட்டநா ளிமையாத்
தந்தி கோடிறத் தகர்ந்தநாள் தன்னையான் முன்னம்
வந்த போர்தொறுந் துறந்தநாள் வானவ ருலகைச்
சிந்த வென்றநாள் சிறியன்கொல் நீசொன்ன தேவன். 1768

வெஞ்சி னந்தரு போரிலென் னுடனெழ வேண்டா
இஞ்சி மாநக ரிடமுடைத் திண்டினி திருத்தி
அஞ்ச லஞ்சலென் றயலிருந் தவர்முக நோக்கி
நஞ்சின் வெய்யவன் கையெரிந் துருமென நக்கான். 1769

இரணியன் வதைப் படலம்

இரணியனது தன்மை

எற்றை நாளினு முளனெனு மிறைவனு மயனும்
கற்றை யஞ்சடைக் கடவுளுங் காத்தளித் தழிக்கும்
ஒற்றை யண்டத்தி னளவினே வி தன்புறத் துளவா
மற்றை யண்டமுந் தன்பெய ரேசொல வாழ்ந்தான். 1770

வண்டற் றெண்டிரை யாற்றுநீர் சிலவென்று மருவான்
கொண்டற் கொண்டநீர் குளிப்பில வென்றவை
குடையான்

பண்டைத் தெண்டிரைப் பரவைநீ ருவரென்று படியான்
அண்டத் தைப்பொதுத் தப்புறத் தப்பினு லாடும். 1771

தாம ரைத்தடங் கண்ணினன் பேரவை தவிர
நாமந் தன்னதே யுலகங்கள் யாவையு நவிலத்
தூம வெங்கன லந்தணர் முதலினர் சொரிந்த
ஓம வேள்வியி னிறையவர் பேறெலா முண்ணும். 1772

மரபின் மாபெரும் புறக்கடன் மஞ்சன மருவி
அரவி னுட்டிடை மகளிரோ டின்னமு தருந்திப்
பரவு மிந்திரன் பதியிடைப் பகற்பொழு தகற்றி
இரவி னேலக்க நான்முக னுலகத்து ளிருக்கும். 1773

மண்ட லந்தரு கதிரவன் வந்துபோய் மறையும்
எண்ட லந்தொடற் கரியன தடவரை யிரண்டும்
கண்ட லம்பசும் பொன்னவன் முன்னவன் காதின்
குண்ட லங்கண்மற் றென்னினிப் பெருவிறல் கூறின்.

மருக்கொள் தாமரை நான்முக னைம்முகன் முதலோர்
குருக்க ளோடுகற் றேதுவ தவன்பெருங் கொற்றம்
சுருக்க நான்மறை தொன்றுதொட் டுரைதொறுந்தோன்று
திருக்குந் தெய்வமு மிரணிய னேநம வென்னும். 1775

பெண்ணிற் பேரெழி லாணினி லலியினிற் பிறிதும்
உண்ணிற் கும்முயி ருள்ளதி னில்லதி னுலவான்
கண்ணிற் காண்பன கருதுவ யாவினுங் கழியான்
மண்ணிற் சாகிலன் வானினுஞ் சாகிலன் வரத்தால். 1776

நீரிற் சாகில னெருப்பினுஞ் சாகில னிமிர்ந்த
மாரு தத்தினு மண்ணின்மற் றெவற்றினு மாளான்
ஓருந் தேவரு முனிவரும் பிறர்களு முரைப்பச்
சாருஞ் சாபமு மன்ன வன்றனைச்சென்று சாரா. 1777

உள்ளிற் சாகிலன் புறத்தினு முலக்கில னுலவாக்
கொள்ளைத் தெய்வவன் படைக்கலம் யாவையுங் கொல்லா
நள்ளிற் சாகிலன் பகலிடைச் சாகில னமனுர்
கொள்ளச் சாகில னுரினி யவனுயிர் கொள்வார். 1778

பிரகலாதர்

ஆய வன்றனக் கருமக னறிஞரி னறிஞன்
தூய ரென்பவர் யாரினு மறையினுந் தூயன்

நாய கன்றனி ஞானிநல் லறத்துக்கு நாதன்
தாயின் மன்னுயிர்க் கன்பின னுளனொரு தக்கோன். 1779

இரணியன் தன் புதல்வரை சுக்கிராசாரியருடைய
புதல்வன் சண்டமார்க்கனிடம் மறை பயிலுமாறு விடுத்தான்.

ஓதப் புக்கவ னுந்தைபே ருரையென லோடும்
போதத் தன்செவித் தொளையிரு கைகளாற் பொத்தி
மூதக் கோயிது நற்றவ மன்றென மொழியா
வேதத் துச்சியின் மெய்ப்பொருட் பெயரினை விரித்தான்.

ஓநமோ நாராய ணாயவென் றுரைத்துள முருகித்
தான மைந்திரு தடக்கையுந் தலையின்மேற் றாங்கிப்
பூநிறக் கண்கள் புனலுக மயிர்ப்புறம் பொடிப்ப
ஞான நாயக னிருந்தன னந்தண னடுங்கி. 1781

கெடுத்தொ ழிந்தனை யென்னையு முன்னையுங் கெடுவாய்
படுத்தொ ழிந்தனை பாவியத் தேவரும் பகர்தற்
கடுத்த தன்றியே யயலொன்று பகரநின் னறிவின்
எடுத்த தென்னிது வென்செய்த வண்ணநீ யென்றான்.

என்னை யுய்வித்தே னெந்தையை யுய்வித் தேனினைய
உன்னை யுய்வித்திவ் வுலகையு முய்விப்பா னமைந்து
முன்னை வேதத்தின் முதற்பெயர்மொழிவது மொழிந்தேன்
என்னை குற்றநா னியம்பிய தியம்புதி யென்றான். 1783

எனக்கு நான்முகத் தொருவற்கும் யாரினு முயர்ந்த
தனக்கும் வேறுள சராசர மனைத்திற்குந் தலைவன்
மனக்கு வந்தனன் வந்தன யாவையு மறையோய்
உனக்கு மின்னதி னல்லதொன் றில்லென வுரைத்தான்.

ஆசிரியர் ஓடி அரசனிடம் அறைதல்

எந்தை கேளெனக் கிம்மைக்கு மறுமைக்கு மியம்பச்
சிந்தை யாலிறை நினைத்தற்கு மடாதன செப்பி
முந்தையேநினைந்தென்பொருண்முற்றுமென்றுரைத்தான்
மைந்த னோதிலன் வேதமென் றுரைத்தனன் வணங்கி.

இரணியன்

அன்ன கேட்டவ னந்தண நந்தமக் கடாத
முன்னர் யாவரு மொழிதரு முறைமையிற் படாத
தன்ன துள்ளுடை யுணர்ச்சியாற் புதுவது தந்த
தென்ன சொல்லவ னியம்பிய தியம்புதி யென்றான். 1786

ஆசிரியர்

அரச னன்னவை யுரைசெய மறையவ னஞ்சிச்
சிரத லங்கரஞ் சேர்த்திடச் செவித்தொளை சேர்ந்த
உரக மன்னசொல் யானுனக் குரைசெயி னுரவோய்
நரக மெய்துவே னும்வெந் துகுமென நவின்றான். 1787

பிரகலாதர் தந்தைபால் வருதல்

கொணர்கென்மைந்தனை வல்விரைந்தென்றனன் கொடியோன்
உணர்வி னெஞ்சின னேவலாற் கடிதினி னோடிக்
கணனி னெய்தினர் பணியெனத் தாதையைக் கண்டான்
துணையி லான்றனைத் துணையெனவுடையவன் றொழுதான்.

தொழுத மைந்தனைச் சுடர்மணி மார்பிடைச் சுண்ணம்
எழுத வன்பினோ டிறுகுறத் தழுவிமா டிருத்தி
முழுது நோக்கிநீ வேதியன் கேட்கலின் முனியப்
பழுது சொன்னசொ லென்னது பகருதி யென்றான். 1789

காமம் யாவையுந் தருவது மப்பதங் கடந்தாற்
சேம வீடுறச் செய்வதுஞ் செந்தழன் முகந்த
ஓம வேள்வியி னுறுபத முய்ப்பது மொருவன்
நாம மன்னது கேள்நமோ நாராய ணாய. 1790

உன்னு யிர்க்குமென் னுயுர்க்குமிவ் வுலகத்தி னுள்ள
மன்னு யிர்க்குமீ துறுதியென் றுணர்வுற மதித்துச்
சொன்ன விப்பெய ரென்றன னறிஞரிற் றூயான்
மின்னு யிர்க்கும்வே லிரணியன் றழலெழ விழித்தான்.

இரணியன்

அற்றை நாண்முதல் யானுள நாள்வரை யப்பேர்
சொற்ற வாயையுங் கருதிய மனத்தையுஞ் சுடுமென்
ஒற்றை யாணைமற் றியாருனக் கிப்பெய ருரைத்தார்
கற்ற தாரொடு சொல்லுதி விரைந்தெனக் கனன்றான்.

மறங்கொள் வெஞ்செரு மலைகுவான் பன்முறை வந்தான்
கறங்கு வெஞ்சிறைக் கலுழன்றன் கடுமையிற் கரந்தான்
பிறங்கு தெண்டிரைப் பெருங்கடல் புக்கினம் பெயரா
துறங்கு வான்பெய ருறுதியென் றுருனக் குரைத்தார்.

வயிற்றி னுள்ளுல கேழினோ டேழையும் வைக்கும்
அயிர்ப்பி லாற்றலென் னநுசனை யெனமொன் றாகி

எயிற்றி ஞலெறிந் தின்னுயி ருண்டவ ஞமம்
பயிற்ற வோகினைப் பயந்தது நானெனப் பகர்ந்தான். 1794

பேதைப்பிள்ளைநீ பிழைத்ததுபொறுத்தனன்பெயர்த்தும்
ஏதில் வார்த்தைக ளினையன விளம்பலை முனிவன்
யாது சொல்லின னவையவை யிதமென வெண்ணி
ஓதி போதியென் றுரைத்தன னுலகெலா முயர்ந்தோன்.

பிரகலாதர்

உள்ளுற வுணர்வினி துணர்ந்த வோசையோர்
தெள்விளி யாழிடைத் தெரியுஞ் செய்கையான்
உள்ளுளன் புறத்துள ெனன்று நண்ணலான்
தள்ளரு மறைகளு மருளுந் தன்மையான். 1796

ஓமெனு மோரெழுத் ததனி னுள்ளுயிர்
ஆமவ னறிவினுக் கறிவு மாயினான்
தாமமு வுலகமுந் தழுவிச் சார்தலால்
தூமமுங் கனலும்போற் றொடர்ந்த தோற்றத்தான். 1797

இன்னதோர் தன்மைய னிகழ்வுற் றெய்திய
நன்னெடுஞ் செல்வமு நாளு நாமற
மன்னுயி ரிழத்தியென் றிறைஞ்சி வாழ்த்தினேன்
சொன்னவ ஞமமென் றுணரச் சொல்லினான். 1798

இரணியன் மிகவுஞ் சினந்தான்

வேறு மென்னொடு தரும்பகை பிறிதினி
வேண்டலென் வினையத்தால்
ஊறி யென்னுளே யுதித்தது குறிப்பினி
யுணர்குவ துளதன்றால்
ஈறி லென்பெரும் பகைஞனுக் கன்புசா
லடியென்யா னென்கின்றான்
கோறி ரென்றன னென்றலும் பற்றினர்
கூற்றினுங் கொலைவல்லார். 1799

கொலைஞர் கொல்ல முயன்றனர்

தாயின் மன்னுயிர்க் கன்பினன் றன்னையத்
தவமெனுந் தகவில்லோர்
ஏயெ னுந்துணை மாத்திரத் தெய்தன
வெறிந்தன வெறிதோறும்

தூய வன்றனைத் துணையென வுடையவவ்
    வொருவனைத் துன்னுதார்
வாயின் வைதன வொத்தன வத்துணை
    மழுவொடு கொலைவாளும். 1800

எறிந்த வெய்தன வெற்றின குத்தின
    வீர்த்தன படையாவும்
முறிந்த நுண்பொடி யாயின முடிந்தன
    முனிவிலான் முழுமேனி
சொறிந்த தன்மையுஞ் செய்தில வாயின
    தூயவன் றுணிவொன்று
அறிந்த நாயகன் சேவடி மறந்தில
    னயர்த்தில னவனுமம். 1801

நெருப்பிலிடக் கட்டளை யிட்டான்

குழியி லிந்தன மடுக்கினர் குன்றெனக்
    குடந்தொறுங் கொணரெண்ணெய்
இழுது நெய்சொரிந் திட்டனர்
    நெருப்பெழுந் திட்டது விசும்பெட்ட
அழுது நின்றவ ரயர்வுற வையனைப்
    பெய்தன ரரியென்று
தொழுது நின்றன னாயகன் றுளிணை
    குளிர்ந்தது சுடுதீயே. 1802

கால வெங்கனல் கதுவிய காலையிற்
    கற்புடை யவள்சொற்ற
சீல நல்லுரை சீதமிக் கடுத்தலிற்
    கிழியொடு நெய்தீற்றி
ஆல மன்னவர் கரங்களால் வயங்கெரி
    மடுத்தலி லனுமன்றன்
கூல மாமென வென்புறக் குளிர்ந்ததக்
    குருமணித் திருமேனி. 1803

அரவங்களை விடுதல்

அனந்த னேமுத லாகிய நாகங்க
    ளருளென்கொ லெனவன்னான்
நினைந்த மாத்திரத் தெய்தின நொய்தினி
    னெருப்புகு பகுவாயால்

வனைந்த தாமன்ன மேனியி னான்றன்மேல்
வாளெயி றுறவூன்றிச்
சினந்த மீக்கொளக் கடித்தன துடித்திலன்
றிருப்பெயர் மறவாதான். 1804

திக்கயங்களை விடுத்துக் கொல்வித்தார்கள்

எந்தாய் பண்டொ ரிடங்கர் விழுங்க
முந்தாய் நின்ற முதற்பொரு ளேயென்
றுந்தாய் தந்தை யினத்தவ னோதை
வந்தா னென்றன் மனத்தின னென்றான். 1805

என்னு முன்ன மிருங்களி றுந்தன்
பொன்னு ரோடை பொருந்த நிலத்தின்
அன்னு னைத்தொழு தஞ்சி யகன்ற
தொன்னு ரத்திற மெய்தி யுரைத்தார். 1806

இரணியன் திக்கயங்களைக் கொல்லுங்கள் என்றான். தம்மைக் கொல்ல வந்தாரைக் கண்டு யானைகள் அஞ்சி பிரகலாதரைக் கொல்லலுற்றன.

வீரத் திண்டிறன் மார்பினில் வெண்கோ
டாரக் குத்தி யழுத்திய நாகம்
வாரத் தண்குலை வாழை மடற்சூழ்
ஈரத் தண்டென இற்றன வெல்லாம் 1807

கடலில் இடுதல்

ஒட்டிக் கொல்ல வுணர்ந்து வெகுண்டான்
விட்டிட் டானல னென்று விரைந்தார்
கட்டிக் கல்லொடு கால்விசை யிற்போய்
இட்டிட் டார்கட லின்னடு வெந்தாய். 1808

நடுவொக் குந்தனி நாயக னைமம்
விடுகிற் கின்றில னாகலின் வேலை
மடுவொத் தங்கதின் வங்கமு மன்றாய்க்
குடுபத் தன்மைய தாயது குன்றம். 1809

விடமருத்தல்

இட்டார் நடுவல் விடமெண் ணுடையான்
தொட்டா னுகரத் தொகைவன் கசையிற்

கட்டார் கடுமத் திகைகண் கொடியோன்
விட்டா னவன்மே லவர்வீ சினரால் 1810

இரணியனை கொல்ல வருதல்

ஊனோ டுயிர்வே றுபடா வுபயம்
தானே யுடையன் றனிமா யையினால்
யானே யுயிருண் பலெனக் கனலா
வானே ழுநடுங் கிடவந் தனனால். 1811

பிரகலாதர்

வந்தானை வணங்கி யென்மன் னுயிர்தான்
எந்தாய் கொளவெண் ணினையே லிதுதான்
உந்தா ரியதன் றுலகியா வுமுடன்
தந்தார் கொளநின் றதுதா னெனலும். 1812

இரணியன் வினா

ஏவரே யுலகந் தந்தா ரென்பெய ரேத்தி வாழும்
மூவரே யல்லா ராகின் முனிவரே முழுதுந் தோற்ற
தேவரே பிறரே யாரே செப்புதி தெரியவென்றான்
கோவமூண் டெழுந்துங் கொல்லான் காட்டுமேற் காட்சி
கொள்வான். 1813

பிரகலாதர்

உலகுதந் தானும் பல்வே றுயிர்கள்தந் தானுமுள்ளூற்
றுலைவிலா வுயிர்கள் தோறு மங்கங்கே யுறைகின் றானும்
மலரினில் வெறியு மெள்ளி லெண்ணெயு மற்றுங் கேளாய்
அலகில்தொல் புகழும் பற்றி முற்றிய வரிகா ணத்தா. 1814

என்கணா னோக்கிக் காண்டற் கெங்கணு முளன்காணெந்தை
உன்கணா னன்பிற் சேற லுறுகோளென் றுணர கில்லாய்
நின்கணானோக்கிக்காண்டற்கெளியனோ நினக்குப்பின்னோன்
பொன்கணா னவி யுண்ட புண்டரீ கக்க ணம்மான். 1815

மூன்றவன் குணங்கள் செய்கை மூன்றவ னுருவ மூன்று
மூன்றுகண் சுடர்கள் சோதி மூன்றுதன் னுலக மூன்று
தோன்றலுமிடையுமீறுந்தொடங்கியபொருள்கட்கெல்லாம்
சான்றவ னிதுவே வேத முடிவது சரத மென்றான். 1816

இரணியன்

என்றலு மவுணர் வேந்த னெயிற்றரும் பிலங்க நக்கான்
ஒன்றலில்பொருள்கட்கெல்லா மொருவன்புக் குறைவனென்றாய்

நன்றது கண்டு பின்னர் நல்லவா புரிதுந் தூணில்
நின்றுள னென்னிற் கள்வ நிரப்புதி நிலைமை யென்றான்.

பிரகலாதர்

சாணினு முளனோர் தன்மை யணுவினைச் சதகூறிட்ட
கோணினு முளன்மா மேருக் குன்றினு முளனின் நின்ற
தூணினு முளன்முன் சொன்ன சொல்லினு முளனித் தன்மை
காணுதி விரைவி னென்றானன்றெனக்கனகன்சொன்னான்.

இரணியன்

உம்பர்க்கு முனக்கு மொத்திவ் வுலகெங்கும் பரந்துளானைக்
கம்பத்தின் வழியே காணக் காட்டுதி காட்டி டாயேல்
கும்பத்தின் கரியைக் கோண்மாக் கொன்றென நின்னைக் கொன்றுன்
செம்பொத்த குருதி தேக்கி யுடலையுந் தின்பெ னென்றான்.

பிரகலாதர்

என்னுயிர் நின்னாற் கோறற்
கெளியதொன் றன்றி யான்முன்
சொன்னவன் றொட்ட தொட்ட
விடந்தொறுந் தோன்றா னாயின்
என்னுயிர் யானே மாய்ப்பல்
பின்னும்வாழ் வுகப்ப லென்னின்
அன்னவற் கடியே னல்லே
னென்றன னறிவின் மிக்கான். 1820

நரசிங்காவதாரம்

நசைதிறந் திலங்கப் பொங்கி நன்றுநன் றென்ன நக்கு
விசைபிறந் துருமுவீழ்ந்த தென்னவோர் தூணின்வென்றி
இசைதிறந் தமர்ந்தகையா லெற்றினனெற்ற லோடும்
திசைதிறந் தண்டங் கீறிச் சிரித்தது செங்கட் சீயம். 1821

பிரகலாதரது செயல்

நாடினான் றருவெ னென்ற நல்லறி வாள னானும்
தேடினான் முகனுங் காணச் சேயவன் சிரித்த லோடும்
ஆடினா னழுதான் பாடி யரற்றினன் சிரத்திற் செங்கை
சூடினான் றொழுதா னோடி யுலகெலாந் துகைத்தான் றுள்ளி.

இரணியன்

ஆரடா சிரித்தாய் சொன்ன வரிகொலோ வஞ்சிப் புக்க
நீரடா போதா தென்று நெடுந்தறி நேடி னுயோ
போரடா பொருதி யாயிற் புறப்படு புறப்ப டென்ருன்
பேரடா நின்ற தாளோ டுலகெலாம் பெயரப் போவான்.

நரசிங்கத்தின் செயல்

பிளந்தது தூணு மாங்கே பிறந்தது சீயம் பின்னை
வளர்ந்தது திசைகளெட்டும் பகிரண்ட முதல மற்றும்
அளந்ததப் புறத்துச் செய்கை யாரறிந் தறைய கிற்பார்
கிளர்ந்தது ககன முட்டைக் கிழிந்தது கீழு மேலும். 1824

ஆயிரங் கோடி வெள்ளத் தயிலெயிற் றவுணர்க் கங்கங்
கேயினவொருவர்க்கோரோர் திருமுகமிரட்டிப்பொற்றேள்
தீயெனக் கனலுஞ் செங்கண் சிரந்தொறு மூன்றுந் தெய்வ
வாயினிற் கடல்க ளேழு மலைகளு மற்று முற்றும். 1825

பேருடை யவுணர் தம்மைப் பிறையெயிற் றடக்கும்பேராப்
பாரிடைத் தேய்க்கு மீளப் பகிரண்டத் தடிக்கும் பற்றி
மேருவிற் புடைக்கும் மாள விரல்களிற் பிசையும் வேலை
நீரிடைக் குமிழி யூட்டு நெருப்பிடைச் சுரிக்க நீட்டும். 1826

இரணியன் கூற்று

நின்றவன் றன்னை நோக்கி நிலையிது கண்டு நீயும்
ஒன்றுமுன் னுள்ளத் தியாதுமுணர்ந்திலை போலு மன்றே
வன்றொழி லாழி வேந்தை வணங்குதி வணங்க வேயுன்
புன்றொழில்பொறுக்குமென்ரு னுலகெலாம்புகழநின்றுன.

கேளிது நீயுங் காணக் கிளர்ந்தகோ ளரியின் கேழில்
தோளொடு தாளு நீக்கி நின்னையுந் துணித்துப்பின்னென்
வாளினைத் தொழுவ தல்லால் வணங்குதன் மகளீ ரூடல்
நாளினு முளதோ வென்ன வண்டங்கள் நடுங்க நக்கான்.

இரணியனை நரசிங்கம் பற்றிக் கொல்லுதல்

வாளொடு தோளுங் கையு மகுடமு மலரோன் வைத்த
நீளிருங் ககன முட்டை நெடுஞ்சுவர் தேய்ப்ப நேமி
கோளொடுந் திரிவ தென்னக் குருமணிக் கொடும்பூண் மின்னத்
தாளிணையிரண்டும்பற்றிச் சுழற்றினன்றடக்கையொன்ருல்.

சுழற்றிய காலத் திற்ற தூங்குகுண் டலங்க ணீங்கிக்
கிழக்கொடு மேற்கி னேடு விழுந்தன கிடந்த வின்றும்
அழற்றரு கதிரோன் றேன்று முதயத்தோ டத்தமான
நிழற்றருங் காலை மாலை நெடுமணிச் சுடரி னீத்தம். 1830

ஆயவன் றன்னை மாய னந்தியி னவன்பொற் கோயில்
வாயலின் மணிக்க வான்மேல் வயிரவா ளுகிரின் வாயில்
மீயெழு குருதி பொங்க வெயில்விரி வயிர மார்பு
தீயெழப் பிளந்து நீக்கித் தேவர்க ளிடுக்கண் தீர்த்தான்.

*முக்கணு னெண்க ணுனு முளரியா யிரக்க ணுனும்
திக்கணுந் தேவ ரோடு முனிவரும் பிறருந் தேடிப்
புக்கநா டறிகு ருமற் றிரிகின்றுர் புகுந்து மொய்த்தார்
எக்கணுற் காண்டு மெந்தை யுருவமென் றிரங்கி நின்றுர்.

பல்லொடு பல்லுக் கெல்லை யாயிரக் காதப் பத்தி
சொல்லிய வதனங் கோடி கோடிமேல் விளங்கித் தோன்ற
எல்லையி லுருவிற்ருகி யிருந்ததை யெதிர நோக்கி
அல்லியங் கமலத் தண்ண லவன்புகழ் விரிப்ப தானுன்.

நரசிங்கத்தின் சினந் தணித்தல்

எஞ்சு முலகனைத்து மிப்பொழுதே யென்றென்றும்
நெஞ்சு நடுங்கிநெடுந் தேவரை நோக்கி
அஞ்சன்மி னென்னு வருள்சுரந்த நோக்கினுல்
கஞ்சமலர் பழிக்குங்கை யபயங் காட்டினுன். 1834

இலக்குமி எய்துதல்

பூவிற் றிருவை யழகின் புனைகலத்தை
யாவர்க்குஞ் செல்வத்தை வீடென்னு மின்பத்தை
ஆவித் துணையை யமுதிற் பிறந்தானைத்
தேவர்க்குந் தம்மோயை யேவினுர் பாற்செல்ல. 1835

செந்தா மரைப்பொகுட்டிற் செம்மாந்து வீற்றிருக்கும்
நந்தா விளக்கை நறுந்தா ழிளங்கொழுந்தை
முந்தா வுலகு முயிரு முறைமுறையே
தந்தானை நோக்கினுன் றன்னெப்பொன் றில்லாதான். 1836

---

* முக்கணுன் - உருத்திரன். சிவபெருமான் வேறு; உருத்திரன் வேறு; உருத்திரன் மூவருள் ஒருவன். மூவருமறிகிலா முழுமுதல் சிவம்.

பிரகலாதரை நோக்கி நரசிங்கம் புகழ்தல்

உந்தையையுன் முன்கொன் றுடலைப் பிளந்தளையச்
சிந்தை தளரா தறம்பிழையாச் செய்கையாய்
அந்தமிலா வன்பென்மேல் வைத்தா யளியத்தாய்
எந்தை யினியிதற்குக் கைம்மா றியாதென்றான். 1837

கொல்லே மினியுன் குலத்தோரைக் குற்றங்கள்
எல்லை யிலாதன செய்தாரே யென்றாலும்
நல்லே முனக்கெம்மை நாணும னன்செய்வ
தொல்லை யுளதே லியம்புதியா லென்றுரைத்தான். 1838

பிரகலாதர் பெற்ற வரம்

முன்பு பெறப்பெற்ற பேறே முடிவில்லை
பின்பு பெறும்பேறு முண்டோ பெறுகுவெனேல்
என்பு பெறாத விழிபிறவி யெய்திடினும்
அன்பு பெறுகையரும் பேறெனக் கென்றான் 1839

நரசிங்கம் அருளல்

அன்னானை நோக்கி யருள்சுரந்த நெஞ்சினனாய்
என்னானை வல்லே னெனமகிழ்ந்த பேரீசன்
முன்னான பூதங்கள் யாவையு முற்றிடினும்
எந்நாளு முலவாய்நீ யென்போ லுளையென்றான். 1840

மின்னைத் தொழுவளைத்த தன்ன மிளிரொளியாய்
முன்னைத் தொழும்புனக்கே யாமன்றே மூவுலகும்
என்னைத் தொழுதேத்தி யெய்தும் பயனெய்தி
உன்னைத் தொழுதேத்தி யுய்க வுலகெல்லாம். 1841

நல்லறமு மெய்ம்மையு நான்மறையு நல்லருளும்
எல்லையின் ஞானமு மீறிலா வெப்பொருளும்
தொல்லைசா லெண்குணனு நின்சொற் றொழில்செய்க
வல்லவுரு வொளியாய் நாளு வளர்கநீ. 1842

முடிசூட்டுதல்

என்று வரமருளி யெவ்வுலகுங் கைகூப்ப
முன்றின் முரச முழங்க முடிசூட்டி
நின்ற வமர ரனைவீரு நேர்ந்திவனுக்
கொன்று பெருமை யுரிமைபுரி கென்றான். 1843

ஈதாகு முன்னிகழ்ந்த தெம்பெருமா னென்மாற்றம்
யாதானு மாக நினையா திகழ்தியேல்
தீதாய் வினைதனனி தின்னமெனச் செப்பினன்
மேதாவி கட்கெல்லா மேலாய மேன்மையான். 1844

வீடணன் அடைக்கலப் படலம்

இராவணன் வீடணன்மீது வெகுளுதல்

கேட்டன னிருந்துமக் கேள்வி தேர்கலாக்
கோட்டிய சிந்தைய னுறுதி கொண்டிலன்
மூட்டிய தீயென முடுகிப் பொங்கினன்
ஊட்டரக் கூட்டிய வனைய வொண்கணன். 1845

இரணிய னென்பவ னெம்ம னோரினும்
முரணிய னவன்றனை முருக்கி முற்றினன்
அரணிய னென்றவற் கன்பு பூண்டனை
மரணமென் றொருபொருண் மாற்றும் வன்மையோய்.

ஆயவன் வளர்த்ததன் றாதை யாகத்தை
மாயவன் கல்லிய மகிழ்ந்த மைந்தனும்
ஏயுநம் பகைஞனுக் கினிய நண்புசெய்
நீயுமே நிகர்பிறர் நிகர்க்க நேர்வரோ. 1847

பாழிசா லிரணியன் புதல்வன் பண்பெனச்
சூழ்வினை முற்றியா னவர்க்குத் தோற்றபின்
ஏழைநீ யென்பெருஞ் செல்வ மெய்திப்பின்
வாழவோ கருத்தது வரவற் றாகுமோ. 1848

முன்புற வனையர்பால் நண்பு முற்றினை
வன்பகை மனிதரின் வைத்த வன்பினை
என்புற வுருகுதி யழுதி யேத்துதி
உன்புக லவர்பிறி துரைக்க வேண்டுமோ. 1849

நண்ணின மனிதரை நண்பு பூண்டனை
எண்ணினை செய்வினை யென்னை வெல்லுமா
றுன்னினை யரசின்மே லாசை யூன்றினை
திண்ணிதுன் செயல்பிறர் செறுநர் வேண்டுமோ.

அன்று வானரம் வந்துநஞ் சோலையை யழிப்பக்
கொன்று தின்றிடு மின்னெனத் தூதரைக் கோறல்
வென்றி யன்றென விலக்கினை மேல்வினை வெண்ணித்
துன்று தாரவற் றுணையெனக் கோடலே துணிந்தாய்.

பழியினை யுணர்ந்தியான் படுக்கி லேனுனை
ஒழிகிலை புகலுத லொல்லை நீங்குதி
விழியெதிர் நிற்றியேல் விளிதி யென்றனன்
அழிவினை யெய்துவா னறிவு நீங்கினான். 1852

வீடணன் விண்ணிடை நின்று கூறுதல்

என்றலு மிளவலு மெழுந்து வானிடைச்
சென்றனன் றுணைவருந் தானுஞ் சிந்தியா
நின்றனன் பின்னரு நீதி சான்றன
ஒன்றல பலபல வுறுதி யோதினான். 1853

புத்திரர் குருக்கணின் பொருவில் கேண்மையர்
மித்திர ரடைந்துளோர் மெலியர் வன்மையோர்
இத்தனை பேரையு மிராமன் வெஞ்சரஞ்
சித்திர வதஞ்செயக் கண்டு தீர்தியோ. 1854

எத்துணை வகையினு முறுதி யெய்தின
ஒத்தன வுணர்த்தினே னுணர கிற்றிலை
அத்தவென் பிழைபொறுத் தருள்தி யாலெனா
உத்தம னந்நக ரொழியப் போயினான். 1855

வீடணன் புறப்படுதல்

அனலனு மனிலனு மரன்சம் பாதியும்
வினையவர் நால்வரும் விரைவின் வந்தனர்
கனைகழற் காலினர் கருமச் சூட்சியர்
இனைவரும் வீடண னோடு மேயினார். 1856

முன்புறக் கண்டிலேன் கேள்வி முன்பிலேன்
அன்புறக் காரண மறிய கிற்றிலேன்
என்புறக் குளிருநெஞ் சுருகு மேலவன்
புன்புலப் பிறவியின் பகைஞன் போலுமால். 1857

ஆதியம் பரமனுக் கன்பு நல்லறம்
நீதியின் வழாமையு முயிர்க்கு நேயமும்
வேதிய ருருளுநான் விரும்பிப் பெற்றனென்
போதுறு கிழவனைத் தவமுன் பூண்டநாள். 1858

எந்தையே யிராகவ சரண மென்றசொல்
தந்தவ ரெனைவரோ சாற்று மின்னென

மந்தண முற்றுழீஇ வயவெஞ் சேனையின்
முந்தினர்க் குற்றதை மொழிகு வாமரோ. 1859

சேனையின் முன்னிருந்த வானரர் சினமுறுதல்.

முற்றிய குரிசிலை முழங்கு தானையின்
உற்றனர் நிருதர்வந் தென்ன வொன்றினர்
எற்றுதிர் பற்றுதி ரெறிதி ரென்றிடை
சுற்றின ருருமெனத் தெழிக்குஞ் சொல்லினர். 1860

இருபது கரந்தலை யீரைந் தென்னுமத்
திருவிலிக் கன்னவை சிதைந்த வோவென்பார்
பொருதொழி லெம்மொடும் பொருதி போரென்பார்
ஒருவரி னொருவர்சென் றுறுக்கி யூன்றுவார் 1861

அநுமன் ஏவலால் இருவர் வந்து நோக்குதல்

இயைந்தன வியைந்தன வினைய கூறலும்
மயிந்தனுந் துமிந்தனு மென்னு மாண்பினர்
அயிந்திர நிறைந்தவ னாணை யேவலால்
நயந்தெரி காவல ரிருவர் நண்ணினர். 1862

யாரிவ ணெய்திய கருமம் யாவது
போரது புரிதிரோ புறத்தொ ரெண்ணமோ
சார்புற நின்றநீர் சமைந்த வாறெலாஞ்
சோர்விலிர் மெய்ம்முறை சொல்லு; வீரென்றான். 1863

அனலன் விடை

பகலவன் வழிமுதற் பாரி னாயகன்
புகலவன் கழலடைந் துய்யப் போந்தனன்
தகவுறு சிந்தையன் றரும நீதியன்
மகன்மகன் மைந்தனான் முகற்கு வாய்மையான். 1864

அறநிலை வழாமையு மாதி மூர்த்திபால்
நிறைவரு நேசமு நின்ற வாய்மையும்
மறையவர்க் கன்புமென் றினைய மாமலர்
இறையவன் றரநெடுந் தவத்தி னெய்தினான். 1865

சுடுதியைத் துகிலிடைப் பொதிந்த துன்மதி
இடுதியே சிறையிடை யிறைவன் றேவியை
விடுதியே லுய்குதி விடாது வேட்டியேல்
படுதியென் றுறுதிகள் பலவும் பன்னினான். 1866

மறந்தரு சிந்தையன் மதியி னீங்கினன்
பிறந்தனை பின்பதிற் பிழைத்தி போகுதி
இறந்தனை நிற்றியே லென்ன வின்னவன்
துறந்தன னெனவிரித் தனலன் சொல்லினன். 1867

மயிந்தன் இராமர்பால் செல்லுதல்

தருமமு ஞானமுந் தவமும் வேலியாய்
மருவரும் பெருமையும் பொறையும் வாயிலாய்க்
கருணையங் கோயிலு ளிருந்த கண்ணனை
அருணெறி யெய்திச்சென் றடிவ ணங்கினன். 1868

மயிந்தன் வீடணன் தன்மையை விளம்பினன்.
இராமர் நண்பருடன் ஆய்தல்

அப்பொழு திராமனு மருகில் நண்பரை
இப்பொருள் கேட்டநீ ரியம்பு வீரிவன்
கைப்புகற் பாலனோ கழியற் பாலனோ
ஒப்புற நோக்கிநும் முணர்வி னலென்றான். 1869

சுக்ரீவன்

வெம்முனை விளைதலி னன்று வேறொரு
சும்மைய னுயிர்கொளத் துணித லாலன்று
தம்முனைத் துறந்தது தரும நீதியோ
செம்மையி லரக்கரில் யாவர் சிறியோர். 1870

வார்குறு வனைகழற் றம்முன் வாழ்ந்தநாள்
சீர்க்குற வாயிடைச் செறுநர் சிறிய
போர்க்குற வன்றியே புகுந்த போதிவன்
ஆர்க்குற வாகுவ னருளி னுழியாய். 1871

வஞ்சனை யியற்றிட வந்த வாறலால்
தஞ்செனை நம்வயிற் சார்ந்து ளானலன்
நஞ்செனக் கொடியனை நயந்து கோடியோ
அஞ்சன வண்ணவென் றறியக் கூறினன். 1872

சாம்பன்

மேல்நனி விளைவது விளம்பல் வேண்டுமோ
கானகத் திறைவியோ டுறையுங் காலையின்
மானென வந்தவன் வரவை மானுமிவ்
வேனையன் வரவுமென் றினைய கூறினன். 1873

நீலன்

காலமே நோக்கினுங் கற்ற நூல்களின்
மூலமே நோக்கினு முனிந்து போந்தவன்
சீலமே நோக்கியாந் தெளிந்து தேறுதற்
கேலுமே யென்றெடுத் தினைய கூறினன். 1874

உறுபொருள் யாவரு மொன்றக் கூறினர்
செறிபெருங் கேள்வியாய் கருத்தென் செப்பென
நெறிதரு மாருதி யென்னு நேரிலா
அறிவனை நோக்கின னறிவின் மேலுளான். 1875

மாருதி

இணங்கின ரறிவில ரெனினு மெண்ணுங்கால்
கணங்கொள்கை நும்மனோர் கடன்மை காணென
வணங்கிய சென்னியன் மறைத்த வாயினன்
நுணங்கிய கேள்வியா னுவல்வ தாயினன். 1876

உள்ளத்தி னுள்ளதை யுரையின் முந்துற
மெள்ளத்தம் முகங்களே விளம்பு மாகலால்
கள்ளத்தின் விளைவெலாங் கருத்தி லாவிருட்
பள்ளத்தி னன்றியே வெளியிற் பல்குமோ. 1877

மாதரைக் கோறலு மறத்து நீங்கிய
ஆதரைக் கோறலும் அழிவு செய்யினும்
தூதரைக் கோறலுந் தூய்தன் றாமென
ஏதுவிற் சிறந்தன வெடுத்துக் காட்டினன். 1878

நிந்தனை நறவமு நெறியி லூன்களும்
தந்தன கண்டிலேன் றரும தானமும்
வந்தனை நீதியும் பிறவு மாண்பமைந்
தந்தண ரில்லெனப் பொலிந்த தாமரோ. 1879

அன்னவன் றனிமக ளலரின் மேலயன்
சொன்னதோர் சாபமுண் டுன்னைத் துன்மதி
நன்னுதல் தீண்டுமேல் நணுகுங் கூற்றென
என்னுடை யிறைவிக்கு மினிது கூறினள். 1880

தேவர்க்குந் தானவர்க்குந் திசைமுகனே
முதலாய தேவ தேவர்
மூவர்க்கு முடிப்பரிய காரியத்தை
முற்றுவிப்பான் மூண்டு நின்றே

ஆவத்தின் வந்தபய மென்றானை
யயிர்த்தகல விடுதி யாயின்
கூவத்தின் சிறுபுனலைக் கடலயிர்த்த
தொவ்வாதோ கொற்ற வேந்தே. 1881

ஆதலா லிவன்வரவு நல்வரவே
யெனவுணர்ந்தே னடியனேனுன்
வேதநூ லெனத்தகைய திருவுளத்தின்
குறிப்பறியே னென்று விட்டான்
காதலன் முகனாலுங் கணிப்பரிய
கலையனைத்துங் கதிரோன் முன்சென்
றோதினா னேதநீர் கடந்துபகை
கடிந்துலகை யுய்யக் கொண்டான். 1882

மற்றினி யுரைப்ப தில்லை மாருதி வடித்துச் சொன்ன
பெற்றியே பெற்றி யன்ன தன்றெனிற் பிறிதொன் றானும்
வெற்றியே பெருக தோற்க வீகவீ யாது வாழ்க
பற்றுத லன்றி யுண்டோ புகலெமைப் பகர்கின் றானை.

இராமர் கூறுதல்

இடைந்தவர்க் கபயம் யாமென் றிரந்தவர்க் கெறிநீர் வேலை
கடைந்தவர்க் காகி யால முண்டவற் கண்டி லீரோ
உடைந்தவர்க் குதவா னாயி னுள்ளதொன் றீயா னாயின்
அடைந்தவர்க்கருளானாயினறமென்னுமாண்மையென்னும்.

பேடையைப்பிடித்துத்தன்னைப்பிடிக்கவந்தடைந்தபேதை
வேடனுக் குதவி செய்து விறகிடை வெந்தீ மூட்டிப்
பாடுறு பசியை நோக்கித் தன்னுடல் கொடுத்த பைம்புள்
வீடுபெற் றுயர்ந்தவார்த்தை வேதத்தின்விழுமி தன்றோ.

போதக மொன்று கன்றி யிடங்கர்மாப் பொருத போரின்
ஆதியம் பரமே யானுன் னபயமென் றழைத்த வந்நாள்
வேதமு முடிவு காணா மெய்ப்பொருள் வெளிவந் தெய்தி
மாதுயர் துடைத்த வார்த்தை மறப்பரோ மறப்பி லாதார்.

நஞ்சினை மிடற்று வைத்த நகைமழு வாள னாலும்
தஞ்சென முன்னந் தானே தாதைபாற் கொடுத்துச் சாதல்
அஞ்சினே னபய மென்ற வந்தணற் காகி யந்நாள்
வெஞ்சினக் கூற்றை மாற்று மேன்மையின் மேன்மை
யுண்டோ. 1887

சரணெனக் கியார்கொ லென்று சானகி யழுது சாம்ப
அரணுனக் காவென் வஞ்சி யஞ்சலென் றருளி னெய்தி
முரணுடைக் கொடியோன் கொல்ல மொய்யமர் முடித்துத்
தெய்வ
மரணமென் றுதைை பெற்ற தென்வயின் வழக்கன் றுமோ.

ஆதலா னபய மென்ற பொழுதத்தே யபய தானம்
ஈதலே கடப்பா டென்ப தியம்பினீ ரென்பால் வைத்த
காதலானினிவேறெண்ணக் கடவதென்கதிரோன்மைந்தா
கோதிலா தவனை நீயே யென்வயிற் கொணர்தி யென்றான்.

சுக்கிரீவன் வீடணனைத் தழுவுதல்

தொல்லருங் கால மெல்லாம் பழகினுந் தூய ரல்லார்
புல்லல ருள்ளந் தூயார் பொருந்துவ ரெதிர்ந்த ஞான்றே
ஒல்லைவந் துணர்வு மொன்ற விருவரு மொருநா ளுற்ற
எல்லியும் பகலும் போலத் தழுவின ரெழுவிற் றோளார்.

தழுவினர் நின்ற காலைத் தாமரைக் கண்ணன் றங்கள்
முழுமுதற் குலத்திற் கேற்ற முறைமையா லுலகை மூள
வழுவலி லபய முன்பால் வழங்கின னவன்பொற் பாதம்
தொழுதியால் விரைவி னென்னக் கதிரவன்சிறுவன்
சொன்னான். 1891

வீடணன் வியப்புரை

பஞ்செனச் சிவக்கு மென்காற் றேவியைப் பிரித்த பாவி
வஞ்சனுக் கிளைய வென்னை வருகவென் றருள்செய்தானே
தஞ்செனக் கருதி னானே தாழ்சடைக் கடவு ளுண்ட
நஞ்செனச் சிறந்தே னன்றோ நாயக னருளினாயேன். 1892

தீர்வரு மின்னல் தம்மைச் செய்யினுஞ் செய்ய சிந்தைப்
பேரரு ளாளர் தத்தஞ் செய்கையிற் பிழைப்ப துண்டோ
கார்வரை நிறுவித் தன்னைக் கனலெழக் கலக்கக் கண்டும்
ஆர்கலி யமர ருய்ய வமிழ்துபண் டளித்த தன்றே. 1893

வீடணன் இராமரைக் காணுதல்

மாற்கடஞ் சூழ்ந்த வைப்பி னங்கதன் மருங்கு காப்ப
நாற்கட லுடுத்த பாரில் நாயகன் புதல்வ னமப்
பாற்கடல் சுற்ற விற்கை வடவரை பாங்கு நிற்பக்
கார்க்கடல் கமலம் பூத்த தெனப்பொலிவானைக்கண்டான்.

கற்றைவெண் ணிலவு நீக்கிக் கருணையா லமிழ்தங் காலும்
முற்றுறு கலையிற் றூய முழுமதி முகத்தி னானைப்
பெற்றவ னளித்த மோலி யிளையவன் பெறத்தான் பெற்ற
சிற்றவை பணித்த மோலி பொலிகின்ற சென்னி யானை.

வீரனை நோக்கி யங்க மென்மயிர்ச் சிலிர்ப்பக் கண்ணீர்
வாரநெஞ் சுருகிச் செங்க ணஞ்சன மலையன் றாகில்
கார்முகில் கமலம் பூத்த தன்றிவன் கண்ணன் கொல்லாம்
ஆரருள் சுரக்கு நீதி யறநிறங் கரிதோ வென்றான். 1896

மின்மினி யொளியின் மாயும் பிறவியை வேரின் வாங்கச்
செம்மணி மகுட நீக்கித் திருவடி புனைந்த செல்வன்
தன்முனர் கமலத் தண்ணல் தாதையார் சரணந் தாழ
என்முனை ரெனக்குச் செய்த வுதவியென் றேம்ப லுற்றான்.

பெருந்தவ மியற்றி னோர்க்கும் பேர்வரும் பிறவி நோய்க்கு
மருந்தன நின்றான் றானே வடிக்கணை தொடுத்துக்
கொல்வான்
இருந்தன னின்ற தென்னை மியம்புவ தெல்லை தீர்ந்த
அருந்தவமுடையரம்மாவரக்கரென் றகத்துட்கொண்டான்.

அழிந்தது பிறவி யென்னு மகத்தியன் முகத்திற் காட்ட
வழிந்தகண் ணீரின் மண்ணின் மார்புற வணங்கி னானைப்
பொழிந்ததோர்கருணை தன்னாற்புல்லினனென்று தோன்ற
எழுந்தினி திருத்தி யென்னை மலர்க்கையா லிருக்கை
யீந்தான். 1899

வீடணனுக்கு இலங்கை யரசளித்தல்

ஆழியா னவனை நோக்கி யருள்சுரந் துவகை தூண்ட
ஏழினோ டேழாய் நின்ற வுலகுமென் பெயரு மெந்நாள்
வாழுநா ளன்று காறும் வாளெயிற் றரக்கர் வைகும்
தாழ்கட லிலங்கைச் செல்வ நின்னதே தந்தே னென்றான்.

தீர்த்தன தருளை நோக்கிச் செய்ததோர் சிறப்புப் பெற்றான்
கூர்த்தநல் லறத்தை நோக்கிக் குறித்ததோ யாது
கொல்லோ
வார்த்தையஃ துரைத்த லோடுந் தனித்தனி வாழ்ந்தே
மென்ன
ஆர்த்தன வுலகி னுள்ள சராசர மனைத்து மம்மா. 1901

உஞ்சனே னடிய னேனென் றாழ்முறை வணங்கி நின்ற
அஞ்சன மேனி யானை யழகனு மருளி னோக்கித்
தஞ்சநற் றுணைவ னான தவறிலாப் புகழான் றன்னைத்
துஞ்சலில் நயனத் தையை சூட்டுதி மகுட மென்றான். 1902

வீடணன் பாதுகை வேண்டல்

விளைவினை யறியும் வென்றி வீடண னென்று வீயா
அளவறு பெருமைச் செல்வ மளித்தனை யாயி னைய
களவிய லரக்கன் பின்னே தோன்றிய கடன்மை தீர
இளையவற் களித்த மோலி யென்னையுங் கவித்தியென்றான்.

இராமர்

குகனொடு மைவ ரானோ முன்புபின் குன்று சூழ்வான்
மகனொடு மறுவ ரானோ மெம்முழை யன்பின் வந்த
அகனமர் காத லைய நின்னொடு மெழுவ ரானோம்
புகலருங் கானந் தந்து புதல்வராற் பொலிந்தானுந்தை.

திருவடி முடியிற் சூட்டிச் செங்கதி ருச்சி சேர்ந்த
அருவரை யென்ன நின்ற வரக்கர்தம் மரசை நோக்கி
இருவரு மின்ப முற்றார் யாவரு மின்ப முற்றார்
பொருவரு மமரர் வாழ்த்திப் பூமழை பொழிவ தானார்.

வீடணன் உலா

அந்தமில் குணத்தி னானை யடியிணை முடியி னோடும்
சந்தன விமான மேற்றி வானரத் தலைவர் தாங்க
இந்திரற் குரிய செல்வ மெய்தின னிவனென் றேத்தி
மந்தரத் தடந்தோள்வீரர் வலஞ்செய்தார் தானைவைப்பை.

"பருதிமகன் வாசல் மந்த்ரி அநுமனொடு நேர் பணிந்து
பரிதகழை யாமுன் வந்து பரிவாலே
பரவிய விபீஷணன் பொன் மகுடமுடி சூட நின்ற
படைஞரொடி ராவணன்ற னுறவோடே
எரிபுகுத மாறி லண்டர் குடிபுகுத மாறு கொண்ட
ரகுபதியி ராம சந்த்ரன் மருகோனே"
— (சுருளளக) திருப்புகழ்..

[வீடணன் புரிந்தது நியாயமே

விபீஷணர், இராவணனைத் துறந்து இராமரிடம் சேர்ந்தது சகோதரத் துரோகம் செய்தது ஆகும் என்றும், அண்ணனைக் காட்டிக் கொடுத்தவர் என்றும் சிலர் கூறி இடர்ப்படுவர்.

அண்ணனுடைய வாழ்வு நிலைத்திருக்க வேண்டும் என்றே அவர் கருதினர் என்பதை அடியில் வரும் வசனத்தால் அறிக.

எந்தைநீ யாயுநீ எம்மு னீதவம்
வந்தனைத் தெய்வம்நீ மற்று முற்றுநீ
இந்திரப் பெரும்பதம் இழக்கின் றுயென
நொந்தனென் ஆதலால் நுவல்வ தாயினேன்.

ஒருவனுக்கு உரிய உயர்ந்த ஒரு பொருளை ஒருவன் களவு செய்வானாயின், களவு செய்தவன் தம்பி பொருளை உடையவனிடம் தருவது முறையென்று வற்புறுத்திக் கூறியும், அண்ணன் தர மறுத்தான் எனில் பொருளுக்கு உடையவனிடம் சொல்லி, பொருளை உடையானிடம் சேரச் செய்வதே அறமாகும்.

ஆகவே இராமருக்கு உரிய வாழ்க்கைத் துணைவியை இராவணன் களவு செய்தான். விபீடணர் நீதிநெறி கூறியும் அவன் திருந்தாமையால் இராமரிடம் சேர்ந்து அவருக்குரிய பொருளை அவர்பால் சேர்ப்பித்தது முற்றிலும் நியாயமே. ஐம்பெரும் பாவங்கள் புரிவாருடன் சேர்ந்திருந்தாரும் அப்பாவத்திற்கு உரியாரே எனத் தெளிக.

போர் மூண்டபின்னர் அண்ணனை விட்டுப் பிரிந்தால் அது முறையாகாது. போர் மூண்டபடியால் கும்பகர்ணன் அண்ணனைப் பிரியாது உயிர் கொடுத்தான்.

ஆதலால் விபீஷணர் போர் மூள்வதற்கு முன், நீதி கூறிய தன்னைக் கொல்ல வந்த இராவணனைத் துறந்தது முறைமையே என உணர்க.]

இலங்கை கேள்விப் படலம்

இரவு வந்தது

இராமர் வீடணனை 'இலங்கையின் திறம் உரை' எனல்.

ஆர்கலி யிலங்கையி னரணு மவ்வழி
வார்கெழு கனைகழ லரக்கன் வன்மையும்
தார்கெழு தானையி னளவுந் தன்மையும்
நீர்கெழு தன்மையாய் நிகழ்த்துவா யென்றுன். 1907

வீடணன் விளம்புதல்

ஏழுநூ றியோசனை யகல மிட்டகீழ்
ஆழநூ றியோசனை யாழி மால்வரை
வாழியா யுலகினை வளைந்த வண்ணமே
சூழுமா மதிலது சுடர்க்கு மேலதால். 1908

வடதிசை வாயில் காவலர்		16 கோடி
மேற்றிசை	,,	2 கோடி
தென்றிசை	,,	16 கோடி
கீழ்த்திசை	,,	16 கோடி
வானிடை	,,	32 கோடி

பிறங்கிய நெடுமதிற் பின்னு முன்னரும்
உறங்கல ருண்பத முலவை யாதலால்
கறங்கெனத் திரிபவர் கணக்கு வேண்டுமேல்
அறைந்துள தையிரு நூறு கோடியால். 1909

நகர் காவலர் 30 கோடி

விடமல விழியெனும் வெகுளிக் கண்ணினர்
கடனல விமைத்தலு மென்னுங் காவலர்
வடவரை புரைவன கோயில் வாயிலின்
இடம்வலம் வருபவ ரெண்ணெண் கோடியால். 1910

பேயனே னென்பல பிதற்றிப் போர்த்தவன்
மாயிரு ஞாலத்து வைத்த மாப்படை
தேயினு நாளெலாந் தேய்க்க வேண்டுவ
தாயிர வெள்ளமென் றறிந்த தாழியாய். 1911

அரண்மனை காவலர் கோடி கோடி

தும்பி யீட்டமு மிரதமும் புரவியுந் தொடர்ந்த
அம்பொன் மாப்படை யையிரு கோடிகொண் டமைந்தான்
செம்பொ னுட்டுள சித்தரைச் சிறையிடை வைத்தான்
கும்ப னென்றுள னூழிவெங் கதிரினுங் கொடியான். 1912

உகம்பல் காலமுந் தவஞ்செய்து பெருவர முடையான்
சுகம்பல்போரலால் வேறிலன் பொருபடைத் தொகையான்
நகம்ப லென்றிவை யில்லதோர் நரசிங்க மனையான்
அகம்ப னென்றுள னலைகடல் பருகவு மமைவான். 1913

நிகும்பன், மகோதரன், வேள்விப்பகைஞன், பானுகோபன், பெரும்பக்கன், வஜ்ரதந்தன், பிசாசன், துன்முகன், விருபாட்சன், தூமிராட்சன், சேனுபதி பிரகத்தன்.

தம்பி முப்பகற் சந்திரர் நால்வரிற் றயங்கும்
கும்ப மாக்கரிக் கோடிரு கைகளால் வாங்கிச்

செம்பொன் மால்வரை மதம்பட்ட தாமெனத் திரித்தான்
கும்ப கன்னனென் றுளன்பண்டு தேவரைக் குமைத்தான்.

கோளி ரண்டையுங் கொடுஞ்சிறை வைத்தவக் குமரன்
மூளும் வெஞ்சினத் திந்திர சித்தென மொழிவான்
ஆளு மிந்திரற் கன்னவன் பிணித்ததற் பின்னைத்
தாளு மார்பினுந் தோளினு முளவினுந் தழும்பு. 1915

அதிகாயன், தேவாந்தகன், நராந்தகன், திரிசிரன்
முதலியோர் திறமுரைத்தனர்.

இராவணன் திறம்

எள்ளி லைம்பெரும் பூதமும் யாவையுஞ் சூழப்
புள்ளி மானுரி யாடைய னுமையொடும் புணர்ந்த
வெள்ளி யம்பெருந் தடங்கிரி வேரொடும் வாங்கி
அள்ளி விண்டொட வெடுத்தன னுலகெலா மனுங்க. 1916

குரண்ட மாடுநீ ரளகையி னொளித்துறை குபேரன்
திரண்ட மாடுந்தன் றிருவொடு நிதியமு மிழந்து
புரண்டு மான்றிரள் புலிகண்ட தாமெனப் போனான்
இரண்டு மானமு மிலங்கைமா நகரமு மிழந்து. 1917

அநுமன் திறம்

ஈடு பட்டவ ரெண்ணிலர் தோரணத் தெழுவால்
பாடு பட்டவர் படுகடன் மணலினும் பலரால்
கூடு பட்டது கொடிநக ரடுபுலி துரந்த
ஆடு பட்டதே பட்டன ரனுமனா லரக்கர். 1918

காய்த்த வக்கணத் தரக்கர் முடலுகு கறைத்தோல்
நீத்த வெக்கரி னிறைந்துள கருங்கடல் நெருப்பின்
வாய்த்த வக்கணை வரிசிலை மலையொடும் வாங்கித்
தேய்த்த வக்குழம்புலர்ந்திலவிலங்கையிற்றெருவில். 1919

விருபாட்சன், யூபாட்சன், துர்த்தர்ஷன், ப்ரகஸன், பாச கர்ணன் என்ற பஞ்ச சேனாதிபதிகளையும், சம்புமாலியையும், கொன்றதைக் கூறினர்.

விலங்கல் வெந்தவா வேறினி விளம்புவ தெவனோ
அலங்கன் மாலையுஞ் சாந்தமு மன்றுதா னணிந்த
கலன்க ளோடுமச் சாத்திய துகிலொடுங் கதிர்வாள்
இலங்கை வேந்தனு மேழுநாள் விசும்பிடை யிருந்தான்.

இராமர் மகிழ்ந்துரைத்தல்

கேள்கொண்மேலையான்கிளத்தியபொருளெலாங்கேட்டான்
வாள்கொ ணேக்கியைப் பாக்கியப் பழுத்தன மயிலை
நாள்கள் சாலவு நீங்கலி னலங்கெட மெலிந்த
தோள்கள்வீங்கித்தன் றாதனைப் பார்த்திவை சொன்னன்.

கூட்டி னூர்படை பாகத்தின் மேற்படக் கொன்றாய்
ஊட்டி னூயெரி யூர்முற்று மினியங் கொன்றுண்டோ
கேட்ட வாற்றினூற் கிளிமொழிச் சீதையைக் கிடைத்தும்
மீட்டி லாததென் விற்றொழில் காட்டக்கொல் வீர. 1922

என்ன தாக்கிய வலியொடவ் விராவணன் வலியும்
உன்ன தாக்கினை பாக்கிய முருக்கொண்ட தொப்பாய்
முன்ன தாக்கிய மூவுல காக்கிய முதலோன்
பின்ன தாக்கிய பதநினக் காக்கினென் பெற்றாய். 1923

இராமர் கடற்கரையில் ஆலோசிக்கும்போது, ஆலமரத்தில் பறவைகள் ஒலித்தன. இராமர் கை நீட்டினூர். அக் குறிப்பறிந்த பறவைகள் அமைதி யுற்றன.

[இந்த வரலாற்றைக் கடுவன் மள்ளுவனூர் கூறுகின்றூர்:
"வெள்வேற் கவுரியர் தொள்முது கோடி
முழங்கிரும் பௌவ மிரங்கு முன்றுறை
வெல்போ ரிராமன் அருமறை கவித்த
பல்வீ ழாலம்போல் ஒலியவிந்தள்ளுலிவ் வழுங்கலூரே."
— அகநானூறு. (701)]

வருணனை வழிவேண்டு படலம்

கதிரவன் உதித்தான்.

இராமர் புல்லணையிருந்து வருணனை வழிவேண்டுதல்.

தருண மங்கையை மீட்பதோர் நெறிதரு கென்னும்
பொருண யந்துநன் னூனெறி யடுக்கிய புல்லில்
கருணை யங்கடல் துயின்றனன் கருங்கடல் நோக்கி
வருண மந்திர மெண்ணினன் விதிமுறை வணங்கி. 1924

பூழி சென்றுதன் றிருவுருப் பொருந்தவும் பொறைதீர்
வாழி வெங்கதிர் மணிமுகம் வருடவும் வளர்ந்தான்
ஊழி சென்றன வொப்பன வொருபக லவையோர்
ஏழு சென்றன வந்திலன் எறிகடற் கிறைவன். 1925

இராமர் சீறுதல்

ஒன்று வேண்டல ராயினு மொருவர்பா லொருவர்
சென்று வேண்டுவ ரேலவர் சிறுமையிற் றீரார்
இன்று வேண்டிய தெறிகட னெறிதனை மறுத்தல்
நன்று நன்றென நகையொடும் புகையுக நக்கான். 1926

வாங்கி வெஞ்சிலை வாளியின் மற்றொரு வேலை
வீங்கு தோள்வலம் வீக்கினன் கோதையை விரலால்
தாங்கி நாணினைத் தாக்கினன் ருக்கிய தமரம்
ஓங்கு முக்கணன் றேவியைத் தீர்த்துள தூடல். 1927

தீக்கணை விடுதல்

நீறு மீச்செல நெருப்பெழப் பொருப்பெலா மெரிய
தூறு மாயிர கோடியுங் கடுங்கணை நுழைய
ஆறு கீழ்ப்பட வளறுபட் டழுந்திய வளக்கர்
சேறு தீந்தெழக் காந்தின சேடன்றன் சிரங்கள். 1928

மங்கலம் பொருந்திய தவத்து மாதவர்
கங்குலும் பகலுமக் கடலுள் வைகுவார்
அங்கம்வெந் திலரவ னடிக ளெண்ணலால்
பொங்குவெங் கனலெனும் புனலிற் போயினர். 1929

அயன்கணை விடுதல்

இடுக்கினி யியம்புவ தென்னை யிவ்வழி
முடுக்குவென் வருணனை யென்ன மூண்டெழு
தடுக்கரும் வெகுளியான் சதுமு கன்படை
தொடுத்தன னமரருந் துணுக்க மெய்தினர். 1930

மகர நின்றதெண் டிரைபொரு கனைகடல்
மறுகி யஞ்சிவந் தடிதொழு திடவொரு
வடிகொள் செஞ்சரந் தொடுபவன்..............
"..........................அருளரி மருகோனே."
—(முகர) திருப்புகழ்.

வருணன் வந்து வணங்குதல்

எழுசுடர்ப் படலை யோடு மிரும்புகை யெழும்பி யெங்கும்
வழிதெரி வறிவி லாத நோக்கினன் வருண னென்பான்
அழுதழி கண்ண னன்பா லுருகிய நெஞ்ச னஞ்சித்
தொழுதெழு கைய னெய்திற் றோன்றினன் வழுத்துஞ்
சொல்லான். 1931

ஆழிநீ யனலு நீயே யல்லவை யெல்லா நீயே
ஊழிநீ யுலகு நீயே யவற்றுறை யுயிரு நீயே
வாழியா யடியே னுன்னை மறப்பனோ வயங்கு செந்தீச்
சூழுற வுலைந்து போனேன் காத்தருள் சுருதிமூர்த்தி. 1932

கள்ளமா யுலகங் கொள்ளுங் கருணையான் மறையிற்கூறும்
எள்ளலா காத மூலத் தியாதுக்கு முதலா யுள்ள
வள்ளலே காத்தி யென்ற மாகரி வருத்தந் தீரப்
புள்ளின்மேல் வந்து தோன்றும்புராதனபோற்றி போற்றி.

அன்னைநீ யத்த னீயே யல்லவை யெல்லா நீயே
பின்னுநீ முன்னு நீயே பேறுநீ யிகழ்வு நீயே
என்னைநீ யிகழ்ந்த தென்ற தெங்ஙனே யீச னைய
உன்னைநீ யுணராய் நாயே னெங்ஙன முணர்வே னுன்னை.

இராமர் கருணை புரிதல்

ஆறினு மஞ்ச லுன்பா லளித்தன மபய மன்பால்
ஈறிலா வணக்கஞ் செய்தி யாமிரந் திடவெய் யாதே
சீறுமா கண்டு வந்த திறத்தினைத் தெரிவ தாகக்
கூறுநீ யறிய வென்றான் வருணனுந் தொழுது கூறும்.

வருணன்

பார்த்தனிற் பொறையின் மிக்க பத்தினிக் குற்ற பண்பு
வார்த்தையி னறிந்த தல்லாற் றேவர்பால் வந்தி லேனால்
தீர்த்தநின் னாணை யேழாஞ் செறிதிரைக் கடலின் மீனின்
போர்த்தொழில் விலக்கப் போனே னறிந்திலேன் புகுந்த
தொன்று. 1936

இராமர் இக் கணைக்கு இலக்கு யாதென,
வருணன் கூறுதல்

மன்னவ மருகாந் தார மென்பதோர் தீவின் வாழ்வார்
அன்னவர் சதகோ டிக்கு மேலுளா ரவுண ராயோர்
தின்னவே யுலக மெல்லாந் தீந்தன வெனக்குந் தீயார்
மின்னுமிழ்கணையைவெய்யோர்மேற்செலவிடுதியென்றான்

நேடிநூல்தெறிந்துளோர்க்கு முணர்விற்கு நிமிரநின்றோன்
கோடிநா றுய தீய வவுணரைக் குலங்க ளோடும்
ஓடிநா றென்று விட்டா னேரிமை யொடுங்கா முன்னம்
பாடிநா றுக நூறி மீண்டதப் பகழித் தெய்வம். 1938

ஆய்வினை யுடைய ராகி யறம்பிழை யாதார்க் கெல்லாம்
ஏய்வன நலனே யன்றி யிறுதிவந் தடைவ துண்டோ
மாய்வினை யியற்றி முற்றும் வருணன்மேல் வந்த சீற்றம்
தீய்வினை யுடையார் மாட்டே தீங்கினைச் செய்த தன்றே.

இராமர்

மொழியுனக் கபய மென்று யாதலான் முனிவு தீர்ந்தேன்
பழியெனக் காகு மென்று பாதகர் பரவை யென்னும்
குழியினைக் கருதிச் செய்த குமண்டையைக் குறித்து நீங்க
வழியினைத் தருதி யென்றான் வருணனை நோக்கி வள்ளல்.

வருணன்

கல்லென வலித்து நிற்பிற் கணக்கில வுயிர்க ளெல்லாம்
ஒல்லையி னுலந்து வீயு மிட்டதொன் றொழுகா வண்ணம்
எல்லையில் கால மெல்லா மேந்துவெ னெளிதி னெந்தாய்
செல்லுதி சேது வென்றான் றியற்றியென் சிரத்தின்
மேலாய். 1941

சேதுபந்தனப் படலம்

கடலில் அணை கட்டுதல்

அளவறு மறிஞரோ டரக்கர் கோமகற்
கிளவலு மினிதுட னிருக்க வெண்ணினன்
வினைவன செய்வன முடிக்க வேண்டுவான்
நளன்வரு கென்றனன் கவிக்கு நாயகன். 1942

காரியங் கடலினை யடைத்துக் கட்டலே
சூரியன் காதலே சொல்லி யென்பல
மேருவு மணுவுமோர் வேறு றுவகை
ஏருற வியற்றுவென் கொணர்தி யென்றனன். 1943

இளவலு மிறைவனு மிலங்கை வேந்தனும்
அளவறு நங்குலத் தரசு மல்லவர்
வளைதருங் கருங்கட லடைக்க வம்மெனத்
தளமலி சேனையைச் சாம்பன் சாற்றினான். 1944

பேர்த்தன மலைசில பேர்க்க பேர்க்கநின்
றீர்த்தன சிலசில சென்னி யேந்தின
தூர்த்தன சிலசில தூர்க்கத் தூர்க்கநின்
றார்த்தன சிலசில வாடிப் பாடின. 1945

காலிடை யொருமலை யுருட்டிக் கைகளின்
மேலுடை மலையினை வாங்கி விண்டொடும்
சூலுடை மழைமுகில் சூழ்ந்து சுற்றிய
வாலிடை யொருமலை யீர்த்து வந்ததால். 1946

முடுக்கினன் றருகென மூன்று கோடியர்
எடுக்கினு மம்மலை யொருகை யேந்தியிட்
டடுக்கினன் றன்வலி காட்டி யாழியை
நடுக்கின னளனெனு நவையி னீங்கினான். 1947

மஞ்சினிற் றிகழ்தரு மலையை மாக்குரங்
கெஞ்சுறக் கடிதெடுத் தெறிய வேநளன்
விஞ்சையிற் றாங்கினன் சடையன் வெண்ணெயில்
தஞ்சமென் றோர்களைத் தாங்குந் தன்மைபோல். 1948

பருத்த மால்வரை யேந்திய பல்படை
நிரைத்த விற்சில செல்ல நிலம்பெருக்
கரத்தி னேந்திய கார்வரை கண்ணகன்
சிரத்தின் மேற்கொண்டு நீந்தின சென்றவால். 1949

போதல் செய்குந ரும்புகு வார்களும்
மாதி ரந்தொறும் வானர வீரர்கள்
சேது வெத்துணைச் சென்றதென் பார்சிலர்
பாதி சென்றதெ னப்பகர் வார்சிலர். 1950

மூன்று நாளில் சேதுபந்தனம் செய்தார்கள்.

எய்த யோசனை யீண்டொரு நூறிவை
ஐயி ரண்டி னகலம மைந்திடச்
செய்த தாலணை யென்றது செப்பினார்
வைய நாதன் சரணம் வணங்கியே. 1951

இராமர் சேதுபந்தனம் செய்தபோது அணில்கள் கடலில் குளித்து மணலில் புரண்டு அணையில் மண் உதிர்த்தன. மலைகளைக் கொணர்ந்து கட்டுகின்ற அணையில் மணலையும் உதிர்த்து அணில்கள் பணி புரிந்தன. இதனைத் தொண்டரடிப் பொடியாழ்வார் தெரிவிக்கின்றனர்.

"குரங்குகள் மலையை நூக்கக்
குளித்துத் தாம் புரண்டிட்டோடி
தரங்கநீ ரடைக்க லுற்ற
சலமிலா அணிலும் போலேன்."

"குரைக் கருங்கடல் திருவணை எனமுனம்
அடைத் திலங்கையி னதிபதி நிசிசரர்
குலத்தொடும்பட ஒருகணை விடுமரி மருகோனே."
—(வடத்தை) திருப்புகழ்.

ஒற்றுக் கேள்விப் படலம்

நளனுக்குப் பரிசளித்தல்

என்றுநள னைக்கருணை யிற்றழுவி யன்பால்
அன்றுவரு ணன்னுதவு மாரமு மளித்துத்
துன்றுகதிர் பொற்கலனு மற்றுள தொகுத்தே
வென்றியினி யென்றுபடை யோடுடன் விரைந்தான். 1952

சேதுவிற் செல்லுதல்

நெற்றியி லரக்கர்பதி செல்லநிறை நன்னூல்
கற்றுணரு மாருதி கடைக்குழை வரத்தன்
வெற்றிபுணர் தம்பியொரு பின்புசெல வீரப்
பொற்றிரள் புயக்கரு நிறக்களிறு போனான். 1953

இராமர் இலங்கை சென்று சுவேலமலையில் தங்குதல்

பெருந்தவ முயன்றமரர் பேணிய தவத்தால்
மருந்தனைய தம்பியொடும் வன்றுணைவ ரோடும்
அருந்ததியும் வந்தனைசெ யஞ்சொலிள வஞ்சி
இருந்தநக ரின்புறனொர்குன்றிடையிறுத்தான். 1954

பாடி வீடுகள் அமைத்தல்

நீலனை நெடிது நோக்கி நேமியோன் விரைய நீநம்
பால்வரு சேனைக் கெல்லா மிழைத்தியாற் பாடி யென்னுக்
கால்வரை வணங்கிப் போனான் கல்லினாற் கடலைக் கட்டி
நூலுரை வழிசெய் தானுக் கந்நிலை நொய்திற் சொன்னான்.

சுகசாரணர்

இற்றது கால மாக விலங்கையர் வேந்த னேவ
ஒற்றர்வந் தளவு நோக்கிக் குரங்கென வுழல்கின் றுரைப்
பற்றின னென்ப மன்னோ பண்டுதான் பலநாட் செய்த
நற்றவப் பயன்றந் துய்ப்ப முந்துறப் போந்த நம்பி. 1956

கூட்டிய விறற்றிண் கையாற் குரங்குக ளிரங்கக் குத்தி
மீட்டொருவினைசெய்யாமன்மாணையின்கொடியால்வீக்கிப்

பூட்டிய கையர் வாயாற் குருதியே பொழிகின் ருரைக்
காட்டினன் கள்வ ரென்னுக் கருணையங் கடலுங்கண்டான்.

இராமர்

பாம்பிழைப் பள்ளி வள்ளல் பகைஞரென் றுணரான் பல்லோர்
நோம்பிழை செய்த கொல்லோ குரங்கெனவிரங்கிநோக்கித்
தாம்பிழைசெய்தாரேனுந் தஞ்சமென்றடைந்தோர்தம்மை
நாம்பிழை செய்ய லாமோ நலிந்திடல் விடுதி யென்றான்.

வீடணர்

அகனுறப் பொலிந்த வள்ளல் கருணையா லமுதகண்ணன்
நகனிறை கானின் வைகு நம்மினத் தவரு மல்லர்
தகநிறை வில்லா வுள்ளத் திராவணன் றந்த வொற்றர்
சுகனிவ னவனுஞ் சார னென்பதுந் தெரியச் சொன்னான்.

சுகசாரணர்

கல்விக்கண் மிக்கோன் சொல்லக் கருமன நிருதக் கள்வர்
வல்விற்கை வீர மற்றிவ் வானரர் வலியை நோக்கி
வெல்விக்கை யரிதென் றெண்ணி வினையத்தா லெம்மை யெல்லாம்
கொல்விக்க வந்தான் மெய்ம்மை குரங்குநாங் கொள்க வென்றார். 1960

வீடணர் ஒரு மந்திரஞ் செபிக்க, மாயவுருவம் மாறி அவர்கள் அரக்க வடிவுடன் நின்றனர். இராமர் வினவ, தாம் வந்த செயலைக் கூறினர்கள்.

இராமர் கூறுகின்றார்.

எல்லையி லிலங்கைச் செல்வ மிளையவற் கீந்த தன்மை
சொல்லுதிர் மகர வேலை கவிக்குல வீரர் தூர்த்த
கல்லினிற் கடந்த வாறுங் கழறுதிர் காலந் தாழ்த்த
வில்லினர் வந்தா ரென்றும் விளம்புதிர் விளம்ப லாதீர்.

சண்டங்கொள் வேக மாகத் தனிவிடை யுவணந் தாங்கும்
துண்டங்கொள் பிறையான் மோலித் துளவினு னேடுந் தொல்லை
அண்டங்க ளவையுந் தாக்கிக் காப்பினு மறமி லாதான்
கண்டங்கள் பலவுங் காணக் காண்பதுங் கழறு வீரால்.

தாழ்விலாத் தவத்தோர்தையல் தனியொருசிறையிற்ருகச்
சூழ்விலா வஞ்சஞ் சூழ்ந்த தன்னைத்தன் சுற்றத்தோடும்
வாழ்வெலாந் தம்பிகொள்ள வயங்கெரி நரக மென்னும்
வீழ்விலாச் சிறையின்வைப்பெனென்பதும்விளம்புவீரால்.

ஒற்றர் திரும்பிச் சென்றனர்.

இராவணன் மந்திராலோசனை

வார்கு லாமுலை மாதரு மைந்தரும்
ஆரு நீங்க வறிஞரோ டேகினன்
சேர்க வென்னினல் லாலன்று தென்றலும்
சார்கி லாநெடு மந்திர சாலையே. 1964

உணர்வி னெஞ்சின ரூம ருரைப்பொருள்
புணருங் கேள்விய ரல்லர் பொறியிலர்
கொணருங் கூனர் குறளர் கொழுஞ்சுடர்
துணரு நல்விளக் கேந்தினர் சுற்றினர். 1965

மாலியவான் கூறுதல்

கிழிப டக்கடல் கீண்டது மாண்டது
மொழிப டைத்த வலியென மூண்டதோர்
பழிப டைத்த பெரும்பயத் தன்னவன்
வழிகொ டுத்ததென் னுள்ளம் வருத்துமால். 1966

இராவணன்

என்று தாயைப் பயந்தோ னியம்பலும்
தின்று வாயை விழிவழித் தீயுக
நன்று நன்றுநம் மந்திர நன்றெனு
என்றும் வாழ்தி யிளவலோ டேகென்றான். 1967

சுகசாரணர் வந்தனர்.

மனைக்கண் வந்தவன் பாதம் வணங்கினர்
பனைக்கை வன்குரங் கின்படர் சேனையை
நினைக்குந் தோறு மலமரு நெஞ்சினர்
கனைக்குந் தோறு முதிரங்கள் கக்குவார். 1968

எல்லை நோக்கவு மெய்தில தாமெனும்
சொல்லை நோக்கிய மானுடன் றோளெனும்
கல்லை நோக்கிக் கணைகளை நோக்கித்தன்
வில்லை நோக்கவும் வெந்தது வேலையே. 1969

தாரு லாமணி மார்பநின் றம்பியே
தேரு லாவு கதிருந் திரிந்துதன்
பேரு லாவு மளவினும் பெற்றனன்
நீரு லாவு மிலங்கை நெடுந்திரு. 1970

மருந்து தேவ ரருந்திய மாலைவாய்
இருந்த தானவர் தம்மை யியைந்துமுன்
பெருந்திண் மாயற் குணர்த்திய பெற்றியின்
தெரிந்து காட்டின னும்பி சினத்தினன். 1971

சரங்க ளிங்கிவற் றிற்பண்டு தானுடை
வரங்கள் சிந்துவெ னென்றனன் மற்றெமைக்
குரங்க லாமை தெரிந்துமக் கொற்றவன்
இரங்க வுய்ந்தன மீதெங்க ளொற்றென்றார். 1972

இலங்கைகாண் படலம்

மகோதரன் கூறுதல்

ஆயிர வெள்ள மான வரக்கர்தன் தானை யைய
தேயினு மூழி நூறு வேண்டுமாற் சிறுமை யென்னு
நாயினஞ் சீயங் கண்ட தாமென நடப்ப தல்லால்
நீயுருத் தெழுந்த போது குரங்கெதிர்நிற்பதுண்டோ. 1973

வந்தவர் தானை யோடு மறிந்துமாக் கடலில் வீழ்ந்து
சிந்தின ரிரிந்து போகச் சேனையும் யானுஞ் சென்று
வெந்தொழில் புரியு மாறு காணுதி விடையீ கென்னு
இந்திரன் முதுகு கண்ட விராவணற் கேயச் சொன்னன்.

மாலியவான்

பூசற்கு முயன்று நம்பாற் பொருதிரைப் புணரி வேலைத்
தேசத்துக் கிறைவ னென தசரதன் சிறுவன் றன்னை
மாசற்ற சோதி வெள்ளத் துச்சியின் வரம்பிற் றேன்றும்
ஈசற்கு மீசன் வந்தா னென்பதோர் வார்த்தை யிட்டார்.

வாலிமா மகன்வந் தானை வானவர்க் கிறைவ னென்றார்
நீலனை யுலக முண்ணு நெருப்பினுக் கரச னென்றார்
காலனை யொக்குந் தூதன் காலுங்கண் ணுதலு மென்றார்
மேலுமொன் றுரைத்தா ரன்னன் விரிஞ்சனு மினிமே
லென்றார். 1976

ஆயது தெரிந்தோர் தங்க ளச்சமோ வறிவோ யார்க்கும்
சேயவ ளெளிய ளென்னுச் சிந்தையி னிகழ லம்மா
தூயவ ளமிழ்தி னேடுந் தோன்றினு ளென்றுந் தோன்ருத்
தாயவ ளுலகுக் கெல்லா மென்பதுஞ் சாற்று கின்ருர்.

ஆயிர முற்பா தங்க ளீங்குள வடுத்தவென்ருர்
தாயினு முயிர்க்கு நல்லா ளிருந்துழி யறியத் தக்கோன்
ஏயின தூதனெற்றப் பற்றுவிட் டிலங்கைத் தெய்வம்
போயின தென்றுஞ் சொன்ஞர் புகுந்தது போருமென்ருர்.

ஈதெலா முணர்ந்தே ஞயு மென்குல மிறுதி யுற்ற
தாதியி னிவஞ லென்று முன்றன்மே லன்பி ஞலும்
வேதனை நெஞ்சி லெய்த வெம்பியான் விளைவ சொன்னேன்
சீதையை விடுதி யாயிற் றீருமித் தீமை யென்ருன். 1979

இராவணன் அதனைக் கேட்டு திருந்திஞனில்லை.

இலங்கையைக் காண இராமர்
சுவேல மலைமீது ஏறிப் பார்த்தல்

விரிகின்ற கதிர வாகி மிளிர்கின்ற மணிகள் வீசச்
சொரிகின்ற சுடரின்சும்மைவிசும்புறத்தொடருந்தோற்றம்
அரியென்ற வெற்றி யாற்றன் மாருதி யமைத்த தீயால்
எரிகின்ற தாமே காணிக் கொடிநக ரிருந்த தின்னும். 1980

காவலன் பயந்த வீரக் கார்முகக் களிறே கற்ற
தேவர்தந் தச்ச னீலக் காசிஞற் றிருந்தச் செய்த
ஈவது தெரியா வுள்ளத் திராக்கத ரீட்டி வைத்த
பாவபண் டார மன்ன செய்குன்றம் பலவும் பாராய். 1981

இராவணன் கோபுரத் தேறி நிற்றல்

இன்னவா றிலங்கை தன்னை யிளையவற் கிராமன் காட்டிச்
சொன்னவா சொல்லா வண்ண மதிசயந் தோன்றுங் காலை
அன்னமா நகரின் வேந்த னரிக்குலப் பெருமை காண்பான்
சென்னிவான் றடவுஞ் செம்பொற் கோபுரத் தும்பர்
சேர்ந்தான். 1982

இராவணன் தானைகாண் படலம்

இராவணன் இராமரைக் காணுதல்

தோரணத் தின்மணி வாயின் மிசைச்சூல்
நீர ணைத்தமுகி லாமென நின்ருன்

ஆரணத்தையரி யைம்மறை நேடும்
காரணத்தைநிமிர் கண்கொடு கண்டான். 1983

மடித்த வாயினன் வயங்கெரி வந்து
பொடித்தி ழிந்தவிழி யன்னது போழ்தின்
இடித்த வன்றிசை யெரிந்தன நெஞ்சம்
துடித்த கண்ணினே டடத்திரள் தோள்கள். 1984

சாரன் என்பான் இராவணனுக்கு அறிவித்தல்

இங்கி வன்படை யிலங்கையர் மன்னன்
தங்கை யென்னலு முதிர்ந்த சலத்தால்
அங்கை வாள்கொடவ ளாகம் விளங்கும்
கொங்கை நாசிசெவி கொய்து குறைத்தான். 1985

அறக்க ணென்பதொரு கண்ணில ஞகி
நிறக்க ருங்கடலு ணேமியி னின்று
துறக்க மெய்திய வருந்துற வாத
உறக்க மென்பதனை யோட முனிந்தான். 1986

சுக்ரீவன், அங்கதன், அநுமான், நீலன், நளன், கேசரி,
முதலியவர்களை அறிவித்தான்.
இராமர் வீடணனை நோக்கிக் கோபுரத்தின்மீது
நின்றூர்களைக் கூறுக என்றூர்.

நாறு தன்குலக் கிளையெலா நரகத்து நடுவான்
சேறு செய்துவைத் தானும்பர் திலோத்தமை முதலாக்
கூறு மங்கையர் குழாத்திடைக் கோபுரக் குன்றத்
தேறி நின்றவன் புன்றொழி லிராவண னென்றான். 1987

சுக்ரீவன் இராவணன் மீது பாய்தல்

கருதி மற்றொன்று கழறுதன் முனம்விழிக் கனல்கள்
பொருது புக்கனன் மூந்துறச் சூரியன் புதல்வன்
கருதி யன்னமுன் சிவந்தநற் கனியென்று சொல்லப்
பருதி மேற்பண்டு பாய்ந்தவ னெனப் பாய்ந்தான். 1988

மகுடபங்கப் படலம்

இருவருக்கும் நிகழ்ந்த போர்த்திறம்

திருகிய சினத்தொடு செறுத்தெதிர் விழித்தான்
ஒருபது திசைக்கணு மொலித்தவொலி யொப்பத்

தருவன மெனப்புடை தழைத்துயர் தடக்கை
இருபது மெடுத்துரு மிடித்தென வடித்தான். 1989

அடித்தவிரல் பட்டவுட லத்துழி யிரத்தம்
பொடித்தெழ வுறுக்கியெதிர் புக்குடல் பொருத்திக்
கடுத்தவிசை யிற்கடி தெழுந்துகதிர் வேலான்
முடித்தலைகள் பத்தினு முகத்தினு முதைத்தான். 1990

இட்டவனை யிட்டவக ழிற்கடிதி னிட்டான்
தட்டவுய ரத்தினி லுறுந்தசமு கத்தான்
ஒட்டவுட னேயவனும் வந்தவனை யுற்றான்
விட்டிலர் புரண்டிருவ ரோரகழின் வீழ்ந்தார். 1991

விழுந்தனர் சுழன்றனர் வெகுண்டனர் திரிந்தார்
அழுந்தின ரழுந்தில ரகன்றில ரகன்றார்
எழுந்தன ரெழுந்தில ரெதிர்ந்தனர் முதிர்ந்தார்
ஒழிந்தன ரொழிந்தில ருணர்ந்திலர்க ளொன்றும். 1992

வந்தவனை நின்றவன் வலிந்தெதிர் மலைந்தான்
அந்தகனு மஞ்சிட நிலத்திடை யறைந்தான்
எந்திர மெனக்கடி தெடுத்தவ னெறிந்தான்
கந்துக மெனக்கடி தெழுந்தெதிர் கலந்தான். 1993

இராமர் வருந்துதல்

இன்னதோர் தன்மைபெய் துமளவையினெழிலி வண்ணன்
மன்னுயி ரனைய காதற் றுணைவனை வரவு காணான்
உன்னிய கரும மெல்லா முன்னொடு முடிந்த வென்னாத்
தன்னுணர் வழிந்து சிந்தை யலம்வந்து தளர்ந்து
சாய்ந்தான். 1994

ஒன்றிய வுணர்வே யாய வோருயிர்த் துணைவ வுன்னை
இன்றியா னுளனாய் நின்றேன் றியற்றுவதியைவதன்றால்
அன்றியுந் துயரத் திட்டா யமரரை யரக்கர்க் கெல்லாம்
வென்றியுங் கொடுத்தா யென்னைக் கெடுத்ததுன் வெகுளி
யென்றான். 1995

தெய்வவெம் படையுந் தீரா மாயையும் வல்ல தீயோன்
கையிடைப் புக்காய் நீவே றெவ்வண்ணங் கடத்தி காவல்
வையமோ ரேழும் பெற்றால் வாழ்வெனே வாரா யாகின்
உய்வனே தமிய னேனுக் குயிர்தந்த வுதவி யோனே. 1996

ஒன்றாக நினைய வொன்றாய் விளைந்ததென் கருமமந்தோ
என்றாலும் யானே வாழே னீயிலை யெனவுங் கேளேன்
இன்றாய பழியு நிற்க நெடுஞ்செருக் களத்தி னென்னைக்
கொன்றாய்நீ யன்றோ நின்னைக் கொல்லுமேற் குணங்கள்
தீயோன். 1997

இராவணன் மகுடங்களை
சுக்ரீவன் கவர்தல்

கொழுமணி முடிகள்தோறுங் கொண்டனகுழுவின்கூட்டம்
அழுதய ருறுகின் றான்றன் அடித்தல மதனிற் சூட்டித்
தொழுதயல் நாணி நின்றான் றாயவ ரிருவரோடும்
எழுபது வெள்ள யாக்கைக் கோருயி ரெய்திற் றன்றே.

என்புறக் கிழிந்த புண்ணி னிழிபெருங் குருதி யோடும்
புன்புலத் தரக்கன் றன்னைத் தீண்டிய தீமை போக
அன்பனை யமரப் புல்லி மஞ்சன மாட்டி விட்டான்
தன்பெரு நயன மென்னுந் தாமரை சொரியு நீரால். 1999

சுக்ரீவனைப் பார்த்து இராமர் கூறுதல்

கல்லினும் வலிய தோளாய் நின்னையக் கருணை யில்லோன்
கொல்லுதல் செய்தா னைகிற் கொடுமையாற் குற்றம்பேணி
பல்பெரும் பகழி மாரி வேறொடும் பறிய நூறி
வெல்லினுந் தோற்றேன் யானே யல்லனோ விளிந்தி
லாதேன். 2000

பெருமையும் வண்மை தானும் பேரெழி லாண்மை தானும்
ஒருமையி னுணர நோக்கிற் பொறையின தூற்ற மன்றே
அருமையு மடர்ந்து நின்ற பழியையு மயர்ந்தாய் போல
இருமையுங் கெடுத்தா யன்றே யென்னினைந் தென்செய்
தாய்நீ. 2001

சுக்ரீவன்

காட்டிலே கழுகின் வேந்தன் செய்தன காட்ட மாட்டேன்
நாட்டிலே குகனார் செய்த நன்மையை நயக்க மாட்டேன்
கேட்டிலே னின்று கண்டுங் கிளிமொழி மாத ராளை
மீட்டிலேன்றலைகள்பத்துங் கொணர்ந்திலேன் வெறுங்கை
வந்தேன். 2002

வன்பகை நிற்க வெங்கள் வானரத் தொழிலுக் கேற்ற
புன்பகைகாட்டும்யானோபுகழ்ப்பகைக்கொருவன் போலாம்

என்பகை தீர்த்தென் ஞவி யரசொடு மெனக்குத் தந்த
உன்பகை யுனக்குத் தந்தே னுயிர்சுமந் துழலாநின்றேன்.

நூல்வலி காட்டுஞ் சிந்தை நும்பெருந் தூதன் வெம்போர்
வேல்வலி காட்டு வோர்க்கும் வில்வலி காட்டு வோர்க்கும்
வால்வலி காட்டிப் போந்த வளநகர் புக்கு மற்றென
கால்வலி காட்டிப் போந்தேன் கைவலிக் கவதி யுண்டோ.

சுக்ரீவனை வீடணன் வியந்துரைத்தல்

வாங்கிய மணிக ளன்னுன் றலைமிசை மௌலி மேலே
ஓங்கிய வல்ல வோமற் றினியப்பா லுயர்ந்த துண்டோ
நீங்கிவன் சிரத்தின் மேலு முயிரினுஞ் சீரி தம்மா
நீங்கிய புகழை யெல்லாம் வேரொடும் வாங்கி விட்டாய்.

கருமணி கண்டத் தான்றன் சென்னியிற் கறைவெண்
டிங்கள்
பருமணி வண்ணன் மார்பிற் செம்மணி பறித்திட்டாலும்
தருமணி யிமைக்குந் தோளாய் தசமுகன் முடியிற் றைத்த
திருமணி பறித்துத் தந்த வென்றியே சீரி தன்றோ. 2006

சூரியன் அஸ்தமித்தல்

அணிவகுப்புப் படலம்

மானத்தா னல்லற் பட்ட மருமத்தான் வதன மெல்லாம்
கூனற்று மரையிற் றேன்ற வான்றெடுங் கோயில்புக்கான்
பானத்தா னல்லன் றெய்வப் பாடலா னல்ல ஞடற்
றுனத்தானல்லன்மெல்லென்சயனத்தா னுரையுந்தாரான்.

இராவணன் சார்தூலன் என்னும் வாயில் காவலனை அழைத்து இராமருடைய வானர சேனையின் அணிவகுப்பைக் கூறுமாறு வினவினன்.

மேற்கு	வாயிலில்	பதினேழு வெள்ளம் சேனையுடன்	அநுமானும்
வடக்கு	,,	,,	சுக்ரீவனும்
கிழக்கு	,,	,,	நீலனும்
தெற்கு	,,	,,	அங்கதனும்

உள்ளனர்.

இம்பரி னியைந்த காயுங்கனியுங்கொண்டிரண்டு வெள்ளம்
வெம்புவெஞ் சேனைக் கெல்லா முணவுதந் துழலவிட்டான்

உம்பியை வாயில் தோறு நிலைதெரிந் துணரச் சொன்னான்
தம்பியுந் தானு நிற்ப தாயினான் சமைவீ தென்றான். 2008

கும்பன் கூறுதல்

எழுமழுத் தண்டு வேள்வா ளிலைநெடுஞ் சூலம்வென்றி
முழுமுதற் படைக ளேந்தி யிராக்கதர் முனைந்த போது
தொழுதுதம் படைகண் முன்னிட் டோடுவார் சுரர்க
ளென்னின்
விழுமிதுகுரங்குவந்துவெறுங்கையாற்கொள்ளும்வென்றி.

மாலி

புக்கெரி மடுத்திவ் வூரைப் பொடிசெய்து போயி னாற்குச்
சக்கர முண்டோ கையிற் றசமுகன் றலைக ளான
இக்கிரி பத்தின் மௌலி யினமணி யிடந்து கொண்ட
சுக்கிரி வற்கு முண்டோ சூலமும் வாளும் வேலும். 2010

தொடைக்கலந் திராமன் வாளி தோன்றுதன் முன்னந்
தோன்றா
இடைக்கல மருதல் செய்யு முலையினா டன்னை யீந்து
படைக்கல முடைய நாமப் படையிலாப் படையை யீண்ட
அடைக்கலம் புகுவ தல்லா லினிப்புகு மரணு முண்டோ.

கீழ்த்திசை	வாயிலில்	இருநூறு வெள்ளத்துடன்	பிரகஸ்தனும்
தென்திசை	,,	,,	மகோதரனும்
மேல்திசை	,,	,,	இந்திரஜித்தும்
நகரில்	,,	,,	விரூபாக்ஷனும்
வடதிசை	,,	,,	இராவணனும்

அணிவகுத்து நின்றார்கள்.

சூரியன் உதித்தனன்

அங்கதன் தூது படலம்

இராவணன் பால் தூது அநுப்ப இராமர் விழைதல்

தூதுவ னொருவன் றன்னை யிவ்வழி விரைவிற் றூண்டி
மாதினை விடுதி யோவென் றுணர்த்தவே மறுக்கு மாகின்
காதுதல் கடனென் றுள்ளங் கருதிய தறனு மஃதே
நீதியு மஃதே யென்றான் கருணையி னிலய மன்னன். 2012

இலக்குவன்

அரக்கர்கோ னதனைக் கேட்டா னழகிற்றேயாகுமென்றான்
குரக்கினத் தலைவனின்றான் கொற்றவர்க்குற்றதென்றான்
இரக்கம திழுக்க மென்றா னிளையவ னினி நாமம்பு
துரக்குவ தல்லால் வேறோர் சொல்லுண்டோ வென்னச்
சொன்னான். 2013

தேசியைச் சிறையில் வைத்தான் றேவரை யிடுக்கண்
செய்தான்
பூசுரர்க் கலக்கணீந்தான் மன்னுயிர் புடைத்துத் தின்றான்
ஆசையி னளவு மெல்லா வுலகமுந் தானே யாள்வான்
வாசவன் றிருவுங் கொண்டான் வழியலா வழிமேற்
செல்வான். 2014

வாழியாய் நின்னை யன்று வரம்பறு துயரின் வைகச்
சூழ்விலா மாயஞ் செய்துன் றேவியைப் பிரிவு சூழ்ந்தான்
ஏழைபா லிரக்க நோக்கி யொருதனி யிகன்மேற் சென்ற
ஊழிகாண்கிற்கும் வாணாளுந்தையை யுயிர்பண்டுண்டான்.

இராமர்

அயர்த்திலன் முடிவு மஃதே யாயினு மறிஞ ராய்ந்த
நயத்துறை நூலி னீதி நாந்துறந் தமைதனன்றே
புயத்துறை வலிய ரேனும் பொறையொடும் பொருந்தி
வாழ்தல்
சயத்துறையறனுமஃதேயென்றிவை சமையச்சொன்னான்.

மாருதி யின்னுஞ் செல்லின் மற்றிவ னன்றி வந்து
சாருதல் வலியாரில்லை யென்பது சாலுமன்றே
யாரினி யேகத் தக்கா ரங்கத னமையு மொன்னார்
வீரமே விளைப்ப ரேனுந் தீதின்றி மீடல் வல்லான். 2017

இராமர் அங்கதனுக்கு உரைத்தல்

என்னவற் குரைப்ப தென்ன வேந்திழை யாளை விட்டுத்
தன்னுயிர் பெறுத னன்றோ வன்றெனிற் றலைகள்பத்தும்
சின்னபின் னங்கள் செய்யச் செருக்களஞ் சேர்த னன்றோ
சொன்னவை யிரண்டி னொன்றே துணிகெனச் சொல்லி
டென்றான். 2018

பார்மிசை வணங்கிச் சீயம் விண்மிசை படர்வ தேபோல்
வீரன்வெஞ் சிலையிற்கோத்தவம்பென விசையிற்போனான்

மாருதி யல்ல ளாகில் நீயெனு மாற்றம் பெற்றேன்
ஆரினி யென்னோ டொப்பா ரென்பதோ ரின்ப முற்றான்.

அங்கதன் இராவணனைக் கண்டு வியத்தல்

கல்லுண்டு மரமுண் டேழைக்
கடலொன் றுங் கடந்தே மென்னும்
சொல்லுண்டே யிவனை வெல்லத்
தோற்றத்தோர் கூற்றமுண்டே
எல்லுண்ட படைகைக் கொண்டா
லெதிருண்டே யிராமன் கையில்
வில்லுண்டே யுண்டென் றெண்ணி
யாற்றவும் வியந்து நின்றான். 2020

அணிபறித் தழகு செய்யு மணங்கின்மேல் வைத்தவாசைப்
பிணிபறித் தவனை யாவர் முடிப்பவர் படிக்கட்பேழ்வாய்ப்
பணிபறித் தெழுந்த மானக் கலுழனி னிவனைப் பற்றி
மணிபறித் தெழுந்த வெந்தை யாரினும் வலியனென்றான்.

இராவணன்

நின்றவன் றன்னை யன்னா னெருப்பெழ நிமிரப் பார்த்திங்
கின்றிவண் வந்த நீயா ரெய்திய கரும மென்னே
கொன்றிவர் தின்னா முன்னங் கூறுதி தெரிய வென்றான்
வன்றிறல் வாலி சேயும் வாளெயி றிலங்க நக்கான். 2022

அங்கதன்

பூதநா யகனீர் சூழ்ந்த புவிக்குநா யகனப் பூமேல்
சீதைநா யகன்வே றுள்ள தெய்வநா யகனீசெப்பும்
வேதநா யகன்மே னின்ற விதிக்குநா யகன்றான் விட்ட
தூதன்யான் பணித்த மாற்றஞ் சொல்லிய வந்தே
னென்றான். 2023

இராவணன்

அரன்கொலா மரிகொலாமற் றயன்கொலா மென்பாரன்றிக்
குரங்கெலாங் கூட்டி வேலைக் குட்டத்தைச் சேது கட்டி
இரங்குவா னாகி யின்ன மறிதியென் றுன்னை யேவும்
நரன்கொலா முலக நாத னென்றுகொண் டரக்கனக்கான்.

கங்கையும் பிறையுஞ் சூடுங் கண்ணுதல் கரத்து நேமி
சங்கமுந் தரித்த மான்மற் றிந்நகர் தன்னைச் சாரார்

அங்கவர் நிலைமை நிற்க மனிதனுக் காக வஞ்சா
திங்குவந் திதனைச் சொன்ன தூதநீ யாவ னென்றான்.

அங்கதன்

இந்திரன்செம்மல்பண்டோ ரிராவண னென்பான் றன்னைச்
சுந்தரத் தோள்க ளோடும் வாலிடைத் தூங்கச் சுற்றிச்
சிந்துரக் கிரிகள் தாவித் திரிந்தனன் றேவ ருண்ண
மந்திரக் கிரியால் வேலை கலக்கினான் மைந்த னென்றான்.

இராவணன்

தாதையைக் கொன்றான்பின்னே தலைசுமந்திருகைநாற்றிப்
பேதைய னென்ன வாழ்ந்தா யென்பதோர் பிழையுந்
தீர்ந்தாய்
சீதையைப் பெற்றே னுன்னைச்சிறுவனு மாகப்பெற்றேன்
ஏதெனக் கரியதென்றா னிறுதிநாற் கெல்லை கண்டான்.

அந்நர ரின்று நாளை யழிவதற் கைய மில்லை
உன்னர சுனக்குத் தந்தே னூதி யூழி காலம்
பொன்னரி சுமந்த பீடத் திமையவர் போற்றி செய்ய
மன்னவ னாகி யானே சூட்டுவன் மகுட மென்றான். 2028

அங்கதன்

அங்கத னதனைக் கேளா வங்கையோ டங்கை தாக்கித்
துங்கவன் தோளு மார்பு மிலங்கையுந் துளங்க நக்கான்
இங்குநின் றார்கட் கெல்லா மிறுதியே யென்ப துன்னி
நுங்கள்பா னின்று மெம்பாற் போந்தன னும்பியென்றான்.

வாய்வரத் தக்க சொல்லி யென்னையுன் வசஞ்செய்வாயேல்
ஆய்தரத் தக்கதன்றோ தூதுவந் தரச தாள்கை
நீதரக்கொள்வேன்யானே யிதற்கினி நிகர்வே றெண்ணின்
நாய்தரக் கொள்ளுஞ் சீய நல்லர செனறு நக்கான். 2030

நீ வந்த காரணம் யாது என இராவணன் வினவ
அங்கதன் விடை பகர்தல்

கூவியின் றென்னை நீபோய்த் தன்குல முழுதுங்கொல்லும்
பாவியை யமருக் கஞ்சி யரண்புக்குப் பதுங்கி னானைத்
தேவியைவிடுகவன்றேற்செருக்களத்தெதிர்ந்து தன்கண்
ஆவியை விடுக வென்றா னருளினம் விடுகி லாதான்.2031

பருந்துணைப் பாட்டி யாக்கை படுத்தநாள் படைஞ ரோடும்
மருந்தினு மினிய மாமன் மடிந்தநாள் வனத்துள் வைகி
இருந்துழி வந்த தங்கை இருஞ்செவி முலையு மூக்கும்
அரிந்தநாள் வந்திலா தானினிச்செய்யு மாண்மை யுண்டோ.

என்றிவை யியம்பி வாவென் றேவின னென்னையெண்ணி
ஒன்றுனக் குறுவ துன்னித் துணிந்துரையுறுதிபார்க்கின்
துன்றிருங் குழலை விட்டுத் தொழுதுவாழ் சுற்றத்தோடும்
பொன்றுதி யாயினென்பின் வாயிலிற் புறப்ப டென்ருன்.

இராவணன் அங்கதனைப் பற்றுமாறு கூறுதல்

சொற்ற வார்த்தையைக் கேட்டலுந் தொல்லுயிர்
முற்று முண்பது போலு முனிவினன்
பற்று மின்கடி தின்னெடும் பார்மிசை
எற்று மின்னென நால்வரை யேவினன். 2034

ஏவி னன்பிடித் தாரை யெடுத்தெழத்
தாவி னனவர் தந்தலை போயறக்
கூவி னனவன் கோபுர வாயிலில்
தூவி னன்றுகைத் தானிவை சொல்லினன். 2035

ஏமஞ் சார வெளியவர் யாவிரும்
தூமங் கால்வன வீரன் சுடுசரம்
வேமின் போல்வன வீழ்ந்தவன் முன்னமே
போமின் போமின் புறத்தென்று போயினன். 2036

அங்கதன் இராமரிடம் வந்து கூறுதல்

உற்ற போதவ னுள்ளக் கருத்தெலாம்
கொற்ற வீரனு ணர்த்தென்று கூறலும்
முற்ற வோதியென் மூர்க்கன் முடித்தலை
அற்ற போதன்றி யாசை யருனென்ருன். 2037

முதற் போர்ப் படலம்

வானர சேனைகளுக்குக் கட்டளை யிடுதல்

இடுமின் பன்மர மெங்கு மியங்கறத்
தடுமின் போர்க்கு வருகெனச் சாற்றுமின்
கடுமி னிப்பொழு தேகதிர் மீச்செலாக்
கொடிம திற்குடு மித்தலைக் கொள்கென்ருன். 2038

வானரங்களின் செயல்

ஏய வெள்ள மெழுபது மெண்கடல்
ஆய வெள்ளத் தகழியைத் தூர்த்தலும்
தூய வெள்ளந் துணைசெய்வ தாமென
வாயி லூடுபுக் கூரை வளைந்ததே. 2039

இலங்கையினின்றும் சேனை புறப்படல்

ஆய காலை யனைத்துல குந்தரும்
நாய கன்முக ஞலு நடந்தென
மேய சேனை விரிகடல் விண்குலாம்
வாயி லூடும் புறப்பட்டு வந்ததே. 2040

சுக்ரீவன் போர் புரிதல்

சாய்ந்த தானைத் தளர்வுஞ் சலித்தெதிர்
பாய்ந்த தானைப் பெருமையும் பார்த்துறக்
காய்ந்த நெஞ்சன் கனல்சொரி கண்ணினன்
ஏய்ந்த தங்கொர் மராமர மேந்தினன். 2041

கற்று ரந்த களம்பட வஞ்சகர்
இற்று லந்து முடிந்தவ ரெண்ணிலர்
விற்று ரந்தன வெங்கணை யாலுடல்
அற்று லந்த குரங்கு மனந்தமே. 2042

வஜ்ஜிரமுஷ்டி என்ற அரக்கனை சுக்ரீவன் போர் செய்து கொன்றனன்.

அரக்க சேனதிபதியாகிய பிரகத்தனுக்கும் வானர சேனதிபதியாகிய நீலனுக்கும் நிகழ்ந்த போர்த்திறம்.

வாய் மடித்தழல் கண்டொறும் வந்துகப்
போய டுத்தலு நீலன் புகைந்தெதிர்
தாய டுத்தவன் றன்கையிற் றண்டொடும்
மீயெ டுத்து விசும்புற வீசினன். 2043

அம்ப ரத்தெறிந் தார்ப்ப வரக்கனும்
இம்ப ருற்றெறி யின்றிரு மைந்தன்மேல்
செம்பு னற்பொழி யக்கதை சேர்த்தினன்
உம்பர் தத்தம துள்ள நடுங்கவே. 2044

அடித்த லோடு மதற்கிளை யாதவன்
எடுத்த தண்டம் பறித்தெறி யாவிகல்

முடித்து மென்றொரு கைகொடு மோதினன்
குடித்து மிழ்ந்தெனக் கக்கக் குருதியே. 2045

குருதி வாய்நின் றொழுகவுங் கூசலன்
நிருத னீல னெடுவரை மார்பினில்
கருத லாதமுன் குத்தலுங் கைத்தவர்
பொருத பூசல் புகலவொண் ணாதே. 2046

மற்று நீலன ரக்கனை மாடுறச்
சுற்றி வால்கொடு தோளினு மார்பினும்
நெற்றி மேலுநெ டுங்கர நீட்டலும்
இற்று மால்வரை யென்ன விழுந்தனன். 2047

பிரகத்தன் மாண்டனன்

தெற்கு வாயிலில் சுபாரிசனை அங்கதன் கொல்லுதல்

தெற்கு வாயிற் சென்ற நிசாசரர்
மற்கு லாவு வயப்புயத் தங்கதன்
நிற்க வேயெதிர் நின்றில ரோடினர்
பொற்கு லாவு சுபாரிசன் பொன்றினன். 2048

அநுமன் போர்

நூற்றி ரண்டெனும் வெள்ளமு நோன்கழல்
ஆற்றல் சால்துன் முகனுமங் கார்த்தெழ
மேற்றிண் வாயிலின் மேவினர் வீடினர்
காற்றின் மாமகன் கையெனுங் காலனால் 2049

தூதர் ஓடி இராவணனைத் தொழுது கீழை வாயிலில் சேனாதிபதி பிரகத்தனும், தெற்கு வாயிலில் சுபாரிசனும், வடக்கு வாயிலில் வஜ்ஜிரமுஷ்டியும், மேற்கு வாயிலில் துன் முகனும் சேனைகளும் மாண்டன என்று அறிவித்தனர்.

இராவணன் கூறுதல்

கட்ட திந்திரன் வாழ்வைக் கடைமுறை
பட்ட திங்கொர் குரங்கு படுக்கவென்
றிட்ட வெஞ்சொ லெரிபுகு நெய்யெனச்
சுட்ட தென்றனி நெஞ்சினைச் சுட்டதால். 2050

இராவணன் போருக்குப் புறப்படுதல்

ஆயி ரம்பரி பூண்ட ததிர்குரல்
மாயி ருங்கடல் போன்றது வானவர்

தேய மெங்குந் திரிந்தது திண்டிறல்
சாய விந்திர னேபண்டு தந்தது. 2051

தூதர் இராமருக்கு அறிவித்தல்

ஓதுறு கருங்கடற் கொத்த தானையான்
தீதுறு சிறுதொழி லரக்கன் சீற்றத்தான்
போதுறு பெருங்களம் புகுந்து ளானெனத்
தூதுவர் நாயகற் கறியச் சொல்லினர். 2052

பூவுயர் மீனெலாம் பூத்த வானிகர்
மேவிருங் கவசமிட் டிறுக வீக்கினன்
தேவியைத் திருமறு மார்பிற் றீர்ந்தனன்
நோவில ளென்பது நோக்கினன் கொலோ. 2053

ஊழியி னுருத்திர னுருவு கொண்டுதான்
ஏழுய ருலகமும் வீக்கின் றனென
வாழிய வரிசிலைத் தம்பி மாப்படைக்
கூழையி னெற்றிநின் றனைக் கூடினன். 2054

இராவணன் போர்

அவ்வழி யிராவண னமர ரஞ்சத்தன்
வெவ்விழி நெருப்புக வில்லி னணினைச்
செவ்வழிக் கோதையிற் றெறிப்பச் சிந்தின
எவ்வழி மருங்கினு மிரிந்த வானரம். 2055

உருமிடித் துழியுலைங் தொளிக்கு நாகமொத்
திரியலுற் றனசில விறந்த வாற்சில
வெருவலுற் றனசில விம்ம லுற்றன
பொருகளத் துயிரொடும் புரண்டு போஞ்சில. 2056

பொரக்கரு நிறநெடு விசும்பு புண்பட
இரக்கமி லிராவண னெறிந்த நாணினல்
குரக்கின முற்றதென் கூறிற் றன்குலத்
தரக்கரு மனையதோ ரச்ச மெய்தினர். 2057

வீடண னொருவனு மிளைய வீரனும்
கோடணை குரங்கினுக் கரசுங் கொள்கையான்
நாடினர் நின்றனர் நாலு திக்கினும்
ஓடின ரல்லவ ரொளித்த தும்பரே. 2058

இராவண சுக்ரீவ யுத்தம்

ஏந்திய சிகர மொன்றங் கிந்திரன் குலிச மென்னக்
காந்திய துருமின் விட்டான் கவிக்குலத் தரச னக்கல்
நீந்தரு நெருப்புச் சிந்தி நிமிர்தலு நிருதர்க் கெல்லாம்
வேந்தனும் பகழி யொன்றால்வெண்டுகளாக்கிவீழ்த்தான்.

இராவணன் அம்பினல் சுக்ரீவன் மயங்குதல்

அநும இராவண யுத்தம்

பரிதிசேய் தேரு முன்னம்
பருவலி யரக்கர் பல்போர்
புரிதியோ வென்னே டென்னப்
புகையெழ விழித்துப் பொங்கி
வருதியோ வாவென் பான்மேன்
மலையொன்று நிலையின் வாங்கிச்
சுருதியே யனைய தோளால்
வீசினன் காலின் றேன்றல். 2060

இராவணன் கணையால் மலை துகள் பட்டது

யாரிது செய்ய கிற்பா ரென்றுகொண் டிமையோ ரேத்த
மாருதி பின்னு மாங்கோர் மராமரங் கையின் வாங்கி
வேரொடுஞ் சுழற்றிவிட்டான் விடுதலு மிலங்கைவேந்தன்
சாரதி தலையைத் தள்ளிச் சென்றது நிருதர் சாய. 2061

மாறியோர் பாக னேற மறிதிரைப் பரவை பின்னும்
சீறிய தனைய ஞங்கோர் செறிகழ லரக்கன் றெய்வ
நூறுகோ ஞெய்தி னெய்தா னவையுட னுழைதலோடும்
ஆறுபோற் சோரி சோர வநுமனு மலக்க ணுற்றான்.

இலக்குமணன் போர்

கலக்கிய வரக்கன் வில்லின் கல்வியின் கவிக ளூற்ற
அலக்கணுந் தலைவர் செய்த தன்மையுமமையக் கண்டான்
இலக்குவ னென்கை வாளிக் கிலக்கிவ னிவனே யின்று
விலக்குவ னென்ன வந்தான் வில்லுடை மேரு வென்ன.

தலையெலா மற்ற மற்ற தாளெலா மற்ற தோளாம்
மலையெலா மற்ற பொற்றூர் மார்பெலா மற்ற சூலத்
திலையெலா மற்ற வீர ரெயிறெலா மற்ற கொற்றச்
சிலையெலா மற்ற கற்ற செருவெலா மற்ற சிந்தி. 2064

அநும இராவண முட்டி யுத்தம்

என்றோள்வலி யதனாலெடுத் தியானெற்றவு மிறவா
நின்றாயெனி னீபின்னெனை நின்கைத்தல நிரையால்
குன்றேபுரை தோளாய்மிடல் கொடுகுத்துதி குத்தப்
பொன்றேனெனினின்னோடெதிர்பொருகின்றிலெ
னென்றான்.

பொருகைத்தல மிருபத்துள புகழுஞ்சிறி துளதால்
வருகைத்தல மதவெங்கரி வலிகெட்டன வருவாய்
இருகைத்தல முடையாயெதி ரிவைசொற்றனை யினிமேல்
தருகைக்குரி யதொர்கொற்றமெ னமர்தக்கது மன்றால்.

இராவணன் மார்பில் அநுமன் குத்துதல்

வீரத்திற மிதுநன்றென வியவாமிக விளியாத்
தேரிற்கடி திவராமுழு விழியிற்பொறி சிதறு
ஆரத்தொடு கவசத்துடல் பொடிபட்டுக வவன்மா
மார்பிற்கடி தெதிர்குத்தினன் வயிரக்கர மதனால். 2067

ஆர்த்தார்விசும் புறைவோர்நெடி தநுமான் மிசை யதிகம்
தூர்த்தார்நறு முழுமென்மல ரிசையாசிகள் சொன்னார்
வேர்த்தார்நிரு தர்கள்வானவர் வியந்தாரவன் விசயம்
தீர்த்தானென வுவந்தாடினர் முழுமெய்ம்மயிர் சிலிர்த்தார்.

இராவணன் கூறுதல்

வலியென்பது முளதேயது நின்பாலது மறவோய்
அலியென்பன புறநின்றன வுலகேழினு மடைத்தாய்
சலியென்றெதிர் மலரோனுரை தந்தாலிறை சலியேன்
மெலிவென்பதுமுணர்ந்தேனெனைவென்றாயினிவிறலோய்.

ஒன்றுண்டினி யுரைநேர்குவ துன்மார்பினென் னொருகைக்
குன்றின்மிசை கடைநாள்விழு முருமேறெனக் குளித்தால்
நின்றிங்கிலை தருவாயெனி னீயல்லவ ருளரோ
இன்றும்முளை யென்றும்முளை யிலையோர்பகை யென்றான்.

அநுமன் மார்பில் இராவணன் குத்துதல்

உறுக்கித்தனியெதிர்நின்றவனுரத்திற்றன தொளிர்பல்
இறுக்கிப்பல நெடுவாய்மடித் தெரிகண்டொறு மிழிய
முறுக்கிப்பொறி நிமிரப்பல விரன்மூரிய திசையக்
குறுக்கிக்கர நெடுந்தோள்புற நிமிரக்கொடு குத்த. 2071

மாருதி சலித்தல்

சலித்த காலையி னிமையவ ருலகெலாஞ் சலித்த
சலித்த தாலறஞ் சலித்தது மெய்ம்மொழி தகவும்
சலித்த தன்றியும் புகழொடு சுருதியுஞ் சலித்த
சலித்த நீதியுஞ் சலித்தன கருணையுந் தவமும். 2072

இராவணன் போர்

இறுத்த தின்றில கென்பதோர் திமிலம்வந் தெய்தக்
கறுத்த சிந்தைய னிராவண னனையது கண்டான்
ஒறுத்து வானவர் புகழுண்ட பாரவில் லுளைய
அறுத்து நீக்கின னுயிர கோடிமே லம்பால். 2073

நீல னம்பொடு சென்றில னின்றில னிலத்தான்
கால னூர்வயத் தடைந்தில னேவுண்ட கயவன்
ஆல மன்னதோர் சரத்தொடு மங்கத னயிர்த்தான்
சூல மன்னதோர் வாளியாற் சோம்பினன் சாம்பன். 2074

நூறு கோடிய நூறுநூ றுயிர கோடி
வேறு வேறெய்த சரமெலாஞ் சரங்களால் விலக்கி
ஏறு சேவகன் றம்பியவ் விராவண னெடுத்த
ஆறு நாலுவெஞ் சிலையையுங் கணைகளா லறுத்தான்.

இமையவரும் இருடியரும் ஆர்த்தனர்.

இராவணன் இலக்குவனைப் புகழ்தல்

நன்று போர்வலி நன்றுபோ ராள்வலி வீரம்
நன்று நோக்கமு நன்றுகைக் கடுமையு நன்று
நன்று கல்வியு நன்றுநின் றிண்மையு நலனும்
என்று கைம்மறித் திராவண னொருவனீ யென்றான். 2076

கானி னன்றிகற் கரன்படை படுத்தவக் கரியோன்
தானு மிந்திரன் றன்னையோர் தனுவலந் தன்னால்
வானின் வென்றவென் மதலையும் வரிசிலை பிடித்த
யானு மல்லவர் யாருனக் கெதிரென்று மிசைத்தான்.

இராவணன் வேல் விடுதல்

வில்லி னாலிவன் வெலப்படா னெனச்சினம் வீங்கக்
கொல்லு நாளுமன் றிதுவெனச் சிந்தையிற் கொண்டான்
பல்லி னாலித ழதுக்கினன் பருவலிக் கரத்தால்
எல்லினான்முகன்கொடுத்ததோர் வேலெடுத் தெறிந்தான்.

இலக்குமணர் மூர்ச்சித்தல்

அஞ்சி னானல னயன்றந்த வேலினு மாவி
துஞ்சி னானலன் றுளங்கினா னென்பது துணியா
எஞ்சில் யாக்கையை யெடுத்துக்கொண் டகல்வெனென்,
றெண்ணி
நஞ்சி னாற்செய்த மனத்தினான் பாரின்மே னடந்தான். 2079

எடுக்க லுற்றவன் மேனியை யேந்துதற் கேற்ற
மிடுக்கி லாமையி னிராவணன் வெய்துயிர்ப் புற்றான்
இடுக்கி னின்றவம் மாருதி புகுந்தெடுத் தேந்தித்
தடுக்க லாததோர் விசையினி னெழுந்தயல் சார்ந்தான்.

தொகவொ ருங்கிய ஞானமென் றெவரினுந் தூயான்
தகவு கொண்டதோ ரன்பெனுந் தனித்துணை யல்லால்
அகவு காதலா லாண்டகை யென்னினு மநுமன்
மகவு கொண்டுபோய் மரம்புகு மந்தியை நிகர்த்தான். 2081

மாருதி இராமரை வேண்டுதல்

நூறு பத்துடை நொறில்பரித் தேரின்மே னுன்முன்
மாறில் போரரக் கன்பொர நிலத்துநீ மலைதல்
வேறு காட்டுமோர் வெறுமையை மெல்லிய வெனினும்
ஏறு நீயைய வென்னுடைத் தோளின்மே லென்றான்.

நன்று நன்றெனா நாயக னேறின னமைக்
குன்றின் மேலிவர் கோளரி யேறெனக் கூறி
அன்று வானவ ராசிக ளியம்பின ரீன்ற
கன்று தாங்கிய தாயென மாருதி களித்தான். 2083

ஆசி சொல்லின ரருந்தவ ரறமெனுந் தெய்வம்
காசி னன்னெடுங் கரமெடுத் தாடிடக் கயிலை
ஈச னான்முக னென்றிவர் முதலிய விமையோர்
பூசல் காணிய வந்தன ரந்தரம் புகுந்தார். 2084

இராமர் வில் நாணொலி

அண்ண லஞ்சன வண்ணனு மமர்குறித் தமர்ந்தான்
எண்ண ரும்பெருந் தனிவலிச் சிலையைநா ணெறிந்தான்
மண்ணும் வானமு மற்றைய பிறவுந்தன் வாய்ப்பெய்
துண்ணுங் காலத்தவ் வுருத்திர னார்ப்பொத்த தோதை.

ஆவி சென்றிலர் நின்றில ரரக்கரோ டியக்கர்
நாவு லர்ந்தனர் கலங்கினர் விலங்கினர் நடுங்கிக்
கோவை நின்ற பேரண்டமுங் குலைந்தன குலையாத்
தேவ தேவனும் விரிஞ்சனுஞ் சிரதலங் குலைந்தார். 2086

மீனு டைக்கருங் கடல்புரை யிராக்கதர் விட்ட
ஊனு டைப்படை யிராவணன் அம்பொடு மோடி
வான ரக்கடல் படாவகை வாளியான் மாற்றித்
தானு டைச்சரத் தாலவர் தலைமலை தடிந்தான். 2087

இம்ப ரானெனின் விசும்பின னொருமோ ரிமைப்பின்
தும்பை சூடிய விராவணன் முகந்தொறுந் தோன்றும்
வெம்பு வஞ்சகர் விழிதொறுந் திரியுமே னின்றான்
அம்பின் முன்செலு மனத்திற்கு முன்செலு மநுமன். 2088

ஒன்று நூற்றினோ டாயிரங் கொடுந்தலை யுருட்டிச்
சென்று தீர்வன வெனைப்பல கோடியுஞ் சிந்தி
நின்றதேரொடு மிராவண னொருவனு நிற்பக்
கொன்று வீழ்த்தின திராகவன் சரமெனுங் கூற்றம். 2089

முரண்டொ குஞ்சிலை யிமைப்பினின் முறையுற வாங்கிப்
புரண்டுதோளுறப்பொலன்கொணண் வலம்படப்போக்கித்
திரண்ட வாளிகள் சேவகன் மரகதச் சிகரத்
திரண்டு தோளினு மிரண்டுபுக் கழுந்திடவெய்தான். 2090

இராமர் இராவணனுடைய வில், தேர், கவசம்
இவைகளை அழித்தனர்.

இராவணன் மகுட பங்கம்

மின்னும் பன்மணி மவுலிமே லொருகணை விட்டான்
அன்ன காய்கதி ரிரவிமேற் பாய்ந்தபோ ரநுமன்
என்ன லாயதோர் விசையினிற் சென்றவன் றலையில்
பொன்னின் மாமணி மகுடத்தைப்புணரியில்வீழ்த்த. 2091

சொல்லு மத்தனை யளவையின் மணிமுடி துறந்தான்
எல்லி மைத்தெழு மதியமு ஞாயிறு மிழந்த
அல்லு மொத்தனன் பகலுமொத் தனனமர் பொருமேல்
வெல்லு மத்தனை யல்லது தோற்றிலா விறலோன். 2092

அறங்க டந்தவர் செயலிதென் றுலகெலா மார்ப்ப
நிறங்க ரிந்திட நிலம்விரல் கிளைத்திட நின்றான்

இறங்கு கண்ணின னெல்லழி முகத்தினன் றலையன்
வெறுங்கை நாற்றினன் விழுதுடை யாலன்ன மெய்யன்.

இராமர் இராவணனுக்கு அறமுரைத்தல்

நின்ற வன்னிலை நோக்கிய நெடுந்தகை யிவனைக்
கொன்ற லுன்னிலன் வெறுங்கைநின் றானெனக்கொள்ளா
இன்ற விந்தது போலுமுன் றீமையென் றிசையோ
டொன்ற வந்தன வாசக மினையன வுரைத்தான். 2094

அறத்தி னாலன்றி யமரர்க்கு மருஞ்சமங் கடத்தல்
மறத்தி னாலரி தென்பது மனத்திடை வலித்தி
பறத்தி நின்னெடும் பதிபுகக் கிளையொடும் பாவி
இறத்தி யானது நினைக்கிலென் றனிமைகண் டிரங்கி. 2095

சிறையில் வைத்தவள் தன்னைவிட் டுலகினிற் றேவர்
முறையில் வைத்துநின் றம்பியை யிராக்கதர் முதற்பேர்
இறையில் வைத்தவற் கேவல்செய் திருத்தியே லின்னும்
தறையில் வைக்கிலெ னின்றலை வாளியிற் றடிந்து. 2096

ஆளை யாவுனக் கமைந்தன மாருத மறைந்த
பூளை யாயின கண்டனை யின்றுபோய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கின னாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசலை நாடுடை வள்ளல். 2097

கும்பகர்ணன் வதைப் படலம்

இராவணன் நகர் புகுதல்

வாரணம் பொருத மார்பும் வரையினை யெடுத்த தோளும்
நாரத முனிவற் கேற்ப நயம்பட வுரைத்த நாவும்
தாரணி மவுலி பத்துஞ் சங்கரன் கொடுத்த வாளும்
வீரமுங் களத்தே போட்டு வெறுங்கையோ டிலங்கை
புக்கான். 2098

கிடந்தபோர்வலியார்மாட்டேகெடாதவானவரையெல்லாம்
கடந்துபோ யுலக மூன்றுங் காக்கின்ற காவ லாளன்
தொடர்ந்துபோம் பழியி னோடுந் தூக்கிய கரங்க ளோடும்
நடந்துபோய் நகரம் புக்கா னருக்கனு நாகஞ் சேர்ந்தான்.

மாதிர மெவையு நோக்கான் வளநகர் நோக்கான் வந்த
காதலர் தம்மை நோக்கான் கடற்பெருஞ் சேனைநோக்கான்

தாதவிழ் கூந்தன் மாதர் தனித்தனி நோக்கத் தானப்
பூதல மென்னு நங்கை தன்னையே நோக்கிப் புக்கான். 2100

சேனைகளைக் கொணருமாறு தூதரை அநுப்புதல்.

மனகதி வாயு வேகன் மருத்தன்மா மேக னென்றில்
வினையறி தொழிலர் முன்னு வாயிலர் விரவி னுரை
நினைவதன் முன்ன நீர்போய் நெடுந்திசை யெட்டு நீந்தி
கனைகழ லரக்கர் தானை கொணருதிர் கடிதி னென்றான்.

வானகு மண்ணு மெல்லா நடுநெடு வயிரத் தோளான்
நானகு பகைஞ ரெல்லா நகுவரென் றதற்கு நாணன்
வேனகு நெடுங்கட் செவ்வாய் மெல்லியன் மிதிலை வந்த
சானகி நகுவ ளென்றே நாணத்தாற் சாம்பு கின்றான்.

மாலியவான் வருதல்

இருந்தவ னிலங்கை வேந்தனியற்கையையெய்த நோக்கிப்
பொருந்தவந் துற்ற போரிற் றோற்றனன் போலுமென்னு
வருந்தினை மனமுந் தோளும் வாடினை நாளும் வாடாப்
பெருந்தவ முடைய வைய வென்னுற்றபெற்றி யென்றான்.

இராவணன் கூறுதல்

முளையமை திங்கள் சூடு முக்கணன் முதல்வ னாகக்
கிளையமை புவன மூன்றும் வந்துடன் கிடைத்த வேனும்
வளையமை வரிவில் வாளி மெய்யுற வழங்கு மாயின்
இளையவன் றனக்கு மாற்றா தென்பெருஞ் சேனை நம்ப.

போயபி னவன்கை வாளி யுலகெலாம் புகுவ தல்லால்
ஓயுமென் றுரைக்க லாமோ வூழிசென் றாலு மூழித்
தீயையுந் தீக்குஞ்செல்லுந்திசையையுந் தீக்குஞ் சொல்லும்
வாயையுந் தீக்கு முன்னின் மனத்தையுந் தீக்கு மன்னே.

மேருவை யுருவு மென்றால் விண்கடந் தேகு மென்றால்
பாரினைப் பிளக்கு மென்றாற் கடல்களைப் பருகு மென்றால்
ஆருமே யவற்றி னாற்ற லாற்றுமே லநந்த கோடி
மேருவும் விண்ணு மண்ணுங் கடல்களும் வேண்டுமன்றே.

இந்திரன் குலிச வேலு மீசன்கை யிலைமூன் றென்னு
மந்திர வயிலு மாயோன் வளையெஃகின் வரவுங் கண்டேன்
அந்தர நீளி தம்மா தாபத னம்புக் காற்றா
நொந்தனர் யான லாதா ராரவை நோக்க கிற்பார். 2107

பேயிருங் கணங்க ளோடு சுடுகளத் துறையும் பெற்றி
ஏயவன் ருேள்க ளெட்டு மிந்திர னிரண்டு தோளும்
மாயிரு ஞால முற்றும் வயிற்றிடை வைத்த மாயன்
ஆயிரந் தோளு மன்னுன் விரலொன்றி னுற்ற லாற்ரு.

சீர்த்தவீ ரியரா யுள்ளார் செங்கண்மா லெனினும் யானக்
கார்த்தவீ ரியனை நேர்வா ருளரெனக் கருத லாற்றேன்
பார்த்தபோ தவனு மற்றத் தாபதன் றம்பி பாதத்
தார்த்ததோர் துகளுக் கொவ்வா னுரவற் காற்ற கிற்பார்.

குடக்கதோ குணக்க தேயோ கோணத்தின் பால தேயோ
தடத்தபே ருலகத் தேயோ விசும்பதோ வெங்குந் தானே
வடக்கதோ தெற்க தோவென் றுணர்ந்திலென் மனிதன் வல்வில்
இடத்ததோ வலத்த தோவென் றுணர்ந்திலேன் யானு மின்னும். 2110

ஏற்றமொன் றில்லை யென்ப தேழைமைப் பால தன்றே
ஆற்றல்சால் கலுழ னேதா னுற்றுமே யமரி னுற்றல்
காற்றையே மேற்கொண் டானே கனலையே கடாவி னானே
கூற்றையேயூர்கின்ருனேகுரங்கின்மேற்கொண்டுநின்ருன்.

போயினித் தெரிவதென்னேபொறையினு லுலகம்போலும்
வேயெனத் தகைய தோளி யிராகவன் மேனி நோக்கித்
தீயெனக் கொடிய வீரச் சேவகச் செய்கை கண்டால்
நாயெனத் தகுது மன்றே காமனு நாமு மெல்லாம். 2112

வாசவன் மாயன் மற்றை மலருளோன் மழுவா ளங்கை
ஈசனென் றினைய தன்மை யிளிவரு மிவராலன்றி
நாசம்வந் துற்ற போது நல்லதோர் பகையைப் பெற்றேன்
பூசல்வண் டுறையுந் தாரா யிதுவிங்குப் புகுந்த தென்ருன்.

மாலியவான் அறமுரைத்தல்

முன்னுரைத் தேனை வாளா முனிந்தனை முனியா வும்பி
இன்னுரைப்பொருளுங்கேளாயேதுமுண்டெனினுமோரார்
நின்னுரைக் குரைவே றுண்டோ நெருப்புரைத் தாலு நீண்ட
மின்னுரைத் தாலு மொவ்வா விளங்கொளி யலங்கல் வேலாய். 2114

மகோதரன் வருதல்

ஆயவ னுரைத்த லோடு மப்புறத் திருந்தா னன்ற
மாயைகள் பலவும் வல்ல மகோதரன் கடிதின் வந்து
தீயெழ நோக்கி யென்னிச் சிறுமைநீ செப்பிற் றென்னை
ஓயுறு சிந்தை யானுக் குருதபே ருறுதி சொன்னான். 2115

திரிபுர மெரிய வாங்கோர் தனிச்சரந் துரந்த செல்வன்
ஒருவனிப் புவனமூன்றுமோரடி யொடுக்கிக் கொண்டோன்
பொருதுனக்குடைந்துபோனார்மானுடர்பொருத போர்க்கு
வெருவுதி போலு மானக் கயிலையை வெருவல் கண்டாய்.

வென்றவர் தோற்பர் தோற்றோர் வெல்குவ ரெவர்க்கு மேலாய்
நின்றவர் தாழ்வர் தாழ்ந்தோ ருயர்குவர் நெறியு மஃதே
என்றன ரறிஞ ரன்றே யாற்றலுக் கெல்லை யுண்டோ
புன்றவ ரிருவர் போரைப் புகழ்தியோ புகழ்க்கு மேலோய்.

தேவியை விடுதி யாயிற் றீருமுன் றீமை யன்றேல்
ஆவியை விடுத லன்றி யல்லதொன் றுவ துண்டோ
தாவரும் பெருமை யம்மா நீயினித் தாழ்ந்த தென்னே
காவல விடுதி யின்றிக் கையறு கவலை நொய்தின். 2118

முன்னுனக் கிறைவ ரான மூவருந் தோற்றார் தேவர்
பின்னுனக் கேவல் செய்ய வுலகொரு மூன்றும் பெற்றாய்
புன்னுனைப் பனிநீ ரன்ன மனிதரைப் பொருளென் றுன்னி
என்னுனக் கிளைய கும்ப கருணனை யிகழ்ந்த தெந்தாய்.

இராவணன் கும்பகர்ணனை அழைத்துவரச் சொல்லுதல்

நன்றிது கரும மென்னா நம்பியை நணுக வோடிச்
சென்றிவட் டருதி ரென்றா னென்றலு நால்வர் சென்றார்
தென்றிசைக் கிழவன் றூதர் தேடினர் திரிவ ரென்னக்
குன்றினு முயர்ந்ததோளான்கொற்றமாக்கோயில் புக்கார்.

கும்பகர்ணனை யெழுப்புதல்

கிங்கரர் நால்வர் சென்றக் கிரியனான் கிடந்த கோயில்
மங்குல்தோய் வாயில் சார்ந்து மன்னநீ யுணர்தி யென்னாத்
தங்கையி னெழுவி னாலே தலைசெவி தாக்கிப் பின்னும்
வெங்கணார் துயில்கின்றானை வெகுளியா லினைய சொன்னார்.

உறங்கு கின்ற கும்ப கன்ன வுங்கண் மாய வாழ்வெலாம்
இறங்கு கின்ற தின்று காணெ ழூந்தி ராயெ ழூந்திராய்
கறங்கு போல விற்பி டித்த கால தூதர் கையிலே
உறங்கு வாயு றங்கு வாயி னிக்கி டந்து றங்குவாய். 2122

என்று சொல்ல வன்ன வன்னெழூந்தி ராமை கண்டுபோய்
மன்றல் தங்கு மாலை மார்ப வன்று யில்லெ ழூப்பலம்
அன்றுகொள்கைகேண்மி னென்றுமாவொடாளியேவினன்
ஒன்றின் மேலொ ராயி ரம்மு ழக்கி விட்டெ ழூப்புவீர். 2123

ஆயிரம் வீரர் வருதல்

திண்டிறல் வீரர் வாயிற் றிறத்தலுஞ் சுவாத வாதம்
மண்டுற வீர ரெல்லாம் வருவது போவ தாகிக்
கொண்டுறு தடக்கை பற்றிக் குலமுடை வலியி னாலே
கண்டுயி லெழூப்ப வெண்ணிக் கடிதொரு வாயில் புக்கார்.

இங்கிவன் றன்னை யாமின் றெழூப்பலாம் வகையேதென்று
துங்கபேழ் வாயு மூக்குங் கண்டுமெய் துணுக்க முற்றார்
அங்கைகள்தீண்ட வஞ்சி யாழ்செவி யதனி னூடு
சங்கொடு தாரை சின்னஞ் சமைவுறச் சாற்ற லுற்றார். 2125

கோடிகல் தண்டு கூடங் குந்தம்வல் லோர்கள் கூடித்
தாடைகள் சந்து மார்பு தலையெனு மவையிற் றாக்கி
வாடிய கைய ராகி மன்னவற் குரைப்பப் பின்னும்
நீடிய பரிக ளெல்லா நிரப்பிடும் விரைவி னென்றான். 2126

கொய்மலர் தொங்க லான்றன் குரைகழல் வணங்கி யைய
உய்யலாம் வகைக ளென்றிங் கெழூப்பலாம் வகையே
செய்தும்
கையெலாம் வலியு மோய்ந்த கவனமாக் காலுமோய்ந்த
செய்யலாம் வகைவே றுண்டோ செப்புதிதெரியவென்றார்.

இராவணன் கும்பகர்ண்னை ஆயுதங்களால் அடித்து
எழூப்புமாறு கூறினன்.

என்றலுமே யடிவணங்கி யீரைஞ்னூ றிராக்கதர்கள்
வன்றொழிலாற் றுயில்கின்ற மன்னவன்றன் மாடணுகி
நின்றிரண்டு கதுப்புமுற நெடுமுசலங் கொண்டடிப்பப்
பொன்றினவ னெழூந்தாற்போற் புடைபெயர்ந்தங் கெழூந்
திருந்தான். 2128

கும்பகர்ணன் எழுந்து உணவருந்துதல்

ஆறு நூறு சகடத் தடிசிலும்
நூறு நூறு குடங்களு நுங்கினன்
ஏறு கின்ற பசியை யெழுப்பினன்
சீறு கின்ற முகத்திரு செங்கணன். 2129

எருமை யேற்றையோ ரீரறு நூற்றையும்
அருமை யின்றியே தின்றிறை யாறினன்
பெருமை யேற்றது கோடுமென் றேபிறங்
குருமை யேற்றைப் பிசைந்தெரி யூதுவான். 2130

இருந்த போது மிராவண னின்றெனத்
தெரிந்த மேனியன் றிண்கட லின்றிரை
நெரிந்த தன்ன புருவத்து நெற்றியான்
சொரிந்த சோரிதன் வாய்வரத் தூங்குவான். 2131

இரும்ப சிக்கு மருந்தென வெஃகினே
டிரும்ப சிக்கு மருந்து மெயிற்றினன்
வருங்க ளிற்றினைத் தின்றனன் மாலரு
அருங்க ளிற்றிரி கின்றதோ ரசையான். 2132

கூயினன் னும்மு னென்றவர் கூறலும்
போயி னன்னகர் பொம்மென் றிரைத்தெழ
வாயில் வல்லை நுழைந்து மதிதொடும்
கோயி லெய்தினன் குன்றன கொள்கையான். 2133

கும்பகர்ணன் இராவணனிடம் வருதல்

வன்று ணைப்பெருந் தம்பி வணங்கலும்
தன்றி ரண்டதோ ளாரத் தழுவினன்
நின்ற குன்றொன்று நீணெடுங் காலொடும்
சென்ற குன்றைத் தழீஇயன்ன செய்கையான். 2134

கும்பகர்ணனுக்கு இராவணன் போர்க்கோலம் புனைதல்.

கும்பகர்ணன்

அன்னகாலையி லாயத்தம் யாவையும்
என்ன காரணத் தாலென் றியம்பினன்
மின்னி னன்ன புருவமும் விண்ணினைத்
துன்னு தோளு மிடந்துடி யாநின்றான். 2135

இராவணன்

வான ரப்பெருந் தானையர் மானுடர்
கோன கர்ப்புறஞ் சுற்றினர் கொற்றமும்
ஏனை யுற்றனர் நீயவ ரின்னுயிர்
போன கத்தொழின் முற்றுதி போயென்றான். 2136

கும்பகர்ணன் கூறும் அறவுரை

ஆனதோ வெஞ்சம மலகில் கற்புடைச்
சானகி துயரினந் தவிர்ந்த தில்லையோ
வானமும் வையமும் வளர்ந்த வான்புகழ்
போனதோ புகுந்ததோ பொன்றுங் காலமே. 2137

கிட்டிய தோசெருக் கிளர்பொற் சீதையைச்
சுட்டிய தோமுனஞ் சொன்ன சொற்களால்
திட்டியின் விடமன்ன கற்பின் செல்வியை
விட்டிலை யோவிது விதியின் வண்ணமே. 2138

புலத்தியன் வழிமுதல் வந்த பொய்யறு
குலத்தியல் பழிந்தது கொற்ற முற்றுமோ
வலத்திய லழிவதற் கேது மையறு
நிலத்தியல் நீரியல் என்னு நீரதால். 2139

கொடுத்தனை யிந்திரற் குலகுங் கொற்றமும்
கெடுத்தனை நின்பெருங் கிளையு நின்னையும்
படுத்தனை பலவகை யமரர் தங்களை
விடுத்தனை வேறினி வீடு மில்லையால். 2140

தஞ்சமுந் தருமமுந் தகவு மேயவர்
நெஞ்சமுங் கருமமு முரையு மேநெடு
வஞ்சமும் பாவமும் பொய்யும் வல்லநாம்
உஞ்சுமோ வதற்கொரு குறையுண்டாகுமோ. 2141

என்றுகொண் டினையன விளம்பி யானுனக்
கொன்றுள துணர்த்துவ துணர்ந்து கோடியேல்
நன்றது நாயக நயக்கி லாயெனின்
பொன்றினை யாகவே கோடி போக்கிலாய். 2142

காலினிற் கருங்கடல் கடந்த காற்றது
போலவன் குரங்குள சீதை போகிலள்

வாலியை யுரங்கிழித் தேக வல்லன
கோலுள யாமுளேங் குறையுண் டாகுமோ. 2143

தையலை விட்டவன் சரணந் தாழ்ந்துநின்
மையறு தம்பியோ டௗவ ளாவுதல்
உய்திற மன்றெனின் னுள துவேறுமோர்
செய்திற முண்டது தெளிந்து கோடியால். 2144

இராவணன்

மறங்கிளர் செருவினுக் குரிமை மாண்டனை
பிறங்கிய தசையொடு நறவும் பெற்றனை
இறங்கிய கண்முகிழ்த் திரவு மெல்லியும்
உறங்குதி போயென வுளையக் கூறினன். 2145

மானுட ரிருவரை வணங்கி மற்றுமக்
கூனுடைக் குரங்கையுங் கும்பிட் டுய்தொழில்
ஊனுடை யும்பிக்கு முனக்கு மேகடன்
யானது முடிக்கிலே னெழுதி போதியால். 2146

கும்பகர்ணன்

வென்றிவண் வருவெனென் றுரைக்கி லேன்விதி
நின்றது பிடர்பிடித் துந்த நின்றது
பொன்றுவென்பொன்றினற்பொலன்கொ டோளியை
நன்றென நாயக விடுதி நன்றரோ. 2147

இந்திரன் பகைஞனு மிராமன் றம்பிகை
மந்திர வலியினன் மடிதல் வாய்மையால்
தந்திரங் காற்றுறு சாம்பல் பின்னரும்
மந்திர முணர்ந்துனக் குறுவ தாற்றுவாய். 2148

என்னைவென் றுளரெனி னிலங்கை காவல
உன்னைவென் றுயருத லுண்மை யாதலால்
பின்னைநின் றெண்ணுதல் பிழையப் பெய்வளை
தன்னைநன் களிப்பது தவத்தின் பாலதே. 2149

இற்றைநாள் வரைமுதல் யான்முன் செய்தன
குற்றமு முளவெனிற் பொறுத்தி கொற்றவ
அற்றதான் முகத்தினில் விழித்த லாரிய
பெற்றனென் விடையெனப் பெயர்ந்து போயினன்.

அவ்வழி யிராவண னனைத்து நாட்டமும்
செவ்வழி நீரொடுங் குருதி தேக்கினன்
எவ்வழி யோர்களு மிரங்கி யேங்கினர்
இவ்வழி யவனும்போய் வாயி லெய்தினன். 2151

கும்பகர்ணன் போருக்குப் புறப்படுதல்

தேர்செலக் கரிசெல நெருக்கிச் செம்முகக்
கார்செலத் தேர்செலப் புரவிக் கால்செலத்
தார்செலக் கடைசெலச் சென்ற தானையும்
பார்செலற் கரிதென விசும்பிற் பாய்ந்ததால். 2152

ஆயிரங் கோளரி யாளி யாயிரம்
ஆயிர மதகரி பூத மாயிரம்
மாயிரு ஞாலத்தைச் சுமப்ப வாங்குவ
தேயிருஞ் சுடர்மணித் தேரொன் றேறினன். 2153

நறையுடைத் தசும்பொடு நறையின் வெந்தவூன்
குறைவினற் சகடமோ ராயி ரங்கொடு
பிறையுடை யெயிற்றவன் பின்பு சென்றனர்
முறைமுறை கைக்கொடு முடுகி நீட்டுவார். 2154

ஒன்றல பற்பல ருதவு மூனறை
பின்றரும் பிலனிடைப் பெய்யு மாறுபோல்
வன்றிற லிருகரம் வழங்க மாந்தியே
சென்றனன் யாவருந் திடுக்க மெய்தவே. 2155

இராமர் நோக்குதல்

வீணையென் றுணரின தன்று விண்டொடும்
சேணுயர் கொடியது வயவெஞ் சீயமாக்
காணினுங் காலின்மே லரிய காட்சியன்
பூணொளி மார்பினன் யாவன் போலுமால். 2156

தோளொடு தோள்செலத் தொடர்ந்து நோக்குறின்
நாள்பல கழியுமா னடுவ ணின்றதோர்
தாளுடை மலைகொலாஞ் சமரம் வேட்டதோர்
ஆளென வுணர்கிலே னர்கொ லாமிவன். 2157

இராமர் வினவ வீடணன் உரைத்தல்

ஆரிய னனைய கூற வடியிணை யிறைஞ்சி யைய
போரிய லிலங்கை வேந்தன் பின்னவ னெனக்குமுன்னோன்

காரியல் கால னன்ன கழற்கும்ப கருண னென்னும்
கூரிய சூலத் தானென் றவனிலே கூற லுற்ருன். 2158

தாங்கு கொம்பொரு நான்குகால்
ஓங்க லொன்றினை யும்பர்கோன்
வீங்கு நெஞ்சன் விழுந்திலான்
தூங்க நின்று சுழற்றினுன். 2159

ஒழிந்த தீயொடு காலையும்
பிழிந்து சாறுகொள் பெற்றியான்
அழிந்து மீதுக வாழிநீர்
இழிந்து காலினி னெற்றுவான். 2160

மறுத்த தம்முனை வாய்மையால்
ஒறுத்து மாவது ணர்த்தினுன்
வெறுத்து மாய்வது மெய்யெனு
இறுத்து நின்னெதி ரெய்தினுன். 2161

இராமர்

என்றவ னுரைத்த லோடு மிரவிசே யிவனை யின்று
கொன்றொரு பயனு மில்லைக் கூடுமேற் கூட்டிக்கொண்டு
நின்றது புரிது மற்றிந் நிருதர்கோ னிடருநீங்கும்
நன்றென நினைத்தே னென்ரு னுதனு நலனீ தென்ருன்.

ஏகுதற் குரியார் யாரே யென்னலு மிலங்கை வேந்தன்
ஆகின்மற் றடியெ னேசென் றறிவினு லவனை யுள்ளம்
சேகறத் தெருட்டி யீண்டுச் சேருமேற் சேர்ப்ப லென்ருன்
மேகமொப் பானு நன்று போகென்று விடையு மீந்தான்.

வீடணன் கும்பகர்ணன்பால் வந்து வணங்குதல்

தந்திரக் கடலை நீந்தித் தன்பெரும் பலத்தைச் சார்ந்தான்
வெந்திற லவனுக் கைய வீடணன் விரைவி னுன்பால்
வந்தன னென்னச் சொன்னுர் வரம்பிலா வுவகை கூரச்
சிந்தையாற் களிக்கின் ருன்றன் செறிகழற் சென்னி
சேர்ந்தான். 2164

முந்திவந் திறைஞ்சி னுனை முகந்துயிர் மூழ்கப் புல்லி
உய்ந்தனை யொருவன்போனுயெனமன முவக்கின்றேனென்
சிந்தனை முழுதுஞ் சிந்தத் தெளிவிலார் போல மீள
வந்ததென் றனியேயென்ருன்மழையினீர்வழங்குகண்ணுன்

கும்பகர்ணன்

அவையநீ பெற்ற வாறு மமரரும் பெறுத லாற்ரு
உவையலோகத்தி னுள்ள சிறப்புங்கேட் டுவந்தேனுள்ளம்
கவிஞரி னறிவு மிக்காய் காலன்வாய்க் களிக்கின் றேம்பால்
நவையிலே வந்த தென்னீ யமுதுண்பாய் நஞ்சுண் பாயோ.

குலத்தியல் பழிந்த தேனுங் குமரமற் றுன்னைக்கொண்டே
புலத்தியன் மரபு மாயாப் புண்ணியம் பொருந்திற் றென்ன
வலத்திய ருளை நோக்கி மகிழ்கின்றேன் மன்ன வாயை
உலத்தினை திரிய வந்தா யுளேகின்ற துள்ள மந்தோ. 2167

அறப்பெருந்துணைவர் தம்மையபயமென் றடைந்தவுன்னைத்
துறப்பது துணியார் தங்க ளாருயிர் துறந்த போதும்
இறப்பெனும் பயத்தை விட்டா யிராமனென் பளவுமற்றிப்
பிறப்பெனும் புன்மையில்லை நினைந்தென்கொல் பெயர்ந்த
வண்ணம். 2168

அறமென நின்ற நம்பர்க் கடிமைபெற் றவன்ற னாலே
மறமென நின்ற மூன்று மருங்கற மாற்றி மற்றும்
திறமென நின்ற தீமை யின்மையே தீர்ந்த செல்வ
பிறர்மனை நோக்கு வேமை யுறவெனப் பெறுதி போலாம்.

நீதியுந் தரும நின்ற நிலைமையும் புலமை தானும்
வேதியர் தேவன் சொல்லால் விளிவிலா வாயுப்பெற்ருய்
ஆதியங் கடவு ளாலே யருந்தவ மாற்றிப் பெற்ருய்
சாதியின் புன்மை யின்னுந் தவிர்ந்திலை போலுந்தக்கோய்.

ஐயநீ யயோத்தி வேந்தற் கடைக்கல மாகி யாங்கே
உய்கிலை யென்னின் மற்றிவ் வரக்கரா யுள்ளோ ரெல்லாம்
மொய்கணை மாரி யாலே யிறந்துபாழ் முழுதும் பட்டால்
கையினு லெண்ணீர் நல்கிக் கடன்கழிப் பாரைக் காட்டாய்.

வீடணன்

இருளுறு சிந்தை யேற்கு மின்னருள் சுரந்த வீரன்
அருளுநீ சேரி னென்ருே வவயமு மளிக்கு மன்றி
மருளுறு பிறவி நோய்க்கு மருந்துமா மாறிச் செல்லும்
உருளுறு சகட வாழ்க்கை யொழித்துவீ டளிக்குமன்றே.

எனக்கவன் றந்த செல்வத் திலங்கையு மரசுமெல்லாம்
நினக்கு நான் றருவென்றந்துன் னேவலினெளிதி னிற்பன்

உனக்கிதி னுறுதி யில்லை யுத்தம வுன்பின் வந்தேன்
மனக்குநோய் துடைத்து வந்த மரபையும் விளக்கி வாழி.

திருமறு மார்ப னல்க வனந்தருந் தீர்ந்து செல்வப்
பெருமையு மெய்தி வாழி யீறிலா நாளும் பெற்றாய்
ஒருமையே யரசு செய்வா யுரிமையே யுளதே யொன்றும்
அருமையு மிவற்றி னில்லைக் காலமு மடுத்த தைய. 2174

முனிவருங் கருணை வைப்பர் மூன்றுல கத்துந் தோன்றி
இனிவரும் பகையு மில்லை யீறுண்டென் றிரங்கல் வேண்டா
துனிவருஞ் செறுந ரான தேவரே துணைவ ராவர்
கனிவருங் காலத் தைய பூக்கொய்யக் கருத லாமோ. 2175

வேதநா யகனே யுன்னைக் கருணையால் வேண்டி விட்டான்
காதலா லென்மேல் வைத்த கருணையாற் கரும மீதே
ஆதலா னவனைக் காண வறத்தொடுந் திறம்ப லைய
போதுவாய்நீயேயென்னுப்பொன்னடியிரண்டும்பூண்டான்.

தும்பையந் தொடையன் மாலைச் சுடர்முடி யடியிற் றோயப்
பம்புபொற் கழல்கள் கையால் பற்றினன் புலம்பும் பொற்றோள்
தம்பியை யெடுத்து மார்பிற் றழுவித்தன் றறுக ணூடு
வெம்புணீர் சொரிய நின்று னினையன விளம்ப லுற்றான்.

கும்பகர்ணன்

நீர்க்கோல வாழ்வை நச்சி நெடிதுநாள் வளர்த்துப்பின்னைப்
போர்க்கோலஞ் செய்து விட்டாற் குயிர்கொடா தங்குப் போகேன்
தார்க்கோல மேனி மைந்த வென்றுயர் தவிர்த்தி யாயின்
கார்க்கோல மேனி யானைக் கூடுதி கடிதி னென்றான். 2178

மலரின்மே லிருந்த வள்ளல் வழுவிலா வரத்தி னல்நீ
உலைவிலாத் தருமம் பூண்டா யுலகுள தனையு முள்ளாய்
தலைவனீ யுலகுக் கெல்லா முனக்கது தக்க தேயால்
புலையுறு மரண மெய்த லெனக்கது புகழ தேயால். 2179

கருத்திலா விறைவன் றீமை கருதின லதனைக் காத்துத்
திருத்தலா மாகி னன்றே திருத்துதல் தீரா தாயின்
பொருத்துறுபொருளுண்டாமோபொருதொழிற்குரியராகி
ஒருத்தரின் முன்னஞ் சாத லுண்டவர்க் குரிய தம்மா.2180

தும்பியந் தொடையல் வீரன் சுடுகணை தூரப்பச் சுற்றும்
வெம்புவெஞ் சேனை யோடும் வேறுள கிளைஞ ரோடும்
உம்பரும் பிறரும் போற்ற வொருவன்மூ வுலகை யாண்டு
தம்பிய ரின்றி மாண்டு கிடப்பனோ தமையன் மண்மேல்.

செம்பிட்டுச் செய்த விஞ்சித் திருநகர்ச் செல்வந் தேறி
வம்பிட்ட தெரியலெம்முனுயிர்கொண்டபகையைவாழ்த்தி
அம்பிட்டுத் துன்னங்கொண்டபுண்ணுடைநெஞ்சோடைய
கும்பிட்டுவாழ்கிலேன்யான்கூற்றையு மாடல்கொண்டேன்.

அனுமனை வாலி சேயை யருக்கன்சேய் தன்னை யம்பொற்
றனுவுடை யவரை வேறோர் நீலனைச் சாம்பன் றன்னைக்
கனிதொடர் குரங்கின் காலக் கடலொடுங் கடந்து மற்றப்
பனிதுடைத்துலகஞ்சுற்றுங் கதிரெனத்திரிவன்பார்த்தி.

ஆலங்கண் டஞ்சியோடு மமரர்போ லரிக ளோடச்
சூலங்கொண் டோடி வேலை தொடர்வதோர் தோற்றந் தோன்ற
நீலங்கொள் கடலு மோடக் காலொடு நெருப்பு மோடக்
காலங்கொ ளுலகு மோடக் கறங்கெனத் திரிவன் காண்டி.

போதுநீ யைய பின்னைப் பொன்றினர்க் கெல்லா நின்ற
வேதியர் தேவன் றன்னை வேண்டினை பெற்று மெய்ம்மை
ஆதிநூன் மரபினாலே கடன்மையு மாற்றி யேற்ற
மாதுயர் நரக நண்ணா வண்ணமுங் காத்தி மன்னோ. 2185

ஆகுவ தாகுங் காலத் தழிவது மழிந்து சிந்திப்
போகுவ தயலே நின்று போற்றினும் போதல் செய்யும்
சேகர வுணர்ந்தோர் நின்னின் யாருளர் வருத்தல் செய்யா
தேகுதி யெம்மை நோக்கி யிரங்கலை யென்று முள்ளாய்.

என்றவன் றன்னை மீட்டு மெடுத்துமார் பிறுகப் புல்லி
நின்றுநின் றிரங்கி யேங்கி நிறைகணால் நெடிது நோக்கி
இன்றொடுந் தவிர்ந்த தன்றே யுடன்பிறப்பென்பதென்றான்
வென்றிவெந் திறலி னானு மவனடித் தலத்துவீழ்ந்தான்.

வீடணன் புறப்பட்டுப் போவதைக் கண்டு கும்பகர்ணன் அன்பினால் அழுதல்

கள்ளநீர் வாழ்க்கை யேமைக் கைவிட்டுக் காலும்விட்டான்
பிள்ளைமை துறந்தா னென்னாப் பேதுறு நிலைய னாகி

வெள்ளநீர் வேலை தன்னில் வீழ்ந்தநீர் வீழ வெங்கண்
உள்ளநீ ரெல்லா மாறி யுதிரநீ ரொழுக நின்றான். 2188

வீடணன் இராமரிடம் வந்து கூறுதல்

எய்திய நிருதர் கோனு மிராமனை யிறைஞ்சி யெந்தாய்
உய்திற னுடையார்க் கன்றோ வறநெறி யொழுக்க முண்மை
பெய்திற னெல்லாம் பெய்து பேசினேன் பெயருந் தன்மை
செய்திலன் குலத்து மானந் தீர்ந்திலன் சிறிது மென்றான்.

கொய்திறச் சடையின் கற்றை கொந்தளக் கோலக் கொண்டல்
நொய்தினிற் றுளக்கி யைய நுன்னெதிர் நுன்முனோனை
எய்துறத் துணித்து வீழ்த்த லினிதன்றென் றினைய
சொன்னேன்
செய்திற னினிவே றுண்டோ விதியையார் தீர்க்ககிற்பார்.

அசுர வாநர யுத்தம்

ஓடின புரவி வேழ மோடின வுருளைத் திண்டேர்
ஓடின மலைக ளோட வோடின வுதிரப் பேரா
றாடின கவந்த பந்த மாடின வலகை மேன்மேல்
ஆடின பதாகை யோங்கி யாடின பறவை யம்மா. 2191

கும்பகர்ணன் போர் புரிதல்

குன்றுகொண் டெறியும் பாரிற் குதிக்கும் வெங்கூலம் பற்றி
ஒன்றுகொண் டொன்றை யெற்று முதைக்கும் விட்
டுழைக்கும் வாரித்
தின்றுதின் றுமிழும் பற்றிச் சிரங்களைத் திருகுந் தேய்க்கும்
மென்றுமென் றிழிச்சும் விண்ணில் வீசுமேற் பிசைந்து
பூசும். 2192

வாரியி னமுக்குங் கையான் மண்ணிடைத் தேய்க்கும் வாரி
நீரிடைக் குவிக்கு மப்பா னெருப்பிடை நிமிர வீசும்
தேரிடை யெற்று மெட்டுத் திசையினுஞ் செல்லச் சிந்தும்
தூரிடை மரத்து மோது மலைகளிற் புடைக்குஞ் சுற்றி.

அங்கதன் போர் புரிதல்

ஆண்டது நோக்கி நின்ற வங்கத னாழி தன்னுள்
நீண்டதோர் நெடுந்திண் குன்ற நிலமுது காற்ற நீக்கி
மாண்டன னரக்கன் றம்பி யென்றுல கேழும் வாழ்த்தத்
தூண்டின னதனை யன்னா னொருதனித் தோளி னேற்றான்.

இடைக்கையா லரக்க ணுங்கோ ரெழுமுனை வயிரத் தண்டு
தடுக்கலாந் தரத்த தல்லா வலியது தருக்கின் வாங்கி
மடக்குவா யுயிரை யென்னு வீசின னதனை மைந்தன்
தடக்கையாற் பிடித்துக் கொண்டான் வானவர் தன்னை
வாழ்த்த. 2195

"நீ யார்" என அங்கதன் கூறுதல்

நும்முனை வாலிற் சுற்றி நோன்றிசை நான்குந் தாவி
மும்முனை நெடுவே லண்ணல் முளரியஞ் சரணத் தாழ்ந்த
வெம்முனை வீரன் மைந்த னின்னையென் வாயின் வீக்கித்
தெம்முனை யிராமன் பாதம் வணங்கிடச் செல்வனென்றான்.

பிதாவைக் கொன்றவன் பால் சேவிப்பது
நன்றோ? என கும்பகர்ணன் கூறினன்

அற்றவ னுரைத்த லோடு மனல்விழித் தசனி குன்றத்
துற்றது போலு மென்னு மொலிபட வுலக முட்கப்
பொற்றடந் தோளின் வீசிப் புடைத்தனன் பொறியிற்சிந்தி
இற்றது நூறு கூறு யெழுமுனை வயிரத் தண்டு. 2197

கும்பகர்ணன் அடிக்க அங்கதன் மயங்கினன்.
அநுமன் எதிர்தல்

மாருதி வல்லை யாயி னில்லடா மாட்டா யாகிற்
பேருதியுயிர்கொண்டென்று பெருங்கையானெருங்கிவிட்ட
காருதிர் வயிரக் குன்றைக் காத்திலன்றேண்மேலேற்றான்
ஓருதிர் நூறு கூறு யுக்கதெவ் வுலகு முட்க. 2198

மாருதி வேறு புறம் விலகிச் சென்றார். இலக்குமணர்
அம்புமழை பொழிந்து அரக்கரைக் கொன்றனர்.

அதுகண்ட கும்பகர்ணன் வியந்துரைத்தல்.

செருவின் மாண்டவர் பெருமையு மிலக்குவன் செய்த
வரிவி லாண்மையு நோக்கிய புலத்தியன் மருமான்
திரிபு ரஞ்செற்ற தேவனு மிவனுமே செருவின்
ஒருவி லாளரென் றுயிரக் காலெடுத் துரைத்தான். 2199

கும்பகர்ணன் இலக்குவனை எதிர்த்தல்.
இலக்குவன் மாருதி தோளில் ஏறுதல்

ஏறி னனிளங் கோளரி யிமையவ ராசி
கூறி னரெடுத் தார்த்தது வானரக் குழுவும்

நூறு பத்துடைப் பத்தியி னொரிற்பரி பூண்ட
ஆறு தேரினு மகன்றதவ் வனுமன்றன் றடந்தோள். 2200

கும்பகர்ணன் வீரவுரை

பெய்த வத்தினோர் பெண்கொடி யெம்முழைப் பிறந்தாள்
செய்த குற்றமொன் றில்லவ ளூசிவெஞ் சினத்தால்
கொய்த கொற்ற மற்றவள் கூந்தலொட் டீர்த்த
கைத லத்திடைக் கிடத்துவென் காக்குதி யென்றான்.

அல்லி னுற்செய்த நிறத்தவ னனையது பகர
மல்லி னுற்செய்த தோளினன் மாற்றங்க ளும்பால்
வில்லி னுற்சொல்லி னல்லது வெந்திறல் வெள்கச்
சொல்லி னுற்சொலக் கற்றிலம் யாமெனச் சொன்னான்.

ஆறி ரண்டுவெங் கடுங்கணை யனுமன்மே லழுத்தி
வேறு வெஞ்சர மிரண்டிளங் குமரன்மே லேற்றி
நூறு மைம்பது மொருதொடைதொடுத்தொரு நொடியில்
கூறு திக்கையும் விசும்பையு மறைத்தனன் கொடியோன்.

மறைத்த வாளிக ளெவற்றையு மவற்றினான் மாற்றித்
துறைத்த லந்தொறுந் தலந்தொறு நின்றுதேர் சுமக்கும்
பொறைக்க மைந்தவெங் கரிபரி யாளிமாப் பூதம்
திறத்தி றம்படத் துணித்தவன் றேரையுஞ் சிதைத்தான்

கும்பகர்ணன் வில்லையும் அழித்தார்.

அசுர சேனைகள் இலக்குவனை வளைந்து போர் புரிந்தன.

சுக்ரீவன் கும்பகர்ணனுடன் போர் புரிந்தான்.

அவன்மீது கும்பகர்ணன் சூலத்தை யேவினான்.

பட்டனன் பட்டன னென்று பார்த்தவர்
விட்டுலம் பிடநெடு விசும்பிற் சேறலும்
எட்டின னதுபிடித் திறுத்து நீக்கினான்
ஒட்டுமோ மாருதி யறத்தை யோம்புவான். 2205

திரிந்தனர் சாரிகை தேவர் கண்டிலர்
புரிந்தனர் நெடுஞ்செருப் புகையும் போர்த்தெழ
எரிந்தன வுருமெலா மிருவர் வாய்களும்
சொரிந்தன குருதிதா மிறையுஞ் சோர்ந்திலர். 2206

சுக்ரீவனைக் கும்பகர்ணன் பிடித்துச் செல்லுதல்.
வானரர் இராமரிடம் அச் செய்தியைக் கூறினர்.

தீயினு முதிர்வுறச் சிவந்த கண்ணினன்
காய்கணை சிலையொடுங் கவர்ந்த கையினன்
ஏயெனு மளவினி னிலங்கை மாநகர்
வாயில்சென் றெய்தினன் மழையின் மேனியான். 2207

இராமர் சரக்கூடம் கட்டுதல்

உடைப்பெருந் துணைவனை யுயிரிற் கொண்டுபோய்
கிடைப்பருங் கொடிநக ரடையிற் கேடெனத்
தொடைப்பரும் பகழியின் மாரி தூர்த்துற
அடைப்பனென் றடைத்தனன் விசும்பி னுறெலாம். 2208

கும்பகர்ணன் சரக் கூடத்தால் தடைப்பட்டுத் திரும்பி
வந்து இராமரை நோக்கி இயம்புதல்.

மாக்கவந் தனும்வலி தொலைந்த வாலியாம்
பூக்கவர்ந் துண்ணியும் போலு மென்றெனைத்
தாக்கவந் தனையிவன் றன்னை யின்னுயிர்
காக்கவந் தனையெனக் கழறன் மேயினன். 2209

தேடினன் றிரிந்தன னின்னைத் திக்கிறந்
தோடிய துன்படை யும்பி யோர்ந்தொரு
பாடுற் நடந்தன னனுமன் பாறினன்
ஈடுறு மிவனைக்கொண் டெளிதி னெய்தினேன். 2210

ஏதிவெந் திறலினே யிமைப்பி லோரெதிர்
பேதுறு குரங்கையான் பிணித்த கைப்பிணி
கோதைவெஞ் சிலையினுற் கோடி வீடெனிற்
சீதையும் பெயர்ந்தனள் சிறைநின் றுமென்றான். 2211

இராமர் கும்பகர்ணன் நெற்றியில் இரண்டு
கணைகளை விடுத்தனர்.

குன்றின்வீ ழருவியிற் குதித்துக் கோத்திழி
புன்றலைக் குருதிநீர் முகத்தைப் போர்த்தலும்
இன்றுயி லெழுந்தன வுணர்ச்சி யெய்தினன்
வன்றிறல் தோற்றிலான் மயக்க மெய்தினன். 2212

சுக்ரீவன் மீளுதல்

கண்டன னாயகன் றன்னைக் கண்ணுறுத்
தண்டலின் மானமு நாணுந் தாங்கினான்
விண்டவ னாசியுஞ் செவியும் வேரொடும்
கொண்டன னெழுந்துபோய்த் தமரைக் கூடினான். 2213

வானர மார்த்தன மழையு மார்த்தன
தானர மகளிருந் தமரு மார்த்தனர்
மீனரல் வேலையும் வெற்பு மார்த்தன
வானவ ரோடுநின் றறமு மார்த்ததே. 2214

காந்திக லரக்கன்வெங் கரத்து ணீங்கிய
யேந்தலை யகமகிழ்ந் தெய்த நோக்கிய
வேந்தனுஞ் சானகி யிலங்கை வெஞ்சிறை
போந்தன ளாமெனப் பொருமை நீங்கினான். 2215

கும்பகர்ணன் உணர்வு வந்து நாணுதல்

ஏசியுற் றெழும்விசும் பினரைப் பார்க்குந்தன்
நாசியைப் பார்க்குமுன் னடந்த நாளுடை
வாசியைப் பார்க்குமிம் மண்ணைப் பார்க்குமால்
சீசியுற் றதுவெனத் தீயு நெஞ்சினான். 2216

ஆயிரம் பேய்சுமந் தளித்த தாங்கொரு
மாயிருங் கேடக மிடத்து வாங்கினான்
பேயிரண் டாயிரஞ் சுமந்து பேர்வதோர்
காயொளி வயிரவாள் பிடித்த கையினான். 2217

கும்பகர்ணன் வாட் போர்.

தோலிடைத் துரக்கவுந் துகைக்க வுஞ்சுடர்
வேலுடைக் கூற்றினாற் றுணிய வீசவும்
காலுடைக் கடலெனச் சிந்திக் கைகெட
வாலுடை நெடும்படை யிரிந்து மாய்ந்ததால். 2218

இராமர் கணைகளை யேவி அவன் வாளை அறுத்தனர்.
இராவணன் சேனைகளை அனுப்புதல்

அந்தர மன்னது நிகழு மவ்வழி
இந்திரன் றமரொடு மிரிய லெய்திடச்
சிந்துவுந் தன்னிலை குலையச் சேணுற
வந்தது தசமுகன் விடுத்த மாப்படை. 2219

இராமர் அச் சேனைகளைக் கொன்று, கும்பகர்ணனை
நோக்கிக் கூறுதல்.

ஏதி யோடெதிர் பெருந்துணை
யிழந்தனை யெதிரொரு தனிநின்றாய்
நீதி யோனுடன் பிறந்தனை யாகலி
னின்னுயிர் நினக் கீவேன்
போதி யோபின்றை வருதியோ
வன்றெனிற் போர்புரிந் திப்போதே
சாதி யோநினக் குறுவது
சொல்லுதி தெரிவுறச் சமைந்தம்மா. 2220

இழைத்த தீவினை யிற்றில
தாகலின் யானுனை யிளையோனால்
அழைத்த போதினும் வந்திலை
யந்தக னுணையின் வழிநின்றாய்
பிழைத்த தாலுனக் கருந்திரு
நாளொடு பெருந்துயி னெடுங்காலம்
உழைத்து வீடுவ தாயினை யென்னுனக்
குறுவதொன் றுரை யென்றான். 2221

கும்பகர்ணன் விடை பகர்தல்

உங்கள் தோள்தலை வாள்கொடு
துணித்துயிர் குடித்தெம்மு னுவந்தெய்த
நங்கை நன்னலங் கொடுக்கிய
வந்தயான் வானவர் நகைசெய்யச்
செங்கை தாங்கிய சிரத்தொடுங்
கண்ணினீர் குருதியி னொடுதேக்கி
எங்கை போலெடுத் தழைத்துநான்
வீழ்வெனோ இராவண னெதிரம்மா. 2222

கும்பகர்ணன் இராமர்மீது சூலம்விட
இராமர் அதனை யழித்தனர்.

தாக்கு கின்றன னுழைகில
தலையது தாமரைத் தடங்கண்ணான்
நோக்கி யிங்கிது சங்கரன்
கவசமென் றுணர்வுற னுனித்துன்னி

ஆக்கி யங்கவ னடுபடைத்
 தொடுத்துவிட் டறுத்தன னதுசிந்தி
வீக்கி ழந்தது வீழ்ந்தது
 வரைசுழல் விரிசுடர் வீழ்ந்தென்ன. 2223

கும்பகர்ணன் வலக்கரத்தை யறுத்தல்.

மற்றும் வீரர்க ளுளரெனற்
 கெளிதரோ மறத்தொழி லிவன்மாடு
பெற்று நீங்கின தாமெனி
 னல்லது பேரெழிற் ருேளோடும்
அற்று வீழ்ந்தகை யருதவெங்
 கையினு லெடுத்தவ ஞர்த்தோடி
எற்ற வீழ்தன வெயிறிளித்
 தோடின வானரக் குலமெல்லாம். 2224

ஈற்றுக் கையையு மிக்கணத்
 தரிதியென் றிமையவர் தொழுதேத்தத்
தோற்றுக் கையகன் ருெழிந்தவ
 ஞளவை தொலையவுந் தோன்ருத
கூற்றுக் கையமு மச்சமுங்
 கெடநடுங் கொற்றவன் கொலையம்பால்.
வேற்றுக் கையையும் வேலை
 யிட்டனன் வேறுமோ ரணையாக. 2225

நிலத்த கால்கனல் புனலென
 விவைமுற்று நிருதன துருவாகித்
கொலத் தகாததோர் வடிவுகொண்
 டாலென வுயிர்களைக் குடிப்பானைச்
சலத்த காலனைத் தறுகணார்க்
 கரசனைத் தருக்கினிற் பெரியானை
வலத்த காலையும் வடித்தவெங்
 கணையினுற் றடிந்தனன் றனுவல்லான். 2226

மாறு காலின்றி வானுற நிமிர்ந்து
 மாடுள வெலாம் வளைத் தேந்திச்
சூறை மாருத மாமெனச்
 சுழித்துமேற் ருெடர்கின்ற தொழிலானை

ஏறு சேவக னெரிமுகப்
பகழியா லிருநிலம் பொறைநீங்க
வேறு காலையுந் துணித்தன
னறத்தொடு வேதங்கள் கூத்தாட. 2227

பாதங் கைகளோ டிழந்தனன்
படியிடை யிருந்துவான் பிகுவாயால்
காத நீளிய மலைகளைக்
கடித்திறுத் தெடுத்துவெங் கனல்பொங்கி
மீது மீதுதன் னகத்தெழு
காற்றினல் விசைகொடு திசைசெல்ல
ஊத வூதப்பட் டலந்தன
வானர முருமின் வீழுயிரென்ன. 2228

தீயி னற்செய்த கண்ணுடை
யானெடுஞ் சிகையினற் றிசைதீய
வேயி னற்றிணி வெற்பொன்று
நாவினல் விசும்புற வளைத்தேந்திப்
பேயி னர்ப்புடைப் பெருங்கள
மிரிந்தெழப் பிலந்திறந் ததுபோலும்
வாயி னற்செல வீசினன்
வள்ளலு மலர்க்கரம் விதிர்ப்புற்றன். 2229

கும்பகர்ணன் இராமரிடம் கூறுதல்

புக்கடைந்த புறவொன்றின் பொருட்டாகத் துலைபுக்க
மைக்கடங்கார் மதயானை வாள்வேந்தன் வழிவந்தீர்
இக்கடன்க ளுடையீர்நீ ரெம்வினைதீர்த் தும்முடைய
கைக்கடன்ற னுயிர்காக்கக் கடவீரென் கடைக்கூட்டால்.

நீதியால் வந்ததொரு நெடுந்தரும நெறியல்லால்
சாதியால் வந்தசிறு நெறியறியா னென்றம்பி
ஆதியா யுனையடைந்தா னரசருக் கொண்டமைந்த
வேதியா வின்னுமுனக் கடைக்கலம்யான் வேண்டினேன்.

வெல்லுமா நினைக்கின்ற வேலரக்கன் வேரோடும்
கல்லுமா முயல்கின்ற னிவனென்னுங் கறுவுடையான்
ஒல்லுமா றியலுமே லுடன்பிறப்பின் பயனேரான்
கொல்லுமா லவனிவனைக் குறிக்கோடி கோடாதாய். 2232

தம்பியென நினைந்திரங்கித் தவிரானத் தகவில்லான்
நம்பியிவன் றனைக்காணிற் கொல்லுமிறை நல்காணல்
உம்பியைத்தா னுன்னைத்தான னுமனைத்தாரொருபொழுதும்
எம்பிபிரி யாருக வருளுதியான் வேண்டினேன். 2233

மூக்கிலா முகமென்று முனிவர்களு மமரர்களும்
நோக்குவார் நோக்காமை நுன்கணையா லென்கழுத்தை
நீக்குவாய் நீக்கியபின் நெடுந்தலையைக் கருங்கடலுள்
போக்குவா யிதுநின்னை வேண்டுகின்ற பொருளென்ருன்.

வரங்கொண்டா னினிமறுத்தல்
வழக்கென்றென் ருருவாளி
உரங்கொண்ட தடஞ்சிலையி
னுயர்நெடுநா ளுட்கொளுவாச்
சிரங்கொண்டான் கொண்டதனைத்
திண்காற்றின் கடும்படையால்
அரங்கொண்ட கருங்கடலு
ளழுவத்து ளழுத்தினன். 2235

ஆடினர் வானவர்க ளரமகளி ரமுதவிசை
பாடினர் மாதவரும் வேதியரும் பயந்தீர்ந்தார்
கூடினர் படைத்தலைவர் கொற்றவனைக் குடர்கலங்கி
ஓடினு ரடலரக்க ரிராவணனுக் குணர்த்துவான். 2236

மாயாசனகப் படலம்

இராவணன் மகோதரனை வினவுதல்

மாதிரங் கடந்த தோளான் மந்திர விருக்கை வந்த
மோதர னென்னு நாமத் தொருவனை முறையி னேக்கிச்
சீதையை யெய்தி யுள்ளஞ் சிறுமையிற் றீருஞ் செய்கை
யாதெனக் குணர்த்தி யின்றென் னின்னுயி ரீதியென்ருன்.

மகோதரன் கூறுதல்

உணர்த்துவ னின்றுநன்ரே ருபாயத்தி னுறுதி மாயை
புணர்த்துவன் சீதை தன்னே புணர்வதோர் வினயம்
போற்றிக்
கணத்துவன் சனகன் றன்னைக் கட்டினென் கொணர்ந்து
காட்ட
மணத்தொழில் புரியு மன்றே மருந்தனை யுருவ மாற்றி.

இராவணன் அதற்கிசைந்து சீதைபால் வந்து கூறுதல்

என்றுதா னடிய னேனுக் கிரங்குவ திந்து வென்பான்
என்றுதா னிரவி யோடும் வேற்றுமை தெரிவ தென்பால்
என்றுதா னநங்க வாளிக் கிலக்கலா திருக்க லாவ
தென்றுதா னுற்ற தெல்லா மியம்புவா னெடுத்துக்
கொண்டான். 2239

அந்தர முணரின் மேனு ளகலிகை யென்பாள் காதல்
இந்திர னூரத்தைநல்கி யெய்தினு ளிழுக்குற் ருளோ
மந்திர மில்லை வேருேர் மருந்தில்லை மையல் நோய்க்குச்
சுந்தரக் குமுதச் செவ்வா யமுதலா லமுதச் சொல்லீர்.

என்றுரைத்தெழுந்து சென்றங் கிருபதென்றுரைக்குநீலக்
குன்றுரைத் தாலு நேராக் குவவுத்தோணிலத்தைக் கூட
மின்றிரைத்தருக்கன் தன்னை விரித்துமுன்ருகுத்தபோல
நின்றிமைக் கின்றதென்ன முடிபடி நெடிதின் வைத்தான்.

சீதை அறமுரைத்தல்

வல்லிய மருங்கு கண்ட மானென மறுக்க முற்று
மெல்லிய லாக்கை முற்று நடுங்கினள் விம்மு கின்ருள்
கொல்லிய வரினு முள்ள கூறுவென் றெரிய வென்னுப்
புல்லிய கிடந்த தொன்றை நோக்கினள் புகல்வ தானுள்.

பழியிது பாவ மென்று பார்க்கிலை பகரத் தக்க
மொழியிவையல்லவென்ப துணர்கிலைமுறைமைநோக்காய்
கிழிகிலை நெஞ்சம் வஞ்சக் கிளையொடு மின்று காறும்
அழிகிலையென்றபோதென்கற்பென்னுமறந்தானென்னும்.

ஊணிலா யாக்கை பேணி யுயர்புகழ் சூடா துன்முன்
நாணிலா திருந்தே னல்லேனவையறு குணங்களென்னும்
பூணெலாம் பொறுத்த மேனிப் புண்ணிய மூர்த்தி தன்னைக்
காணலா மின்னு மென்னுங் காதலா லிருந்தேனகண்டாய்.

இராவணன்

கொற்றவா ளரக்கர் தம்மை யயோத்தியர் குலத்தை
முற்றும்
பற்றிநீர் தருதி ரன்றேற் பசுந்தலை கொணர்திர் பாரித்
துற்றதொன் றியற்று வீரென் றுந்தினே னுந்தை மேலும்
வெற்றியர் தம்மைச் செல்லச் சொல்லினென் விரைவி
னென்ருன். 2245

மருத்தனை மாயா சனகனுக்கி அழைத்து வருதல்

ஆயது காலத் தாங்கோ ரரக்கனைச் சனக னுக்கி
வாய்திறந் தரற்றப் பற்றி மகோதரன் கடிதின் வந்தான்
காயெரியனையான்முன்னர்க்காட்டினன்வணங்கக்கண்டாள்
தாயெரி வீழக் கண்ட பார்ப்பெனத் தரிகி லாதாள். 2246

கைகளை நெரித்தாள் கண்ணை மோதினாள் கமலக் கால்கள்
செய்யெரி மிதித்தா லென்ன நிலத்திடைப் பதைத்தாள் நெஞ்சம்
மெய்யென வெரிந்தா ளேங்கி விம்மினாளடுங்கி வீழ்ந்தாள்
பொய்யென வுணரா ளன்பாற் புரண்டரும் பூச லிட்டாள்.

எந்தையே யெந்தை யேயின் றென்பொருட் டுனக்கும் இக்கோள்
வந்ததே யென்னைப் பெற்று வாழ்ந்தவா றிதுவோ மண்ணோர்
தந்தையே தாயே செய்த தருமமே தவமே யென்னும்
வெந்துய ரென்னுந் தீவீழ் விறகென வெந்து வீழ்ந்தாள்.

இட்டுண்டா யறங்கள் செய்தா யெதிர்ந்துளோ
ரிருக்கை யெல்லாம்
சுட்டுண்டா யுயர்ந்த வேள்வித் துறையெலாந்
தொலைவு கண்டாய்
மட்டுண்டார் மனிதர்த் தின்ற வஞ்சரால்
வயிரத் தோள்கள்
கட்டுண்டா யென்னே யானுங் காண்கின்றேன்
போலுங் கண்ணால். 2249

வன்சிறைப் பறவை யூரும் வானவன் வரம்பின் மாயப்
புன்சிறைப் பிறவி தீர்ப்பா னுளனெனப் புலவர் நின்றார்
என்சிறை தீர்க்கு வாரைக் காண்கிலே னென்னின் வந்த
உன்சிறை விடுக்கற் பாலர் யாருள ருலகத் துள்ளார். 2250

பண்பெற்றா ரோடு கூடாப் பகைபெற்றாய் பகழி பாய
விண்பெற்றா யெனினுநன்றால் வேந்தரா யுயர்ந்தமேலோர்
எண்பெற்றாய் பழியும் பெற்றா யிதுநின்னாற் பெற்றதன்றால்
பெண்பெற்றா யதனாற் பெற்றா யாரின்ன பேறு பெற்றார்.

அன்னையீ ரையன் மீரென் னருயிர்த் தங்கை மீரே
என்னையீன்றெடுத்தவெந்தைக்கெய்தியதியாதுமொன்றும்

உன்னலீ ருணர்ந்தி லீரோ வுமக்கும்வே றுற்ற துண்டோ
துன்னரு நெறியின் வந்து தொடர்ந்திலீர் துஞ்சி னீரோ.

சரதமற் றிவனைத் தந்தார் தவம்புரி யாற்றல் சான்ற
பரதனைக் கொணர்தற் கேது மையுற வில்லைப் பன்னாள்
வரதனும் வாழ்ந்தா னல்லன் றம்பியு மனையன் வாழான்
விரதமுற் றறத்தி னின்றாற் கிவைகொலாம் விளைவ
மேன்மேல். 2253

இராவணன்

காரிகை நின்னை யெய்துங் காதலாற் கருத லாகாப்
பேரிட ரியற்ற லுற்றேன் பிழையிது பொறுத்தி யின்னும்
வேரற மிதிலை யோரை விளிகிலேன் விளிந்த போதும்
ஆருயி ரிவனை யுண்ணே னஞ்சலை யன்ன மன்னாய். 2254

இமையவ ருலக மேதா னிவ்வுல கேழு மேதான்
அமைவரும் புவன மூன்றி லென்னுடை யாட்சியேதான்
சமைவுறத் தருவன் பற்றித் தாரணி மன்னற் கின்னற்
சுமையுடைக் காம வெந்நோய் துடைத்தியேற் றொழுது
வாழ்வேன். 2255

சீதை

இத்திருப் பெறுகிற் பானு மிந்திர னிலங்கை நுங்கள்
பொய்த்திருப்பெறுகிற்பானும்வீடணன் புலவர் கோமான்
கைத்திருச் சரங்க ளுன்றன் மார்பிடைக் கலக்கற் பால
மைத்திரு நிறத்தான் றாளென் றலைமிசை வைக்கற் பால.

புன்மகன் கேட்டி கேட்டற் குரியது புகுந்த போரின்
உன்மக னுயிரை யெம்மோய்ச் சுமித்திரை யுய்யவீன்ற
நன்மகன் வாளி நக்க நாயவ னுடலை நக்க
என்மக னிறந்தா னென்ன நீயெடுத் தரற்ற லென்றாள்.

மகோதரன்

வெய்யவ னனைய கேளா வெயிலுக விழித்து வீரக்
கைபல பிசைந்து பேழ்வா யெயிறுபுக் கழுந்தக் கவ்வித்
தையன்மே லோட லோடு மகோதரன் றடுத்தா னீன்ற
மொய்கழற் றாதை வேண்ட விசையுநீ முனிய லென்றாள்.

மாயாசனகன்

பூவின்மே லிருந்த தெய்வத் தையலும் பொதுமையுற்றாள்
பாவியான் பயந்த நங்கை நின்பொருட் டாகப் பட்டேன்

ஆவிபோ யழிய னன்றே யமரர்க்கு மரச னவான்
தேவியா யிருத்தல் தீதே சிறையிடத் தேம்புகின்றாய். 2259

என்னையென் குலத்தி னோடு மின்னுயிர் தாங்கி யீண்டு
நன்னெடுஞ் செல்வந் துய்ப்பே னுக்கினை நல்கி நாளும்
உன்னைவெஞ் சிறையி னீக்கி யின்பத்துளுய்ப்பாயென்னாப்
பொன்னடி மருங்கு வீழ்ந்தா னுருமுகப் பொருமுகின்றான்.

சீதை

அறங்கெட வழக்கு நீங்க வரசர்த மரபுக் கான்ற
மறங்கெட மெய்ம்மை தேய வசையுற மறைக ளோதும்
திறங்கெட வொழுக்கங் குன்றத் தேவரும் பேணத் தக்க
நிறங்கெட வினைய சொன்னாய் சனகன்கொ ளினையினைய.

நீயுநின் கிளையு மற்றிந் நெடுநில வரைப்பு நேரே
மாயினு முறைமை குன்றவாழ்வெனோவயிரத் திண்டோள்
ஆயிர நாமத் தாழி யரியினுக் கடிமை செய்வேன்
நாயினை நோக்கு வேனோ நாண்டுறந் தாவி நச்சி. 2262

இராவணன் சீறுதல்

வன்றிர லரக்க னன்ன வாசக மனத்துக் கொள்ளா
நின்றது நிற்க மண்மே னிகழ்ந்தவா நிகழ்க நின்முன்
நின்றவ னல்லன் போலாஞ் சனகனிக் கணத்தில்நின்முன்
கொன்றுயிர் குடிப்பெ னென்னாச் சுரிகைவா ளுரீஇக்
கொண் டானல். 2263

சீதை

என்னையுங் கொல்லா யின்னே
யிவனையுங் கொல்லா யின்னும்
உன்னையுங் கொல்லாய் மற்றிவ்
வுலகையுங் கொல்லா யானோ
இன்னுயிர் நீங்கி யென்றுங்
கெடாப்புக ழெய்துகின்றேன்
பின்னையு மெங்கோ னம்பிற்
கிளையொடும் பிழையா யென்றாள். 2264

தூதர் இராவணனுக் குரைத்தல்

புறந்தரு சேனை முந்நீ ரிருஞ்சிறை போக்கிப் போதப்
பறந்தன ரனைய தூதர் செவிமருங் கெய்திப் பையத்

திறந்திற மாகி நின்ற கவிப்பெருங் கடலைச் சிந்தி
இறந்தன னும்பி யம்பிற் கொன்றன னிராம னென்றார்.

தம்பியோ வானவராந் தாமரையின் காடுழக்கும்
தும்பியோ நான்முகத்தோன் சேய்மதலை தோன்றாலோ
நம்பியோ விந்திரனை நாமப் பொறிதுடைத்த
எம்பியோ யானுன்னை யிவ்வுரையுங் கேட்டேனே. 2266

நோக்கறவு மெம்பியர்கண் மாளவுமிந் நொய்திலங்கை
போக்கறவு மாதுலனார் பொன்றவுமென் பின்பிறந்தாள்
மூக்கறவும் வாழ்ந்தே னொருத்தி முலைக்கிடந்த
ஏக்கறவா லின்னமி ரேனோ வுனையிழந்தும். 2267

செந்தேன் பருகித் திசைதிசையு நீவாழ
உய்ந்தே னினியின்று நானு முனக்காவி
நொந்தேன் பிரியேன் றனிபபோகத் தாழ்க்கிலேன்
வந்தேன் றொடர மதக்களிறே வந்தேனால். 2268

சீதை மகிழ்ச்சி

வீங்கினாள் கொங்கை மெலிந்த மெலிவகல
ஓங்கினா ளுள்ள முவந்தா ளுயிர் புகுந்தாள்
தீங்கிலாக் கற்பிற் றிருமடந்தை சேடியாம்
பாங்கினா ளூற்ற தனையாரே பகர்கிற்பார். 2269

இராவணன்

தாவரிய பேருலகத் தெம்பி சவத்தோடும்
யாவரையும் கொன்றடுக்கி யென்றும் மிறவாத
மூவரையு மேலைநாள் மூவா மருந்துண்ட
தேவரையும் வைப்பேன் சிறையென்னச் சீறினான். 2270

கூறோ மினிநாமக் கும்ப கருணனார்
பாருடு வெங்களத்துப் பட்டா ரெனப்பதையா
வேறோர் சிறையிவனை வைம்மின் விரைந்தென்ன
மாறோர் திசைநோக்கிப் போனார் மகோதரனார். 2271

திரிசடை கூறுதல்

உந்தையென் றுனக்கெதி ருருவ மாற்றியே
வந்தவன் மருத்தனென் றுளனொர் மாயையான்
அந்தமில் கொடுந்தொழி லரக்க னமெனாச்
சிந்தையி னுணர்த்தின ளமுதின் செம்மையாள். 2272

அதிகாயன் வதைப் படலம்

நதிகாய் நெடுமா னமுநா னுமுரு
மதிகாய் குடைமன் னனைவை துரையா
விதிகா யினும்வீ ரம்வெலற் கரியான்
அதிகா யனெனும் பெயரா னறைவான். 2273

காய்ப்புண் டநெடும் படைகை யுளதாத்
தேய்ப்புண் டவனுஞ் சிலசில் கணையால்
ஆய்ப்புண் டவனும் மவர்சொல் வலதால்
ஏய்ப்புண் டவனும் மெனவெண் ணினையோ. 2274

கிட்டிப் பொருதக் கிளர்சேனை யெலாம்
மட்டித்துயர் வானரர் வன்றலையை
வெட்டித் தரையிட் டிருவில் லினரைக்
கட்டித் தருவென் னிது காணுதியால். 2275

இராவணன் விடைகொடுக்க அதிகாயன் புறப்பட்டனன்

கும்பக் கொடியோ னுநிகும் பனும்வே
றம்பொற் கழல்வீ ரனகம் பனுமுன்
செம்பொற் பொலிதே ரயல்செல் குவரால்
உம்பர்க்கும் வெலற் கரியா ருரவோர். 2276

மலைகண் டனபோல் வருதோ ளொடுதோள்
கலைகண் டகருங் கடல்கண் டுளவாம்
நிலைகண் டனகண் டொருதா தைநெடுந்
தலைகண் டிலனின் றுசலித் தனனால். 2277

என்று முனியா விதிழைத் துளவன்
பின்று னையுமிப் படிசெய் துபெயர்ந்
தன்று ளிடர்கண் டிடரா றுவனென்
றுன்று வொருவற் கிதுணர்த் தினனால். 2278

இலக்குவனிடம் தூதனுப்புதல்.

மயிடன் என்பான் தூதாக வந்து இராமரைக் கண்டனன்.

இராமர் வினவ அதிகாயன் தன்மையை வீடணன் விளம்புதல்.

ஓவா நெடுமா தவமொன் றுடையான்
தேவா சுரரா தியர்செய் செருவில்
சாவா னிறையுஞ் சலியா வலியான்
மூவா முதனுன் முகனுர் மொழியால். 2279

இராமர் கூறுதல்

எண்ணு யிரகோ டியிரா வணரும்
விண்ணு டரும்வே றுலகத் தெவரும்
நண்ணு வொருமூ வருநண் ணிடினும்
கண்ணு லிவன்விற் றொழில்கா ணுதியால். 2280

வானென் பதென்வை யகமென் பதென்மால்
தானென் பதென்வே றுதனிச் சிலையோர்
யானென் பதெனீ சனெனின் றிமையோர்
கோனென் பதெனெம் பிகொதித் திடுமேல். 2281

போர் நிகழ்தல்.

இளையோன் கணைவிடுதல்

ஓராயிரமயில் வெங்கணை யொருகால் விடுதொடையில்
காராயிரம்விடு தாரையி னிமிர்கின் றனகதுவுற்
றீரா யிரமத மால்கரி விழுகின் றனவினிமேல்
ஆராய் வதெனவன் விற்றொழி லமரே சருமறியார். 2282

அநுமன் யானைப்படையைக் கொல்லுதல்

பறித்தான்சில பகிர்ந்தான்சில வகிர்ந்தான்சிலபணைபோல்
இறுத்தான்சில விடந்தான்சில பிளந்தான்சிலவெயிற்றால்
கறித்தான்சில கவர்ந்தான் சில கடித்தான்சிலபிடித்தான்
முறித்தான்சில திறத்தானையி னெடுங்கோடுகண்
முனிந்தான் 2283

மாருதி தேவாந்தகனை வதைத்தல்

சூலப்படைதொடுவான்றனையிமையாதமுன் றொடர்ந்தான்
ஆலத்தினு வலியானும்வந் ததிரேபுகுந் தடர்த்தான்
காலற்கிரு கண்ணுன்றன கையாலவன் கதுப்பின்
மூலத்திடை புடைத்தானுயிர் முடித்தான்சிர மடித்தான்.

அதிகாயன் அநுமனை நோக்கி அறைதல்

தேய்த்தாயொரு தனியெம்பியைத் தலத்தோடொரு
திறத்தான்
போய்த்தாவினை நெடுமாகடல் பிழைத்தாய்கடல்புகுந்தாய்
வாய்த்தானையு மடித்தாயது கண்டேனெதிர் வந்தேன்
ஆய்த்தாயது முடிவின்றுனக் கணித்தாகவந் தடுத்தாய்.

அதிகாயன் எதிரில் திரிசிரனை அநுமன் தேய்த்துக் கொல்லுதல்.

தேர்மேற்செலக் குதித்தான் றிரி சிரத்தோனையோர் திறத்தால்
கார்மேற்றுயின் மலைபோலியைக் கரத்தாற் பிடித் தெடுத்தான்
பார்மேற்படுத் தரைத்தானவர் பழிமேற்படப் படுத்தான்
போர்மேற் றிசை நெடுவாயிலி னுளதாமெனப் போனான்.

அங்கதன் தோளில் இலக்குமணர் ஏறுதல்.

ஆமென வமலன் றம்பி யங்கத னலங்கற் றோண்மேல்
தாமரைச் சரணம் வைத்தான் கலுழனிற் றூங்கி நின்ற
கோமக னாற்றல் நோக்கிக் குளிர்கின்ற மனத்த ராகிப்
பூமழைபொழிந்து வாழ்த்திப் புகழ்ந்தனர் புலவரெல்லாம்.

அதிகாயனை நோக்கி இலக்குமணர் கூறுதல்.

உமையனே காக்க மற்றங் குமையொரு கூறன் காக்க
இமையவ ரெல்லாங் காக்க வுலகமோ ரேழுங் காக்க
சமையுமுன் வாழ்க்கை யின்றோ டென்றுதன் சங்க மூதி
அமையுருக்கொண்டகூற்றைநாணறிந்துருமினார்த்தான்

வாலிசேய் மேனி மேலு மழைபொரு குருதி வாரி
காலுயர் வரையிற் செங்கே ழருவிபோலொழுகக்கண்டான்
கோலொரு பத்து நூற்றூற் குதிரையின் றலைகள்கொய்து
மேலவன் சிரத்தைச் சிந்தி வில்லையுந் துணித்தான்வீரன்.

வாயுதேவன் கூற, இலக்குமணர் அதிகாயன்மீது அயன்படை விடுத்தல்.

நன்றென வுவந்து வீர னான்முகன் படையை வாங்கி
மின்றனி திரண்ட தென்னச் சரத்தொடுங்கூட்டிவிட்டான்
குன்றினு முயர்ந்த தீயோன் றலையினைக் கொண்டவாளி
சென்றது விசும்பி னூடு தேவருந் தெரியக் கண்டார்.

நராந்தகனை அங்கதன் கொன்றனன்.

மத்தனை நீலன் கொன்றனன்.

உன்மத்தனை இடபன் கொன்றனன்.

கும்பனை சுக்ரீவின் கொன்றனன்.

நிகும்பனை மாருதி மாய்த்தனர்.

அதிகாயன் மாண்டதை இராவணன் கேட்டு வருந்துதல்

திசையினை நோக்கு நின்ற தேவரை நோக்கும் வந்த
வசையினை நோக்குங் கொற்ற வாளினை நோக்கும் பற்றிப்
பிசையுறுங் கையை மீசை சுறுக்கொள வுயிர்க்கும்பேதை
நசையிடைக் கண்டா னென்ன நகுமழு முனியுநாணும்.

மண்ணினை யெடுக்க வெண்ணும்
வானினை யிடிக்க வெண்ணும்
எண்ணிய வுயிர்க ளெல்லா
மொருகணத் தெற்ற வெண்ணும்
பெண்ணெனும் பெயர வெல்லாம்
பிளப்பனென் றெண்ணு மெண்ணிப்
புண்ணிடை யெரிபுக் கென்ன
மானத்தாற் புழுங்கி னையும். 2292

தானமாலை புலம்புதல்

உம்பி யுணர்வுடையான் சொன்ன வுரைகேளாய்
நம்பி குலக்கிழவன் கூறு நலமோராய்
கும்ப கருணனையுங் கொல்வித்தென் கோமகனை
அம்புக் கிரையாக்கி யாண்டா யரசைய. 2293

நாகபாசப் படலம்

குழுமிக் கொலைவாட்க ணரக்கியர் கூந்தல்தாழத்
தழுவித் தலைபெய்து தங்கைகொடு மார்பினெற்றி
அழுமித் தொழிலியாது கொலென்று ரயிர்ப்பு முற்றுன்
எழிலித் தனியேறென விந்திரசித் தெழுந்தான். 2294

இந்திரஜித்து இராவணனிடம் வந்து வினவ
இராவணன் இயம்புதல்.

ஆர்கொன்றவ ரென்றலும் பேரதி காயனென்னும்
பேர்கொன்றவன் வென்றி யிலக்குவன் பின்பு நின்றார்
ஊர்கொன்றவ னுற்பிற ராலென வுற்றவெல்லாம்
தார்கொன்றையி னன்கிரி சாய்த்தவன் றானுரைத்தான்.

இந்திரஜித்து சூளுரைத்தல்.

என்னின்று நினைத்து மியம்பியு மெண்ணியுந்தான்
கொன்னின்ற படைக்கலத் தெம்பியைக் கொன்றுளானை

அந்நின்ற நிலத்தவ னுக்கையை நீக்கியல்லால்
மன்னின்ற நகர்க்கினி வாரலென் வாழ்வும் வேண்டேன்.

மருந்தேநிக ரெம்பிதன் னருயிர் வௌவினானை
விருந்தேயென வந்தகற் கீகிலன் வில்லுமேந்திப்
பொருந்தேவர் குழாநகை செய்திடப் போந்துபாரின்
இருந்தேனெனி னனவ் விராவணி யல்லனென்றான். 2297

இந்திரசித்து தேர் ஏறுதல்

நூறாயிரம் யாளியி னேன்மை தெரிந்தசீயத்
தேருமவை யன்னவை யாயிரம் பூண்டதென்ப
மாறாயொரி லங்கை நிகர்ப்பது வானுளோரும்
தேறாதது மற்றவ னேறிய தெய்வ மாத்தேர். 2298

அன்னானொடு போகிய தானை யறிந்துகூற
என்னாலரி தேனு மியம்புவான் மீகனென்னும்
நன்னான்மறை யானது நாற்பது வெள்ளமென்னச்
சொன்னான்பிறர் யாரஃ துணர்ந்து தொகுக்கவல்லார்.

வீடணன் இலக்குவனுக்கு உரைத்தல்

யாரிவன் வருபவ னியம்பு வாயென
வீரவெந் தொழிலினன் விளம்ப வீடணன்
ஆரிய விவனிக லமரர் வேந்தனைப்
போர்கடந் தவனின்று வலிது போரென்றான். 2300

இனியவை மறையுமோ விந்தி ரன்புயப்
பனிவரை யுளநெடும் பாசப் பஃறழும்
பனுமனைப் பிணித்துள னை போதவன்
தனுமறை வித்தகந் தடுக்கற் பாலதோ. 2301

அசுர வாநர யுத்தம்

எற்றுமின் பற்றுமி னெறிமி னெய்மினென்
றுற்றன வுற்றன வுரைக்கு மோதையும்
முற்றுறு கடையுகத் திடியின் மும்மடி
பெற்றன பிறந்தன சிலையின் பேரொலி. 2302

பனிவென்ற பதாகையென்றும் பல்லுளைப்பரிமாவென்றுந்
தனுவென்றும் வாளியென்றுந் தண்டென்றுந் தனிவே
லென்றுஞ்

சினவென்றி மதமாவென் றுந் தேரென்றுந் தெரிந்ததில்லை
யநுமன்கை வயிரக் குன்று லரைப்புண்ட வரக்கர் தானை.

இந்திரசித்தின் கடும்போர்

மொய்யெ டுத்தகணை மாரி யாலிடைமு
டிந்த தென்றுமுறை கண்டிலா
ரெய்வி டத்தெறியு நாணி னோசையல
தியாது மொன்றுசெவி யுற்றிலார்
மெய்யெ டுத்தகவி வெள்ள மியாவையும்வி
ழுந்து போனவெனும் விம்மலாற்
கையெ டுத்தனகு ரங்கி னோடுமுறை
கண்டு தேவர்கள் கலங்கினார். 2304

இந்திரஜித்து அநுமனிடம் கூறிய வீரவுரை

நில்ல டாசிறிது நில்ல டாவுனைநி னைத்து
வந்தனன் முனைக்குநான்
வில்லெ டாமைநின தாண்மை பேசியுயி
ரோடு நின்றுவிளை யாடினாய்
கல்லெ டாநெடும ரங்க ளோவருக ருத்தி
னேன்வலிக டப்பநீ
சொல்ல டாவெனவி யம்பி னனிகல
ரக்க னேயனிவை சொல்லினான். 2305

மாருதி வீரவுரை

வில்லெ டுக்க வுரி யார்க ளேயசில வீர
ரிங்குமுளர் மெல்லியோய்
கல்லெ டுக்கவுரி யானு நின்றனன தின்று
நாளையிடை காணலாம்
எல்லெ டுத்தபடை யிந்தி ராதியரு னக்கி
டைந்துயர்கொ டேகுவார்
புல்லெ டுத்தவர்க ளல்லம் வேறுசில
போரெ டுத்தெதிர்பு குந்துளேம். 2306

என்னொ டேபொருதி யோவ தன்றெனினி
லக்கு வப்பெயரி னெம்பிரான்
றன்னொ டேபொருதி யோவு னுந்தைதலை
தள்ள நின்றதனி வள்ளலா
மன்னொ டேபொருதி யோவு ரைத்ததும றுக்கி
லோமெனவ ழங்கினான்

பொன்னெ டேபொருவி னல்ல தொன்றெடுபொ
துப்ப டாவுயர்பு யத்தினன். 2307

மாருதி விட்ட மலையை பொடி செய்து
இந்திரசித்து கணைமழை பொழிதல்

ஒன்று போல்வனவொ ராயி ரம்பகழி
யூடு போயுருவ வாடகக்
குன்று கால்குடைய மேலு யர்ந்திடைகு
லுங்கு கின்றனைய கொள்கையான்
மன்ற னுறுதட மேனி மேலுதிர
வாரி சோரவரு மாருதி
நின்று தேறுமள வின்கண் வெங்கண்விழி
நீலன் வந்திடைநெ ருக்கினன். 2308

விரைந்து போரிடுமாறு வீடணர் இளையோனுக்குரைத்தல்.
இந்திரஜித்து இலக்குவனைக் காணுதல்

என்பது சொல்லக் கேட்ட விந்திர வில்லி னேடும்
பொன்பொரு மேக மொன்று வருவது போல்கின் றனை
முன்பனை முன்புநோக்கியிவன்கொலாம்பரதன் முன்னேன்
தன்பெருந் தம்பி யென்றா னெனச் சாரன் சொன்னன்.

இலக்குமணர் கணைமழை விடாது பொழிந்தனர்.
இந்திரஜித்து வியத்தல்

உலக்குன ருலக்கின்றுரையெண்ணுவா னுற்ற விண்ணோர்
கலக்குறு கண்ணர் நோக்கிக் கடையுறக் காண லாற்றார்
விலக்கரும் பகழி மாரி விளைக்கின்ற வினைவை யுன்னி
யிலக்குவன்சிலைகொடேகொ லெழுமழைபயின்றதென்றார்.

கையற்றார் கால்க ளற்றார் கழுத்தற்றார் கவச மற்றார்
மெய்யற்றார் குடர்கள் சோர விசையற்றார் விளிவு மற்றார்
மையற்றார்க் கரியுந் தேரும் வாசியு மற்று மற்றார்
உய்யச்சாய்ந் தோடிச் சென்று ருயிருள்ளா ராகி யுள்ளார்.

அநுமன்மேல் இளையோனேறி
அம்புமழை பொழிந்தனன்

சீறுநா றெரிந்த சிந்தை யிலக்குவன் சிலைக்கை வாளி
நூறுநா றேவி நொய்தி னுடங்குளை மடங்கன் மாவும்
வேறுகூ றியற்றி வீரக் கொடியையு மறுத்து வீழ்த்தி
யாறுநா றம்பு செம்பொற் கவசம்புக் கழுந்த வெய்தான்.

இந்திரஜித்து மெச்சுதல்

அந்நர னல்ல ணுகி ஞரண னனைய னன்றேல்
பின்னரான் பிரம னென்பார்ப் பேசுக பிறந்து வாழும்
மன்னர்நம் பதியின் வந்து வரிசிலை பிடித்த கல்வி
இந்நரன் றன்னே டொப்பார் யாருள ரினைய ரென்ருன்.

இந்திரஜித்து களைத்து நிற்றல்

நூறு வெங்கணை மார்பி னுழைதலின்
ஊறு சோரியொ டுள்ளமுஞ் சோர்தரத்
தேற லாந்துணை யுஞ்சிலை யூன்றியே
ஆறி நின்றன ஞற்றலிற் ருேற்றிலான். 2314

இந்திரசித்தின் தேரை அநுமன் அழித்தல்

புதையு நன்மணி பொன்னுரு ளச்சொடு
சிதைய வாயிரம் பாய்பரி சிந்திட
வதையின் மற்ருெரு கூற்றென மாருதி
உதையி ஞலவன் றேரை யுருட்டினுன். 2315

ஏறி யேறி யிழுந்ததல் லாலிகல்
வேறு செய்திலன் வெய்யவன் வீரனும்
ஆறு கோடிப் பகழியி னையிரு
நூறு தேரொரு நாழிகை நூறினுன். 2316

சுற்றி வால்கொடு தூவுந் துகைக்கும்விட்
டெற்றும் வானி னெடுத்தெறி யும்மெதிர்
உற்று மோது முதைக்கு முறுக்குமால்
கொற்ற வில்லியன் றேறிய கூற்றமே. 2317

இந்திரசித்து

அன்று தன்னயல் நின்ற வரக்கரை
ஒன்று வாண்முக நோக்கி யொருவிலான்
நன்று நம்படை நாற்பது வெள்ளமும்
கொன்று நின்ற படியெனக் கூறினுன். 2318

ஆய வீரரு மைய வமர்த்தலை
நீயு நாற்பது வெள்ள நெடும்படை
மாய வெங்கணை மாரி வழங்கினை
ஓய்வில் வெஞ்செரு வொக்குமென் ருேதினுர். 2319

வெங்கணை திறந்த மெய்யர் விளிந்திலர்விரைந்துசென்ருர்
செங்குழற் கற்றை சோரத் தெரிவைய ராற்றத் தெய்வப்
பொங்கிரும் பள்ளி புக்கா ரவருடல் பொருந்தப் புல்லி
அங்கவ ராவி யோடுந் தம்முயிர் போக்கி யற்ருர். 2320

பொறிக்கொடும் பகழி மார்பர் போயின ரிடங்கள் புக்கார்
மறிக்கொளுஞ் சிறுவர் தம்மை மற்றுள சுற்றந் தம்மைக்
குறிக்கொளு மென்று கூறி யவர்முகங் குழைய நோக்கி
நெறிக்கொளுங்கூற்றைநோக்கியாருயிரொறுத்துநீத்தார்.

தாமரைக் கண்ணன் றம்பி தன்மையீ தாகின் மெய்ம்மை
வேமரைக் கணத்தி னிவ்வூ ரிராவணி விளிதன் முன்னம்
மாமரக் கானிற் குன்றின் மறைந்திரு மறையவல்லை
போமெனத் தமரைச் சொல்லிச்சிலருடல்துறந்துபோனர்.

சூரியன் மேற்கடலில் மறைதல்.

வீடணன் உரைத்தல்

நாகமே யனைய நம்ப நாழிகை யொன்று நான்கு
பாகமே கால மாகப் படுத்தியேற் பட்டா னன்றேல்
வேகவா ளரக்கர் காலம் விளைந்தது விசும்பின் மீதா
ஏகுமேல்வெல்வனென்ப திராவணற் கிளவல் சொன்னன்.

அத்தனை வீரர் மேலு மாண்டகை யநுமன் மேலும்
எத்தனை கோடி வாளி மழையென வெய்யா நின்ற
வித்தக வில்லி னனைக் கொல்வது விரும்பி வீரன்
சித்திரத்தேரைத்தெய்வப் பகழியாற்சிதைத்துவீழ்த்தான்.

இந்திரசித்து மாயையால் மறைதல்

தனிமறப் பண்டு செய்த தவத்தினுந் தருமத் தானும்
பிணியறுப் பவரிற் பெற்ற வரத்தினும் பிறப்பி னலும்
மணிநிறத் தரக்கன் செய்த மாயமந் திரத்தி னலும்
அணுவெனச் சிறிய தாங்கோ ராக்கையு முடைய னன்.

ஆயின காலத் தார்த்தா ரமர்த்தொழி லஞ்சி யப்பால்
போயின னென்ப துன்னி வானர வீரர் போல்வார்
நாயகற் கிளைய கோவு மன்னதே நினைந்து நக்கான்
மாயையைத்தெரியவுன்னர் போர்த்தொழின்மாற்றிநின்ருர்.

அதுகணத் தநுமன் ருேணின் றையனு மிழிந்து வெய்ய
கதுவலிச் சிலையை வென்றி யங்கதன் கைய தாக்கி

முதுகுறச் சென்று நின்ற கணையெலா முறையின் வாங்கி
விதுவிதுப் பாற்ற லுற்ருன் விளைகின்ற துணர்ந்தி
லாதான். 2327

நாகபாசம் விடுதல்

விட்டன னரக்கன் வெய்ய படையினை விடுத்தலோடும்
எட்டினே டிரண்டு திக்கு மிருள்திரிந் திரிய வோடிக்
கட்டின தென்ப மன்னே காகுத்தற் கிளையகாளை
வட்டவான் வயிரத் திண்டோண் மலைகளை யுலைய வாங்கி.

காலுடைச் சிறுவன் மாயக் கள்வனைக் கணத்தின் காலை
மேல்விசைத் தெழுந்து நாடிப் பிடிப்பெனென் றுறுக்கும்
வேலை
ஏல்புடைப் பாச மேனு விராவணன் புயத்தை வாலி
வால்பிணித் தென்னச் சுற்றிப்பிணித்தது வயிரத்தோளை.

யாவரையும் பிணிக்க எல்லோரும் மயங்குதல்

மயங்கினுன் வள்ளல் தம்பி மற்றையோ முற்று மண்ணை
முயங்கினர் மேனி யெல்லா மூடினு னரக்கன் மூரித்
தயங்குபே ராற்ற லானுந் தன்னுடல் தைத்த வாளிக்
குயங்கினு னுளைந்தான் வாயா லுதிரநீ ருமிழா நின்ருன்.

இந்திரசித்து தன்மாளிகை யடைதல்.

வீடணன் புலம்புதல்

கொல்வித்தா னுடனே நின்ரு னென்பரோ
கொண்டு போனுன்
வெல்வித்தான் மகனை யென்று பகர்வரோ
விளைவிற் கெல்லாம்
நல்வித்தாய் நடந்தான் முன்னே யென்பரோ
நயந்தோர் தத்தம்
கல்வித்தாய் வார்த்தை யென்று கரைவித்தா
னுயிரைக் கண்போல். 2331

அனலன் தேற்ற வீடணன் சென்று இராமருக்கு உரைத்தல்

நீயினிதிருத்தியான்போய்நெடியவர்க்குரைப்ப னென்னுப்
போயின னனலன் போயப் புண்ணியன் பொலன்கொள்
பாதம்
மேயினன் வணங்கி யுற்ற வினையெலா மியம்பி நின்ருன்
ஆயிரம் பெயரி ஞனு மருந்துயர்க் கடலு ளாழ்ந்தான்.

விம்மினன் வெதும்பி வெய்துற் றேங்கின னிருந்த வீரன்
இம்முறை யிருந்து செய்வதியாவதுமில்லென் றெண்ணிப்
பொம்மென வெழுந்து நொய்திற் பொருக்கென விசையிற்
போனான்
தெம்முறை துறந்துவென்றசெங்கள மருங்கிற் சேர்ந்தான்.

தீக்கணையால் இருளை நீக்குதல்

ஆரிரு ளன்ன தாக ஆயிர நாமத் தண்ணல்
சீரிய அனலித் தெய்வப் படைக்கலந் தெரிந்து வாங்கிப்
பாரிய விடுத்த லோடும் பகையிரு ளிருந்து பாறச்
சூரிய னுச்சி யுற்று லொத்ததவ் வுலகின் சூழல். 2334

இளையவனைக் கண்டு இராமர் புலம்புதல்

அய்யவ னுக்கை தன்மேல் விழுந்துமார் பழுந்தப் புல்லி
உய்யல னென்ன வாவி யுயிர்த்துயிர்த் துருகு கின்றான்
பெய்யிரு தாரைக் கண்ணன் பெருந்துளி பிறங்க வானின்
வெய்யவன் றன்னைச் சேர்ந்த நீல்நிற மேக மொத்தான்.

உழைக்கும்வெய் துயிர்க்கு மாவி
யுருகும்போ யுணர்வு சோரும்
இழைக்குவ தறிதல் தோற்று
னிலக்குவா விலக்கு வாவென்
றழைக்குந்தன் கையை வாயின்
மூக்கின்வைத் தயர்க்கு மையா
பிழைத்தியோ வென்னு மெய்யே
பிறந்தேயும் பிறந்தி லாதான். 2336

தாமரைக் கையாற் றாளைத் தைவருங்
குறங்கைத் தட்டும்
தூமலர்க் கண்ணை நோக்கு மார்பிடைத்
துடிப்புண் டென்னு
ஏமுறும் விசும்பை நோக்கு மெடுக்குந்தன்
மார்பி னேற்றும்
பூமியின் வளர்த்துங் கள்வன் போயகன்
றானோ வென்னும். 2337

வில்லினை நோக்கும் பாச விசிப்பினை நோக்கும் வீயா
வல்லினை நோக்கும வானத் தமரரை நோக்கும் பாரைக்

கல்லுவென்வேரோடென்னும் பவளவாய்கறிக்குங் கற்றோர்
சொல்லினைநோக்குந் தன்போற்புகழினைநோக்குந்தோளான்.

எடுத்தபோ ரிலங்கை வேந்தன் மைந்தனோ டிளையகோவுக்
கடுத்ததென் றென்னை வல்லை யழைத்திலை யமரர் பாசம்
தொடுத்தகை தலையி னோடுந் துணித்துயிர் துடைக்க
வென்னைக்
கெடுத்தனை வீட ணாநீ யென்றனன் கேடி லாதான். 2339

வீடணன் நிகழ்ந்ததை விளம்புதல்.

அவ்வுரை யருளக் கேட்டா னழிகின்ற வரக்கன் றம்பி
இவ்வழி யவன்வந் தேற்ப தறிந்தில மெதிர்ந்த போதும்
வெவ்வழி யவனே தோற்கு மென்பது விரும்பி நின்றேன்
தெய்வவன் பாசஞ் செய்த செயலிந்த மாயச்செய்கை. 2340

பின்னையு மெழுந்து பேர்த்தும் வணங்கியெம்பெருமயாரும்
இன்னுயிர் துறந்தா ரல்ல ரிறுக்கிய பாச மிற்றால்
புன்னுனைப் பகழிக் கோயுந் தரத்தரோ புலம்பி யென்னை
இன்னலுற் றயரல் வெல்லா தருமத்தைப்பாவமென்றான்.

கருடன் வந்து இராமரைத் துதித்தல்

பேராயி ரங்க ளுடையாய்பி றந்த
பொருடோறு நிற்றி பிரியாய்
தீராய் பிரிந்து திரிவாய்தி றந்தொ
றவைதேறு மென்று தெளியாய்
கூராழி யங்கை யுடையாய்தி ரண்டொ
ருருவாதி கோட லுரிபோல்
ஆராயி னேது மிலையாதி யாரிவ்
வதிரேக மாயை யறிவார். 2342

நாகபாசம் நீங்குதல்

வாசங் கலந்த மரைநாள நூலின்
வகையென்ன தென்னை மழையென்
றுசங்கை கொண்ட கொடைமீளி யண்ணல்
சரராமன் வெண்ணெ யணுகும்
தேசங் கலந்த மறைவாணர் செஞ்சொ
லறிவாள ரென்றிம் முதலோர்
பாசங் கலந்த பசிபோல கன்ற
பதகன்று ரந்தவுரகம். 2343

இளையானை யுந்து தொழுவானை யன்பி
னிணையார மார்பி னணையா
விளையாத துன்பம் விளைவித்த தெய்வம்
வெளிவந் ததென்ன வியவாக்
கிளையாரி னின்ன துணையோ ரையாவி
கெழுவாவெ ழுந்து தழுவா
முளையாத திங்க ளுகிரான்முன் வந்து
முறைநின்ற வீரன் மொழிவான். 2344

கருடனை இராமர் வினவுதல்

ஐயநீ யாரை யெங்க ளருந்தவப் பயத்தி னான்வந்
தெய்தினை யுயிரும் வாழ்வு மீந்தனை யெம்ம னோரால்
கையுறை கோடற் கொத்த காட்சியை யல்லை மீட்சி
செய்திறமில்லையாலென் றான் றேவர்க்குந் தெரிக்கி லாதான்.

பறவையின் குலங்கள் காக்கும் பாவகன் பழைய நின்னோ
டுறவுள தன்மை யெல்லா முணர்த்துவெ னரக்க னோடம்
மறவினை முடித்த பின்னர் வருவெனி னுழையன் மாயப்
பிறவியின்பகைஞனல்கு விடையெனப் பெயர்ந்து போனான்.

ஆரிய னவனை நோக்கி யாருயி ருதவி யாதும்
காரிய மில்லான் போனான் கருணையோர் கடன்மை யீதால்
பேரிய லாளர் செய்கை யூதியம் பிடித்து மென்னார்
மாரியை நோக்கிக் கைம்மா றியற்றுமோ வைய மென்றான்.

இறந்தன னிளவ லென்ன விறைவியு மிடுக்க ணெய்தும்
மறந்தன ருறங்கு கின்ற வஞ்சரு மறுகி மீளப்
பிறந்தன ரென்று கொண்டோர் பெரும்பயம்பிடிப்பரன்றே
அறந்தருசிந்தையன்ப ஆர்த்துமென் றநுமன்சொன்னான்.

வானரர் ஆர்த்தல்

அழகிதென் றண்ணல் கூற ஆர்த்தனர் கடல்க ளஞ்சி
குழைவுற வநந்த னுச்சிக் குன்றநின் றண்ட கோளம்
எழுமிசை வுலக மேன்மே லேங்கிட விரிந்து சிந்தி
மழைவிழ மலைகள் கீற மாதிரம் பிளக்க மாதோ. 2349

ஆரவாரத்தைக் கேட்ட இராவணன் இந்திரசித்தன்
மாளிகை செல்லுதல்

எழுந்தடி வணங்க லாற்றா னிருகையு மரிதி னேற்றித்
தொழுந்தொழி லானை நோக்கித் துணுக்குற்ற மனத்தன்
றோன்றல்

அழுங்கினை வந்த தென்னை யடுத்தமை தென்றடுத்துச்
சொன்னான்
புழுங்கிய புண்ணி னானு மினையன புகறலுற்றான். 2350

இந்திரசித்து தன் வெற்றியைக் கூறுதல்.
தூதர் வந்து நடந்ததைக் கூறுதல்.

இந்திரசித்து கூறுதல்

இன்றொரு பொழுது தாழ்த்தென் னிகற்பெருஞ் சிரமநீங்கிச்
சென்றொரு கணத்தி னானை நான்முகன் படைத்த தெய்வ
வென்றிவெம்படையினாலுன்மனத் துயர்மீட்பேனென்றான்
நன்றெனை வரக்கன் போய்த்த னளிமலர்க் கோயில்புக்கான்.

படைத் தலைவர் வதைப் படலம்

படைத் தலைவர்களின் நாசியை அறுக்குமாறு
இராவணன் கட்டளையிடுதல்

ஏற்ற மினிச்செயல் வேறிலை யீர்வீர்
நாற்ற நுகர்ந்துயர் நாசியை நாமக்
கோற்றரு திண்பணை கொட்டினிர் கொண்டோர்
சாற்றுமி னஞ்சின ரென்றுரை தந்தே. 2352

மாலி தடுத்தல்

அக்கண னேயயில் வாளினர் நேரா
மிக்குயர் நாசியை யீரவி ரைந்தார்
புக்கன ரப்பொழு திற்புகழ் தக்கோய்
தக்கில தென்றனன் மாலி தடுத்தான். 2353

அசுர சேனைகள் வந்து போர்புரிதல்.
தூமாட்சனை மாருதி வதைத்தனர்.
பெரும்பக்கனை அங்கதன் வதைத்தனர்.

மகரக் கண்ணன் வதைப் படலம்

மகரக் கண்ணன் இராவணன்பால் விடைபெற்று
போர்க்களம் வந்து பெரும்போர் புரிந்தனன்.

உருமுறை யநந்த கோடி யுதிர்ந்தன வூழி நாளின்
இருமுறை காற்றுச் சீறி யெழுந்தது விழுந்த வெங்கும்
கருமுறை நிறைந்த மேகங் கான்றன கல்லின் மாரி
பொருமுறை மயங்கிச் சுற்று மிரியலிற் கவிகள் போன.

போயின திசைகளெங்கும்புகையொடுநெருப்பும் போர்ப்பத்
தீயின மனைய செல்லு மாயமா மாரி சிந்த
ஆயிர கோடி மேலு மவிந்தன கவிக ளையன்
மாயமோவரமோவென்ருன்வீடணன்வணங்கிச்சொன்னுன்.

நோற்றுடைத் தவத்தி னுன்மை நோக்கினர் கருணை
நோக்கிக்
காற்றுடைச் செல்வன் ருனு மழையுடைக் கடவுள் தானும்
மாற்றல ரீந்த தெய்வ வரத்திஞல் வந்ததென்ருன்
நூற்றிகழ்க்கமலக்கண்ணனகற்றுவெ ஞெடியினென்ருன்.

காலவன் படையுந் தெய்வக் கடலவன் படையுங் காலக்
கோவலன் சிலையிற் கோத்துக்கொடுங்கணை யோடுங்கூட்டி
மேலவன் றுரத்த லோடும்விசும்பினின்றெரிந்துவெய்தின்
மாலிருங் கடலின் வீழ்ந்து மறைந்தன மழையுங் காற்றும்.

இராமர் மகரக் கண்ணனை வதைத்தல்

அம்பின்வா யாறு சோரு மரக்கன்ற னருளில் யாக்கை
உம்பரிற்பரப்பித்தான்வேறுளித்தனனென்னவோர்வான்
செம்புனற் சுவடு நோக்கி யிதுநெறி யென்று தேவர்
தம்பிரான் பகழி தூண்டத் தலையற்றுத் தலத்த னுன்.

இரத்தாட்சனை நளன் வதைத்தனன்.
சிங்கனை பனசன் வதைத்தனன்.

பிரமாத்திரப் படலம்

இராவணன் இந்திரசித்தை யழைத்தல்

கரன்மகன் பட்ட வாறுங் குருதியின் கண்ணன் காவற்
சிரனெரிந் துக்க வாறுஞ் சிங்கனிற் சீறுஞ் சேனைப்
பரமினி யுலகுக் காகா தென்பதும் பகரக் கேட்டான்
வரன்முறை தவிர்த்தான் வல்லை தருதிரென் மகனை
யென்ருன். 2359

இந்திரசித்து வந்து பிதாவைச் சந்தித்தான்

வணங்கிநீ யைய நொய்தின் மாண்டனர் மக்க ளென்ன
உணங்கலை யின்று காண்டி யுலப்பறு குரங்கை நீக்கிப்
பிணங்களின் குப்பை மற்றை யாருயிர் பிரிந்த யாக்கை
கணங்குழைச் சீதை தானு மமரருங் காண்ப ரென்ருன்.

இந்திரசித்து போருக்குப் புறப்படுதல்

வலங்கொடு வணங்கி வான்செ லாயிர மடங்கல் பூண்ட
பொலங்கொடி நெடுந்தே ரேறிப் போர்ப்பணை முழங்கப்
போனான்
அலங்கல்வா ளரக்கர் தானை யறுபது வெள்ள யானைக்
குலங்களுந் தேரு மாவுங் குழாங்கொளக் குழீஇய வன்றே.

கிரவுஞ்சயூகம் வகுத்தனன்

சென்றுவெங் களத்தை யெய்திச் சிறையொடு துண்டஞ்
செங்கண்
ஒன்றிய கழுத்து மேனி காலுகிர் வாலோ டொப்பப்
பின்றலில் வெள்ளத் தானை முறைபடப் பரப்பிப்பேழ்வாய்
அன்றிலி னுருவ தாய அணிவகுத் தமைந்து நின்றான்.

இராமரும், இலட்சுமணரும்

மாருதி, அங்கதன்மீது ஆரோகணித்தல்

மாருதி யலங்கன் மாலை மணியணி வயிரத் தோண்மேல்
வீரனும் வாலி சேய்தன் விறல்கெழு சிகரத் தோண்மேல்
ஆரியற் கிளைய கோவு மேவநின் றமரர் வாழ்த்தி
வேரியம் பூவின் மாரி சொரிந்தன ரிடைவி டாமை. 2363

இராம லட்சுமணர் கணைமழை பொழிந்து
சேனைகளையழித்தல்

இமைப்பதன் முன்னம் வந்த விராக்கத வெள்ளந் தன்னைக்
குமைத்தொழில் புரிந்த வீரர் தனுத்தொழில் குறித்தின்
றெம்மால்
அமைப்பதென் பிறிதொன் றுண்டோ மேருவென்
றமைந்த வில்லால்
உமைக்கொரு பாக னெய்த புரங்களி னெருங்கி வீழ்ந்த.

இந்திரசித்து, சேனைகள் அழிந்ததைக் கண்டு வியத்தல்

செய்கின்றாரிருவர் வெம்போர்சிதைகின்ற சேனைநோக்கின்
ஐயந்தா னில்லா வெள்ள மறுபது மவிக வென்று
வைகின்றா ரல்ல ராகின் வரிசிலை வலத்தான் மாள
எய்கின்றா ரல்ல ரிதெவ் விந்திர சால மென்றான். 2365

அம்பின்மா மழையை நோக்கு முதிரத்தி னுற்றைநோக்கும்
உம்பரி னளவுஞ் சென்ற பிணக்குன்றி னுயர்வைநோக்கும்

கொம்பற வுதிர்ந்த முத்தின் குப்பையைநோக்குங்கொன்ற
தும்பியை நோக்கும் வீரர் சுந்தரத் தோளை நோக்கும்.2366

மாருதி யார்த்தனர்

ஆரிடை யநும ஞர்த்த ஆர்கலி யசனி கேளாத்
தேரிடை நின்று வீழ்ந்தார் சிலர்சிலர் படைகள் சிந்திப்
பாரிடை யிழிந்து போகப் பாரித்தார் பைம்பொ னிஞ்சி
ஊரிடை நின்று ளாரு முயிரிஞே டுதிரங் கான்ருர். 2367

இந்திரசித்து தனித்தல்

ஆன காலையி னிராமனு மயின்முகப் பகழி
சோனை மாரியிற் சொரிந்தன னநுமனைத் தூண்டி
வான மானங்கண் மடிந்தெனத் தேரெலா மடிந்த
தானுந் தேருமே யாயின னிராவணன் றனயன். 2368

இந்திரசித்து இராம லட்சுமணரை
நோக்கிக் கூறுதல்

இருவி ரென்னுெடு பொருதிரோ வன்றெனி னேற்ற
ஒருவிர் வந்துயிர் தருதிரோ வும்படை யோடும்
பொருது பொன்றுதல் புரிதிரோ வுறுவது புகலும்
தருவ லின்றுமக் கேற்றுள தொன்றெனச் சலித்தான்.

"உன்னைக் கொல்ல சூளுற்றேன்" என்று
இலட்சுமணர் கூறினர்.
இந்திரசித்து வீரவசனம்

முன்பி றந்தவுன் றம்முனை முறைதவிர்த் துனக்குப்
பின்பி றந்தவ ஞக்குவென் பின்பிறந் தோயை
முன்பி றந்தவ ஞக்குவ னிதுமுடி யேனேல்
என்பி றந்தத ஞற்பய னிராவணற் கென்ருன். 2370

கும்ப கன்னனென் றெருருவனீ ரம்பிடைக் குறைத்த
தம்பி யல்லநா னிராவணன் மகனெருரு தமியேன்
எம்பி மாருக்கு மென்சிறு தாதைக்கு மிருவீர்
செம்பு ணீர்கொடு கடன்கழிப் பானின்று தீர்ந்தேன். 2371

இலட்சுமணர்

அரக்க ரென்பதோர் பெயர்படைத் தவர்க்கெலா மடுத்த
புரக்கு நன்கடன் செயவுளன் வீடணன் போந்தான்

கரக்கு நுந்தைக்கு நீசெயக் கடவன கடன்கள்
இரக்க முற்றுனக் கவன்செயு மென்றன னிளையோன்.

இலட்சுமணரும் இந்திரசித்தும்
கடும்போர் செய்தனர்.

இந்திரசித்தன் தேர், கவசம் இவைகள் அழிந்தன.
அவன் மறைந்தனன்.

இலட்சுமணர் பிரமாத்திரம்விட நினைக்க,

இராமர் தடுத்தல்

கண்ணி மைப்பதன் முன்புபோய் விசும்பிடைக் கரந்தான்
அண்ணன் மற்றவ னைக்கைகண் டறிகில னகிப்
பண்ண வற்கிவன் பிழைக்குமேற் படுக்குநம் படையை
எண்ண மற்றிலையயன்படைதொடுப்பலென் றிசைத்தான்.

ஆன்ற வன்னது புகறலு மறவனீ முனிந்தால்
ஈன்ற வந்தணன் படைக்கலந் தொடுக்கவிவ் வுலக
மூன்றை யுஞ்சுடு மொருவனுன் முடிகல தென்றுன்
சான்ற வன்னது தவிர்ந்தன னுணர்வுடைத் தம்பி. 2374

இந்திரசித்து இலங்கை சென்றனன்.

இராம லட்சுமணர் ஓய்வு பெறுதல்

அநும னங்கதன் றோளினின் றிழிந்தன ராகித்
தனுவும் வெங்கணைப் புட்டிலுங் கவசமுந் தடக்கைக்
கினிய கோதையுந் துறந்தன ரிருந்தன ரிமையோர்
பனிம லர்த்தொகை பொழிந்தனர் வாழ்த்தொலி பரப்பி.

பொழுது போயிற்று.

இராமர் சேனைகட்கு உணவு தருமாறு
வீடணருக்கு உரைத்தல்.

இரவு நன்பக லும்பெரு நெடுஞ்செரு வியற்றி
உரவு நம்படை மெலிந்துள தருந்துதற் குணவு
வரவு தாழ்த்தது வீடண வல்லையி னேகித்
தரவு வேண்டினெ னென்றனன் தாமரைக் கண்ணன்.

வீடணர் கடல் கடந்து உணவு கொணரும்பொருட்டு
தன் தமருடன் சென்றனர்.

இராமர் அத்திர வழிபாடு செய்யச் சென்றனர்

தெய்வ வான்பெரும் படைகட்கு வரன்முறை திருந்து
மெய்கொள் பூசனை யியற்றினம் விடுமிது விதியால்

ஐய நானிவை யாற்றினன் வருவதோ ரளவும்
கைகொள் சேனையைக் காவெனப் போர்க்களங்கடந்தான்.

இந்திரசித்து இராவணனிடம் போய் தனக்குற்ற தோல்வியையும், பிரமாத்திரம் விட இலக்குவன் முயன்றதையும் கூறி, தான் வஞ்சனையாக பிரமாத்திரம் விடக் கருதியதையும் உரைத்தான்.

தொடுக்கின் றேனென்ப துணர்வரேலப்படைதொடுத்தே
தடுப்பர் காண்பரேற் கொல்லவும் வலத்தரத் தவத்தோர்
இடுக்கொன் ருகின்ற தில்லைநல் வேள்வியை யியற்றி
முடிப்ப லன்னவர் வாழ்வையோர் கணத்தென்று
முடித்தான். 2378

இராவணன் மகோதரனைப் போருக்கு அனுப்பினான்

நூறு வெள்ளஞ் சேனையுடன் மகோதரன் வந்து போர் புரிந்தனன். மாருதி தண்டப்போர் புரிந்து, அகம்பனைக் கொன்றனர்.

இராமர், பாசுபதாத்திரம் விடுத்தனர்

முக்கணான் படையை மூட்டி விடுதலு மூங்கிற் காட்டில்
புக்கதோ ரூழித் தீயிற் புறத்தினோ ருருவம் போகா
தக்கணத் தெரிந்து வீழ்ந்த தரக்கர்தஞ் சேனை யாழித்
திக்கெலா மிருளுந் தீர்ந்த தேவரு மயக்கந் தீர்ந்தார்.2379

மகோதரன் மறைதல்

தேவர்தம் படையை விட்டா னென்பது சிந்தை செய்யா
மாவரு மாயை நீங்க மகோதரன் மறையப் போனான்
யாவரு மிரிந்தா ரெல்லா மினமழை கழிய வார்த்துக்
கோவிளங் களிற்றை வந்து கூடினா ராடல் கொண்டார்.

தூதர் ஓடி இந்திரசித்துக்குரைத்தல்

வந்தில னிராமன் வேறோர் மலையுளா னுந்தை மாயம்
தந்தன தீர்வான் போனா னுண்பன தாழ்ப்பத் தாழா
எந்தைதீ தியன்றதென்னமகோதரன் யாண்டை யென்ன
அந்தரத் திடையா னென்ன விராவணி யழகிற் றென்றான்.

இந்திரசித்து விண்ணில் மறைந்து நிற்றல்

விசும்பு போயினன் மாயையின் பெருமையான் மேலைப்
பசும்பொ னாட்டவர் நாட்டமு முள்ளமும் படரா

அசும்பு விண்ணிடை யடங்கினன் முனிவரு மறியார்
தசும்பு நுண்ணெடுங் கோளொடு காலமுஞ் சார. 2382

மகோதரன் இந்திரன் உருவத்தில் வந்து போர் செய்தனன்.

இலட்சுமணர் அநுமனை வினவுதல்

அநுமன் வாண்முக நோக்கின னழியை யகற்றித்
தநுவலங் கொண்ட தாமரைக் கண்ணவன் றம்பி
முனிவர் வானவர் முனிந்துவந் தெய்தயா முயன்ற
துனியி தென்கொலோ சொல்லுதி விரைந்தெனச்
சொன்னான். 2383

இந்திரசித்து அயன்கணை விடுதல்.

இன்ன காலையி னிலக்குவன் மேனிமே லெய்தான்
முன்னை நான்முகன் படைக்கல மிமைப்பதன் முன்னம்
பொன்னின் மால்வரைக் குரீஇயின மொய்த்தது போலப்
பன்ன லாந்தர மல்லன சுடர்க்கணை பாய்ந்த. 2384

அநும னிந்திரன் வந்தவ னேகொலி தமைந்தான்
இனிய னெற்றுவென் களிற்றினோ டெடுத்தென
வெழுந்தான்
தனும னயிர கோடிவெங் கடுக்கணை தைக்க
நினைவுஞ் செய்கையு மறந்துபோய் நெடுநிலஞ் சேர்ந்தான்.

சுக்ரீவன், அங்கதன், நீலன் முதலிய அனைவரும் மாண்டார்கள்.

இமையவர் வருந்துதல்.

நங்கள் காரிய மியற்றுவா னுலகிடை நடந்தீர்
உங்க ளாருயி ரும்முயி ருடல்பிரி துற்றீர்
செங்க ணயகற் காகவெங் களத்திடைத் தீர்ந்தீர்
எங்க ணயகர் நீர்களென் றிமையவ ரிசைத்தார். 2386

இந்திரசித்து இராவணனை யடைதல்.

வெங்கண் வானரக் குழுவொடு மிளையவன் விளிந்தான்
இங்கு வந்தில னகன்றன னிராமனென் றிகழ்ந்தான்
சங்க மூதினன் றாதையை வல்லையிற் சார்ந்தான்
பொங்கு போரிடைப் புகுந்துள பொருளெலாம் புகன்றான்.

இராமர் வந்து துயருறுதல்.

சுக்கி ரீவனை நோக்கித்தன் றாமரைத் துணைக்கண்
உக்க நீர்த்திர ளொழுகிட நெடிதுநின் றுயிர்த்தான்

தக்க தோவிது நினக்கென்று தனிமனந் தளர்ந்தான்
பக்க நோக்கினன் மாருதி தன்மையைப் பார்த்தான். 2388

கடர்க டந்துபுக் கரக்கரைக் கருவொடுங் கலக்கி
இடர்க டந்துநா னிருக்கநீ நல்கிய திதற்கோ
உடர்க டந்தன வோவுன்னை யரக்கன்வில் லுதைத்த
அடர்க டந்தபோர் வாளியென் றுகுலித் தழுதான். 2389

புன்றொ ழிற்புலை யரசினை வெஃகியென் பூண்டேன்
கொன்றொ ருக்கினே னெந்தையைச் சடாயுவைக் குறைத்தேன்
இன்றொ ருக்கினே னித்தனை வீரரை யிருந்தேன்
வன்றொ ழிற்கொரு வரம்புமுண் டாய்வர வற்றே. 2390

இலட்சுமணரைக் கண்டு புலம்புதல்

பொருமி னனகம் பொங்கினு னுயிர் முற்றும் புகைந்தான்
குருமணித்திரு மேனியு மன்னவா குலைந்தான்
தருமநின்றுதன் கண்புடைத் தலம்வரச் சாய்ந்தான்
உருமினலிடி யுண்டதோர் மராமர மொத்தான். 2391

உயிர்த்திலன்னொரு நாழிகை யுணர்ந்தில னென்றும்
வியர்த்திலனுடல் விழித்திலன் கண்ணினை விண்ணோர்
அயிர்த்தி லன்கொலென் றஞ்சின ரங்கையுந் தாளும்
பெயர்த்தி லன்னுயிர்த் திலன்கரு ணையாற் பிறந்தான்.

தாயோ நீயே தந்தையு நீயே தவநீயே
சேயோ நீயே தம்பியு நீயே திருநீயே
போயோ நின்று யென்னையி கந்தாய் புகழ்பாராய்
நீயா யானோ நின்னினு நெஞ்சம் வலியேனோ. 2393

ஊரு நின்ற புண்ணுடை யாய்பா லுயிர்காணேன்
ஆரு நின்றே னுவிசு மந்தே யழுகின்றேன்
ஏறே யின்னு முய்யினு முய்வே னிருகூருக்
கீரு நெஞ்சம் பெற்றனெ னன்றோ கெடுவேனே. 2394

பயிலுங் காலம் பத்தொடு நாலும் படர்கானத்
தயில்கின் றேனுக் காவன நல்கி யயிலாதாய்
வெயிலென் றுன்னுய் நின்றுத ளர்ந்தே மெலிவெய்தித்
துயில்கின் றாயோ வின்றிவ்வு றக்கந் துறவாயோ, 2395

மண்மேல் வைத்த காதலின் மாதா முதலோர்க்கும்
புண்மேல் வைத்த தீநிகர் துன்பம் புகுவித்தேன்
பெண்மேல் வைத்த காதலி னிப்பே றுகள்பெற்றேன்
எண்மேல் வைத்தே னென்புகழ் யான்று னெளியேனே.

மாண்டாய் நீயோ யானொரு போது முயிர்வாழேன்
ஆண்டா னல்ல ஞனில மந்தோ பரதன்றான்
பூண்டா ரெல்லாம் பொன்றுவர் துன்பம் பொறையாற்றார்
வேண்டா வோநா னல்லற மஞ்சி மெலிவுற்றால். 2397

கொடுத்தே னன்றே வீடண னுக்குக் குலமாள
முடித்தோர் செல்வம் யான்முடியாதே முடிக்கின்றேன்
படித்தோ னென்றே பொய்ம்மைகு டிக்குப் பழிபெற்றேன்
ஒடித்தே னன்றே யென்புகழ் நானே யுணர்வற்றேன்.

என்றென் றேங்கும் விம்முமு யிர்க்கும் மிடையஃகிச்
சென்றான் றானறு டிந்திய மெல்லாஞ் சிறையெய்தப்
பொன்றும் மென்னுந் தம்பியை யார்வத் தொடுபுல்லி
ஒன்றுந் தேரான் றன்னைம றந்தான் றுயில்வுற்றான். 2399

விண்ணவர் வருந்துதல்.

கண்டார் விண்ணோர் கண்கள்பு டைத்தார் கலுழ்கின்றார்
கொண்டார் துன்ப மென்முடி வென்னக் குலைகின்றார்
அண்டா வையா வெங்கள்பொ ருட்டா லயர்கின்றாய்
உண்டோ வுன்பாற் றுன்பென அன்பா லுரைசெய்தார்.

தூதர் ஓடி இராவணன்பால் கூறுதல்.

என்வந் ததுநீ ரென்றரக்கர்க்
கிறைவ னியம்ப வெறிசெருவில்
நின்மைந் தனது நெடுஞ்சரத்தாற்
றுணைவ ரெல்லா நிலஞ்சேரப்
பின்வந் தவனு முயிரிழந்த
பிழையை நோக்கிப் பெருந்துயரால்
முன்வந் தவனு முடிந்தானுன்
பகைபோய் முடிந்த தெனமொழிந்தார். 2401

பிராட்டி களங் காண் படலம்

இராவணன் மகிழ்ச்சி.

பொய்யார்தூதரென்பதனுற்பொங்கியெழுந்தவுவகையனாய்
மெய்யார்நிதியின்பெருவெறுக்கைவெறுக்கவீசிவிளைந்தபடி

கையார் வரைமேன் முரசேற்றிச் சாற்றி நகரங் களிசிறப்ப
நெய்யாராடலாகென்று நிகழ்த்து கின்ரு னெறியில்லான்.

அரக்கருடல்களைக் கடலிவிடுதல்.

அந்தநெறியையவர்செய்யவரக்கன்மருத்தன்றனைக்கூவி
முந்த நீபோ யரக்கருடல் முழுதுங் கடலின் முடுக்கிடுநின்
சிந்தையொழியப்பிறரறியிற்சிரமும் வரமுஞ் சிந்துவனென்
றுந்த வவன்போ யரக்கருடல் முழுதுங் கடலி
னுள்ளிட்டான். 2403

சீதையை விமானத்தேற்றிக் களங்காட்டுதல்.

தெய்வமானத்திடையேற்றிமனிதர்க்குற்ற செயலெல்லாம்
தையல்காணக்காட்டுமின்கள்கண்டாலன்றித்தன துள்ளத்
தையநீங்கா ளென்றுரைப்ப வரக்கர் மகளி ரிரைத்தார்ப்ப
உய்யு முணர்வு நீத்தாளை நெடும்போர்க் களத்தி
னிடையுய்த்தார். 2404

கண்டாள் கண்ணுற் கணவனுரு
வன்றி யொன்றுங் காணுதாள்
உண்டாள் விடத்தை யெனவுடலு
முணர்வு முயிர்ப்பு முடனேய்ந்தாள்
தண்டா மரைப்பூ நெருப்புற்ற
தன்மையுற்ருள் தரியாதாள்
பெண்டா னுற்ற பெரும்பீழை
யுலகுக் கெல்லாம் பெரிதன்றே. 2405

மங்கை யழலும் வானாட்டு
மயில்க ளழுதார் மழவிடையோன்
பங்கி னுறையுங் குயிலழுதாள்
பதும மலர்மேன் மாதழுதாள்
கங்கை யழுதாள் நாமடந்தை
யழுதாள் கமலத் தடங்கண்ணன்
தங்கை யழுதா ளிரங்காத
அரக்கி மாருந் தளர்ந்தழுதார். 2406

உய்யா ளுயர்கோ சலைதன் னுயிரோ
ஐயா விளையோ ருயிர்வாழ் கிலரால்
மெய்யா வினையெண் ணிவிடுத் தகொடுங்
கைகே சிகருத் திதுவோ களிறே. 2407

மேதா விளையோய் விதியார் விளைவால்
போதா நெறியெம் மொடுபோ துறுநாள்
மூதா னவன்முன் னர்முடிந் திடெனும்
மாதா வுரையின் வழிநின் றனையோ. 2408

பூவுந் தளிருந் தொகுபொங் கணைமேல்
கோவுந் துயிலத் தருவாய் கொடியார்
ஏவின் றலைவந் தவிருங் கணையால்
மேவுங் குளிர்மெல் லணைமே வினையோ. 2409

திரிசடை தேற்றுதல்.

மாயமான் விடுத்த வாறுஞ் சனகனை வகுத்த வாறும்
போயமா நாக பாசம் பிணித்தது போன வாறும்
நீயமா நினைவாய் மான நினைதியோ நெறியி லாரால்
ஆயமா மாய மொன்று மறிந்திலை யன்ன மன்னாய். 2410

வீய்ந்துளன் வீர னென்னி னுலகமோ ரேழு மேழும்
தீய்ந்துறு மிரவி பின்னுந் திரியுமே தெய்வ மென்னும்
ஈய்ந்துள வெண்க ணான்முன் னுயிரெலாம் வெருவு மன்னை
ஆய்ந்தவை யுள்ள போதே யவருள ரறமு முண்டால். 2411

சீதை தேறுதல்.

அன்னைநீ யுரைத்த தொன்று மழிந்தில தாத லானே
உன்னையே தெய்வ மாக்கொண் டித்தனை கால முய்ந்தேன்
இன்னமிவ் விரவு முற்று மிருக்கின்றே னிறத்தலென்பால்
முன்னமே முடிந்த தன்றே யென்றனள் முளரி நீத்தாள்.

நாணெலாந் துறந்தே னில்லி னன்மையினல்லார்க்கேய்ந்த
பூணெலாந் துறந்தே னென்றன்பொருசிலை மேகந்தன்னைக்
காணலா மென்னு மாசை கடுக்கவென் னாவி காத்தேன்
ஏணிலா வுடலி னீங்க லெளிதெனக் கெனவுஞ்சொன்னாள்.

மருத்துமலைப் படலம்

வீடணன் போர்க்கள மடைந்து பார்த்து வருந்துதல்.

விளைந்தவா றுணர்ந்தி லாதான்
வீங்கினன் வெதும்பி னான்மெய்
உளைந்துளைந் துயிர்த்தா னாவி
யுண்டிலை யென்ன வோய்ந்தான்

வளைந்தபேய்க் கணமு நாயு
நரிகளு மிரிய வந்தான்
இளங்கிளை யோடுஞ் சாய்ந்த
விராமனை யிடையிற் கண்டான். 2414

ஆயினு மிவருக் கில்லை யழிவெனு மதனு லாவி
போயின தில்லை வாயாற் புலம்பலன் பொருமிப்பொங்கித்
தீயினு மெரியு நஞ்சின் வெருவலாற் றெரிய நோக்கி
நாயகன் மேனிக் கில்லை வடுவென நடுக்கந் தீர்ந்தான். 2415

அந்தணன் படையால் வந்த தென்பது மாற்ற லான்ற
இந்திர சித்தே யெய்தா னென்பது மிளவற் காக
நொந்தன னிராம னென்னு நுண்மையு நொய்து நோக்கிச்
சிந்தையி னெண்ணி யெண்ணித் தீர்வதோ ருபாயந்
தேர்வான். 2416

அநுமனைக் காணுதல்.

கண்டுதன் கண்க ளூடு மழையெனக் கலுழி வார
உண்டுயி ரென்ப துன்னி யுடற்கணை யொன்றொன் றாக
விண்டுதிர் புண்ணி னின்று மெல்லெனவிரைவின்வாங்கிக்
கொண்டல்நீர் கொணர்ந்து கோல முகத்தினைக் குளிரச்
செய்தான். 2417

அழுகையோ டுவகை யுற்ற வீடண னார்வங் கூரத்
தழுவின னவனைத் தானு மன்பொடு தழுவித் தக்கோய்
வழுவில னன்றே வள்ள லென்றனன் வலிய னென்றான்
தொழுதன னுலக மூன்றுந் தலையின்மேற் கொள்ளுந்
தூயான். 2418

மாருதி சாம்பன் எங்கே? என்று வினவி,
இருவரும் தேடிவருதல்.

எரிகின்ற மூப்பி னாலு மேவுண்ட நோவி னாலும்
அரிகின்ற துன்பத் தாலு மாருயிர்ப் படங்கி யொன்றும்
தெரிகின்ற தில்லா மம்மர்ச் சிந்தைய னெனினுஞ் செல்வர்
வருகின்ற சுவட்டை யோர்ந்தான் செவிகளால் வயிரத்
தோளான். 2419

சாம்பன் வினா

அரக்கனே யென்னை யாளு மண்ணலோ வநுமன் றானே
இரக்கமுற் றருள வந்த தேவரோ முனிவ ரேயோ

வரக்கட வார்க ளல்லர் மாற்றலர் மலைந்து போனார்
புரக்கவுள் ளாரோ வென்னாக் கருதினன்பொருமறீர்ந்தான்.

வந்தய னின்று குன்றின் வார்ந்துவீ ழருவி மானச்
சிந்திய கண்ணி னீர ரேங்குவார் தம்மைத் தேற்றி
அந்தமில் குணத்தீர் யாவ ரணுகினி ரென்று னைய
உய்ந்தன முய்ந்தே மென்ற வீடண னுரையைக் கேட்டான்

மற்றய னின்றான் யாவ னென்னமா ருதியும் வாழிக்
கொற்றவ வநும னின்றேன்றொழுதனெ னென்று கூற
இற்றில மைய வெல்லே மெழுந்தன மெழுந்தே மென்னா
உற்றபே ருவகை யாலே யோங்கினா னூற்ற முற்றான்.

"மருத்துமலை கொணர்வாய்" என்றான்.

எழுபது வெள்ளத் தோரு மிராமனு மிளைய கோவும்
முழுவதிவ் வுலக மூன்று நல்லற மூர்த்தி தானும்
வழுவலின் மறையு முன்னால் வாழ்ந்தன வாகு மைந்த
பொழுதிறை தாழா தென்சொன்னெறி தரக் கடிது போதி.

ஒன்பதினாயிரம்	யோசனை	இமயம்
,,	,,	ஏமகூடம்
,,	,,	நிடதம்
,,	,,	மேரு
,,	,,	நீலகிரி
இரண்டாயிரம்	,,	மாருதி
நாலாயிரம்	,,	மருத்துமலை

மாண்டாரை உய்விக்கும்—மிருதசஞ்சீவி
அற்ற உடம்பை ஒட்டுவிக்கும்—சந்தானகரணி
உடம்புக்குள் உள்ள ஆயுதங்களை வெளிப்படுத்தும்
—சல்லியகரணி

முற்றும் அழிந்தபின் பழைய உருவே தரும்—சமனிகரணி

இவைகள் பாற்கடலில் தோன்றியவை; அங்கு அரக்கரும் சக்கரமும் காவல்புரியும். சென்று கொணர்க என்று சாம்பன் கூறினான்.

மாருதி பேருருக் கொண்டு செல்கின்றார்.

தேவரு முனிவர் தாமுஞ் சித்தருந் தெரிவை மாரும்
மூவுல கிடையு ளோருமுவகையாற்றொடர்ந்துமொய்த்தார்
தூவின மணியுஞ் சாந்துஞ் சுண்ணமு மலருந் தொக்குப்
பூவுடை யமரர் தெய்வத் தருமென விசும்பிற் போனான்.

கைலையைக் கண்டு வணங்கினர்.

வடகுண திசையிற் றோன்று மழுவலா ணுண்டு வைகும்
தடவரை யதனை நோக்கித் தாமரைச் செங்கை கூப்பிப்
படர்குவான் றன்னை யன்ன பரமனும் பரிவிற் பார்த்துத்
தடமுலை யுமைக்குக் காட்டி வாயுவின் றனயனென்றான்.

மருந்து மலையைக் கண்டு எடுத்தல்.

ஆயிர யோசனை யகல மீதுயர்ந்
தாயிர யோசனை யாழ்ந்த தம்மலை
ஏயெனு மாத்திரத் தொருகை யேந்தினன்
தாயின னுலகெலாந் தவழ்ந்த சீர்த்தியான். 2426

இராமர் தெளிவுற்று வருந்துதல்.

மாயையின் மானென வெம்பி வாய்மையால்
தூயன வுறுதிகள் சொன்ன சொற்கொளேன்
போயினென் பெண்ணுரை மறுது போகலால்
ஆயதிப் பழியுடை யானி யன்பினீர். 2427

சாம்பன் தேற்றுதல்.

பெருந்திற லநுமனீண் டுணர்வு பெற்றுளான்
அருந்துயர் முடிக்குறு மளவி னுற்றலான்
மருந்திறைப் பொருதினிற் கொணரும் வாய்மொழி
பொருந்தினன் வடதிசை கடிது போயினன். 2428

ஆர்கலி கடைந்தநா ளமிழ்தின் வந்தன
கார்நிறத் தண்ணல்தன் னேமி காப்பன
மேருவி னுத்தர குருவின் மேலுள
யாருமற் றுணர்கிலா வரண மெய்தின. 2429

சல்லிய மகற்றுவ தொன்று சந்துகள்
புல்லுறப் பொருத்துவ தொன்று போயின
நல்லுயிர் நல்குவ தொன்று நன்னிறம்
தொல்லைய தாக்குவ தொன்று தொல்லையோய். 2430

மருந்து வர யாவரும் உயிர் பெற்றனர்.

காற்றுவந் தசைத்தலுங் கடவுள் நாட்டவர்
போற்றினர் விருந்துவந் திருந்த புண்ணியர்
ஏற்றமும் பெருவலி யழகொ டெய்தினர்
கூற்றினை வென்றுதம் முருவுங் கூடினர். 2431

ஓங்கிய தம்பியை யுயிர்வந் துள்ளுற
வீங்கிய தோள்களாற் றழுவி வெந்துயர்
நீங்கின னிராமனு முலகி னின்றில
தீங்குள தேவரு மறுக்கஞ் சிந்தினர். 2432

பிரமாத்திரம் வணங்கிச் சென்றது.

உந்தின பின்கொலை யொழிவி லுண்மையும்
தந்தனை நீயது நினக்குச் சான்றெனச்
சுந்தர வில்லியைத் தொழுது சூழவந்
தந்தணன் படையுநின் றகன்று போயதால். 2433

இராமர் மாருதியைப் புகழ்தல்.

முன்னிற் றோன்றினோர் முறையி னீங்கலா
என்னிற் றோன்றிய துயரி னீறுசேர்
மன்னிற் றோன்றினே முன்ன மாண்டுளேம்
நின்னிற் றோன்றினே நெறியிற் றோன்றினாய். 2434

இன்று வீகலா தெவரு மெம்மொடு
நின்று வாழுநாள் நெடிது நல்கினாய்
ஒன்று மின்னமோ யுறுகி லாதுநீ
என்றும் வாழ்தியா லினிதெ னேவலால். 2435

சாம்பன் கூற மலையை இருந்த இடத்தில்
மாருதி வைத்து மீண்டனர்

மாயா சீதைப் படலம்

இராவணன் வெற்றிக் கொண்டாட்டமாக ஆடல் பாடல்கள்
நிகழ்த்தினான். தூதரால் நிகழ்ந்ததறிந்த இராவணன்
மந்திராலோசனை செய்வானாயினான்.

மாலியவான் கூறுதல்

இலங்கையி னின்று மேரு பிற்பட இமைப்பிற் பாய்ந்து
வலங்கிளர் மருந்து நின்ற மலையொடுங் கொணர வல்லான்
அலங்கலந் தடந் தோளண்ணல நுமனே யாதல் வேண்டும்
கலங்கலி லுலகுக் கெல்லாங் காரணங் கண்ட வாற்றால்.

நீரினைக் கடக்க வாங்கி யிலங்கையா நின்ற குன்றைப்
பாரினிற் கிழிய வீசி னருளர் பிழைக்கற் பாலார்
போரினிற் பொருவ தெங்கே போயின வநுமன் பொன்மா
மேருவைக் கொணர்ந்திவ் வூர்மே லிடுமெனின் விலக்க
லாமோ. 2437

இறந்தவ ரிறந்து தீர வினியொரு பிறவி வந்து
பிறந்தன மாகி னுள்ளே முய்ந்தனம் பிழைக்கும் பெற்றி
மறந்தன மெனினு முன்னஞ் சனகியை மரபி னீந்தவ்
வறந்தரு சிந்தை யோரை யடைக்கலம் புகுது மைய. 2438

வாலியை வாளி யொன்ருல் வானிடை வைத்து வாரி
வேலையை வென்று கும்ப கருணனை வீட்டி ஞனை
ஆலியின் மொக்கு ளன்ன வரக்கரோ வமரின் வெல்வார்
சூலியைப் பொருப்பி னேடுந் துளக்கிய விசயத் தோளாய்.

இராவணன் சீதையைச் சிறைவிடேன் என்ருன்.
இந்திரசித்து மொழிதல்

அனையது பிறவுநிற்க வன்னது பகர்த லாண்மை
வினையெனி னன்று நின்று வீழ்ந்தது வீழ்க வீர
இனையனீ மூண்டி யான்போய் நிகும்பலை விரைவினெய்தித்
துனியறுவேள்வி வல்லைத்தொடங்கினேன் முடியுந்துன்பம்.

சானகி யுருவ மாகச் சமைத்தவள் தன்மை கண்ட
வானுய ரநுமன் முன்னே வாளினுற் கொன்று மாற்றி
யானெடுஞ் சேனையோடுமயோத்திமே லெழுந்தேனென்னப்
போனபின் புரிவ தொன்று மிலாதவர் துயரம் பூண்பர்.

இத்தலைச் சீதை மாண்டாள் பயனிவ ணில்லை யென்பார்
அத்தலைத் தம்பி மாருந் தாயரு மடுத்து ளோரும்
உத்தம நகரு மாளு மென்பமேதார் வருத்த மூன்றப்
பொத்திய துன்ப மூளச் சேனையுந் தாமும் போவார். 2442

போகல ரென்ற போது மநுமனை யாண்டுப் போக்கி
ஆகிய தறிந்தா லன்றி யருந்துய ராற்ற லாற்ருர்
ஏகிய கரும முற்றி யானவண் விரைவி னெய்தி
வேகம்வெம் படையிற் கொன்று தருகுவென் வென்றி
யென்ருன். 2443

சுக்ரீவன் இலங்கையைச் சுடவேண்டும் என்ருன்.

அத்தொழில்புரி தனன்றென்றண்ண லுமமையவெண்ணித்
தத்தின னிலங்கை மூதூர்க் கோபுரத் தும்பர் சார்ந்தான்
பத்துடை யேழு சான்ற வானரப் பரவை பற்றிக்
கைத்தலத் தோரோர் கொள்ளி யெடுத்ததெவ் வுலகுங்
காண. 2444

இந்திரசித்து மாயா சீதையைக் கொணர்ந்து
அநுமன் எதிரே வந்தான்

வந்திவள் காரண மாக மலைந்தீர்
எந்தையி கழ்ந்தனன் யானிவ ளாவி
சிந்துவ னென்றுசெ ருத்துரை செய்தான்
அந்தமின் மாருதி யஞ்சிய யர்ந்தான். 2445

மாருதி இந்திரசித்தைப் புகழ்தல்

நான்முக னுக்கொரு நால்வரின் வந்தாய்
நூன்முக முற்று நுணங்கவு ணர்ந்தாய்
பான்முக முற்ற பெரும்பழி யன்றோ
மான்முக மற்றொரு மாதை வதைத்தால். 2446

மாயா சீதையை வெட்டுதல்

எந்தையு மிந்த விலங்கையு ளோரும்
உய்ந்திட வானவர் யாவரு மோடச்
சிந்துவென் வாளினி லென்று செறுத்தான்
இந்திர சித்தவ னின்ன விசைத்தான். 2447

போமின டாவினை போயது போலாம்
ஆமெனி னின்னு மயோத்தியை யண்மிக்
காமின தின்று களங்கரி யாக
வேமிது செய்தினி மீள்குவெ னென்றான். 2448

விமானமூர்ந்து இந்திரசித்து நிகும்பலை சென்றான்.
மாருதி புலம்புதல்

அன்னமே யென்னும் பெண்ணி னருங்கலக் கலமே
யென்னும்
என்னமே யென்னுந் தெய்வ மில்லையோ யாது மென்னும்
சின்னமே செய்யக் கண்டுந் தீவினை நெஞ்ச மாவி
பின்னமே யாய தில்லை யென்னும்பே ராற்றல் பேர்ந்தான்.

வஞ்சியை யெங்குங் காணு துயிரினை மறந்தா னென்னச்
செஞ்சிலை யுரவோன் தேடித் திரிகின்று னுள்ளந் தேற
அஞ்சொலா ளிருந்தாள் கண்டே னென்றயா னரக்கன்
கொல்லத்
துஞ்சினளென் றுசொல்லத்தோன் றினேன்றேற் றமீதால்.

மாருதி இராமரை யடைந்து வருந்துதல்

வீழ்ந்தவன் றன்னை வீரன் விளைந்தது விளம்பு கென்னத்
தாழ்ந்திரு தடக்கை பற்றி யெடுக்கவுந் தரிக்கி லாதான்
ஆழ்ந்தெழு துன்பத்தாளை யரக்கனின் றயில்கொள்வாளால்
போழ்ந்தன னென்னக் கூறிப் புரண்டனன் பொருமு
கின்றான். 2451

இராமர் வருத்தம்

சித்திரத் தன்மை யுற்ற சேவக னுணர்வு தீர்ந்தான்
மித்திரர் வதன நோக்கா னிளையவன் வினவப் பேசான்
பித்தரு மிறைபொ ருத பேரபி மான மென்னும்
சத்திர மார்பிற் றைக்க வுயிரில னென்னச் சாய்ந்தான்.

இலட்சுமணர்

தையலைத் துணையி லாளைத் தவத்தியைத் தருமக் கற்பின்
தெய்வதந் தன்னை மற்றுன் றேவியைத் திருவைத் தீண்டி
வெய்யவன் கொன்றா னென்றால் வேதனை யுழப்ப தின்னும்
உய்யவோ கருணை யாலோ தருமத்தோ டுறவு முண்டோ.

சுக்ரீவன் இலங்கை போய் இராவணன் மார்பில்
குதிப்பேன் என்றான்.

இந்திரசித்து அயோத்தி சென்ற தன்மையை
மாருதி கூறக்கேட்ட இராமர் மேலும் வருந்துதல்

தாயருந் தம்பி மாருந் தவம்புரி நகரஞ் சாரப்
போயின னென்ற மாற்றஞ் செவித்தொளை புகுத லோடும்
மேயின வடியி னின்ற வேதனைக் கனைய வெந்த
தீயிடைத் தணிந்ததென்னச்சீதைபாற் றுன்பந்தீர்ந்தான்.

தாதைக்குஞ் சடாயு வான தந்தைக்குந் தமிய ளாய
சீதைக்குங் கூற்றங்காட்டித் தவிர்ந்திலதொருவென் றீமை
பேதைப்பெண் பிறந்து பெற்ற தாயர்க்கும் பிழைப்பிலாத
காதற்றம் பியர்க்கு மூர்க்கு நாட்டிற்குங் காட்டிற் றன்றே.

மாருதி இராம லட்சுமணரைத் தோள்மீது
கொண்டு செல்வேன் என்றார்.

எழுபது வெள்ளத் தோடு
மிலங்கையை யிடந்தென் றோண்மேல்
தழுவுற வைத்தின் றேகென்
றுரைத்தியேற் சமைவென் றக்கோய்

பொழுதிறை தாழ்ப்ப தென்னே
புட்பகம் போதன் முன்னம்
குழுவொடு கொண்டு போவென்
கணத்தொடு குதிப்பென் கூற்றின். 2456

வீடணர் இது மாயம் என ஐயுற்று வண்டுருக்
கொண்டுபோய் கண்டு வந்து கூறுகின்றார்.

இருந்தனள் தேவி யானே யெதிர்ந்தன னென்க ணார
அருந்ததி கற்பி னாளுக் கழிவுண்டோ வரக்க னம்மை
வருந்திட மாயஞ் செய்து நிகும்பலை மருங்கு புக்கான்
முருங்கழல் வேள்வி முற்றி முதலற முடிக்க மூண்டான்.

நிகும்பலைப் படலம்

இலக்குவன் இந்திரசித்தை கொல்லப் புறப்பட, இராமர் "அய னரி யரனாதி அமரர் கணைகளை அவன் விட்டாலன்றி விடாதே" என்றுகூறி, தனது வில்லும், அம்புக்கூடும் கவசமும் தந்து அனுப்பினார்.

இலட்சுமணர் நிகும்பலை சென்று, காவல் புரியும் அசுர
சேனைகளைக் கொன்றார்.

அக்கா லையிலக் குவனப் படையுள்
புக்கா னயிலம் புபொழிந் தனனால்
உக்கா ரவரக் கர்தழு ரொழியப்
புக்கார் நமனா ருறைதென் புலமே. 2458

மானமும் பாழ்பட வகுத்த வேள்வியின்
மோனமும் பாழ்பட முடிவி லாமுரட்
சேனையும் பாழ்படச் சிறந்த மந்திரத்
தேனையும் பாழ்பட இனைய செப்பினான். 2459

அநுமன் இகழ்தல்

நானுனை யிரந்து கூறு நயமொழி யொன்றுங் கேளாய்
சானகி தன்னை வாளாற் றடிந்ததோ தனதன் றந்த
மானமேற் சேனை யோடும் வடதிசை நோக்கி மீது
போனதோ கோடி கோடி வஞ்சமும் பொய்யும் வல்லாய்.

நில்லடா நில்லு நில்லு நீயடா வாசி பேசிக்
கல்லடா நின்ற தென்னைப் போர்க்களத் தமரர் காணக்

கொல்லலா மென்ருே நன்றுங் குரங்கென்ருற் கூடு மன்றே
நல்லைபோர் வாவா வென்ரு னமனுக்கு நமனாய் நின்ருன்.

மாருதி தோள்மீது இலட்சுமணர் ஏறிப்போகுதல்

வந்தானெடுந் தகைமாருதி மயங்காமுக மலர்ந்தான்
எந்தாய்கடி தேருயென திருதோள்மிசை யென்ருன்
அந்தாகவென் றுவந்தையனு மமைவாயின னிமையோர்
சிந்தாகுலங் களைந்தானென நெடுஞ்சாரிகை திரிந்தான்.

இலட்சுமண இந்திரசித்து போர்

குருதிப்புனல் சொரியும்முயர் குன்றென்னும் வநுமன்
பருதித்திரு நிறமொத்தவை யிளங்கோளரி பார்த்தான்
ஒருதிக்கினு முயராவகை யவன்றேரினை யுதிர்த்தான்
பொருதிக்கணம்வென்ருனெனச் சரமாரிகள்பொழிந்தான்.

இந்திரசித்து பிரமாத்திரம் விடுக்க, அக்கணையால்
இலட்சுமணர் தடுத்தனர்

சக்கரப்படை விடுக்க, இலட்சுமணர் தன்னை விட்டுணுவாகப் பாவித்து நிற்க, அது பணிந்து சென்றது. இந்திரசித்து பாசுபதாத்திரம் விடுத்தான். அதுகண்டனைவரும் அஞ்ச, இலட்சுமணரும் அதே கணை விடுத்து அழித்தனர்.

வீடணரை இந்திரசித்து இகழ்ந்தனன்.
வீடணர் விளம்புகின்ருர்.

மூவகை யுலக மேத்து முதலவ னெவர்க்கு மூத்த
தேவர்தந் தேவன் றேவி கற்பினிற் சிறந்து ளாளை
நோவன செய்தல் தீதென் றுரைப்பநுன் ருதை சீறிப்
போவெனப் போந்தே னின்று நரகதிற் பொருந்துவேனே.

இந்திரசித்து வீடணர் மீது விடுத்த வேலை
இலக்குவன் அழித்தல்.

கோலொன்று துணித லோடுங்
கூற்றுக்குங் கூற்ற மன்னன்
வேலொன்று வாங்கி விட்டான்
வெயிலொன்று விழுவ தென்ன
நாலொன்று மூன்று மான
புவனங்கள் நடுங்க லோடும்
நூலொன்று விதிவ லானு
மதனையு நுறுக்கி வீழ்த்தான். 2465

வீடணர் அவன் தேரை அழித்தனர். இந்திரசித்து மறைந்து இராவணனிடம் வருதல்

இந்திரசித்து வதைப் படலம்

இந்திரசித்து

சூழ்வினை மாயை யெல்லா மும்பியே துடைக்கச் சுற்றி
வேள்வியைச் சிதைய நூறி வெகுளியா லெழுந்து வீங்கி
ஆள்வினை யாற்ற லாற்ற னமர்த்தொழிற் புக்கு நின்றான்
தாழ்விலாப் படைகண் மூன்றுந் தொடுத்தனென்
றடுத்து விட்டான். 2466

நிலஞ்செய்து விசும்புஞ் செய்து நெடியவன் படைநின் றானை
வலஞ்செய்து போவ தானன் மற்றினி வலிய துண்டே
குலஞ்செய்தபாவத்தாலேகொடும்பழிதேடிக்கொண்டோம்
சலஞ்செயி னுலக மூன்று மிலக்குவன் முடிப்பன் றானே.

ஆதலா னஞ்சி னேனென் றருளலை யாசை தானச்
சீதைபால் விடுதி யாயி னனையவர் சீற்றந் தீர்வர்
போதலும் புரிவர் செய்த தீமையும் பொறுப்ப ருன்மேல்
காதலா லுரைத்தேனென்றா னுலகெலாங்கலக்கிவென்றான்.

இராவணன்

பேதைமை யுரைத்தாய் மைந்த வுலகெலாம்பெயரப்பேராக்
காதையென் புகழி னோடு நிலைபெற வமரர் காண
மீதெழு மொக்கு ளன்ன யாக்கையை விடுவ தல்லால்
சீதையை விடுவ துண்டோ விருபது திண்டோளுண்டாய்.

வென்றிலெ னென்ற போதும் வேதமுள் ளளவும் யானும்
நின்றுளெ னன்றே மற்றவ் விராமன்பேர் நிற்கு மாயின்
பொன்றுத லொருகா லத்துந் தவிருமோ பொதுமைத்
தன்றே
இன்றுளார் நாளை மாள்வார் புகழுக்கு மிறுதி யுண்டோ.

இந்திரசித்து புறப்படுதல்

படைக்கல விஞ்சை மற்றும் படைத்தன பலவுந் தன்பால்
அடைக்கல மாகத் தேவ ரளித்தன வெல்லாம் வாங்கிக்
கொடைத்தொழில் வேட்டோர்க் கெல்லாங் கொடுத்தனன்
கொடியோன் றன்னைக்
கடைக்கண்ணே நோக்கி நோக்கி யிருகணீர் கலுழப் போனான்.

இந்திரசித்து பெரும்போர் புரிந்தான்.

சூரியனுதித்தான்.

விண்ணிடை மறைந்து மாயப்போர் செய்தான்.

இந்திரசித்தின் கையறுத்தல்

சிலையறு தெனினு மற்றத் திண்ணியோன் றிரண்ட
தோளாம்
மலையறு தொழியா தென்று வரிசிலை யொன்று வாங்கிக்
கலையருத் திங்க ளன்ன வாளியாற் கையைக் கொய்தான்
விலையறு மணிப்பூ ணோடும் வில்லொடு நிலத்து வீழ. 2472

காற்று இடி மழை நெருப்பு முதலிய பல வடிவெடுத்து இந்திரசித்து போர் செய்தான்.

இலட்சுமணர் பாணம் விடுதல்

மறைகளே தேறத் தக்க வேதியர் வணங்கற் பால
இறையவ னிராம னென்னு நல்லற மூர்த்தி யென்னின்
பிறையெயிற் றிவனைக் கோறி யென்றொருபிறைவாய்வாளி
நிறையுற வாங்கி விட்டா னுலகெலா நிறுத்தி நின்றான்.

இந்திரசித்து தலையறுதல்

நேமியுங் குலிச வேலு நெற்றியி னெருப்புக் கண்ணன்
நாமவேல் தானு மற்றை நான்முகன் படையு நாணத்
தீமுகங் கதுவ வோடிச் சென்றவன் சிரத்தைத் தள்ளிப்
பூமழை மாரி சிந்தப் பொலிந்ததப் பகழிப் புத்தேள். 2474

தேவர் மகிழ்தல்

வில்லாள ராளர்க் கெல்லா மேலவன் விளித லோடும்
செல்லாதவ் விலங்கை வேந்தற் கரசெனக் களித்த தேவர்
எல்லாருந் தூசு நீக்கி யேறிட ஆர்த்த போது
கொல்லாத விரதத் தார்தங் கடவுளர் கூட்ட மொத்தார்.

மும்மூர்த்திகள் தோன்ற வானரர் தெரிசித்தனர்.

இறந்தவர் எழுதல்

அறந்தலை நின்றார்க் கில்லை யழிவென்னு மறிஞர் வார்த்தை
சிறந்தது சரங்கள் பாயச் சிந்திய சிரத்த வாகிப்

பறந்தலை யதனின் மற்றைப் பாதக வரக்கன் கொல்ல
இறந்தன கவிக ளெல்லா மெழுந்தன விமையோ ரேத்த.

இலட்சுமணர் திரும்புதல்

ஆக்கையி னின்று வீழ்ந்த வரக்கன்றன் றலையை யங்கை
தூக்கின னுள்ளங் கூர்ந்த வாலிசேய் தூசுசெல்ல
மேக்குயர்ந் தமரர் வெள்ள மள்ளினர் தொடர்ந்து வீசும்
பூக்கிளர் பந்தர் நீழ லநுமன்மே லிளவல் போனான். 2477

அங்கதன் அந்த தலையைக் கொணர்ந்து
இராமன் முன் வைத்தனன்

இராமர் தம்பியைக் கண்டு உவத்தல்

வன்புலங் கடந்து மீளுந் தம்பிமேல் வைத்த மாலைத்
தன்புல நயன மென்னுந் தாமரை சொரியுந் தாரை
அன்புகொ லழுக ணீர்கொ லானந்த வாரி யேகொல்
என்புக ளுருகிச் சோருங் கருணைகொல் யார தோர்வார்.

தலையினை நோக்குந் தம்பி கொற்றவை தழீஇயபொற்றோள்
மலையினை நோக்கு நின்ற மாருதி வலியை நோக்கும்
சிலையினை நோக்குந் தேவர் செய்கையை நோக்குஞ்செய்த
கொலையினை நோக்கு மொன்று முரைத்திலன் களிப்புக்
கொண்டான். 2479

கம்பம தத்துக் களியானைக்
காவற் சனகன் பெற்றெடுத்த
கொம்பு மென்பா லினிவந்து
குறுகி னுள்நன் றெனக்குளிர்ந்தேன்
வம்புசெ றிந்த மலர்க்கோயின்
மறையோன் படைத்த மாநிலத்தில்
தம்பி யுடையான் பகையஞ்சா
னென்னு மாற்றந் தந்தனையால். 2480

இராவணன் சோகப்படலம்

தூதுவரோதுதல்

பல்லும் வாயு மனமுந் தம் பாதமும்
நல்லு யிர்ப்பொறை யோடு நடுங்குவார்
இல்லை யாயின னுன்மக னின்றெனச்
சொல்லி னர்பயஞ் சுற்றத் துளங்குவார். 2481

இராவணன் அழுதல்

மைந்த வோவெனு மாமக னேயெனும்
எந்தை யோவெனு மென்னுயி ரேயெனும்
முந்தி னேனுனை நானுளெ னேவெனும்
வெந்த புண்ணிடை வேல்பட்ட வெம்மையான். 2482

புரந்த ரன்பகை போயிற்றன் றேவெனும்
அரந்தை வானவ ரார்த்தன ரோவெனும்
கரந்தை சூடியும் பாற்கடற் கள்வனும்
நிரந்த ரம்பகை நீங்கின ரோவெனும். 2483

அற்ற கரத்தைக் காணுதல்

மெய்கி டந்த விழிவழி நீர்விழ
நெய்கி டந்த கனல்புரை நெஞ்சினன்
மொய்கி டந்த சிலையொடு மூரிமாக்
கைகி டந்தது கண்டனன் கண்களால். 2484

கண்டி லன்றலை காந்திய மானுடன்
கொண்டி றந்தன னென்பதுங் கொண்டவன்
புண்டி றந்தன நெஞ்சன் பொருமலன்
விண்டி றந்திட விம்மி யரற்றினன். 2485

மண்டோதரி யழுதல்

தாளரிச் சதங்கை யார்ப்பத் தவழ்கின்ற பருவந் தன்னில்
கோளரியிரண்டுபற்றிக்கொணர்ந்தனைகொணர்ந்துகோபம்
மூளுறப் பொருத்தி மாட முன்றிலின் முறையி னோடி
மீளரு விளையாட் டின்னுங் காண்பெனோ விதியி லாதேன்.

இராவணன் சீதையை வெட்ட ஓடுதல்

என்றழைத் திரங்கி யேங்க இத்துயர் நமர்கட் கெல்லாம்
பொன்றழைத் தனைய வல்குற் சீதையாற் புகுந்ததென்ன
வன்றழைக் கல்வி னெஞ்சின் வஞ்சகத் தானை வாளால்
கொன்றிழைத்திடுவெனென்றுவோடினனரக்கர் கோமான்.

மகோதரன் தடுத்தனன்

மங்கையர் குலத்து ளானைத்
தவத்தியை முனிந்து வாளால்
சங்கையொன் றின்றிக் கொன்றான்
குலத்துக்கே தக்கா னென்று

கங்கையஞ் சென்னி யானுங்
கண்ணனுங் கமலத் தோனும்
செங்கையுங் கொட்டி யுன்னைச்
சிரிப்பராற் சிறிய னென்னு. 2488

இராவணன், இந்திரசித்தன் உடலை எண்ணெயி லிடுவித்தனன்.

படைக்காட்சிப் படலம்

மூலபல சேனை வந்தது.

அதைக் கண்டு இராவணன் மகிழ்ந்தான்.

அதன் தன்மையை தூதர் ஓதினர்.

மாதிர மொன்றி னின்று மாறொரு திசைமேன் மண்டி
ஓதநீர் செல்வ தென்ன தானையை யுணர்வு கூட்டி
வேதவே தாந்தங் கூறும் பொருளினை விரிக்கின்றார்போல்
தூதுவ ரணிகள் தோறும் வரன்முறைகாட்டிச்சொன்னர்.

பாவந் தோன்றிய காலமே தோன்றிய பழையோர்
தீவந் தோன்றிய முழைத்துணை யெனத்தறு கண்ணர்
கோவந் தோன்றிடிற் றுயையு முயிருணுங் கொடியோர்
சாவந் தோன்றிட வடதிசை மேல்வந்து சார்வார். 2490

எத்தி றத்திதற் கெண்ணெனத் தொகைவகுத் தியன்ற
அத்தி றத்தினை யறைதிரென் றுரைசெய அவர்கள்
ஒத்த வெள்ளமோ ராயிர முளதென வுரைத்தார்
பித்த ரிப்படைக் கெண்சிறி தென்றனர் பெயர்ந்தார்.

சேனுபதிகளிடம் இராவணன் நிகழ்ந்ததை யுரைக்க,
அவர்கள் நகுதல்.

கும்ப கன்னனே டிந்திர சித்தையுங் குலத்தின்
வெம்பு வெஞ்சினத் தரக்கர்தங் குழுவையும் வென்றோர்
அம்பி னற்சிறு மனிதரே நன்றுநம் மாற்றல்
நம்ப சேனையும் வானர மேயென நக்கார். 2492

உலகைச் சேடன்ற னுச்சியின் றெடுக்கவன் றேரேழ்
மலையை வேரொடும் வாங்கவன் றங்கையால் வாங்கி
அலைகொள் வேலையைக் குடிக்கவன் றழைத்தது மலரோ
டிலைகள் கோதுமக் குரங்கின்மே லேவக்கொ லெம்மை.

மாலியவான்

ஆழி யன்னநீ ரறிதிரன் றேகட லனைத்தும்
ஊழிக் காலெனக் கடப்பவன் வாலியென் போனை
ஏழு குன்றமு மெடுக்குறு மிடுக்கனை யிந்நாள்
பாழி மார்பகம் பிளந்துயிர் குடித்ததோர் பகழி. 2494

பரிய தோளுடை விராதன்மா ரீசனும் பட்டார்
கரிய மால்வரை நிகர்கர தூடணர் கதிர்வேல்
திரிசி ராவவர் திரைக்கட லனபெருஞ் சேனை
ஒருவி லாலொரு நாழிகைப் பொழுதினி னுலந்தார். 2495

இங்கு வந்துநீர் வினையதென் னெறிதிரைப் பரவை
அங்கு வெந்தில தோசிறி தறிந்தது மிலிரோ
கங்கை சூடினன் கடுஞ்சிலை யொடித்தவக் காலம்
உங்கள் வான்செவி புகுந்தில தோமுழங் கோதை. 2496

ஒருகு ரங்குவந் திலங்கையை மலங்கெரி யூட்டித்
திருகு வெஞ்சினத் தக்கனை நிலத்தொடுத் தேய்த்துப்
பொருது தூதுரைத் தேகிய தரக்கியர் புலம்பக்
கருது சேனையாங் கடலையுங் கடலையுங் கடந்து. 2497

கண்டி லீர்கொலாங் கடலினை மலைகொண்டு கட்டி
மண்டு போர்செய வானர ரியற்றிய மார்க்கம்
உண்டு வெள்ளமோ ரெழுபது மருந்தொரு நொடியின்
கொண்டு வந்தது மேருவிற் கப்புறங் குதித்து. 2498

இதுவி யற்கையோர் சீதையென் றிருந்தவத் தியைந்தாள்
பொதுவி யற்கைதீர் கற்புடைப் பத்தினி பொருட்டால்
விதிவி ளைத்தவா வில்லியர் வெல்கநீர் வெல்க
முதுமொ ழிப்பதஞ் சொல்லின னென்றுரை முடித்தான்.

வன்னி (சேனாபதி)

வன்னி மன்னனை நோக்கிநீ யிவரெலா மடிய
என்ன காரண மிகல்செயா திருந்ததென் றிசைத்தான்
புன்மை நோக்கின ஞணிஞற் பொருந்திலே னென்றான்
அன்ன தேலினி யமையுமெங் கடனஃ தென்றான். 2500

மூலபலவதைப் படலம்

மூலபலம் அணிவகுத்து வந்தது. அதைக்கண்ட அமரர் உருத்திரனை வினவினர்

ஒருவ ரைக்கொல்ல வாயிர மிராமர்வந் தொருங்கே
இருப திற்றிரண் டாண்டுநின் றமர்செய்தா லென்னும்
நிருத ரைக்கொல்வ திடம்பெற்று ரிடையினின் றன்றே
பொருவ திப்படை கண்டுதன் னுயிர்பொறுத் தன்றே.

உருத்திரர்

என்றி றைஞ்சலு மிருண்மிடற் றிறைவனு மினிநீர்
ஒன்று மஞ்சலிர் வஞ்சனை யரக்கரை யொருங்கே
கொன்று நீக்குமக் கொற்றவ னிக்குல மெல்லாம்
பொன்று விப்பதோர் விதிதந்த தாமெனப் புகன்றான்.

வானரங்கள் அஞ்சியோடுதல்

அரியின் வேந்தனு மநுமனு மங்கத னவனும்
பிரிய கிற்றில ரிறைவரை நின்றனர் பின்றார்
இரிய லுற்றனர் மற்றையோர் யாவரு மெறிநீர்
விரியும் வேலையைக் கடந்தனர் நோக்கினன் வீரன். 2503

வீடணர்

இக்கொ டும்படை யெங்குள தியம்புதி யென்றான்
மெய்க்க டுந்திறல் வீடணன் விளம்புவான் வீர
திக்க னைத்தினு மேழுமாத் தீவினுந் தீயோர்
புக்க ழைத்திடப் புகுந்துள திராக்கதப் புணரி. 2504

அங்கதன் சென்று சேனாபதிகளை அழைக்க அவர்கள் கூறுவது

என்னப் பாமற்றிவ் வெழுபது வெள்ளமு மொருவன்
தின்னப் போதுமோ தேவரின் வலியமோ சிறியேம்
முன்னிப் பாரெலாம் படைத்தவ னொளலா முறைநின்
றுன்னிப் பார்த்துநின் றுறையிடக் குறையுமிவ் வியூகம்.

அங்கதன்

சாம்பனை வதன நோக்கி வாலிசே யறிவு சான்றோய்
பாம்பணை யமலன் மற்றிவ் விராமனென் றெமக்குப்பண்டே
ஏம்பல்வந் துற்ற காலத் தியம்பினை யல்லை யோநீ
ஆம்பலம் பகைஞன் றன்னோ டயிந்திரமமைந்தோ னன்றாய்

ஒன்றுநீ யஞ்ச லைய
யாமெலா மொருங்கு சென்று
நின்றுமொன் றியற்ற லாற்று
நேமியான் றனே நேர்ந்து
கொன்றுபோர் கடக்கு மாயிற்
கொள்ளுதும் வென்றி யன்றேல்
பொன்றுது மவனே டென்றான்
போதலோ புகழன் றென்றான். 2507

வானர சேனையைக் காத்து நிற்குமாறு இலக்குவனுக்குப் பணித்து, இராமர் ஒருவரே வந்து பொருதல்.

யோசனை நூற்றின் வட்ட மிடைவிடா துறைந்த சேனைத்
தூசிவந் தண்ணல் தன்னைப் போக்கற வளைந்து சுற்றி
வீசின படையு மம்பு மிடைதலின் விண்ணோர் யாக்கை
கூசின பொடியா லெங்குங் குமிழ்ந்தன வியோம கூடம்.

இமையவரும் முனிவரும் "வெல்க" என்று ஆசி கூறினர்.

பிரிந்தார்பல ரிரிந்தார்பலர் பிழைத்தார்பல ருழைத்தார்
புரிந்தார்பலர் நெரிந்தார்பலர் புரண்டார்பல ருருண்டார்
எரிந்தார்பலர் கரிந்தார்பல ரெழுந்தார்பலர் விழுந்தார்
சொரிந்தார்குடல் துமிந்தார்தலை தொலைந்தாரெதிர்
தொடர்ந்தார். 2509

முன்னேயுளன் பின்னேயுளன் முகத்தேயுள னகத்தின்
தன்னேயுளன் மருங்கேயுளன் றலைமேலுளன் மலைமேல்
கொன்னேயுளனிலத்தேயுளன்விசும்பேயுளன்கொடியோர்
என்னேயொரு கடுப்பென்றிட விருஞ்சாரிகை திரிந்தான்.

என்னேரின னென்னேரின னென்றியாவரு மெண்ணம்
பொன்னேர்வரு வரிவிற்கரத் தொருகோளரி பொருவான்
ஒன்னார்பெரும்படைப்போர்க்கட லுறையன்றுளதெனினும்
அன்னேரவ ருடனேதிரி நிழலேயென லானான். 2511

சரக்கூடம்

சுருக்கமுற் றதுபடை சுருக்கத் தாலினிக்
கரக்கமுற் றொருபுறத் தென்னுங் கண்ணினால்
அரக்கருக் கன்றுசெல் வரிய தாம்வகை
சரக்கொடு நெடுமதில் சமைத்திட் டானரோ. 2512

ஆயிர வெள்ளமுண் டொருவ ராழிசூழ்
மாயிரு ஞாலத்தை மறிக்கும் வன்மையோர்
மேயின பெரும்படை யதனை யோர்விலால்
ஏயெனு மாத்திரத் தெய்துகொன் றனன். 2513

காந்தருப்பக் கணை விடுதல்

காந்தருப் பம்மெனுங் கடவுண் மாப்படை
வேந்தருக் கரசனும் வில்லி னூக்கினன்
பாந்தளுக் கரசெனப் பறவைக் கேறெனப்
போந்துருத் தனநெருப் பனைய போர்க்கணை. 2514

சேனுபதிகள் அழிதல்

ஐயிரு கோடிய ரரக்கர் வேந்தர்கள்
மொய்வலி வீரர்க ளொழிய முற்றுற
எய்யெனு மாத்திரத் தவிந்த தென்பரால்
செய்தவத் திராவணன் மூலச் சேனையே. 2515

கோதண்டத்தின் மணி யசைந்த கணக்கு

ஆனை யாயிரந் தேர்பதி னுயிர மடர்பரி யொருகோடி
சேனைகாவல ராயிரம் பேர்படிற் செழுமணிக் கவந்தமொன்
றுடும்
கான மாயிர மாயிரகோடிக் குக்கவின்மணிகணி லென்னும்
ஏன வம்மணி யேழரை நாழிகை யாடிய தினிதன்றே. 2516

வேலேற்றுப் படலம்

இராவணன் வந்து வானரங்களுடன் எதிர்த்தல்.

அரக்கர் சேனையோ ராயிர வெள்ளத்தை யமரில்
துரக்க மானுடர் தம்மையென் றொருபுடை துறந்து
வெருக்கொள் வானரச் சேனைமேற் றுன்செல்வான் விரும்பி
இருக்குந் தேரொடும் போயவ னிராவண னெதிர்ந்தான்.

இரியல் போகின்ற சேனையை யிலக்குவன் விலக்கி
அரிக ளஞ்சன்மி னஞ்சன்மி னென்றருள் வழங்கித்
திரியு மாருதி தோளெனுந் தேர்மிசைச் சென்றான்
எரியும் வெஞ்சினத் திராவணனெதிர்புகுந்தேற்றுன். 2518

இராவணனும் இலக்குவனும் போர் புரிந்தனர்.

தெய்வப் படைகளை விலக்குவன் என்று இராவணன் கருதி

மோகனப்படை விடுதல்

என்ப துன்னிய வலிஞ்சையை மனத்திடை யெண்ணி
முன்பன் மேல்வரத் துரந்தன னதுகண்டு முடுகி
அன்பின் வீடணு ஞழியான் படையினி னறுத்தி
என்ப தோதின னிலக்குவ னதுதொடுத் தெய்தான். 2519

மோகனக் கணை யழிந்தது. வீடணன்மீது வேலேவுதல்

விட்ட போதினி னொருவனை வீட்டியே மீளும்
பட்ட போதவ னுன்முக னயினும் படுக்கும்
வட்ட வேலது வலங்கொண்டு வாங்கினன் வணங்கி
எட்டநிற்கலாத் தம்பிமேல்வல்லிசைத் தெறிந்தான். 2520

வீடணற்கு இளையவன் அபயமளித்தல்

எறிந்த காலையில் வீடண னதனிலை யெல்லாம்
அறிந்த சிந்தைய னையவீ தென்னுயி ரழிக்கும்
பிறிந்து செய்யலாம் பொருளிலை யென்றலும் பெரியோன்
அறிந்து போக்குவ லஞ்சல்நீ யென்றிடை யணைந்தான்.

எய்த வாளியு மேயின படைக்கலம் யாவும்
செய்த மாதவத் தொருவனைச் சிறுதொழிற் றீயோன்
வைத வைவினி லொழிந்தன வீடணன் மாண்டான்
உய்த லில்லையென் றும்பரும் பெருமன முலைந்தார். 2522

வேலேற்க முந்துதல்

தோற்ப னென்னினும் புகழ்நிற்கும் தருமமும் தொடரும்
ஆர்ப்ப நல்லவ டைக்கலம் புகுந்தவ னழியப்
பார்ப்ப தென்னெடும் பழிவந்து தொடர்வது முன்னம்
ஏற்ப னென்றணி மார்பினென் றிலக்குவ னெதிர்ந்தான்.

இலக்கு வற்குமுன் வீடணன் புகுமிரு வரையும்
விலக்கி யங்கதன் மேற்செலு மவனையும் விலக்கிக்
கலக்கும் வானரக் காவல னநுமன்முன் கடுக
அலக்க ணன்னதை யின்னதென் றுரைசெய லாமே. 2524

முன்னின் றுரெலாம் பின்னுறக் காலினின் முடுகி
நின்மின் யானிது விலக்குவ னென்றுரை நேரா
மின்னும் வேலினை விண்ணவர் கண்புடைத் திரங்கப்
பொன்னின் மார்பிடை யேற்றனன் முதுகிடைப் போன.

இராவணன் இலங்கை சென்றனன்

சேய்வி சும்பினி னிமிர்ந்துநின் றிராவணன் சீறிப்
பாய்க டுங்கணை பத்தவ னுடல்புகப் பாய்ச்சி
ஆயி ரஞ்சர மநுமன்ற னுடலிடை யழுத்திப்
போயி னன்செரு முடிந்ததென் றிலங்கையூர் புகுவான்.

இலட்சுமணர் மாண்டதுபற்றி அனைவரும் அழுதனர்.

சாம்பன் கூறுகின்றான்

அநும னிற்கநா மாருயிர்க் கிரங்குவ தறிவோ
நினையு மத்துணை மாத்திரத் துலகெலா நிமிர்வான்
வினையி னன்மருந் தளிக்கின்றான் வீரர்க்கு வீரன்
தினையு மல்லலுற் றழுங்கன்மி னென்றிடர் தீர்த்தான்.

மருத்தின் காதலன் மார்பி டைப்பெலாம் வாங்கி
இருத்தி யோகடி தேகலை யிளவலை யிங்ஙன்
வருத்தங் காணுமோ மன்னவ னென்னலு மன்னன்
கருத்தை யுன்னியம் மாருதி யுலகெலாங் கடந்தான். 2528

சஞ்சீவி மருந்து கொணர இலட்சுமணர் எழுந்தனர்

எழுந்துநின் றநுமன் றன்னை
யிருகையாற் றழுவி யெந்தாய்
விழுந்தில னன்றோ மற்றவ்
வீடண னென்ன விம்மித்
தொழுந்துணை யவனை நோக்கித்
துணுக்கமுந் துயரு நீங்கிக்
கொழுந்தியு மீண்டாள் பட்டா
னரக்கனென் றுவகை கொண்டான். 2529

அனைவரும் இராமரிடம் போதல்

தருமவென் றறிஞர் சொல்லுந்
தனிப்பொருள் தன்னை யின்னே
கருமமென் றநும னுக்கிக்
காட்டிய தன்மை கண்டால்
அருமையென் னிராமற் கம்மா
அறம்வெல்லும் பாவந் தோற்கும்
இருமையு நோக்கி னென்னு
மிராமன்பா லெழுந்து சென்றார். 2530

இராமர் மகிழ்தல்

உற்றது முழுது நோக்கி யொழிவற வுணர்வு ளூறச்
சொற்றனன் சாம்பன் வீர னநுமனைத் தொடரப் புல்லிப்
பெற்றனெ னுன்னை யென்னைபெரு தனபெரியோயொன்று
மற்றிடை யீறு செல்லா ஆயுளை யாக வென்றான். 2531

புறவொன்றின் பொருட்டின் யாக்கை புண்ணுற வரிந்த புத்தேள்
அறவனு மைய நின்னை நிகர்க்கில னப்பா னின்ற
பிறவினை யுரைப்ப தென்னே பேரரு ளாள ரென்பார்
கறவையுங் கன்று மொப்பார் தமக்கிடர் காண்கி
னென்றான். 2532

இராவணன் களங்காண் படலம்

இராவணன் வெற்றிகாரணமாக விருந்து வைத்தல்

பொருந்து பொற்பெருங் கோயிலுட் போர்த்தொழில்
வருந்தினர்க் குத்தம் மன்பினின் வந்தவர்க்
கருந்து தற்கமை வாயின வாக்குவான்
விருந்த மைக்கவ மைக்கின்ற வேட்கையான். 2533

ஆடல், பாடல், உணவு முதலியன அமைத்தான்.
தூதரோடி ஓதுவார்

இன்றியார் விருந்திங் குண்பாரிகன்முகத்திமையோர்தந்த
வென்றியா யேவச் சென்ற வாயிர வெள்ளச் சேனை
நின்றது புறத்த தாக இராமன்கை நிமிர்ந்த சாபம்
ஒன்றினு லிரண்டு மூன்று கடிகையி னுலந்த தென்றார்.

இராவணன்

இலக்குவன் றன்னை வேலாலெறிந்துயிர் கூற்றுக்கீந்தேன்
அலக்கணிற் றலைவ ரெல்லா மழுந்தின ரதனைக் கண்டால்
உலக்குமா லிராமன் பின்னே யுயிர்ப்பொறை யுகவானுற்ற
மலக்கமுண் டாகி னுகை வாகையென் வயத்த தென்றான்.

தூதர்

ஆண்டது கேட்டு நின்ற தூதுவ ரைய மெய்யே
மீண்டதவ் விளவ லாவி மாருதி மருந்து மெய்யில்
தீண்டவுந் தாழ்ந்த தில்லை யாருமச் செங்க ணானைப்
பூண்டனர் மருந்து வெற்பை வீசினன் புக்க தென்றார்.

இராவணன் கோபுரமீது ஏறி மாண்டவர்களை நோக்கினன்.

நகைபிறக் கின்ற வாய னுக்கொடு கடைவாய் நக்கிப்
புகைபிறக் கின்ற மூக்கன் பொறிபிறக் கின்ற கண்ணன்
மிகைபிறக் கின்ற நெஞ்சன் வெஞ்சினத் தீமேல் வீங்கிச்
சிகைபிறக் கின்ற சொல்ல னரசிய லிருக்கை சேர்ந்தான்.

தேரேறு படலம்

பூதர மனைய மேனிப் புகைநிறப் புருவச் செந்தீ
மோதர னென்னு நாமத் தொருவனை முகத்து நோக்கி
ஏதுள திறந்தி லாத திலங்கையு ளிருந்த சேனை
யாதையு மெழுகென் றனை மணிமுர செற்று கென்றான்.

ஈசனை யிமையா முக்க ணிறைவனை யிருமைக் கேற்ற
பூசனை முறையிற் செய்து திருமறை புகன்ற தானம்
வீசின னியற்றி மற்றும் வேட்டன வேட்டோர்க் கெல்லாம்
ஆசற நல்கி யொல்காப் போர்த்தொழிற் கமைவ தானன்.

இராவணன் தேரேறுதல்

ஏறி னன்றெழு திந்திரன் முதலிய இமையோர்
தேறி னர்களுந் தியங்கினர் மயங்கினர் திகைத்தார்
வேறு நாஞ்சொலும் வினையிலை மெய்யினைம் புலனும்
ஆறி னர்களு மஞ்சினு ருலகெலா மனுங்க. 2540

இராவணனுடைய வஞ்சினவுரை

மன்ற லங்குழற் சனகிதன் மலர்க்கையான் வயிறு
கொன்ற லந்தலைக் கொடுநெடுந் துயரிடை குளித்தல்
அன்றி தென்றிடின் மயன்மக ளத்தொழி லுறுதல்
இன்றி ரண்டினென் றுக்குவென் றலைப்படி னென்றான்.

இராவணனது வரவை வீடணர் கூற, இராமர்
போருக்கு எழுந்தனர்.

தேரனுப்புமாறு உருத்திரர் உரைத்தனர்.

இந்திர ரதத்தை மாதலி கொணர, இராமர் ஐயுற்று வினவினர்.

மாதலி விடை.

முப்புர மெரித்தவனு நான்முகனு முன்னாள்
அப்பக லியற்றியுள தாயிர மருக்கர்க்

கொப்புடைய தூழிதிரி காலுமுலை வில்லா
இப்பொருவில் தேர்வருவ திந்திரன தெந்தாய். 2542

தேர்க் குதிரைகள் வேதமோதல்.

ஐயனிது கேட்டிக லரக்கரகன் மாயச்
செய்கைகொ லெனச்சிறிது சிந்தையில் நினைந்தான்
மெய்யவனு ரைத்ததென வேண்டியிடை பூண்ட
மொய்யரிவ யப்பரிமொ ழிந்தமுது வேதம். 2543

இல்லையினி யையமென வெண்ணியவி ராமன்
நல்லவினை நீயுனது நாமநவில் கென்ன
வல்லதனை யூர்வதொரு மாதலியெ னப்பேர்
சொல்லுவரெ னத்தொழுது நெஞ்சினெடு சொன்னன்.

மாருதியை நோக்கியிள வாளரியை நோக்கி
நீர்கருது கின்றதைநி கழ்த்துமென நின்றுன்
ஆரியன்வ ணங்கியவ ரையமிலை மெய்யே
தேரிதுபு ரந்தரன தென்றனர்தெ ளிந்தார். 2545

இராவணன் வதைப் படலம்

இராமனுக்கு இமையவர் இரதமனுப்பியதைக் கண்ட
இராவணன் சினமுறுதல்

அன்னது கண்ணிற் கண்ட அரக்கனு மமர ரீந்தார்
மன்னெடுந் தேரென் றுன்னி வாய்மடித் தெயிறு தின்றுன்
பின்னதுகிடக்கவென்னுத் தன்னுடைப்பெருந் திண்டேரை
மின்னகு வரிவிற் செங்கை யிராமன்மேல் விடுதியென்றுன்.

மகோதரன் இராமர் முன் வந்து பொருது மாண்டான்.

வில்லொன்றுற் கவச மொன்றுல்
விறலுடைக் கரமோ ரொன்றுல்
கல்லொன்று தோளு மொன்றுற்
கழுத்தொன்றுற் கடிதின் வாங்கி
செல்லொன்றுங் கணையா லையன்
சிந்தினன் செப்பி வந்த
சொல்லொன்றுய்ச் செய்கை யொன்றுய்த்
துணிந்தன னரக்கன் றுஞ்சி. 2547

துன்னிமித்தம்

உதிர மாரி சொரிந்த துலகெலாம்
அதிர வான மிடித்த தருவரை

பிதிர வீழ்ந்த தசனி யொளிபெருக்
கதிர வன்றனை யூருங் கலந்ததால். 2548

இராம இராவண யுத்தம்

கரும முங்கடைக் கண்ணு று ஞானமும்
அருமை சேரு மவிஞ்சையும் விஞ்சையும்
பெருமை சால்கொடும் பாவமும் பேர்கலாத்
தரும மும்மெனச் சென்றெதிர் தாக்கினர். 2549

சிரமொ ராயிரந் தாங்கிய சேடனும்
உரவு கொற்றத் துவணத் தரசனும்
பொரவு டன்றனர் போலப் பொருந்தினர்
இரவு நண்பக லும்மென வேற்றனர். 2550

வில் நாணொலி

ஏழு வேலையு மார்ப்பெடுத் தென்னலாம்
வீழி வெங்க ணிராவணன் வில்லொலி
ஆழி நாதன் சிலையொலி யண்டம்விண்
டூழி பேர்வுழி மாமழை யொத்தலால். 2551

ஆவ தென்னைகொ லாமென் றறிகிலார்
ஏவர் வெல்வரென் றெண்ணல ரேங்குவார்
போவர் மீள்வர் பதைப்பர் பொருமலால்
தேவ ருந்தங்கள் செய்கை மறந்துளார். 2552

நூறுயிர வடிவெங்கணை நொடியொன்றினின் விடுவான்
ஆறுவிறன் மறவோனவை தனிநாயக னறுப்பான்
கூறுயின கனல்சிந்தின குடிக்கப்புனல் குறுகிச்
சேறுயின பொடியாயின திடராயின கடலும். 2553

இராவணன் தேருடன் விண்ணிடை நின்று
கணைமழை பொழிதல்.

எழுந்துயர் தேர்மிசை யிலங்கைக் காவலன்
பொழிந்தன சரமழை யுருவிப் போதலால்
ஒழிந்தது மொழிகில தென்ன வொல்லெனக்
கழிந்தது கவிக்குல மிராமன் காணவே. 2554

வலம்வரு மிடம்வரு மறுகி வாளெடு
நிலம்வரு மிடம்வல நிமிரும் வேலையும்

அலம்வருங் குலவரை யனைத்து மண்டமும்
சலம்வருங் குயவன திகிரித் தன்மைபோல். 2555

உய்த்துல கனைத்தினு முழன்ற சாரிகை
மொய்த்தது கடலிடை மணலின் மும்மையால்
வித்தகர் கடவிய விசயத் தேர்ப்பரி
எய்த்தில வியர்த்தில விரண்டு பாலவும். 2556

இராமர் தேரிலுள்ள இடிக் கொடியை அறுத்தல்

இந்திரன் றேரின்மே லுயர்ந்த வெந்தொழில்
உந்தரும் பெருவலி யுருமி னேற்றினைச்
சந்திர னனையதோர் சரத்தி னற்றரை
சிந்தின னிராவண னெரியுஞ் செங்கணான். 2557

கருடன் இராமர் தேரில் கொடியாக நின்றனன்.
இராவணன் தாமதாத்திரம் விடுத்தான்.
இராமர் சிவாத்திரம் விடுத்து அழித்தனர்.
இராவணன் அசுவாத்திரம் விடுத்தனன்.
இராமர் அக்னி அத்திரத்தால் அழித்தனர்.
இராவணன் விடுத்த மயன் கணையை
இராமர் காந்தர்ப்பாத்திரத்தால் அழித்தனர்.
இராவணன் தண்டு எறிதல்.

பண்டு நான்முகன் படைத்தது கனகனிப் பாரைத்
தொண்டு கொண்டது மதுவெனு மவுணன்முன் றெட்ட
துண்ட தென்வயி னதுதுரந் துயிருண்ப னென்றோர்
தண்டுகொண்டெறிந் தானைந்தொடைந்துடைத் தலையான்.

கண்ட தாமரைக் கண்ணனக் கடவுண்மாக் கதைதான்
அண்டர் நாயக னயிரங் கண்ணினு மடங்காப்
புண்ட ரீகத்தின் முகையன்ன புகர்முகம் விட்டான்
உண்டை நூறுடை நூறுபட் டுளதென வுதிர்த்தான்.

இராமணன் மாயாத்திரம் விடுத்தனன்.

இந்தி ரற்கொரு பகைஞனு மவற்கிளை யோனும்
தந்தி ரப்பெருந் தலைவருந் தலைத்தலை யோரும்
மந்தி ரச்சுற்றத் தவர்களும் வரம்பிலர் பிறரும்
அந்த ரத்தினை மறைத்தனர் மழையுக ஆர்ப்பார்.

இராமர் ஞானாத்திரம் விடுதல்.

வரத்தி னாயினு மாயையி னாயினும் வலியோன்
உரத்தி னாயினு முண்மையி னாயினு மோடத்
துரத்தி யாலென ஞானமாக் கடுங்கணை துரந்தான்
சிரத்தி னான்மறை யிறைஞ்சவுந் தொடரவுஞ் சேயோன்.

இராவணன் சூலம் விடுத்தனன்.
இராமர் ஊங்காரம் செய்தனர்.

சங்கா ரத்தார் கண்டையொ லிப்பத் தழல்சிந்தப்
பொங்கா ரத்தான் மார்பெதி ரோடிப் புகலோடும்
வெங்கா ரத்தான் முற்றுமு னிந்தான் வெகுளிப்பே
ருங்கா ரத்தா னுக்கது பன்னா றுதிராகி. 2562

இராவணன் வியத்தல்

வென்றா னென்றே யுள்ளம்வி யந்தான் விடுசூலம்
பொன்றா னென்னிற் போகல தென்னும் பொருள் கொண்டான்
ஒன்றா முங்கா ரத்திடை யுக்கோ டுதல்காணா
நின்றா னந்நாள் வீடண னார்சொன் னினைவுற்றான். 2563

சிவனோ வல்ல னான்முக னல்லன் றிருமாலாம்
அவனோ வல்லன் மெய்வர மெல்லா மடுகின்றான்
தவனோ வென்னிற் செய்துமு டிக்குந் தரனல்லன்
இவனோ தானவ் வேதமு தற்கா ரணனென்றான். 2564

யாரே னுந்தா னாகுக யானென் றனியாண்மை
பேரே னின்றே வென்றிமு டிப்பென் புகழ்பெற்றேன்
நேரே செல்லுங் கொல்லுமெ னிற்றா னிமிர்வென்றி
வேரே நிற்கும் மீள்கில னென்னா விடலுற்றான். 2565

இராவணன் விடுத்த நாகாத்திரத்தை இராமர்
கருடாத்திரத்தால் அழித்தனர்.
இராமர் அறுத்த தலை முளைத்தல்.

இறந்ததோ ருயிருடன் றருமத் தீட்டினால்
பிறந்துள தாமெனப் பெயர்த்து மோர்தலை
மறந்தில தெழுந்தது மடித்த வாயது
சிறந்தது தவமலாற் செயலுண் டாகுமோ. 2566

தலையறிற் றருவதோர் தவ்மு முண்டென
நிலையுறு நேமியா னறிந்து நீசனைக்
கலையுறு திங்களின் வடிவு காட்டிய
சிலையுரு கையையுந் தலத்திற் சேர்த்தினான். 2567

கரத்தை மாதலிமீது எறிதல்

விளங்கொளி வயிரவா ளரக்கன் வீசிய
தளங்கிளர் தடக்கைதன் மார்பிற் றுக்கலும்
உளங்கிளர் பெருவலி யுலைவின் மாதலி
துளங்கினன் வாய்வழி யுதிரந் தூவுவான். 2568

நீர்த்தரங் கங்கள் தோறு நிலந்தொறும்
சீர்த்த மால்வரை தோறுந் திசைதொறும்
பார்த்த பார்த்தவி டந்தொறும் பஃறலை
ஆர்த்து வீழ்ந்த தசனிகள் வீழ்ந்தென. 2569

இராவணன் அயர்தல்

மயிரின் கால்தொறும் வார்கணை மாரிபுக்
குயிருந் தீர வுருவின வோடலும்
செயிருஞ் சீற்றமு நிற்கத் திறல்திரிந்
தயர்வு தோன்றத் துளங்கி யழுங்கினான். 2570

சாரதி இராவணன் தேரை வேறிடம்செலுத்தி நிறுத்தினான். மாதலி இராவணனைக் கொல்லுமாறு சொல்லினான். இராமர் அது அறமன்று என்றனர். இராவணன் மூர்ச்சை தெளிந்து சாரதியை முனிந்து வெட்டத் துணிந்தனன். சாரதி நிகழ்ந்ததைக் கூறி ஆறுதல் செய்தான்.

மாறி மாறி வரிசிலை வாங்கினான்
நூறி நூறினெ டையிரு நூறவை
வேறு வேறு திசையுற வெங்கணை
நூறி நூறி யிராம னுறுக்கினான். 2571

இராமர் இராவணனைக் கொல்ல நினைந்து
பிரம்மாத்திரம் விடுதல்.

புரஞ்சு டப்பண் டமைத்தது பொற்பணை
மரந்தொ ளைத்தது வாலியை மாய்த்துள
தரஞ்சு டச்சுடர் நெஞ்சின ரக்கர்கோன்
உரஞ்சு டச்சுட ரோன்மக னுந்தினான். 2572

இராவணன் மாய்தல்

முக்கோடி வாழ்நாளு முயன்றுடைய
பெருந்தவமு முதல்வன் முன்னாள்
எக்கோடி யாராலும் வெலப்படா
யெனக்கொடுத்த வரமு மேனைத்
திக்கோடு முலகனைத்துஞ் செருக்கடந்த
புயவலியுந் தின்று மார்பிற்
புக்கோடி யுயிர்பருகிப் புறம்போயிற்
றிராகவன்றன் புனித வாளி. 2573

ஆர்க்கின்ற வானவரு மந்தணரு
முனிவர்களு மாசி கூறித்
தூர்க்கின்ற வலர்மாரி தொடரப்போய்ப்
பாற்கடலிற் றூய்நீ ராடித்
தேர்க்குன்ற விராவணன்றன் செழுங்குருதிப்
பெரும்பரவைத் திரைமேற் சென்று
கார்க்குன்ற மனையான்றன் கடுங்கணைப்புட்
டிலினடுவட் கரந்த தம்மா. 2574

வெம்மடங்கல் வெகுண்டனைய சினமடங்க
மனமடங்க வினையம் வீயத்
தெம்மடங்கப் பொரு தடக்கைச்
செயலடங்க மயலடங்க வாற்றல்தேயத்
தம்மடங்கு முனிவரையுந் தலையடங்க
நிலையடங்கச் சாய்த்த நாளின்
மும்மடங்கு பொலிந்தனவம் முறைதுறந்தா
னுயிர்துறந்த முகங்க ளம்மா. 2575

இராமர் இராவணனுடைய உடலைக் காணுதல்

தேரினைநீ கொடுவிசும்பிற் செல்கென்ன
மாதலியைச் செலுத்திப் பின்னர்ப்
பாரிடமீ தினினணுகித் தம்பியொடும்
படைத்தலைவர் பலருஞ் சுற்றப்
போரிடைமீண் டொருவருக்கும் புறங்கொடாப்
போர்வீரன் பொருது வீழ்ந்த
சீரினையே மனமுவப்ப வுருமுற்றுந்
திருவாளன் தெரியக் கண்டான். 2576

புறத்தழும்புடையோனைக் கொன்றது இழுக்கென்று
இராமர் கூற, வீடணர் விளம்புதல்.

ஆயிரந் தோளி னானும் வாலியு மரிதி னைய
மேயினவென்றி விண்ணோர்சாபத்தின் விளைந்தமெய்ம்மை
தாயினுந் தொழத்தக் காண்மேற் றங்கிய காதற் றன்மை
நோயினின் முனிவு மல்லால் வெல்வரோ நுவலற்பாலார்.

வீடணர் புலம்புதல்

உண்ணாதே யுயிருண்ணா தொருநஞ்சு
சனகியெனும் பெருநஞ் சுன்னைக்
கண்ணாலே நோக்கவே போக்கியதே
யுயிர்நீயுங் களப்பட் டாயே
எண்ணாதே னெண்ணியசொ லின்றினித்தா
னெண்ணுதியோ வெண்ணி லாற்றல்
அண்ணாவோ வண்ணாவோ வசுரர்கள்தம்
பிரளயமே யமரர் கூற்றே. 2578

அன்றெரியின் விழுவேத வதியிவள்கா
ணுலகுக்கோ ரன்னை யென்று
குன்றனைய நெடுந்தோளாய் கூறினே
னதுமனத்துட் கொள்ளா தேயே
உன்றனது குலமடங்க வுருத்தமரிற்
படக்கண்டு முறவா காதே
பொன்றினையே யிராகவன்றன் புயவலியின்
றறிந்துதான் போகின் றாயே. 2579

வீரநா டுற்றாயோ விரிஞ்சனும் யாவருக்கு மேலா முன்பன்
பேரநாடுற்றாயோ பிறைசூடிபிஞ்ஞகன்றன்புரம்பெற்றாயோ
ஆரணவுன் னுயிரையஞ்சாதே கொண்டகன்றாரதெலாநிற்க
மாரனார் வலியாட்டந் தவிர்ந்தாரே குளிர்ந்தானே மதிய
மென்பான். 2580

மண்டோதரி புலம்புதல்

அனந்தநா றாயிர மரக்கர் மங்கைமார்
புனைந்தபூங் குழல்விரித் தரற்றும் பூசலார்
இனந்தொடர்ந் துடன்வர வெய்தி னாளென்ப
நினைந்தது மறந்தது மிலாத நெஞ்சினாள். 2581

வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த
திருமேனி மேலுங் கீழும்
எள்ளிருக்கு மிடனின்றி யுயிரிருக்கு
மிடனாடி யிழைத்த வாறோ
கள்ளிருக்கு மலர்க்கூந்தற் சானகியை
மனச்சிறையிற் கரந்த காதல்
உள்ளிருக்கு மெனக்கருதி யுடல்புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி. 2582

என்றழைத்தன ளேங்கி யெழுந்தவன்
பொன்றழைத்த பொருவரு மார்பினைத்
தன்றழைக்கைக ளாற்றமு வித்தனி
நின்றழைத்துயிர்த் தாளுயிர் நீங்கினாள். 2583

வீடணர் இறந்தோர்க்கு ஈமக்கடனும்
நீர்க்கடனும் புரிந்தனர்.

[இராவண வதத்தின் உள்ளீடு

இராமர் பிறவியாகிய கடலை அடைத்து, தாமத குணமாகிய கும்பகருணனையும், இராஜஸ குணமாகிய இராவணனையும் மாய்த்து, சத்துவ குணமாகிய வீடணனுக்கு அரசாட்சியை அளித்தனர்.

"குணமொரு மூன்றும் திருந்து சாத்துவிகமேயாக" என்பார் சேக்கிழார் பெருமான்.

இராஜஸமும் தாமதமும் நமது உடம்பாகிய இலங்கையை யாட்சிசெய்வது கூடாது. சத்துவ குணமே ஆளுதல் வேண்டும்.

மெய், வாய், நாசி, கண், செவி, வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் என்ற தச இந்திரியங்களை வென்ற தசரதனுடைய புதல்வர், தசேந்திரியங்களையும் வெல்லாத தசக்ரீவனை மாய்த்தார்.

ஆகவே தசேந்திரியங்களை வெல்லாதார் அழிவர்- அவைகளை வென்று இன்புறுவதே இராமாயணத்தின் உட்கிடை எனத் தெளிக.]

மீட்சிப் படலம்

இராமர் இளையவனை நோக்கி வீடணருக்கு
முடிசூட்டுமாறு கட்டளையிட்டனர்.

சோதி யான்மகன் வாயுவின் றோன்றன்மற்
றேதில் வானர வீரரொ டேகிநீ
ஆதி நாயக னுக்கிய நான்முறை
நீதி யானை நெடுமுடி சூட்டுவாய். 2584

முடி புனைதல்

மெய்கொள் வேத விதிமுறை விண்ணுளோர்
தெய்வ நீள்புன லாடல் திருத்திட
ஐய னுணையி னுலிளங் கோளரி
கையி னுன்மகு டங்கவித் தானரோ. 2585

இராமர் வீடணர்க்கு அறமுரைத்தல்

பன்னு நீதிகள் பற்பல கூறிமற்
றுன்னு டைத்தம ரோடுயர் கீர்த்தியோய்
மன்னி வாழ்கென் றுரைத்தடன் மாருதி
தன்னை நோக்கினன் றுயர்சொல் நோக்கினுன். 2586

இராமர் மாருதியை சீதைபால் அனுப்பினுர்

ஏழை சோபன மேந்திழை சோபனம்
வாழி சோபன மங்கல சோபனம்
ஆழி யான வரக்கனை யாரியச்
சூழி யானை துகைத்தது சோபனம். 2587

அனைய ளாகி யநுமனை நோக்கினுள்
இனைய தின்ன தியம்புவ தென்பதோர்
நினைவி லாது நெடிதிருந் தாணெடு
மனையின் மாசு துடைத்த மனத்தினுள். 2588

மௌனமாயிருக்கும் காரணத்தை வினவினுர்.

சீதை விடை பகர்தல்

மேக்கு நீங்கிய வெள்ள வுவகையால்
ஏக்க முற்றுென் றியம்புவ தியாதென
நோக்கி நோக்கி யரிதென நொந்துளேன்
பாக்கி யம்பெரும் பித்தும் பயக்குமோ. 2589

உலக மூன்று முதவற் கொருதனி
விலையி லாமையு முன்னினென் மேலவை
நிலையி லாமை நினைந்தனெ னின்னையென்
தலையி னுற்றெழ வுந்தகுந் தன்மையோய். 2590

வரங்கேளென சீதை கூறுதல்

எனவு ரைத்துத் திரிசடை யாளெம்மோய்
மனையி னிற்சுடர் மாமுக மாட்சியாள்
தனையொ ழித்திவ் வரக்கியர் தங்களை
வினையி னிற்சுட வேண்டுவென் யானென்றான். 2591

சீதை

யானி ழைத்த வினையி னிவ்விடர்
தான டுத்தது தாயினு மன்பினோய்
கூனி யிற்கொடி யாரல ரேயிவர்
போன வப்பொருள் போற்றலை புந்தியோய். 2592

இராமர் கட்டளைப்படி வீடணர் சீதையிடம் சென்று அழைத்தல்

வேண்டிற்று முடிந்த தன்றே வேதியர் வேத னின்னைக்
காண்டற்கு விரும்பு கின்றா னும்பருங் காண வந்தார்
பூண்டக்க கோலம் வல்லை புனைந்தனை வருத்தம் போக்கி
ஈண்டுக்கொண் டணைதி யென்றா னெழுந்தரு ளிறைவி
யென்றான். 2593

யானிவ ணிருந்த தன்மை யிமையவர் குழுவு மெங்கள்
கோனுமம் முனிவர் தங்கள் கூட்டமுங் குலத்துக் கேற்ற
வானுயர் கற்பின் மாத ரீட்டமுங் காண்டன் மாட்சி
மேனினை கோலங் கோடல் விழுமிய தன்று வீர. 2594

வீடணர் இராமர் பணியைப் பகர்ந்து ஆடையணிகலன்களால் கோலஞ் செய்வித்து சீதையை அழைத்து வந்தனர்.

இராமர் சீதையைக் காணுதல்

கற்பினுக் கரசினைப் பெண்மைக் காப்பினைப்
பொற்பினுக் கழகினைப் புகழின் வாழ்க்கையைத்
தற்பிரிந் தருள்புரி தருமம் போலியை
அற்பினத் தலைவனு மமைய நோக்கினான். 2595

இராமர் சீதையைக் கடிந்துரைத்தல்

ஊண்டிற முவந்தனை யொழுக்கம் பாழ்பட
மாண்டிலை முறைதிறம் பரக்கன் மாநகர்
ஆண்டுறைந் தடங்கினை யச்சந் தீர்ந்திவண்
மீண்டதென் னினைவெனை விரும்பு மென்பதோ. 2596

உன்னைமீட் பான்பொருட் டுவரி தூர்த்தொளிர்
மின்னைமீட் டுறுபடை யரக்கர் வேரறப்
பின்னைமீட் டுறுபகை கடந்தி லேன்பிழை
என்னைமீட் பான்பொருட் டிலங்கை யெய்தினேன். 2597

மருந்தினு முரியமன் னுயிரின் வான்றசை
அருந்தினை யேநற வமைய வுண்டியே
இருந்தனை யேயினி யெமக்கு மேற்பன
விருந்துள வோவுரை வெம்மை நீங்கினாய். 2598

கலத்தினிற் பிறந்தமா மணியிற் காந்துறு
நலத்தினிற் பிறந்தது நடந்த நன்மைசால்
குலத்தினிற் பிறந்திலை கோளில் கீடம்போல்
நிலத்தினிற் பிறந்தமை நிரப்பி னையரோ. 2599

யாதியா னியம்புவ துணர்வை யீடறச்
சேதியா நின்றதுன் னொழுக்கஞ் செய்வது
சாதியா லன்றெனிற் றக்க தோர்நெறி
போதியா லென்றனன் புலவர் புந்தியான். 2600

அனைவரும் வருந்தல்

முனைவரு மமரரு மற்று முற்றிய
நினைவரு மகளிரு நிருத ரென்றுளார்
எனைவரும் வானரத் தெவரும் வேறுளார்
அனைவரும் வாய்திறந் தரற்றி னாரரோ. 2601

சீதை வருந்தி உரைத்தல்

மாருதி வந்தெனைக் கண்டு வள்ளல்நீ
சாருதி யீண்டெனச் சமையச் சொல்லினான்
யாரினு மேன்மையா னிசைத்த தில்லையோ
சோருமென் னிலையவன் தூது மல்லனோ. 2602

பங்கயத் தொருவனும் விடையின் பாகனும்
சங்குகைத் தாங்கிய தரும மூர்த்தியும்

அங்கையி னெல்லிபோ லனைத்து நோக்கினும்
மங்கையர் மனநிலை யுணர வல்லரோ. 2603

ஆதலிற் புறத்தினி யாருக் காகவென்
கோதறு தவத்தினைக் கூறிக் காட்டுகேன்
சாதலிற் சிறந்ததொன் றில்லை தக்கதே
வேதநின் பணியது விதியு மென்றனள். 2604

சீதை தீ மூட்டுமாறு இளையவனுக்கு உரைத்தல்

இளையவன் றனையழைத் திடுதி தீயென
வளையொலி முன்கையாள் வாயிற் கூறினள்
உளைவுறு மனத்தவ னுலகம் யாவுக்கும்
களைகணைத் தொழவவன் கண்ணிற் கூறினன். 2605

தீயிடை யருகுறச் சென்று தேவர்க்கும்
தாய்தனி குறுகலுந் தரிக்கி லாமையால்
வாய்திறந் தரற்றின மறைகள் நான்கொடும்
ஓய்வினல் லறமுமற் றுயிர்கள் யாவையும். 2606

பிரம்மாதி தேவர்கள் வருந்தினர். சீதை தீயில் பாய்தல்

கனத்தினுற் கடந்தபூண் முலைய கைவளை
மனத்தினுல் வாக்கினுன் மறுவுற் றேனெனின்
சினத்தினுற் சுடுதியாற் றீச்செல் வாவென்ருள்
வனத்துழாய்க் கணவற்கும் வணக்கம் போக்கினுள். 2607

நீந்தரும் புனலிடை நிவந்த தாமரை
ஏய்ந்ததன் கோயிலே யெய்து வாளெனப்
பாய்ந்தனள் பாய்தலும் பாலின் பஞ்செனத்
தீய்ந்ததவ் வெரியவள் கற்பின் தீயினுல். 2608

அக்கினி உரைத்தல்.

அங்கியா னென்னையிவ் வன்னை கற்பெனும்
பொங்குவெந் தீச்சுடப் பொறுக்கி லாமையால்
இங்கணைந் தேனுறு மியற்கை நோக்கியும்
சங்கியா நிற்றியோ வெவர்க்குஞ் சான்றுளாய். 2609

பெய்யுமே மழைபுவி பிளப்ப தன்றியே
செய்யுமே பொறையற நெறியிற் செல்லுமே
உய்யுமே யுலகிவ ளுணர்வு சீறினல்
வையுமேன் மலர்மிசை யயனு மாயுமே. 2610

இராமர் ஏற்றுக் கொள்ளுதல்

அழிப்பில சான்றுநீ யுலகுக் காதலான்
இழிப்பில சொல்லிநீ யிவளை யாதுமோர்
பழிப்பில ளென்றனை பழியு மின்றினிக்
கழிப்பில ளென்றனன் கருணை யுள்ளத்தான். 2611

அயனும் அரனும் இராமருக்கு ஆறுதல் கூறினர்;
தயரதன் வர இராமர் பணிதல்

ஆதியான் பணியருள் பெற்ற வரசருக் கரசன்
காதல் மைந்தனைக் காணிய வுவந்ததோர் கருத்தால்
பூத லத்திடைப் புக்கனன் புகுதலும் பொருவில்
வேத வேத்தனு மவன்மலர்த் தாண்மிசை வீழ்ந்தான்.

தயரதன்

மைந்த ரைப்பெற்று வானுயர் தோற்றத்து மலர்ந்தார்
சுந்த ரப்பெருந் தோளினு யென்றுணைத் தாளின்
பைந்து கட்களு மொக்கில ராமெனப் படைத்தாய்
உய்ந்த வர்க்கருந் துறக்கமும் புகழும்பெற் றுயர்ந்தேன்.

பண்டு நான்முகுந் தேவரு முனிவரும் பாராய்
கண்டு கண்டெனைக் கைத்தலங் குவிக்கின்ற காட்சி
புண்ட ரீகத்துப் புராதனன் றன்னொடும் பொருந்தி
அண்ட மூலத்தொ ராசனத் திருத்தினை யழக. 2614

சீதை தயரதரைத் தொழுதாள்.
தயரதன்

நங்கை மற்றுநின் கற்பினை யுலகுக்கு நாட்ட
அங்கி புக்கிடென் றுணர்த்திய வதுமனத் தடையேல்
சங்கை யுற்றவர் பெறுவது முண்டது சரதம்
கங்கை நாடுடைக் கணவனை முனிவுறக் கருதேல். 2615

பொன்னைத் தீயிடைப் பெய்தலப்பொன்னுடைத் தூய்மை
தன்னைக் காட்டுதற் கென்பது மனக்கொளல் தகுதி
உன்னைக் காட்டினன் கற்பினுக் கரசியென் றுலகில்
பின்னைக் காட்டுதற் கரியதென் றெண்ணியிப் பெரியோன்.

தயரதர் வரங் கேளெனல்

என்று பின்னரு மிராமனை யானுனக் கீவ
தொன்று கூறுதி உயர்குணத் தோயென வுனையான்

சென்று வானிடைக் கண்டிடர் தீர்வனென் றிருந்தேன்
இன்று காணப்பெற் றேனினிப் பெறுவதென்னென்றான்.

ஆயினு முனக் கமைந்ததொன் றுரையென வழகன்
தீய ளென்றுநீ துறந்தவென் றெய்வமு மகனும்
தாயுந் தம்பியு மாம்வரந் தருகெனத் தாழ்ந்தான்
வாய்தி றந்தெழுந் தார்த்தன வுயிரெலாம் வழுத்தி. 2618

வரத கேளெனத் தயரத னுரைசெய்வான் மறுவில்
பரத னன்னது பெறுகதான் முடியினைப் பறித்திவ்
விரத வேடமற் றுதவிய பாவிமேல் விளிவு
சரத நீங்கல தாமென்றான் றழீஇயபகை தளர. 2619

ஊன்பி ழைக்கிலா வுயிர்நெடி தளிக்குநீ ளரசை
வான்பி ழைக்கிது முதலென தாள்வுற மதித்து
யான்பி ழைத்ததல் லாலென்னை யீன்றவெம் பிராட்டி
தான்பிழைத்ததுண் டோவென்றானவன்சலந்தவிர்ந்தான்.

எவ்வ ரங்களுங் கடந்தவ னப்பொரு ளிசைப்பத்
தெவ்வ ரம்பறு கானிடைச் செலுத்தினுட் கீந்த
அவ்வ ரங்களு மிரண்டவை யாற்றினுற் கீந்த
இவ்வ ரங்களு மிரண்டென்றார் தேவரு மிரங்கி. 2621

வரமி ரண்டளித் தழகனை யிளவலை மலர்மேல்
விரவு பொன்னினை மண்ணிடை நிறுத்திவிண் ணிடையே
உரவு மானமீ தேகின னும்பரு முலகும்
பரவு மெய்யினுக் குயிரளித் துறுபுகழ் படைத்தோன்.

வரங்கேளென இமையவர் இராமரை வேண்டினர். இறந்த வானரர் உயிர் பெறவும், வானரர் வாழும் வனம் வளம் பெறவும் வேண்டுமென இராமர் வரங் கேட்டனர். அமரர் அவ்வரங்களை அளித்தனர். மாண்ட வானரர் மீண்டெழுந்தனர்.

வனவாசம் முடிந்ததென வானவர் உரைத்தனர். [இராமர் பௌர்ணமியன்று இலங்கை சென்றனர். அமாவாசையன்று இராவணனைக் கொன்றனர்.]

வஞ்ச ரில்லையிவ் வண்டத்தி னெனும்படி மடித்த
கஞ்ச நாண்மலர்க் கையினு யன்னைசொற் காரும்
அஞ்சொ டைஞ்சுநான் கென்றெனு மாண்டுபோய் முடிந்த
பஞ்ச மிப்பெயர் படைத்துள திதியின்று பயந்த. 2623

இன்று சென்றுநீ பரதனை யெய்தலை யென்னின்
பொன்று மாலவ னெரியிடை யன்னது போக்க
வென்றி வீரநீ போதியா லென்பது விளம்பா
நின்ற தேவர்கள் நீங்கின ரிராகவ னினைந்தான். 2624

வீடணர்

ஆண்டு பத்தொரு நாலுமின் றேடறு மாயின்
மாண்ட தாமினி யென்குலம் பரதனே மாயின்
ஈண்டு போகவோ ரூர்தியுண் டோவென்ன வின்றே
தூண்டு மானமுண் டென்றடல் வீடணன் றொழுதான்.

வாங்கி னனிரு நிதியொடு தனதனில் வள்ளால்
ஓங்கு மால்வெள்ள மெழுபஃ தேறினு மொல்கா
தீங்கு ளாரெலா மிவருவ திவரிநீ யினிது
பூங்கு லாநகர் புகுதியின் றொன்றெனப் புகலா. 2626

புட்பகம் கொணர்ந்தனர்; வீடணனையும், சுக்ரீவனையும் தத்தம் இருக்கை சென்று அரசு புரியுமாறு பணித்தனர். உடன் வர அவர்கள் விரும்ப, இராமர் அதற்கு இசைந்தனர்; அனைவரும் புட்பக விமானத்தில் ஏறினர். இராமர் கட்டளைப் படி வானரர் மானுடவடிவங் கொண்டனர்.

வழியில் சீதைக்கு இராமர் சேதுவின் பெருமை கூறுதல்

ஆவினைக் குரவ ரோடு மருமறை முனிவர் தம்மைப்
பாவையர் குழுவை யின்சொற் பாலரைப் பயந்து தம்மின்
மேவின வவரைச் செற்றோர் விரிகடற் சேது வந்து
தோய்வரே லவர்கள்கண்டாய்சுரர்தொழுஞ்சுரர்களாவார்.

இராமர் சிவலிங்கத்தை நிறுவி சிவாகம விதிப்படி வழிபாடு செய்தனர். அக்கோயில் இன்றும் குன்றிலிட்ட விளக்காக இராமேச்சுரம் என்று விளங்குகின்றது.

(இராமேச்சுரம் தேவாரம்)

பாசமுங் கழிக்க கில்லா அரக்கரைப் படுத்துத் தக்க
வாசமிக் கலர்கள் கொண்டு மதியினால் மால்செய் கோயில்
நேசமிக் கன்பி னாலே நினைமின்நீர் நின்று நாளுந்
தேசமிக் கான்இ ருந்த **திருஇராமேச்சுரமே.** (அப்பர்)

தேவியை வௌவிய தென்னிலங்கைத் தசமாமுகன்
பூவிய லும்முடி பொன்றுவித்த பழி போயற
ஏவிய லுஞ்சிலை யண்ணல் செய்த**இரா மேச்சுர**
மேவிய சிந்தையி னார்கள்தம் மேல்வினைவீடுமே. (சம்பந்தர்)

வழியில் கிட்கிந்தையிலுள்ள தாரை முதலிய வானர மாத ரையும், சீதையின் விருப்பத்தின்படி விமானத்தில் ஏற்றிக் கொண்டு சென்றனர்.

பரத்துவாசர் எதிர் கொள்ளல்.

சிரத்து வாசவண் டலம்பிடு தெரிவைகே ளிதுநீள்
தரத்து வாசவர் வேள்வியர் தண்டக மதுதான்
வரத்து வாசவன் வணங்குறு சித்திர கூடம்
பரத்து வாசவ னுறைவிட மிதுவெனப் பகர்ந்தான். 2628

மின்னை நோக்கிய வீரனீ தியம்பிடும் வேலை
தன்னை நேரிலா முனிவர னுணர்ந்துதன் னகத்தின்
என்னை யாளுடை நாயக னெய்தின னென்னாத்
துன்னு மாதவர்சூழ்தரவெதிர்கொள்வான்றொடர்ந்தான்.

விமானத்தினின்று இறங்கி இராமர் பரத்துவாசரைப் பணிந்தனர்

அடியின் வீழ்தலு மெடுத்துநல் லாசியோ டணைத்து
முடியை மோயின னின்றுழி முளரியங் கண்ணன்
சடில நீடுக ளொழிதரத் தனதுகண் ணருவி
நெடிய காதலங் கலசம தாட்டின னெடியோன். 2630

விராதனுங் கரனு மானும் விறல்கெழு கவந்தன் றானும்
மராமர மேழும் வாலி மார்பமு மகர நீரும்
இராவண னுரமுங் கும்ப கருணன தேற்றந் தானும்
அராவரும் பகழி யொன்றா லழித்துல களித்தா யைய.

சித்திர கூடந் தீர்ந்து தென்றிசைத் தீமை தீர்த்திட்
டித்திசை யடைந்தெம் மில்லி னிறுத்தமை யிறுதி யாக
வித்தக மறந்தி லேன்யான் விருந்தினை யாகி யெம்மோ
டித்தின மிருத்தி யென்றான் மறைகளி னிறுதி கண்டான்.

கரதல மதனி னீடு கார்முகம் வளைய வாங்கிச்
சரதம்வா னவர்கள் துன்பந் தனித்துல கங்கள் தாங்கும்
மரகத மேனிச் செங்கண் வள்ளலே வழுவா நீதிப்
பரதன தியல்பு மின்றேபணிக்குவென்கேண்மி னென்றான்.

இந்தி யங்களைந் திருங்கனி காய்நுகர்ந் திவுளிப்
பந்தி வந்தபுற் பாயவான் பழம்பதி புகாது
நந்தி யம்பதி யிருந்தனன் பரதனின் னுமம்
அந்தி யும்பக லதனினு மறப்பில னாகி. 2634

பரத்துவாசர் வரங்கேளென, இராமர் வானரர் வாழுமிடம் காய்கனி தேன் முதலியவைகள் மிகுந்திருக்குமாறு வரங் கேட்டனர்.

பரத்துவாசர் விருந்து அமைத்தல்.

அநுமனை அயோத்திக்கு அனுப்புதல்

இன்று நம்பதி வருதுமுன் மாருதி யீண்டச்
சென்று தீதின்மை செப்பியத் தீயவித் திளையோன்
நின்ற நீர்மையு நினைவுநீ தேர்ந்தெம்மி னேர்தல்
நன்றெ னவ்வவன் மோதிரங் கைக்கொடு நடந்தான். 2635

தந்தை வேகமுந் தனதுநா யகன்றனிச் சிலையின்
முந்து சாயகக் கடுமையும் பிற்பட முடுகிச்
சிந்தை பின்வரச் செல்பவன் குகற்குமச் சேயோன்
வந்த வாசகங் கூறிமேல் வான்வழி போனான். 2636

பரதர் தன்மை

நந்தி யின்பதி யின்றலை நாள்தொறும்
சந்தி யின்றி நிரந்தரந் தம்முனார்
பந்தி யங்கழற் பாத மருச்சியா
இந்தி யங்களை வென்றிருந் தானரோ. 2637

நோக்கிற் றென்றிசை யல்லது நோக்குறான்
ஏக்குற் றேக்குற் றிரவி குலத்துளான்
வாக்கிற் பொய்யான் வரும்வரு மென்றுயிர்
போக்கிப் போக்கி யுழக்கும் பொருமலான். 2638

சோதிடர் கூறுதல்.

யாண்டு வந்திங் கிறுக்குமென் றெண்ணினான்
மாண்ட சோதிட வாய்மைப் புலவரை
ஈண்டு கூய்த்தரு கென்னவந் தெய்தினர்
ஆண்ட கைக்கின் றறுதியென் றூரரோ. 2639

பரதர் துயர்

எனக்கி யம்பிய நாளுமெ னின்னலும்
தனைப்ப யந்தவ ணேயமுந் தாங்கியவ்
வனத்து வைகல்செய் யான்வந் தடுத்ததோர்
விளைக்கொ டும்பகை யுண்டென விம்மினான். 2640

மூவ கைத்திரு மூர்த்திய ராயினும்
பூவ கத்தில்வி சும்பிற் புறத்தினில்
ஏவர் நிற்ப ரெதிர்நிற்க வென்னுடைச்
சேவ கற்கென வையமுந் தேறினன். 2641

என்னை யின்னு மரசிய லிச்சையான்
அன்ன னாகி னவனிது கொள்கவென்
றுன்னி னன்கொ லுறுவது நோக்கினன்
இன்ன தேநல னென்றிருந் தானரோ. 2642

சத்துருக்கனை அழைத்து உரைத்தல்

என்னப் பன்னி யிளவலை யென்னுழைத்
துன்னச் சொல்லுதி ரென்றலுந் தூதர்போய்
உன்னைக் கூயின னும்முனை னுமுனம்
முன்னர்ச் சென்றனன் மூவர்க்கும் பின்னுளான். 2643

என்ன தாகுங்கொ லவ்வர மென்றியேல்
சொன்ன நாளிலி ராகவன் றூன்றிலன்
மின்னு தீயிடை யானினி வீடுவென்
மன்ன னாதியென் சொல்லை மறுதென்றான். 2644

சத்துருக்கன்

கானுள நிலமகளைக் கைவிட்டுப்
போவானைக் காத்துப் பின்பு
போனானு மொருதம்பி போனவர்கள்
வருமவதி போயிற் றென்னா
ஆனாத வுயிர்விடவென் றமைவானு
மொருதம்பி யயலே நாணா
தியானுமிவ் வரசாள்வெ னென்னேயிவ்
வரசாட்சி யினிதே யம்மா. 2645

பரதர் தீ மூட்டல்

கோசலை வந்து தடுத்தல்.

அப்பொழுதி னிவ்வுரைசென் றயோத்தியினி
னிசைத்தலுமே யரியை யீன்ற
ஒப்பெழுத வொண்ணாத கற்புடையாள்
வயிறுபுடைத் தலமந் தேங்கி

இப்பொழுதே யுலகிறக்கும் யாக்கையினை
முடித்தொழிந்தான் மகனே யென்ன
வெப்பெழுதி னலன்ன மெலியுடையாள்
கடிதோடி விலக்க வந்தாள். 2646

மன்னி மைத்தது மைந்தனி மைத்ததும்
முன்னி மைத்த விதியின் முயற்சியால்
பின்னி மைத்தது மெண்ணிலப் பெற்றியால்
என்னி மைத்தனை யென்மக னேயென்றாள். 2647

எண்ணில் கோடி யிராமர்க ளென்னினும்
அண்ணல் நின்னரு ளுக்கரு காவரோ
புண்ணி யம்மெனு நின்னுயிர் போயினல்
மண்ணும் வானு முயிர்களும் வாழுமோ. 2648

இன்று வந்தில னேயெனி னனேயே
ஒன்றும் வந்துனை யுன்னி யுரைத்தசொல்
பின்று மென்றுண ரேற்பிழைத் தானெனின்
பொன்றுந் தன்மை புகுந்தது போயென்றாள். 2649

பரதர்

யானு மெய்யினுக் கின்னுயி ரீந்துபோய்
வானு ளெய்திய மன்னவன் மைந்தனல்
கானு ளெய்திய காகுத்தற் கேகடன்
ஏனை யோர்க்கி திழுக்கில் வழக்கன்றே. 2650

தாய்சொற் கேட்டலுந் தந்தைசொற் கேட்டலும்
பாசத் தன்பினைப் பற்றற நீக்கலும்
ஈசற் கேகடன் யானஃ திழைக்கிலென்
மாசற் றேனிது காட்டுவென் மாண்டென்றான் 2651

என்று தீயினை யெய்தி யிரைத்தெழுந்
தொன்று பூச விடுமுல கோருடன்
நின்று பூசனை செய்கின்ற நேசற்குக்
குன்று போனெடு மாருதி கூடினன். 2652

அநுமன் வந்து ஆழி தருதல்

ஐயன் வந்தன னாரியன் வந்தனன்
மெய்யின் மெய்யனெ நின்னுயிர் வீடினல்
உய்யு மேயவ னென்றுரைத் துட்புகாக்
கையி னலெரி யைக்கரி யாக்கினன். 2653

எங்க ணுயகற் கின்னமு தீருவான்
பங்க யத்து பரத்துவன் வேண்டலால்
அங்கு வைகின னல்லது தாழ்க்குமோ
இங்க ணல்லதொன் றின்னமுங் கோட்டியால். 2654

அண்டர் நாத னருளி யளித்துள
துண்டொர் பேரடை யாள முனக்கது
கொண்டு வந்தனென் கோதற்ற சிந்தையாய்
கண்டு கொண்டருள் வாயெனக் காட்டினன். 2655

பரதர் மகிழ்ச்சி

மோதிரம் வாங்கித்தன் முகத்தின் மேலணைத்
தாதரம் பெறுவதற் காக்கை யோவெறு
ஓதினர் நாணுற வோங்கி ஞன்ருெழும்
தூதனை முறைமுறை தொழுது துள்ளுவான். 2656

அழுநகு மநுமனே யாழிக் கைகளால்
தொழுமெழுந் துள்ளும்வெங் களிது ளக்களால்
விழுமழிந் தேங்கும்போய் வீங்கும் வேர்க்குமக்
குழுவொடுங் குனிக்குந்தன் றடக்கை கொட்டுமால். 2657

ஆடுமி ஞடுமி னென்னு மையன்பால்
ஓடுமி ஞேடுமி னென்னு மோங்கிசை
பாடுமின் பாடுமி னென்னும் பாவிகாள்
சூடுமின் சூடுமின் தூதன் ருளெனும். 2658

வஞ்சனே யியற்றிய மாயக் கைகையார்
துஞ்சுவ ரினியெனத் தோளேக் கோட்டுமால்
குஞ்சித வடிகண்மண் டிலத்திற் கூட்டுற
அஞ்சனக் குன்றுநின் ருடும் பாடுமால். 2659

வேதியர் தமைத்தொழும் வேந்த ரைத்தொழும்
தாதியர் தமைத்தொழுந் தன்னேத் தான்ருெழும்
ஏதுமொன் றுணர்குறு திருக்கு நிற்குமால்
காதலென் றதுவுமோர் கள்ளிற் ருேற்றிற்றே. 2660

பரதர் அநுமனே வினவுதல்

மறையவர் வடிவுகொண் டணுக வந்தனே
இறைவரி னெருவனென் றெண்ணு கின்றனென்
துறையெனக் கியாதெனச் சொல்லு சொல்லென்ருன்
அறைகழ லநுமனு மறியக் கூறுவான். 2661

அநுமன்

காற்றினுக் கயல்வந்த கவிக்கு லத்துளான்
நோற்றனள் வயிற்றின்வந் துதித்து நும்முறற்
கேற்றிலா வடித்தொழி லேவ லாளனேன்
மாற்றினெ னுருவொரு குரங்கு மன்னயான். 2662

மாருதி விசுவ ரூபமெடுத்தல்

வெஞ்சிலை யிருவரும் விரிஞ்சன் மைந்தனும்
எஞ்சலி லதிசய மிதுவென் றெண்ணினர்
துஞ்சில தாயினுஞ் சேனை துண்ணென
அஞ்சின தஞ்சனை சிறுவ னாக்கையால். 2663

பரதர் வேண்டுதல்

ஈங்குநின் றியாமுனக் கிசைத்த மாற்றமத்
தூங்கிருங் குண்டலச் செவியின் சூழ்வர
ஓங்கல வாதலி னுலப்பில் யாக்கையை
வாங்குதி விரைந்தென மன்னன் வேண்டினான். 2664

சுருக்கிய வுருவனாத் தொழுது முன்னின்ற
அருக்கன்மா ணவகனுக் கைய னன்பினால்
பொருக்கென நிதியமும் புனைபொற் பூண்களின்
வருக்கமும் வரம்பில நனிவ ழங்கினான். 2665

பரதர் அயோத்தியை அலங்கரிக்கவும், சித்திரகூடம்வரை பந்தரும் தோரணமும் அமைக்கவும் கட்டளை யிட்டனர்.

சூரியன் அத்தமித்தனன். பரதர் வினவ இராமருடைய வனவாச நிகழ்ச்சிகள் அத்தனையும் மாருதி கூறினார்.

பரதர் வருந்துதல்

காலின்மா மதலை சொல்லப் பரதனுங் கண்ணீர் சோர
வேலிமா மதில்கள் சூழு மிலங்கையில் வேட்டங் கொண்ட
நீலமா முகில்பின் போனா னொருவனா னின்று நைவேன்
போலுமா லிவைகள் கேட்பேன் புகழுடைத் தடிமை
மன்னோ. 2666

பரதர் கங்கைக் கிரை அடைதல். சூரியன் உதித்தனன். குகன் வந்து இராமரை வணங்குதல்.

தொழுதனன் மனமுங் கண்ணுந் துளங்கினன் சூழ வோடி
அழுதனன் கமல மன்ன வடித்தலை மதனின் வீழ்ந்தான்

தழுவின னெடுத்து மார்பிற் றம்பியைத் தழுவு மாபோல்
வழுவிலா வலிய ரன்றோ மக்களு மனையு மென்றான். 2667

குகன்

அருளுன துளது நாயேற் கவரெலா மரிய வாய
பொருளலர் நின்னை நீங்காப் புணர்ப்பினாற் றொடர்ந்து
போந்து
தெருள்தரு மிளைய வீரன் செய்வன செய்க லாதேன்
மருள்தரு மனத்தி னேனுக் கினிதன்றோ வாழ்வு மன்னோ.

இராமர் குகனை சுக்ரீவாதியர்க்கு அறிவித்தல்

தொழுதுநின்றவனைநோக்கித்துணைவர்கள்தமையுநோக்கி
முழுதுணர் கேள்வி மேலோன் மொழிகுவான் முழுநீர்க்
கங்கை
தழுவிரு கரைக்கு நாதன் றுயினு முயிர்க்கு நல்லன்
வழுவிலா வெயினர் வேந்தன் குகனெனும் வள்ள லென்
பான். 2669

இராமர் விமானம் ஊர்ந்து வருதல்.

அநுமன் இராமர் வருகையைப் பரதருக்குக் காட்டுதல்.

அண்ணலே காண்டியா லலர்ந்த தாமரைக்
கண்ணனும் வானரக் கடலுங் கற்புடைப்
பெண்ணருங் கலமுநின் பின்பு தோன்றிய
வண்ணவிற் குமரனும் வருகின் றார்களே. 2670

இராமரை பரதர் தரிசித்தல்.

ஊனுடை யாக்கைவிட் டுண்மை வேண்டிய
வானுடைத் தந்தையார் வரவு கண்டெனக்
கானிடைப் போகிய கமலக் கண்ணனைத்
தானுடை யுயிரினைத் தம்பி நோக்கினான். 2671

அநுமன் விண்ணிடை சென்று இராமருக்கு உரைத்தல்

உருப்பவிர் கனலிடை யொளிக்க லுற்றவப்
பொருப்பவிர் தோளனைப் பொருந்தி நாயினேன்
திருப்பொலி மார்பநின் வரவு செப்பினேன்
இருப்பன வாயின வுலகம் யாவையும். 2672

ஈடுறு வான்றுணை யிராமன் சேவடி
சூடிய சென்னியன் தொழுத கையினன்

ஊடுயி ருண்டென வுலர்ந்த யாக்கையன்
பாடுறு பெரும்புகழ்ப் பரதன் ரேன்றினன். 2673

தோன்றிய பரதனைத் தொழுது தொல்லறச்
சான்றென நின்றவ னினைய தம்பியை
வான்றொடர் பேரர சாண்ட மன்னனை
ஈன்றவள் பகைஞனைக் காண்டி யீண்டென்ருன். 2674

இராமர் வசிட்டரை வணங்கினர்.

அன்னையரை வணங்குதல்

கைகயன் றநயை முந்தக் காலுறப் பணிந்து மற்றை
மொய்குழ லிருவர் தாளு முறைமையின் வணங்குஞ் செங்கண்
ஐயனை யவர்கள் தாமு மன்புறத் தழுவித் தத்தம்
செய்யதாமரைக் கணீரான்மஞ்சனத் தொழிலுஞ் செய்தார்.

அன்னமு முன்னர்ச் சொன்ன முறைமையி னடியில் வீழ்ந்தாள்
தன்னிக ரிலாத வென்றித் தம்பியுந் தாயர் தங்கள்
பொன்னடித் தலத்தில் வீழத் தாயரும் பொருந்தப் புல்லி
மன்னவற் கிளவல் நீயே வாழியென் ருசி சொன்ஞர். 2676

பரதர் பணிதல்

சேவடி யிரண்டு மன்பி னடியுறை யாகச் சேர்த்திப்
பூவடி பணிந்து வீழ்ந்த பரதனைப் பொருமி விம்மி
நாவிடை பெயர்ப்ப தொன்று முணர்ந்தில னின்ற நம்பி
ஆவியு முடலு மொன்றத் தழுவின னழுது சோர்வான்.

இலக்குமணன் பரதனைப் பணிதல்

அனையதோர் காலத் தம்பொற் சடைமுடி யடிய தாகக்
கனைகழ லமரர் கோமாற் கட்டவற் படுத்த காளை
துனைபரி கரிதே ரூர்தி யென்றிவை பிறவுந் தோலின்
வினையுறுசெருப்புக்கீந்தான்விரைமலர்த்தாளின் வீழ்ந்தான். 2678

சத்துருக்கன் மூவரையும் தொழுதல்.

பரதர் சுக்ரீவாதியர்க்கு முகமன் கூறுதல்.

சுமந்திரர் வந்து வணங்குதல். எல்லோரும் விமானம் ஏறி அயோத்தி சேர்ந்தனர்.

11141

திருமுடி சூட்டுப் படலம்

இராமர் கோலம் புனைதல்

நம்பிய பரத னோடு நந்தியம் பதியை நண்ணி
வம்பலர் சடையு மாற்றி மயிர்வினை முற்றி மற்றத்
தம்பிய ரோடுந் தானுந் தண்புனல் படிந்த பின்னர்
உம்பரு முவகை கூர வொப்பனை யொப்பச் செய்தார். 2679

இராமர் தேரூர்ந்து அயோத்தி சென்றனர்.

திருமாளிகை சேர்ந்தனர்.

ஆயதோ ரளவில் செல்வத் தண்ணலு மயோத்தி நண்ணி
தாயரை வணங்கித் தங்களிறையொடு முனியைத் தாழ்ந்து
நாயகக் கோயி லெய்தி நானிலக் கிழத்தி யோடும்
சேயொளிக் கமலத் தாளுந் திருநடஞ் செய்யக் கண்டான்.

வீடணதியர் அரசமாளிகையைக் கண்டு அதிசயித்தல். எல்லா தீர்த்தங்களையும் மாருதி கொணர்ந்தனன். நாளை மகுடம் புனைவதென வசிட்டர் உறுதி செய்தனர்.

மயன் மண்டபம் அமைத்தனன்.

முடி சூட்டுதல்

அரியணை யநுமன் தாங்க வங்கத னுடைவா ளேந்தப்
பரதன்வெண் குடைக விக்க இருவருங் கவரி வீச
விரைசெறி குழலி யோங்க வெண்ணெயூர்ச் சடையான் றங்கண்
மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி.

விடை கொடுத்த படலம்

இரண்டு மாதம் முடிசூட்டு விழா நிகழ்ந்தது.

வெகுமதியளித்தல்.

தயரதனுக்கு இந்திரன் ஈந்த கடகமும் ஆபரணமும் சுக்ரீவனுக்குத் தந்தனர். இட்சுவாகுவுக்கு அயன் தந்த வாகுவலயத்தை அங்கதனுக்குத் தந்தனர்.

அநுமனைத் தழுவுதல்

மாருத விமல சேயை மகிழ்ந்தினி தருளி னேக்கி
ஆருத விடுதற் கொத்தார் நீயலா லன்று செய்த
பேருத விக்கியான்செய் செயல்பிறி தில்லை மெய்ப்பூண்
போருதவியதிண்டோளாய் பொருந்துறப்புல்லுகென்ருன்.

பூமலர்த் தவிசை நீத்துப் பொன்மதின் மிதிலை பூத்த
தேமொழித் திருவை யையன் றிருவருண் முகந்துநோக்கப்
பாமறைக் கிழத்தியீந்த பருமுத்த மாலைக் கைக்கொண்
டேமுறக் கொடுத்தா ளன்னு ளிடரறிந் துதவி னற்கே.

ஜாம்பனதியர்கட்கும் முத்தாரங்கள்வழங்கினர். வீடணன், சுக்ரீவன், குகன் முதலியோர் இராமரிடம் பிரியா விடைபெற்றுத் தத்தம் பதி புகுந்தனர்.

"சமத்திறற் புகழ் ஜனகியை நலிவுசெய்
திருட்டு ராக்கதன் உடலது துணி செய்து
சயத் தயோத்தியில் வருபவனரிதிரு மருமகப் பரிவோனே"
—(பழிப்பர்) திருப்புகழ்.

இராமர் அரசாளுதல்

உம்பரோ டிம்பர் கா று முலகமோ ரேழு மேழும்
எம்பெரு மானென் றேத்தி யிறைஞ்சிநின் றேவல்செய்யத்
தம்பிய ரோடுந் தானுந் தருமமுந் தரணி காத்தான்
அம்பரத் தனந்தர் நீங்கி யயோத்திவந் திறுத்த காளை.

நூற்பயன்

இராமனுய் வந்து தோன்றி இராவணன் றன்னை வீட்டி
தராதல முழுதுங் காத்துத் தம்பியுந் தானு மாகப்
பராபர மாகி நின்ற பண்பினைப் பகரு வார்கள்
நராபத ராகிப் பின்னு நமனையும் வெல்லு வாரே. 2685

உயுத்த காண்டம் முற்றிற்று.

கம்பன் கவிமணிகள் முற்றிற்று.

இராமாயணச் சுருக்கம்

“மேலை வாரொரு ரைத்தச ரற்கொரு
பால னாகியு தித்தொர்மு நிக்கொரு
வேள்வி காவல்ந டத்திய கற்குரு அடியாலே
மேவி யேமிதி லைச்சிலை செற்றுமின்
மாது தோள்தழு விப்பதி புக்கிட
வேறு தாயட விக்குள் விடுத்தபி னவனோடே
ஞால மாதொடு புக்கவ னத்தினில்
வாழும் வாலிப டக்கணை தொட்டவ
னாடி ராவண னைச்செகு வித்தவன் மருகோனே.”
—(ஆலகால) திருப்புகழ்.

கலைக்கடலே கருணைநெடுங் கடலே கானங்
கடந்ததடங் கடலேயென் கருத்தே ஞான
மலைக்கணெழுஞ் சுடரேவான் சுடரே யன்பர்
மனத்தொளிருஞ் சுயஞ்சுடரே மணியே வானோர்
தலைக்கணுறு மகுடசிகா மணியே வாய்மைத்
தசரதன்றன் குலமணியே தமியேன் உள்ளம்
நிலைக்கணுறும் ஸ்ரீராம வள்ளலே யென்
நிலையறிந்தும் அருளவின்னு நினைந்திலாயே.

அறம்பழுக்குந் தருவேயென் குருவே யென்றன்
ஆருயிருக் கொருதுணையே யரசே பூவை
நிறம்பழுக்க அழகொழுகும் வடிவக் குன்றே
நெடுங்கடலுக் கணையளித்த நிலையே வெய்ய
மறம்பழுக்கும் இலங்கையிரா வணனைப் பண்டோர்
வாளியினாற் பணிகொண்ட மணியே வாய்மைத்
திறம்பழுக்கும் ஸ்ரீராம வள்ள லேநின்
திருவருளே யன்றிமற்றோர் செயலி லேனே.
— திருஅருட்பா.

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீராமரின் முன்னோர்

திருமால்
பிரமா
மரீசி
காசிபர்
சூரியன்
மநு
இக்ஷ்வாகு
குக்ஷி
விகுக்ஷி
பாணன்
அநரண்யன்
பிருது
திரிசங்கு
அரிச்சந்திரன்
துந்துமாரன்
யுவனாச்வன்
மாந்தாதா
சுசந்தி
துருவசந்தி
பரதன்
அஜிதன்
சகரன்
அஸமஞ்சன்
அம்சுமான்
திலீபன்
பகீரதன்
ககுத்தன்
ரகு
பிரவிருத்தனன்
(கல்மாஷன்)
சங்கணன்
சுதர்சனன்
அக்னிவர்ணன்
சீக்ரகன்
மரு
பிருசு சுருகன்
அம்பரீஷன்
நகுஷன்
யயாதி
நாபாகன்
அஜன்
தசரதன்
ஸ்ரீராமர்

சீதையின் முன்னோர்

நிமி
மிதி
உதாவசு
நந்திவர்த்தனர்
சுகேது
தேவராதர்
பிருகர்த்ரதர்
மகாவீரர்
சுதிருதி
திருஷ்டகேது
ஹரியசுவர்
மரு
பிரதிந்தகர்
கீர்த்திரதர்
தேவமீடர்
விபுதர்
மகீந்திரகர்
கீர்த்திராதர்
மகாரோமர்
சுவர்ணரோமர்
ஹ்ரஸ்வரோமர்
ஜநகர்
சீதை

பாட்டு முதற் குறிப்பு

அக்கணனே 369
அக்காலை 387
அகனுறப் 308
அங்கதன்ற 265
அங்கதன்றே 236
அங்கதனத 319
அங்கிநீரினுங் 81
அங்கிமேல் 68
அங்கியா 413
அங்கியி 149
அங்குளகிளை 74
அஞ்சலன் 53
அஞ்சலையரக்க 257
அஞ்சினர் 78
அஞ்சன 26
அஞ்சனவண் 84
அஞ்சினனல 327
அஞ்சினை 222
அஞ்சிலே 1
அஞ்சொற் 148
அடல்கடந்த 162
அடித்தல 95
அடித்தலோ 321
அடித்தவிரல் 313
அடியாமுன்ன 209
அடியின் 417
அடுத்தவு 127
அடைந்த 226
அண்டர்நாத 421
அண்ண 327
அண்ணலும் 73
அண்ணலு 74
அண்ணலே 423
அண்ணற் 231
அண்ணன் 17
அணங்கார் 178
அணங்கினுக் 134
அணங்குவாள் 49
அணிபறித் 318
அத்தனை 364
அத்தாவிது 168
அத்தியொப் 190
அத்திருத் 197
அத்தொழில் 384
அதிசய 143
அதுகணத் 364
அதுகாலத்த 179
அந்தணர் 256
அந்தணருறை 79
அந்தணனு 259
அந்தணன் 380
அந்தநகருங் 260
அந்தநற் 93
அந்தநெறி 378
அந்தமில்கால 184
அந்தமில்குண 298
அந்தரமன் 346
அந்தரமுண 351
அந்தரமுற்று 123
அந்நகரணி 49
அந்நரரின்று 319
அந்நரனல்ல 363
அந்நெடுங் 193
அந்நெறி 271
அநுமன் 375
அநுமனங் 373
அநுமனிங் 375
அநுமனிற் 399
அநுமனென் 175
அநுமனை 341
அப்புறம் 261
அப்பொழுதி 293
அப்பொழுதிரா 419
அம்பரத் 321
அம்பின்மா 371
அம்பின் 370
அமிழ்துலை 194
அமிழிமைத் 37
அய்யவ 366
அயர்த்திலன் 317
அயாவுயிர்த் 91
அயிர்த்த 169
அரக்கர் 317
அரக்கர்சேனை 397
அரக்கர் பாவமு 51
அரக்கர 245
அரக்கரென்ப 372
அரக்கரோ 171
அரக்கனே 227
அரக்கனோ 380
அரக்கியரள 269
அரங்கி 278
அரசனன் 281
அரசுமவ்வழி 155
அரசுவீற் 235
அரஞ்சுடர் 250
அரண்டருகு 145
அரண்டருதி 133
அரம்பை 212
அரன்கொலா 318
அரனதிக 191
அரிது போக 215
அரிந்தமன் 163
அரிந்தான் 55
அரிபடு 239
அரியணை 425
அரியதன்று 232
அரியவனுரை 91

அரியின்வேங் 395
அருத்தியி 74
அருந்தவம் 198
அருந்து 215
அருவலிய 31
அருளுன 423
அரைசன்னவ 41
அல்லணை 84
அல்லலுற் 137
அல்லன்மாக்க 233
அல்லித் 107
அல்லிறுத் 107
அல்லின் மாரி 18
அல்லினாற் 344
அல்லையாண் 86
அலங்கு 169
அலையுருவக் 32
அவ்வழியரக்க 242
அவ்வழியவனை 86
அவ்வழியனை 132
அவ்வழி 323
அவ்வழியிரா 337
அவ்வழியினை 151
அவ்விடத்தரு 221
அவ்விடத் 165
அவ்விடை 145
அவ்வுரைகேட் 77
அவ்வுரையரு 367
அவனவை 199
அவனன்னது 41
அவனா 190
அவையநீ 339
அழகிதென் 368
அழிந்தது 297
அழிந்தவன் 42
அழிந்துளா 152
அழிப்பில 414
அழுகையோ 380
அழுதழுங் 161
அழுதனர் 264
அழுதுவாய் 98
அழுந்திய 145
அழுநகு 421
அழைத்தார் 116
அள்ளற்பள் 61
அளவறு 305
அற்புதனரக் 226
அற்றகரத் 123
அற்றதா 117
அற்றதுநாள் 198
அற்றவனா 343
அற்றைநாண் 281
அற்றையவ் 261
அறக்க 312
அறங்கெடமு 79
அறங்கெடவ 354
அறங்கடங் 328
அறத்தினா 329
அறத்தைச் 140
அறந்தலைநிறு 257
அறந்தலைநின் 390
அறந்தானே 88
அறநிலை 292
அறப்பாலுள 148
அறப்பெருங் 339
அறமெனக்கிலை 58
அறமெனநின் 339
அறனிரம்பிய 51
அறிந்தா 225
அறிந்திடை 232
அறிவினிற் 270
அறுத்தானை 136
அறுபதினாயிரம 87
அறுபதினாயிரமா 5
அறுபதி 44
அறையு 2
அன்பழி 225
அன்றியும்பிறி 233
அன்றியும்வாலி 267
அன்றியுமொ 187
அன்றுதன் 363
அன்றுமுத 33
அன்றுவா 290
அன்றெரியின் 408
அன்றெனிலவ 83
அன்னகாலை 224
அன்னகாலை 334
அன்னகேட் 280
அன்னசாவ 233
அன்னதன்மை 76
அன்னதன்மை 169
அன்னதாமச் 248
அன்னதாமி 154
அன்னதாய 67
அன்னதுகண்ட 52
அன்னதுகண் 402
அன்னதுகேட் 167
அன்னதே 210
அன்னதோர் 270
அன்னநாளின் 162
அன்னமாமுனி 96
அன்னமே 385
அன்னவர்க் 270
அன்னவற் 257
அன்னவள் 68
அன்னவளை 37
அன்னவன்சி 157
அன்னவன்பணி 65

அன்னவன்றன் 227
அன்னவன்றனி 294
அன்னவன்ருன் 7
அன்ஞனே 289
அன்ஞெடு 360
அன்னைநீயத் 304
அன்னைநீயு 379
அன்னையரனை 65
அன்னையி 352
அனகமாநெறி 131
அனந்தநூ 408
அனந்தனே 283
அனலனு 291
அனைத்துல 132
அனையகாலை 262
அனையதாதலி 46
அனையது 384
அனையதோர்கா 424
அனையதோர்த 107
அனையதோர்தே 38
அனையவன் 256
அனையவேலை 67
அனையளாகி 410
ஆக்கரிய 112
ஆக்கினேன் 118
ஆக்கையி 391
ஆகாசெய்தா 209
ஆகினையவர 59
ஆகுமன்னதே 141
ஆகுவதாகுங் 341
ஆகொடியா 54
ஆசலம் 2
ஆசிசொல் 327
ஆசில்பரதார 257
ஆசைநீளத் 128
ஆசையும் விசு 10
ஆடகத்தரு 239
ஆடவர் நகை 50
ஆடரம்பை 99
ஆடினரரம் 11
ஆடிஞர் வான 350
ஆடுகொடிப் 85
ஆடுமிஞடுமி 421
ஆண்டகைகோ 78
ஆண்டகைதே 265
ஆண்டகைய 102
ஆண்டகையா 205
ஆண்டகையி 218
ஆண்டங்கிளை 126
ஆண்டதுகே 400
ஆண்டதுநோ 342
ஆண்டநாய 251
ஆண்டவ 154
ஆண்டாயிடை 134
ஆண்டாணி 152
ஆண்டுநின்று 233
ஆண்டுபத் 416
ஆண்டொழி 253
ஆண்டையா 131
ஆண்டையி 271
ஆணிப்பொ 126
ஆணைநின்றன் 42
ஆத்துறு 210
ஆதரித்தமு 27
ஆதலாலிராம 44
ஆதலாலிவன் 295
ஆதலாற்றன 258
ஆதலான் 84
ஆதலான் 144
ஆதலானஞ்சி 349
ஆதலானது 234
ஆதலானபய 266
ஆதலானமர்த் 255
ஆதலானரக் 254
ஆதலானிறத் 226
ஆதலானுமவ 172
ஆதலிற்புறத் 413
ஆதிநான் 97
ஆதிப்பிரமனு 153
ஆதியம்பர 291
ஆதியான் 414
ஆமெனவம 358
ஆமெனிலேழி 95
ஆய்தந்த 64
ஆய்வளை 117
ஆய்வினை 305
ஆயதற்குரியன 9
ஆயதறிந் 20
ஆயதுகாலத் 352
ஆயகாலைய 321
ஆயகாலையிஞ 72
ஆயசொற் 227
ஆயதிவ்விட 23
ஆயதுசெய் 153
ஆயதுதெரிந் 311
ஆயதுதேரி 218
ஆயதோரவதி 160
ஆயதோரள 425
ஆயபின் 144
ஆயபேரன்பெ 50
ஆயபொற் 213
ஆயமாஞகர் 159
ஆயவன்வ 290
ஆயவன்றன் 228
ஆயவன்றன் 288
ஆயவன்றன 279
ஆயவனுரை 332
ஆயவஞெரு 5

ஆயவீரரு 363
ஆயனநிகழும் 56
ஆயிடைக் 10
ஆயிடைத் 217
ஆயிடைப்பரு 10
ஆயிடைய 269
ஆயிடையரக்க 221
ஆயிடையறி 100
ஆயிடையன்ன 127
ஆயிரங்கோடி 287
ஆயிரங்கோள 337
ஆயிரந்தடக் 223
ஆயிரந்தோளி 408
ஆயிரந்திரு 218
ஆயிரம்பரி 322
ஆயிரம்பேய் 346
ஆயிரமடற்கை 124
ஆயிரமுகமுள 101
ஆயிரமுற்பாத 311
ஆயிரமைந் 242
ஆயிரயோசனை 382
ஆயிரவெள்ள 310
ஆயிரவெள்ள முண் 397
ஆயினகாலத் 364
ஆயினுமிவரு 380
ஆயினுமுனக் 415
ஆர்க்கின்றவா 407
ஆர்கலிகடைந் 382
ஆர்கலியிலங் 299
ஆர்கொலோ 184
ஆர்கொன்றவ 359
ஆர்த்தது 160
ஆர்த்தன 39
ஆர்த்தனர் 48
ஆர்த்தார் 325
ஆர்த்தாரண் 260
ஆர்த்தெழுந் 118
ஆர்ப்புற 253
ஆரடா சிரித் 287
ஆரந்தாழ்திடு 234
ஆரிடைப்புகு 34
ஆரிடையநும 372
ஆரியனருளிற் 180
ஆரியனவனை 368
ஆரியனனைய 337
ஆரிருளன்ன 366
ஆரைநீ யென் 256
ஆலங்கண் 341
ஆலம்பார்த் 213
ஆவதென்னை 403
ஆவிசென்றில 328
ஆவியந்துகில் 215
ஆவுக்காயினு 102
ஆவுமழுத 62
ஆழநீர்க்கங் 216
ஆழநெடுந்திரை 85
ஆழிகாட்டி 254
ஆழிசூழலக 57
ஆழித்தேர்த் 244
ஆழித்தேரவ 262
ஆழிநீயனலுநீ 304
ஆழிநெடுங்கை 231
ஆழியன்ன 394
ஆழியானவனை 297
ஆழியையுருட்டி 83
ஆழிவறக்க 146
ஆளான்பரத் 62
ஆளிரண்டுநூ 117
ஆளுநாயக 152
ஆளையாவுனக் 329
ஆற்ருதுபின் 168
ஆறியசிந்தை 147
ஆறிரண்டு 344
ஆறியவறிஞன் 19
ஆறினாமஞ்ச 304
ஆறினோடாயி 115
ஆறுதன்னுட 79
ஆறுநூறு 334
ஆறுபத்தெழு 190
ஆன்றவற்குரி 180
ஆன்றவன்ன 373
ஆன காலையி 372
ஆனவனிங்கு 20
ஆனவனுரைக் 125
ஆனவனுரைசெ 76
ஆனைமேன்முர 244
ஆனதோவெஞ் 335
ஆனையாயி 397
இக்கொடும் 395
இங்கொருதிங் 255
இங்கிவன்ப 312
இங்கிவன்றன் 333
இங்குவந் 394
இங்குள 270
இச்சைநல்லன 277
இசையுஞ்செய் 277
இட்டவனை 313
இட்டார்நடு 284
இட்டுண்டா 352
இடம்படுதோள 39
இடிக்கண்வாள 80
இடிப்பொத்த 136
இடுக்கவ 274
இடுக்கினி 303
இடுமின்பன் 320
இடைக்கையா 343
இடைந்தவர்க் 295

இடைந்துபோ 129
இணங்கினரறி 294
இத்தலைச் 384
இத்திறநிகழு 205
இத்துணைச் 230
இதுவியற்கை 394
இந்திரசித் 247
இந்திரற்கொ 404
இந்திரன்குலி 330
இந்தியங்களைந் 417
இந்திரன்செம் 319
இந்திரன்பகை 336
இந்திரன்முதல் 71
இந்திரன்றே 404
இந்திரன்றனை 278
இந்திரற்கிந்தி 132
இந்திரனருளி 101
இந்திரன்சசி 121
இந்துவன்ன 272
இப்புவனமுற் 104
இப்பொழுதெம் 57
இப்பொழி 238
இமையவருல 353
இம்பராநின்றே 77
இம்பரானெனி 328
இம்பரினியைந் 315
இம்பருற்றி 99
இம்மைபொய் 93
இம்மலைகாணு 193
இம்மலையிருந் 156
இமைத்தன் 267
இமைப்பதன் 371
இயைந்தன 292
இரண்டுதேரிர 245
இரணியனெனன் 290
இரதம்வந்துற் 69
இரந்தனன் 174
இரவிதன் 2
இரவுநண்பக 373
இராமனுய்வந் 426
இரியல்போ 397
இருக்குமதில் 232
இருகண்களு 61
இருபதுகரந்த 292
இரும்பசிக்கு 334
இருமையு 167
இருமையுமிழந் 90
இருத்தியீண் 73
இருந்தகுலக் 30
இருந்தபோ 334
இருந்தமாக்க 114
இரதமாண்டிழி 38
இருந்தமாரீச 122
இருந்தவன் 131
இருந்தவனி 330
இருந்தனள் 387
இருந்தனனிரு 195
இருந்தனனெ 154
இருந்துபசி 230
இருவர்போ 172
இருவர்மானு 114
இருவரத்தினி 51
இருவரென்றிக 223
இருவிரென் 372
இருளுஞாலமி 234
இருளுழு 339
இல்லறந்துற 170
இல்லாதவுலக 156
இல்லியல் 151
இல்லையினி 402
இல்லையென் 69
இல்லையேநுசுப் 35
இலக்கணங்க 212
இலக்குவவுலக 90
இலக்குவற் 398
இலக்குவன்ற 400
இலங்கையர 17
இலங்கையை முழுது 299
இலங்கையையிடந் 203
இலங்கையி 383
இலங்கை யொடு 232
இவ்வண்ண 26
இவ்வழியாமி 164
இவ்விடை 219
இழந்தமணி 229
இழிந்ததாயர் 88
இழிந்துபோ 9
இழைத்ததீவி 347
இளவலுமிறை 305
இளவலை 150
இளையவள் 259
இளையவன்ற 413
இளையவனேக 130
இளையாநீள் 200
இளையானிது 63
இளையானெ 368
இற்றதுகால 307
இற்றவாளரக் 261
இற்றனரரக்க 245
இற்றைப்போ 213
இற்றெலாமியம் 99
இற்றேடிய 41
இறந்ததோ 405
இறந்தன 368
இறந்தவரிறந் 384

இறந்திலன்செ 44
இறந்து நீங்கி 241
இறப்பெனு 44
இறுத்தநின் 326
இறுதியைத் 104
இறைக்கடை 17
இறைதவிர்ந் 12
இறைதிறம் 171
இற்றைநாள் 336
இன்றளிர்க் 13
இன்றியார் 400
இன்றிறந்தன 221
இன்றுசென் 416
இன்றுநம்மதி 418
இன்றுமுள 196
இன்று பில 195
இன்றுவந் 420
இன்று வீக 383
இன்றே யிற 148
இன்றொரு 369
இன்ன காலை 375
இன்னண 83
இன்ன தன் 212
இன்னதோர் தன்மைய 282
இன்னதோர் தன்மையெய் 313
இன்னநாடுது 182
இன்னவள் 121
இன்னவாறி 311
இன்னலம்பர 216
இன்னன 239
இன்னிலை 54
இன்னுமீண் 234
இன்னுமொ 175
இன்னுயிர்க்கு 31
இன்னே பல 60
இன்னே யின் 54
இனிய சொல் 48
இனியவை 360
இனைய தாதலி 174
இனையதோர் 221
இனையவா 116
இனையவாறு 192
ஈங்குநின் 422
ஈங்குமானுட 278
ஈசன்மேனி 190
ஈசனுண்டி 132
ஈசனுங்கமலத் 154
ஈசனையிமை 401
ஈட்டியவலியு 256
ஈட்டுவார்தவ 210
ஈடுபட்டவ 301
ஈடுறுவான் 423
ஈண்டியான் 206
ஈண்டுநாளு 221
ஈண்டுநானி 235
ஈண்டு நீயிருந் 226
ஈண்டொரு 236
ஈதாகுமுன் 290
ஈதுமுன்னர் 30
ஈதுமுன்னிகழ் 6
ஈதெலா 311
ஈர நீங்கிய 162
ஈரமாவது 172
ஈற்றுக் கை 348
ஈறி னல்லறம் 18
ஈன்றவனோ 152
ஈனமுறுபற்ற 238
உகம்பல் கால 300
உங்கள் 347
உஞ்சனே 298
உஞ்சுபிழை 124
உடைப்பெருந் 345
உண்டநெருப் 262
உண்ணுதேயு 408
உண்ணீர் 61
உணர்த்தி 186
உணர்த்துவ 350
உணர்வினெஞ் 309
உதிக்கும்முலை 63
உதிரமாரி 402
உந்தாமுனுலை 205
உந்தின பின் 383
உந்தை தீமையு 93
உந்தையுண் 107
உந்தையை 289
உந்தை 255
உந்தையோ 82
உம்பர்க்கு 286
உம்பரோ 426
உமைக்கு 48
உமையனே 358
உய்த்தவெஞ் 252
உய்த்துலக 404
உய்யாநின்றே 78
உய்யா ளுயர் 378
உய்விடத் 106
உய்வுறுத்து 194
உயர்த்திலன் 142
உயிர்த்தி 176
உயிர்ப்பினெ 146
உரங்கிளர் 265
உரங்கொடே 216
உரத்தினான் 168
உரநெரிந்து 112
உருக்கிய 104
உருத்தனன் 166

உருப்பசி 220
உருப்படிவ 111
உருப்பவிர்கன 423
உருமிடித் 323
உருமுறை 369
உருமையென் 162
உருளுடை 102
உரைசெய்தெங் 69
உரைசெய்மன் 81
உரைசெயத் 37
உரைசெயிற்றே 29
உரைத்தலும் 105
உரைத்த வாச 89
உலக்குநர் 12
உலக்குனரு 362
உலகம் 1
உலகமூன்று 411
உலகமேழினே 163
உலகுதந்தா 285
உலகெலாமுனி 41
உலகைச்சே 393
உலந்ததுதா 245
உலர்ந்ததுநாவு 53
உழக்குமறை 103
உழுகின்றகொ 32
உழைக்கும் 366
உழைத்தவல் 167
உழைத்தவா 128
உழையரினு 164
உள்ளத்தி 294
உள்ளிற்சாகில் 279
உள்ளுறவுண 282
உளப்பரும் 17
உளேபயப்புரவி 159
உளேவிரிபுரவித் 42
உளேவுறுது 131
உற்றகலா 262
உற்றதுகொ 43
உற்றதுணரா 142
உற்றதுமுழு 400
உற்றபோதவ 320
உற்றுநின்றவ 211
உறங்குகின்ற கும்ப 333
உறங்குகின்ற போது 254
உறத்தகும்மரசி 45
உறவுண்டசிங் 186
உறுக்கித்தனி 325
உறுபொருள் 294
உறுவதென் 244
உறுவலியானே 32
உன்குலமுன் 268
உன்பெருந் 268
உன்வயினு 124
உன்னிறம் 217
உன்னினே 163
உன்னுயிர்க்கு 281
உன்னேமீட் 412
உன்னேயுங் 223
உன்னேநீயுள் 200
ஊக்கித்தாங்கி 111
ஊகங்களினுய 168
ஊண்டிறமு 412
ஊணிலா யாக் 351
ஊருணிநிறை 46
ஊருமாளுமரசு 182
ஊழியினுருத் 323
ஊற்று மெய்ந் 72
ஊறு நின்ற 376
ஊறுகின்றன 273
ஊறுபடை 275
ஊன்பிழைக்கி 415
ஊனவில்லி றுத்த 41
ஊனவில் லிறுத்தோ 278
ஊனுடையாக் 423
ஊனேடுயிர் 285
எக்குறியொ 195
எங்கணுயகர் 421
எங்கணுநா 145
எங்கள் செய்த 37
எஞ்சுமுல 288
எட்டுத்தோ 208
எட்டொடெட் 96
எடுக்கலுற்ற 327
எடுத்தபோரி 367
எடுத்தமாமுடி 89
எடுத்துப்பா 169
எடுப்பதொரு 21
எண்டகுமிமை 108
எண்டருங்க 55
எண்ணரு 28
எண்ணரும் 236
எண்ணுயிர 357
எண்ணியபொ 42
எண்ணியவிரு 247
எண்ணில் 420
எண்ணிலா 14
எண்ணுதற் 22
எண்ணெய் 218
எத்தனேகால 210
எத்திறத் 393
எத்துணேவ 291
எந்தாய் நீய 179
எந்தாய்பண் 284
எந்தை கேளை 280

எந்தைநின் 10
எந்தை நீயாயு 276
எந்தைமற்றவ 162
எந்தையதருளி 253
எந்தையாண் 92
எந்தையாய் 235
எந்தையுமிந்த 385
எந்தையுமுனி 198
எந்தையும்யாயு 77
எந்தையெவ் 78
எந்தையேயவ 57
எந்தையேயிரா 291
எந்தையே யெந்தையேவிவ் 176
எந்தையேயெந்தையே யின் 352
எந்தையையெ 253
எம்பிக்கும் 123
எம்மையேகாத் 157
எய்தயோச 306
எய்தவம்பிடை 42
எய்தவாளி 398
எய்தனமெறிந் 22
எய்தியக் கேக 49
எய்திய நிருதர் 342
எய்திமேற்செ 183
எய்திய வேலை 92
எய்தினனநும 268
எய்தினனிருந் 200
எய்தினர்சவரி 155
எய்யவில்வளை 38
எய்யுமின்ஈரு 252
எய்யென 5
எயிறுடையரக் 108
எரிகின்றமூப் 380
எருமையேற் 334
எருவைக்கு 214
எல்கொடு 263
எல்லாமுட்கு 208
எல்லொடுங்கிய 91
எல்லீரும்மவ் 201
எல்லைநம்மி 199
எல்லை நோக் 309
எல்லையில்நாண 26
எல்லையில்விசு 137
எல்லையிலிலங் 308
எல்லையிலு 254
எலியெலாமிப் 84
எவ்வரங்களுநங் 415
எவ்வழியிருந் 157
எழுகசேனை 75
எழுகிலர் 194
எழுகின்ற 197
எழுசுடர்ப் 303
எழுந்தடி 368
எழுந்தனனேங் 76
எழுந்தனன் 9
எழுந்துநின்ற 399
எழுந்துநின்றய 264
எழுந்துயர்தே 403
எழுந்துவான் 170
எழுநூறியோச 299
எழுபதுவெள்ளங் 227
எழுபதுவெள்ளத்தோடு 381
எழுமழுத் 316
எழுவுறு காத 107
எள்ளிலைம்பெ 301
எற்புவான் 212
எற்றுங்கை 170
எற்றுமின் 360
எற்றைநாளி 278
எறிந்தகாலை 398
எறிந்தவெய் 283
எறிந்தனரெய் 245
எறுழ்வலிப் 277
என்கணுனைக் 285
என்பதுசொ 362
என்பதுன்னி 398
என்புகழ்கின்ற 86
என்புறக்கிழிந் 314
என் வந்ததுநீ 377
என்வயிற்றரு 47
என்றமுனி 103
என்றலால்யா 94
என்றலுங் 200
என்றலும் 258
என்றலுமரச 9
என்றலுமவு 285
என்றலுமிரா 16
என்றலுமிலங் 257
என்றலுமிள 291
என்றலுமெ 125
என்றலுமேயடி 87
என்றலுமேயடிவணங்கி 333
என்றவர்க்கி 175
என்றவன்றன் 341
என்றவனி 227
என்றவனுரைத்தலு மிரவி 187
என்றவனுரைத்தலு மிருந்த 198
என்றவனுரைத்லோடு 338
என்றவனுவந்து 248

என்றழைத்த 409
என்றழைத்தி 392
என்றனளியம் 218
என்றனனிலங் 208
என்றனனினை 116
என்றனனென் 14
என்றாயுன் 152
என்றாரம் 142
என்றானன்ன 201
என்றிவளு 133
என்றிவையி 320
என்றிவைவி 150
என்றிறை 395
என்றினைய 119
என்றுகொண் 335
என்று கூறி 81
என்றுசிந்தித் 75
என்றுசொல் 333
என்றுதாயை 309
என்றுதானடி 351
என்று தானு 161
என்றுதீயினை 420
என்றுநளனை 307
என்றுபின்னரு 58
என்றுபின்ன 414
என்றுரைசெ 120
என்றுரைத்தி 266
என்றுரைத்
தெழுந் 351
என்றுவரமரு 289
என்றூக்கி 213
என்றென்றே 377
என்றோள்வலி 325
என்னக்கேட்ட 88
என்னதாக்கிய 302
என்னதாகுங் 414
என்னப்பன் 419
என்னப்பா 395
என்னமா மா 125
என்னலோடும் 115
என்னவற் 317
என்னவித்த 176
என்னனைய 13
என்னாமுனி 356
என்னாமுன்ன
மேகென 209
என்னாமுன்ன
மிருங் 284
என்னாமுன்னே 152
என்னிதுகொ 32
என்னின்று 359
என்னும்வேலை 80
என்னுமாத்தி
ரத்தீண் 259
என்னுமாத்
திரத்தேந்தி 118
என்னுயிர்க் 176
என்னுயிர்நின் 286
என்னோடே 361
என்னோரின் 236
என்னேரின 396
என்னைத்தரு 148
என்னைநாயக 215
என்னையங் 149
என்னையின்னு 419
என்னையன் 354
என்னையுங்
கொல்லா 354
என்னையும்
வெலற்கரி 255
என்னையுய் 280
என்னையே 119
என்னைவென் 336
எனக்கவன்றங் 339
எனக்கியம்பிய 418
எனக்குநல்லையு 51
எனக்குநான் 280
எனநினைத் 227
எனவுரைத் 411
எனைத்துள 90
ஏக்கமோட 18
ஏகம்முதற் 4
ஏகவாளியை 217
ஏகாதுநிற்றி 140
ஏகியேந்திழை 190
ஏகிவாலியு 161
ஏகுதற்குரி 338
ஏகுநல்வழி 30
ஏகுநீயவ்வழி 199
ஏகும்மளவை 40
ஏங்கின விம்ம 77
ஏங்குவாந்த 138
ஏகியுற்றெழும் 346
ஏத்தரும்பெரு 94
ஏத்தினார்தம் 67
ஏத்தும் வென் 234
ஏதியொன்றா 243
ஏதியோடெதி 347
ஏதிவெந் 345
ஏந்திய சிகர 324
ஏமஞ்சாரவெ 320
ஏய்ந்தெழு 246
ஏயதுபிறிது 276
ஏயநன்மொழி 232
ஏயப்பன்னின 254
ஏயவரங்களி 53
ஏய்வினையிறு 208
ஏயினவிதுவ 186

ஏயவெள்ள 321
ஏவம்பாரா 55
ஏவரே யுலகங் 285
ஏவலு மிறைஞ் 42
ஏவிய குரிசில் 67
ஏவின வள்ளு 48
ஏவினன்பிடி 320
ஏவுகூர் வாளி 174
ஏழுநூரேச 214
ஏழுபத்தாகிய 165
ஏழுமாமரமுரு 164
ஏழுயருலகங் 255
ஏழுவேலையுமா 403
ஏழுவேலையுமு 164
ஏழைசோபன 410
ஏழையு மிளவ 100
ஏற்ற பேருல 167
ஏற்றமினிச் 369
ஏற்றமொன்றி 331
ஏற்றவளைவரி 112
ஏறிய நெடுங் 276
ஏறியேறி 363
ஏறினன்விசும் 250
ஏறினன்றெழு 401
ஏறினனிங் 343
ஏன்றனனெங் 66
ஏன்றுன்பாவிக் 78
ஐந்து மமைதி 102
ஐயகேள்வை 210
ஐய சாலவு மல 46
ஐய நானஞ்சி 186
ஐயநீயயோத் 339
ஐய நீயாரை 368
ஐயநுண் மரு 126
ஐயன் வந்தன 420
ஐயனிதுகே 402
ஐயிருகோடி 397
ஐயிருதலை 5
ஐயிருபதோச 196
ஐயைந்த 150
ஒக்க நின்றதெ 163
ஒட்டிக்கொல் 284
ஒடிக்குமேல் 190
ஒடுங்கலிலுலக 157
ஒப்பிறையும் 98
ஒருகணத்திர 270
ஒரு கையா 248
ஒருகுரங் 394
ஒருபகல் பழகி 130
ஒருபகலு 10
ஒருபதுகையி 219
ஒருமகள்காதலி 90
ஒருமகள்தனி 139
ஒருவர் வாய்க் 265
ஒருவரைக் 395
ஒருவனேவுல 109
ஒழிந்த 338
ஒளிவருநாகத் 253
ஒற்று மூக்கி 111
ஒன்றலபற் 337
ஒன்றுக நினைய 314
ஒன்று மூன்று 200
ஒன்றியவுணர் 313
ஒன்றுகேளு 224
ஒண்றுண்டி 325
ஒன்றுநூற்றி 328
ஒன்றுநீய 396
ஒன்றுபத்து 116
ஒன்றுபோ 362
ஒன்றுவேண் 303
ஓங்கரும்பெரு 170
ஓங்கலம்பெரு 253
ஓங்கிய தம்பி 383
ஓசனையொரு 202
ஓசனையொன் 203
ஓசைபெற் 1
ஓடின புரவி 342
ஓடினருயிர் 249
ஓதப்புக்கவ 280
ஓதுங்காலப் 152
ஓதுறுகருங் 323
ஓநமோ நாரா 280
ஓமெனுமோரெ 282
ஓயாவாளி 179
ஓராயிரமயி 357
ஓவாநெடு 356
ஓவியமமைந்த 275
ஓவியவுருவ 175
கக்கினனுயி 169
கங்கை சடை 124
கங்கையிரு 85
கங்கையும் பிறையும் 318
கங்கையென் 71
கங்கையேமுதல 56
கச்சையங்கட 44
கசட்டுறு 9
கட்டதிந்திரன் 322
கட்டியவாள 240
கட்டுறையிற்றம 21
கட்டேறு நறுங்கமழ் 250
கடக்கரும்வ 17
கடக்கருமரக்கி 219
கடங்கலும் 17
கடர்கடந்து 376
கடவுட்படை 260
கடிகமழ் தாரி 47

கடுத்தகராங் 98
கண்டகன் 25
கண்டதா 404
கண்டதிறத் 21
கண்டவிருதக் 238
கண்டவான 182
கண்டனமொ 242
கண்டனர் 194
கண்டனன்
வாலிசேய் 267
கண்டனனறு 226
கண்டனனரக் 266
கண்டனனுய 346
கண்டனனி 103
கண்டனனெ 156
கண்டனென் 268
கண்டார்
பொய்கைக் 196
கண்டார்
விண்ணோர் 377
கண்டாள்
கண்ணுற் 378
கண்டாள்
மகனும் 64
கண்டிலன்கொ 215
கண்டிலன்ற 392
கண்டிலனுலக 157
கண்டிலீர் 394
கண்டு கண் 211
கண்டுதன் 380
கண்டுநின்று 118
கண்டுநோக் 114
கண்டுவரு
மென்றிருக் 214
கண்டேனெஞ் 60
கண்ணிமைப்ப 373
கண்ணியகணி 187
கண்ணியமந்தி 274
கண்ணினுமு 269
கண்ணும் நீரா 60
கண்ணோடாதே 60
கணிதநாலுண 56
கணையுலாஞ் 153
கதமெனும் 155
கதிரவன்சிறு 153
கரக்கவந்தகாம 99
கரங்கள் குவித் 33
கரங்கள் கூப் 262
கரதல மதனி 417
கரதலமுற் 12
கரம்பயின் முர 236
கரன் மகன்பட் 370
கரன்முதல் 273
கரனையுமறந் 122
கராமலை 12
கரிகொடு கரிக 243
கரிபரி வேங் 219
கரியநாழிகை 211
கருங்கடல்கட 208
கருங்கடல்
தொட்ட 165
கருத்திலாவி 340
கருத்திலான் 276
கருதலரும் 30
கருதி மற்றொ 312
கருதி வாலி 241
கருமணிகண்ட 315
கருமமுங் 403
கருமலை செம்ம 104
கல்லகல்வெள் 149
கல்லணைமனத் 187
கல்லாது 4
கல்லிடைப் 2
கல்லினும் 314
கல்லுண்டுமர 318
கல்விக்கண் 308
கல்லெனவலி 305
கலத்தினிற் 412
கலக்கியவரக் 324
கம்பமதத்துக் 391
கயன்மகிழ் 249
கயரததுரகமாக் 34
கயந்தருநறும் 21
கவிகுலத்தரசு 174
களியாவுள்ளத் 209
கள்ளவிழ்கோ 53
கள்ளவமர் 117
கள்ளமாய
வாழ்வெலாம் 99
கள்ளநீர்வாழ் 341
கழறு தேவ 161
கற்காணுங் 85
கற்பழியாமை 137
கற்பினுக்கரசி 411
கற்றுரந்தகள 321
கற்றுறுமாட்சி 276
கற்றைவெண் 297
கற்றையஞ் 108
கறுத்த 252
கள்ளமாயுல 304
கன்னிநெடுமா 194
கன்னியையழி 80
கன்றுயிரோய்ங் 79
கன்னிநீக்கருங் 72
கன்னியர்க்கமை 44
கனத்தி 413
காட்டிலேகழு 314
காட்டுவாரின் 258

காண்டற்	225	காற்றுவங்	382	குலைவுற	134
காண்டனனில	205	கான்றலைநண்	84	குழியிலிந்தன	283
காண்பார்க்கு	153	கானமதி	112	குழுமிக்கொலை	359
காதலுன்பெரு	51	கானுளநில	419	குழைக்கின்ற	57
காந்தருப்பம்	397	கானிடையத்	250	குற்றம் வீந்த	129
காந்திக	346	கானிமிர்வெஞ்	246	குறிதுவானெ	251
காம்பறியுந்	113	கானினன்றி	326	குறியவன்கையி	21
காமம்யாவை	281	கிங்கரர்சம்பு	250	குறுகிநோக்கி	210
காமரமுரலும்	121	கிங்கரர்நால்	332	குன்றிடையிவ	127
காமனென்பவ	104	கிட்டிப்பொரு	356	குன்றின்வீ	345
காய்த்த வக்க	301	கிட்டியதோ	335	குன்றுகொண்	342
காய்ந்தனசலா	222	கிட்டினர்பொர	161	குன்றுநீயெடு	223
காய்ப்புண்ட	356	கிடந்த போர்	329	கூசியாவிகுலை	221
காயம்வேருகி	127	கிழிபடக்	309	கூட்டமொத்தி	159
காயுங்கானிற்	72	குகனெனப்	84	கூட்டியவிற்	307
காயெரிகனலு	156	குகனொடு	298	கூட்டினர்	302
காயெரிமுளி	248	குடக்கதோ	331	கூட்டொருவ	171
கார்ப்பொரு	90	குடதிசைக்கட்	191	கூம்பினகைய	242
கார்வரை	266	குடிமைமூன்	222	கூவியின்றெ	319
காரிகைநின்னை	353	குணங்களை	33	கூயினன்	334
காரியங் கடலி	305	குதித்தனன்	89	கூற்றமில்லை	3
காரியன்றக	172	கும்பக்கொ	356	கூறியவாசகங்	200
காரெனக்கடிது	86	கும்பகன்னனெ	372	கூறினமாற்	143
காலநுணித்து	20	கும்பகன்னனே	393	கூறினநாளவ	266
காலமின்றியுங்	75			கூறுமினி	355
காலமுமிடனு	43	குமரர் நீரிவண	96	கூனிபோன	252
காலமேநோக்	294	குயின்றியகுல	68	கெட்டாய்கிளை	135
காலவன்படை	370	குரக்குவார்த்	258	கெடுத்தொழி	280
காலவெங்கன	283	குரண்டமாடு	301	கேகயமாமகள்	39
காலிடையொ	306	குரவரைமகளி	79	கேட்டலும்	247
காலின் மாமத	422	குரிசிலுந்தம்பி	83	கேட்டவாண்	277
காலினிற்கரு	335	குருதிப்புனல்	388	கேட்டனன்	86
காலுடைச்சி	365	குருதிமாமழை	116	கேட்டனமல	164
காவலன்பயங்	311	குருதிவாய்	322	கேட்டனனிரு	290
காவன்மாமதி	183	குலத்தியல்	339	கேட்டானிளை	62
காற்றினுக்	422	குலமுதற்	43	கேட்டியடியே	232

கேள்கொண் 302
கேளிது நீயுங் 287
கைகயன் 424
கைகனை 352
கைதவமியற் 175
கைபரந்தெழு 244
கையவ 177
கைபற்றார் 362
கையைக்கையி 58
கொடியைப் 261
கொடியையல்லை 29
கொடுத்தவில் 118
கொடுத்தனை 335
கொடுத்தே 377
கொடுங் 165
கொணர்கென் 281
கொல்லேமினி 289
கொம்பொத் 100
கொய்திறச் 342
கொய்நிரை 39
கொய்மலர் 333
கொல்வாமன் 209
கொழுந்தே 136
கொழுந்தோடிப் 8
கொழுமணி 314
கொல்லலாம் 255
கொல்லலுற் 172
கொல்லும் 28
கொல்வித்தா 365
கொள்ளானின் 54
கொற்றவநின் 166
கொற்றவ 351
கொற்றவற் 228
கொன்றானோ 213
கோசிகப்பெய 277
கோடிகல் 333
கோடியோ 188
கோடுறுமால் 191
கோதமன்றரு 29
கோதமன்றன் 32
கோமகன்முன் 38
கோலொன்று 388
கோவியற் 171
கோளிரண் 301
கோளுறுத்தற் 183
கோன்மேற் 54
கோனகர்முழு 276
சங்கமும் 35
சங்காரத் 405
சங்கு சக்கரக் 163
சண்டங்கொள் 308
சந்தப்பூணலங் 153
சய்யம்புக 41
சரங்களிங் 310
சரணெனக் 296
சரதமற் 353
சரந்தருசாப 25
சல்லியமகற் 382
சலித்தகாலை 326
சலித்தானைய 243
சலத்தோடியை 41
சலந்தலைக் 241
சவுளமொடு 12
சாணினுமுள 286
சாம்பவை 195
சாம்பனியம்ப 203
சாம்பனைவத 395
சாய்ந்ததானை 321
சாய்ந்தமாருதி 252
சாயாவரந்தழு 207
சாயுந்தம்பி 145
சான்றவர் 9
சான்றவராக 94
சானகியுருவ 384
சிங்கக்குருளைக் 62
சித்திரகூடங் 417
சித்திரத்தன் 386
சித்திரப்பத்தி 208
சிதைவகல் 185
சிந்தைநல்லற 173
சிந்தையிற் 155
சிந்தையினு 108
சிந்தையுவந் 21
சிரத்துவாச 417
சிரமொரா 403
சிருங்கிபேர 72
சில்லியலோதி 37
சிலைக்கோட்டு 31
சிலையறாதெனி 390
சிவந்தவாய்ச் 50
சிவனுமலர்த் 113
சிவனோவல் 405
சிற்றியற்சிறு 224
சிறக்குஞ்செல்வ 47
சிறக்குமாமியர் 234
சிறந்ததம்பி 59
சிறியரென்றிக 180
சிறையில்வை 329
சினக்கொடுங் 89
சீதங்கொண் 144
சீர்த்தவீ 331
சீரைசுற்றித் 67
சீறுநூறெ 362
சீறுவாயல் 184
சுக்கிரீவனை 375
சுட்டதுகுரங் 273
சுடுதியைத்து 292
சுடுமயானத்தி 88

சுமித்திரைசே 147
சுருக்கமுற்ற 396
சுருக்கியவுருவ 422
சுருங்கிடையு 230
சுழற்றியகாலத் 288
சுழித்துநீர்வரு 87
சுழிபடு கங்கை 16
சுற்றத்தார் 87
சுற்றிவால் 36
சுற்றுமப்புற 73
சூடகவரவுறழ் 16
சூடியாண்டச் 197
சூடினமலர்க்கர 77
சூடையின் 237
சூழ்வினை 389
சூழிமால் 158
சூலப்படை 357
சூலம்வாண்மு 240
சூலம்வாள்சக் 219
சூலமும்பாச 115
சூலமேமுதலி 119
சூலிரும்பெரு 235
செங்கயலனைய 35
செந்தாமரைக் 122
செப்புங்காலை 28
செந்தாமரைப் 288
செந்தேன் 355
செம்பராகம் 108
செம்பிட்டுச் 341
செய்யக்கடவ 71
செய்வனசெய் 180
செயலைச்செற் 172
செருவார் 179
செருவின்மா 343
செல்வரென்று 197
செவ்விய 4
செவிகளைத் 134
சென்றுவெங் 371
செய்கின்ருரிரு 371
சேணுயர்நெறி 119
சேய்விசு 399
சேயகாலம் 272
சேயிதழ்த் 131
சேலுண்ட 3
சேவடியிரண்டு 424
சேனையும் 184
சொல்லிய 256
சொல்லுடை 142
சொல்லுமத் 327
சொல்லென் 120
சொல்லொக்குங் 18
சொற்பிரியாப் 225
சொற்பெற்ற 91
சொற்பொங்கு 100
சொற்றலு 185
சொற்றவார்த் 320
சொற்றேன் 179
சோதியான்மக 410
சோர்வாளை 64
தத்தமாடங் 241
தந்தாதை 142
தந்திரக்கடலை 338
தந்தைதவேகமு 418
தந்தோள்வலி 168
தம்பிமுப்பகற் 300
தம்பியரல்லது 167
தம்பியென 350
தம்பியையுன் 250
தம்பியோ 355
தம்முயிர்க்குறு 43
தம்முனைக் 257
தயிருடைக்கு 105
தக்கவின்ன 174
தங்கணுயகரிற் 20
தசும்புடைக் 207
தஞ்சமுந்தரு 335
தடுத்திமை 34
தயரதன்புதல்வ 34
தயரதன்ருெல் 131
தருணமங்கை 302
தருமமின்ன 173
தருமமுஞான 293
தருமமுந்தகவு 155
தருமமேகாத்த 220
தருமவென்ற 399
தருவனத்துள் 13
தருவுடைக் 6
தலையறிற்ற 406
தலையினை 391
தலையெலா 324
தழுவினபுளின 86
தழுவினர் 296
தழுவினன் 149
தள்ளரிய 31
தள்ளாவினை 148
தளையவிழ் 10
தன்கன்று 156
தன்மக்களு 40
தன்னடிதாழ்த 177
தன்னனதம்பியு 87
தன்னிகரிலாத 424
தன்னைநோக்கி 235
தனிமறப் 364
தனியினின்ற 224
தாக்கிகலிராவ 236
தாக்குகின்ற 347
தாங்கிநின்ற 118
தாங்குகொம் 388

தாட்படாக் 158
தாடகைக் 110
தாதைக்குஞ் 386
தாதையப்பரி 46
தாதையைக் 319
தாதைவாயிற் 67
தாமரைக்கண் 364
தாமரைக்கை 366
தாமரைத் 279
தாமரைவதன 184
தாமரைவனத் 130
தாய்கையில் 56
தாய்சொற் 420
தாய்தன்னை 98
தாய்பசி 79
தாய்பணித்து 94
தாய்வரங் 39
தாயருந்தம்பி 386
தாயின்மன்னு 282
தாயுரை 86
தாயெனவுயிர் 174
தாயேயனைய 261
தாயோ நீயே 376
தார்கார்த்த 31
தாரமற்றொரு 172
தாருலாமணி 310
தாரைமைந்த 191
தாவரிய 355
தாவருந் திரு 249
தாவரு மிரு 15
தாவாதொளிரு 62
தாவின்முனிவ 60
தாழ்வித்திரல் 185
தாழ்விலாத் 309
தாழநின்ற 36
தாள்களாற் 241
தாள்களின் 264
தாளரிச்சதங் 392
தான்புனைசிரை 65
தானாவதொர் 40
தானையுமுலங் 247
திக்கயமொ 124
திக்குறுஞ் 96
திங்களொன் 234
திசைத்தது 54
திசையினை 359
திண்டிறல் 333
திண்டிறலவன் 268
திண்ணடுமேரு 32
திரண்டதோளி 45
திரண்டுயர் 246
திரிந்தனர் 344
திரிபுரமெரிய 332
திருகியசினத் 312
திருநகர்க்கியோ 67
திருநகர்முழுவ 273
திருமகள் நாயக 22
திருமறுமார்ப 340
திருவடிமுடி 298
திருவரைசுற்றி 66
திருவினாயக 141
திருவுறைமார் 188
திரைசெயத் 181
திறந்தாளெயி 207
திறந்திறம்பிய 258
திறந்தெரி 132
திறம்பினீர் 183
திறையோடுமர 31
தீட்டிய 255
தீண்டில 269
தீண்டுவா 233
தீதில்வரவாக 109
தீதென்றுள்ள 17
தீயவர்தீய 239
தீயிடைக்குளி 277
தீயிடையரு 413
தீயினாற்செய்த 349
தீயினுமுதிர் 345
தீயேயென 206
தீர்த்தன தரு 297
தீர்வருமின்ன 296
தீர்விலேனி 234
தீவிழி சிந்த 25
துஞ்சுவ 130
துப்பினாற் 215
தும்பயீட்டமு 300
தும்பியந்தொ 341
தும்பியின்குழா 73
தும்பையந் 340
துயிலெனக் 214
துறத்தலுநல்ல 92
துன்புளதெனி 74
துனியின்றியுயிர் 31
தூடணன் 115
தூண்டுமின்ன 51
தூதுவரவ்வழி 9
தூதுவனொரு 316
தூமகேதுபுவிக் 48
தூமவேலரக்கர் 22
தூயகடனீரடி 102
தூயமெல் 12
தூயவாசகஞ் 80
தெண்டிரையு 144
தெம்மடங்கிய 216
தெய்வமானத் 378
தெய்வவான் 373
தெய்வவெம் 313
தெருண்டமேல 35

தெருளுடை 57
தெவ்விராவ 159
தெழித்தன 50
தெள்வார் 4
தெளிந்துதீவி 186
தெற்குவாயிலி 322
தெறுத்து 99
தென்றமிழ்நா 192
தென்றிசைக்க 191
தென்றிசைந 120
தேங்குகங்கை 216
தேசியைச் 317
தேட்டந்தான் 112
தேடினன் 345
தேய்த்தா 357
தேர்செலக்கரி 337
தேர்மேற்செல 358
தேரிற்சென் 248
தேரினுழியுங் 141
தேரினை 407
தேரும் யானை 250
தேருமாவுங் 76
தேவர்க்குந்தா 294
தேவர்கள்பின் 239
தேவர்தம் 374
தேவர்தானவர் திண்டிற 106
தேவர்தானவர் முதலினர் 254
தேவர்தேவி 222
தேவரார்த்த 117
தேவருக்கொ 155
தேவரும்பிழை 220
தேவரும்பிறகு 256
தேவருமடங் 274
தேவருமவுண 131
தேவருமுனிவர் 381
தேவருமுனிவரு 101
தேவரோ 170
தேவி நீங்க 183
தேயியைவிடு 332
தேவியைவெள 416
தேனடைந்த 91
தேனுளதினை 74
தேனெடு 264
தையலாள் 25
தையலைத் 386
தையலைவணங் 269
தையலைவிட்ட 336
தொக்கதாம் 244
தொகவொரு 327
தொகைக் 151
தொடுக்கின் 374
தொடைக்கல 316
தொடையூற்று 14
தொண்டைவா 49
தொல்லருங் 296
தொல்லிருள் 149
தொழுதமைந் 281
தொழுதனன் 422
தொழுதுமின் 423
தொழுதுயர்கை 90
தொழுதுவாங் 237
தோகையமின் 34
தோகையும் 151
தோட்டொடு 238
தோரணத்தி 311
தோரண நடு 83
தோலிடைத் 146
தோள்கண்டார் 36
தோளணிக் 141
தோளாற்ற 213
தோளிரண்டும் 98
தோளொடு 337
தோற்பனென் 398
தோற்றனை 223
தோன்றலு 176
தோன்றியகூனி 49
தோன்றியபர 424
நக்கானைக்கண் 209
நகைபிறக் 401
நங்கள் காரிய 375
நங்கைமற்று 414
நச்சடைபடை 253
நசைந்திறந் 286
நஞ்சமன்னவ 182
நஞ்சனையான் 217
நஞ்சினை மிடற் 295
நடந்த கோசலை 59
நடந்தனர்காவ 104
நடுங்கினனுத் 82
நடுவொக்குந் 284
நடையி 2
நண்ணின 290
நதிகாய்நெடு 356
நதியின்பிழை 63
நந்தனவனத் 242
நந்தாவிளக் 91
நந்திசாபத்தி 278
நந்தியம்பதியி 95
நந்தியின்பதி 418
நம்பியுமென்னு 85
நம்பியைக்காண 34
நல்லதுரைத் 259
நல்லவுந்தீயவு 43
நல்லறமுமெய் 289

நல்லனநிமித் 158
நல்லை நல்லை 251
நலங்கொண் 46
நலங்கொள்தே 173
நவ்வி வீழ்ந்தெ 52
நளனியற்றிய 183
நற்றாதையும் 64
நறிதாநல்லமி 178
நறையுடைத் 337
நன்சொற்கட 64
நன்றிகொன்ற 182
நன்றிதுகரும 332
நன்றுசொல்லி 115
நன்று சொல்லினை 52
நன்றுதீதென் 173
நன்றுநன்றெ 327
நன்றுபோர்வ 326
நன்றுரைசெய் 275
நன்றெனவு 358
நன்னகரழிந்த 275
நன்னெறி 82
நாகமெனுங் 53
நாகமேயனை 364
நாட்டினகரி 259
நாடிநாங் 198
நாடிநான்றரு 286
நாடியொன்று 51
நாடுதலைநல 199
நாணெலாங் 379
நாயகன்பின்னு 71
நாயகன்வன 66
நாரங்கொண் 123
நாரியரில்லை 54
நாலுவேதமா 161
நாளுக்கெல்லை 251
நாறுதன்குலக் 312
நான்முகனுக் 385
நானிலமதனி 240
நானுனையிரந் 347
நித்தநியமத் 211
நிந்தனைநறவ 294
நிந்தனையரக்கி 108
நிருதர்தமரு 109
நிருதாதியர் 135
நிருபநின்குல 45
நில்லடாசிறி 361
நில்லடாநில்ல 387
நில்லடீஇயெ 111
நில்லுநில்லு 97
நிலஞ்செய்தவ 13
நிலஞ்செய்து 389
நிலத்தகால் 348
நிலம்பொறை 150
நிலமகண் 4
நிலையெடுத்து 111
நிற்றியீண்டெ 73
நிறப்பெரும் 68
நின்மகனுள்வா 55
நின்றவன் றன்னை நோக்கிநிலை 287
நின்றவன் றன்னை நோக்கியிரும் 56
நின்றவன் றன்னை யென்னா 318
நின்றவன்னி 329
நின்றபேருல 167
நின்றவனை 103
நின்றனதிசை 242
நின்றனர்செய் 194
நின்றனளா 136
நின்றனனேனை 246
நின்றானெதிர் 167
நின்றிசைந் 256
நின்றுதொடர்ந் 51
நின்று பல்லு 145
நின்றேநெறி 40
நின்னாலியனீ 99
நினைந்தமுனி 33
நீங்குவென் 264
நீட்டியநாவின 193
நீட்டிலகளிறு 66
நீண்டவீரனு 251
நீண்டான 63
நீண்டானுட 206
நீத்தாயோடின 249
நீதியாதிநிகழ் 182
நீதியார்கருணை 158
நீதியால்வந்த 349
நீதியினின்நீர் 203
நீதியுந்தரு 339
நீந்தரும்புன 413
நீயயன்முதற் 275
நீயிரேநினையி 204
நீயினமிருந்த 78
நீயினன்திரு 365
நீயுநின்கிளை 354
நீயுநின்றாதை 199
நீர்க்கோல 340
நீர்கண்டனை 148
நீர்த்தரங்க 406
நீர்புகுநெடுங் 151
நீரிடை 3
நீரிற்சாகில 279
நீரினைக்கடக் 383
நீரெலாமய 184
நீருநிலனும் 275
நீலமாமணி 108

நீலன்முதற் 202
நீலனம்பொடு 326
நீலனுங்குமுத 267
நீலனைநெடிது 307
நீளரவச்சரி 146
நீறணிந்த 2
நீருமேருவு 179
நீறுமீச்செல 303
நும்முனைவாலி 343
நூல்வலிகாட் 315
நூலியற்கையு 172
நூலினுணு 276
நூற்றிரண் 322
நூருயிரம்யா 360
நூருயிரவடி 403
நூறுகோடிய 326
நூறுபத்து 327
நூறுவெங்க 363
நெட்டிலைச்சரம் 128
நெய்திரள்நரம்பி 27
நெய்யடைதீ 181
நெய்யடைநெ 176
நெருக்கியுட் 28
நெற்றியிலரக் 307
நெறித்தாரை 113
நெறியிடுநெறி 74
நென்னற்கண் 272
நேடிநால் 304
நேமிதான்கொ 170
நேமியுங்குலிச 390
நேமியோகுலிசி 255
நையாநின்ற 178
நையுறுசிந்தை 230
நைவீரலீர் 87
நொய்யபாசம் 260
நோக்கறவு 355
நோக்கியநோக் 28
நோக்கியமா 126
நோக்கினனவர் 15
நோக்கினுலைய 141
நோக்கிற்றென் 418
நோக்கினுற் 82
நோக்கினுனெ 159
நோயீரல்லீர் 78
நோயும்மின்றி 71
நோவதாகவிவ் 93
நோற்றுடைத் 370
பகலவன்வழி 292
பகையுடை 126
பங்கயத்தொரு 412
பங்குனியுத்தர 39
பச்சிலைகிழங்கு 187
பஞ்சணை 138
பஞ்சிரமன் 44
பஞ்சியொளிர் 108
பஞ்செனச் 296
பட்டனன் 344
படங்கிளர் 10
படர்ந்த 161
படரெலாம் 88
படைக்கல 389
படையொடா 97
பண்டயன் 101
பண்டரு 267
பண்டிதர் 273
பண்டையினுசி 146
பண்டுநான்மு 404
பண்டுநான்ற 414
பண்பெற்ற 352
பதவியமனித 224
பயிலுங்காலம் 376
பரக்கவென் 130
பரத்தினீங்கும் 89
பரதனும் 199
பரவலரும் 105
பரவுகேள்வியும் 93
பரற்றரு 148
பராவரும் 49
பரித்தசெல்வ 216
பரிதிசேய் 324
பரிவிகந்த 67
பருகிய 28
பருஞ்சிறை 138
பருத்தமால் 306
பருந்துணைப் 320
பல்லும்வாயு 391
பல்லொடு 288
பழிப்பறு 153
பழியிதுபாவ 351
பழியில 247
பழியினை 291
பள்ளநீர 224
பளிக்குமாளி 207
பளிக்குவேதி 211
பற்றவா 15
பற்றித்தா 241
பற்றியகோள 146
பற்றிலைதவத் 77
பற்றுதிர் 268
பற்றுவானி 128
பறவையின் 368
பறித்தான்சி 357
பன்னிரண்டி 194
பன்னுநீதிகள் 410
பனிவென்ற 360
பாக்கியத்தா 142
பாக்கியமெனக் 22
பாகத்திலொரு 121

பாகமல்லது 251
பாகொன்று 202
பாசமுங்கழிக்க 416
பாதங்கைக 349
பாந்தளின் 6
பாம்பிழைப் 308
பார்த்தனள் 263
பார்த்தனிற் 304
பார்நிழல் 204
பார்மிசை 317
பாரமாமர 252
பாரிடமேயிது 151
பாரெனக் 129
பாலமைதவிர் 176
பாவந்தோன் 393
பாவியரா 146
பானிறுத் 244
பாழிசாலிரணி 290
பாழியபணைத் 230
பாழிவன்கிரி 135
பிடித்து நல் 129
பிணியரங்க 30
புதிய கூற்றனை 18
பிரிந்தார்பல 396
பிரிவருமொரு 243
பிழைத்தது 26
பிள்ளைபோல் 121
பிளந்தது 287
பிறங்கிய 300
பிறிதுமன்ன 163
பின்னருங் 199
பின்னரும்மப் 107
பின்னரும்விள 188
பின்னவளுழ 154
பின்னுந்தம்பி 75
பின்னும்பகர் 65
பின்னுமுரைப் 147
பின்னையுமெழு 367
பின்னையேது 98
புக்கடைந்த 349
புக்கவளோடுங் 25
புக்காரமரர் 243
புக்குறை 75
புக்கெரிமடுத் 316
புண்டுளங் 96
புண்ணிய 92
புத்தான 7
புத்திரர்குரு 291
புதையுநன் 363
புரஞ்சுடப் 406
புரந்தரன்பகை 392
புரந்தரன்றலை 251
புரம்பிழைப் 258
புல்லியமுறு 240
புல்லினனின்ற 91
புலத்தியன் 335
புவனமெத்த 255
புவிப்பாவை 63
புவியினுக்கணி 107
புள்ளடையா 193
புள்ளிமால் 2
புளிக்குங்கண் 235
புறத்திணி 125
புறத்து 45
புறந்தரு 354
புறவொன்றின் பொருட்டாக 8
புறவொன்றின் பொருட்டின் 400
புன்சொற் 140
புன்மகன்மகட் 353
புன்றலைக்குரங் 245
புன்றெழிலரக் 227
புன்றெழிற் 376
புனைகழலிரா 220
பூசற்குமுயன் 310
பூண்டபேரன்பி 68
பூண்டமா 144
பூணியன்மொய் 35
பூதநாயகன் 23
பூதநாயகனீர் 318
பூதரமனைய 401
பூதலத்தரசை 41
பூதலப்புரம் 259
பூந்தண்வார் 221
பூமலர்த் 426
பூமழைசொரிந் 34
பூமழைபொழிந் 42
பூவருமயனொடு 272
பூவிரிபொலன் 84
பூவிலோன் 109
பூவிற்றிருவை 288
பூவின்மேலிருந் 353
பூவுந்தளிருந் 379
பூவுயர் 323
பூவும்பூநிற 252
பூழிசென்று 302
பெண்ணென 53
பெண்வழி 28
பெண்டணி 143
பெண்பாலென 207
பெண்பாலொ 206
பெண்ணிற் 279
பெய்தவத்தி 344
பெய்யுமாரி 14
பெய்யுமேமழை 413
பெயர்க்குஞ் 24
பெயர்வுற 16

பெருங்குலா 114
பெருந்தட 3
பெருந்தவமிய 297
பெருந்தவமுய 307
பெருந்திசை 188
பெருந்திறலநு 382
பெருமகனென் வயிற்பிறக்க 44
பெருமகனென் வயிற்பிறந்த 90
பெருமையும் 314
பெற்றதாயருந் 216
பெறலருந்திரு 181
பெறுவதன் 92
பேசினனங்க 147
பேடையைப் 295
பேணநோற்ற 220
பேதாய்பிழை 135
பேதியாதுநிமிர் 96
பேதைப் 282
பேதைதமை 389
பேதையரெதி 167
பேயனேனென் 300
பேயிருங்கண 331
பேர்த்தனமலை 305
பேர்ந்தானெடு 148
பேரருந்துய 149
பேராயிரங் 367
பேருடையவு 287
பேழ்வாயோ 206
பைங்கழலநு 253
பைந்தாரெங் 201
பைந்தொடி 65
பையணைப் 181
பொக்குவெங் 143
பொடியுடைக் 18
பொய்க்கரி 79
பொய்கையெ 196
பொய்ந்நின்ற 122
பொய்ம்முறை 239
பொய்யார் 377
பொய்யிலாத 162
பொய்யுரை 202
பொரக்கரு 323
பொருக்கென 119
பொருகைத்த 325
பொருதமை 265
பொருதிறத் 110
பொருந்தவ 103
பொருந்திய 3
பொருந்து 400
பொருமினைக 376
பொருவிலெம் 66
பொழிந்தநெய் 33
பொழியுங்கண் 72
பொற்புடை 110
பொறிக்கொடு 364
பொறியின் 173
பொறையிருந் 225
பொன்மனை புக் 219
பொன்னல தில்லைப் 268
பொன்னார்தோ 61
பொன்னினு 273
பொன்னினொ 37
பொன்னுமாம 67
பொன்னுருவ 113
பொன்னைத்தீ 414
பொன்னைப் 110
பொன்னையோ 25
பொன்னோக்கி 136
போகலரென்ற 384
போகின்றேன 130
போதகமொன் 295
போதல்செய்கு 306
போதியென் 51
போதுநீயைய 341
போய்வருங் 264
போயபினவன் 330
போயிற்றீர் 257
போயினகுரங் 274
போயினதிசை 370
போயினதூதரி 187
போயினமணித 274
போயினித் 331
போமினடா 385
போரென்ன 36
போவதுபுரிவ 130
போழ்ந்தன 267
போனமந்தர 158
போனவள் 127
மக்களுஞ் சுற் 218
மக்களை மறந்த 66
மகவயினன்பி 46
மங்கலம் 303
மங்கலவணி 184
மங்கையம் 58
மங்கையர் குலத்து 392
மங்கையர் பொரு 180
மங்கையர் மங்கலத் 218
மங்கையழலு 378
மசரத 6
மஞ்சினிற் 306
மஞ்சுறழ் 263
மஞ்செனத் 156

மடங்கல்போன் 13
மடித்தபில 120
மடித்த வாயி 312
மண்சுழன்றது 140
மண்ணகந் 143
மண்ணின் மேல் 80
மண்ணின் மேல 141
மண்ணினுநல் 45
மண்ணினையெ 359
மண்ணுருத் 16
மண்ணுளார் 158
மண்டலங் 240
மண்டலந்தரு 279
மண்மேல்விழு 136
மண்மேல் 377
மணமுமில்லை 173
மணிகொள் குட்டி 238
மணிக்கொள் வாயி 211
மதவியல்குரக் 175
மதுவனந் 266
மந்தரநெடு 166
மந்தரம்வேலை 147
மந்தரைக்கூற் 83
மந்தரைபின்ன 50
மந்திரக்கிழவர் 247
மயங்கினன் 265
மயிரின்கால் 46
மயிலுடைச் 122
மயின்முதற் 156
மரங்கள்போ 115
மரபின்மாபெ 279
மரமடங்கலுங் 207
மராமரமிவை 35
மருக்கொள் 279
மருங்கிலாநங் 28
மருங்கின்மே 261
மருந்தின்கா 389
மருந்தினு 412
மருந்து தேவ 310
மருந்தேநிக 360
மரபுளி நிறுத் 150
மருவினிய 106
மல்லடுதிரள் 222
மல்லன்மாந 192
மலரின் மேலி 340
மலைந்தபோதி 169
மலையெடுத் 223
மலையே போல்வா 196
மலையேமரனே 135
மழுவின்வா 217
மழைத்தவிண் 198
மற்றயனின் 381
மற்றவருமற்ற 195
மற்றவன் சொன்ன 45
மற்றவன் முன்னே 227
மற்றவளிறை 73
மற்றிமைந்த 197
மற்றினியுதவி 174
மற்றினி யுரைப்பதெ 160
மற்றினி யுரைப்பதி 295
மற்றுநீலன 322
மற்றும்வீரர் 348
மற்றுமிவ்வுல 156
மறக்கமுற்று 105
மறங்கிளர்செ 336
மறங்கொள் 281
மறத்தல்செய் 46
மறந்தருசி 293
மறந்தனெனி 217
மறந்திலன் 185
மறுத்ததம் 338
மறுத்தனை 124
மறைகளுமுனி 175
மறைகளே 390
மறைந்த 344
மறையவர் 421
மறையின்கேள் 89
மறையோராசி 179
மன்றலங் 401
மன்றலின்வந் 38
மன்னவ மரு 304
மன்னவன்பணி 57
மன்னவனிரு 94
மன்னுநீநின் 423
மன்னிழைத் 420
மனகதிவாயு 330
மனைக்கண் 309
மலைகண்ட 356
மாக்கவந் 345
மாச்சிச்சிரம் 137
மாடுநின்றவம் 214
மாடுபற்றி 173
மாண்டனளவ 266
மாண்டாய் நீ 377
மாண்டுபோயி 215
மாண்டேனெனினும் 231
மாண்டேனே 142
மாதர்கள் கற்பி 55

மாதவத்தொ 102
மாதவர்க்குவழி 59
மாதவரை முற் 38
மாதரைக் 294
மாதிரங்கடந்த 350
மாதிரப் 157
மாதிரமெவை 329
மாதிரமொ 393
மாதொருத்தி 36
மாப்போரிற் 113
மாமகன் 39
மாய்ந்தவர் 21
மாயப்பிறவி 153
மாயமான்விடு 379
மாயமேன்மடி 126
மாயிருநெடுவ 245
மாயிருவிசும் 25
மாயையான் 159
மாயையின் 382
மாரருள 120
மாருதவிமல 426
மாருதிமுதலிய 193
மாருதியலங்க 317
மாருதியின்னு 317
மாருதியை 402
மாருதிவந்தெ 412
மாருதிவல்லை 343
மாருதிவலித் 196
மாவியல்வட 181
மாவும் யானை 80
மாள்வதே 128
மாற்கடஞ் 296
மாற்பெருங் 166
மாற்றம்யாது 32
மாற்றமின்ன 128
மாற்றமென் 129
மாறிமாறி 406
மாறியோர்பாக 324
மாறுகாலின்றி 348
மானத்தானல் 315
மானமும் 347
மானுடரிரு 336
மானுயரிவ 223
மானவனுரைத் 133
மானேயனையா 100
மின்மினியொ 297
மின்மேற்படர் 206
மின்றிரண்ட 133
மின்னுடன்பிற 69
மின்னும்பன் 328
மின்னேரெயிற் 231
மின்னைத் 289
மின்னைநோக் 417
மின்னொத்தசீற் 63
மீச்செலவரி 193
மீட்டவருரைத் 242
மீட்டுமொன் 135
மீளருஞ்செரு 115
மீன்கொண்டு 121
மீனாய்வேலை 249
மீனுடைக்கரு 328
முக்கணான் 374
முக்கணானார் 247
முக்கணானெ 288
முக்கோடி 407
முடிந்தன 238
முடிப்பெனின் 117
முடுக்கின்றரு 306
முத்தமிழ்த் 1
முத்துருக் 12
முத்தேவரின் 135
முந்திவந்தி 338
முந்தினைமுனி 68
முந்துவான் 97
முப்பரம்பொரு 38
முப்புரமெரித் 401
முப்புரிநூலின 20
மும்மைசாலுல 170
மும்மையாமுல 330
முரண்டொரு 328
முரணுடைத் 160
முளையமை 330
முற்றியகுரி 292
முற்றியவரக் 150
முற்றுநீருலக 204
முறிந்தது 246
முறைமை 58
முன்பிறந்த 372
முன்புபெறப் 289
முன்புறக் 291
முன்புறவனை 290
முன்முன்னின் 225
முன்னமுமக 127
முன்னர்வந் 94
முன்னிற்றோ 383
முன்னின்றா 398
முன்னுரைத் 331
முன்னுலக 17
முன்னுனக் 332
முன்னேயுளன் 396
முன்னைநான் 192
முன்னைநுங் 80
முன்னையர் 83
முனியுந்தம்பி 30
முனியுமுனி 60
முனியொடு 217
முனிவருங்கரு 340
முனைவருந்த 273

முனைவரும்பிற 159
முனைவருமமர 412
முக்கிலா முக 350
மூசியவுயிர்ப் 210
மூட்டியபழி 187
மூடினதிருட் 119
மூண்டெழு 76
மூலமுநடுவு 256
மூலமேயில்லா 153
மூவகைத்திரு 419
மூவகையுலக 388
மூவகையுலகை 220
மூளுமுள 120
மூன்றவன் 285
மூன்றுற்ற 206
மூன்றுலகினு 82
மெய்கிடந்த 392
மெய்கொள் 410
மெய்த்திருப் 216
மெய்வருபோக 27
மேக்குநீங்கிய 410
மேடமாமதி 11
மேதாவினை 379
மேருவைநிறு 208
மேருவைப்பறி 133
மேருவையுருவ 222
மேருவையுருவு 330
மேல்நனி 293
மேலவன்றிரு 158
மேலுயர்கயிலை 277
மேலைவிரிஞ் 203
மேவாதவ 100
மேவிநிலத்தி 53
மேவினம்பிரித 19
மேவுசிந்தை 233
மேருகிரிக்கு 203
மைக்கருங்கூந் 36
மைந்தரைப் 414
மைந்தவோ 392
மைந்நாக 264
மையறுதவத் 160
மையறுமல 27
மையறுமனத் 79
மொய்த்த 97
மொய்யெடுத் 361
மொழிதரு 135
மொழியுனக் 305
மோக்குமுலை 230
மோதிரம் 421
யாண்டுவந்தி 417
யாதியானியம் 412
யாதுமறியா 124
யாமுதற் 267
யாமுமெம் 18
யாரிதுசெய்ய 324
யாரிவணெய் 292
யாரிவன்வரு 360
யாரென 157
யாரேனுந் 405
யான்செய்த 8
யான்வரு 101
யானிவணிரு 411
யானிவன்ற 197
யானிழைத்த 411
யானுமெய்யி 420
யானையிலர் 275
யோகமுறு 103
யோசனைநூற் 396
வஞ்சங் 209
வஞ்சரில்லையி 416
வஞ்சமுங்களவும் பொய் 185
வஞ்சமுங் களவும் வெஃகி 246
வஞ்சமோ 58
வஞ்சனைமணி 273
வஞ்சனைமானி 229
வஞ்சனையரக் 270
வஞ்ஞையால் 142
வஞ்சனை யியற்றிட 293
வஞ்சனை யியற்றிய 421
வஞ்சியம் 231
வஞ்சியைய 138
வஞ்சியையெ 385
வட்டமிட்ட 97
வடகுண 382
வடித்த 29
வடித்தாய் 214
வடுக்கண் 143
வண்டற் 278
வண்டுளர் 52
வண்ணமாலை 29
வண்ணவிற் 181
வண்மையில் 3
வணங்கிநீ 370
வணங்கியன் 162
வந்தநம்பி 15
வந்தமாதவத் 89
வந்தமாதவன் 80
வந்தயனின் 381
வந்தவர்கள் 238
வந்தவர்சொல் 263
வந்தவர்தானை 310
வந்தவனை 313
வந்தனென் 166
வந்தனென 149

வந்தடிவண 185
வந்தாய்திறத் 140
வந்தானெடுந் 388
வந்தானையி 112
வந்தானைவ 285
வந்திலர் 138
வந்திலனி 374
வந்திவள் 385
வந்துதாயை 76
வந்துநோக் 111
வந்துமுனி 13
வந்தெதிரே 85
வந்தெனைக் 235
வம்பிழை 144
வயிரவான் 5
வயிற்றிடை 219
வயிற்றினா 281
வரங்கொண் 350
வரத்தினா 405
வரதகேளென 415
வரதன்றுஞ் 93
வரம்பிலா 218
வரமரக்கன் 118
வரமிரண்டளி 415
வரனிலுந்தை 93
வரிசிலையுழ 101
வரிவிலெம் 59
வருகலை 6
வருந்தித்தான் 72
வரும்புண் 136
வருந்தலின் 226
வருமிவண் 110
வரைகளிட 240
வரைசெய் 192
வரைசேர் 178
வரையார் 178
வல்லமந்தி 185
வல்லரக்கன் 214
வல்லியம் 101
வல்லியமருங்கு 351
வலக்கார்முக 63
வலங்கொடுதீ 39
வலங்கொடுவ 371
வலஞ்செய் 99
வலம்வருமி 403
வலியின்றலை 137
வலியென்பது 325
வள்ளல்தனக் 39
வள்ளலிந் 163
வள்ளன் 33
வள்ளுறை 7
வளநகர் 7
வளர்ந்த 224
வளையும் 211
வளையெயிற் 110
வளையொடு 6
வற்கலையி 85
வற்கலைவார் 120
வறிதுவீழ்த் 257
வறுமைநோய் 8
வன்கண் 216
வன்சிறைப் 352
வன்பகை 314
வன்புலங் 391
வன்மைதரித் 123
வன்றிரலரக் 354
வன்றுணைப் 334
வன்னிமன் 394
வாக்கிற்கொக் 114
வாக்கினால் 77
வாங்கரும் 3
வாங்கியமணி 315
வாங்கியவாழி 270
வாங்கிவெஞ் 303
வாங்கினாள் 237
வாங்கினண் 229
வாங்கினானிரு 416
வாங்குவேய்ங் 75
வாசங்கல 367
வாசத்தார 170
வாசவன்மா 331
வாசவன்வயக் 244
வாணித்தில 64
வாய்மடித் 321
வாய்மையு 171
வாய்வரத் 319
வாய்வழி 266
வார்க்குறு 293
வார்குலா 309
வார்மதச் 245
வாரணத் 15
வாரணம்பொ 329
வாராமன்னி 45
வாரியினமுக் 342
வாழ்வித்தீ 201
வாழ்வினைநுத 65
வாழியாய்நின் 317
வாழுமறை 103
வாளரிவள் 133
வாளுறை 240
வாளொரு 287
வாலிகாதலனு 180
வாலிகாதலனை 264
வாலிசேய் 358
வாலிதன் 254
வாலிமாமகன் 310
வாலியைவாளி 384
வாலினாலுரம் 168

வானகமின் 131
வானகுமண் 330
வானவருரைத் 95
வானரப்பெரு 335
வானரமார்த் 346
வானின்வாய் 116
வானின்றிழி 43
வானுளோ 5
வானென்ப 357
வானோர்கொள் 54
விசும்புபோயி 374
விட்டபோதி 398
விட்டனனர 365
விட்டனனி 239
விடமலவிழி 300
விடுதேரென 134
விண்டொட 56
விண்ணவர் 19
விண்ணவரே 134
விண்ணில்நீங் 118
விண்ணினீ 236
விண்ணுநீர் 92
விண்ணுமண் 59
விண்மேலின 168
விதியது வலி 122
விம்மினன்பர 95
விம்மினன்வெ 366
விராதனுங் 417
விரிகின்ற 311
விரிந்தார் 137
விரிந்திடு 31
விருந்து 160
விருப்பி 76
விரும்பெழி 165
விரைவி 248
வில்லார் 78
வில்லாள 390
வில்லிழந்தன 117
வில்லினொலி 326
வில்லினை 366
வில்லெடுக்க 361
வில்லொன் 402
வில்லைநோக்கி 145
விலக்கலைவிடு 166
விலங்கல்வெங் 301
விலங்கெழிற் 165
விழிக்குங்கண் 60
விழுதல்விம் 215
விழுந்தனர்சில 66
விழுந்தனர்சுழ 313
விழுந்துபார 252
விழுமியது சொற்றனை 103
விழுமியதுரைத் 198
விளங்கொளி 406
விளித்தானன் 201
விளித்துப்பின் 205
விளைந்தவா 379
விளையுங் 52
விளைவினை 298
விற்பெருங் 268
விற்றடங் 65
வினவிய 105
வினையுடை 234
வீங்கினுள் 355
வீட்டினுக் 154
வீட்டுங் 222
வீடணனொரு 323
வீடினதன்ற 220
வீணையென்று 337
வீய்ந்துளன் 379
வீய்ந்தாளேயிவ் 55
வீரத்திண்டி 284
வீரத்திறமிது 325
வீரநாடுற் 408
வீரமன்று 172
வீரரும் 271
வீரன்மேனி 111
வீரனுக்கி 187
வீரனைநோக்கி 297
வீவாய்நீயிவ 235
வீழ்ந்தவன் 386
வீழ்ந்தா 62
வெங்கண்வா 375
வெங்கணை 364
வெங்கதம்வீசி 200
வெங்கதமில்ல 147
வெங்கார்நிறப் 207
வெஞ்சிலை 422
வெஞ்சினந்த 278
வெஞ்சினவரக் 223
வெஞ்சுடர்க் 143
வெப்புறு 203
வெம்புகண்டக 182
வெம்புகானி 182
வெம்மடங்கல் 407
வெம்முனை 293
வெய்தாகிய 147
வெய்யவன்ற 128
வெய்யவன 353
வெய்யோர் 123
வெய்யோனொ 71
வெயிற்சுட 151
வெயின்முறை 50
வெருளும் 261
வெல்லுமா 349
வெவ்விய 68

வெள்கிட 171
வெள்கும் 137
வெள்ளநீருல 44
வெள்ளமும் 4
வெள்ளமேழு பத்துளதால் 232
வெள்ளமேழுபத் துளது 161
வெள்ளியங்கிரி 274
வெள்ளியை 21
வெள்ளெருக் 409
வெற்பிடை 131
வெற்பிணை 261
வெற்றியருள 138
வெற்றிவானர 191
வெற்றிவீரன 169
வெறுப்புண் 258
வென்றவர் 332
வென்றானென் 405
வென்றிலெ 389
வென்றிவண் 335
வென்றிவாள் 15
வென்றிவெம் 243
வேகம்முடன் 136
வேண்டிற்று 411
வேண்டின 101
வேதநாயகனே 340
வேதமனைத்து 202
வேதமும் வே 122
வேதனைக்கூனி 50
வேதங்க 98
வேதனைசெய் 124
வேதியர்தமை 421
வேந்தன்கோ 260
வேந்தன்விண் 106
வேந்தன்வீய 102
வேரறவரக்க 138
வேலிகற்சின 158
வேலியுளிலங் 269
வேலையின் 233
வேறினிவிளம் 232
வேற்றுப்புல 205
வேறுமுண்டு 233
வேறுமென் 282
வைத்தபின்று 271
வைத்தபின் னுரிமை 176
வையகந்துறந் 90
வையநீவானு 164
வையமன்னுயி 48
வையமென்னை 1

"திருப்புகழமிர்தம்" சந்தா விவரம்

இந்தியா, சிலோன் .... ரூ. 2-0-0
வெளிநாடுகளுக்கு .... ரூ. 2-8-0

1. சந்தாதாரராகச் சேர விருப்பமுள்ளவர்கள் ஆண்டுக் கட்டணத்தை முன்னதாகவே செலுத்தவேண்டும். மணியார்டர் மூலம் சந்தாவைச் செலுத்துபவர்கள் மணியார்டர் கூப்பனில் விலாசத்தை விவரமாக எழுதியனுப்பவேண்டும்.

2. நமது பத்திரிகை ஒவ்வொரு சித்திரையினின்றே தொடங்கும். ஆதலால் நேயர்கள் எந்தத் திங்களில் சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அவ்வாண்டு சித்திரையினின்றே இதழ்கள் அனுப்பப்படும். ஒரு ஆண்டுக்குக் குறைந்த சந்தா கிடையாது.

3. நமது பத்திரிகை பிரதி இங்கிலீஷ் மாதம் 10-ந்தேதி தபாவில் சேர்க்கப்படும்.

4. இதழ் கிடைக்கப் பெறாத சந்தாநேயர்கள், அத் தமிழ் மாதம் 15உக்குள் எழுதிப் பெறவேண்டும். அதற்கு மேல் எழுதுவோர் 0-3-0 அனுப்பினால்தான் வேறு பிரதி அனுப்பப்படும். இதழ் கிடைக்கப் பெறாதவர்கள் தமது ஊர் தபாலதிகாரிகளுக்குந் தெரிவிக்கவேண்டும். பலமுறை சரிபார்த்து இதழ்கள் தபாலில் சேர்க்கப்படுவதால் காரியாலயத்தில் தவறு நேர இடமில்லை.

5. விலாசம் மாறுவோர், தமது மாறுதல் விலாசத்தை உரிய காலத்திற்குள் நமது காரியாலயத்திற்கும், போஸ்டாபீசுக்கும் தெரிவிக்கவேண்டும். இன்றேல் பழைய விலாசத்திற்கே அடுத்த இதழ் அனுப்பப்படும். அதற்கு யாம் பொறுப்பாளியல்ல.

6. மாதிரிப் பிரதி வேண்டுவோர் நான்கணா அனுப்பிப் பெறலாம். பதில் விரும்புவோர் ரிப்ளை கார்டு எழுதவும். கடிதம் எழுதும் சந்தா நேயர்கள் தங்கள் சந்தா நெம்பரைக் குறிப்பிடவும்.

மானேஜர்,
திருப்புகழமிர்தம் காரியாலயம்,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

உ

முருகா

நமது புத்தகசாலை

கந்தரலங்காரம் (உரையுடன்)	...	3-0-0
சுந்தரமூர்த்தி சுவாமிகள் புராணம்	...	0-8-0
சத்தியஞானசபைத் தூபிநீராட்டுவிழா நினைவுமலர்		0-12-0
பாராயணத் திருப்புகழ்	...	0-6-0
மணிமொழிகள் (60)	...	0-4-0
கூட்டு வழிபாடு (மு. பெருமாள்)	...	0-8-0
காந்திமகான் வாழ்க்கை	...	0-12-0
வழிகாட்டி (கி. வா. ஜகந்நாதையர்)	...	3-0-0
திருவருட்சக்தி	...	0-6-0
திருவகுப்பு(ஆறுவகுப்புகளுக்கு ரசபதி உரையுடன்)		1-8-0
திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ் ,,	...	2-0-0
கந்தர்கலிவெண்பா ,,	...	2-0-0

திருப்புகழமிர்தம் காரியாலயம்,

144, சாமிநாயக்கன் தெரு,

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

111411

திருப்புகழமிர்தம் அச்சகம், சென்னை-2.